# தாகம்

நாவல்

கு. சின்னப்ப பாரதி

# கு. சின்னப்பபாரதி



நாமக்கல் மாவட்டத்திலுள்ள பொன்னேரிப் பட்டிக்கிராமத்தில் 1935ஆம் ஆண்டில் பிறந்தார். உயர்நிலைப் பள்ளியில் பயிலும்போது மாணவர் இயக்கத்தில் ஈடுபட்டார். கல்லூரியில் அகில இந்திய மாணவர் சம்மேளனத்தின் ஒரு பிரபலத் தலைவராக விளங்கினார். 1955ல் பாண்டுங்கில் (இந்தோனேஷியா) நடைபெற்ற ஆசிய ஆப்பிரிக்க மாணவர் மாநாட்டிற்கு பிரதிநிதியாகத் தேர்வு செய்யப்பட்டார். 1957ல் மாஸ்கோவில் நடந்த அகில உலக இளைஞர் மாநாட்டிற்கும் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இன்டர்மீடியேட் படித்தபின் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சேர்ந்தார். நில உச்ச வரம்பு கோரி தமிழகத்தில் 1960ல் நடந்த விவசாயிகள் பாதயாத்திரையில் (35 நாட்கள்) கலந்துகொண்டார். செம்மலர் என்ற இலக்கிய மாத இதழை 1970ல் ஆரம்பித்து அதன் ஆசிரியராக 10 ஆண்டுகள் பணியாற்றினார்.

நில உடைமை, எப்பொழுது? என்ற அவரது கவிதைத் தொகுப்பு 1955ல் வெளிவந்தது. கொங்கு நாட்டு கிராம விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கையை சித்திரிக்கிறது அவரது நாவல் தாகம். இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த சிறந்த பத்து நாவல்களில் ஒன்று இது. மலைவாழ் மக்களின் வாழ்க்கையைப் பற்றிய அவரது நாவல் சங்கம், சென்னையிலுள்ள இலக்கிய சிந்தனை என்ற அமைப்பின் விருது பெற்றது. அவர் இயற்றிய மற்ற நாவல்கள் சர்க்கரை (ஆலைத் தொழிலாளர் போராட்டம் பற்றியது) பவளாயி தலைமுறை மாற்றம் மற்றும் சுரங்கம் ஆகும். இவரது நாவல்கள் ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு மற்றும் பல இந்திய மொழிகளிலும் வெளிவந்துள்ளன.

அவசர நிலைமை காலத்தில் சிறையில் அடைக்கப்பட்ட ஒரே தமிழ் எழுத்தாளர் பாரதியே. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு முக்கிய ஊழியராகப் பணியாற்றும் இவர், பல அமைப்புகளில் முக்கியப் பதவிகள் வகிக்கிறார்.

# தாகம்
(நாவல்)

கு. சின்னப்ப பாரதி




பாரதி புத்தகாலயம்

This One
HSGX-14Y-X71Y

**THAAGAM**

**Ku. Chinnappa Bharathi**

First Published: 2008
Second Edition : August, 2010

**Published by**

**BHARATHI PUTHAKALAYAM**

421, Anna Salai, Teynampet, Chennai - 600 018
Email: thamizhbooks@gmail.com
www.thamizhbooks.com

தாகம்

கு. சின்னப்ப பாரதி
*முதல் பதிப்பு: 2008*
*இரண்டாம் பதிப்பு: ஆகஸ்ட், 2010*

வெளியீடு

பாரதி புத்தகாலயம்

*421, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018*
*தொலைபேசி : 04424332424, 24332924, 24339024*

விற்பனை நிலையம்
7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018

**திருவல்லிக்கேணி:** 48, தேரடி தெரு | **திருவான்மியூர்:** 1, 100அடி சாலை, தரமணி
**பெரம்பூர்:** 52, கூக்ஸ் ரோடு | **ஈரோடு:** 39, ஸ்டேட் பாங்க் சாலை
**கோவை:** 566, 2 வது தெரு விரிவு, காந்திபுரம் | **திண்டுக்கல்:** 3சி18, எல்.பி.ஜி. காம்பவுண்ட்
**நாகை:** 1, ஆரியபத்திரபிள்ளை தெரு **திருப்பூர்:** 440, அவினாசி சாலை
**திருவாரூர்:** 35, நேதாஜி சாலை | **சேலம்:** 1, திருநாவுக்கரசர் தெரு, அத்வைத ஆஸ்ரமம் சாலை
**மயிலாடுதுறை:** 141, பட்டமங்கலத் தெரு | **அருப்புக்கோட்டை:** 31, அகமுடையார் மகால்
**புதுக்கோட்டை:** வடக்கு ராஜா வீதி | **மதுரை:** 37A, பெரியார் பேருந்து நிலையம்
**மதுரை:** சர்வோதயா மெயின்ரோடு, மகபூப்பாளையம்
**குன்னூர்:** N.K.N வணிகவளாகம் பெட்போர்ட் | **செங்கற்பட்டு:** 1டி., ஜி.எஸ்.டி சாலை
**விழுப்புரம்:** 261, பவானி தெரு | **திருநெல்வேலி:** 25A, ராஜேந்திரநகர் முதல் தெரு,
**கும்பகோணம்:** 352, பச்சையப்பன் தெரு | **விருதுநகர்:** 131, கச்சேரி சாலை
**வேலூர்:** எஸ்.பி. பிளாசா, 264, பேஸ் II, சத்துவாச்சாரி
**நெய்வேலி:** பேருந்து நிலையம் அருகில், சிஐடியு ஆபிஸ் | **தஞ்சாவூர்:** காந்திஜி வணிக வளாகம் காந்திஜி சாலை (LIC கோட்ட அலுவலகம் எதிரில்) தஞ்சாவூர் - 613001. | **தேனி:** 12,பி, மீனாட்சி அம்மாள் சந்து, இடமால் தெரு | **கடலூர்:** பஜார், ஜீவா மார்க்கெட், பழைய அண்ணா பாலம்

ரூ. 220/-

அச்சு : மணி ஆப்செட், சென்னை - 5

# பதிப்புரை

பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம் என்று ஒரு கதாபாத்திரத்தின் கதையைச் சொல்லுவதில் துவங்கிய தமிழ் நாவலின் வழித்தடத்தில் தேசிய இயக்கத்தின் மற்றும் சீர்திருத்த எண்ணங்களின் போக்கை சந்திரிகையின் கதையில் சொல்ல முயன்றான் பாரதி. அன்று துவங்கியது ஒரு புதிய பாதை பொது வாழ்வை மையப்படுத்தி அதைத் தனிவாழ்வோடு இணைத்துப் பேசுகிற ஒரு முயற்சி.

1947க்குப் பிந்திய உடனடி ஆண்டுகளில் வேகம் தணிந்து குடும்பக் கதைகளுக்குள் மீண்டும் நுழைந்தது நாவல். சுதந்திரத்துக்குப் பிந்தைய பத்தாண்டுகளில் ஆஷாபங்கம் அடைந்த இந்திய மக்களின் அசலான வாழ்வை படைப்பாளிகள் 60ஆம் ஆண்டுகளில் அழுத்தமுடன் பதிவு செய்யத் துவங்கினார்கள். அதிலும் குறிப்பாக இடதுசாரிகள் மக்களின் சிதைந்த கனவுகளுக்குப் போராட்ட வடிவம் கொடுத்து அணிதிரட்டிய பின்னணியில் வேகத்துடன் படைப்புகள் வரத்துவங்கின. பஞ்சும் பசியும், மலரும் சருகும் என இடதுசாரி இலக்கியப்பாதை நாவல் தளத்தில் எழுந்தது. தமிழக இடதுசாரி இலக்கியப்படைப்பாளிகளின் முன்வரிசையில் நடைபோட்டவர் கு.சி.பா என்று தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டார் தோழர் கு.சின்னப்ப பாரதி. அமரர் ஜீவானந்தம் தலைமையில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தொடங்கப்பட்ட போது நாட்டார் வழக்காறுகளைத் தொகுத்து ஆய்வு செய்து ஆவணப்படுத்துவதற்கென்றே பேராசிரியர் நா.வானமாமலை தலைமையில் ஒரு குழு போடப்பட்டது. அதில் தோழர் கு.சி.பா. முக்கிய பங்காற்றினார்.

வளமான நாட்டுப்புறவியல் அனுபவத்தோடும் இடதுசாரித் தத்துவ மற்றும் போராட்ட அனுபவத்தோடும் தஞ்சை மண்ணில் வீறுகொண்டெழுந்த விவசாய இயக்கத்தை உற்று நோக்கி அதில் மானசீகமாகத் தானும் ஒருவராகி கரைந்து கு.சி.பா எழுதிய

முதல் நாவல்தான் இந்த தாகம். தமிழின் மிகச்சிறந்த பத்து நாவல்கள் என எழுத்தாளர் திரு.சுந்தரராமசாமி அவர்கள் பட்டியலிட்ட போது அதில் தாகம் நாவல் இடம்பெற்றிருந்தது. எந்த முகாமைச் சேர்ந்தவராக இருந்தாலும் தாகம் நாவலைப் புறக்கணித்துவிட்டு ஒரு பட்டியல் போட முடியாது என்கிற அளவுக்கு அது எக்காலத்துக்குமான ஒரு இடதுசாரிச் செவ்வியல் இலக்கியமாக (an all time left classic) என்றும் புதுசாய் இளமை குன்றாமல் திகழ்கிறது.

சாட்டையடிக்கும் சாணிப்பாலுக்கும் எதிராகச் செங்கொடியின் கீழ் அணிதிரண்ட தஞ்சை மண்ணின் வீரப்புதல்வர்களின் வரலாற்றை மாரப்பன் என்னும் ஒரு தலித் கதாபாத்திரத்தின் குடும்பத்தை மையமாகக் கொண்டு நுட்பமான பாத்திர வார்ப்புகளோடு உயிர்த்துடிப்புள்ள படைப்பாக கு.சிபா. இதைப் படைத்துள்ளார்.

பொதுவாகவே எந்த ஒரு நாவலை எழுதத்துவங்கும் முன்பு சம்பந்தப்பட்ட மக்களின் வாழ்விடத்துக்கே சென்று அவர்களோடு சில காலம் வாழ்ந்து அவ்வாழ்வை நாவலாகப்படைக்கும் பழக்கத்துக்கும் தமிழில் தோழர் கு.சி.பா தான் முன்னோடி என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். தாகம் துவங்கி சுரங்கம் வரை களப்பணியின் ஆதாரம் இல்லாமல் அவர் நாவலை எழுதத்துவங்குவதில்லை.

எத்தனைப் படைப்புகள் வந்தாலும் தாகம் என்றென்றும் நம் வாசக மனங்களில் நிலைத்து நிற்கும் ஓர் உயிர்க்காவியமாகும். அதன் புதிய பதிப்பை வெளியிடுவதில் பாரதி புத்தகாலயம் பெருமை கொள்கிறது. 60களில் தாகம் ஏற்படுத்திய அலையை இப்பதிப்பு மீண்டும் ஏற்படுத்த வேண்டும். ஏற்படுத்தும்.

இந்நேரத்தில் முதல் இரண்டு பதிப்புகளை வெளியிட்ட அன்னம்(பி)லிட் சிவகங்கை இதன் மூன்றாம் பதிப்பை வெளியிட்ட பாவை பப்ளிகேஷன் ஆகியோருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

# 1

அறுவடைக்காலம், புஞ்சைக் காடுகளில் விளைந்த கடலை, கம்பு, சோளம் முதலான பயிர்களை அறுவடை செய்வதில் விவசாயிகள் எல்லாம் ஈடுபட்டிருந்தனர். மார்கழி மாதக் கருவோட்டம். வானத்தில் திட்டுத்திட்டாக அழுக்குக் கந்தல் போன்ற கரியமேகம் மிதந்து சென்றது. கீழ்க்காற்று சற்று பலமாக வீசியது. திரண்ட மேகங்கள் கலைந்து ஓடின. மாலைப் பொழுது வந்தது. வானம் பளிச்சென விளங்கியது. கடற்பரப்பைப் போல ஒரே நீலவண்ணம். முன்பனிக் காற்று சிலுசிலுத்தது. பகலின் வெம்மையில் காய்ந்து உலர்ந்த மண்ணும், தழைகளும் பனிக்காற்றின் நப்புத் தட்டியவுடன் ஒருவித மணத்தை அள்ளி வீசியது. கடலையின் மணமும், கம்பு, தட்டை, மொச்சை முதலிய தானியங்களினின்று எழும் கமறலும் மனதுக்கு ஒருவித லயிப்பைத் தந்தன.

ஆடுகளைப் பட்டியில் அடைக்கச் சென்ற சிறுவர்கள் பாட்டுக்களை முணுமுணுத்த வண்ணம் வீட்டுக்கு வந்தனர். சில கடுவன் நாய்கள் தங்களுடைய பருவகாலத்தை வீணாக்க விரும்பாமல் தங்கள் ராணிகளுடன் சுற்றிக் கொண்டு பட்டிக்குச் செல்ல மறுத்தன. அதனால் சில சிறுவர்கள் தொண்டை வறள அவைகளைச் கூப்பிட்டுக் கொண்டிருந்தனர். ஊசிப் புல் காட்டில் புழுதியும், சருகும் அண்டிக் கிடப்பது போல விவசாயிகளின் ரோமம் மண்டிய திரேகங்களில் குப்பையும், புழுதியும் அண்டிக் கிடந்தன. கருவேல மரங்களில் காய்ந்த புல் சிக்கித் தொங்குவது போலச் செத்தையும், கூளமும் சிக்குப் பிடித்த தலைமயிரில் சிக்கித் தொங்கின. களைப்பும், சோர்வும், பசியும் கொண்ட விவசாயிகள் கூடைகளிலும், சாக்குகளிலும் கடலை, கம்மங்கதிர்களைச் சுமந்த வண்ணம் ஏற்றம் இறைத்து விட்டு வரும் கிழட்டு எருது போல தளர்ந்து நடந்து வந்தனர். அந்தப் பொன்னேரிக் கிராமம் முழுவதும் ஒருவித அசிரத்தையில், கிழட்டுத் தளர்ச்சியில் வீழ்ந்து விட்டது போலக் காட்சியளித்தது.

சாய்ந்து போன அருகம்புல்லின் சிலிர்ப்பைப் போல குமைந்துவிட்ட கட்டுக் குடுமியும், எலும்பு தூக்கிய கன்னமும், அடர்த்தியற்ற தொங்கு மீசையும், விரிந்தகன்ற மார்பும், உடலில் செழுமையில்லாவிட்டாலும் கட்டுக்குலையாத உடலும், தலையில் தலைப்பாகையும், இடையில் கோவணமும், காதில் கடுக்கனுமாக அதோ! இரண்டு எருதுகளையும், ஒரு எருமை மாட்டையும் இழுத்துக் கொண்டு ஈக்கி உரித்த சோளத் தக்கை மாதிரி நடந்து வருகிறானே அவன்தான் மாரப்பன் எனும் விவசாயி.

அளவுக்கு மீறிய உழைப்பால் அவன் மனைவி மாரக்காள் தன் பொலிவை இழந்திருந்ததால், வயதுக்கு மீறிய முதுமையைத் தோற்றம் உணர்த்தியது. காதுப் பொன் போட்டுத் துளை விழுந்த நீண்ட காதும், கோபுரக் கலசம் போல் விளங்கும் கொப்புப் பூட்டிய மடிந்த மேற்காதும், லேசாகச் சுருக்கம் விழுந்து விட்ட முகமும், பதினாறு முழச் சேலையை வயல் வேலை செய்வதற்கு ஏற்றவகையில் முழங்காலுக்கு மேல் உயர்த்தி முந்தானித் தலைப்பால் இடுப்பைச் சுற்றி கச்சை வரிவதுபோல் கட்டிய அரை நிர்வாணத் தோற்றமுமாக விளங்கினாள்.

மூத்த மகன் பெயர் கந்தன். இருபத்திரண்டு வயது வாலிபன். அந்தச் சந்ததிக்கு முரணான தோற்றம். ஒல்லியான திரேகக் கட்டு. நீண்ட சிறுத்த முகம். பருந்து மூக்கு, விரிந்த காது, கலகலப்பாகப் பழகும் குணம். அவனுக்கு இளையவள் தான் பழனியம்மாள். அவனைவிட இரண்டு வயது இளையவள். தாயைப் போன்ற சாயல். சிரிக்கும் பொழுது மயக்கமூட்டும் கன்னக் குழிவு. கருமொச்சை போன்ற அழகுக் கண்கள். எடுப்பான மார்பு. இடை சிறுத்தகன்ற பின்னழகூட்டும் பிருஷ்ட பாகம். இதுதான் பழனியம்மாளின் சிறப்புமிகு வடிவு.

இளைய பெண் முத்தம்மாள். பத்து வயதிருக்கும். மகாத் துடுசு. துருதுருவென்று திரிவாள். பால்கொதனை இன்னும் நீங்கவில்லை. நீர்ப்பூசணிபோல் கொஞ்சம் கொழுகொழுத்த உடம்பு. இவர்கள்தான் மாரப்பன் குடும்ப உறுப்பினர்கள்.

மாரப்பன் எருதுகளைக் கொண்டுவந்து கட்டுத்தரையில் கட்டிக் கூளம் போட்டுவிட்டு வீட்டிற்குச் சென்றான். அன்றைய உழைப்பால் அவன் மிகவும் களைப்புற்றிருந்தான். உடல் தளர்ச்சியும், களைப்பும் உழைப்பாளிகளுக்கு அணிகலன் போலும். அதை அணியவே அவர்கள் பிறப்பெடுத்தார்களோ?

அவன் கால்களில் முழங்கால் வரையிலும் புழுதி மண்டிக் கிடந்தது. கறுத்த ரோமங்கள் பொன்னிறமாகக் காட்சியளித்தன. அவன் மூத்திரம் விடும்பொழுது தரையில் பட்டுத் தெறித்துப் பாதத்தில் பட்டவிடங்களில் புள்ளி புள்ளியாக அழுக்குக் கறை படிந்திருந்தது. அதேபோல், கட்கத்திலும், கால் மடிப்புகளிலும் வியர்வை படிந்து காய்ந்த இடங்களில் வளைவு கோடுகளாக உப்புப் படர்ந்திருந்தது. வீட்டிற்கு வந்தவன் களைப்போடு கயிற்று நார்க் கட்டிலில் தொப்பென்று அமர்ந்து பெருமூச்சு விட்டான்.

"தண்ணி காஞ்சிருக்குதா? ஒடம்புக்கு ரண்டு சொப்பு ஊத்துனாத்தா மேனி தூக்கியுட்டாப்பலே இருக்கும்" என்று அசரிக்கை கலந்த குரலோடு உடலை நெளித்து விட்டபடி மனைவியைப் பார்த்துக் கேட்டான்.

அவளும் அவனோடு ஒன்றாக வேலை செய்துவிட்டு அவனுக்குச் சற்று முன்னால்தான் சோறாக்குவதற்கு வீட்டிற்கு வந்தாள். அதற்குள் எப்படியவள் சமையலை முடித்து விட்டுக் குளிப்பதற்குச் சுடுதண்ணீரும் போடமுடியும்? இருந்தாலும் உடல் அலுப்பு அவனையறியாமல் கேட்கத் தூண்டியது.

"எனக்கு மட்டுமென்ன ஒடம்பு கல்லா? உன்னையாட்டந் தானே நானும் வேலை செஞ்சிட்டு வந்திருக்கறேன். எப்படி அதுக்குள்ளே சோறாக்கித் தண்ணி காய வச்சிர முடியும்?" என்று விபரம் தெரியாது அடம் பிடிக்கும் குழந்தைக்கு எடுத்துக் கூறுவதுபோலப் பரிவுணர்ச்சியுடன் எடுத்துக் கூறினாள்.

உழைப்பின் உபாதையை ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்குக் குடும்பத்திற்குள்ளேயே ஒருவருக்கொருவர் குற்றஞ்சாட்டிக் கொள்வதும் - தன் வேலையே பெரிதெனப் பேசுவதுமான உணர்வோட்டங்களால் எழும் விபரீதங்களையும் அவள் நன்கு புரிந்தவள். அதையொட்டி எப்படிச் சுமுகமாகப் போக வேண்டும், எப்படிக் கடிந்து நிற்கவேண்டும் என்கிற கலையையும் அவள் நன்கு கற்றவள். அப்படி அவளும், அதே போல் கணவனும் ஒருவருக்கொருவர் புரிந்திருந்த காரணத்தினால் தான் அந்தக் குடும்பத்தில் நிகழும் எந்தவிமான கஷ்ட நஷ்டங்களிலும் அவர்களால் தாக்குப்பிடித்து ஒரு சேர இணைந்து பிணைந்து செல்ல முடிந்திருக்கிறது.

அவளை உழைப்பின் வடிவம் என்றுதான் சொல்ல வேண்டும். அவள் எப்படித் தன் உடம்பைத் தினமும் குளித்துச் சுத்தப்படுத்திக் கொண்டாலும் அந்தந்தப் பருவகாலத்தியப்

பயிர்களின் மணமும், மண்ணின் சுகந்தமும் அவளிடம் பரிமளிக்கும். ஊத்தை உடம்பின் மனிதவாடையை அவளிடம் காணவே முடியாது. அவள் பேச்சிலும், சிந்தனையிலும் நிலத்தைப் பற்றியும், பயிரைப் பற்றியும், உழைப்பைப் பற்றியுமாகவே இருக்கும். அவள் என்றைக்குமே காலை நேரத்திலும், மதியான நேரத்திலும் சாப்பிடும்பொழுது உட்கார்ந்து ஆற அமரச் சாப்பிடுவதைப் பார்க்க முடியாது. நின்றுகொண்டே குண்டாவில் சோற்றைப் போட்டுக் கொண்டு லபக் லபக்கென்று உருட்டி உருட்டி வாயில் திணித்துக் கொள்வாள். உட்கார்ந்துமென்று சாப்பிட ஆரம்பித்தால் சாப்பிடுவதற்கு நேரமாவதுடன் சில வேளைகளில் களைப்பின் அயர்வில் உட்கார்ந்து கொண்டிருக்கவோ, படுத்துக் கொண்டிருக்கவோ மனம் இடம் தந்துவிடும் என்று நினைப்பாள்.

பகலில் அவளுக்கு ஓய்வெல்லாம் சற்று நேரம் வெற்றிலை பாக்கு போடும்போதோ, தண்ணீர் சுமக்கும்போதோஅல்லது ஏதாவது சுமை எடுத்துச் செல்லும்போதோ நின்று கொண்டு பேசுவதுதான். சுமையில்லாமல் வெறுமனே பேசிக் கொண்டிருந்தால் அநாவசியமாகப் பேச்சு நீளும் என்பது அவள் கருத்து. உழைப்பை அவள் வரித்திருந்தாள். அதனுடன் இரண்டறக் கலந்திருந்தாள்.

உலையில் போடுவதற்காக எடுத்து வந்த அரிசியைக் கணவனுக்கு முன்னால் வைத்து, கல்லை நீக்கி அரித்து எடுத்தாள். அப்பொழுது அவன் உட்கார்ந்து இருந்த கயிற்றுக் கட்டிலின் பின்னலுக்கிடையில் ஆச்சரியத்துடன் உற்றுப் பார்த்தவள் விஷயத்தைப் புரிந்துகொண்டு கள்ளச் சிரிப்புச் சிரித்தவாறு கணவனைப் பார்த்து, "என்ன அள்வளவு அலுப்பு மனுசனுக்கு, ஒடம்பிலே என்ன இருக்குது இல்லீங்கறது தெரியாமே?" என்று மீண்டும் கட்டிலுக்கடியில் பார்த்தாள். அவனுக்கோ ஒன்றும் புரியவில்லை. வியப்பு மேலிட நெற்றிப் புருவத்தை மேல் நோக்கி நெரித்துப் பார்த்தபடி, "என்ன சொல்றே? எனக்கொண்ணும் புரியலியே?" என்றான்.

பிறகு தன்னுணர்வு பெற்றவன்போல ஒரு துள்ளுத் துள்ளி எழுந்து "உனக்கு எப்படி இருக்குது?" என்று லேசாகச் சிரித்துவிட்டுப் பிய்ந்துபோன ஆடையைச் சரிசெய்து கொண்டு, "எட்டு நாளா இதே தவணை, சந்தைக்கு போயி ஒரு தாச்சீலை வாங்கி வரணும்னு, காசுதான் கெடைக்கலே. கையகல நெலமுள்ள நமக்கே இந்தக் கஷ்டம்னா..." என்று பெருமூச்சு விட்டு சற்று அமைதியாக இருந்துவிட்டு, "இந்த இத்துப்போன

தாச்சீலை எல்லாம் இறுக்கிக் கட்டுனா பிசுபிசுன்னு விட்டுப் போயிடுது" என்றான்.

வீட்டினுள் அடுப்பிலிருந்து உலைத் தண்ணீர் பொங்கவும் அடுப்பு சொய் என்று ஓசையிட்டது. வீட்டுக்குள் ஓடி வந்து மூடியிருந்த சட்டியை எடுத்து அரித்தெடுத்த அரிசியை உலை யில் போட்டாள். அடுப்புப் புகையும், நீராவியும் அவள் முகத்தில் பட்டு உடலை வேர்க்கச் செய்தது. இடுப்பில் சுற்றிக் கட்டியிருந்த முந்தானியை அவிழ்த்து முகத்தைத் துடைத்துக் கொண்டு "மருமவன் எடுக்கற வயசு வந்தும் உனக்கு எப்படி இருக்கோணும்னு தெரியல்லை. குனுஞ்சு வேலை செய்யறப்போ பொம்பளை பார்த்தா என்ன நெனைப்பா?" என்று கேட்டாள்.

அவன் வாய்விட்டுச் சிரித்தபடி "என்ன நெனைச்சா என்ன? ஆரும் தப்பா எடுத்துக்க மாட்டாங்க, கொளந்தையை ஆரும் ஆசூசையாவோ, தப்பாவோ நெனைக்கறாங்களா? இன்னமே நாம்பளும் அப்படித்தா" என்று கூறிக் கட்டிலில் காலை நீட்டிப் படுத்தான்.

அடுப்பில் சமையலை முடித்துவிட்டுக் குளிப்பதற்கு வெந்நீர்ப் பானையை ஏற்றினாள். தண்ணீர் சூடானவுடன் கணவன் இடது கையால் பானையைப் பிடித்துத் தூக்கவும் மனைவி தனது வலது கையால் கணவனின் தோளில் குத்திட்டு இடது கையால் பானையைத் தூக்கிக் கொண்டு சென்று வாசலில் வைத்தாள்.

அப்பொழுது காட்டில் காய்ந்து வெடித்துக் கிடக்கும் கொட்டைமுத்தை முத்தம்மாள் மடியில் பொறுக்கிக் கட்டி வந்தாள். பழனியம்மாள் புளிச்சக் கீரையைப் பறித்து மடியில் போட்டு வந்தாள், விடியற்காலைய குழம்புக்கென்று.

முத்தம்மாள் தன் தகப்பனிடம் சென்று "அண்ணா! இந்தா பாரு கொட்டமுத்து" என்றாள்.

மாரப்பன் அவள் கன்னத்தைத் தட்டிக் கொடுத்து "நீ கெட்டிக்காரப் பொண்ணுடா கண்ணு" என்றான்.

அவள் பூரிப்பு மிகுதியால் புன்னகைத்தபடி "இதை நா தனியாத்தா வச்சிருப்பே. இப்படியே நா இம்புட்டுச் சேத்து காசுக்குப் போட்டு ஒரு கோழிக்குஞ்சு வாங்கியுடப் போறே" என்று கூறினாள். அவள் முகத்தில் களிப்பும், மகத்தான சாதனை புரிவது போன்ற பெருமிதமும் நிழலாடியது.

"டேயப்பா! எனக்கு முட்டாயி வாங்கித் தருவியா?" என்று சந்தோச மிகுதியால் சிரித்தபடி அவன் கேட்டான்.

"போண்ணா! நீதா எனக்கு ஒண்ணுமே வாங்கித் தாரதில்லையே" என்று சிணுங்கிக்கொண்டாள்.

"சரி, சரி! எல்லாரும் தண்ணி வாத்துக்கிட்டு வாங்க. எண்ணெய்க்குக் கேடா வெளக்கெரியுது" என்று சாப்பிடுவதற்கு அவன் மனைவி மாரக்காள் கூப்பிட எல்லோரும் குளித்துவிட்டுச் சாப்பிட்டுச் சென்றனர்.

எல்லோரும் படுக்கைக்குச் செல்லுமுன் அடுத்த நாளைய வேலையைப் பற்றி சற்று பேசினர். இன்னும் ஒரு வாரத்தில் கடலை பிடுங்கிவிட வேண்டும். வானம் ஒரு மாதிரியாக சூல்கொண்டு நிற்கிறது. மழை பெய்துவிட்டால் கடலைக் கொடி காய்ந்து வீணாகிவிடும். கடலையும் நனைந்து கருத்து விடும்.

"காடி மதனம் கோடி விசனமாகிவிடும்" என்று மாரக்காள் அடிக்கடி சொல்வதுண்டு.

எல்லோரும் படுக்கச் சென்றனர். முன் நிலவானபடியால் நிலவொளி இல்லை. குஞ்சுத் தாய்க் கோழி மீன் உச்சியில் இருந்தது. ஒன்றுக்கு வந்த மாரக்காள் வானத்தை அண்ணாந்து பார்த்தாள். இப்பொழுதே வேலை செய்ய ஆரம்பிச்சாத்தா பளப்பளன்னு வெடிய காட்டுக்குப் போகமுடியும் என்று நினைத்தபடி முகம், வாய் அலம்ப வாசலில் இருந்த குடத்துத் தண்ணீரைக் கையில் அள்ளினாள். பனிபட்ட தண்ணீர் உடலைச் சில்லிட வைத்தது. வீட்டுக்குள் சென்று விளக்கேற்றி அண்டாவில் இருந்த தண்ணீரை மொண்டு வாய் கொப்பளித்து முகம் அலம்பிக்கொண்டு உடலுக்குச் சுறுசுறுப்பேற்ற வெற்றிலைப் பாக்கு எடுத்துப் போட்டுக் கொண்டாள்.

விடிவதற்குள் எவ்வளவோ வேலை செய்தாக வேண்டும். எருமை மாட்டிற்குக் கொட்டையாட்டித் தண்ணீர் ஊற்றித் தவிடு போட்டாக வேண்டும். கட்டுத்தரையில் கிடக்கும் சாணம் எடுத்துச் சுத்தம் செய்தாக வேண்டும். சாணி தெளித்து வாசல் பெருக்கியாக வேண்டும். சோளம் குத்தி களி கிண்டி ஆனம் காய்ச்சியாக வேண்டும். வட்டிச் செம்பு விளக்கி சட்டி பானை கழுவி சுத்தம் செய்தாக வேண்டும். நெல்லங் காட்டுக்கு நீர் பாய்ச்சியாக வேண்டும். இவ்வளவு வேலைகளையும் விடிவதற் குள் எல்லோரும் சேர்ந்து செய்து முடித்தால் தான் காட்டிற்குக் கடலை வெட்டச் செல்ல முடியும்.

வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சி வரவேண்டி, கணவனை எழுப்பிவிட்டாள். எழுந்து வெளியில் சென்றவன் ஒன்றுக்கிருந்து விட்டு, மாட்டைப் பிடித்து வைக்கோற்போரில் கட்டியவன்

வானத்தை அண்ணாந்து பார்த்தான், குஞ்சுத் தாய்க்கோழி மீன் இன்னும் அடிச்சாயவில்லை என்று தெரிந்து மனைவியிடம் வந்து, "இன்னும் பாதிநேரம் கூட ஆவிலியே. இப்பவே என்ன அவசரம்?" என்று கூறி படுக்கப் போனான். செக்கிலிட்டுக் குத்து வதற்குச் சோளம் எடுத்துக்கொண்டு வந்தவள் "நேரத்திலியே வயலுக்குத் தண்ணி எறச்சுட்டு வந்துட்டா கடலைக்கொடி வெட்டி எல்லாருக்கும் போட்டுடலாம். வெய்யலானா கொடி யும் நொறுங்கிப்போயிடும். பனிப்பதமும் காஞ்சு போயிடும்" என்று கூறி வாயிலிருந்த வெற்றிலை எச்சிலைத் துப்பினாள்.

வேட்டியை எடுத்துப் போத்திக் கோழிக் காய்ச்சல் கண்டவன் போலக் கன்னத்துக்குக் கைகொடுத்துத் தூக்கம் கலையாதவனாக "நேரத்திலே போவதப்பத்தி இல்லே. நம்ம தோட்டத்துக் கரைமேலே முனிக்கருப்பு தெனமும் போற நேரமிது" என்றான்.

செக்கில் சோளம் இடிப்பதை நிறுத்திவிட்டு, "பசுமாடு கிட்ட இருக்கும்பொழுது எந்த கருப்புத்தா கிட்ட வரும்?" என்நாள்.

"ஏத்தல்லே கட்டுனா மாடு வாரியில்தான் இருக்கும்; தண்ணி வயலுக்கு நாலு பக்கமும் பாஞ்சுதா இல்லியான்னு பார்க்கப் போனா தனியாத்தானே போவணும்" என்றான்.

அவளுக்கு இந்தப் பேச்சு ஆத்திரத்தை மூட்டியது. இப்படி யிருந்தால் காலாகாலத்தில் ஆள் போட்டு செய்யாமலேயே எப்படி அவர்கள் குடும்பம் மட்டுமே ஈடுபட்டு அறுவடை வேலையைச் செய்து முடிக்கிறது? எப்படி நாலு காசு கையில் பிடித்துக் குழந்தைகளுக்குக் கல்யாணம் முடித்து நாலு பேர் மத்தியில் கடனும் இல்லாமல் வாழ்வது? குடும்பத்தை நடத்தும் ஆணுக்கல்லவா அந்தக் கவலை முதலில் இருக்க வேண்டும்.

அவள் சொன்னாள்: "கொமிரியா, கொங்கியா கருப்புப் புடிக்க? சோமசுறு செரச்சுக் காலம் போன முண்டைக்குக் கருப்பு வருதாம். காத்து வருதாம் கைலாவிலின்னு சொல்லே. கொஞ்ச மாலும் நம்ம வேலையே வெட்டியேன்னு நெஞ்சிலே கருக்கடை இருந்தாத்தானே?" என்று வேலாங்காயைத் தின்று விட்டு அசை போடும் வெள்ளாடு மாதிரி பொரிந்து தள்ளினாள்.

"உனக்கென்ன பொழுது கௌம்பக் காட்டிலே வந்து கடலைக் கொடி வெட்டிப் போடணும். அவ்வளவுதானே? உன் வேலையைப் பாரு!" என்று குளிர்காலத்தில் சூட்டடுப்புப் பக்கம் படுத்து கிடக்கும் பூனை மாதிரி முழங்கால்கள் இரண்டையும் குறுக்கி அடிவயிற்றில் சேர்த்துப் படுத்தான்.

இனி அவனுக்குத் தூக்கம் வராது. அன்றைய வேலைப் பளு அவன் சிந்தனையில் அழுத்த ஆரம்பித்துவிட்டது. உடற்களைப்பும், தூக்கச் சோம்பலும் அவனை அலைக்கழித்தாலும் அவன் இனி படுத்திருக்க மாட்டான். அவன் அந்தக் குடும்பத்தின் தலைவனல்லவா?

எழுந்தான். போர்த்தியிருந்த வேட்டியை எடுத்துத் தலையில் சுற்றிக் கொண்டு "நான் போறேன். நேரத்திலியே தம்பியெ எழுப்பி பருத்திக்கொட்டை ஆட்டித் தாளியில் ஊத்திட்டு, கட்டுத்தரை சாணியை வாரிக் குப்பையில் கொட்டிட்டு காட்டுக்குப் போயி ஒரு மெனை முன்னாடியே வெட்டச் சொல்லு" என்று வடம், பறி முதலான இறவைச் சாமான்களை எடுத்துத் தலையில் வைத்து மாட்டைப் பிடித்துப் புறப்பட்டான்.

அவள் ஒன்றும் பதில் பேசவில்லை. தன் கணவன் செய்ய வேண்டிய வேலைக்குத் தகுமானம் சொல்லி சுணக்கப்படுத்தும் போதெல்லாம் அவள் இப்படி மௌனம் சாதிப்பது வழக்கம். அது அவனிடம் அவள் காட்டும் கோபமா? அல்லது தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் வழிமுறையா?

கந்தனையும், பழனியம்மாளையும் எழுப்பிவிட்டாள். அப்பொழுதுதான் தலைக்கோழி கூவ ஆரம்பித்தது. அதற்குள் அவள் சோளக்களி கிளறி மூடிவிட்டாள். ஆளுக்கொரு வேலையாக வீட்டு வேலை நடந்தது.

இருண்ட வீட்டில் அடுப்பேற்றும் பொழுது சிறுகச் சிறுக சிறு குச்சியிலிருந்து பெரு விறகுக்குத் தீப்பிடித்து ஒளிச்சுடர் எழுவது போல, கீழ்வானத்தில் இருள் கலைந்து கொண்டிருந்தது. குயில்களும், கரிக்குருவிகளும் போட்டி போட்டுக் கொண்டு குரல் எழுப்பின; விட்டு விட்டுச் சேவல்கள் கூவின. அன்றைய பொழுதின் புதிய தயாரிப்புகளுக்கு ஒவ்வொரு ஜீவனும் தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருந்தன. வாழ்க்கைத்தாகம் எல்லா ஜீவராசிகளுக்கும் ஒன்றுதானோ?

இன்னும் ஒரு வயலுக்குத்தான் மாரப்பன் தண்ணீர் இறைக்க வேண்டியிருந்தது. பொழுது கிளம்புவதற்குள் ஏற்றம் விட்டு விட்டுக் கடலைக் காட்டுக்குச் சென்றுவிடுவான்.

# 2

**வா**னம் மூட்டம் போட்டிருந்தது. வாடைக்காற்று சிலு சிலுவென வீசியது. ஈரப்பதம் நிறைந்த கடலைச்செடியின் மணமும், கொட்டைச் செடியின் நெடியும், பிற இலை தழைகள் மண்ணில் விழுந்து மக்கிய ஒருவகைக் கமறலும் காற்றில் எழுந்து மனதிற்கு இதமளித்தது.

மாரப்பன் மாட்டைக் கொண்டுபோய்க் காட்டில் சோளப் பயிரில் கட்டிவிட்டுக் கடலைக் காட்டுக்குச் சென்றான். அவன் வருவதற்கு முன்னதாகவே கந்தனும், பழனியம்மாளும், முத்தம்மாளும் சென்று கடலைச் செடி வெட்டி கடலை பறித்துக் கொண்டிருந்தார்கள். மாரக்காள் இன்னும் வந்து சேரவில்லை. வீட்டு வேலைகளை எல்லாம் முடித்து விட்டு, எல்லோருக்கும் சோறு தண்ணி எடுத்துக் கொண்டு வந்து சேர வேண்டாமா? காட்டுக்கு வந்தால் இரவு வீட்டுக்குப் போய்ச் சேர வேண்டி ருக்கிறது.

சூரியன் உதிக்கும் திக்கைப் பார்த்துக் கும்பிட்டுவிட்டு கைக்கு எச்சிலைத் துப்பிப் பதம் செய்து கொண்டு மண்வெட்டியைப் பிடித்துக் கடலைச்செடியை வெட்ட ஆரம்பித்தான் மாரப்பன். சில இடங்களில் மண் கடிசாக இருந்தது. செம்மண் பிடித்த முள்ள இடங்களில் பார்த்து வெட்டாவிட்டால் காய் மண்ணில் அறுந்து தங்கி விடும். மனிதனைப் போலவே மண்ணுக்கும் நெஞ்சிறுக்கம் உண்டோ? மனிதனுக்கிருக்கும் குணபேதங் களைப் போலவே மண்ணுக்கும் இருக்கிறதோ?

செடியின் இடைவெளி பார்த்து லாவகமாக மண்ணை வெட்டிச் செடியைப் புரட்டித் தள்ளினான். நாய் மடியின் முலைக்காம்புகள் போல கடலைக் காய்கள் செடியில் கொத்துக் கொத்தாய்த் தொங்கின. கடலையும் மண்ணும் கலந்த வாசம் காய்ந்துபோன மண்ணில் இரவுப் பனியின் நப்புத் தட்டி நெஞ்சை அள்ளியது.

வானத்தில் மூட்டம் கலைந்து சூரிய ஒளி சுள்ளென்று பரவியது. காலைப் பனிக்காற்றும், இளங்கதிர் வெப்பமும் உடலுக்கு இதமளித்தது. முதல்நாள் வெட்டிய கடலைக் கொடி இன்று கத்தை கட்டி வைக்காவிட்டால் தழை காய்ந்து உதிர்ந்து விடும். அல்லது மழை ஏதும் பெய்தால் கொடியின் மணம் கெட்டு மாட்டுத் தீவனத்திற்குப் பயனில்லாமற்போய்விடும்.

"தம்பீ! நேத்து வெட்டிப் போட்ட கொடியை உருட்டிக் கத்தை கட்டிப் போடு. நானு கொடி வெட்டிப் போடறே" என்று மகனைப் பார்த்துக் கூறினான் மாரப்பன்.

கந்தன் கவைக் குச்சியை எடுத்துக் கொடியை உருட்ட ஆரம்பித்தான். கைதேர்ந்த நாட்டிய மங்கையின் கால்கள் இட்டுச் செல்லும் ஜதிக்கோலம் போல் அவன் கவைக்குச்சிக் கோலம் தீட்டியது.

ஒரு பெரிய மூங்கிற்கூடையில் இரண்டு வேளைக்கான ஆனஞ்சோறும், கறைச்சோறும் வைத்து எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தாள் மாரக்காள். கூடையை இறக்கி வைத்து சணல் சாக்கை எடுத்துக் கூடைமீது மூடிக் கொடியை அள்ளி அதன் மீது தூவி, காக்கை வந்து சோற்றை அலம்பாமல் இருக்க ஏற்பாடுகள் செய்தாள். காலையிலிருந்து நடந்திருக்கிற வேலைகள், தான் இல்லாததினால் சுணங்கியிருக்கிறதென்று எண்ணினாள். எப்பொழுதுமே அவளுக்கு, தான் இல்லா விட்டால் எந்த வேலையும் சுத்தமாகவும், துரிதமாகவும் நடந்தேறாதென்றும், தான் செத்துப்போன பின்னர், இந்தக் குடும்பம் எப்படிப் பிழைக்கப் போவுதோ என்றும் தனக்குள் ளேயே முனங்கிக் கொண்டிருப்பாள்.

பழனியம்மாளும், முத்தம்மாளும் வெட்டிக் குவித்த கடலைக் குவியலுக்கு முன்னர் அமர்ந்து கடலை பறித்துக் கொண்டிருந் தனர். மாரக்காள் கடலை வெட்டிய காட்டுக்குள் ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்துவிட்டு முத்தம்மாளைப் பார்த்து, "மண்ணிலே தப்புக்காயி நெறைய மேலே கெடக்குதே, அதப்பாத்து மொதல்லே பொறுக்கிறதில்லே? காக்கா குருவி எடுத்துக் கிட்டுப் போயிடாது? நான் இல்லைன்னா எல்லோருக்கும் சூளுத்துப் போயிடுது" என்று கூறி, வேகவேகமாகக் குனிந்து மேலே கிடந்த காய்களைப் பொறுக்கிவிட்டுக் கடலைச் செடிக் குவியலின் பக்கம் வந்து அமர்ந்தாள். கடலைச்செடிகளை எடுத்து வெறுக் வெறுக்கென்று காய்களைப் பறித்து மூங்கில் கூடையில் போட்டபடி "என்ன சொரணையில் பிள்ளைக்காய் பொறிக்குது போ! கை நோவுதா, கால் நோவுதா?" என்றாள்.

அவளுக்கு எந்த வேலையைச் செய்தாலும் வேகமாகவும் சுறுசுறுப்பாகவும் செய்யாவிட்டால் மனதுக்கு ஒவ்வாது. "பாட்டுக்கு அஞ்சியவர்களிடத்தில் பயிரும் கட்சி கட்டும்" என்று அடிக்கடி சொல்வாள். வாழ்க்கை அனுபவத்தில் தெளிந்த குரல்தானோ அது!

அன்று பூராவும் கடலை பறிக்க வேண்டிய அளவுக்குக் கடலைக்கொடி வெட்டிக் குவித்தாய்விட்டது. எல்லோரும் சாப்பிட்டுவிட்டு அமர்ந்து விட்டால் வேலை வேகமாக ஓடும்.

எல்லோரும் காட்டு மண்ணை எடுத்துப் பல் தீட்டி வாய் கொப்பளித்தனர். கொட்டை இலையைக் கிள்ளி ஏந்திய இரண்டு கைகளுக்குமிடையில் பிடித்து அமர்ந்தனர். பிரண்டைக் கடுப்பானில் சோளக் களியைப் போட்டுப் பிசைந்து உருண்டையாக உருட்டிக் கொட்டை இலையில் போட்டாள். இடதுகையில் இலையை ஏந்திக்கொண்டு வலது கையால் உருட்டி உருட்டி வாயில் போட்டு, கோழி இரை விழுங்குவது போல விழுங்கினர்.

ஏறக்குறைய முழு நிர்வாண நிலையிலான மாரப்பனின் உடலில் செம்மண் புழுதியண்டி வியர்வைக் கோடு கீறிவிட்டிருந்தது. மண்ணும் அவனும் ஒரே நிறமாகக் காட்சியளித்தனர். மாரக்காளுக்கு அன்று சனிக்கிழமை என்பது நினைவு வருகிறது சனிக்கிழமைதோறும் மாரப்பன் குளித்து விட்டுத் தான் சாப்பிடுவது வழக்கம். அன்று வேலை நினைவில் மறந்து விட்டான் போலும்!

"இன்னைக்கு சனிக்கெழமையாச்சே! தண்ணி ஊத்திக் கிட்டியா?" என்று கணவனைப் பார்த்துக் கேட்டாள். அவள் குரலில் எரிச்சலும் கேலியும் தொனித்தன.

"இன்னைக்குச் சனிக்கெழமையா?" என்றவன் அதிர்ச்சி மேலிட கையிலிருந்த சோற்று உருண்டையைக் கீழே போட்டு விட்டான். ஏதோ புனிதமான ஒன்றை நழுவ விட்டு விட்டவன் போலச் சிந்தனை வயப்பட்டவனாக அமர்ந்திருந்தான். சற்றுக் கழித்து, "மறந்தே போச்சு" என்று கைகழுவ எழுந்தான்.

"ஆமா, சோத்தத் தின்னுட்டு தண்ணியூத்திக்கப் போ! மனசிலே கவலை இருந்தாத்தானே, சரி! சரி! கையைக் கழுவி தண்ணியைத் தலையிலே தெளிச்சுக்கிட்டு உட்காரு. இப்படி நெருவூலமாக இல்லாமெ இருந்தா ஊட்டுலே நோவு நொடியைக் கொண்டாந்து சாமி எப்படி உடாமே இருக்கும்? பயிர் பச்சைக்கு நோவு தட்டாமெ இருக்கும்" என்றாள்.

தலையில் தெளித்துக்கொண்ட தண்ணீர் சொட்டுக் சொட்டாக முதுகில் விழுந்து வழிந்தது. புழுதியும், பயிர்களின் முழங்கும் அண்டிய உடம்பில் தண்ணீர் பட்டவுடன் பிப்பெடுத்தது. தலையில் சுற்றியிருந்த துண்டை அவிழ்த்து முதுகில் குறுக்குவாக்கில் போட்டுத் தேய்த்துக்கொண்டான்.

"நாம மனசு தெரிஞ்சு சாமிக்குச் சுத்தமா நடக்கலின்னா கஷ்டம் வரும். தெரியாமெ செஞ்சா சாமி பொறுத்துக்கும்" என்றான்.

அவள் கரைத்த சோற்றை இணைத்து ஏந்திய அவன் கைகளில் ஊற்றினாள். பிள்ளைகள் தங்களுக்கு ஆனஞ்சோறு போதுமென்று எழுந்து சென்றுவிட்டனர்.

சோறு சாப்பிட்டுவிட்டு எறிந்த கொட்டை இலைகளைக் காக்கைகள் தமது அலகால் கொத்தி இழுத்துக்கொண்டிருந்தன. திடீரென்று அவைகளுக்குள் சண்டை ஏற்பட்டு ஒன்றை ஒன்று கொத்திக்கொண்டு இறக்கையடித்துப் பறந்தன.

திடீரென்று வெயில் மங்கியது. மார்கழி மாதக்கருவோட்டம் சூரியனைக் கடந்து ஓடிக்கொண்டிருந்தது. மார்கழி மாதத்தில் கூடுகிற மழைக் கருதான் அந்த வருடத்து மழைக்கே மூலாதாரம். பதின்மூன்று நாட்களுக்கு மேல் கருவோட்டம் நிறைந்து நின்றால் அந்த வருடத்தில் நல்ல மழை பெய்யுமென்பார்கள்.

ஙகையில் வாங்கிய சோற்றைக் குடித்துவிட்டு சோற்றுச் சட்டியை நாய் நக்குவதுபோல கையை நக்கிக்கொண்டு எழுந்து கை கழுவினான். பசிக் களைப்பும், உடலலுப்பும் நீங்கினவனாகக் குவிந்திருந்த கடலைக்கொடி குவியலருகே சென்று உட்கார்ந்தான். மாரக்காளும் சென்று அமர்ந்தாள். பிள்ளைகள் தனியாக வேறொரு பக்கம் அமர்ந்து ஏதோ வேடிக்கையாகப் பேசிச் சிரித்துக்கொண்டு கடலை பறித்துக் கொண்டிருந்தார்கள்.

கடலை பறிக்க அமர்ந்தவுடன் அவள் கை துரிதகதியாய் இயங்க ஆரம்பித்து விட்டது. வேலை நுட்பம் தெரியாத இருவர் பறிப்பதற்கும் அதிகமாகவே அவள் ஒருத்தி பறித்து விடுவாள். அந்த ஊரிலேயே அவளை மீறிப் பறிப்பதற்கு யாருமில்லை. அவளுடைய இரண்டு பெண்களும் சேர்ந்து பறித்தால்தான் அவளுக்கு ஈடாக வரமுடியும். அவள் கை விரல்கள் வேகமாக இயங்க இயங்க அவள் முகத்தோற்றம் வெல்ல முடியாத ஒரு பகைவனிடம் உக்ரமாகச் சண்டையிடுவது போலத் துலங்கியது.

திடீரென்று அவளுக்கு பக்கத்து வீட்டுக்காரியின் நினைவு வந்தது. வாயில் ஊறியிருந்த வெற்றிலைச் சாற்றைத் துப்பிவிட்டு, "தெரியுமா நேத்துப் பக்கத்து வீட்டுக்காரி, புள்ளையக் கலச்சுப் புட்டு வந்தது. புருசனைக் கொன்னுட்டு மாமனாரோட திரிஞ்சு வவுத்திலே வாங்கிட்டா. வெக்கங்கெட்ட மூளி. ஆனா ஊருக்கு ஒவிடியும் பேச வந்துடறா" என்று வெறுப்போடு கூறினாள்.

அவள் பெயர் வீராயி. அவர்களுக்கு அவள் பங்காளி முறை. இருவரும் இணை பொளிக்காரர்கள். திருமணம் முடித்து வந்தவுடன் மாமனாரைக் கையில் போட்டுக் கொண்டாள். காரணம், குடும்ப வரவு செலவு பூராவும் அவன் கையில் தான்.

அவள் கணவனோ ஒன்றுக்கும் உதவாத வெற்றாளாகவே இருந்து வந்தான். இதனால் மாமனாரைத் தன் கைக்குள் போட்டுக் கொண்டு கணவனை மதியாமல் நடந்து வந்தாள். இதையறிந்த அவன் விஷமருந்தி மாண்டு போனான். அன்று முதல் இருவரும் ஒரு குடும்பம்தான். வெள்ளைச்சீலை ஒன்று தான் அவள் கணவன் அற்றவள் என்பதற்குச் சாட்சி.

யாராவது அவர்கள் உறவைப் பற்றிப் பேசுவதாகச் சந்தேகப் பட்டால், அடையில் விழுந்த கோழியை விரட்டும் பொழுது எழுந்து கேவிக் கெக்களித்து சுற்றிச் சுற்றி ஓடுவது போல், அவள் சண்டைக்கு எகிறி விழுந்து நிற்பாள். அவளைப் பற்றி யாரும் பேசுவதாக இருந்தால் அண்டை அயலைக் சுற்றிப் பார்த்து விட்டுக் குரல் தாழ்த்தி மெதுவாகத்தான் பேசுவார்கள். மூக்கறுந்த மாட்டுக்குப் போக்கறிந்து போகத் தெரியுமா என்ன?

மாரப்பன் பிறரிடம் சண்டைக்குப் போவதென்றால் மிகவும் பயப்படுவான். அவ்வளவு சங்கோசி. மனைவி சொன்னதைக் கேட்ட அவன், "அப்படியா! அதுதா தலையிலே முக்காடு போட்டுக்கிட்டு செருப்புக் கழட்டாமெ, பொண்ணுப் பிள்ளே மணவறைக்கு வந்துட்டுப் போவது போலப் போனாளா?" என்று வெறுப்பும், அசூசையும் நிறைந்தவனாகக் கூறினான்.

அப்பொழுது அவர்களின் மகன் கந்தன் தண்ணீர் குடிப்பதற் காக அவர்கள் அருகில் இருந்த தண்ணீர்க் குடத்துக்கு வந்தான். அப்பொழுது பேச்சு வேறு திசையில் மாறியது. "நம்ம காட்டிலே அவ்வளவு காயில்லே பக்கத்துக் காட்டிலே காயி சரம் கோத்தாப்பலே இருக்குது" என்றான்.

குடத்துக்குப் பக்கத்தில் தண்ணீர் மொண்டு குடிக்க பாத்திரம் எதுவும் இல்லாதபடியால், குடத்தை அப்படியே தலைக்குமேல் தூக்கித் தலையை அண்ணாந்து கொடுத்தபடி

வாயில் தண்ணீரை ஊற்றிக்கொண்டான் கந்தன். மண்ணுக்கு மேல் கால் பரப்பி நிற்கும் உருண்டையான ஆலமரத்தில் புடைத்து நிற்கும் வேரைப்போல அவனுடைய கழுத்தைச் சுற்றிலும் நரம்புகள் முடிச்செடுத்துப் புடைத்து நிற்கும் காட்சியும், விரிந்தகன்ற மார்பின் எடுப்பும், புஜங்களின் திரட்சியும் பெற்றோர்கள் கண்களுக்கு ஏதோ அந்த நிமிடத்தில் அவன் திடீரென்று வளர்ந்து பெரியவனாகி விட்டது போன்ற ஒரு பிரமையைக் கொடுத்தது. இத்தனை நாள் வரையிலும் அவர்கள் கண்களுக்கு அவன் ஒரு குழந்தையாகவே தோன்றினான்.

பொழுது சாய்ந்து இருள் கவிய ஆரம்பித்தது. மாரக்காளும், முத்தம்மாளும் மாட்டுக்கு இரவுத் தீவனம் கட்டி எடுத்துக் கொண்டு மாட்டையும், எருமையையும் பிடித்துக் கொண்டு சென்றனர். மாரப்பனும், கந்தனும், பழனியம்மாளும் அன்று பறித்த கடலையைச் சாக்கில் கட்டி எடுத்துக் கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டனர்.

# 3

மாரப்பன் வேலை செய்துவிட்டு வரும்பொழுது மூக்குத் துவாரம் பூராவும் தூசியும், புழுதியும் அடைந்து வறட்சி தட்டிப் போய் ஒருவிதமான அரிப்பைக் கொடுத்துக் கொண்டிருந்தது. வீட்டுக்கு வந்து முகம் கழுவும் பொழுது மூக்குக்குத் தண்ணீர் அடித்து மூக்கைச் சிந்தினான். வறட்சி தட்டிய மூக்கில் ஈரம் பட்டவுடன் குபுகுபுவென ரத்தம் சொட்ட ஆரம்பித்தது. பக்கத்தில் இருந்தவர்கள் "சில்லிமூக்கு ஒடைவது நல்லதுதான். தலைவலி வராது" என்றனர். அதுவோ நீண்ட நேரம் நிற்பதாகத் தெரியவில்லை. ஒருவர் எருவாட்டியை மூக்கில் வைத்துக் கொள்ளும்படி யோசனை கூறினார்.

கந்தன் காட்டிலிருந்து பிடித்துவந்த மாட்டையும் எருமை யையும் முளைக்குச்சியில் கட்டி, கட்டுத்தரையைத் துப்புரவு செய்து கடலைக் கொடியை எடுத்துப் போட்டான். மயலை எருதை முளைக்குச்சியில் கட்டியவுடன் கால்களைப் பரப்பி நீண்டு படுத்தது. வயிறு உப்பியிருந்தது. கொடியைத் தின்னட்டு மென்று எழுப்பினான். எழுந்திருக்க முடியவில்லை. வயிறோ வெடித்துவிடும் பலூன் மாதிரி உப்பியிருந்தது.

கவலையும், பயமும் பிடித்தவனாக வீட்டிற்கு ஓடினான். பசிக் களைப்பில் தாள் கட்டைக் கொத்திவிட்டு நிற்பவனின் உடல் நடுங்குவது போல வாலிபத் துடிப்பு நிறைந்த அவன் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது.

"மாடு வவுறுப்பி காலை நீட்டிப் படுத்து கெடக்குது. என்ன மோத் தெரியலே" எறு கனியாத நாகப்பழத்தைத் தின்றவனைப் போல தொண்டையடைக்கக் கூறினான்.

இதைக் கேட்ட மாரப்பன் வாரியடித்து எழுந்து இரவுக் குருவி பாய்ந்து செல்வதுபோலக் கட்டுத்தரையை நோக்கி ஓடினான். சென்றதும் படுத்திருந்த எருதின் தலையைத் தூக்கிக் காதைப்பிடித்துப் பார்த்தான். காது சூடாயிருந்தது. விஷம் தீண்டியிருந்தால் காது சில்லிட்டிருக்குமே! அப்படியானால்

மாடு வயிறுப்பக் காரணம்? ஒருவேளை கொட்டைச் செடியைத் தின்னிருக்குமோ?

மாரப்பன் மகனைக் கேட்டான்: "ஏன்டா! எருது கொட்டைச் செடியைக் கடிச்சுதா?" அவன் குரலில் கவலை தோய்ந்த ஆவேசம் தொனித்தது.

"சோளப் பயித்திலே கட்டியிருந்த எருதை அவுத்தாந்து வுட்டுட்டு ராத்தீனிக்குக் கடலைக்கொடி கொண்டராதுக்காவ கொடியை உருட்டிக் கட்டிக்கிட்டிருந்தே. அதுக்குள்ளே மயலை எருது நாலுவா கொட்டைத் தழையக் கடிச்சிட்டது."

"ம்… ம்… ம். அவ்வளவு வெவரம் மண்டையிலே வெச்சு எழுதியிருக்குது சரி, சரி! ஓடிக் கோமாளி அப்பிச்சியெக் கூட்டியா. வந்து பாடம் போடட்டும்" என்று கூறிவிட்டு எருதின் மூக்கணாங்கயித்தைப் பிடித்துத் தூக்கி "எந்திரிடா சாமி! எல்லாம் நல்லாப் போயிடும்" என்று குழைவும், கருணையும் ததும்பத் தட்டிக்கொடுத்து எழுப்பினான். எழ முடியாத அளவுக்கு உடல் உபாதையும், கஷ்டமும் இருந்தும் அவனுடைய கனிவும், பரிவும் நிறைந்த குரல் அதை எழுந்திருக்கும்படிச் செய்துவிட்டது. சோகம் நிறைந்த அதன் கண்களிலிருந்து சீவப்பட்ட தென்னம்பாளையிலிருந்து மதுநீர் சுரப்பதுபோல நீர் சுரந்தது. அப்படி அதன் கண்களிலிருந்து நீர் வருகிறதென்றால் தன் கஷ்டத்தின் எல்லையைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அது சென்றுவிட்டதென்றுதான் அர்த்தம்.

அவன் கண்களிலும் நீர்த் திரையிட்டது. வெட்டுப்பட்ட வாழைத்தண்டிலிருந்து நீர் ஒழுகுவதுபோல மூக்கிலிருந்து நீர் ஒழுகியது. இமை விழிப்பைத் தாண்டிக் கண்ணீர் வெளிவராமல் அடக்கப்பட்டதன் விளைவுதானோ மூக்கிலிருந்து நீர் திடீரெனச் சுரப்பது?

அவன் நினைவுகள் கடந்த காலத்துக்கு ஓடின. இரண்டு மாதக்கன்றாக இருந்தபொழுதே அதன் தாய்ப்பசு மூச்சடைப்பான் நோய் கண்டு இறந்துவிட்டது. புல் கொறிக்கும் வரையில் குழந்தையைப் போலவே அதற்குப் பால் வார்த்து சோறூட்டி வளர்த்தான். அவன் எங்கு போனாலும் அவன் கூடவே அது செல்லும். காடு, தோட்டத்துக்குச் சென்றால் வெள்ளாமைப் பயிரைக் கடிக்காமல் புற்களைப் பார்த்து மேயும். அவ்வளவு வேக்கியானம் அதற்கு. காளையாகி வேலை செய்யத் துவங்கியதும் ஓட்டுபவனுக்குச் சிரமம் கொடுக்காமல் வெகு லாவகமாக வேலை செய்யும். தரிசாகக் கிடந்த ஒரு பகுதித் தோட்டத்து

நிலத்தை வயலாக்குவதற்கு அவன் எடுத்துக்கொண்ட சிரமத்தை விட அந்த மயலை எருது எடுத்துக் கொண்டதுதான் அதிகம். அதனுடன் ஜோடியாக வேலை செய்யும் கூட்டாளி களைத்துத் துவண்டு போகும் பொழுது மாரப்பன் உழவினின்றும் விடுதலை யளிக்க நுகத்தடியிலிருந்து கன்னித்தும்பை அவிழ்க்கப் போவான். அப்பொழுது அது அவிழ்க்க இசையாமல் கொம்பை ஆட்டும். அப்படிச் செய்தால் அது இன்னும் வேலை செய்யத் தயாராக இருப்பதாக அர்த்தம். அப்பொழுது அதனுடைய கூட்டாளிக்குப் பாரத்தை இலகுவாக்க ஒரு பக்கமாக நுகத்தின் மையத்தை இழுத்து அதன்மீது வைப்பான். களைத்துப்போன நிலையிலும் பாரத்தை இரட்டிப்பாக்கிக் கொண்டு வேலை செய்யும். அவ்வளவு நன்றியுணர்ச்சி அதற்கு. ஒருமுறை அதற்குக் குளம்பில் கொழுவேறிச் சீழ் பிடித்துக்கொண்டு விட்ட பொழுது, அப்பப்பா! அவன் அதற்கு எவ்வளவு கஷ்டப்பட் டான். கட்டிலைப் போட்டுக்கொண்டு அதன் பக்கத்தில் படுத்துக் கொண்டல்லவா பணிவிடைகள் செய்தான். அதற்கு வாய் திறந்து பேசத்தான் தெரியவில்லையே ஒழிய, மனிதனின் உறவை விட அது அவனுக்குப் பலமடங்கு உயர்ந்ததாக விளங்கியது. மனிதனின் உறவு காரண காரியங்களைக் கொண்டு வளர்வது. வாயற்ற ஜீவனின் உறவு பரிவு, பாசத்தைக் கொண்டு தழைப்பது.

வயது ஆக ஆக மனிதனுக்குப் பலதைச் சாப்பிட வேண்டு மெனும் விருப்பம் எழுவதுபோல மாட்டுக்கும் இருக்கும் போலி ருக்கிறது. அதன் விளைவுதான் அது கொட்டைத் தழையைத் தின்றிருப்பதும்.

கோமாளிக் கிழவன் வந்து சேர்ந்தார். எருதின் பக்கம் போய் நின்று பார்த்து, "எருதுக்குச் சொக்குத் தாக்கியிருக்கு" என்றார். கிழவனின் குரலைக் கேட்டுத்தான் மாரப்பன் சுயஉணர்வு கொண்டான்.

"மாமா! இதெ உயிருக்குயிரா வளர்த்தினே" என்று கோவெனக் கதறினான். கழுத்து நரம்பு புடைத்து முகம் வெளிறியது.

"இது என்ன பண்ணிடும்? இதுக்குப்போயி ஆதங்கப்படறே! கந்தா, போயி சுடுதண்ணியும் நாலு வெல்லமும் கொண்டா" என்று கூறி தோளில் போட்டிருந்த துண்டை எடுத்து எருதுக்கு முன்னாள் விசிறி, விசிறி எடுத்து துண்டிலுள்ள நூலை உருவி எறிந்து சொக்குப் பாடம் போட்டார். பின்னர் கொண்டுவந்த

வெல்லத்தைச் சுடுநீரில் கலக்கி எருதின் நாக்கை வெளியில் இழுத்துப் பிடித்து இரண்டு படி தண்ணீர் ஊற்றினார். "இந்தா பார் நீர் எறங்குது. இன்னமே வவுரு உப்புசம் தணிஞ்சிடும். கவலைப்படா*தே" என்று மாரப்பனைத் தைரியப்படுத்தினார்.

வசம்பு போன்ற ஒல்லியான உடல். சொட்டை விழுந்த வழுக்கல் தலை. முன்பக்கம் மடிந்து தொங்கும் நரைத்த மீசை. வட்டமான எடுப்பான முகத்தோற்றம். நடந்து செல்லும் போது காற்றை எதிர்த்துச் சண்டையிடுதல் போல் தாவித் தாவித் விசிறி விசிறி நடக்கும் தோரணை. இதுதான் கோமாளிக்கிழவன். அடிக்கடி கட்கத்து இடுக்கில் இருக்கும் அழுக்கைத் தேய்த்து உருட்டி மனித வாடையும், வியர்வைக் கரிப்பும், புளிப்பும் நிறைந்த வாசத்தை முகர்ந்து பார்க்கும் செய்கை - அது அவருக்கு ஒரு விடமுடியாத பழக்கம்.

அவருக்கு எழுபது வயதுக்கு மேலிருக்கும். இருப்பினும் இளமைத் துடிப்பும் கற்பனை வளமும் கொண்டு விளங்கினார். அந்த ஊரில் அந்தக் காலத்தில் அவர்தான் பாண்டு பத்தரம் எழுதவும், கணக்கு வழக்கு பார்க்கவும், மாடு, மனிதருக்குச் சொக்குப் பாடம், பாம்புப் பாடம் போட்டு மருந்து கொடுக்கவும், குழந்தைகளுக்குப் பீடிக்கும் ஏங்கல், முடி, காத்துக் கருப்பு நோய்களுக்குத் தண்ணீர், திருநீறு மந்திரித்துக் கொடுக்கவும் ஆன வேலைகளைச் செய்து வந்தார். இந்தக் காலத்திலும், எவ்வளவு நாகரிகமும், படித்த இளைஞர்களுமாக இருந்தபோதிலும், கிழவரின் சொல்லுக்குத்தான் மதிப்புண்டு. நம்பிக்கைகளுக்குத்தான் பெருமையுண்டு. அவர் அந்த ஊரில் இருப்பது சகல செல்வங்களும் தங்கள் ஊருக்குக் கிடைத்திருக்கிறது என்கிற பெருமை அந்த ஊர்க்காரர்களுக்கு. எந்த நேரத்திலும் அந்தக் கிழவரைச் சுற்றி கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். பொழுது போகவில்லை என்றால் அவர் சொல்லும் முடிவற்ற கதையைக் கேட்டுக் கொண்டிருந்தால் போதும்.

அவருக்குக் குழந்தைகுட்டி எதுவும் கிடையாது. மனைவியையும் இழந்துவிட்டார். அதிலிருந்து ஒண்டிக்கட்டையாய் கொஞ்சமிருந்த நிலத்தை விற்று வட்டிக்குக் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார். பொழுது போவதற்காக ஊரார் கொடுக்கும் புளிச்ச நாரைக் கொண்டு மாடுகளுக்கு மூக்கணாங்கயிறும், தலைக்கயிறும் திரித்துக் கொடுப்பார். ஆனால் இவற்றிற்காக எந்தக் கூலியும் பெற்றுக்கொள்ள மாட்டார்.

எருதைப் பார்க்க ஒவ்வொருவராக வந்தவர்கள் சிறு கூட்டமாகக் கூடிவிட்டார்கள். "எருது இவ்வளவு வவுரு உப்புற

வரையிலுமா பார்க்காம இருந்தீங்க" என்று, தான் எருதைப் பார்க்க வந்திருப்பதை உடைமையாளருக்குத் தெரிவித்துக் கொள்பவர்போலக் கேட்டார் ஒருவர்.

"இதென்ன பெரிசு. நா முசுவாப் பண்ணையம் அடிச்சபோது தைபட்டச் சோளம் களைவெட்டினவாக்கிலே தண்ணியில் லாமெ காஞ்சு போச்சு. இது என்ன செஞ்சிடப் போவுதுண்ணு எருதெ உட்டு மேச்சுப்புட்டே. ரண்டுக்குமே சொக்குத் தாக்கிக் கீழே படுத்துட்டுது. கண்ணு கூடச் சிமிட்டலே. எல்லாரும் இன்னமே இது தப்பாதுன்னுட்டாங்க நானேதா பாடம் போட்டு மருந்து ஊத்தினெ. ஒரு நாளியிலே வாலை ஆட்டிக் கிட்டு எழுந்துட்டுது பாரெ" என்று வழக்கம்போலக் கட்கத்து அழுக்கைத் தேய்த்து உருட்டி முகர்ந்து பார்த்தவராகப் பேச ஆரம்பித்தார் கிழவர்.

இனி கூட்டம் அவ்வளவு சடுதியில் கலையாது. கிழவர் கதை சொல்லுகிறார் என்றால் கேட்பவர்கள் சுலபத்தில் எழுந்து சென்றுவிட மாட்டார்கள். எருது கஷ்டப்பட்டுக் கொண் டிருக்கும் இந்த நேரத்தில் எருதிற்குப் பக்கத்தில் இவ்வளவு கூட்டம் இருப்பது மாரப்பனுக்கு ஆறுதலாக இருந்து. அதுவும், மருந்து கொடுப்பவர் அருகில் இருக்கிறார் என்றால் ஆறுதலுக்குக் குறைச்சல் இருக்க முடியுமா!

"எதுக்கும் கைராசிங்கறது ஒண்ணு வேணும். எத்தனதா பண்டுதமும், பாடமும் படிச்சிருந்தாலும் அது இல்லின்னா பிரயோசனமில்லெ. நா சிறுபயலா இருந்தப்போ இந்த ஊருக்கு ஒரு சாமியாரு வந்திருந்தாரு. அப்பவே நா ஒரு ரூவா கொடுத்து இந்தச் சுளுவையெல்லாம் படிச்சுக்கிட்டே. செத்துப்போன சோறுமாத்தி, பொசுங்கெ எல்லாருந்தா அந்தச் சாமியாரு கிட்டே கத்துக்கிட்டாங்க. ஆனா அவுங்களுக்கு அது பலிக்க லியே! அவுங்களே அப்பச் சொல்லுவாங்க, கோமாளிக்குக் கைராசி இருக்குதுன்னு" - அவரது குரலில் மிடுக்கும் கர்வமும் தொனித்தன.

தூரத்தில் பட்டிக்குப் போகும் நாயைக் கூப்பிடும் சிறுவர்களின் கூப்பீடும், ஆடு மாடுகளின் தாய்மை அழைப்பும் விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்தன.

"மனுசெ வக்கரிச்ச மாதிரி காலமும் வக்கரிச்சுக் கிட்டுது. இதுலியே தெரிஞ்சுக்கலாம் நல்லது கெட்டதை"என்று எதையோ, தான் எண்ணிய ஒன்றுக்குப் பதில் கூறிக்கொள்வது போல ஒருவன் கூறினான்.

கிழவர் இப்பொழுதுதான் கதையைச் சுவையுடன் ஆரம்பிப்பவர்போல விறைத்து நிமிர்ந்து அமர்ந்து சுற்றிலும் இருந்தவர்களை நோட்டம் இட்டவாறு, "அந்தக்கால வாழ்க்கை இருக்குதே அதுபோல இனியொரு செம்மத்திலும் வராது. ரூபாய்க்குப் பதினெட்டு வள்ளத்தவசம் வித்துது. கூலியோ ஆம்பிளை ஆளுக்கு முக்காப்பணம். பொம்பளைக்கு அரைப் பணம். ஒரு ஆளு ஒரு அனப்புத்தட்டையே புடுங்கிடுவானாக்கும். அன்னைக்குச் செஞ்ச வேலையிலே பத்துலெ ஒரு பங்கு வேலைகூட இன்னைக்கிந்த ஆளு செய்ய முடியாது அதுக்குத் தக்க சோறும் அன்னைக்குத் தின்னாங்க. இன்னைக்கு மாதிரி அன்னைக்கெல்லாம் நெல்லஞ்சோறுங்கறது தெனமும் பார்க்க முடியாது. ஏதாச்சும் நோம்பின்னா ஒருவேளைச் சோறு கெடைக்கும். சோளத்தெ தொவச்சு ஆட்டிச்சுட்ட பணியாரந்தா நாங் கண்டது. அதுக்கே நாங்க கோழி கூப்பட எழுந்து உக்காந்துக்குவோம். சுட்டுப் போடப் போட தீஞ்சுபோன அந்தப் பணியாரத்தை பல்லுவெளக்காமலேயே திண்ணு தீர்ப்போம். இன்னைக்குத்தா இட்லி என்ன, தோசை என்ன, வடை பாயாசமென்ன, ரட்டென்ன... என்னென்னமோ வழங்குது. சொல்லக் கூட வாயி வரமாட்டேங்குது. இதையெல்லாம் தின்னுட்டுதா இந்தக் காலத்துப் புள்ளெ பசங்க ஈ...ன்னு பல்லிளிச்சுக்கிட்டுத் தெனம் ஆஸ்பத்திரிக்கு நடக்க வேண்டியிருக்குது" என்று சொல்லிக்கொண்டு எருதைப் பார்த்தார்.

உப்பியிருந்த வயிறு லேசாகத் தணிந்து கொண்டிருந்தது. "இன்னமே எருதுக்கு ஒண்ணும் செய்யாது. செத்த நேரத்திலெ அசப்போடும்" என்றவர் என்ன சொல்லி வந்தே, என்று மூக்கின் மேல் விரலை வைத்துக் கண்ணை மூடி சற்று யோசித்து, " ஆமா! அந்தக்காலத்து மனுசெ கவடு சூது இல்லாதவெ. ஒருதடவெ ஒருத்தே கோழி கூப்பிடக் காட்டுக்குத் தட்டுப்புடுங்க பொறப் பட்டவெ பொண்டாட்டி கொட்டை முத்து இடிச்சு எண்ணெய் காய்ச்ச வச்சிருந்தது தெரியாமெ ரண்டு வள்ளக் கொட்ட முத்தை உப்புமான்னு அள்ளி அள்ளித் தின்னுட்டுப் போயி ஒரு காட்டுக் கம்மந்தட்டையெ ஒரு நாளில் புடுங்கிக் கட்டிப் போட்டு வந்துட்டானாம் இந்த காலத்திலே அப்படி ஒருத்தன் திங்கவும் முடியாது, வேலை செய்யவும் முடியாது. கவுடறியாக் காலமது. அப்படியிருக்கத்தா அந்த காலத்திலெ ஒருத்தன நம்பி எந்தப் பொருளையும், கொடுத்தோ, எழுதியோ வைச்சாங்க. தூர ஏம் போவானெ; நம்ம ஊருக் கல்லக்கடையான் ஏதோ ஒரு தவுசீரும் பேருலெ நெலத்தை எல்லாம் எங்கப்பம்பேருலே எழுதி

வச்சிருந்தான். மவெ பெனாங்கு போயிருந்தான். அப்போ கல்லக்கடையான் செத்துப்போயாச்சு. மவனும் செலவருச்ங் கழிச்சு வந்துட்டான். எங்கப்பெ அவனக் கூப்புட்டு வெவரத்தைச் சொல்லி நெலத்தை எழுதி வச்சாரு. அவரு பாத்து நெலத்தை எழுதலின்னாலும் ஒண்ணும் பண்ணறதுக்கில்லே. இன்னைக்கு அப்படி முடியுமா? உசிரிருக்கும்போதே புடுங்கித் திங்கறானுங்களே!

தம்பிக்கவண்டன்னு பக்கத்தூரிலொருத்தெ இருந்தா. அவெ இப்படித்தா நம்பி எழுதி வச்சவஞ் சொத்தையெல்லாம் ஏப்பம் போட்டுச் சம்பாதிச்சா. அவெ மவனோ அவனவிட அசகாய சூர, உங்கிட்டெ பேசும்போதே எம்மடியிலே தான் கண்ணோட்டமிருக்கும். போப்பா! நாம சம்பாதிக்கிற காசெ நமக்கில்லாமே போவுது. ஊருச் சொத்து எத்தனை நாளைக்கு நின்னுடும். எல்லா நல்ல பச்சி நடக்கிற வரையிலுந்தா. அது போயிட்டா ஒண்ணுமே இல்லெ. மனுசனெ நல்லவங் கெட்டவனாக்கறதே இந்தக் காசாசைதாம் போ!" என்று கூறிவந்தவர் திடீரென்று மாரப்பனைப் பார்த்து, "இப்ப இந்த எருதுக்கு நேந்திருக்கறது கூட ஒரு கெரகந்தா" என்று கூறிச் சற்று நிறுத்தித் தான் கூறுவதைக் கேட்கிறார்களா என்று ஆய்பவர்போலப் பார்த்துவிட்டு மீண்டும் தொடர்ந்தார்.

' முனியப்பங் கோயிலுக்கு நாளச் சந்தையிலெ சூடம் வாங்கியாந்து பொருத்தி வையி" என்று கூறி வாயில் அடக்கியிருந்த வெற்றிலைத் தம்பளத்தைத் துப்பிவிட்டு, "இந்த சாமி இருக்குதே - மத்த சாமிகளாட்ட அப்படியொண்ணும் கேள்வி முறையில்லாததல்ல. அதுந் தலையிலே பாரத்தைப் போட்டுட்டா நெனச்ச காரியம் ஒண்ணு பலிதமாகும்; இல்ல அப்பவே தெரிஞ்சிடும்; மித்தசாமிகளாட்டம் பொறுத்திருந்து செய்யாது. நம்ம தூங்கப்பழனியாண்டி மவ இருக்காளல்ல - அதா கும்மா நாயக்கம் பாளைத்திலே கொடுத்த பொண்ணு - அதுக்கு ரொம்ப நாளா ஆம்பளெப்பயெ இல்லெ. எங்கெங்கோ போகாத கோயிலில்லே. ராமேசுவரம் கூடப் போயி வந்தாச்சு. அந்தக் கொறை தீருலெ. ஒரு மொறை எங்கிட்ட இப்படின்னு அந்தப் பொண்ணோட அப்பெ சொல்லிக்கிட்டு இருந்தா. அதப்பத்தி நீயொண்ணும் ஓசிக்காதே. ஒரு திங்கக்கெழமை காத்தாலெ தண்ணியூத்திக்கிட்டு ஈரச்சீலையோட வந்து நம்ம கோயில்லெ சனி மூலையிலெ ஊனியிருக்குதல்ல அந்தப் பெரிய வேலப் புடுங்கி அந்தக் குழியிலே நாலணாவைப் போட்டு ஊனிப்புடச் சொல்லு. அப்புறம் மின்னுக்கின்னா வேண்டிக்

கிட்டது பலிதமாகுமா இல்லையான்னு பாருன்னு சொன்னே. அப்படியே அந்தப் பொண்ணு செஞ்சுது. இப்ப இங்கே வாரனல்ல கருப்பெ - அவந்தா அந்தப்பயெ" என்று சொன்னார்.

அப்பொழுது யாரோ, ஏதோ இடையில் கேட்டார்கள், கிழவர் அதைக் கேளாதவர் போல மேலே தொடர்ந்தார். தான் சொல்லும் சம்பவம் இடையில் நினைவுக்கு வராமல் தேங்கும் பொழுதுதான் ஏதாவது வேறு விஷயத்துக்குச் செல்வதுபோல் அடுத்தவர் சொல்வதைக் கேட்க ஆரம்பித்து மறந்த விஷயத்தை நினைவுபடுத்திக் கொள்ள இடைவெளி கொடுப்பார். தான் சொல்லும் விஷயம் நினைவிலிருந்து சரளமாக வந்து கொண்டிருப்பின் பிறர் இடைமறித்துப் பேச ஆரம்பித்தாலும் கவனியாதவர் போல விஷயத்தைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டு போவார்.

"அந்தச் சாமிக்கு முன்னாலே வூட்டுக்குத் தூரமானவங்க போகப்படாது. அப்படிப் போனா உதரமாச் சாஞ்சு போயிடும். நா சொல்றது உனக்குப் பொய்யாப் படும். நம்ம ஊருக்கென்று வெட்டினானல்ல ராமபோயெ அவம் பொண்டாட்டி ஒருநா வூட்டுக்குத் தூரமா இருக்கும்போது இந்தச் சாமி கோயிலுக்கு முன்னாடி வந்துட்டா. அன்னைக்கு அவளுக்கு உதரமாச் சாஞ்சு போச்சு. அதப்பத்தி அவெ அந்தக் கோயிலுப் பூசாரிக்கிட்டே சொன்னான். பூசாரி அப்பவே திண்ணீரை எடுத்துக் குடுத்து அவ நெத்தியிலே இட்டு வாயிலே போடச் சொன்னான். மறுநாளே நின்னுப்போச்சு. இப்பக் கோயிலூட்டிலே இருக்குதல்ல பித்தளத் தொலாக்கோலு - அவெ அதுக்காவ வாங்கிப் போட்டதுதா" என்றார்.

இடையிலே ஒருவன், "ஆமா, எல்லா வேண்டுதலையுமே கேக்குதா?" என்றான்

கிழவர் எரிச்சல் அடைந்தவராக, "எதத்தா அது கேக்காது? அதுக்காவ வேண்டிக்கிட்ட கெடாயை அதனோட வருசப் பூஜைக்கு முன்னாடியே வெட்டறதா இருந்தா பூசாரி கை தொட்டுக் குடுத்தாத்தா. இல்லாட்டி அது ஏதாவது ஒண்ணக் காட்டிடும். பூச்சி நாய்க்கெ அப்படித்தா ஒரு கெடா வேண்டிக் கிட்டு பூசைக்கு முன்னாடியே வெட்டிப்புட்டா. அப்புறம் மறுநாளே பார்க்கணுமே! அவனோட பட்டியாடு பூராவும் தலையே அசச்சுக்கிட்டு குலுதாக்கிக் கெடந்தது. அப்புறம் பூசாரிகிட்டே போயி வெசயத்தச் சொல்ல, அவெ சிரிச்சிட்டு திண்ணீரு மந்திரிச்சு ஆட்டு மேலே சாமிய வேண்டிப் போடச்

சொல்லிக் குடுத்தான். அப்படியே செய்ய மயங்கிக் கெடந்த ஆடுக துள்ளிச் குதிச்சு ஓடுமா!" என்றார். அப்புறம் கொஞ்சம் பொறுத்து இளைப்பாறிக்கொண்டவர் போல இருந்துவிட்டு, "என்னைக்காவது ஒரு நாளைக்கு அது வேட்டைக்குப் போவும், நா ரண்டொரு நாளு அது போறதப் பாத்திருக்கறெ" என்றார்.

உடனே அருகில் இருந்தவன் வியப்பு மேலிட்டவனாக, "எப்படி இருந்தது?" என்றான்.

"அதுக்கு ரூவானம் தெரியுமெங்கறையா? அதுதா இல்லெ. சலங்கச் சத்தமும் சேகண்டிச் சத்தமுந்தா நம்ம காதிலெ விழும்" என்றார்.

பிறகு சற்று நின்று, மீசையைத் தடவிவிட்டுச் கொண்டு, "இந்த கோயில்லெ நல்ல பாம்பு ஒண்ணு குடியிருக்குது. இப்ப இருவது வருசத்துக்கு மின்னே - அப்ப நீயெல்லாம் பொறந் திருக்க மாட்டெ - சாமி சாமான் வச்சிருக்குற பொறம்புப் பெட்டியெ எடுத்துக்கிட்டு குளிப்பாட்டிவர ஆத்துக்குப் போனாங்க. அங்கே போயி குளிப்பாட்ட சாமானை எடுக்கற போது உள்ளெ இருந்து அந்த நல்ல பாம்பு சலார்னு ஆத்திலெ எட்டிக் குதிச்சிடுச்சி. அப்புறம் மறுநாளு பூசாரி கண்ணுக்கு அந்தப் பாம்பு கோயில்லெ இருந்த பொறம்புப் பொட்டிக்கு அடியிலெ தலையை நீட்டிக்கிட்டுப் படுத்திருந்தது தெரிஞ் சிருக்குது" என்று கூறினார்.

சூரியன் அஸ்தமித்து இருள் படர்ந்து கொண்டிருந்தது. கூடியிருந்தவர்களும் ஒவ்வொருவராகக் கலைய ஆரம்பித்தனர். கிழவரும் முழங்கால் முட்டியில் கையூன்றி எழுந்து நீண்ட நேர இருக்கையால் கால் விருத்துப் போகச் சண்டிச் சண்டி நடந்து எருதண்டை சென்று பார்த்தார். உப்புசம் தணிந்து தன்மேனிக்கு இருந்தது. இரையை அசை போட்டுக் கொண்டும் இருந்தது.

"மாரப்பா! உம் மொதலு நல்ல மொதலு. எருதுக்கு இன்னமெ கவலையில்லெ" என்று நம்பிக்கையும், தைரியமும் மிக்க குரல் கொடுத்துவிட்டுக் காற்றுடன் சண்டையிடுபவர் போலக் கைகள் இரண்டையும் முன்னும் பின்னும் வேகமாக வீசி நடந்து சென்றார்.

# 4

**கோ**டைகாலச் சூரிய கிரணங்கள் நிர்மலமான வானில் பளிச்சென்று வீசியது. வெப்பத்தால் வெந்து பொடிந்த பூமி, கானல் நீரை வாரியிறைத்துக் கொண்டிருந்தது. அறுவடையான காட்டில் கட்டைப் புல்களும், சருகுகளும் விரவிக் கிடந்தன. வறட்சி மிக்கக் கீழ்காற்று உஷ்ணத்தைத் தாங்கிச் சற்று நேரம் வீசியது. வெந்து பொடிந்த ஓடை மண் பூமியின் வாசமும், காய்ந்த சருகுகளின் மணமும் மூக்கை ஸ்பரிசித்தது. மரத்தடியில் கிடந்த இலைச்சருகுகளின் சலசலப்பு வசந்த ருதுவின் அறிவிப்பை உணர்த்தியது. முஷ்டி உயர்த்திய கைகளில் சிலிர்த்து நிற்கும் உரோமத்தைப்போல மொட்டையாகி நின்ற மரங்களில் துளிர்த்து நின்ற இலைக்கொழுந்துகள் காட்சியளித்தன. அவற்றின் இடையில் புகுந்து சென்ற காற்றின் ஓசை இளங் காதலர்கள் ரகசிய இடத்தில் சந்தித்துப் பேசும் கிசுகிசுச் சத்தத்தைப் போலிருந்தது. இரண்டு மணிப் புறாக்கள் காய்ந்து போன அரிப்புல்லை எடுத்துச் சென்று கருவேல மரத்தின் கவட்டைக்குச்சி இடுக்கில் கூடு கட்டின. தென்னம் பாளை சீவ அரிவாளைப் பதப்படுத்த முருங்கைக் கட்டையில் மரம் ஏறுபவன் திருப்பித் திருப்பித் தீட்டி எடுப்பதுபோல ஒரு காக்கை தனது அலகை மரக்கிளையில் அமர்ந்து தீட்டிக் கொண் டிருந்தது.

காட்டில் பிடுங்கிக் கத்தை கட்டிய காட்டுச் சோளப்பயிரின் குச்சு ஒன்றின் நிழலில் கந்தனும் பாப்பாளும் அமர்ந்து மாடு மேய்த்துக் கொண்டிருந்தனர். பாப்பாள் அவ்வூர் அரிசனச் சேரியைச் சேர்ந்த காமாட்சியின் மகள். வட்ட முகமும், நெற்றி சுளித்துப் பேசும்போது தோற்றும் உருண்டை விழிகளும் கரிய சுருண்ட கூந்தலும், இலேசாக மழைபெய்த புழுதி நிலத்தைப் போல மதமதத்து நிற்கும் பூரிப்பான உடற்கட்டும் கொண்டவள்.

அவளை அவன் நேசித்தான். அவர்கள் அடிக்கடி ஊர்ப் புறத்தில் சந்தித்துப் பேசிக் கொள்வர். இருந்தாலும் இப்படித்

தனிமையில் அமர்ந்து பேசவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் களிக்கவும் இன்றுதான் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

ஒரு காலை மடித்தும் மறு காலை குத்துப் பாய்ச்சி அதன் மீது தாழ்வாயைப் பதித்தும் அமர்ந்திருந்தான். முதுகு வளைந்து வயிறு உட்குவிந்து இருந்தது.

சற்று உயரமான கல்லின்மீது அமர்ந்திருந்த அவனுடைய பார்வையில் மார்புக் கருப்பு பட்டது முதன்முறையாக ஒரு கன்னி கழியாத பெண்ணை இவ்வளவு நெருக்கமாக இருந்து அன்றுதான் அவன் பார்த்தான். அவன் தேகாந்திரமும் ஒரு கிளுகிளுப்பு- புல்லரிப்பு ஏற்பட்டது.

அவள் வெய்யிலில் காய்ந்து வாடிய சோளத்தட்டின் அடித் தண்டை முறித்து வாயில் வைத்துத் தன்னுணர்விழந்து மென்று கொண்டிருந்தாள். வெய்யிலின் இளஞ்சூடேறிய அதன் ரசம் ஒருவித மணத்தோடு அவள் அதரத்தை நனைத்து இதழ்க்கிடையில் சொட்டுச் சொட்டாக வடிந்து கொண்டிருந்தது. அச்சமோ, வெட்கமோ கொள்ளாமல் அவனையே உற்றுப் பார்த்தாள்.

அவன் மனதில் கொடிய எண்ணங்களும், விபரீதத் திட்டங்களும் மண்டத் தொடங்கின. பொம்மையில் பதிக்கப்பட்டிருக்கும் உணர்ச்சியற்ற இரண்டு விழிகள் போல எங்கோ நோக்கியவாறு அவன் விழிகள் நிலைகுத்தி நின்றன.

அவன் பார்வை மீண்டும் அவள் மீது பதிந்தது. அவன் இருமினான். அதில் செயற்கைத்தன்மை நிலவியது.

அவள் அவனை மீண்டும் ஏறிட்டுப் பார்த்தாள். குத்திட்டு நின்ற அவன் விழிகளில் அவள் விழிகள் ஐக்கியமாயின. அவன் உதடுகள் எதையோ சொல்லத் துடிப்பது போல நடுங்கின.

அவள் குறுநகை சிந்தியவாறு பார்வையை மீண்டும் தாழ்த்திக்கொண்டாள்.

மூர்க்கத்தனமும், வம்புக் குணமும் கொண்ட அவனை அவள் ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வையில் அவனை வெல்லும் ஒரு காந்த ஈர்ப்பும் அதேபோழ்தில் 'ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும்' என்று எச்சரிப்பது போன்ற ஒரு மிடுக்கும் பிரதிபலித்தன.

தனது செய்கையால் ஏற்பட்ட பயத்தாலும், குழப்பத்தாலும் சேர்ந்து குழம்பிப் போயிருந்த அவனுடைய முகம் சோபையிழந்திருந்தது. எண்ணெய் வற்றிப்போன திரியிலிருந்து துடிக்கும் ஒளிச்சுடர்போல அவனுடைய கண்கள் வெளிறிக் களையிழந்து துடித்தன.

"பாப்பா!" கனியாத நாகப்பழத்தைத் தின்றவனின் தொண்டை விக்குவதுபோல வார்த்தைகள் இடறின. சிவந்த கன்னங்களுடனும் இளமைதுள்ளும் கண்களுடனும் அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

"என்ன?

"வந்து ... கோவிச்சுக்கமாட்டியே?"

"ம் ..ம்..ம்"

"எம்மேலே உனக்கு ஆசைதானே?"

அவள் தலை கவிழ்ந்திருந்தது. ஒரு பதிலும் அவளிடமிருந்து வரவில்லை.

அவள் கரத்தை அவன் பற்றினான். கட்டிலில் அமர்ந்து காலைத் தொங்கப் போட்டிருக்கும் பொழுது மிருதுவான சின்னப் பூனைக்குட்டி தனது கூரிய பற்களால் மிருதுவாகக் கடிக்கும் பொழுது எப்படி உடல் முழுதும் ஒரு புளகாங்கிதமும் சிலிர்ப்பும் ஏற்படுகிறதோ, அதைப்போல அவளுடைய ஸ்பரிசம் அவனுக்கு ஏற்பட்டதும் உடல் சிலிர்த்தது - மெய் மறந்து போனான்.

அவனுடைய செயல்களில் அவளுக்குக் கவலையும் கலக்கமும் ஏற்பட்டன. அவன் பிடியிலிருந்து தன் கரங்களை விடுவித்துக் கொண்டு "என்ன நெனப்பு, ஆராவது பார்த்தா என்ன நினைப்பாங்க?" என்று கூறினாள்.

"ஏ, என்ன நெனப்பாங்க?"

'ஒரு பறச்சியோட வெள்ளாளப் புள்ளைக்கு...?

"சீச்சி..." - அவன் குறுக்கிட்டான். ஏதோ ஒரு அசிங்கத்தைத் தீண்டிவிட்டவன் போல முகத்தைச் சுளித்துக் கொண்டு "அவ ஒடம்பிலியும் ரத்தமும் சதையுந்தா இருக்குது" என்றான்.

"ஆம்பளைங்களுக்கு அனுபவிச்சுச் சலிக்கற வரையிலுந்தா அதும்பேருலே மோகமிருக்கும். அப்பறம் அதுக்கு மதுப்பிருக்காது."

"நீ என்னே அப்படி நெனைக்க வேண்டாம்."

"எப்பவுமே மேல்சாதிக்காரங்க இப்படித்தாஞ் சொல்லுவாங்க. ஏழைபாழைங்க வெளையாட்டு பொம்மைதானே"

அவள் அப்படிப் பேசுவது அவனுக்கே வியப்பாக இருந்தது. ஒரு சேரிப்பெண் இவ்வளவு விஷயங்களைக் கற்று வைத்திருக்கிறாளா? ஒருக்கால் சுற்றுச்சூழலில் நிகழ்ந்த வாழ்க்கை அனுபவங்களில் கற்று படிப்பினை பெற்றிருக்கலாம்.

"அப்படியெல்லாம் சொல்லாதே. அது பணக்காரங்களோட வெளையாட்டா இருக்கலாம்."

"அதுக்கு மேலே ஜாதின்னு ஒண்ணு இருக்குதே!"

"நா அதுக்கெல்லாம் கட்டுப்பட்டவனில்லெ."

அவளுக்கு அவன் உறுதிமொழி அளிப்பவன் போல் கூறினான்.

அவள் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. அவன் கூறிய உறுதிமொழிகளில் அவள் நம்பிக்கை கொண்டு விட்டாளே!

வெய்யிலில் மேய்ந்து தாகங்கொண்ட மாடுகள் வீடு நோக்கித் தண்ணீருக்குப் புறப்பட்டன. அவள் எழுந்து சென்றாள்.

அவள் வாயிலிருந்து எந்த உறுதிமொழியும் வெளிப்பட வில்லை.

ஏமாற்றத்தாலும், எதிர்பாராத சம்பவச் சுழற்சியாலும் ஆசைக்கும், ஏக்கத்துக்கும் ஆட்பட்டு மனம் புகைந்தபடி எழுந்து அவனும் வீடு நோக்கிச் சென்ற மாட்டைப் பின்தொடர்ந்து சென்றான்.

# 5

**கோ**டைப் பட்டச் சோளம் விதைத்துவிட்டு கோலங்கட்டி போன்ற கரிசல் மண்கட்டியை மண்வெட்டிப் பிடியின் முன்கூரில் தட்டிப் பொடி செய்துகொண்டிருந்தான் மாரப்பன். கோடை வெய்யிலின் உஷ்ணம் அவனுடைய வேப்பம் பட்டை போன்ற பழுப்பு நிறமான உடலில் தகித்துக்கொண்டிருந்தது. வியர்வை நீர் நீராவி முத்துப் போல் புழுதி படிந்த முதுகு பூராவும் அரும்பிக் கரைந்து தேன் வடிவது போல் உடலிலிருந்து தரையில் சொட்டிக் கொண்டிருந்தது. உஷ்ண மிகுந்த மண்கட்டியில் அது விழுந்ததும் ஈரமின்றிச் சுவறிப் போய் கறுத்த உடம்பில் கண்ட அம்மைத் தழும்புபோல் புள்ளியிட்டுத் தோன்றியது. எங்கிருந்தோ அப்பொழுது காற்று வீசியது. அதன் தீண்டல் அவனுக்கு உணர்வெழுச்சியோடு அழகுமிக்க இளம் பெண்ணை அணைத்து மகிழ்வது போலிருந்தது.

“ஆ! ... இந்தக் காத்துக்கு எவ்வளவு சொகமிருக்குது. எளவெட்டுப்பயல் மொத மொத ஒரு பெண்ணைச் சந்திச்சுத் தொடும்போது எப்படி உணர்வுமயமாய்ச் சொக்குவானோ அப்படியல்ல இது சொக்க வைக்குது!”

அண்டையிலிருந்த வேப்பமரத்தில் இரண்டு கிளிகள் வேப்பம் பிஞ்சைச் சுவைத்து விட்டு ஒன்றின் அலகை மற்றொன்று கவ்விய படி காதல் மொழி பேசிக்கொண்டிருந்தன.

நாளைக்காலையில் அந்த நிலம் தாகம் தீரும் வரை தண்ணீர் குடிக்கப் போகிறது. அதன் வயிற்றிலிருந்து மரகதப் பயிரிழைகள் முகம் காட்டப் போகின்றன. கோதிட்ட குமரிப் பெண்ணின் கூந்தலைப் போல தோகைபரப்பி வளர்ந்து செழிக்கப் போகிறது. முயல்கள் அதன் சாறு நிறைந்த தண்டை பொக்கைவாய்க் குழந்தை தன் விரலை மெல்லுவது போல மென்று உல்லாசமாக வாழப் போகின்றன. சிட்டுக்கள் அதன் தோகைகளில் கூடுகட்டி இனவிருத்தி செய்யப்போகின்றன. கிளிகள் பால் நிறைந்த சோளப்பூட்டையைச் சுவைத்துக் களிக்கப்போகின்றன.

பவளமணி போன்ற சோள முத்தை உழவன் வெட்டிக் களம் சேர்த்து அடிக்கப் போகிறான்.

ஒரு கணம் அவன் நெற்றி சொடுக்கிற்று. அவன் முகத்தில் நிழல் பாய்ந்து சென்றது.

"இன்னைக்கு மானம் புழுக்கமா இருக்குது. ஒரு ஔவு மழை பேஞ்சுட்டா தண்ணி எறைப்பு மிச்சமாகும். கருப்பனாரு சாமியே! நீ கண் தெறந்தா நடக்காத காரியம் ஏதாவது இருக்குதா?" என்று தோட்டத்துச் சனிமூலையில் அமர்ந்து காவல் காத்துவரும் கருப்பனார் சாமியை வேண்டிக் கொண்டான்.

பக்கத்தில் உழுது கொண்டிருந்த மகன் கந்தனைப் பார்த்து, "தம்பி! பொழுதுசாயப் போவுது. ஏரு அவுத்துட்டு மாட்டப் புடிச்சுக்கிட்டுப்போ, ராத்திரிக்கு மழை இல்லீன்னா கோழி கூப்பிடவே ஏத்தப் புடுச்சாவணும். கடலப் போருலெ மாட்டக் கொண்டுபோயி கட்டு" என்று கூறி மாடு தண்ணீர் இழுத்துச் செல்லும் வாரியில் தட்டுப்பட்ட கற்களைப் பொறுக்கி எடுத்து விட்டு குழி குண்டுகளில் மண்ணை வெட்டிப் போட்டுச் சமன் செய்தான்.

"குடியானவன்னு பொறந்துட்டா முண்ணூத்தறுபத்தஞ்சு நாளும் அவனுக்கு ஓய்வுங்கறதே இல்லெ. வேலெ செய்ய முடியாமெ படுத்துக் கிட்டாத்தானேயொழிய இல்லீன்னா ஒரு நாளைக்கு இருபத்துநாலு மணி நேரமும் வேலெ இல்லாமெ போவாது. வேலெ மொளச்சுக்கிட்டே இருக்கும். தண்ணி எறைப்புன்னா தண்ணி எறைப்பு. வயல் ஒழவுன்னா வயல் ஒழவுன்னு ஒரு வேலையா இருந்துட்டா மனிசனுக்கு அலுப்பும் கவலையும் இருக்காது. ஒரு நாளைக்கு நூறு வேலையும் செய்யறதுன்னா மனசு நிம்மதி எப்படியிருக்கும்?" என்று தனக்குள் கூறிக்கொண்டு நிமிர்ந்து மேற்குத் திசையை நோக்கியவன் தன் வீட்டுக்குப் புறப்பட்டான்.

அந்திப்பொழுது சிவப்பும், பழுப்பும் மஞ்சளுமாக நிறம்மாறி வண்ணஜாலம் காட்டியது. பறவைகள் தங்கள் கூடுகளுக்குப் பறந்து சென்றன. பட்டிக்குச் செல்லும் ஆடுகள் குட்டிகளைக் கூட்டிக்கொண்டு கத்திச் சென்றன. பட்டிக்காவலுக்காக வேண்டிய நாய்க்குச் சோற்றைக் கலயத்தில் சுமந்தபடி ஆடு மேய்ப்பவன் சென்று கொண்டிருந்தான்.

பின் நிலவு நேரம். எங்கும் இருள் சூழ்ந்தது. வானத்தில் சோளப்பொரியை இறைத்தாற் போன்று நட்சத்திரங்கள்

மினுக்கிட்டன. குடிசைகளிலிருந்து அடுப்புப்புகை மேலே எழுந்து பரவியது. வீதிகளில் குவிந்து கிடக்கும் அழுக்குகளிலிருந்து வெப்பமான காற்றில் துர்நாற்றம் எழுந்து வியாபித்தது. அவன் தன் குடிசைக்கு வந்து களைப்போடு கட்டிலில் அமர்ந்து உடலிலுள்ள தூசியைத் தட்டிக்கொண்டு மூஞ்சியைத் துடைத்தான். வேட்டியிலுள்ள சிக்கு நாற்றமும் ஈரமும் சேர்ந்து ஒருவித வாடையை எழுப்பியது. சாணியால் மெழுகி மெழுகிப் பத்துப் பிடித்துப்போன வீட்டுத்தரை ஈரம்பாய்ந்து சாணி வாடை எழுப்பியது. இருட்டில் அடுக்களைச் சந்தில் மூஞ்சூறின் கீச்சிடும் ஒலி காதைத் துளைத்தது.

வீட்டுக்கு வந்த மாரப்பன் மனைவியைக் கூப்பிட்டு "ஏல்லெ, பழனியம்மா எங்கே? தண்ணி ஒரு செம்பு காய வைக்கச் சொல்லு... ஊத்திக்கணும்" என்றான்.

செக்கில் பிரண்டைக் கடுப்பான் ஆட்டிக் கொண்டிருந்த மாரக்காள், "பழனிம்மா தாழிக்குத் தண்ணிமோந்தாரப் போயிருக்குது. தாழியிலே ஒரு சொட்டுத் தண்ணியில்லே"என்றாள்.

"முத்தம்மா?..."

"அது இப்ப வூடே அன்டறதில்லெ. காத்தாலே சோறு குடிச்சிட்டு எல்லாரும் தோட்டத்துக்குப் போவும்போது போனதுதா. இன்னும் வரலெ." என்று சொல்லி விட்டு ஆட்டுக்குழவியை விட்டு எழுந்து திண்ணையில் வைத்திருந்த ஒரு பாளையை எடுத்து வந்து கணவனிடம் காட்டி "இந்தா பாரு அவ சேத்தியிருக்கிற கொட்டமுத்து. காட்டிலெ வெடிச்சு வுழுந்து கெடக்கற கொட்டையப் பொறுக்கியாந்து இப்படிச் சேத்து வச்சு வித்துக்கெடைக்கற காசுக்கு ஒரு கோழி வாங்கியுடுதாம்" என்று கூறினாள்.

"...ஓ! இப்பவே சிறுவாடு சம்பாதிக்க ஆரம்பிச்சிடுச்சா?" என்று உரக்கச் சிரித்தபடி, "அடே அப்பா! ரொம்ப வெவரக் காரப் புள்ளைதா. சம்பாதிக்கட்டும் சம்பாதிக்கட்டும். அச்சிறுவாட்டிலியே தோடொண்ணு அதுக்குப் பண்ணிப் போட்டரலாம்" என்று பெருமையுடன் கூறினான்.

"அதுக்கிருக்கிற கருமானம் எல்லாருக்கும் இருந்திட்டா பொளப்பு எவ்வளவோ மின்னேத்தத்துக்கு வந்திடுமே. இந்த வருஷத்திலே அது மந்தவெளியிலெ, தடத்து வெளியிலே பொறுக்கியாந்து கொட்டிவச்ச சாணி ஏழெட்டு வண்டியாவாதா?" என்றாள்.

மண் புழுதியடைய அவன் கட்கத்தில் வியர்வை படிந்ததும் பிய்ப்பெடுத்தது. இடது கையை உயர்த்தி வலது கையால் சொறிந்து கொடுத்தான். உஷ்ணமிக்க உடம்பிலிருந்து எழுந்த ஆவி ஒருவித புளிப்புக் காடியைப்போல் நெடியை உமிழ்ந்தது.

முத்தம்மாவின் செயலைப் பாராட்ட வேண்டுமென்று அவன் மனம் விழைந்தாலும் வெளிப் பாவனைக்கு, "அது திங்கிற சோத்துக்கு இந்த வேலெ கூடச் செய்யலின்னா என்ன இருக்கிறது?" என்று புருவங்களை உயர்த்திக் கொண்டு புன்னகைத்தவாறு கூறினான்.

மாரக்காளுக்கு இந்த வார்த்தை தன்வயிற்றில் கிடந்து பிறந்த குழந்தையின் அறிவுத் திறனைப் பங்கப்படுத்துவதாகப் பட்டது. "அதோட பொறந்ததுக்கெல்லாம் இன்னும் செரியா சித்தாடெ கூடக் கட்டத் தெரியாமெ இருக்குது. அதுக்குக் கடவுளு எப்படி ஆயுசு குடுத்து வச்சிருக்கறானோ?" என்று புருவத்தைச் சுளித்துக் கொண்டு அவன் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

மாரப்பனுக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. "இது வெளையங்கொளத்தா விந்துலெ பொறந்ததாக்கும். என்னைக்கும் அது சோடை போனதில்லெ" என்றான்.

அவன் தன் வம்சத்தின் சிறப்பைப் புகழ்ந்து கொள்வது அவளுக்குப் பிடிக்கவில்லை. என்ன இருந்தாலும் அவரவர் வமிசத்துச் சிறப்பை விட்டுக் கொடுக்க மனம் இடங் கொடுக்குமா?

"வெதை வெளையங்கொளத்தானுதா இருந்தாலும் நெலம் காடை கொளத்தானுதாக்கும். நெலம் செம்மையில்லின்னா வெதை என்ன தெடமாத்தா இருந்தாலும் ஒண்ணுக்கும் ஆவாது" என்றாள்.

இந்தப் பதில் அவன் ஆண்மைக்கு விட்ட சவாலாய் அமைந்தது. புளியம்பிஞ்சைக் கடித்துவிட்டவன் மாதிரி கண்ணை மூடிக்கொண்டு சற்று அமைதியாக இருந்தான். தோக்குருவிகள் கூரை இடுக்கிலிருந்து வெளியில் பறப்பதும், கூரைச்சந்தில் அண்டுவதுமாகக் கிறீச்சிட்டன. வௌவால்கள் வடதிசையிலிருந்து தெற்குத் திசை நோக்கி வாழைத் தோப்புக்குப் பறந்து சென்றன. கூட்டில் அணைய வந்த கோழிகள் ஒன்றையொன்று கொத்திக்கொண்டு உள்ளே போவதும் வெளியே வருவதுமாக இருந்தன. சில்வண்டுகள் காது செவிடுபடும்படி நச்சரித்தன. இடையில் விட்டுச் சென்ற காதலனை நினைந்து ஒருக்கால் அவை மனம் விட்டுப் புலம்புகின்றனவோ?

"நெலம் பிறப்பிலே தெடமா அமெஞ்சிடறதில்லெ. அதோட ஒறவு சேரும் தண்ணியே பொருத்துத்தா அது இருக்குது. ஒவுர் தண்ணி பாயற நெலத்திலே ஒண்ணுமே மொளைக்காது தெரியுமா சங்கதி?" என்றான். அவன் குரலில் வெற்றியின் மிடுக்குத் தொனித்தது.

அப்பொழுது முத்தம்மாளும் பழனியம்மாளும் வீட்டுக்குள் நுழைந்தனர். அவர்கள் தங்கள் பேச்சை அதற்கு மேல் தொடரா மல் நிறுத்தி விட்டனர். 'குழந்தைகள் மத்தியில் பேசிக் கொள்கிற பேச்சா அது?' அவள் இதை நினைத்ததும் தனக்குள்ளாக 'நேத்துக் கண்ணாலம் முடிச்சுக்கிட்டவங்க மாதிரியல்ல' பேசிக் கிட்டு இருந்திட்டோம். பேத்தி பேரன் எடுக்கிற வயசிலே போயி பேச்சைப் பாரு" என்று தனக்குள் கூறிக்கொண்டாள்.

வாழ்க்கையின் தாக உணர்வுகள் என்பது இளம் பருவத்தின ருக்கு மட்டும்தானா என்ன? அதன் செய்கைகள் - நடைமுறை கள், வேகங்கள் வேண்டுமானால் மானிடப் பருவத்திற்கேற்ப மாறுபடலாம். அதன் தாகம் நிலையானதுதானே?

"முத்தம்மா! அது என்ன? கொண்டா பாக்கலாம்" என்று அவள் தன் சிற்றாடையின் முன் தளவில் மூட்டை கட்டிக் கொண்டுவந்த பொருளைப் பார்த்துக் கொண்டு கேட்டான் மாரப்பன்.

தான் ஈடுபட்டிருக்கும் வேலையில் ஏற்படும் மகிழ்வோடு கூடிய மனநிறைவில் லயித்தபடி துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடிவந்து அவன் பக்கம் நின்றாள். அவள் மீது கொட்டைத் தழையின் மணமும், செம்மண் புழுதியின் வாசமும் கமழ்ந்தது.

"இந்தா பாரண்ணா கொட்டமுத்து. இன்னைக்குப் பூச்சக் காட்டிலே, நெறையாக் கொட்டை வெடிச்சு நெலத்திலே கெடந்தது. காத்தால வேளையிலே அதிகமாக் கெடைக்கலே. பொழுது அடிச்சாயத்தா நெறையா வெடிச்சுக் கீழே வுழுந்தது" என்று தான் கொண்டுவந்த கொட்டைமுத்தைத் தன் தகப்பனிடம் காட்டினாள்.

அவன், அவள் கொட்டை சேர்த்து வைக்கும் நோக்கத்தை அறியாதவன் போல, "காடழியறதுக்குள்ளே ஒரு கானத்துக்குச் சேத்திடுவையா? உம் பேரைச் சொல்லிக்கிட்டாவது இந்த வருஷம் எண்ணெய் ஆட்டிக்கலாம்" என்றான்.

அவள் முகம் பொத்தனச் சுண்டிவிட்டது. தான் எண்ணியிருக் கும் திட்டம் உடைந்துவிடுமோ என்று அஞ்சினாள். குழந்தை

*தானே! அவள் பேச்சுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்று என்ன இருக்கிறது?*

*"அண்ணா! நா சேத்தின கொட்டையெ வித்த காசெ நானே வெச்சுக்குவெ. குடுக்கமாட்டே" என்று கொஞ்சலாகவும் அதேநேரத்தில் தந்தையின் வாயிலிருந்து எந்தவிதமான பதில் வருகிறதோ என்று பயத்தோடும் அவனை உற்றுப் பார்த்தாள்.*

*"நீ காசெ என்னம்மா பண்ணப்போறே? எங்கிட்டேக் கொடுத் தாலாவது உனக்குச் சித்தாடை வாங்கித் தருவெ" என்றான்.*

*"இல்லிண்ணா' அந்தப் பணத்துக்க ஒரு கோழி வாங்கியுடப் போறே... அப்புறம் அது குஞ்சு பொறிச்சுப் பெரிசாயி விக்கிற காசைச் சேத்து ஒரு வெள்ளாடு வாங்கியுடப்போறே" என்று அவள் சொல்லி முடிப்பதற்குள் அவன் இடைமறித்துச் சிரித்துக்கொண்டு,*

*"அப்புறம் பசுமாடு வாங்கியுடப்போறே. அப்புறம் அது கன்னுப்போட்டதும் வித்து நெலம் புடிக்கப்போறெ" என்று கூறி விழுந்து விழுந்து சிரித்தான்.*

*அவள் அவன் வாயைப் பொத்தியபடி "ஊ... ஹு௱ம்" என்று சிணுங்கிக்கொண்டு "போண்ணா!" என்று கூறி விட்டு வீட்டிற் குள் ஓடிவிட்டாள்.*

*விளக்கெண்ணெய் ஊற்றித் தீபமிட்ட மண்விளக்கு சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதன் ஒளியைச் சுற்றி இருளெல்லாம் ஒன்று சேர்ந்து அழுத்துவதைக் கண்டு பயப்படு வதுபோல அதன் சுடர் நடுங்கிக்கொண்டிருந்தது. அதன் சுடரி லிருந்து எழுந்த புகை ஒருவகை மணத்தை வீடு முழுதும் பரப்பியது.*

*சூடுபடுத்திய தண்ணீரை வெளியில் எடுத்து வைத்து மாரப்பன், வாசலின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்கு நடந்து கொண்டே ஊற்றிக் கொண்டான். வெய்யிலால் சூடு நிறைந்த வாசல் குளிர்ச்சியடையவும், காலையில் சாணத்தால் தெளித்த மண்தரையிலிருந்து எழும் புழுதி, காற்றில் எழாமல் இருக்கவும் அப்படிச் செய்தான். விவசாயிகளின் காரியத்துடன் இயைந்த பழக்கமது. மண்வாசல் புழுதியைத் தணிப்பதும் குளித்து முடிவதும் ஒரே வேலையாக முடிந்து விடுகின்றனல்லவா?*

*குளித்து முடித்ததும் வேட்டியை உதறி இடுப்பில் கட்டிக் கொண்டு கோவணத்தை அலம்பிப் பிழிந்து உதறி முகத்தையும் தலையையும் துடைத்துக்கொண்டான். காவி நிறத்தில் அழுக்கேறி*

யிருந்த அந்தக் கோவணத்திலிருந்து மண்ணின் மணமும் அழுக்கும் வியர்வையும் நிறைந்த மனித உடம்பின் நெடியும் வீசின.

பிள்ளைகள் எல்லாம் சாப்பிட்டு முடித்துவிட்டுப் படுக்கைக்குப் போய்விட்டனர். மாரப்பனுக்கும் கும்பாவை எடுத்து வைத்து இரண்டு ஆப்பை சோளக் களியை எடுத்துப் போட்டு பிரண்டைக் கடுப்பானைக் கையால் வழித்துப் போட்டாள். கடுப்பானில் தொட்டுக்கொண்டு வெடுக் வெடுக் கென்று நாலு வாய் விழுங்கியவுடன் "புளியும் காரமும் என்ன உச்சி மயிரெல்லாம் சில்லுன்னு புடிக்கறாப்பலெ வெச்சிருக்கலே?" என்றான்.

"அப்படி இல்லின்னா பெரண்டைக் கடுப்பான் வாயெ மக்கிம்" என்றான்.

பிரண்டையின்மேல் தோலை எல்லாம் உறித்து எண்ணெயில் போட்டு வதக்கி, வெங்காயம், கொத்தமல்லியெல்லாம் எதேஸ்டமாகக் கலந்து ஆட்டித் துவையல் செய்தால் வாய் மய்க்காது. அப்படி அவர்கள் செய்து உண்பதற்குத் தெரியாததல்ல. வசதிக் குறைவே காரணம். இது அவனுக்குத் தெரியும். அதனால்தான் மௌனமாகக் காமாலை நோய்க்கு நாட்டு வைத்தியன் கோலாங்கட்டி மண்ணைப் பொடி செய்து தண்ணீர் விட்டுப் பிசைந்து உருண்டை உருட்டி தின்னத் தருகிறபொழுது ருசியறியாது விழுங்குபவனைப் போல அவனும் விழுங்கினான்.

மனிதர்கள் மீது வாழ்க்கை வகிக்கும் மகோன்னதமான செல்வாக்குதான் என்னே! ஒரே உணர்வும், சபலங்களும் கொண்ட மனித வர்க்கத்தின் ஒரு பகுதி சகல சுவைகளையும், போகங்களையும் தாங்களே சுவைத்து அனுபவிப்பதும் மற்றொரு பகுதி பசி உபாதையையும், உடல் உபாதையையும் யாந்திரிகமான முறையில் தீர்த்துக்கொள்வதும் என்ன விசித்திரம்! இப்படியிருந்தும் எந்தச் சுகபோகத்தையும் அனுபவியாமலேயே அந்த வாழ்க்கை மீது மோகமும் பற்றுதலும் கொண்டு மீண்டும் மீண்டும் தணியாத வேட்கையுடன் சகல சம்பத்துகளையும் படைப்பதில் ஈடுபடுகிறார்கள் என்றால் - அந்த வாழ்க்கை, மனிதர்கள் மீது செலுத்தும் ஆதிக்கம் தான் என்ன?

மாரப்பன் சொன்னான்: "இத்தனை கஷ்டப்பட்டும் ராத்திரி வேளையிலே அரிசிப் பருக்கை தின்ன முடியலே. இன்னும் கஷ்டப்படோனும்னா ஒரு நாலுமணி நேரம் தூங்கற தூக்கத்தை நிறுத்திட்டாத்தா. அப்படியாலும் சவுகரியம் கெடைக்கும்னா தூக்கத்தக்கூட துறந்துடலாம்." - அவன் குரலில் நொந்து போன

இதயத்தின் வேதனைச் சாயலும் - அதே பொழுதில் எப்படிப் பட்ட நிர்ப்பந்தங்களையும் வாழ்க்கை நம் மீது சுமத்தினாலும் கலங்காமல் ஏற்கமுடியும் எனும் நம்பிக்கை உறுதியும் தொனித்தன.

"ஆண்டவன் எழுதின எழுத்தெ மாத்தி எழுதிட முடியுமா? அப்படிச் செஞ்சிடறாப்பலெ இருந்தாத்தா ஒலகம் ஒரு நெலையிலே இருக்காதே!" என்றான்.

"எல்லா அவனவன் செஞ்ச பாவ புண்ணியம்" என்று அதற்கு முத்தாய்ப்பு வைப்பவனாய்ப் பிண்ணாக்கும் கொட்டையும் ஆட்டி மாட்டுக்கு வைப்பது போலப் பிசைந்த குழம்புச் சோற்றைச் சாப்பிட்டு முடித்துக் கையை நக்கினான். மேலும் இரண்டாப்பைக் களியை எடுத்துப் போட்டு புளித்த நீரை ஊற்றினாள். பிறகு அவளும் வட்டச் சட்டியில் களியைப் போட்டுக்கொண்டு வலதுகையால் பிசைந்து பிசைந்து இடது உள்ளங்கையில் வைத்து நக்கிச் சாப்பிட்டாள். மண் பாத்திரத் தில் சாப்பிடும்போது பாத்திரத்துடன் புழங்குகின்ற கை எச்சில் படக்கூடாதாம். அப்படியொரு சம்பிரதாயம். எல்லோரையும் போல அந்த மண்ணில் ஊறி வளர்ந்த அவள் அதற்கு விதிவிலக் காக இருக்க முடியுமா, என்ன?

அவன் மேலும் சொன்னான்: "இந்தப் பொளைப்பே சாகற வரையிலும் நீடிச்சாலெ பெரிய புண்ணியம். நாலு வருசத்துக்கு மின்னாலே கெணறு குட்டையெல்லாம் வத்திப் போனாப்பலெ இன்னமேலும் போனா கூலிக்கோ பண்ணை வேலைக்கோ போக வேண்டியதுதா."

அவன் சொல்வதும் உண்மைதான். நாலு வருசத்துக்கு முன்னாலே ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தினால் மாடு கன்றை யெல்லாம் விற்று சாப்பிட்டுமே பற்றாமல் ஆயிரம் ரூபாய் வேறு கடனும் வாங்கிச் சாப்பிட்டாய்விட்டது. இனி மேலும் கடன் வாங்கினால் சொத்துத் தாங்காது என்று உணர்ந்து கூலி ஜீவனம் செய்து உயிர் பிழைத்தாலாவது நிலமும் மிஞ்சும் - செழித்தவுடன் மீண்டும் விவசாயத்தைத் துவங்கலாம் என்று நினைக்கும்பொழுதுதான் மழை பெய்ய ஆரம்பித்தது. அதற்குப் பின்னர் பூமியும் செழிப்புத் தட்டிவிட்டது. இருந்தாலும் அவ னால் ஆயிரம் ரூபாய் கடனுக்கு வட்டி கட்டிக்கொண்டு, உழவுக் கும், இறைப்புக்கும் இரண்டு எருதுகளும், கறவைக்கு ஓர் எருமை யும் வாங்கத்தான் முடிந்தது. கடனைத் தீர்க்க முடியவில்லை.

இந்த நிலையில் வயது வந்த மகனும், மகளும் திருமணத்தை எதிர்நோக்கி இருந்தார்கள். இருவருக்கும் என்ன குறைச்சலாக்ச் செய்தாலும் இரண்டாயிரம் ரூபாய் தேவைப்படும். பையனுக் காவது சற்றுப் பொறுத்துச் செய்து கொள்ளலாம். பெண் ணுக்கு அப்படி முடியுமா? இப்பொழுதே சிலர், "ஏன் பெண்ணே இன்னும் கண்ணாலம் பண்ணாமே வச்சிருக்கறீங்க? பெரிய மனுசியாகி மூணு வருசமிருக்குமா?... பொகையிலெ விரிச்சாப் போதும்... பொண்ணு சிரிச்சாப் போதும்" என்கிறார்கள்.

அவர்களுக்கும் அந்தக் கவலை இல்லாமலில்லை. எந்த நேரமும் எந்த வெள்ளாமை வைக்கும்பொழுதும் அதைக் குறிக்கோளாக வைத்தே வேலை செய்து வந்தார்கள். ஆனால் மனிதர்கள் நினைத்தது போலவா காரியம் முடிந்து விடுகிறது?

பெண் கேட்க வருகிறவர்கள் எல்லாம் எத்தனை பவுன் நகை போட முடியும் என்று கேட்கிறார்களே ஒழிய, "உங்க பெண் எங்க வீட்டுக்கு வந்தால் விடிவதற்குள் வீட்டு வேலைகளை முடித்துவிட்டுத் தோட்டத்து வேலைக்குப் போய் விட முடியுமா? பொழுது சாய்வதற்குள் எத்தனை வயல் தட்டுக் கொத்த முடியும்? அல்லது எத்தனை வயல் பாத்தி வரப்புப் போட முடியும்? அல்லது களையெடுக்க முடியும்? - என்று கேட்கிறார்களா? அதெல்லாம் அந்தக்காலம்".

கும்பாவில் கரைத்த சோற்றை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தான். அந்தச் சத்தத்தைக் கேட்டுக்கொண்டே லயித்துக் குடிப்பதில் அவனுக்கொரு மகிழ்ச்சி.

அவள் சொன்னாள்: நம்ம முத்தம்மா கெரகந்தா நம்மை இப்படி பண்ணாத சீரழிவெல்லாம் பண்ண வெச்சிருச்சு. இவ்வளவு நாளா சனி தெசை நடந்து வந்ததாம். போன மாசத் திலே இருந்து குருஉச்சாதி பச்சம் பெத்திருக்கானாம். இது இன்னும் ஆறு வருசத்துக்கு நடக்கப் போவுதாம். நேத்து காணிக் கைக்கு வந்த குருக்கள் அய்யரு அது சாதகக் குறிப்பப் பாத் துட்டுச் சொன்னாரு" என்றபடி இடது கையிலிருந்து புறங்கை யில் வழிந்த சோற்றை நக்கினாள்.

"அப்புறம்?" என்று தாழ்ந்த குரலில் தான் மட்டுமே அந்த விசயத்தைத் தெரிந்துகொள்ள உரிமையுள்ளவன் போன்று கேட்டான்.

"ஆமா, ஒரு வெசயத்தச் சொல்ல மறந்திட்டனே. முத்தம்மா ளுக்குப் புடிச்சிருந்த ஏழரை நாட்டு சனியன் தோசத்தெக் கழிக்கறதுக்காவ பதினஞ்சு நாளைக்குப் பிள்ளையாருக்குத்

தண்ணியூத்திப் பூப்போட்டு வெளக்கு வைக்கணுமாம். பதனஞ் சாவது நாளு ஒரு அய்யருக்க வேட்டியெடுத்துக் குடுத்து ஏதாவது காணிக்கை செலுத்திப் பிள்ளையாருக்கு அவிசியம் செய்துடணுமாம்" என்று ஏதோ தங்களுக்கு வந்து நேர்ந்து விட்ட கஷ்டகாலம் இத்துடன் தீர்ந்து நல்ல காலம் வரப் போவது போலவும் அதற்கு எது செய்யச் சொன்னாலும் செய்ய லாம் என்பதுபோல தொனிக்கும் முறையில் அவள் கூறி முடித்தாள்.

"அப்படிப்பட்ட அய்யரை எங்கே போயித் தேடியாறது?" என்றான்.

"அதுக்கென்ன. நம்ம குருக்கள் அய்யரையே கூட்டியாந் துட்டாப் போவுது" என்றாள்.

"சரி. அதுக்கென்ன அப்படியே செஞ்சுடுவோம். நம்ம பழனியம்மாளுக்கு எப்படியும் இந்த வருஷத்திலெ கண்ணா லத்தெ முடிச்சுடணும். இந்த வருசம் கடலெ ஐந்நூறு ரூவா யிருக்கு ஆவாதா? ஒரு காசு கூலியில்லாமெ நாமே வெட்டிட் டோம். சோளம் சோத்துக்குப்போவ ஒரு நூறு ரூவாய்க்குப் போடலாம். எப்படியும் அதையும், இதையும் புடிச்சு ஒரு ஆயிரம் ரூவா சேத்து பொண்ணுத் தேவையே முடிச்சப்புடணும்" என்றான்.

உழைப்பவர்களுக்கு வாழ்க்கை என்பது எவ்வளவு பெரிய போராட்டம்! இந்த மண்ணில் மீண்டும் பல புதிய ஜீவன்களைப் பிறப்பித்து ரத்தத்தைச் சிந்தி அதன் பொலிவை மேலும் பிரகாச மடையச் செய்வதற்கும், அது மனமொப்பி அப்படிப்பட்ட வொரு வாய்ப்பை நல்கச் செய்வதற்கும், முடியவில்லையே! அப்படியொரு போராட்டத்தை நடத்தி வெற்றி காணும் போதும் அதற்குத் தோல்வியா என்ன? எல்லாப் போராட்டங் களும் ஏதோ ஒருகோணத்தில் வாழ்க்கைப் பாதையைச் சுபிட்சம் அடையச் செய்வதற்கான சத்தான உரங்களே!

காற்றில்லாமல் இறுக்கமாயிருந்த வானில் திடீரென்று கீழ்க் காற்று லேசாய் வீசியது. தண்ணீர் பட்டு ஊறிப்போயிருந்த வாசல் மண்ணிலிருந்து சாணமும் மண்ணும் கலந்த வாசனையும், இற்றுப்போன கூரைத்தட்டின் வாடையும், புண்ணாக்கும் தவிடும் கலந்த மாட்டுத் தாழியின் புளித்த தண்ணீர் நெடியும் கலந்து வீசியது! ஒற்றைக்குயில் எங்கிருந்தோ கூவியது. வசந்த ருதுவின் கோலாகலச் சிறப்பை இரவு ஜீவராசிகளுக்குக் கூறுபவர் யாருமில்லையென்று நாதமிகு குரலெடுத்துப் பாடித் தெரிவிக்கிறதோ?

"அதுந்தலையிலே கண்ணாலப் பொருத்தம் எப்படி எழுதி யிருக்குதோ அப்படித்தானே அமைஞ்சு தீரும். நாம் செஞ்சுக்கற வேலையா என்ன?" என்று கூறி வாசலுக்கு எழுந்து சென்று களி கரைத்த வட்டச்சட்டியை முகத்துக்கு நேராக வலது கையால் தூக்கிப் பிடித்து இடது கையை வாய்க்கும் சட்டிக்கும் இடை யில் இணைத்துப் பொருத்திச் சோற்றைச் சாய்த்துக் குடித்தாள்.

மாரப்பனும் கும்பாவில் கைகழுவிவிட்டு எழுந்து மாட்டுக் கொட்டகைக்குச் சென்றான். போரில் இருந்து இரண்டு கத்தைக் காட்டுச் சோளப் பயிரைப் பிடுங்கி எடுத்து இரண்டாக முறித்துக்கொண்டு ஒரு பகுதியை எருதுகளுக்கும் மறு பகுதியை எருமை மாட்டுக்கும் போட்டான். அப்பொழுது எருமை மாடு, கட்டியிருந்த முளைக்குச்சியைச் சுற்றிச் சுற்றி வந்தபடி இருந்தது. அடிக்கடி மூத்திரம் விட்டது. மனிதருக்கு வயிற்றோட்டம் ஓடுவது போல தொறுக்கூற்றியது.

இதுதான் அதுக்கு மாதம். அந்தக் குடும்பத்தின் ஒரு பகுதி நம்பிக்கைகள் அதைச் சார்ந்தே எழுப்பப்பட்டிருந்தன. அது பலன் பட்டவுடன் முதல் குழந்தைக்குத் தாயாகப் போகும் கர்ப்பவதியைப் பாதுகாப்பது போலவே பாதுகாத்து வந்தனர். அதைப் பிற எருமைகளுடன் தலைஞ்சல் போட்டோ, அன்னாங் கால் இட்டோ, அவிழ்த்து விடுவதை நிறுத்தி விட்டனர். காரணம் ஒருக்கால் பிற எருமைகளுடன் சண்டை போட நேரிடலாம். அல்லது புல்வெளிகளில் எங்காவது முளைத் திருக்கும் கோழிக்கிழங்குச் செடியை மேய்த்துவிடலாம். அப்படி மேய்ந்து விட்டால் கருக்கலைந்து உதிரமாகச் சாய்ந்து விடாதா?

மாரக்காளோ, அல்லது பழனியம்மாளோ யாராவது ஒருவர் அதைக் கையில் பிடித்துக்கொண்டு வரப்புகளில் மேய்ப்பர். கடுமையான வெய்யில் வீசினால் நிழலில் படுக்க வைத்துக் குடத்தில் தண்ணீர் கொண்டுசென்று மேலில் ஊற்றி அதற்குக் குளிர்ச்சியூட்டுவர். வரப்பில் பிடுங்கிவந்த அருகம்புல்லை மடியில் வைத்துக்கொண்டு பிடிபிடியாக எடுத்து அதன் வாயில் புகட்டுவர். அது சற்று நேரம் தீவனம் தின்னாமலோ, அசை போடாமலோ இருந்தால் குழந்தைக்கு நோய் கண்டால் பெற்றோர்கள் பதறுவது போலப் பதறுவர். உடனே கோமாளிக் கிழவரிடம் சென்று அவர் மந்திரித்துக் கொடுக்கும் திருநீற்றைக் கொண்டுவந்து அதன்மீது தூவி சற்று ஆறுதல் கொள்வர். அது அந்தக் குடும்ப உறுப்பினர்களில் ஒன்றாக, எதிர்கால நம்பிக்கை யில் ஆதர்ஸமாக விளங்கியது.

வேகமாக வீட்டுக்குச் சென்றவன் "ஏல்லெ பேசுலெ! லாந் தலைப் பொருத்திக் குடு. எரும மாட்டப் பார்க்கணும்" என்றான்.

எருமைமாடு என்றவுடன் அவளுக்குப் பகீரென்றது. அதற்கு ஏதாவது நிகழ்ந்துவிட்டதோ என்று அஞ்சினாள். குடும்பத்தில் ஏதாவது நஷ்டம் என்றாலும் அவளால் பொறுத்துக்கொள்ள முடியும். எருமை மாட்டுக்கென்றால் அவளால் பொறுத்துக் கொள்ள முடியாது.

எறவாணத்தில் கட்டியிருந்த லாந்தரை அவிழ்த்து நிறைய எண்ணெய் ஊற்றித் தீபம் ஏற்றிக் கொடுத்தாள். இதயம் அடைப் பதுபோல் வேகமாகத் துடித்தது. கால்கள் சோர்வுற்றன. மேலெல்லாம் வியர்வை அரும்பியது. லாந்தரை எடுத்துக் கொண்டு அவன் புறப்பட யத்தனித்த பொழுது தலைக்கு மேலாகக் கூரையிலிருந்து பல்லி கத்தியது. யோசித்துப் பார்த் தாள். மீண்டும் வேறொரு பக்கத்திலிருந்து கத்தியது. சகுனம் நல்ல சகுனம். ஏவல், வலம் சொல்லியிருந்தது.

"வடக்குமா இருக்ற அண்ணமாரே! வாயில்லாச் சீவெ. நீதா அதுக்குத் துணையிருக்கணும்" என்று புலம்பியவாறு, தனது குலதெய்வத்தை வேண்டிக்கொண்டாள். அவளுடைய சக்திக்கு அவ்வளவுதான் அதன் நலனுக்காகப் போராட முடியும்.

லாந்தரை எடுத்துக் கொண்டு சென்றவன், எருமை மாட்டுப் பக்கம் பிடித்துப் பார்த்தான். அதன் கண்கள் வெய்யில் பட்ட கண்ணாடித் துண்டுபோல பிரகாசித்தன. முகத்தில் வியர்வை துளிர்த்து நின்றது. ஏக்கமும், வேண்டுதலும், தவிப்பும் நிறைந்த பார்வை பிரதிபலித்தது. வால்தண்டு ஒடுங்கிக் குழிவிழுந்து தொப்பூள் பெருத்து விலா எலும்பு தெரிய வயிறு தணிந்து இறங்கி நெற்றிப் பொட்டு ஒடுங்கி இருப்பதைப் பார்க்கிறான். "நிச்சயம் வெடியறதுக்குள் கண்ணுப் போட்டுடும்" என்று தனக்குள் கூறியவனாக லாந்தரைப் பந்தல் காலில் கட்டித் தொங்கவிட்டான்.

இனி எருமை கன்று போடும் வரையிலும் தூங்க முடியாது. கட்டிலை எடுத்து வந்து எருமையண்டை போட்டு உட்கார்ந் தான். எருமை படுப்பதும் எழுவதும் முளையைச் சுற்றி செக்கு மாடு வட்டம் போடுவது போல் வட்டமிடுவதுமாக இருந்தது. இடையிடையே சிலுக் சிலுக்கென்று மூத்திரம் விடுவதும், காலைப்போதில் வாசல் தெளிக்கப் பெண்கள் கரைக்கும் சாணி போல தொறுக்கூத்துவதுமாக இருந்தது.

எருமைமாடு படும் பிரசவ வேதனையை, தான் படுவது போல் உணர்ந்த மாரக்காள் கணவரைப் பார்த்து, "மாடு ரொம்ப இட்ரப்புப்படுது. கோமாளியப்பங்கிட்டப் போயி தண்ணி மந்திரிச்சு ஓடியா வாயில்லா சீவெ நம்மகிட்ட அது எதச் சொல்ல முடியும்?" என்றாள். அவள் பேச்சில் பதைபதைப்பும், பரிவுமிக்க வேதனையும் ஊடாடின.

"சரி, பார்த்துக்கோ!" என்று சொல்லியவன் போர்வையை எடுத்து மேலே போட்டுக் கொண்டு நீண்ட தடியைக் கையில் பிடித்துக்கொண்டு கோமாளிக் கிழவனின் வீட்டுக்குச் சென் றான். ஊரில் உள்ளவர் பெரும்பாலும் கஞ்சி குடித்து விட்டு வீதி முனையில் சிறுசிறு கும்பலாக அமர்ந்து பொழுது போக்க வம்பளந்து கொண்டிருந்தனர். இராக்குருவி கிழக்கிலிருந்து மேற்காக அம்பு பாய்வது போல் பாய்ந்து சென்றது. வேளை கெட்ட வேளையில் எங்கிருந்தோ ஒரு சேவல் கூவியது. இரண்டு காராட்டுப் பூனைகள் வெறிமிகுந்த ஆக்ரோசத்துடன் ஒன்று டன் ஒன்று விழுந்து கடித்துக் கொள்ளும் கோரமும், கொஞ்சல் மிக்க முனகலும் நெஞ்சைப் பிளந்தன. போர்வையைப் போட்டுக் கொண்டு செல்லும் மாரப்பனின் தோற்றத்தைக் கண்ட நாய்கள், யாரோ புதிய நபரென்று நினைத்து "வள் வள்" என்று குரைத்து விழுந்தன. இருட்டு வீட்டிலுள்ள அடுப்பில் சாம்பல் பூத்திருக்கும் நெருப்புத் துண்டம் காற்றுப் பட்டு பூத்த சாம்பலை இடையிடையே விலக்கும்போது ஏற்படும் ஒளிபோல் வானில் சிறு சிறு மின்னல் கீற்றுகள் மேகத் துணுக்குகள் மத்தியில் வான மெங்கும் பளிச்சிட்டு மின்னின. வசந்த ருதுவிற்குக் கட்டியங் கூறுவதற்காக அந்த மின்னல் பளிச்சிடுகிறதென்று விவசாயிகள் பேசிகொள்வர். மரங்களின் மீதும் ஆலிங்கனம் செய்யும் அந்த மின்னலொளிக்குத்தான் எவ்வளவு துடிப்பு! அதன் சேர்க்கை யில் பிறப்பெடுக்கும் புதிய தளிர்களுக்குத்தான் எவ்வளவு கவர்ச்சி! அதன் குளிர்மையும், ஒளியும், தவிப்பும் கலந்து கலவை யிடப்பட்டது தானோ அதன் பட்டுப்போன்ற மென் தளிர்கள்!

கோமாளிக் கிழவர் கயிற்று நார்க் கட்டிலில் காலைக் கீழே தொங்க விட்டவாறு அமர்ந்திருந்தார். கடைக்கட்டில் கயிறு இழுத்துக் கட்டப்படாமல் நடுவில் தொட்டிபோல் குழி விழுந் திருந்தது. உட்கார்ந்திருந்துவிட்டு எழுந்திருப்பது சிரமமான போதிலும் பூனைக்குட்டி போலச் சுருட்டிப் படுத்துக் கொள் வதற்கு சௌகரியம் என்று நினைத்தவராய்க் கடைக்கட்டிலை இழுத்துக் கட்டாமலேயே இருந்துவிட்டார். அதனால் வேறு இன்னொரு சௌகரியமும் இருந்தது. அப்படித் தொட்டி

விழுந்த கட்டிலில் ஒருவர்தான் சௌகரியமாய் உட்கார முடியும். அதனால் பலர் அனாவசியமாகக் கட்டிலில் உட்ஆர்ந்து அதன் பொறுமையைச் சோதிக்காமல் இருப்பதற்கு வாய்ப்பிருந்தது. கிழவரிடம் கதை கேட்க வருபவர்கள் வாசலில் போடப்பட்டிருக்கும் சலவைக்கல்லில் சௌகரியமாய் அமர்ந்திருப்பர்.

மாரப்பன் கோமாளிக் கிழவர் வீட்டுக்குச் சென்றபொழுது அவர் அதுவரை தொடர்ந்து சொல்லிவந்த கதையை நிறுத்துபவர் போல "குஞ்சுதாக்கோழி மீனு உச்சிக்கு வந்துட்டுது. நேரம் போனதே தெரியலே" என்று வானை அண்ணாந்து பார்த்துவிட்டு "ம்..ம்..ம்.. எதோட நிறுத்தினே?" என்று கேட்டுச் சற்று யோசித்தபடி "அதுதானே கேட்டே! என்னை ஏமாத்திட்டுப் போயிடுமா என்ன?" என்றவனாக, "நாங்க பொளச்ச காலத்திலே எல்லாப் பசங்களுக்கும் அவனை விட மூத்த பொண்ணப் பாத்துத்தா கண்ணாலம் பண்ணி வைப்பாங்க. அவெ வாலிபமுறுக்கோட இருக்கற காலத்திலேயே அவனோட பசங்க வேலைக்கு வந்திடுவாங்க. அவனுக்கது ஒத்தாசையாவும் ஒதவியாவும் இருக்கும். அதனாலெ அப்பத்தவங்களுக்கு பண்ணையம் அடிக்கிறது கஷ்டமில்லாமெ இருந்தது. இந்தக் காலத்திலே கண்ணாலம் பண்ணி ஒருத்தனுக்குக் கொளந்தை பொறக்கங்காட்டி அவெ கட்டல்லெ மடிஞ்சு ஒக்கார வயசு வந்துடுது. அவனாலே பண்ணையத்தெ சரியாப் பாக்கமுடியறதில்லே. பசங்க ஒத்தாசையும் கெடைக்கிறதில்லை. அதனாலே வெவசாயத்தெ ஆளுவச்சு அம்புவச்சு அடிக்க வேண்டியிருக்குது. மிச்சமும் புடிக்க முடியறதில்லே. கடன்தா ஏறுது. அப்பவெல்லாம் ரெண்டுகுழி நெலமிருப்பவங்கிட்டெ கையிலெ காசு வெளையாடும்" என்றவராகத் தொண்டையைக் கனைத்து இருமினார். அப்பொழுது ஒரு சிறுவன் கதை கேட்டுக் கொண்டே உட்கார்ந்தபடி தூங்கியவன் கீழே தொப்பென்று விழுந்துவிட்டான். உட்கார்ந்திருந்தவர்கள் அவசரமாக எழுந்து அவனைத் தூக்கி நிறுத்தினர். நல்ல வேளை அவனுக்குக் காயம் ஏதும் ஏற்படவில்லை.

கூட்டம் கலைய ஆரம்பித்தது. மாரப்பன் கிழவனிடம் விஷயத்தைக் கூறி, மாடு சுகமாகக் கன்று ஈனுவதற்குத் தண்ணீர் மந்திரித்துத் தர வேண்டினான்.

"ஓ! இன்னைக்கென்ன நாயித்துக்கெளமைதானே? நல்ல நாளுத்தா - நாங்கூட வெள்ளிக் கெளமையோன்னு நெனச்சிட்டெ. வெள்ளிக் கெளமை எருமை கன்னு போட்டா விருத்தி

யாவாது" என்று கூறிவிட்டு வீட்டுக்குள் சென்று ஒரு குடத்தை எடுத்துக் கொடுத்து எச்சில்படாத கிணற்றுத் தண்ணீர் கொண்டுவரச் சொல்லி கைகால், முகம் எல்லாம் சுத்தம் செய்து வாய் கொப்பளித்துக் கொண்டு செம்பு நிறையத் தண்ணீர் மொண்டு வைத்துத் தழைநீக்காத வேப்பங்குச்சியைச் செம்பி லுள்ள தண்ணீரில் விட்டுக் கலக்கியபடி ஏதோ முணுமுணுத் தார். மனிதர்கள் யாருக்கும் பரிச்சயமில்லாத ஏதோ ஒரு அதீத சக்தியுடன் தான் முறையிட்டுப் புலம்புபவர் போல முதிர்ச்சியும் கனிவுமிக்க அதேபொழுதில், தான் வேண்டும் பிரதிக்ஞை ஈடேற்றித் தர வேண்டும் என்று முறையிட்டு இணங்க வைப்பவர் போல அவர் முகத்தோற்றம் பிரகாசித்தது.

"இந்தா! இதைக் கொண்டுபோயி உங்க கொல தெய்வத்தெ வேண்டியபடி ஒடம்பு மேலெ தெளிச்சிடு சரியாயிடும் " என்று, தான் மந்திரித்த செம்புத் தண்ணீரைக் கொடுத்தனுப்பினார் கிழவர்.

மாரப்பன் தண்ணீரை எடுத்துக்கொண்டு புறப்படும் பொழுது "மசக்கல்லே எந்திரிச்ச உடனே வூட்டுப் பக்கம் வாங்க" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான். ஆதங்கமிக்க வேகமும் துடிப்பும் கோலமிட்டன.

கிழவனிடம் மாரப்பன் சென்றுவந்த அந்தக் கொஞ்ச நேரமும் அவளுக்கு ஒரு யுகமாகத் தோன்றியது. ஆபத்து நிறைந்த தனித்த இடத்தில் சிக்குண்டவள் போல பதைபதைப்பும் தவிப்பும் நிறைந்தவளாகத் துடித்துக் கொண்டிருந்தாள். அவள் மனமும் சிந்தனையும் ஒரு நிலையில் இல்லை.

தண்ணீரைக் கொண்டு வந்தவன் தனது குலதெய்வத்தை வேண்டிக்கொண்டு எருமை மீது தண்ணீரைத் தெளித்தான். "வடக்குமா இருக்கற பெரியண்ணா! எருமை சொகமாகக் கெடாரி கன்னு போட்டுட்டா உனக்கு அடுத்த வருசம் பங்குனி மாசத்திலெ நடக்கற நோம்புக்கு உருச்செஞ்சு வச்சிடற. நா, கடனும் ஒடனுமா இருக்கறவெ. ஏதாலும் ஒரு கஷ்டம்னா என்னாலே தாங்க முடியாதப்பா தாங்க முடியாது" என்றான். மொசுப் புல்லில் பனித்துளி தேங்கியிருப்பதுபோல அவன் கண்ணிமை மயிர்க் கால்களில் தண்ணீர் பனித்திருந்தது.

எருமை கீழே படுத்து கால்கள் நான்கையும் விரித்து நெளித் தது. பெருமூச்சு விட்டது. முக்கி முனகியது. அபயக் குரல் இடுவது போலக் கதறியது. அதன் பிறப்புவாய் விரிந்து புடைத்தது. கோலான் ஒழுகியது. லாந்தர் வெளிச்சத்தில் அதன் கண்கள்

பளபளத்தன. கண்ணீர் திரண்டு விழியோரத்தில் வழிந்து கொண்டிருந்தது.

நடுச்சாமம் இருக்கும். ஊரே உறக்கத்தில் மூழ்கிக் கிடந்தது. எங்கும் நிசப்தம். இடையிடையே வலியினால் இருமும் மனிதர்களின் இருமல் சத்தமும் மாடுகளின் அசை போடும் அரவமும், எதையாவது கண்டுவிட்டுக் குரைக்கும் நாய்களின் குரைப்பும், தட்டுப்போரில் குடைந்து கொண்டிருக்கும் பெருச்சாளியின் உறுமலும், சில்வண்டுகளின் இரைச்சலும், வறண்ட மண்ணில் குழி தோண்டிப் படுத்திருக்கும் தவளைகளின் செவியைப் பிளக்கும் பிலாக்கணமும் கேட்டுக் கொண்டிருந்தன.

படுத்திருந்த எருமை தன் கால்களை மடக்கி ஆவேசத்தோடு எழுந்தது. உதட்டைக் கூப்பி பற்கள் தெரியும்படியாக முகத்தைச் சுளித்தது. முன்னங்கால்கள் நிலத்தைப் பிறாண்டியது. தரையைக் கவ்வி அடக்கமுடியாத வேதனையுடன் முனகியது. முளையில் கட்டியிருக்கும் கயிற்றை அறுத்துக் கொண்டு எங்காவது வேதனை தீரும்வரையில் ஓடித்தீருவது என்பதுபோல விட்டு விட்டுக் கயிற்றை இழுத்துத் திமிறியது. சிறுவர்கள் ஒற்றைக் குதிகாலை நிலத்தில் ஊன்றி, நின்ற இடத்திலேயே வட்டம் பாய்வதுபோல 'முளையில் கட்டியிருக்கும் கயிற்றில் தளர்ச்சி இருக்கும் வரையில் உடலைச் சுற்றி வீசிப் பாய்ந்தது. பின்னங்கால் இரண்டையும் சுற்றி வளைத்து உடலின் பின்பகுதியைத் தாழ்த்தி, மூச்சடக்கி முக்கி அணத்தியது. புடைத்து விரிந்த பிறப்பு வாயிலிருந்து காற்றாழை மொட்டுப் போன்ற இரண்டு முன்னங்கால்களின் வெளுத்த குளம்புகள் கொஞ்சம் வெளியில் எட்டிப்பார்த்தன. மூச்சை இழுத்து சுவாசிக்கத் தொடங்கியதும் வெளியில் எட்டிப்பார்த்த கால்கள் மீண்டும் உள்ளே சென்று விட்டன. மீண்டும் மூச்சடைத்து முக்கியது; அணத்தியது. இப்படியே நீண்டநேரம் வயிற்றிலிருப்பதை பலவந்தமாக வெளித் தள்ளுவதற்கு அசுர முயற்சி எடுத்துக்கொண்டது.

நீண்ட நேர ஜீவமரணப் போராட்டத்திற்குப் பிறகு, நீட்டிய இரண்டு முன்னங்கால்களில் தலைவைத்து உறங்குவது போல தலையும், முன்னங்கால்களும் இணைந்து கர்ப்பப்பையிலிருந்து வெளியே வந்தன. அதற்குமேல் எருமையால் மூச்சடக்கி முக்க முடியவில்லை. திரேகமெங்கும் சுடுநீர்ப் பாத்திரத்தில் வைக்கப் பட்டிருந்த தட்டின்மீது படர்ந்திருக்கும் நீர்த்திவலைகள் போல, வியர்வை முத்து அரும்பியிருந்தது. சோர்ந்து துவண்டுபோய்க் கடைசி முறையாக முக்கிப் பார்த்து விட்டுத் தரையில் படுத்துக் கொண்டது.

மாரப்பனுக்கும் மாரக்காளுக்கும் இருக்கை கொள்ளவில்லை. தவியாய்த் தவித்தனர். எருமை சுழன்று வட்டமிடும்போது அவர்களும் சுழன்று வட்டமிட்டனர். முக்கி முனகியபோது முக்கி மூச்சு விட்டனர். படுத்துவிட்ட எருமையின் முகத்தைத் தூக்கித் தடவிக் கொடுத்தனர். பின்னர், எருமையின் பின்பகுதி நிலத்தில் உராய்ந்து வெளியில் வந்திருக்கும் கன்றின் கால்களை எங்கே காயப்படுத்தி விடுகிறதோ என அவர்கள் இருவரும் ஜாக்கிரதையாக அதன் அசைவுகளை அருகில் அமர்ந்து கவனித்து வந்தனர்.

நீண்ட போராட்டத்துக்குப் பின் அது கன்றை ஈன்றது. கன்று ஈன்றவுடன் அவர்களுக்கு இருந்த கவலையும், பதைபதைப்பும் கோடை காலச் செம்புழுதி மண்ணில் விழுந்த சொட்டு நீர் போல் மறைந்தன. ஆவலும் பேருவகையும் உந்தித் தள்ள என்ன கன்று என்று பார்க்க அதைத் தூக்கிப் பார்த்தனர். கிடாரிக் கன்று!

அவர்களுக்கு ஏற்பட்ட பூரிப்பைப் பார்க்க வேண்டுமே! அடேயப்பா! பல நாள் இரையில்லாது அடையில் படுத்திருந்த அடைக்கோழி வெளியில் வந்தவுடன் தனக்குச் சிக்கிய மண் புழுவை எடுத்துக் கொண்டு பிற கோழிகளுக்குத் தெரியாமல் ஓடுமே, அப்படி அதை எடுத்துக் கூத்தாடினர்.

"எருமை கெட்டியாச் சாணி போடாமே ஆறாவது மாசத்தி லிருந்து தண்ணியாட்டந் தொறுக்கூத்தும் போதே இந்த ஈத்துக் கெடாரிக் கன்னுப்போடும்னுதான் முடுவு கட்டுனெ" என்று கர்வமும் பெருமையும் தொனிக்கக் கூறினாள் மாரக்காள்.

"இது தாயப் போலவே பெருங்கூட்டு எருமையாகும். ரண்டு மாசக் கன்னாட்ட ஊறிப் பொறந்திருக்குது. அதுனாலதா கன்னு ஈன்றதுக்கு இவ்வளவு கஷ்டமாப் போயிட்டது" என்றான் மாரப்பன்.

அவள், அவன் சொல்வதைக் காதில் வாங்கிக்கொள்ளாதவ ளாக, எதிலோ கவனத்தைச் செலுத்தியிருந்துவிட்டு "எருமை கன்னுப் போடற நாளாயிட்டுது. அதுக்கு மறவா ஒரு ஒதுக்குப் படலு கட்டிவையி கட்டிவையின்னு சொல்லிச் சலிச்சுப் போச்சு. நாம சொல்றது காதுலே வுழுந்தாதானே மனுசரு பார்வையிலே எல்லா பார்வையும் நல்ல பார்வையாவா இருந்துடுது? யாரோட கொள்ளிக்கண்ணுப் பார்வையாவது எருமை மேலே வுழுந்துட்டா மொதலு வீணாவல்ல போயிடும்" என்று பூண் தளர்ந்துபோன களைக்கொத்தில் களை வெட்டும் பொழுது

ஏற்படும் சத்தம் போல அவள் "சள் சள்" என்று எரிந்து விழுந்தாள்.

அவளுடைய பொறுப்புணர்வும் கவலையும் நிறைந்த ஆலோசனைக்கும் அவன் செவிமடுத்தான். ஐந்து ஆறு வருடங்களுக்கு முன்பு பக்கத்து வீட்டுக்காரரின் எருமை கன்று போட்ட இரண்டாவது மாதத்தில் மாரிக்காலப் பசும்புல்லை மேய்ந்து விட்டு அமோகமாகப் பால் சுரந்த கனமிக்க மடியில் மறைவில்லாத கட்டுத்தரையில் பால் கறந்து கொண்டிருக்கும் பொழுது அங்கு வந்த ஒரு பெண் "அடேயப்பா! இவ்வளவு பெரிய பாத்திரத்தில் இந்த எருமை பால் கறக்குதா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டு விட்டுப் போன மறுநாளில் இருந்து ஒரு மடி பாலும் கொஞ்சங் கூட இல்லாமல் வற்றிப்போய் விட்டதென்றும் பின்னர் தண்ணீர் மந்திரித்து ஊற்றவும், பிள்ளையாருக்கு சூடம் ஏற்றி வைக்கவும் என்னென்னவோ பிரயத்தனம் செய்தும் வற்றிய பாலைத் திரும்பச் சுரக்க வைக்கப்பட்டதென்றும் - அதுவும் முன்போல முழு அளவில் கறக்கவில்லை என்றும் அவர்கள் சொல்லக் கேட்டது அப்பொழுது அவனுக்கு நினைவு வந்தது. தான் முன்கூட்டியே அந்த வேலையைச் செய்யாதது தவறு என்று உணர்ந்தான். இருந்தாலும் தன்னுடைய அசட்டைக் குணத்தினால் ஏற்பட்ட தவறை ஏற்றுக்கொள்ள விரும்பாதவனாக, "கருக்கோலை இல்லே. அதுனாலதா வேலை சொணக்கமாப் போச்சு. இன்னைக்கே அந்த வேலையை முடிச்சுப்புடறே" என்று கூறினான்.

"ஆமா, நம்ம பொளைப்பே என்னைக்கும் இப்படித்தா. பொம்பளை சொல்லித்தா என்னைக்கும் காரியம் செய்ய வேண்டியதா இருக்குது" என்று சினமும் அதிகாரமும் தொனிக்கக் கூறிவிட்டு, "இன்னமே பாலோ, தயிரோ, நெய்யோ ஒருத்தரும் கேக்கப்படாது. வெண்ணெய்க்காரங்கிட்டே மொத்தமாப் பணம் வாங்கி ஒரு சங்கிலி பண்ணிப் பழனியம்மா கழுத்திலே போட்டுடணும். கொமரியும் கொங்கியுமாக ஒருத்தங்கிட்டே கட்டிக் குடுக்கப்போற வயசிலே அதுங் கழுத்திலே ஒரு ரண்டு பவுனுக்குக்கூட நூலாட்டச் சங்கிலி பண்ணிப் போட வக்கில்லாமே கெடக்குது" என்று ஆத்திரமும் அழுகையும் பொங்கக் கூறினாள்.

அவனுக்கு மட்டும் ஆசையில்லையா என்ன? அவனிடத்தில் மட்டும் பணம் இருந்தால்....! ஓட்டைக் குடத்தில் தண்ணீர் நிற்பதில்லையே?

இனிமேல் அதற்கு வயிறு நிறைய கம்மந்தவிடு பிசைந்து வைக்க வேண்டும். அப்பொழுதுதான் செத்தை சீக்கிரம் போடும். இளஞ்சூடாகத் தண்ணீர் காய்ச்சி மேலெல்லாம் ஊற்றிக் கழுவிக் கொம்புகளுக்கும் முதுகுப் பகுதியின் தாழ்ந்த வால் தண்டுச் சப்பைக்கும் சுண்ணாம்பு நீர் பூச வேண்டும். வசம்பு அரைத்துப் பிறப்பு வாயிலுக்குப் பூச வேண்டும்.

பச்சை உடம்பில் கிருமிகள் அண்டாமல் இருக்க வேண்டு மல்லவா?

சற்று நேரத்தில் எல்லா வேலைகளும் செய்து முடிக்கப்பட் டன. குடும்ப அங்கத்தினர்கள் எல்லோரும் இப்பொழுது அங்கு குழுமியிருந்தனர். கடைக்குட்டி முத்தம்மாளுக்குத் தான் கொட்டிவைக்க முடியாத சந்தோஷம். கன்றுக்குட்டியின் முகத்தை எடுத்து முத்தமிடவும், தடவிப் பார்க்கவும், சேர்த்து அணைக்கவும் ஆன தொந்தரவுகளைச் செய்து விட்டாள்.

சற்று நேரத்தில் எருமை செத்தை போட்டுவிட்டது. மாரப்பன் அதை எடுத்து வைக்கோற்புல்லுக்கள் வைத்து உருண்டையாகக் கட்டி மகனிடத்தில் கொடுத்து "இதக் கொண்டுபோயி நம்ம தோட்டத்துக் கரையிலே இருக்கற பால் மரத்திலே ஒசக்கக் கட்டித் தொங்கவுட்டுடு" என்று கொடுத்தனுப்பினான். "பால் சுரக்கும் மரத்தில் செத்தையைக் கட்டி வைத்தால் மாடுகளுக்கு நிறையப் பால் சுரக்கும்" என்னும் விவசாயப் பரம்பரையின் கன்னி அறாத தொடர்தானோ இது! அல்லது வேறு எதுவு மாகவும் இருக்குமோ?

இப்பொழுது கன்றுக்குட்டி தன் பின்னங்கால்கள் இரண்டை யும் ஊன்றி முன்னங்கால்களை மடித்து உந்தி எழ முயன்று உடலின் பின்குதியை உயர்த்தியது. சக்தி போதாமல் கீழே விழுந் தது. இப்படியே பலமுறை முயன்று கடைசியில் ஆட்டுப்பட்டிக் குடிசையின் மரக்கால்களைப்போல், நான்கு கால்களையும் நாலு திக்கில் பரப்பிக்கொண்டு தள்ளாடி எழுந்து நின்றது. தாய் எருமை அதன் ஆசன வாயை நக்கியது. விருப்போடு முகர்ந்தது. தன் தலைமுறையின் ஜனிப்புத் தானோஇது என்று தொடர்பு விட்ட அதன் சந்ததியின் உடல் வாடையை இனங் கண்டு கொள்ள முயல்வதுபோல முகத்தை உயர்த்தி, மேல் உதட்டை விரித்துப் பற்கள் தெரியும்படியாகக் காற்றை இழுத்து முகர்ந்தது. அங்க அமைப்புகளை வைத்து மனிதன் தன் குடும்பப் பரம் பரையை நினைவுக்குக் கொண்டுவர முயலுவது போல மிருக ஜாதிகளும் அதன் உடலின் நெடியை முகர்ந்து தெரியும்

உணர்விலிருந்து தன் சந்ததியின் தொடர்ச்சியினை அறிந்து கொள்ள முயலுகிறதோ!

"களிம்புப் பாலெ பீச்சி உட்டுடு. இல்லின்னா கன்னுக்குட்டி வயித்திலே கட்டிக்கும்" என்று, கன்றுக்குட்டி எழுந்து நடந்து நடந்து எருமையண்டை செல்வதைக் கண்ட மாரக்காள் அவ் வாறு கூறிவிட்டு, வீட்டு வேலை பார்க்கச் சென்றுவிட்டாள்.

எழுந்து நின்ற கன்றுக்குட்டி, எருமையின் ஸ்பரிசம் பட்ட வுடன் எருமையின் முகத்திலும், காலிலும் முகத்தை உராய்ந்து உராய்ந்து பால்குடிக்க விரும்பியது. முத்தம்மாள் அதைப் பிடித் துப் பால் மடிப்பக்கம் திருப்பிவிட முயன்ற பொழுது அவள் மீதும் தலையை ஆட்டி ஆட்டிப் பால் குடிக்க முனைந்தது.

அப்பொழுது அருகில் இருந்த பழனியம்மாள் குறுநகை தவழ, தனது தங்கையைப் பார்த்து, "ஏய், உனக்குப் பாலுச் சொரக்கப்போவுது தூர ஓடியாந்துடு" என்று கேலி பேசினாள்.

இதைக்கேட்டு வெட்கமும் ரோசமும் அடைந்த முத்தம்மாள் தனது அக்காளைப் பார்த்து எதுவும் உடனடியாகத் திருப்பிச் சொல்ல முடியாத நிலையில், "வவ்.... வவ்... வே" என்று வாயைக் கோணிக் கொன்னிக் காட்டிவிட்டுச் சட்டென ஏதோ யோசனையில் வர, "உனக்குத்தா இந்தச் சோடு இருக்குது" என்று தனது கைகள் இரண்டையும் விரித்துக் குவித்துக் காட்டியபடி "நெறையப் பாலு வரும் குடு" என்று முகத்தில் அறைந்தாற்போல் பதிலளித்தாள்.

தனது தங்கை இப்படியொரு ரோசத்துடன் தனக்குத் திருப்பி பதில் கொடுப்பாள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. தான் கூறியதற்கு அவள் சிணுங்கிக்கொண்டு பொய் அழுகை அழு வாள் என்றுதான் எதிர்பார்த்தாள். இப்படிப்பட்ட ஒரு எதிர்த் தாக்குதலை அவள் எதிர்பார்க்கவில்லை.

"உன்னைக் கன்னுக்குட்டி ஊட்டுனாத்தா உனக்கும் என்னைப்போல பெரிசாவும். அது இல்லின்னா உன்னையே ஒருத்தனும் கண்ணாலம் பண்ணிக்கமாட்டானே!" என்று அவளை மேலும் சீண்டினாள்.

அதற்கு ஒரு பதிலும் சொல்லத் தெரியாத அவள், "வா, வா அம்மாகிட்டே சொல்லறே" என்று கூறிவிட்டு வீட்டுக்கு ஓடிவிட்டாள்.

பழனியம்மாள் கன்றுக்குட்டியைப் பிடித்து எருமையின் பால் காம்புப் பக்கம் விட்டாள். அது குருடன் தன் பக்கத்திலிருக்கும்

பொருளைத் தடவி நிதானமாகப் பிடிப்பது போலப் பால் காம்பை முகத்தில் உரசி வாயில் கவ்விக் குஞ்சியது. உடனே முலைக்காம்பு அதன் வாயிலிருந்து நழுவி விட்டது. பிறகு தன் முகத்தால் மீண்டும் அடிவயிற்றிலிருந்து தடவிக்கொண்டு மடிப்பக்கம் சென்று மீண்டும் பால்காம்பைப் பிடித்துச் சப்பிக் குஞ்சி இழுத்தது. மீண்டும் அது வாயிலிருந்து நழுவிவிட்டது. இப்படியே அதுவும் முதல்முறையாகத் தனது தாயின் மடியிலிருந்து பிறர் ஒத்துழைப்பின்றித் தன் வயிற்றை நிரப்பிக் கொள்வதற்குத் தன்னைத்தானே தயார் செய்து கொண்டு விட்டது. இனி அதற்கு யார் உதவியும் தேவையில்லை.

கிழக்கு வானில் சூரியன் தகதகக்க எழுந்தான். அன்றைய பொழுதின் மாமூல் வாழ்க்கை தடையின்றித் தொடர்ந்தது. மாரப்பன் குடும்பமும் அன்றைய வேலையில் எல்லோரையும் போல அலுப்புச் சலுப்பின்றி ஈடுபட்டது.

# 6

அன்று பொன்னேரி வாசிகள் முயல் வேட்டைக்குக் கிளம்பு வதென முடிவு செய்தனர். வேட்டையில் வல்லவர்களான பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவர்களுடன் சேர்ந்து கொள்வ தென முடிவு. வேட்டைக்குப் புறப்படுவதற்கு முந்திய நாளே, கண்ணி விட்டிருந்த முயல் வலையைப் பின்னிப் பழுது பார்ப்ப தும், பூண் தளர்ந்துபோன தளவு வளைந்த கோணல் தடிக்குப் புதிதாகப் பூண் கட்டுவதும் ஆன வேலைகளில் ஈடுபட்டிருந் தனர். வேட்டை நாய்களுக்குக் குறைந்த அளவே ஆனத்தில் பிசைந்த சோளக்களி உருண்டைகளைப் போட்டனர்.

வேட்டை நாய்களுக்கு எப்போதுமே அதிகமாகக் கரைத்த சோறு ஊற்றமாட்டார்கள். குழம்பில் பிணைந்த களி உருண்டை களை உருட்டி வீசுவார்கள். அவைகளை அது லபக்கென்று குறி தவறாமல் கவ்விக் கொள்ளும். எப்போது உருண்டையைப் பிடிக் காமல் தவறிக் கீழே விட்டுவிடுகிறதோ அன்றிலிருந்து அதற்குக் குறி பார்த்துப் பாயும் பாய்ச்சல் திறனும் கண்பார்வையும் குறைந்துவிட்டதென முடிவுக்கு வருவார்கள்.

கோடை காலத்தில்தான் முயல் வேட்டைக்குச் செல்வார்கள். அப்பொழுது காட்டு வெள்ளாமை அழிந்து தோட்டத்து நிலங் களில் சோளப்பயிர் வளர்ந்திருக்கும். முயல்கள் வரப்பில் உள்ள அருகம்புல்லைக் கொறித்துவிட்டு சோளப்பயிர் பாத்திகளில் வெயிலுக்கு குளிர்ச்சியாகப் படுத்திருக்கும்.

சுற்றிக் கிளுவை முள்ளால் வேலி அடைக்கப்பட்டிருக்கும் தோட்டத்தில் உள்ள சோளக் காட்டில் முயல் இருக்கிறதா, இல்லையாவெனச் சுலபத்தில் வேட்டையில் வல்லுநர்கள் அறிந்துகொண்டு விடுவார்கள். முயல்கள் எப்பொழுதுமே மனிதர் நடக்கும் பாதையிலோ, ஏற்கெனவே வேலியில் சந்து விழுந்திருக்கும் கடவிலோ உள்ளே நுழையாது. அடர்த்தியாகக் கிளுவை ஊன்றியுள்ள அடைப்புப் பக்கம் தனது பற்களால் அவற்றைக் கொறித்துக் கத்தரித்து விட்டு அதன் வழியில்தான்

அது உள்ளே செல்லும். வெளியில் இருக்கும் சிலர் அந்தக் கடவில் கண்ணி வைத்து அவற்றைப் பிடித்துவிடுவர்.

குறிப்பிட்ட நேரத்தில் பக்கத்து ஊர் வேட்டைக்காரர்கள் அனைவரும் பொன்னேரிக் கிராமத்தில் வேட்டை நாய்களுடன் வந்து கூடிவிட்டனர். ஊரிலுள்ள ஊர்ப் பொறுக்கி நாய்கள் வேட்டை நாய்களைப் பார்த்துக் குரைத்துக்கொண்டு அங்கும், இங்கும் ஓடின. வேட்டை நாய்களோ அவற்றைக் கண்டு லட்சியம் செய்யாதவை போன்று வால்களை உயர்த்திக் கொண்டு அங்கும் இங்கும் ஓடி மோப்பம் பிடித்துக் கொண்டிருந்தன.

அவற்றின் நெஞ்சுப் பகுதி முன்னங்கால்கள் பக்கம் இறங்கித் தாழ்ந்து, வயிற்றுப் பாகம் பின்பக்கத்து முதுகுத்தண்டுடன் ஒட்டி உயர்ந்து, முடிச்சு நிறைந்த காரைக் குச்சியைப் போல் கால்கள் நீண்டு வளர்ந்து நீண்ட பப்பாளிப்பழம் போன்ற முகத் தோற்றத்துடன் உருவிவிட்ட புளிய மிளாறைப் போல் தோற்றம் அளித்தன.

எல்லோரும் தோளில் வலைகளையும் கட்டுச்சோற்று மூட்டைகளையும் தூக்கிப் போட்டுக் கொண்டு புறப்படுவதற்குத் தயாராகிறார்கள். மந்தைவெளியில் மோப்பம் பிடித்துச் சுற்றிக் கொண்டிருந்த வேட்டை நாய்களைச் சீழ்க்கையடித்து சைகை காட்டிவிட்டு எல்லோரும் புறப்பட்டனர்.

மாரப்பனும் அந்த வேட்டையில் கலந்துகொண்டான். வேட்டைநாய் அவனிடமில்லை. ஆனாலும் வேட்டைக்கு வேண்டிய வலை, இரும்புப் பூண் போட்ட தடி, கொக்கி முதலான உபகரணங்கள் அவனிடம் இருந்தன. வேட்டையில் பங்கு போடும்பொழுது மனிதருக்கும், நாய்க்கும், உபகரணங்களுக்கும் ஒவ்வொரு பாகமாகப் பிரித்துக்கொடுப்பது வழக்கம். அப்படிப் பார்த்தால் மாரப்பனுக்குத் தன் உபகரணங்களைச் சேர்த்து இரண்டு பங்கு கிடைக்கும்.

பக்கத்து ஊரான புதுப்பாளையத்தைச் சேர்ந்த பூசாரிப் பெரியண்ணன் என்பவன் மாரப்பன் அண்டையில் நடந்து வந்துகொண்டிருந்தான். இருவருக்கும் ஏற்கனவே நல்ல பழக்கம் உண்டு. மாமன் மச்சினன் முறை.

"என்ன மாப்பிள்ளே! இந்த வருஷம் வெள்ளாமெ, வெளச்சலெல்லாம் எப்படி?" என்று பெரியண்ணன் மாரப்பனைப் பார்த்துக் கேட்டான்.

ஏதோ சிந்தனையில் நடந்து கொண்டிருப்பவன் யார் பேசுவது என்று தெரியாமல் அண்மையில் திரும்பிப் பார்த்தான்.

பெரியண்ணனைக் கண்டதும் "ஓ.... மச்சானா? நாங் கூடக் கவனிக்கல்லே..." என்று தனக்குள் ஏற்பட்ட வியப்பை மறைத்துக் கொண்டு "ஏதோ இந்த வருசம் பரவாயில்லெ" என்றான்.

வேட்கை மிக்க கோடை வெம்மை பூமியை சூடாக்கிக் கொண்டிருந்தது. தண்ணீர் பாய்ந்த சோளக் காட்டிலிருந்து இளஞ் சூடான ஆவி இதமான மணத்தை வீசிக்கொண்டிருந்தது. வேப்பம்பூவின் சுகந்தமும் மண்ணுடன் கலந்து காய்ந்த சருகுகளின் பரிமளமும் மனதுக்கு இதங்கூட்டிக் கொண்டிருந்தன.

மரங்களில் அமர்ந்திருந்த காக்கைகள் விட்டு விட்டுக் கரைந்தன. அழுகை வண்ணாத்திக் குருவி இடைவிடாது கத்தியது. கிளிகள் மெல்லிய குரலில் காதல் மொழி பேசின, அணில்கள் கிறீச்சிட்டன.

"கெணத்திலே தண்ணி இருக்குதல்ல?"

"கெணறு சொறண்டித்தா எறைக்குது. ஒருமழை பேஞ்சுட்டா சோளம் வந்து சேர்ந்துடும். இல்லின்னாக் கஷ்டந்தான்... "

"இப்பொ பயிரு பொடைக்கு வந்திருக்குமா?"

"களைவெட்டுத் தண்ணி பாஞ்சி ஒருவாரந்தா ஆவுது."

"ம்....ம் எல்லாம் அப்படித்தான். இந்த மாதம் மார்கழிக் கருவோட்டமே கூடலியே"என்று கூறிய பெரியண்ணனின் முக பாவம் எதையோ ஒன்றைக் கேட்க சுற்றி வளைத்துப் பேசுவது போலத் துலங்கியது.

"மச்சா வூட்டுலே எல்லாரும் சவுக்கியந்தானே?" மேற் கொண்டு பேச்சைத் தொடருவதற்கு எதையோ விஷயத்தைத் தேடுபவன் போல மாரப்பனின் கேள்வியும் இருந்தது.

அப்போது அண்மையிலுள்ள சோளக் காட்டிலிருந்து "மொசலு இதுக்குள்ளே இருக்குது" என்ற சத்தம் எழுந்தது. எல்லோரும் தோட்டத்தைச் சுற்றிலும் நின்று கொண்டனர். காடு அலப்புபவர்கள் தெற்கிலிருந்து அலப்பிக்கொண்டு நாய் களுடன் சென்றனர். வடக்குப் பக்கம் வலையைக் கட்டி வைத்து விட்டு எல்லோரும் தயாராக நின்றனர்.

காடு அலம்பும் ஒருவன் "மொசல், கொடிக்கால் மூலைப் பக்கம் ஓடியாருது. உசாரா இருங்கோ" என்று குரல் கொடுத்தான்.

கூரையில் கிறீச்சிடும் எலிச்சத்தத்தைக் கேட்டுவிட்டு வீட்டுத் தாழ்வாரத்தில் படுத்திருந்த பூனை அதைப் பாய்ந்து பிடிக்க

முனைந்து நோக்குவது போல அவர்களின் பார்வை வலைப் பக்கம் நோக்கியிருந்தது.

வலைப்பக்கம் ஓடிவந்த முயல், வலை கட்டியிருப்பதைப் பார்த்துவிட்டுப் பின்னுக்குத் திரும்பி வலதுபுறமாக சனி மூலைப் பக்கம் தாவி ஓடியது. நாய்களின் விரட்டலும் காடு அலப்பு பவர்களின் இரைச்சலும் முயலை மேலும் பதுங்கியிருக்க வொட்டாமல் துரத்தின. சனி மூலைப்பக்கம் ஓடிய முயல் முன்னால் வேலிபோல் நிற்கும் வலையைப் பார்த்து விட்டு ஒரு தாவுத்தாவி வலையைத் தாண்டிக் குதித்தது. பக்கத்தில் நின்ற ஒருவன் தன் கையில் இருந்த தடியால் ஓங்கி வீசினான். முன்னங்காலில் பட்டு முயல் துள்ளிக் கீழே விழுந்து மீண்டும் எழுந்து தாவிக் குதித்தோடியது.

“அதோ ஓடுது, அதோ ஓடுது” என்று பல குரல்கள் ஏககாலத்தில் கூச்சலிட்டன. சீழ்க்கைச்சத்தம் காதைத் துளைத்தது. நாய்கள் சோளக்காட்டிலிருந்து சடசட என்று தட்டையை முறித்துப் போட்டுக் கொண்டு வேகமாக வெளியில் தாவிப் பாய்ந்து வந்தன.

பூமியில் அடித்து எழுப்பும் ரப்பர் பந்தைப் போல முயல் குதித்து விழுவதும் பின்னர் தாவி எழுவதுமாகப் பாய்ந்தது. அதன் முன்னங்கால்கள் முறிந்திருக்க வேண்டும்.

“வுடாதே! ஓடிப்புடி மொதல் வேட்டை மொசல் போனா முழுநாளும் மொசக் கெடைக்காதும்பாங்க’ என்று ஒரு வயது வந்தவர் கூவி இரைந்தபடி கூட்டத்தின் பின்னால் ஓடினார்.

கால் முறிந்து போன முயல் மேலும் மேலும் நெருங்கி வரும் வேட்டை நாய்களின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் வழியில் இருந்த சங்கம் புதரில் புகுந்து மறைந்து கொண்டது.

குறிவைத்து ஓடிய நாய்கள் திடீரென்று மறைந்த முயலைக் காணமுடியாமல் தொடர்ந்து கொஞ்சதூரம் ஓடிய பின் நின்றன. அருகிலிருந்த கள்ளிப்புதர் பக்கத்திலும் கற்குவியல் அண்டையும் நின்று மோப்பம் பிடித்தன. கடைசியில் ஒரு நாய் சங்கம் புதர் பக்கம் சென்று மோப்பம் பிடித்துச் சற்று நின்று விட்டு உள்ளே புகுந்தது. புதரினுள் சலசலக்கும் சருகுகளின் சத்தமும் “கிர்...கிர்” என்ற முயலின் சத்தமும் எழுந்தது. கொஞ்ச நேரத்தில் கால் முறிந்து தொள தொளத்துத் தொங்கிய முயலைக் கவ்விக் கொண்டு வெளியில் வந்தது.

முயலைக் கவ்வி வந்த வேட்டை நாயின் சொந்தக்காரன் அதனிடம் சென்று அதைத் தடவிக் கொடுத்தான். அவன் காலடி

யில் அதைப் போட்டுவிட்டு வாலை ஆட்டிக் கொண்டு உதட்டில் பட்ட முயலின் ரத்தத்தை நாக்கில் சுழற்றி நக்கியவாறு நின்றது. முயலைக் கையில் எடுத்த நாயின் சொந்தக்காரன் முயலின் ஒரு காதை அறுத்து அதற்குக் கொடுத்தான். பரிசைப் பெற்றுக்கொண்ட நாய் கம்பீரமாக ஓடி வேட்டை நாய்களின் மத்தியில் நின்றது. "நான்தானே முதல் முதலில் இன்று வேட்டை யில் வென்றவன்" என்று கூறுவதுபோல அது அவைகளைப் பார்த்த பார்வையில் துலங்கியது.

முயலின் தோலை உரித்து ரத்தத்தை எடுத்து அதன் உடலின் மீது பூசினார்கள். அப்படிச் செய்துவிட்டால் அது நாற்றங் காணாது என்பார்கள்.

மீண்டும் வலையைச் சுருட்டி எடுத்துக் கொண்டு வேட்டை நாய்களோடு பசுமை பூத்த வயல்களை நோக்கிப் புறப்பட்டனர்.

பெரியண்ணன் மாரப்பனுடன் மீண்டும் சேர்ந்திணைந்து நடந்தான். அவன் உள்ளத்தில் ஏதோ ஒன்று மாரப்பனிடம் கூறு வதற்கான ஒன்றை மறைத்து வைத்திருப்பது போல் முகபாவம் உணர்த்தியது.

"மாப்பிள்ளைக்குப் பெண்ணுதானே மூத்தது?" பெரியண் ணனின் முகம் மந்தமாகவும், உயிரற்றவை போன்றும் விளங்கி யது. "இல்லெ பயதா மூத்தது" நிராசையுடனும் பரிதாபகரமாக வும் அவன் குரல் ஒலித்தது.

"சித்திரை வாக்கிலே பொண்ணுக்குத் தேவையான காரியம் ஏதாவது உண்டா?"

"மாப்பள பொருத்தம் வந்து கூடுனா செஞ்சிட வேண்டியது தான்"

பெரியண்ணன் சற்று யோசித்தான். சொல்லலாமா வேண் டாமா என்று அவன் உள்ளம் போராடியிருக்க வேண்டும் தொண்டையை இருமிக் கனைத்துக்கொண்டு "பிள்ளைக்கு வயது என்னாவது?" என்றான்.

"பத்தொன்பது முடிஞ்சு இருபது நடக்குது."

'ம்...ம் சரியான வயசுதா, தெக்க, வடக்கே எங்காவது கேக்கறாங்களா?"

தான் கேக்கப்போகும் விசயம் வெல்லுமா என்பதை அள வெடுப்பதற்காகப் பெரியண்ணன் மாரப்பனின் மனோநிலை யைச் சுண்டிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"கேக்கறாங்க. ஒசனை பண்ணிக்கிட்டிருக்கே."

பெரியண்ணன் சற்று மௌனம் ஆனான். குறி வைப்பது பொறுத்து வைத்தாலும் பறவை மட்டும் தப்பிவிடக்கூடாது என்று எண்ணும் கொள்கையுடையவன்.

"கேக்க எடத்திலே சொத்து சொவமெல்லாம் எப்படி?"

"அதுங் கஞ்சியை அது குடுச்சுக்கும்" ஏக்கம் கலந்த பொறுமையின்மையுடன் அவன் குரல் ஒலித்தது.

நிழல் காலடியிலிருந்து நழுவி கிழக்கு நோக்கி நீண்டு கொண்டிருந்தது. வறண்ட காற்று கிழக்கிலிருந்து மண்புழுதியை யும் சருகுகளையும் வாரியிறைத்தபடி சுழன்று சுழன்று வந்து கொண்டிருந்தது. எல்லோருக்கும் பசி நேரம் வந்துவிட்டது. ஒரு கிணற்றடியில் அமர்ந்து மூட்டை கட்டி வந்த கட்டுச் சோற்று மூட்டையை அவிழ்த்துவைத்துச் சாப்பிட ஆரம்பித்தனர். அங்கும் பெரியண்ணன் மாரப்பன் பக்கமே அமர்ந்திருந்தான்.

"நம்ம மச்சின மவனுக்கு முடிசிட்டா என்னன்னு நெனைக் கிறேன்."

மாரப்பன் மௌனமானான். அவ்வளவு சுலபத்தில் சரி சொல்லி விடக்கூடிய காரியமா என்ன?

வாயில் சோற்றை உருட்டிப்போட்டு, அசை போட்டுக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தான். பெரியண்ணன் மைத் துனன் மகனை மாரப்பனுக்குத் தெரியும். தகப்பன் இல்லை; தாய்தான் உண்டு. குடும்பபாரம் அனைத்தையும் சிறு வயதி லேயே ஏற்று அடிபட்டவன். வாழ்வின் கஷ்ட நஷ்டங்களை அறியக்கூடாத பருவத்துக்கு முந்தியே அறிந்து அனுபவித்தவன்.

"கையிலே காசத் தேடிக்கிட்டல்லோ அதப்பத்தி யோசிக் கணும்" என்றான் மாரப்பன்.

"காசை எப்ப வேணும்னாலும் தேடிக்கலாம். நல்ல சம்பந்தம் வருவதெ நாம வேணுங்கற நேரத்திலேயே தேடிக்கிட முடியுமா"

மாரப்பன் சற்றுப் பேசாதிருந்துவிட்டு, "வூட்டுலே கலந்துக் கிட்டு சொல்றேன்" என்றான்.

சாப்பிட்டு முடித்துச் சற்றுக் களைப்பாறியவுடன் எல்லோ ரும் எழுந்து மீண்டும் வேட்டைக்குக் கிளம்பினர். வேட்டை மும்முரமாக நடைபெற்றது. நரியின் உதவியால் உயிருடனும் கொல்லப்பட்டும் பல முயல்கள் வேட்டையாடப்பட்டன. ஒரு முயல்கூட அன்று தப்பிச் செல்லவில்லை.

நாள் முழுவதும் உழைப்பாளர் மக்கள் படும் சொல்ல வொண்ணாத் துன்பத்தைக் கண்டு இதயங் குமுறி முகங்கன்றிச்

சிவந்து விட்டது போல் சூரியன் செவ்வொளியை மேற்கு வானில் தூவிக் கொண்டு மறைந்தான். தத்தம் கூடுகளுக்கும் பறவையினங்கள் பறந்துசென்று கொண்டிருந்தன. உழவர்கள் ஆடுமாடுகளையும், குழந்தைகளையும் இழுத்துக்கொண்டு காடு கழனிகளிலிருந்து வீடு நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

முயல் வேட்டைக்குச் சென்றவர்களும் கிடைத்த பங்கை எடுத்துக்கொண்டு வீட்டில் ஒப்படைத்து வந்த வேலைகள் எப்படி நடைபெற்று முடிந்தனவோ என்று அறிபவர்கள் போல வீடு நோக்கி விரைந்து கொண்டிருந்தனர்.

# 7

கந்தன் சோளக்காட்டிற்கு நீர் இறைத்துக் கொண்டிருந்தான். மாரப்பன் வளர்ந்த பயிர்களினூடே பாத்தி பாத்திக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தான்.

பாப்பாயி அழுக்குத் துணிகளை வாய்க்காலில் துவைப்பதற் காக அங்கு வந்து சேர்ந்தாள். அப்பொழுதுதான் அவள் குளித்து விட்டு மயிர் உலர்வதற்காகத் தளவில் முடிச்சிட்டுக் கூந்தல் காதுகளிலும் கன்னத்திலும் புரள நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்து அழகுக் கன்னியாக அங்கு ஜொலித்தாள். அவளைக் கண்டதும் அவன் உள்ளத்தில் ஆசையும் குதூகலமும் மேலிட்டன.

அவன், அவளை உற்றுப்பார்த்தான். அவள் முகம் உணர் வலையின் தாக்குதலுக்குள்ளாகி சிலிர்த்து நடுங்கியது. கண்கள் மயக்க நிலையின் சிகரத்திற்குள்ளாகி அவன் பார்வைக்கு ஈடு கொடுத்து நின்றன. அவளின் உள்ளார்ந்த உள்ளக்கிடக்கையின் வேட்கைக்கு அவளும் எதிர்பார்த்திருக்கிறாளோ?...

அவளது பார்வைக்கு ஈடுகொடுக்க முடியாதவனாய் தன் பார்வையை அகற்றி பறியைக் கிணற்று நீரினுள் விட்டுத் தண்ணீர் மொண்டவுடன் மாட்டை அதட்டி ஓட்டி வடத்தின் மீது ஏறி அமர்ந்து தண்ணீரை மதகில் சாய்த்துவிட்டு, "ஆமா, எங்கே உன்னைப் பார்க்க முடியலே?" என்றான் முகம் சிவக்கப் புன்னகை புரிந்துகொண்டு.

"எங்கம்மா ஊருக்குப் போயிட்டுது. அதனாலே வூட்டுலே வேலை அதிகம்" என்றாள் குழப்பத்தோடும், நாணத்தோடும்.

மீண்டும் அவர்களிடையில் மௌனம் நிலவியது. அவள் அவன் ஏற்றம் இறைக்கும் திசை நோக்கிக் குனிந்து துணி துவைத் துக் கொண்டிருந்தாள். அவனுடைய செயல், சிந்தனை யாவும் அவளாகவே அவனுள் நிறைந்திருந்தன. அவளுள், தான் ஒன் றிணைந்து விட்டதாகவே அவனுடைய ஆசைக் கற்பனைகள் சிறகடித்தன.

"ஆ! அன்றொரு நாள் இரவில் ஊருக்கு அண்டையில் உள்ள அந்தப் பாறையில் அவளருகில் அமர்ந்து .... மனதை உருக்கும் சோக கீதம் இசைத்தபடி நெஞ்சில் தணல் கக்கும் காதல் வேட்கையைத் தாங்கியபடி அழுத அந்த அக்காண்டிப் பறவை .... பின் நிலவு வானில் சோளப்பொரியை வாரி இறைத்தது போன்ற நட்சத்திரக் கூட்டம்! – இந்த இன்பக் கனவுகளில் மூழ்கி யிருந்த அவனது சிந்தனை நீர் மொள்ளும் பறி டொக்கென்று கிணற்றுத் தண்ணீரில் சப்தம் எழுப்பவும் கலைந்தது."

"நீ வருவீன்னு நா காத்துக்கிட்டிருந்தே!" என்று எழுச்சி யுடனும், உல்லாசத்துடனும், இளமை ஒளி வீசும் கண்களுட னும் அவளைப் பார்த்துக் கூறினான்.

"பசியிருந்தால்தானே ருசிக்கச் செய்யும்?" என்று இரக்க சிந்தனையும் பரிவும் உள்ளத்தில் பொங்கக் கூறினாள்.

"எது ருசிக்குமோ அதைத்தானே மனசு நாடும்? அதுக்காவ எத வேணும்னாலும் நாடாதே?" என்றாள்.

அப்பொழுது சோளக்காட்டுத் தண்ணீர் குறுகுறுவென்று மெதுவாக ஓடிவரவும் அவனுடைய தந்தை அவனைக் கூப்பிட்டு "ஏத்த வுட்டுட்டியா?" என்று கேட்க, அவனும் "கெணத்திலியும் தண்ணி ஆயுப்போச்சு" என்று கூறியவனாக ஏற்றத்தை நிறுத்தி னான். அவளும் துணிகளைத் துவைத்துத் தோளில் போட்டுக் கொண்டு வாய்க்கால் ஏறிப் புறப்பட்டாள்.

கந்தனும் தனது தகப்பன் வருகிறான் என்று பார்த்து விட்டு, "போயிட்டு மாடு ஓட்டிக்கிட்டு வருவியா! இன்னைக்கு ஒருத்த ரும் இங்கே வரமாட்டாங்க" என்றான்.

அவள், தான் வருவதாகவோ, இல்லையென்றோ சொல்லா மல் ஏக்கம் கலந்த ஆவலுடன் புன்சிரிப்பை உதிர்த்து விட்டு நடந்து சென்றாள்.

அந்த ஒரு சிரிப்புப் போதாதா, அவள் வருகையைத் தெரிவிக்க?

காலையிலேயே தாய் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போன சோற்றைக் கந்தப்பனும் மாரப்பனும் சாப்பிட்டனர். உணவை முடித்துக்கொண்டு எழுந்த மாரப்பன் தன் மகனைப் பார்த்து "எருதெ அண்ணங்கால் போட்டுக் கொஞ்ச நேரம் அலைய வுட்டுக் கொண்டா. நா போயி குட்டையிலே ஊறப்போட்டிருக் கற புளிச்சக்கோலே எடுத்து நார் உரிக்கறே" என்று கூறிவிட்டுப் போய்விட்டான்.

மாரப்பன் போன சற்று நேரத்துக்கெல்லாம் பாப்பாயியும் எருமை மாட்டை ஓட்டிக் கொண்டு வந்து சேர்ந்தாள். அவளை அவன் உற்றுப் பார்த்தான். காய்ந்து புழுதி கிளம்பும் சித்திரை மாதத்துப் புஞ்சை நிலம் போல அவனுடைய மனதும் வெம்பிப் புழுங்கிக் குமைந்து கொண்டிருந்தது.

"வா, இப்படிச் சோளத்தட்டு நெழலிலே உக்காரலாம். மாடு அங்கே மேயட்டும்" என்று அவளைப் பார்த்துக் கூப்பிட்டு விட்டு இரண்டு வயல்களுக்கிடையேயான வரப்பின் மீது உட்கார்ந்தான்."ஊ ... ஹூம் ஆராவது பாப்பாங்க" என்று முகத்தைக் கவிழ்த்தவாறு கூறினாள்.

"நாம தப்பா ஒண்ணும் பண்ணலியே?" என்றான்.

"ஆனாலும் மறவான எடமாச்சே" என்றாள்.

"முக்காடு நனஞ்சவளுக்கு மொகமென்ன பாக்கி" என்றான்.

"ஆமா, உனக்கென்ன ஆம்பிளைக்கு, பொம்பளைக்கல்ல தெரியும்" என்றாள்.

அவன், அவளது கையைப் பிடித்து இழுத்து வரப்பின் மீது அமர்த்தினான். வெட்கமும் உணர்ச்சியும் கலந்த எரிச்சலுடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

மகிழ்ச்சியும் ஆரவாரமும் சந்தோசமுமிக்க தோற்றத்தோடு அவளை அவன் நோக்கினான். எதுவும் பேச வாய் வரவில்லை. சற்று நேரம் அமைதியாக இருந்தான்.

"இப்படியேதா எத்தனை நாளைக்கு இருக்கறது?" என்றான் திடீரென்று.

அவள் பேசாமல் மௌனமாக இருந்தாள். அவன் சொல்வதின் அர்த்தம் அவளுக்குப் புரியாமலில்லை. ஆனாலும் அவள் பெண்ணல்லவா?

அவர்கள் இருவரின் தலைக்கு மேல் சோளத்தட்டு காற்றில் அசைந்து கொண்டிருந்தது. செம்பவளத் துகள்கள் வாரித் தூவியது போல சோளக்கதிரின் பூக்கள் அதன் கொண்டலில் வெடித்துப் பிரகாசித்தன. பூவுதிர்ந்த கதிர்களில் சோள மணிகள் பால் பிடித்து சூல்கொண்ட பெண்ணின் வயிற்றில் ஓடிய நரம்பின் பசுமை போலக் காட்சியளித்தன. ஒரு கதிரை வளைத்து அவளுடைய வாயருகில் கொஞ்சும் புன்னகையோடு சென்றான். முத்தமிடும் மோகன மயக்கில் கட்டுண்டவள் போல இதழ்களை விரித்து மெதுவாக இளஞ் சோளக்கதிர் மணிகளில் வைத்துப் பதித்து, குழந்தை தாயின் பால் காம்பை பொக்கை

வாயால் மெல்வது போல அதைக் கடித்துச் சுவைத்தாள். அவள் வாயிற்கடையிலிருந்து கள்ளிப் பால் ஒழுகுவது போல சோளப் பால் வழிந்து கசிந்தது. உணர்ச்சியும், மயக்கமும் நிறைந்தவனாக, அவள் முகத்தை தனது இடது கன்னத்துக்கருகில் வைத்து அணைத்தபடி, அவள் சப்பிய சோளக் கதிரை தன் வாயில் வைத்துச் சுவைத்தான். தடித்துச் சுவரிய அவனுடைய உமிழ் நீர், கதிரின் மணிகளுக்கிடையில் நிறைந்து பால் சொட்டுவது போல சொட்டிக் கொண்டிருந்தது.

திடீரென்று அவள் தன்னுணர்விற்குத் திரும்பினாள். எதையோ சொல்ல விரும்பினாள். அவள் கண்களில் சோகமும், சோர்வும் கலந்த விசித்திரமான தோற்றம் காணப்பட்டது. அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவளால் அவளது மனநிலை யைப் புரிந்து கொள்ள முடியவில்லை. தலையை மடித்துக் குனிந்தாள். முதுகு வளைந்திருந்தது. ரவிக்கையின் கழுத்துப் பட்டை சுருங்கி எடுப்பான அவளுடைய மார்பகங்கள் மினு மினுத்தன. முதன்முதலாக அவனுக்கு உணர்வூட்டிய அதே காட்சியை அவன் இப்பொழுதும் கண்டான்.

அவன் விரல்கள் சோளத் தோகையை உரித்துப் பொடிப் பொடியாகக் கிள்ளி எறிந்து கொண்டிருந்தன. பற்கள் இறுக நெரிபட்டிருக்க தாடை எலும்பு துருத்திக் கொண்டிருந்தது.

"பாப்பாயி, ஏன் பேசமாட்டேங்கறே? எம்மேலே கோவமா?"

அவள் தனக்குள் ஏதோ போராடிக் கொண்டிருக்கிறாள் என்று அவனுக்குப் பட்டது.

"எம்மேலே உனக்கு ஆசையில்லையா?"

அவன் தொடர்ந்து சொன்னான்:

"இப்படியெல்லாம் யோசிக்கிறவ முந்திய ஒதுங்கியிருந்திருக் கலாம். டீப்போடும் சண்டைக் கெடாய்க்கு தலை வலிக்கத் தானே செய்யும்?"

இந்தக் கேள்வி இதயத்தின் மென்மைமிகு பாகத்தைத் தாக்கியிருக்க வேண்டும். பனிக்காலக் காலை நேரத்தில் வெண்ண ரட்டாம் புல்லின் மொட்டுப் பூவைக் கையால் நசுக்கினால் தண்ணீர் சொட்டுச் சொட்டாக விழுமே அப்படி அவள் தன் கண்கள் இரண்டின் இமைகளை மூடி அழுத்தும் பொழுதே கண்ணீர்த்துளிகள் சொட்டுச் சொட்டாக விழுந்தன.

"நீ என்னதான் சொல்லறே?" என்றாள்.

"எனக்கு உம்மேலே ஆசையா இருக்கு"

"எனக்குந்தா இருக்கு...!"

அவள் சொல்லி முடிக்கு முன்னே தனது இருகரங்களாலும் அவளது கன்னத்தைச் சேர்த்தணைத்து "நீ எனது தங்கமல்ல" என்று முத்தமிட முயன்றான்.

அவனது பிடியிலிருந்து முகத்தை விலக்கிக் கொண்டு "கொஞ்ச நேரத்துக்காவ மயங்கிட்டா பொம்பளை பொளைப்பு பொய்யாப் போயிடுமே" என்றாள்.

"சத்தியமா நான் உன்னக் கையுட மாட்டேட."

"அதுக்காவ நான் சொல்லலே. கண்ணாலத்துக்கு முன் னாலே... அப்படியொருத்திக்கு ஆயிட்ட... அது மகாப்பாவம்."

"நீ எனக்குன்னு நான் உனக்குன்னு நாமே முடிவு செஞ்சுக் கிட்ட அப்புறம் நமக்குள்ளே இன்னமே என்ன வித்தியாசம் இருக்குது?"

"குஞ்சுக்குக் கொண்டையிலே பூவு வந்தாதானே சாவன்னு சொல்லறோம்?"

தன் மனநிலையை எப்படி அவளுக்கு வெளியிட்டு நம்ப வைப்பது என்றே அவனுக்குப் புரியவில்லை. அவளைத் தவிர, அவன் வேறு எந்தப் பெண்ணையும் தேடிச் செல்ல மாட்டான்.

"நீ பயப்படாதே! நாளைக்கே வேணுமுன்னாலும் நான் உனக்குத் தாலி கட்டச் சம்மதம்."

- அவன், அவள் மேல் கொண்டுள்ள பற்றுக்கும், உறுதிப் பாட்டுக்கும் இதைவிட வேறு என்ன ஒரு சிறந்த உத்தரவாதம் கொடுத்துவிட முடியும்?

பருந்தைப் பார்க்கும் கோழிக்குஞ்சு மாதிரி அவனை அவள் ஏறிட்டுப் பார்த்தாள். கலக்கம் அவள் விழிகளில் நிழலாடியது.

"இன்னமே ஒரு நாழி என்னாலே சும்மா இருக்க முடியாது!" என்று அவள் கையைப் பிடித்து இழுத்து அவளைத் தன் மார்பு சேர அணைத்துத் தழுவிக்கொண்டான். இளமை வேட்கையின் துடிப்பும் முதன்முதலாக ஒரு பெண்ணின் ஸ்பரிசத்தால் எழும் மூர்க்கமும் ஆவேசமும் சேர்ந்து அவனை நிலை குலையவைத் தன.

"நான் என்னைக்கும் உங்களுக்கானவளே. ஆனா கண்ணாலத் துக்கு முந்தி அது வாண்டாம்" என்று பொறுப்பறியாது அடம் பிடிக்கும் செல்லக்குழந்தையை சமாதானப் படுத்துவதுபோல அவள், அவன் நெற்றியில் முத்தமிட்டவாறு அவனது பிடியை விலக்கினாள்.

"நான் என்ன செய்யட்டும்? இந்த நெருப்பு என்னைப் பொசுக்கிச் சாம்பல் ஆக்கிவிடும் போலிருக்கே"

அவள் அதிகமாய்ப் பேச விரும்பவில்லை. எங்கே தன்னையும் மீறித் தன்னுள் அமிழ்ந்து கிடக்கும் குருதி கொப்பளிக்கும் ரத்த நாளங்கள் வெடித்துச் சதைச் சுவர்களை சின்னாபின்னப்படுத்தி விடுமோ என்று அஞ்சினாள்.

முதன் முறையாக ஓர் ஆணின் ஸ்பரிசத்துக்குக் கட்டுண்ட அவளது உடல் முழுவதும் மின்னலைப் போன்ற ஓர் அதிர்ச்சி பரவியது. உடலில் உள்ள ரத்தம் பூராவும் முகத்தில் சென்று தேங்கியதுபோலக் கன்னங்கள் சிவக்க விழிகள் வெம்மையைக் கக்கின. இளமை வேட்கையின் உணர்வுக் கிளுகிளுப்புச் சற்று மனதைச் சஞ்சலப்படுத்தினாலும் அவள் மனது திடீரென்று விழித்துக்கொண்டது. அவனது பிடியிலிருந்து திமிறிக்கொண்டு எழுந்து சற்றே விலகி நின்றாள்.

அவன் அவளது முகத்தைப் பார்த்தான். தனக்கு இனிமையூட்டும் ஏதோ ஒன்று எதிர்பாராமல் நழுவிவிட்டது போல் உணர்ந்தான். அவனுக்கு இதயம் பிய்த்துக் கொண்டு விடுவதுபோல் துடிக்க, கண்கள் மங்க ஆரம்பித்தன. அவளுடைய முகத்தில் காணப்பட்ட தோற்றம் சோபையிழந்து ஏதோ தன் மீது விருப்பமில்லாது திணிக்கப்பட்ட ஒன்றைப் புறக்கணிக்கும் மனோபலம் அல்லாதது போலவும், அதே பொழுதில் தன் மனதில் ஏற்கெனவே ஏற்றுக்கொண்ட ஒன்றைப் புறக்கணிக்க முடியாதவளாக இருப்பதுபோலவும் அது தன்னை நசுக்கிச் சித்திரவதை புரிந்து விடும் என்று பயப்படுவதுபோலவும், அது தன் அறிவிற்கும், உணர்வுக்கும் எட்டாததாய்ப் போய்விடுமோ என்று வருந்துவது போலவும் அவனுக்குத் தோன்றியது.

அவள் தன் மாராக்கைச் சரிசெய்து கொண்டு முகத்தைக் தன் இரு கைகளாலும் தேய்த்து விட்டுக்கொண்டு, "நான் போகிறேன்" என்று அவனிடம் கூறிவிட்டு மாடுகள் நின்ற திக்கை நோக்கி நடந்தாள்.

"உனக்குச் சரின்னு பட்டால் போ" என்று நிராசையுடனும் பரிதாபகரமாகவும் அவன் கூறிவிட்டு அவளை வெறிக்கப் பார்த்து நின்றான்.

# 8

அன்று பிள்ளைகளெல்லாம் தோட்டத்துக்குச் சென்று விட்டார்கள். வீடெல்லாம் புழுதியாகக் குமைந்து கிடக்கிறது என்று பூசி மெழுகுவதற்கும், கூடை, முறங்களைச் சாணமிட்டுச் சுத்தம் செய்வதற்குமென்று வீட்டிலேயே தங்கி விட்டாள். கூரை - வாரம் முதலியவற்றில் அண்டிக்கிடக்கிற ஒட்டடை தூசு முதலியவற்றை அடித்துச் சுத்தம் செய்து கொடுக்க வேண்டுமென மாரக்காளும் மாரப்பனை நிறுத்தி வைத்துவிட்டாள்.

மாரப்பன் தலையில் ஒரு கிழிந்த சேலைத்துணியைக் கட்டிக் கொண்டு இடையில் ஒரு கோவணத் துணியுடன் விட்டத்தில் நின்றபடி கூரை முகட்டிலுள்ள ஒட்டடையை அடித்துக் கொண்டிருந்தான். மாரக்காள் வீட்டை மெழுகுவதற்காக சாணம் கரைத்த சட்டியைக் கொண்டுவந்து திண்ணை மீது வைத்துவிட்டு, "பழனியம்மாளுக்கு தெக்கே வடக்கே வார மாப்பிள்ளையிலே நல்லதாப் பாத்து கண்ணாலத்தை இந்த சித்தரை வையாசிலியே முடிச்சுட்டாப் பரவாயில்லின்னு நெனைக்கறே" என்றாள்.

கரிப்புகை அண்டிய கூரை முகட்டை அடித்துச் சுத்தம் செய்ய, அதன் அழுக்குப் புகை நெடி மாரப்பன் மூக்கில் ஏறி, தும்மலையும் தொண்டைக் கமறலையும் எழுப்பிற்று. தும்மலைக் கேட்டவுடன் மாரக்காள் "நல்ல சயனம். ஆம்பிளை தும்மறதுக்குக் காரியம் துடுசா நடந்து முடிஞ்சிடும்" என்றாள்.

"ஆடு மாடா? கேட்ட உடனே இழுத்துக் குடுக்குறதுக்கு? நல்லது கெட்டது எல்லாம் பார்த்துத்தானே செய்யணும்?" என்றான்.

"பாத்துத்தா செய்யணும். பெண்ணு சிரிச்சாப் போச்சு; பொகையிலை விரிச்சாப் போச்சுன்னு சும்மாவா பழமொழி இருக்குது?" என்றாள்.

தன் மகளை நல்ல இடமாகப் பார்த்துத் திருமணம் செய்து முடித்துவிட வேண்டும் என்று அவனும் எவ்வளவோ பிரயா

சைப்பட்டுத்தான் பார்க்கிறான். "மெத்தையில் படுத்துக் கொண்டு சோறு தின்னாட்டியும் அதும் வவுத்தை அது கழுவிக்கிட்டால் போதும்" என்ற சித்தாந்தத்தோடுதான் அவனும் எடுக்காத முயற்சியெல்லாம் எடுத்துப் பார்க்கிறான். அவன், தன் மகள் பழனியம்மாளின் திருமணத்தைப் பற்றி நினைக்கும்போதெல் லாம் "ஆணுக்கு அலையற பக்கம் கட்டு, பொண்ணப் பொளைக் கற பக்கம் குடு" என்ற பெரியவர்கள் வாக்கியம்தான் முன்னெ ழுந்து நிற்கும். என்ன செய்ய! விரலுக்குத் தகுந்த வீக்கம்தானே இருக்க முடியும்.

"மொசல் வேட்டைக்குப் போயிருந்த அன்னைக்குப் புதுப் பாளையம் பெரியண்ணன் தன் மச்சினன் வூட்டுப் பயல் இருக்கற தாவும், அவனுக்கு நம்ப பழனியம்மாளை முடிச்சுப் புடலாமுன் னும் சொன்னான்" என்றான்.

"ஆரு? .... நொச்சிப்பட்டி கொட்டக்காயந் தோட்டத்துக்கு சோறு மாத்தி பேரனா?"

"ஆமா! சோறு மாத்தி பேரந்தா. நம்ம கொள்ளக்காடு சுத்திக் கொளந்தப் பயனோட பொம்பேரனுந்தா."

"அந்தப் பயனுக்கு அப்பஞ் செத்துப் போயிடுலே?"

"ஆமா, வெசக்காய்ச்சல் வந்து செத்துப் போயிட்டுது. ஆயிதா கூட இருக்கறா. ஒரு பய, ஒரு பொண்ணு. பொண்ணக் கட்டிக் குடுத்தாச்சு.

கச்சிதமான சின்னக் குடும்பம்தான். பிள்ளைக்கும் தொந்தர விருக்காது. ஆனா ஒன்னு. ஆசான் இல்லாத குடும்பம். பெரும் பாலும் அப்படியுள்ள குடும்பத்துப் பசங்க தட்டிக் கேக்க ஆளில் லாது போக தத்தாத்தாரியாகக் கெட்டு முறிஞ்சு போயிடறதும் உண்டு."

அதை அவன் தெரிந்துகொள்ள விரும்பினான்.

"காப்பனில்லாத பயெ. பண்ணயம் பாய்ச்சல் ஊட்டோட இருந்து கவனிச்சுக்கிறானாங்கறது தெரியணும்ல?"

"பயலப்பத்தி கொறை சொல்லறதுக்கில்லேன்னு சொல்றாங்க"

"சரி; நில புலம் எப்படியோ? அதுஞ் ஜீவனத்துக்காகிலும் கட்டுப்படி ஆவது போல நிலம் இருக்க வேண்டுமல்லவா? கட்டிக் கொடுத்துவிட்ட பிறகு பொண் வந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு நின்னா அது யாரு கண்ணைக் கரிக்கும்?"

"நெல் புலம் எப்படி"

“கெணத்துப் பாசனம் ரண்டு குழி நெலமும், புஞ்சைக்காடு நாலு குழி நெலமும் இருக்காம். கைப்பணம் கண்ணாலச் செலவுக்குப் போதுமாம்.”

மாரப்பன் ஏற்கெனவே தீர விசாரித்துவிட்டவன் போல் பதில் சொன்னான். அவனும் இந்தத் திருமண விசயமாகச் சீக்கிரம் ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும் என்று இருப்பவன் போல் தோன்றினான்.

கடைசியாக மாரக்காளுக்கும் ஒரு பெரிய சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. குடும்ப ஒற்றுமைக்கு மாமியார்தான் முக்கிய காரணம். மாமியாள் மருமகளை அனுசரித்து வைத்திருக்கவில்லையென்றால் அந்தக் குடும்பத்தில் சமாதானம் இருக்க முடியாது. அவளும் ஒரு மாமியாரின் கீழ் வாழ்ந்தவள் என்ற முறையிலும் ஏற்கனவே தனக்குமுன் வாழ்ந்தவர்களின் வாழ்ந்து வருபவர்களின் வரலாற்றை அறிந்தவள் என்ற முறையிலும் அதை அவள் அறிந்து கொள்வது இன்றியமையாததாக இருந்தது.

“மாமியாள் எப்படி? லம்பாடியாக இருந்துடப்படாது.”

“எப்படி நாம அதச் சொல்றது? வெளியிலே பாக்க பதுவிசா இருக்கறவகூட குடும்பத்திலே மருமகளோட கீரியும் பாம்பாட்டம்மா இருக்கிறா. எல்லாம் அதனதன் தலச்சுளியப் பொருத்தது” என்றாள்.

மாரக்காள் சற்று நேரம் மௌனமாயிருந்தாள்.

“அப்ப எழுதின எழுத்தெ அழிச்சு எழுதிடப் போறதில்லே, இருந்தாலும் வெளக்கப் புடுச்சுக்கிட்டே கெணத்திலே வுழுந்துடப்படாது பாரு” என்றாள்.

விட்டத்திலிருந்து கீழிறங்கி திரேகத்தில் மண்டிக் கிடந்த கரித்தூசியை, தலையில் கட்டியிருந்த துணியை அவிழ்த்துத் தட்டித் துடைத்தபடி, “நாம மாப்பிள்ளைக்கு நம்ப பெண்ணைக் குடுக்கறதிலே விருப்பமிருந்தா ஒரு வாட்டி அந்த ஊருபக்கம் மாடு வாங்கப் போற மாதிரி போய்ட்டு சுத்துப் பக்கத்திலே இருக்கறவங்களே விசாரிச்சா எல்லாப் பூலோக்கும் தெரிஞ்சுப் போயிடுது” என்றான்.

மாரக்காள் வீட்டை மெழுகிச் சுத்தம் செய்ய ஆரம்பித்தாள். வாசலில் வைத்திருந்த மொடாவிலிருந்து தண்ணீரை மொண்டு மொண்டு நடந்துகொண்டே ஊற்றிக்கொண்டான். வெயிலில் காய்ந்த வாசலின் சாணிப் பற்று தண்ணீர் பட்டவுடன் ஊறி

மண்ணும் சாணமும் கலந்த ஒருவகை கதகதப்பான மணத்தைப் பரப்பிற்று. அவற்றின் மீது சிதறி விழுந்த தண்ணீர் ஓடை மண்ணின் மீது பட்டுப் பொடிய, அது மனதை அள்ளும்படியாக கமகமத்தது. வாசலுக்கு முன்னால் ஆளுயரம் வளர்ந்திருந்த வேப்பமரக்கொம்பில் அமர்ந்திருந்த இரண்டு காக்கைகள் ஒன்றையொன்று தலையைக் கோதிக்கொள்ளவும் அலகால் கவ்விக்கொண்டு முத்தமிட்டு காதல் கிறுகிறுப்பில் கண்கள் மூடி லேசாக முனகுவதுமாக அமர்ந்திருந்தன.

கன்று போட்ட எருமையை வாய்க்கால் வரப்பில் பிடித்து மேய்த்துவிட்டு வெயிலுக்குத் தண்ணீர் காட்ட வீட்டுக்குப் பிடித்துக் கொண்டு வந்து சேர்ந்தாள் பழனியம்மாள். கந்தனும் எருதுகளை மேய விட்டுத் தண்ணீர் காட்டுவதற்கு ஓட்டிக் கொண்டு வந்து சேர்ந்தான். முத்தம்மாளைத்தான் பகற்பொழுதில் வீட்டில் காண்பதென்பது முடியாத காரியம். தான் எடுத்துக்கொண்ட லட்சியத்தை நிறைவேற்றுவது என்ற வைராக்கியத்தில் கொட்டை முத்துப் பொறுக்கி சேகரிப்பதில் சுழற்காற்றுப் போலச் சுற்றித் திரிந்தபின், தான் சேகரிக்கும் கொட்டை முத்தை விற்றுக் கோழி வாங்கி, ஆடு வாங்கி பின்னர் அதை விற்றுத் தன் காதுக்குத் தோடு வாங்கிப் போட்டுக் கொள்ள வேண்டும் எனும் சபதம் நிறைவேற வேண்டாமா?

வீடு மெழுகிச் சுத்தம் செய்த மாரக்காள், கை கால்களைச் சுத்தம் செய்துகொண்டு சீலையை முழங்கால்களுக்கு மேல் சுருட்டித் தொடைகளுக்கு இடையில் செருகி இறுக்கியபடி, முகம் தரையைத் தொடுவது போலக் குனிந்து மண் செப்பில் மொண்ட தண்ணீரை முதுகில் ஊற்றித் தேய்த்துச் சுத்தம் செய்துகொண்டு கணவனையும் பிள்ளைகளையும் பார்த்து, “தம்ளரை எடுங்க, சோறு கரைச்சு ஊத்தறே குடிக்கலாம்” என்று கூறிக் கம்மஞ் சோற்றை ஒரு போவணியில் போட்டுக் கரைத்து வெங்காயத்தை எடுத்துக் கொடுத்து எல்லாருக்கும் தம்ளரில் சோற்றை மாறி மாறி ஊற்றினாள்.

எல்லோரும் சோறு குடித்து முடிந்ததும் அவளும் சோறு குடித்து விட்டு வெற்றிலை பாக்கை எடுத்து வாயில் போட்டு மென்றுகொண்டு வாசலில் வந்து துப்பினாள். அப்பொழுது யாரோ இருவர் மாட்டுக் கட்டுத்தரைப் பக்கம் எருமையைப் பார்த்துக் கொண்டு நிற்பதைப் பார்த்துவிட்டு கணவனைப் பார்த்து “ஆரு ரண்டு பேரு கட்டுத்தரைப் பக்கம் நின்னுக்கிட்டிருக்கிறது?” என்று கேட்டாள்.

வீட்டுத் திண்ணைவிட்டு இறங்கி வந்து பார்த்த மாரப்பன் "தெரியலை உனக்கு? "அதுதா புதுப்பாளையம் பெரியண்ணன்" என்றவுடன் வியப்புக்குறி தோன்ற ஆளு தலப்பாக்கட்டியிருக்கத் தெரியலே" என்றபடி "வாங்கண்ணா" என்று வரவேற்றாள். மாரப்பனும் "வா மச்சா" என்று வரவேற்றான்.

"எங்கிருந்து வாரீங்க?" என்றான் மாரப்பன்.

எல்லோரும் பேசிக்கொண்டே வீட்டில் வந்து அமர்ந்தனர். மாரக்காள் குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து விட்டு "வூட்டுலே எல்லோரும் சௌக்கியமா?" என்று உபசாரத்துக்குக் கேட்டு வைத்தாள். பொதுவாகச் சொல்லப் போனால் அந்தக் குடும்பத்தில் யாரையுமே மாரக்காளுக்குத் தெரியாது.

"மலைமாரி பேஞ்சு கெணறு குட்டையிலே தண்ணியில் லின்னா எப்பவுமே கஷ்டந்தா" என்று குடியானவர்கள் எல்லோருக்கும் உள்ள யதார்த்த நிலைமையை விளக்குவது போலக் கூறினான்.

பெரியண்ணனுடன் வந்த சுப்பன், வீடு முழுவதையும் ஒரு முறை கண்ணோட்டம் விட்டான். வடக்குப் பார்த்த மூன்று அங்கணத் திண்ணை வீடு. நடுவில் வாசல்; எதிர்த்தாற் போல் தெற்குப் பார்த்த கொட்டகை. வீட்டையும் கொட்டகையையும் இணைத்துச் சுவர் வைத்து உள்ளே நுழைய கிழக்குப் பார்த்த நடை கதவு; வாசலின் முன்னால் ஒரு ஆளுயர வேப்பமரம். வீட்டைப் பார்க்கும்பொழுதே கச்சிதமான, அடக்கமான வாழ்வின் தாத்பரியத்தை எடுத்துக் கூறும்.

கொட்டகையில் அமர்ந்திருந்த சுப்பன் வீட்டில் வாசற்படியண்டை நின்றுகொண்டிருந்த பழனியம்மாளைக் கூர்ந்து நோக்கினான்.

கருத்தடர்ந்த புருவங்களுக்குக் கீழ் இளமையும் வேட்கையும் துள்ளும் ஆவல் மிக்க விழிகள், சிரித்து மகிழும் பொழுது குழி விழுந்து மறையும் பாப்பாத்திப் பூச்சி போன்ற செவ்வரி பட்ர்ந்த கன்னக் கதுப்புகள்; உழைப்புப் பயிற்சியால் தசைகள் உருண்டு திரண்டு மதர்த்து நிற்கும் உடலைத் தழுவி இறுக்கமாகப் பிடித்திருக்கும் ரவிக்கை விரிப்பினால் மேலும் அழகூட்டும் உடற்கட்டு; செறிந்த மார்பகங்கள்; இந்தக் கட்டுக் காவலையும் மீறி வெளிவரத் துடிப்பது போல மூச்சு இழுக்கும்பொழுது உயர்ந்து புடைத்து முனைந்து நிற்கும் எடுப்பான கவர்ச்சி.... சுப்பனின் உணர்வும் பார்வையும் அவளையே நோக்கியபடி ஒரு சேர வேலை செய்தன. பழனியம்மாள் அவனைப் பார்ப்பதும்

அவனது வேட்கை மிக்க பார்வைக்கு ஈடு கொடுக்க மாட்டாத வளாய்க் கீழே குனிந்து முந்தானைத் தலைப்பிலுள்ள நூலைப் பிய்ப்பதுமாக நின்றிருந்தாள்.

பெரியண்ணனுடன் வந்திருந்த சுப்பனைப் பார்த்ததும் அவன் வந்திருக்கும் நோக்கத்தை மாரப்பன் புரிந்து கொண்டு விட்டான். "ஒலயிட்டு அரிசி அரிச்சுப் போட்டு சோறாக்கு. பசியோட இருப்பாங்க போலிருக்குது" என்று தன் மனைவியிடம் கூறினான்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லிங்க. இப்பத்தான் பளிக்கல் பாளைத்திலே நம்ப மாப்பிள்ளை வூட்டிலே சாப்பிட்டு வாறோம். ரண்டு காட்டுக்குள்ளே நடந்த உடனேயா பசியெடுத்துப் போயிடும்" என்றான் பெரியண்ணன்.

"இல்லே கொஞ்ச நேரத்திலே சோறாயுடும்" என்றான் மாரப்பன், அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல.

"இல்ல மாப்பளே, பசியிருந்தாச் சாப்படறதுக்கு என்ன? சாப்படக்கூடாத எடமா மலைக்கறதுக்கு" என்றான்.

"அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தின் தலைக்கு மேல் பல்லி ஒன்று சட்சட் என்று கத்தியது. தரையில் விரலால் தட்டிய படி "இந்த எடத்திலே பல்லி பேசறது நல்ல சகுனந்தானே?" என்று தான் வந்திருக்கும் காரியத்தின் நல்லது கெட்டதை அறிந்து கொள்ள விரும்புபவன்போலப் பெரியண்ணன் கேட்டான்.

"அத ஒண்ணும் அவ்வளவு முக்கியமா ஆரும் கவனிச்சுக்கறது இல்ல" என்று பட்டும் படாதவாறு மாரப்பன் பதிலிறுத்தான்.

உதடு நெருங்கக் கச்சிதமாக வெட்டிவிடப்பட்டிருந்த மீசையைத் தடவி விட்டுக்கொண்டு "அதுதானே நம்ம மூத்த பொண்ணு" என்று கேட்டான் பெரியண்ணன்.

இதுவரையிலும் அவர்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த பழனியம்மாள் நிலகால் படியிலிருந்து நழுவி வீட்டுக்குள் சென்றுவிட்டாள். சுப்பன் அவளைக் கூர்ந்து கூர்ந்து பார்த்த விதத்திலும் பெரியண்ணன் குறிப்பிட்டு அவளைப் பார்த்துக் கேட்ட விதத்திலும் இவர்கள் தன்னைப் பெண் பார்க்கத்தான் வந்திருப்பார்களோ என்று எண்ணி விட்டிருப்பாளோ?

மாரப்பன் பதில் கூறினான்.

"ஆமா"

தான் கேட்கும் நோக்கத்தைத் திடீர் என்று அவர்கள் புரிந்து கொள்ளக் கூடாது என்கிற பாவனையில் "அந்தத் தம்பி நம்ம

தம்பிதானே?" என்று திண்ணையில் அமர்ந்திருந்த கந்தனைப் பார்த்துக் கேட்டான் பெரியண்ணன்.

"ஆமா இவெந்தா மூத்தவெ. பொண்ணு இவனுக்கும் நேர் எளது!'

பொண்ணுக்குத் திருமணம் அண்மையில் முடிக்கும் உத்தேசம் உண்டா இல்லையா என்னும் நோக்கத்தை நன்கு உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தில் "பையனுக்கும் ஒரு காலுக்கட்டு போட்டறலாமே?" என்றான்.

இதைக் கேட்டதும் மாரப்பன் மனதில் உருவாகியிருந்த நம்பிக்கை சற்றுத் தளர ஆரம்பித்தது. ஒருவேளை பேச்சுப் பாராக்கில் பையனுக்குப் பெண்ணிருக்குது முடுச்சுப் படலாம் என்று கூறுவானோ என்று நினைத்தான். அதே கணத்தில் "அதுக்கென்ன பையனுக்குச் செய்யறதா பெரிய காரியம் பொண்ணை முந்தித் தாட்டிப்புடணும்" என்று தனக்குள் கூறிக் கொண்டவனாக, "பொண்ணத் தாட்டிப்புட்டுத்தா பையனுக் குச் செய்யனும். அவனுக்கென்ன இன்னும் மூணு நாலு வருசம் போய்க்கூடப் பண்ணலாம்" என்றான்.

இனி அவனுக்குச் சந்தேகமில்லை. பெண் கேட்கலாம். இல்லை என்று சொல்லிவிட்டு வேறு எந்த மிட்டா மிராசு வீட்டுலே கொண்டுபோயி இறக்கிவிடப் போறாங்க. சொல்லப் போனா இந்தக்காலத்திலே பெண் வீட்டுக்காரங்க மாப்பிள்ளை யைத் தேடித் திரிய வேண்டும். தவப்பனில்லாத பொம்பளை பண்ணையாய் இருப்பதால் இப்படி அலைய வேண்டியுள்ளது.

பேச்சும் கொஞ்சங்கொஞ்சமாய் வளர்ந்து கொண்டிருக்கும் போதே சுப்பன் பெரியண்ணனை ஒரு பொருள் நிறைந்த பார்வை பார்த்துவிட்டு சம்மதத்தைத் தெரிவிப்பவன்போல உணர்த்திவிட்டு தான் இனிமேல் பேசும் பேச்சுகளின் இடையில் இருப்பது உசிதமல்ல என்று உணர்த்துபவன் போல தொண் டையை செயற்கைத் தன்மையாய் கனைத்து இருமிக்கொண்டு சளி துப்புபவன் போல எழுந்து வெளியில் சென்றான்.

"மொச வேட்டையன்னைக்கு நான் உங்கிட்டே சொன்னது சம்பந்தமா ஓசன பண்ணியிருப்பீங்கன்னு நெனைக்கறே" என்றான் பெரியண்ணன்.

பெரியண்ணன் எதற்கு வந்திருக்கிறான், என்ன கேட்கிறான் என்பனவற்றையெல்லாம் நன்கு புரிந்திருந்தும் திருமண சமாச் சாரத்தைப் பற்றித் துளியும் நினையாது இருப்பது போலவும்

முயல் வேட்டையன்று பேசிய விஷயங்களைத் தான் அப்பொழுதே விட்டுவிட்டது போலவும் புருவங்களைச் சுருக்கித் தனக்குப் பிடிபடாத விஷயத்தை நினைவுக்குக் கொண்டு வருவது போலப் பாவனை செய்து "என்ன வெசயம் சொல்றீங்க" என்று கேட்டான்.

"மறந்து போயிட்டியா, நம்ம மச்சின மவனுக்குப் பொண்ணு வெஷயமாய்ப் பேசினது..." என்பதற்குள் மாரப்பன் அப்பொழுது தான் நினைவுவந்தவன் போல "ஓ அதுவா" என்று யோசனையில் இருந்துவிட்டு "இன்னும் ஒரு வருசங்கழிச்சுச் செஞ்சாப் பரவால்லின்னு நினைக்கிறோம்" என்றான்.

கற்கள் நிறைந்த பாதையில் செருப்பணிந்து தடுமாறிச் செல்வதுபோல பெரியண்ணனுடைய சிந்தனை இந்தப் பதிலைக் கேட்டதும் சற்றுத் தடுமாறியது. தலை குனிந்து வலது கால் பெருவிரலால் தரையில் கீறினபடி சற்று நேரம் மௌனமாய் அமர்ந்திருந்தான்.

"ஒரு வூட்டுலே பெண்ணிருந்து வயசுக்கு வந்திட்டா என்னைக்கிருந்தாலும் ஒருத்தம் பொறந்தாலே அனுப்பிச்சு வைக்க வேண்டியதுதானே?" என்றான்.

"என்னைக்குப் பொண்ணுப் பொறந்ததோ அன்னைக்கே நமக்குச் சொந்தமில்லாததா இருந்திட்டாலும் ஒருத்தனுக்குப் புடிச்சுக் கொடுக்கறதுக்கும் நேரங்காலம் வேணுமில்லையா? பொண்ணுக்கென்ன அப்படி மீறுன வயசாவா போயிட்டுது?" என்றான் மாரப்பன்.

"காத்துள்ளபோதே தூத்திக்கோ காலம் வரும்போதே கண்ணாலப் பேச்சு முடிச்சுக்கோன்னு சும்மாவா சொல்றாங்க. ஆம்பளப்பயலா இருந்திட்டால் பரவால்லே. பொம்பளைப் பிள்ளை காரியமெல்லாம் நாலு மாப்பளெ மொனஞ்சு வரும் போதே முடிச்சுப்படணும்" என்றான் பெரியண்ணன்.

அவன் பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் வேட்டை நாய் வலையிலிருந்து முட்டும் எலியைக் கவனிப்பது போலக் கவனித்து வந்த மாரக்காள் சொன்னாள்.

"எனக்கெல்லாம் இரவத்தி மூணு வயசிலேதா கண்ணாலம் ஆச்சு. மாப்பிள்ளை வரமாட்டேன்னா போயிட்டுது? அததுக்கு ஒண்ணு இருந்தேதா தீரும்"

பெரியண்ணன் மீண்டும் சொன்னான்.

"... ஆனா காய் பழுத்தா காம்பிலே நிற்காது."

மாரப்பனுக்கும் பெண்ணைக் கொடுத்துவிடலாம் என்று உள்ளூர விருப்பம்தான். ஆனாலும், திடீரென்று கேட்டவுடனேயே சரியென்று சொல்லிவிட்டால், நகை நட்டு விவகாரத்திலோ வைத்துக் கொடுத்தல், விளங்கிக் கொடுத்தாலோ மாப்பிள்ளை வீட்டார் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் போக வேண்டி வந்துவிடும் என்றும், இப்பொழுது திருமணம் செய்ய விருப்பமில்லாததுபோல் பாவனை செய்து, அவர்கள் வற்புறுத்தலுக்காக இணங்கியது போலக் காட்டிக்கொண்டால் அப்படி நேராது என்றும் எண்ணினான்.

"கண்ணாலம் பண்ணறதுன்னா திடீர்னு முடியுமா? நெல்லு நீரு, பயிரு, பச்சை, நகை நட்டு ஒண்ணும் தேடாமே அதப்பத்தி எப்படி நினைக்கிறது? இந்த வருசம் போயி அடுத்த வருசந்தான் முடியும்" என்று முத்தாய்ப்பு வைத்தது போல் பேசினான்.

கல்யாண விசயம் படியாது போலிருக்கிறது என்றுணர்ந்த பெரியண்ணன் "பெண்ணுக்குக் கலியாணம் இப்பொழுதே பண்ணறதா வாண்டாமா எங்கிறது உங்க சம்மதத்தைப் பொறுத்த விஷயம் - ஆனா ஒன்று மட்டும் சொல்றே, பையெ தங்கமானவெ. இன்னைக்கெல்லாம் இருக்கின்ற மைனர் பசங்களைப் போல தப்புத்தண்டா இல்லாதவெ. காப்பி தண்ணீர் கூடக் குடிக்கமாட்டான்னாப் பாருங்கோ. வேலையுண்டு வெட்டியுண்டுன்னு இருப்பானே தவிர, வீணா ஒருத்தரோடு சேத்துகிட்டுச் சுத்தமாட்டான். எத்தனையோ மாப்பிள்ளை, பொண்ணுன்னு, இருக்கிற எடத்துக்க வரத்தா செய்வாங்க. நம்மளவு சொத்துக்காரராகவும் வருவாங்க. ஆனா இது மாதிரி ஒரு மார்ப்பிள்ளெ வந்துசேருவதுதா கஷ்டம்" என்று நிறுத்தி நிதானமாகப் பேசிவிட்டு இந்தப் பேச்சு அவர்களை எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்று ஆராய்பவன் போல சற்று இருமித் தொண்டையைக் கனைத்துக் கொண்டு அவர்களை நோட்டம் விட்டான். அனுபவமும் புத்திசாலித்தனமும் மிக்க ஒளிரேகை அவர்கள் முகத்தில் கீறலோடியது.

சிரத்தையும் நுணுக்கமும் கலந்த ஆழ்ந்த அறிவோடும், முன் யோசனையோடும் பெரியண்ணன், தனது கடைசி அஸ்திரத்தைப் பிரயோகித்தான். "பையனுக்கும் எங்காவது ஒரு எடத்திலே பொண்ணுக் கெடைக்காமே போவப் போறதில்லே, இது மாதிரி ஒரு கபடத்த சனங்களும் நல்லது கெட்டதை அனுசரிச்சுப் போற போக்கு உள்ளவங்களும் கெடைக்கறது கஷ்டமின்னுதா இவ்வளவு பாடுபட வேண்டியிருக்குது. அதுவுமில்லாமே. பைனாட்டப் பொண்ணும் மாம்பாட்டுக்காரியாவும், வேக்கி

யானமுள்ளதாவும் இருக்குது. பக்கத்திலே ஒண்ணுக்கொண்ணு ஆதரவாயும் போயிடுமின்னு நெனைக்க வேண்டிருக்குது" என்றான்.

இனியவர்கள் சுற்றிவளைத்துப் பேசிப் பயனில்லை. ஏதாவது ஒரு பதிலைக் கூறியாக வேண்டும். அதுவும் கல்யாணத்தை முடித்து விடலாம் என்று வாக்குறுதி கொடுத்து விடமுடியுமா? அப்படிக் கொடுத்து விட்டால் பெண் வீட்டார்களுக்கென் றிருக்கிற கௌரவம் என்னாவது? எல்லா சாதக பாதகங்களை யும் யோசித்து சரியென்றும் சொல்லாமல் இல்லையென்றும் கூறாமல், அதே வேளையில் மாப்பிள்ளை வீட்டாருக்கும் நம்பிக்கை ஏற்படும்படியாக ஒரு பதிலைக் கூறியாக வேண்டும்.

அது அவர்கள் தாங்களாக ஏற்படுத்திக்கொண்ட சம்பிரதாய முறையல்ல; இது காலந்தொட்டு நிலவி வருகிற சமுதாயப் பண்பு. பெண் என்பவள் சமுதாயத்தில் மலிவுச் சரக்கல்ல. அவள் தன்னுள் எத்தனையோ மதிப்பிடற்கரிய பொக்கிஷங்களை, பெருமைகளை ரகசியமாக வைத்துப் பாதுகாத்து வருகிறாள். பொக்கிஷப் பேழைதான் அவளே ஒழிய, அதைத் திறந்து அந்த விலை மதிப்பிடற்கரிய பொருட்களை உலகுக்களிக்கவும் அவளின் புனிதமிகு பெருமையை மெய்ப்பித்துக்காட்டவுமான திறவு கோல், எங்கோ ஒருவனுடைய கையில் இருந்து விடுகிறது. அந்த எங்கோ உள்ள ஒருவனைச் சரியாக இனங்கண்டு தக்க தருணத் தில் பெண்ணின் புனிதமிகு பெருமையையும், ரகசியத்தையும் உலகுக்களிக்கவும், அவளே அதை அறிந்து கொள்ளவும் செய்ய சமூகம் அவளுக்குச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கும் பொழுது அது பெற்றோர்களைச் சார்ந்து விடுகிறது. இந்த நிலையில் அது எப்படி எப்படியோ தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. இதற்காகத் தான் அவர்களும் இவ்வளவு சிந்திக்கிறார்களோ? தர்க்க விவாதங் களை எழுப்பிச் சரியான விடையைக் காண விழைகிறார்களோ?

"எதுக்கும் சாமி, சகுனம் பார்த்துப் பொருத்தம் கேட்டுச் சொல்கிறோம்" என்று மனைவியை நோக்கி, "சரிதானே?" என்றான் மாரப்பன்.

"ஆமா ஆயிரங்காலத்துப் பயிரல்லவா? ஓடையில் ஓடற ஊற்றை மொண்டுவரப் போனாலும் கையிலுள்ள கலயம் ஒடையாமே பார்த்துக்கணும் அல்லவா?"

பெரியண்ணுக்கு இப்பொழுது முழு நம்பிக்கை பிறந்து விட்டது. அவன் பெயர்ப் பொருத்தமெல்லாம் முந்தியே பார்த்து வைத்திருக்கிறான்.

"சரி! அப்படியேதான் பார்த்து முடிச்சுட்டாப் போவுது. பையம் பேரு தெரியுமல்ல?" என்று கேட்டுச் சற்று அவர்களைப் பார்த்துவிட்டு, "சுப்பன்" என்றான்.

இடையில் சற்று நேரம் மௌனம் நிலவியது. திருமணம் சம்பந்தமான பேச்சு முடிந்து விட்டது. இனி அதைப் பற்றி பேசுவதற்கில்லை. அந்த மௌனத்தைக் கலைப்பதற்கு வேறு ஏதாவது ஒன்றைப் பற்றிப் பேசியாக வேண்டும்? எதைப் பேசுவது?

பெரியண்ணன் கீழே குனிந்து கட்டில் குத்துக்காலில் விரல்களால் தாளம் போட்டுக் கொண்டிருந்தான்.

மாரப்பன் பின்னலிட்ட கட்டில் கயிற்றை நெருடி விட்டுக் கொண்டிருந்தான். மாரக்காள் சீலையின் தலைப்பிலிருந்து பிரித்த நூலை முறுக்கிக் கொண்டிருந்தாள். அந்த மௌனம் அவர்கள் மத்தியில் ஒருவிதக் கூச்சத்தை மூட்டியது.

பெரியண்ணன் அமைதியைக் குலைக்கும் விதத்தில், "தோட்டத்திலே தைப்பட்டச் சோளந்தானே போட்டிருக்கிறீங்க?" என்றான் மாரப்பனைப் பார்த்து.

காற்றடைபட்ட இறுக்கமான இடத்திலிருந்து வெளி வந்தவன் போலே, "ஆமா பூராக்காடும் சோளம்தான்" என்றான் மாரப்பன்.

"தண்ணி தட்டுப்பாடில்லாமே பாயுதல்ல?"

"இல்லியே, பூராக்காடும் தண்ணி ஒரு சுத்து சுத்தி வர பதனஞ்சு நாளாயிடுது. இப்ப எல்லாம் பரவு பூட்டை. ஒரு மழை பேஞ்சுட்டுதுன்னா வெள்ளாமை பூராவும் வந்த மாதிரி. இல்லேன்னா பாதி காடு தள்ளுபடி ஆயிடும்."

"இந்த நாலு நாளாவே மானம் ஒரு மாதிரியா வெள்ள வெயில் அடிச்சுட்டு எந்திரிச்சுக்கிட்டிருக்குது. இன்னும் ரண்டொரு பொழுதிலே பெய்யணும்" என்றான் பெரியண்ணன்.

"இந்த வருஷம் நல்லமழை ரோவம் இருக்குது. மார்கழியிலே கூட முழுக்க கருவோட்டம் கட்டியிருந்தது. நம்ம நேரத்துக்குப் பெய்யணுமே?" என்றான். நிராசையும் ஏக்கமும் கலந்த குரலில்.

"நமக்கு ஆண்டவே எவ்வளவு இந்த வருசத்தில படி போட்டிருக்கறாரோ அவ்வளவுதான் கெடைக்கும். வீதி பூராப் பொரண்டாலும் ஒடம்பிலே ஒட்டற மண்ணுதானே ஒட்டும்?" என்று மந்தமாகவும் உணர்ச்சியற்றும் கூறினான் பெரியண்ணன்.

திருமணப் பேச்சைப் பேச ஆரம்பித்ததும் வீட்டுக்குள் சென்ற பழனியம்மாள் எட்டிக் கூடப் பார்க்கவில்லை. அவள் உள்ளத்தில் இனந்தெரியாத பீதியும் கலவரமும் பற்றிக் கொண்டன. அவளுக்குத் தகப்பன் வீட்டில் இருக்கும் சுதந்திரமும், செல்லமும் போகும் இடத்தில் கிடைக்குமா? தனக்கு சோறும் துணியும் என்ற எந்தவிதப் பொறுப்புமின்றி அதிகாரத்தோடு இங்கு நடப்பதுபோல் போகும் இடத்திலும் நடக்க முடியுமா? உடலுக்குச் சற்று அலுப்பாய் இருக்கும் பொழுது இங்கு படுத்துத் தூங்குவது போல் அங்குப் போய்ப் படுத்துத் தூங்க முடியுமா? இப்படியெல்லாம் அவள் மனது எதை எதையோ எண்ணிப் புரண்டு கொண்டிருந்தது. இருந்தாலும் அவனது வசீகரமிக்க தோற்றத்தில், பார்வையில் தன் மனதைப் பறி கொடுத்துவிட்டாள். வாலிப இதயத்தின் கற்பனைக் கோட்டைகளும், காதல் கனியும் நெஞ்சக் குறுகுறுப்பும் அவள் உள்ளத்தில் வாஞ்சைமிகு சலனத்தை எழுப்பாமல் போகவில்லை.

பெரியண்ணன், தான் வந்த விசயத்தை முடிக்கும் முறையில் "சரி மாப்பிளே, நாங்கள் பொறப்படறோம்' என்று சொல்லி எழுந்தான்.

"சாப்பிட்டிட்டு போகலாண்ணா" என்று மாரக்காள் உபசாரத்துக்காகக் கூறினாள். எப்பொழுதுமே பெண்கேட்டு வருபவர்கள் பெண் கொடுப்பதாக உறுதியாகாமல் இருக்கும் பொழுது சாப்பிடமாட்டார்கள். இதையறிந்துதான் அவளும் - சாப்பாடு தயாராகாமல் இருந்துங்கூட - வரமாட்டார்கள் என்று ஒப்புக்குக் கூறிவைத்தாள்.

"சாப்பாட்டுக்கென்னம்மா, இன்னமே நம்ம சாப்பாடு தானே?" என்று மீண்டும் தொடர்பு விட்ட விஷயத்தை ஞாபகப் படுத்துபவன் போலக் கூறினான்.

மாரக்காளும் பிடிகொடாமல், "என்னைக்கும் உங்கள் சாப்பாடுதான்" என்று கூறினாள்.

பெரியண்ணனும் மாப்பிள்ளையும் புறப்படுவதாகக் கூறி விட்டுப் புறப்பட்டுச் சென்றனர். மாரப்பனும் மாரக்காளும் அவர்கள் போன திக்கையே வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தனர். மகிழ்ச்சியில் புன்னகையும் சந்தோசமும், ஆவல் கொண்ட அவர்கள் முகத்தில் ஒளிவிட்டுப் பிரகாசித்தன.

# 9

**கோ**மாளிக் கிழவர் இச்சி மரத்துக் கல்லுக்கட்டில் அமர்ந்து கயிறு திரித்துக் கொண்டிருந்தார். மேய்ச்சலுக்கு ஓட்டிவந்த மாடுகளை மரத்து நிழலில் படுக்க வைத்துவிட்டு வாலிப இளைஞர்கள் கல்லுக்கட்டில் அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். கந்தனும் அந்தக் கூட்டத்தில் இருந்தான்.

ஒருவன் கந்தனைப் பார்த்து, "உனக்கேதப்பா சுக்கரதெசை அடிச்சிருக்கு. நம்ம பக்கம் எந்தப் பொம்பளையாவது திரும்பிப் பாக்கறாளா?" என்று அவனுடைய காதல் ரகசியங்களை அறிந்து கொண்டவன் போலக் கேலி செய்ய ஆரம்பித்தான்.

கந்தனோ தனது காதல் கேளிக்கைகள் யாருக்கும் தெரியாதென நினைத்தான். ஆனால், 'இன்று, இவன் கேட்பதைப் பார்த்தால் விஷயம் ஊரிலுள்ளவர்களுக்குத் தெரிந்து அவரவர்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டிருப்பார்கள் போல் படுகிறது. இந்த ரகசியக் காதல் லீலைகள் தன் தந்தைக்குத் தெரிந்தால்....' அவன் மனதில் பீதியும், கலக்கமும் ஒருசேர எழுந்து அலைக்கழித்தன.

இந்தப் பேச்சை இத்துடன் நிறுத்திவிட அவன் முயற்சிக்க வேண்டும். மேலும் அதை வளரவிட்டால் பக்கத்திலுள்ள கோமாளிக்கிழவர் காதிற்கு அந்தப் பேச்சுப் போகும். கோமாளிக் கிழவர் காதுக்குப் போய்விட்டால் அவன் தந்தைக்குச் சுலபத்தில் எட்டிவிடும். அப்படித் தெரிந்தவிட்டால்... அதன் விளைவுகளை அவன் எண்ணிப் பார்க்கவே நடுங்கினான்.

கந்தன் தன் பக்கத்தில் இருந்தவனின் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல கோமாளிக் கிழவன் பக்கம் திரும்பி. "ஏன் தாத்தா! எனக்கு நெனவு தெரிஞ்சதிலிருந்து நானும் உன்னைப் பாக்கறே, இப்படியேதானே இருக்கறே? பாட்டி செத்து எத்தனை வருசமாவுது?" என்றான்.

இதைக் கேட்டதும் கிழவனுடைய எண்ணங்களும் பார்வையும் எங்கோ சென்றன. புருவங்கள் சுருங்கி விரிந்தன. உதடுகள்

லேசாகப் பிரிந்து நடுங்கின. விழுங்க முடியாத கடினமான பொருளை விழுங்குவது போன்று எச்சிலை "கரக் கரக்" என்று விழுங்கித் தீர்த்தார். தனது நினைவை எங்கோ ஆழப் பதித்தவராக, "ஆமா, உனக்கெல்லாம் அவளப்பத்தி தெரியாது, அவ பொளச்ச பொளப்பும் இருந்த இருப்பும்..." கிழவனின் தொண்டையில் கொய்யாப் பிஞ்சை மென்று விழுங்கும்போது ஏற்படும் விக்கலைப் போன்ற அடைப்பு. கண்களில் சீவியெடுத்த நொங்கைப் போன்ற ஈரக்கசிவு.

கண்ணிமைகள் மாறி மாறித் தழுவிக் கொண்டன. குனிந்து மூக்கைச் சிந்திக் கொண்டார். "அவள் ரொம்பவும் வேக்கியானக் காரி, மாகாணி, வீசங்காணிக் கணக்கெல்லாம் மனசுக்குள்ளேயே அத்துபடி. அந்தக் காலத்திலே படிப்பேது? கணக்குப் படிக்கோணும்னா அவ கிட்டத்தா வருவாங்க" என்று சொல்லி உடம்பைச் சிலுப்பிக் கொண்டார். மீசையை மேல் நோக்கித் தடவிவிட்டுக் கொண்டார். ஏதோ மறந்து போன விஷயத்தை நினைவுக்குக் கொண்டு வருபவர்போலக் கண்ணைச் சற்று மூடித் திறந்தார்.

"நான் எந்த வேலையும் நெனச்சுக்க மாட்டேன். கோழி கூப்பட எந்திரிச்சு வூட்டு வேலையப் பார்த்துட்டுத் தோட்டத்துக்குப் போயிடுவா. ஏத்தல் புடிச்சு வடத்துமேலே ஏறி உக்காந்தானா மாடு சில்லு வண்டாட்டப் பறக்கும். ஆம்பளையங்க கூடத்தா இப்போ ஏத்தல் ஓட்டறதைப் பாக்கறையல்ல. ரூவா ஆயிரம் போட்டா மாட்டக்கூடசெலபேரு வாலப்புடுச்சு முறுக்கிக்கிட்டுத் தள்ளறதை? அவகிட்டெ அதுதா இல்லெ. கெழட்டு மாட்டக் குடுத்தாக்கூட வேலையிலே சிட்டாப் பறக்கும். அதுக்கு மொகராசி வேணும். கொரல்லே ஒரு கம்பீரம் இருக்கணும்" என்று கூறி வாயில் ஊறிய எச்சிலை உதட்டின் மீது இரண்டு விரல்களை வைத்து அழுத்திச் சிதுக்கென்று துப்பினார். "எந்த வேலைக்கும் அவ மலச்சது கெடையாது. வேலைதா அவகிட்ட மலைக்கும். நான் எங்க சுத்தி வந்தாலும் தோட்டத்து வேலையைப் பத்திக் கவலப்பட மாட்டே" என்று கூறினார் கிழவர்.

அப்போது கந்தனின் பக்கத்திலிருந்த வாலிபன், "ஏன் தாத்தா! நீ என்ன வேலை செஞ்சே அப்போ?" என்று கேட்டான். கிழவர், அவன் கூறியதைக் காதில் வாங்கிக்கொள்ளாதவர் போல, "இந்த ஊருல அவ இருந்தபோது எதுலையும் அவதா முன்னாடி நிப்பா. இருந்தப்பிருக்கட்டே அவளோட பேரு வெளங்கிடுச்சு. கண்ணிலே தூசோ, மண்ணோ விழுந்திட்டாலும் சரி, கழுத்து

சுளுக்கோ, நெஞ்சுப் புடுப்போ இருந்திட்டாலும் சரி, இந்தப் பக்கத்திலே இருந்தெல்லாம் அவகிட்டதா வருவாங்க. கண் ணிலே உளுந்த தூசை நாக்கவிட்டுத் தொளாவி அலுங்காமே வழிச்செடுத்திடுவா. நெஞ்சுப்புடுப்பே எடுக்கறதானாலும், மூக்கையும் வாயையும் இறுத்திப் புடுச்சுக்கிட்டு காதுலே தம்புடுச்சு ஊத ஆரம்பிச்சான்னா நெஞ்சுப் புடுப்பெல்லாம் பட படன்னு ஓடிப்போயிடும். என்னாலேயும், உன்னாலேயும் இன் னொருக்காப் பொறந்து வந்தாக்கூட இது முடியாது" என்று கூறிவிட்டு விருத்துப்போன கால்களை இடம் மாற்றி நகர்ந்து அமர்ந்து ஆற்றிக் கொண்டார். அவருடைய கண்களிலும் முகத்திலும்தான் எத்தனைவிதமான சோக பாவங்கள்!

அங்கு அமர்ந்திருந்த அனைவரும் வாயைப் பிளந்தபடி கிழவனைப் பார்த்திருந்தனர். அவர்களுடைய உள்ளத்தின் அன்பும் பரிவும் கொண்ட உணர்ச்சி மேலோங்கிக் கிழவன் பால்மேலும் ஈடுபாடும், பச்சாதாபமும் கொள்ளச் செய்தது.

திடீரென்று அவருடைய கண்கள் லேசாகச் சிவப்பேறி யிருந்தன. மூக்குத் துவாரங்கள் விரிந்து சுருங்கின. "உனக்குத் தெரியாது அவளோட பெருமையைப் பத்தி" என்று நீண்ட நேர அமைதிக்குப் பிறகு ஆரம்பித்தார். அவ இல்லாத ஒரு கண்ணா லங்கூட நடக்காது. அவதா இந்தப் பக்கத்துக்கே அருமைக் காரிச்சி. முகூர்த்தக்காலுக்கு அவதா கரை கட்டணும். மாப் பிள்ளை பொண்ணுக்குத் தண்ணி ஊத்தி வுடணும். ஒண்ணூ தெரியுமா? இப்பத்தா நகையும் நட்டும் பெருத்துப் போச்சு. அப்போ தாலியும் தண்டைச் சத்தும் ஒரு கெராமத்துக்கே ஒண்ணுதா இருக்கும். அதை வச்சுத்தா எல்லாரும் கண்ணாலம் பண்ணி முடிப்பாங்கோ. அதுவும் அவகிட்டத்தா இருந்தது. அவ வேட்டி கட்டாத கொறை ஒண்ணுதா. ஆம்பிளைங்க கூட அவ கிட்டே ஒசனை கேட்டாகணும். இவ்வளவெல்லாம் கெட்டிக் காரியா இருந்ததாலோ என்னவோ, கடவுளு அவளெ அற்பாயுசி லேயே கொண்டு போயிட்டான்" என்று கூறிக் கண்களில் தன்னையும் மீறிப் பீறிட்டு எழுந்த கண்ணீரை வெளிக்காட்டிக் கொள்ளப் பிரியமில்லாமல், பின்பக்கம் திரும்பி எச்சிலைத் துப்புபவர் போலத் துப்பிவிட்டு, மீசையை உருவிவிடுகிற பாவனையில் கண்களையும் துடைத்துக்கொண்டார்.

இந்த வயசிலும் இந்தக் கிழவருக்கு இறந்துபோன தன் மனைவியிடம் உள்ள பாசத்தையும், பிணைப்பையும் நினைத்து அவர்களது உள்ளம் நெகிழ்ந்தது. கிழவனிடமிருந்து இன்னும் துருவிக் கேட்க விரும்புபவன் போலக் கந்தன், "தாத்தா, நீங்க

சொல்லச் சொல்ல எனக்கே வியப்பா இருக்குது. இந்தக் காலத்திலே அப்படியொரு பொம்பளையைப் பார்க்க முடியாதே" என்று கூறினான்.

கிழவனின் உடல் சிலிர்த்து விறைக்க, "ஹ்ூம்! அவள் ஒரு பொம்பளையா! தெய்வமப்பா, தெய்வம்! அவ நாணிக்கோணி நடந்து போனதெ நான் பாத்தறியே. அவ நடக்கும்போது காலிலே போட்டிருக்கற கொலுசும், காப்பும், மிஞ்சியும் 'ஜல் ஜல்' என்று ஓசையிடப் பூமி அதிரும்படியா நடந்து போவா. ஒரு மொறை ஒரு காலிப்பயல் அவ மேலே கண்ணு வெச்சிருக்கறான். அவளும் அவனுக்குப் பாடம் கற்பிக்க அவங்கிட்டெ நயமாப் பேசி வூட்டுக்கு வரவழைச்சு வெளக்குமாத்தை எடுத்து அடிச்சிருக்கறா. அப்போ அவெ தப்பிச்சு ஓட நெனைக்கும்போது குடுமியப் புடிச்சு அதக் கொடுவாள்லே அறுத்துட்டா" என்று கூறிக் கண்முன்னால் அக்காட்சியைக் காண்பவர்போல எங்கோ வெறித்து நோக்கியபடி குலுங்கக் குலுங்கச் சிரித்தார்.

"அவ பார்வைக்குக் காளிதான். ஆனாலும், அவ மனசு ரொம்பவும் ஏழ மனசு. ஆமா. இப்பொ எதப்பத்தி நாம் பேசி என்ன ஆவப்போவுது? அவ கொடுத்துவச்ச மகராசி; நாமதா கருமஞ் செஞ்ச கட்டை!" என்று கூறிச் சற்று மௌனமானார்.

அவர் கண் முன்னால் கடந்த காலத்தின் நினைவுகள் விரிந்து பரந்து அவர் உள்ளத்தையும் உணர்வுகளையும் சிலிர்க்க வைத்தனவோ?

திடீரென்று நினைத்தவர் போல கண்கள் பொல பொல வெனக் கண்ணீரைக் கொட்ட, "நான் ஒரு மிருகம்! அந்த மவராசிக்கு வாச்சிருக்கப்படாது. ராத்திரியிலே மாட்டுக்குத் தட்டுப் பிடுங்கப் போகும்பொழுது போருலே பாம்பிருந்து கடிச்சிருக்குது. அதை அவ தட்டு ஈக்கிதா கீறியிருக்குன்னு நெனச்சுக் கம்முன்னு போயிப்படுத்திட்டா. அதுவே அவளுக்கு எமனா வந்து முடிஞ்சுப்போச்சு. பாவி அன்னைக்குனு நான் வூட்லே இல்லே" என்று கூறிவிட்டு மூக்கைச் சிந்திக்கொண்டார். மூக்கும் கன்னமும் சிவந்து எரிந்தன.

அவர், மேலும் சொன்னார்:

"நல்ல மரத்திலேதான் நரையான் வுழும்"

அருகிலிருந்த வாலிபர்கள், அவரின் முகத்தை வியப்பும் ஆச்சரியமும் தோன்றப் பார்த்தார்கள். வாழ்க்கையின் எத்தனை விதமான அனுபவ முத்திரைகளை காலம் அவர் மீது பதித்து

விட்டுச் சென்றிருக்கிறது. ஒரு சகாப்தத்தில் பட்டு அனுபவித்துத் தேறி தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களை அல்லவா அந்தக் கிழட்டு ஜீவன் தன் நெஞ்சில் சேர்த்துச் சுமந்து வாழ்கிறது.

காலங்களும், நிகழ்ச்சிகளும் விட்டுச்சென்ற சாட்சியந்தானோ அந்த உருவம்?

அவர் மேலும் கதையைத் தொடரவோ அல்லது வேறு ஏதாவது விசயத்தைப் பற்றி ஆரம்பிக்கவோ இருப்பவர் போல, ஒருவர் முகத்தையும் பாராமல், புளிச்ச நாரைக் கொண்டு இரண்டு கைகளிலும் பிரித்து இணைத்து முறுக்கிக் கயிறு திரித்துக்கொண்டு முகத்தைக் கடுகடுவென்று எதிலோ லயித்த வர் போல அமர்ந்திருந்தார். அவர் கடந்த கால அனுபவங் களையோ, நிகழ்ச்சிகளையோ, கதைகளையோ கூற ஆரம்பித்து விட்டால், அவை, ஆலமரத்தின் வேர் பிடிப்புக் கிடைத்த இடத் திலெல்லாம் பற்றிப் படர்ந்து நீள்வதுபோல, தூரம்தொலை பார்க்காமல், காலம் இடம் பார்க்காமல் நீண்டுகொண்டே செல்லும்.

அப்பொழுது ஒருவர்அவசர அவசரமாக அங்கு வந்து "பெரியப்பா! பயல்ஆடு மேச்சுக்கிட்டு சுடுகாட்டு மேலே ஓடிக்கிட்டு வந்திருக்கறான். ஏதோ நாயி மாதிரி அவனத் தாண்டி மோதிக்கிட்டுப் போச்சாம். வூட்டுக்கு வந்து திண்ண மேலே உக்காந்தவந்தா கண்ணெல்லாம் கோவப்பழமாட்டஞ் செவந்திருந்தது. உடம்பு கனகனன்னு சட்டுது. திடீர்னு பார்த் தாப் பயலுக்கு வாயிலியும், மூக்கிலியும் நொரை கக்கிக்கிட்டு வந்திட்டுது" என்று கூறினார்.

அந்த ஊரிலும் சுற்றுப்புறத்திலும் இருக்கக்கூடியவர் யாவ ருமே அவரை ஏதாவது மாமா, மச்சான் என்றோ பெரியப்பா சித்தப்பா என்றோ முறை வைத்துக் கூப்பிடுவது தான் வழக்கம். அதற்கேற்றாற் போல அவரும் வயது முதிர்ந்து கனிந்தவராகவும், உலக ஞானம் படைத்தவராகவும் விளங்கினார். தான் செய்யும் எந்தக் காரியத்துக்கும் பிரதிபலனோ, கைமாறோ எதிர்பார்ப்ப தில்லை. அதனால் அவரிடத்தில் ஒரு மரியாதையும் பக்தியும் எல்லோருக்கும் இருந்ததில் வியப்பில்லையல்லவா?

கட்கத்தில் விரலை விட்டுத் தேய்த்து அழுக்கை எடுத்து உருட்டிக் கிழவர் முகர்ந்து பார்த்தார். மண்ணின் மணமும், மனித உடம்பின் வாடையும் கலந்த அந்தப் புளிப்புக் கமறலில் தான் என்ன லயிப்போ! என்ன ஈடுபாடே!

கிழவர் முன்பக்கமுள்ள கிணற்றுக்குச் சென்று முகம் கைகால் அலம்பிக்கொண்டு மடியிலிருந்து திருநீற்றை அள்ளி இடது உள்ளங்கையில் வைத்து, கிழக்கு முகமாக நின்று ஒரு சிட்டிகை திருநீற்றை எடுத்து ஊதிவிட்டுப் பெருவிரலையும், ஆள்காட்டி விரலையும் கூட்டி, உள்ளங்கையில் இருந்த திருநீறைப் பிசைந் துகொண்டு எதையோ முனகினார். அவர் தமது அமானுஷ்ய மான மந்திரசக்தியைத் திருநீற்றில் ஏற்றுகிறாரோ? வழி தெரியாது மனிதர்களைப் பிடித்துக் கொண்டு ஆட்டுகிற பேய் பிசாசுளை விரட்டியடிக்க ஜபிக்கிறாரோ?

அந்தக் கல்லுக் கட்டில் சற்று நேரம் அமைதி நிலவியது. அவர் முனகும் மந்திர ஜபம் மட்டும் இரவுப் போதில் கணவனும் மனைவியும் குழந்தையுள்ள வீட்டில் ரகசியம் பேசுவது போல் ஒலித்தது.

"இந்தா, கொண்டு போயி நெத்தியிலே பூசி வாயிலே கொஞ்சம் போட்டுச் சப்பச் சொல்லு. எல்லாஞ் சரியாப்போயி டும். ஏதோ நேர்பாடு சந்துப்பாடு பட்டிருக்குது" என்றார் கிழவர்.

வந்தவரும் திருநீறை வாங்கிக்கொண்டு ஆதங்கமும் அங்க லாய்ப்பும் நிரம்பியவராக, கணவேகமாக நடந்து சென்றார்.

கல்லுக்கட்டில் இருந்த வாலிபர்களும் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர் காட்டுவதற்கும் தங்களின் மத்தியான உணவை எடுத் துக்கொள்வதற்கும் புறப்பட்டுச் சென்றார்கள். கிழவர் மட்டும் கல்லுக்கட்டில் அமர்ந்து கைமாற்றிக் கொடுத்துப் புளிச்சநாரை உருவி உருவிக் கயிறு திரித்துக் கொண்டிருந்தார். கையசைவுக்கு ஏற்றாற் போல தலையும் உடம்பும் சாய்ந்து சாய்ந்து கோல மிட்டன.

# 10

கோடைக்காலம் நீர்நிலைகள் எங்கும் ஊற்றுக்கால் வற்றிக் கொண்டிருந்தது. மாரப்பனுடைய தோட்டத்தில் தைப்பட்ட சோளம் இருந்தது. போதுமான தண்ணீர் வயலுக்கு இல்லாமல், பயிர்கள் புடையிலேயே வாட்டமுற்றுத் துவண்டு நின்றன. வருணபகவான் சற்றுக் கண்விழித்தால் எல்லாம் சரியாகிவிடும்.

மாதம் முடிய இன்னும் இரண்டொரு நாட்கள்தான் பாக்கியிருந்தன. விவசாயிகள் எல்லாம் இந்த மாதம் முடிவதற்குள் மழை பெய்தால் பரவாயில்லை. எப்பொழுதுமே மாசியில் மழை பெய்து பங்குனி பிறக்க வேண்டும். அப்படியில்லாமல் பங்குனியில் மழை பெய்தால் பாலாறும் வற்றிவிடும் என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள்.

தினமும் வானத்தில் கருமேகங்கள் திரண்டு குமுறி எழும். வறட்சி மிகுந்த காற்று புஞ்சைக் காட்டுச் செம்புழுதியையும், குப்பைக் கூளங்களையும் வாரி இறைத்தபடி கருமேகத்தைச் செக்கர்வானம் ஆக்கிக்கொண்டிருக்கும். திரண்டு குவிந்த கருமேகங்கள் காற்றால் சிதறுண்டு பரவியோடும், மேகம் திரளும் போதெல்லாம் நம்பிக்கையோடு வானத்தை அண்ணாந்து பார்த்துவந்த விவசாயிகள், பின்னர் நம்பிக்கை குலைய ஆரம்பித்தனர்.

தினமும் காலை நேரத்தில் மாரப்பன் தன் தோட்டத்துக்குச் சென்று வயலின் நான்கு மூலைகளையும் சுற்றிப் பார்ப்பான். இரவு நேரத்துக் குளிர்ச்சியில் பயிர்கள் சற்று தளதளப்பாய் இருக்கும். என்ன இருந்தாலும் தண்ணீர் பாய்ந்து செழித்த பயிர் போல் தோகை பசுமை பிடித்து குமரிப்பெண்ணின் விரல்களைப் போல் தண்டுகள் கரணைகரணையாக இல்லாமல் சோகை பிடித்துக் கருச் சிதைந்த குமரிப் பெண்ணைப் போல் நின்றது.

அவற்றைப் பார்க்குந்தோறும் "இந்த வருஷம் மழையே சரியாப் பெய்யலியே. மாசி மாதம் மரம் நடுங்கவல்ல பனிப்பேயும்! காத்தாலே எந்திருச்சு தோட்டத்துப் பக்கம் வந்து பாத்தா,

வாய்க்கா வரப்பெல்லாம் பனித் தண்ணி சொள சொளனல்ல ஒழுகும்! கூட பயிர்த் தோகைகளிலே தேங்கி நிற்கும் பனி நீர் இள வெயில்படப்பட சொட்டுச் சொட்டுன்னு கன்னிப் பொண்ணு குளித்துவிட்டு வரிந்துவிட்ட கூந்தலிலிருந்து ஒழுகும் நீர் போலக் கொட்டிக் கொண்டிருக்கும். அப்படிப் பனி பேஞ்சா அந்த ஈரமே கூடப்போதும். பனி நவுப்பிலியே பயிரு நவுந்துடும். எப்படின்னா மித்த பயிரு வேர்களைப் போல ஆழமா இல்லாமே இதனோட வேரெல்லாம் மேல் மண்ணுலியே பதிஞ்சிருக்கும். இந்த வருஷம் என்னடான்னா தையிலிருந்தே பனிவாடை போயி வெயில் காலம் போலவல்ல இருக்குது!" என்று கூறிக்கொள் வான்.

மகளின் கல்யாண விஷயமாக ஜோசியம் பார்த்து வர அன்று அவன் மோகனூருக்குப் போயிருந்தான். அது மாசி மாதக் கடைசி நாள். அன்று கருமேகமும் செம்புழுதிப் புயலும் சேர்ந்து வானம் பழுப்பு நிறமாக மாறியிருந்தது. காற்று விர்விர்ரென்று கூரையைப் பிரிப்பது போல ஊங்காரமிட்டது. புழுதியை எல்லாம் வாரி வீடு வாசல் முழுதும் இறைத்ததுதான் லாபம். மழை சொட்டு விழுந்திருக்க வேண்டுமே! மேகமெல்லாம் மேற்குத் திசை நோக்கி நகர்ந்து சாய்ந்தன. காற்று அடங்கியதும் தான் வந்த வேலையை முடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்பி னான். வழியெங்கும் ஒரே வறட்சி.

வெள்ளாமை எடுத்த புஞ்சைப் பூமி நெஞ்சுகீறிக் காய்ந்து பொடிந்து கிடந்தது. நட்டுப் பிடுங்கப்பட்ட காட்டில் காதாரச் செடிகள் காய்ந்து பரவலாக நின்றன. அருகம்புல் கட்டைகள் நெஞ்சுப் பரப்பில் படர்ந்திருக்கும் ரோமக்கட்டைகள் போல் காய்ந்து வெளிறியிருந்தன. மரங்களெல்லாம் தழையுதிர்ந்து மனித திரேகத்து எலும்புக்கூடுகள் போல் காட்சியளித்தன. மண்ணும் மரமும் பசியையும், களைப்பையும் தாங்கமுடியாமல் வெம்பிப் பெருமூச்சு விடுவது போல் மழைக் காற்றோடு சேர்ந்து கதகதப்பான உஷ்ணத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. மழைக்காற்றின் குளுமையும், உஷ்ணமேறிய பூமியின் வெப்ப மூச்சும், மண்புழுதியின் கமறலும், புற்பூண்டு, தழை, கொடிகளின் நெடியும் சேர்ந்து நெஞ்சை அள்ளும் ஒரு வித மணத்தை வாரி வழங்கிக் கொண்டிருந்தன. அந்த லயிப்பில் சற்று மனம் திளைத் தவனாகக் கொஞ்ச தூரம் நடந்து வந்து கொண்டிருந்தான்.

அரை மைல் தன் சொந்த ஊரை நோக்கி வந்திருப்பான் பாதையில் ஈரமும், குழிகுண்டுகளில் தண்ணீரும் தேங்கி

நிற்பதைத் திடீரென்று கண்டான். அதைப் பார்த்ததும் அவனுக்குத் திகைப்பும், ஆச்சரியமும் தாள முடியவில்லை. காரணம், அரை மைலுக்கு அந்தப் பக்கம் அவன் புறப்பட்ட இடத்தில் ஒரு சிறு தூறல்கூட விழாமல் இங்கு மட்டும் மழையைப் பார்த்ததுதான்.

தாளறுத்த நெல் வயலில் புழுப் பூச்சிகளைப் பிடிக்கத் தாவி நடந்து செல்லும் கொக்குப் போல அவன் மேலும் வேகமாக நடையைத் தொடர்ந்தான்.

வழியில் சந்தித்த ஒருவனைப் பார்த்து "மழை எவ்வளவு இருக்கும்?" என்றான்.

"ஒரு ஒழவு மழையிருக்கும்" என்று மந்தமாகவும் சிரத்தையின்றியும் கூறினான்.

இந்த மழை அவன் ஊருக்கும் இருந்தால் எவ்வளவோ உபயோகமாக இருக்கும். ஒரு மழையை எதிர்பார்த்துதானே அவனுடைய புடைக்கு வந்த சோளம் வாடி வதங்கி நிற்கிறது.

'இந்த மழை எனது ஊருக்கும் இருக்கக் கூடாதா?' என்று வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டிக் கொண்டான். மேலும் அவனிடம் செய்தியை அறிந்து கொள்வதற்கு முன், மேற்கொண்டு மழை தொடர்ந்து இருக்குமோ இருக்காதோ என்ற பீதியில் அவனுடைய உள்ளம் போராடியது. இதயத் துடிப்பு காதுக்கேறி விட்டதோ என்பது போன்று படக் படக் கென்று செவிப்பறையைச் சுண்டி இழுத்துக் கொண்டிருந்தது. மேற்கே தொடர்ந்த மழை இதே மாதிரி பெய்திருக்கிறது என்று அறிந்து கொள்ளும் வரை அவன் மனதில் சாந்தி நிலவாது.

"மேக்கே எவ்வளவு தூரம் இந்த மழை இருக்கும்?" என்று மாரப்பன் கேட்டான். தொண்டையைக் கனைத்துக் கொண்டு மழை நீர் பட்ட தலைமயிரை விரல்களால் கோதிச் சிலுப்பிக் கொண்டு "மேக்கே எட்டுன வரைக்கும்" என்றான் அந்த வழிப்போக்கன்.

வெப்பமேறிய பூமியில் மழை நீர் பட்டுக் குளிர்ந்து எழுந்த மண்ணின் மனத்துடன் அவன் கோதிவிட்ட கூந்தலிலிருந்து எழுந்த புளித்த தயிர் வாடையும் சேர்ந்து ஒரு புது வகை நெடியைக் காற்றில் பரப்பியது. தலைக்குத் தயிர் தேய்த்துக் குளித்துக் கொள்ளும் கிராம விவசாயியோ அவன்?

மாரப்பனுக்கு அவன் பதில் ஒரு மனநிறைவை அளித்தது. அங்கிருந்து பொன்னேரிக் கிராமம் இரண்டு மைல் தூரம் தான் இருக்கும்.

தனக்கு மனநிறைவான பதிலைச் சொன்னவனிடம் ஒப்புக்குப் போய் வருகிறேன் என்று மறுபதில்கூடச் சொல்ல மறந்தவனாய் - மனம், சிந்தனை யாவும் மழையைப் பற்றியும், சோளப் பயிரைப் பற்றியும் தன் வயப்பட்டுச் சிந்தித்தவனாய் பயணத்தை மேற் கொண்டு தொடர்ந்தான்.

திடீரென்று அவன் மனதிலிருந்த நம்பிக்கையும், ஆறுதலும் குலைந்தன. தான் இருந்த இடத்திலிருந்து அரை மைலுக்குள் ளாக இருந்த இடத்தில் மழை பெய்ததற்கான அறிகுறியைக் காண முடியாமல் இருக்கும் பொழுது; இரண்டு மைல்களுக் கப்பால் உள்ள தன்னுடைய ஊருக்கு இந்த மழை தொடர்ந்து பெய்திருக்கக்கூடும் என்று யூகிப்பதில் என்ன நிச்சயம் இருக்க முடியும்?

அவன் மனதில் காய்ச்சல் கண்ட கோழி நடுங்குவதுபோன்ற ஒரு நடுக்கமும், ஈரக்குலையில் எரிவது போன்ற ஒரு வித உணர்வும் ஏற்பட்டன. வழக்கத்திற்கதிகமான படபடப்புடனும் உள்ளம் பொங்கிய அதேபொழுதில், அதிர்ச்சியடைந்த பார்வை யுடனும் அவன் காணப்பட்டான்.

வழியில் கிடந்த சிறுகற்களைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு காலில் மாட்டியிருந்த செருப்பைக் கழற்றிவிட்டு விட்டுத் தனது குலதெய்வம் குடிகொண்டிருக்கும் வடக்குத் திக்கை நோக்கித் தொழுதுவிட்டு இரண்டு கைகளையும் கூட்டிக் கற்களை இடை யில் வைத்துக் குலுக்கி வலது கையில் ஒரு பகுதிக்கல்லை எடுத்து "வடக்குமா உக்காந்து படியளக்கும் அண்ணமார் சாமியே! நம்ம தோட்டத்துக்கு மழை பெஞ்சிருக்கம்னா முந்தை ஒத்தைவந்து அப்புறம் ரட்டை வா" என்று வலது கையில் பிடித்த கற்களை எடுத்து எண்ணிப் பார்த்தான். இரட்டை வந்திருந்தது.

நெஞ்சுக் கூட்டில் சுடுநீர் கொட்டியது போன்று அவனுக்கும் "பகீர்" என்றது.

விழிகள் குத்திட்டு எதையோ வெறித்தன. பிதுக்கிய கிளுவம் பழத்தைப்போல கண்கள் கலங்கியிருந்தன.

"சரி, அப்படியே இன்னொருக்கா ரட்டை வரட்டும்" என்று குலுக்கி வலது கையால் கற்களை எடுத்து எண்ணிப் பார்த்தான். ஒற்றை வந்திருந்தது.

கடவுள் அவன் பக்கம் இல்லை. மழை அவன் தோட்டத்துக் குப் பக்கம் பெய்யவில்லை என்றல்லவா சற்கோட்டு ஜோசியம் கூறுகிறது! அவன் தெய்வங்களுக்கு என்ன அபச்சாரம் செய்

*தான்? வெள்ளாமை வைக்கும்பொழுதும், அறுக்கும் பொழுதும் தெய்வத்தை நினைத்துக்கொண்டு தானே செய்கிறான்? அவை களுக்குச் செலுத்தும் காணிக்கைகளையும் அவன் என்றைக்கும் நிறுத்தினதும் கிடையாதே? அப்படியிருக்கும்பொழுது தெய்வம் அவன் பக்கம் இல்லாமல் போன காரணம் என்ன? ஒருவேளை அவனது தெய்வ பக்தியை சோதிக்கின்றனவோ?*

*அவன் ஒருவனுக்கென்றால் அப்படியே நினைத்துக் கொள்ள லாம். அந்தக் கிராமத்துக்கே என்றால் - ஏன் அந்தப் பிரதேசத் துக்கே என்றால்? அவனால் அவ்வளவு தூரம் சிந்தித்துப் பார்க்க முடியாது. அப்படியே சிந்தித்தாலும் மழை பெய்யாமைக்கு ஏதோ மனிதனின் செயலுக்கு அப்பாற்பட்ட ஒரு சங்கற்பம், சாபத்தீடு, நெறிமுறையற்ற போக்கின் விளைவு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றே நினைப்பான்.*

*"சரி, அப்படியே ஊருக்கு மழையில்லின்னா ஒரு ரட்டை வரட்டும்" என்று குலுக்கிக் கற்களை எண்ணிப் பார்த்தான். மீண்டும் ஒற்றை வருகிறது. "ஓ! இப்பொழுது மழை பெய்திருக் கின்றதென்று கல் கோடு காட்டுகிறது. முதலில் தடுமாற்றம் காட்டி இப்பொழுது சரியாகக் காட்டியிருப்பதன் காரணம் முதலில் இறங்கிய மழைக்கால திசை மாறிச் சென்று ஏமாற்றி விட்டு மறுபடியும் வந்து காற்று வேகத்தில் பெய்திருக்கிறது என்று காட்டுகிறது" என தனக்குத்தானே அதற்கு சமாதானமும், வியாக்கியானமும் செய்து கொண்டான்.*

*இனிமேற்கொண்டு கற்களைக் குலுக்கிப் பார்க்க அவன் விரும்பவில்லை. அப்படிக் குலுக்கினால் அவன் விருப்பத்துக்கும் அபிலாசைக்கும் விரோதமாகக் கற்கோடு காட்டிவிட்டால்... எப்பொழுதுமே ஒரு முறைதானே ஒன்றின் நிகழ்ச்சி பற்றிய பலாபலன்களைத் தெய்வம் சூட்சுமப்படுத்திக் காட்ட முடியும்? திருப்பித் திருப்பிக் கேட்பதற்கு மனித சக்திக்கும் செயலுக்கும் கட்டுப்பட்டவைகளா அவை?*

*இப்பொழுது அவன் மனதில் உற்சாகமும் சந்தோசமும் பொங்கி வழிந்தன. கற்கோடு அவன் ஊரில் மழை பெய்திருக்கிற தென்று காட்டிவிட்டதல்லவா? அப்பாடா! அவன் மனதில் எழுந்த உத்வேகத்தைப் பார்க்கவேண்டுமே! மனம் எதிர்கால சோள விளைச்சலைப் பற்றிய திட்டம் போடுவதில் ஓடியது. "இந்த வருசம் செருப்பாலடிச்ச ரண்டு பொதி சோளம் வெளஞ் சிடும். சோத்துக்குக் கவலையில்லே. அக்கினிபட்டச் சோளம் பூராவையும் வித்து பிள்ளைக்காளைக்கு ஒரு சோடி வாங்கிட*

லாம். அப்படித் தேவை காரியம் கூடிட்டாலும் கடன் உடனக் கட்ட ஆவும்" என்று எண்ணியவாறு நடந்து சென்றான்.

அவனையறியாமல் புன்னகை முகத்தில் அரும்பியது. மேலும் வழியில் நடந்து சென்று கொண்டிருக்கும்பொழுது இடையே ஓரிடத்தில் லேசான தூற்றலுடன் மழை நின்றிருப்பதைப் பார்த்தான். மனசு எதையோ பறிகொடுத்துவிட்டதைப் போல திகில் அடைந்தது. இரை விழுங்கி விக்கிக்கொண்ட கோழியைப் போல அவன் பார்வை தடுமாறியது. கைகால்களோ ஓட்டப் பந்தயத்தில் களைத்துப் போனவனுடையதைப் போலத் துவள ஆரம்பித்தன.

"அட பெரியண்ணா! இப்படியா மழை பெய்யும். என் வவுத்திலே மண்ணடுச்சிட்டியே" என்று தனது குல தெய்வத்தை நிந்தித்தான். வியர்வைக்கறை படிந்த முகத்தில் அசாதாரணமான துக்கமும், விரக்தியும் நிழலாடின.

மனதில் ஒருவிதக் கலவரத்துடன் தெம்பற்றவனாகப் பல்வேறு சிந்தனைகளுடன் நடந்து சென்றான். மனதில் நிம்மதி யில்லை. ஊருக்குப்போய்ச் சேரும் வரையில் தன் மனது தாங்காதுபோல் தோன்றியது.

அவன் தனது நம்பிக்கைக்கு எதை எதையெல்லாம் சாதாரணமாக சாட்சிக்கு அழைக்கமுடியுமோ அதையெல்லாம் அழைத்துப் பார்க்க விரும்பினான். இன்னும் ஒரு மைல் தாண்டி ஊரை அடைந்து தெரிந்துகொள்வதற்குள்தான் எத்தனை விதமான தவிப்பு, மன உளைச்சல்!

"நம்ம எதிரே யாராவது தண்ணிக்கொடம் கொண்டாந்தா நிச்சயம் மழை நம்ம ஊரிலே பேஞ்சிருக்கிறதாவா நெனைக் கலாம்" என்று மனதில் வேண்டிக்கொண்டு வழியில் உள்ள ஊரை நெருங்கினான். ஒருவன் மாட்டுத் தாழிக்குத் தண்ணீர் எடுத்துக்கொண்டு எதிரில் வருவதைப் பார்க்கிறான்.

மனதில் மீண்டும் குதூகலம்! நாடி நரம்புகளுக்கும் புதிய தெம்பு! "சகுனம் என்றைக்குமே பொய்க்காது" என்றபடி "எண்ணா இங்கே எவ்வளவு மழை இருக்கும்?" என்று கேட்டான்.

"ஓழவு மழை இருக்கம்"

"பொன்னேரிக்கு இருக்குமா?"

"மேற்கே இருந்துதானே மழை இங்கே வந்தது. இன்னும் ஒறப்பாக்கூட அங்கே இருக்கலாம்."

"அப்படின்னா மழை கண்டிப்பா இருக்கும்" என்று உறுதி கேட்டுவிட்டு நடந்தான்.

ஊரை நெருங்கிவிட்டான். கோடை வெயிலில் பொட்டல் காட்டில் மேய்ந்துவிட்டுத் தண்ணீர்த் தொட்டி நோக்கி ஓடிவந்த ஆடு மூச்சு விடுவதுபோல அவன் வாயைப் பிளந்து மூச்சு வாங்கி விட்டுக் கொண்டிருந்தான்.

ஊர்க் கண்மாயிலுள்ள குழிகளில் நீர் நிற்பது கண்களுக்குப் படுகிறது. அப்பொழுதும் அவன் மனதுக்குப் பூரணத் தெம்பு வரவில்லை. 'ஒரு காட்டுக்குப் பெய்யற மழை அடுத்த காட்டுக்கு இருப்பதில்லை. மேகஞ் சரிஞ்ச எடத்திலே மழை பெஞ்சிட்டுப் போவுது. காலங் கெட்டதைப் போல மழையும் கெட்டுப் போச்சு. போன வருசம் நம்ம ஊருக்குத் தென்புறம் மழை பெஞ்சுது. வடபுறம் சொட்டுத் தூறல் இல்லையே! அதுபோல இருந்து விட்டால்...!' இப்படி அவன் மனது நினைத்துக் குழம்பியது.

ஊரண்டை கண்ட ஒருவனைப் பார்த்து, "மழை பரவால்லியா?" என்றான்.

"போதும், சோளம் எடுத்துடலாம். அங்கெல்லாம் எப்படி?" என்று அவன் சென்றுவந்த ஊர்ப்பக்கத்து நிலையைக் கேட்டான்.

"அங்கே ஒருசொட்டுக்கூட இல்லே. அறுவாங்காட்டுப் புதூரிலிருந்துதான்" என்றான் மாரப்பன்.

மாரப்பனுடைய தோட்டம் ஊருக்கு வடக்கே இருந்தது. அங்கு ஊருக்குப் பெய்த மழை இருக்குமோ இருக்காதோ என்கிற அவநம்பிக்கையில் "வடக்கே ராமனூர் வரையில் இருக்குமா?" என்று கேட்டான். அது ஒரு மைல் தூரத்தில் இருந்தது.

"மழை வடக்கே எட்டுன வரையிலும் பேஞ்சிருக்கும் போலிருக்கு" என்றான்.

நேராக வீட்டுக்குச் செல்லாமல் தோட்டத்துக்கு நடந்து சென்றான். கோடைகாலமானதால், வயல் வெடிப்போடி விட்டிருந்தது. ஆகவே மழைநீர் பாத்திகளில் தேங்கி நிற்க வில்லை.

மனத்தில் மீண்டும் அதிர்வு!

மண்வெட்டியை எடுத்துப் பூமியைப் பறித்துப் பார்த்தான். போதுமான மழை பெய்து நிலம் குளிர்ந்திருந்தது.

மாரப்பனுக்கு இப்பொழுதுதான் திருப்தி. மகளின் திருமண விஷயங்கூட அவனுக்கு இவ்வளவு குதூகலத்தை உண்டு

பண்ணியிருக்க முடியாது. மகிழ்ச்சி, பூரிப்பு, திருமணம் - எல்லாமே விவசாயிக்கு மண்ணைச் சார்ந்துதானே இருக்கிறது? மண் செழித்தால் அவன் வாழ்வின் சகலமும் செழிக்கும்; மண் வறண்டால் அவன் வாழ்வின் சகலமும் வறண்டுவிடும்.

"அண்ணமார் சாமியே! நீ எம் பக்கந்தா நிக்கிறே. என் வேண்டுதலை நிறைவேறிவிட்டது. அடுத்த அமாவாசை உன் சந்நதிக்கு வந்து பாலாபிசேகம் செய்திடறேன்" என்றான் நெஞ்சுருக, மனங்கசிய ஆனந்தக் கண்ணீர் விட்டபடி.

அருகம்புல்லின் மணமும், பால் பிடிக்காத சோளக்கதிர் பூவின் வாசமும், காற்றின் தழுவலும், களைப்புற்ற அவன் திரேகத்திற்கு ஒத்தடம் கொடுப்பது போலிருந்தன.

சூரியன் கீழ்வானில் அழுந்திக் கொண்டிருந்தான். வெப்பம் காந்தும் சூரிய கிரகணங்கள் நீர் படர்ந்த மேக மூட்டத்தால் தாக்குண்டு வீரியம் இழந்த கதிர்வீச்சைப் பரப்பிக் கொண்டிருந்தன. பூமியின் வெடிப்புகளில் ஒட்டியுலர்ந்து கிடந்த தவளைகள் மயக்கம் தெளிந்து எழுந்ததுபோல் வறட்டுக் கூச்சல் எழுப்பின. குயில்கள் நெஞ்சை அள்ளும் கானமிசைத்தன.

மாரப்பன் நேராக மாட்டுக் கட்டுத்தரைக்குச் சென்றான். வதியெழும்பாத ஜல்லிப் பிடிப்பான தரையில் மாடுகளைப் பிடித்துக்கட்டி கந்தன் தீவனம் போட்டிருந்தான். மாரப்பனைக் கண்டதும் அவை முகத்தைத் தூக்கிப் பார்த்து 'அம்மா' என்று கத்தின. ஒரு நாள் அவனைக் காணாததின் அனுதாபக் குரலோ அது?

இரண்டு மாடுகளின் இடையில் சென்று நின்று, இரண்டு கைகளால் இரண்டின் தாடைகளை ஒரே சமயத்தில் தடவிக் கொடுத்தான். இரண்டும் தலைகளை உயர்த்தி அவனது இரண்டு பக்கக் கன்னங்களையும் நாக்கால் நக்கின. கொஞ்ச நஞ்சம் இருந்த உடல் களைப்பும் அதன் இங்கிதமற்ற ஸ்பரிசத்தால் பஞ்சாய்ப் பறந்தன.

இறைந்து கிடந்த தீவனங்களை கவைக் குச்சியால் உருட்டி ஒரு பக்கத்தில் அணைத்துவிட்டு, போட்டிருந்த சாணத்தை எடுத்து எருக்குழியில் கொட்டிவிட்டு, இரண்டு எருதுகளின் முதுகளிலும் தட்டித்தடவிக் கொடுத்துவிட்டு வீட்டுக்குச் சென்றான்.

வாசலில் இருந்த பானையில் இருந்து தண்ணீரை மண் செப்பால் மொண்டு முகம் கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு தலைப்பாகையை அவிழ்த்து முகத்தைத் துடைத்து

விட்டுத் திண்ணையில் சென்று அமர்ந்தான். கட்டுக்குடுமியை அவிழ்த்து இரண்டு கைகளையும் தலையில் சேர்த்து வரக் வரக் என்று சொறிந்து அரிப்பைத் தீர்த்துக் கொண்டான்.

அடுப்புச் சுடரிலிருந்து ஏற்றிய விளக்கை இடது கையால் நெஞ்சுக்கருகில் ஏந்தி உடம்பைச் சுற்றிலும் போர்த்திய முந்தியை வலது கையால் விளக்கிற்கு அரணிட்டது போல், வளைத்துக் காற்றில் அணையாமல் கொட்டகைக்கு எடுத்துச் சென்றாள் மாரக்காள்.

மாரப்பன் தன் வருகையை அறிவிப்பவன்போல் “ஒரு ஒழவு மழை இருக்குமா?” என்றான் தன் மனைவி மாரக்காளிடம்.

“தாண்டவே இருக்கும். இன்னமே சோளம் வெளஞ்சு போயிடும்” என்று கூறி விளக்கைக் கொண்டு சென்று கொட்டத்து மாடக்குழியில் வைத்துவிட்டு “அங்கெல்லாம்....” என்று மாரப்பன் சென்ற இடத்து மழையைப் பற்றி விசாரித்தாள்.

“அங்கெல்லாம் ஒரு சொட்டுக்கூட இல்லே” என்றான், மாரப்பன்.

“கெழக்கே வெளுத்துத்தான் கெடந்தது” என்றாள் அவளும்.

சற்றுநேரம் அமைதி நிலவியது. பெரிய மகள் பழனியம்மாள் ஊர்க்கிணற்றிலிருந்து குடத்தில் தண்ணீர் எடுத்து வந்து குடிநீர் அண்டாவுக்கு ஊற்றிவிட்டு மீண்டும் கொண்டு வரச் சென்றாள். சிறியவள் முத்தம்மாள் கோழிகளைப் பிடித்துக் கூடை போட்டு அடைத்துக்கொண்டிருந்தாள். இன்றுதான் அந்தக் கோழிகள் இரண்டையும் முத்தம்மாவுக்காக மாரக்காள் வாங்கி விட்டாள். முத்தம்மாள் இரண்டு மாத காலமாகக் காட்டில் வெடித்துச் சிதறிய கொட்டை முத்தைப் பொறுக்கி வந்து சேர்த்து, விற்ற தொகைதான் அந்தச் சேவலும் வெடைக்கோழியும். அதை அவள் பராமரித்துக் கண்காணிப்பதில்தான் எவ்வளவு சுறுசுறுப்பும் வேக்கியானமும்!

காலையில் வீட்டில் குடித்துவிட்டுச் சென்ற சோற்றோடு மோகனூர் சென்று விட்டு வந்தான் மாரப்பன். இருப்பிடத்திற்கு வந்ததும் பசி, வயிற்றைக் கிள்ளியது.

“சோறு இருக்குதா?” என்றான் மனைவியைப் பார்த்து. “காத்தாலக் குத்திப்போட்டதுதா, இப்ப ஒண்ணும் சோறாக்குலே” என்றாள் மாரக்காள்.

“சரி, ஏதாச்சம் ஊத்து” என்று கூறிக் கொட்டாவி விட்டு மூளிநெறித்தான்.

வெண்கலக் கும்பாவில் நான்கு அகப்பை சோளக் களியும் மோரும் போட்டுக்கொண்டு வந்து வைத்துவிட்டு, "இன்ன வரையிலுமா சோசிகாரன் சோசியம் சொன்னான்" என்று கேட்டாள்.

"அதை ஏன் சொல்றே, போ! தேரு வடம் புடுச்சாப்பலையல்ல சனக்கூட்டம் கூடிக்கெடக்குது. நம்மளக் கூப்புடும்போது ரண்டு நாளிப் பொழுதுதான இருந்தது" என்று கூறி, கும்பாவில் இருந்த சோற்றைக் கரைத்தான்.

"என்ன சொல்லுச்சு?"

நான்கு கைச்சோற்றை வாரி வாரிக் குடித்துவிட்டு "கெழக்குத் தெசையிலேதா அதுக்கு மாங்கல்யம் கழுத்துலே வுழுவோ ணுன்னு இருக்குதாம்."

"ம்... ம்... ம்..."

"இப்பத்தா சனிபார்வை வெலகி பொதன் ஆச்சி செலுத்த வந்திருக்கானாம். இனிமே பொருள் விருத்தியடையுமாம்."

"பொண்ணோட தேவை காரியத்தப்பத்தி என்ன சொல்லுச் சுன்னு சொல்லு. மத்ததை அப்புறம் பார்த்துக்கலாம்."

"எல்லாப் பொருத்தமும் அமஞ்சிருக்குதாம். ஆனால் ஒரு தோசம் மட்டும் இருக்குதாம். அதக் கழிச்சுட்டா சரியாப் போயிடுமாம்."

"ஆருக்கு"

"பழனியம்மாளுக்குத்தான்..."

"என்ன தோசமாம்?"

"பழனியம்மா வவுத்திலே இருக்கும்போது யாரோ அய்யர் ஒருத்தர் வுட்ட சாபமாம். அதெ நெவர்த்தி பண்ணிட்டாச் சரியாப் போயிடுமாம்."

"அப்படியொன்னும் நெனப்பில்லியே?"

"அப்ப ஆராவது அய்யரு தட்சணைக்கு வந்திருந்தபோது நீ இல்லின்னு சொல்லியிருப்பையாம். மத்த பெரிய காரியம் ஒண்ணும் இல்லியாம்."

"அதுக்கு என்ன பண்றதாம்?" ஆவலும் ஆதங்கமும் தொனிக்கக் கேட்டாள்.

கையில் இருந்த சோற்றை உறிஞ்சி விழுங்கிக்கொண்டு அரைகுறை உச்சரிப்புடன், "ஒரு வாரத்துக்குப் பிள்ளையாருக் குக் பூப்போட்டுத் தண்ணியூத்திக் கடைசி நாள்லே அபிசேகம்

பண்ணி ஒரு அய்யருக்கு வேட்டியும் துண்டும் எடுத்துக் குடுத்திடணுமாம்" என்றான்.

"எந்த அய்யரையும் கூப்பிட்டுக்கலாமா?"

"தானே வந்து எல்லாக் கெரக சாந்தியும் கழிச்சு ஒரு எந்தரமும் எழுதிப் பொண்ணு கையிலே கட்டிவிட்டுப் போறேன்னாரு. அந்த எந்தரம் கையிலே இருக்கிறவரைக்கும் குடும்பத்திலே சண்டை சச்சரவே இருக்காதாம்" என்றாள்.

இதைக் கூறியதும் அவள் மனது குளிர்ந்தது. அந்தக் குடும்பத்தை ரட்சிப்பதற்கென்றே அந்தப் புகழ் மிக்க ஜோசிய அய்யர் வருவதாக எண்ணினாள். "நாம முன்சென்மத்திலே செஞ்ச புண்ணியந்தா" என்றும் எண்ணினாள்.

"அவரு நம்ம வூட்டுக்குக் காலடிவச்சுட்டுப் போனாலே நம்மப்புடிச்ச பீடையெல்லாம் ஓடிப்போயிடும். நாம என்ன கசுமாலம்! எத்தனையோ லச்சாதிபதியெல்லாம் வந்து காத்துக் கிட்டுக் கெடக்கறான். அவர் சொல்றதிலே அவ்வளவு சத்திய வாக்கு இருக்குதாம்" என்றான்.

உணர்ச்சிமயமான பக்திப் பரவசத்திலே சற்றுநேரம் திக்குமுக்காடினான். இரண்டு கைகளாலும், முகம் சிவக்கத் தேய்த்துவிட்டுக் கொண்டான்.

"என்னையிலிருந்து பிள்ளையாருக்குத் தண்ணி ஊத்தறதாம்?"

"வெள்ளிகௌமையிலிருந்து"

"ஒண்ணு மறந்திதுட்டனே. எருமெ நாலுநாளாகப் பாலு மையமாப் பீச்சுனு என்னத்துனாலையாம்?"

"பிள்ளையொட சனி கெரகந்தா குடும்பத்திலே நடந்த கஷ்ட நஷ்டத்துக்கெல்லாம் காரணமாம், இந்த மாசத்தோட அது தொலையுதாம்."

ஒருவாறு அந்தப் பேச்சுகள் முடிந்து பழனியம்மாளைச் சுப்பனுக்குத் திருமணம் செய்து கொடுப்பது என முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

# 11

திருமணநாள் வந்துவிட்டது. நொஞ்சிப்பட்டி உலகக் கவுண்டர் மகன் சுப்பனுக்கும், பொன்னேரி மாரப்பக் கவுண்டர் குமாரத்தி பழனியம்மாளுக்கும் திருமணமென்று மாதம், தேதி, கிழமைகளை எல்லாம் நாவிதனிடம் சொல்லி உறவினர்கள் எல்லோருக்கும் அழைப்பு விட்டனர்.

உள்ளூர் உறவினர்கள் எல்லோரும் வந்து விறகுடைத்துப் பந்தல் போட்டு முடித்தனர். அன்று மத்தியானத்திலிருந்தே விருந்துக்கான சமையல் ஏற்பாடுகள் துவங்கிவிட்டன. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீட்டிலிருந்து எந்தச் சாமான்கள் புழங்குவதற்கு கல்யாண வீட்டுக்காரர்கள் வேண்டுமென்று கூறியிருந்தார்களோ, அவற்றை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தார்கள்.

சோறு சமைப்பதற்கும், குழம்பு, ரசம் வைப்பதற்கும் வெட்டி வைத்திருந்த ஆலைக் குழியில் அண்டாவையோ மொடாக் களையோ வைத்து உலை கட்டினார்கள். தண்ணீர் எடுப்பதற்கும், காய்கறி நறுக்குவதற்கும், அரிசி கற்கள் நீக்கி அரிப்பதற்கும், ஆலைக்கூடத்திற்கு விறகிடுவதற்கும், சோறு, காய்கறிகளைப் பதம் பார்த்து இறக்குவதற்கும், வேண்டுமென்கிற சாமான் களைக் கேட்கும்போது கொண்டு வந்த கொடுப்பதற்கும் ஆக இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையை எடுத்துக் கொண்டு செய்தார்கள். இப்படி நல்லது - கெட்டது காரியங் களில் ஒவ்வொருவர் பரஸ்பரம் உதவிக்கொண்டு வேலை செய்யும் பழக்கம் கிராமத்துக்கு மட்டும்தான் சொந்தமோ!

ஆலை மேட்டில் அமர்ந்து அரிசி அரித்துக்கொண்டிருந்த பெண்கள் சிலர், எவள் எவனோடு போனாள், எவள் புருஷனுக்குத் தெரியாமல் குழந்தை பெற்றாள், எவர்களுக்கு எவ்வளவு கடன் உள்ளது, அந்தக் குடும்பம் ஏன் இக்கதிக்கு வந்தது போன்ற வேண்டாத விசயங்களைப் பேசிக் கொண்டிருந்தார்கள். இன்னும் சில பெண்கள் விளையாட்டுக்கார முறையுள்ள

ஆண்களுடன் வாய்க்கூசும் கொச்சை மொழியில் நையாண்டி பண்ணிக்கொண்டிருந்தனர்.

அரிசி வெந்துபோனதும், அண்டாவை எடுத்து சாணி வழிப்பில்லாத மூங்கில் கூடையில் கொட்டி கஞ்சி வடிந்ததும் வைக்கோலோ, சோளத்தட்டோ நிலத்தில் பரப்பி, துணி விரிப் பிட்டு வைத்திருந்த சோற்றுப் பாடையில் கொட்டி வைத் தார்கள். அங்கு முன்னோடியாக வேலை செய்தவர்கள் ஒரு ஆலைச் சட்டியில் சோற்றையும், மொளசாற்றையும் ஊற்றி அகப்பையைப் போட்டுக் கிளறி, உட்கார்ந்து கொண்டு ஏந்திய இரண்டு கைகளில் மூட்டுப்போட, மூட்டுப்போட "உருப் உருப்" பென்று சாப்பிட்டார்கள்.

மாலையானவுடன் நாவிதனை விட்டு அழைக்கச் சொல்லி எல்லோருக்கும் விருந்து படைத்தனர். திருமணத்துக்குப் பறை மேளம் வாசிக்க வந்த பறையர்களுக்கு அவர்களின் பரம்பரைப் பாத்தியதைப்படி பெரிய சாளில் சோறு நிரப்பிப் போட்டனர். அதைச் சாளுச் சோறு என்பர். சில ரொம்பவும் வசதிக் குறை வானவர்களின் திருமணங்களின்போது, இந்தச் சாளுச் சோற்றுக்காகப் பறையர்களுக்கும், கவுண்டர்களுக்கும் பெரிய சண்டை மூளுவதும் உண்டு. அப்பொழுதெல்லாம் பறையர்கள், "எங்களை நீங்கள் அடிச்சாலும், புடிச்சாலும் என்னைக்கும் வேண்டான்னு ஒதுக்கிட முடியாதுங்களே! சுடுகாட்டுக்குப் போயி அடக்கமாகறதுக்கு முன்னாடி நாங்க "வாய்க்கரிசி வாங்கினாத்தானே அது நடக்கும்?" என்று தங்களது நீக்கமறாத பந்தத்தையும், உரிமையையும் நீட்டி விளக்கம் செய்வார்கள். அவர்களும் சாவுக் காலங்களில் அவர்களின் தேவையை முன் னிட்டுப் பேசாமல் அவர்களுடன் சமரசம் செய்து கொள்வர்.

விடியற்காலையில் மாப்பிள்ளை வீட்டார் மாப்பிள்ளைக் கோலத்துடன் பறைமேளம் அதிர, கொம்பு எக்காளமிட, உறுமி முழங்க மாட்டு வண்டியில் வந்து இறங்கினர். பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு வெற்றிலை கொடுத்து எதிர் கொண்டழைத்து வந்து மாப்பிள்ளைக்கு என ஒதுக்கிய வீட்டில் விட்டனர்.

பெண்ணுக்குச் செய்ய வேண்டிய அலங்காரங்கள் எல்லாம் செய்வித்து, மாமன் முன் நடக்க, நாட்டுக்கல்லுக்கு அழைத்துச் சென்று ஆரத்தி எடுத்துவிட்டு, மணவறைக்குக் கூட்டி வந்தனர். அதற்கு முன்னரே மாப்பிள்ளைத் தோழன் மாப்பிள்ளையின் இரு தோள்களையும் பிடித்து முட்டுக்கட்டை கொடுத்து நிற்க

மாப்பிள்ளைக்கு அடுத்து மணப்பெண் அமரும் ஆசனத்தில் பெண்ணுக்கு மச்சான் முறை ஆகக்கூடியவன் அமர்ந்திருந்தான்.

திருமணத்தை முன்னின்று நடத்தி வைக்கும் அருமைக்காரர் "கொழுந்திப் பணத்துக்கு உரிமையுள்ளவங்க வாங்க" என்று கூப்பிட்டார். யாரும் வரவில்லை. அமர்ந்திருப்பவரைத் தவிர வேறு ஒருவரும் உரிமை கொண்டாடுவதற்கில்லை போலிருக் கிறது.

பெண் மணவறைக்கு வந்தாய்விட்டது. கொழுந்திப் பணத் துக்கு வந்தவர் மட்டும் எழுந்திருக்கவில்லை. அருமைக்காரர் இரண்டு ரூபாயை வெற்றிலையில் வைத்துக் கொடுத்தார். அப்பொழுதும் எழுந்திருக்கவில்லை. மீண்டும் மூன்று ரூபாயை வைத்துக் கொடுத்தார். பெண்ணின் மச்சான் உடனே எழுந்து, மணப்பெண் அமர்வதற்கு இடம் கொடுத்தான். ஒரு குடும்பத்தில் மூத்த மாப்பிள்ளைகளாக இருப்பவர்களுக்கு அடுத்து இருக்கும் திருமணமாகாத பெண்ணின்மீது சொல்லாமல் உறுதியாக்கப் பட்டிருக்கும் உரிமையை விட்டுக் கொடுக்கச் செய்யக் கொடுக்கப்படும் தட்சணைதானோ கொழுந்திப் பண்ம் என்பது?

கெட்டிமேளம் அதிர, பறைமேளம் முழங்க மணமகளுக்கு மணமகன் தாலி கட்டினான். நாவிதன், அருமைக்காரன் காலில் விழுந்து வணங்கி, அருமைக்காரன் வெற்றிலையில் வைத்துக் கொடுத்த அட்சதையை மங்கள வாழ்த்தின் ஒவ்வொரு அடியை யும் கூறி முடிக்கும்பொழுது 'டும்' என்று எழும் கெட்டி மேளத்தின் ஒற்றையடிக்கு லயம் கூட்டுவது போல் எடுத்து மணமக்கள் மீது தூவினான்.

மணவறையில் பூதக்களம் என்று கூறும் பொங்கல் சோற்று உருண்டையில் குழி செய்து, விளக்கெண்ணெய் ஊற்றித் தீபம் போட்டதினால் எழுந்த ஒரு வகை மணமும், ஊதுபத்தி, சாம்பிராணி முதலியவைகளின் வாசனையும், பல்வேறுபட்ட மனித உடல்களின், உடைகளின் நெடியும், பந்தலின்மேல் போடப்பட்டிருந்த வேப்பிலைக் கொத்தின் வாடையும் கலந்த ஒரு கதம்ப மணம் மனதைப் புல்லரிக்கச் செய்தது.

திருமணச் சடங்குகளை முடித்து மணமக்களை மணவறையி னின்றும் எழுப்பி மாப்பிள்ளையின் வலது கை சுண்டு விரலை யும், பெண்ணின் இடது கை சுண்டுவிரலையும் இணைத்துவிட்டு மணவறையைச் சுற்றிவரச் செய்து வீட்டினுள் அழைத்துச் சென்றுவிட்டனர். இருவரின் இதயங்களுள் பேச முடியாமல் அழுந்திக் கிடக்கும் விஷயங்களெல்லாம் இருவர் கை நரம்பு

களில் துடிக்கும் துடிப்பின் மூலம் ஒன்றுக்கொன்று ரகசியத் தூது அனுப்பிக்கொண்டன.

காலை உணவு முடிந்து மதிய உணவு நேரம் வந்து விட்டது. அருமைக்காரிச்சி காவி, வெள்ளை, நிறக் கறை கட்டிய நவதானியங்கள் கொண்ட கரகப் பானைக்கு பூசை செய்து மணப்பெண்ணுக்கு செஞ்சேறு சுற்றித் தண்ணீர் ஊற்றித் துணி சுற்றிய அரிவாளை மணமகள் கையில் கொடுத்து நிறைபானைச் சோற்றை அரிவாளால் மணமகன் இலையில் தள்ள வைத்து இருவரையும் சேர்ந்து அமர்ந்து சாப்பிட வைத்த பின்னர் தான் விருந்தினர்களுக்கு உணவிடுவது வழக்கம்.

குழந்தைகளோ அதற்குள் பசியால் துவண்டு கூச்சலிட்டன. தாயார்கள் அவர்களுக்கு உணவூட்ட முயற்சித்தனர். அப்பொழுது சிலர், "கரகப்பானை எறக்கிப் பொண்ணுக்குத் தண்ணி ஊத்தாமல் யாருக்கும் சோறு போடப்படாது" என்றனர்.

குழந்தைகளின் பெற்றோர்கள் தாய்மையுணர்வின் கவலை தொனிக்க, "கொளந்தைகளுக்குக் கூடவா சாங்கியம்?" என்றனர்.

"ஆமா, அதுக்கு மட்டும் எச்சில் இல்லியா?" என்றாள் பழமைப் போக்கில் தளரா நம்பிக்கையுள்ள ஒருவள்.

"பல் வுழுந்த கொளந்தைக்குத் தானே எச்சில்?" என்றான் அதற்கும் பதில் சொல்லும் முறையாக ஒருவன்.

அவளால் இதற்குப் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை. பல் விழாத குழந்தை தெய்வத்துக்குச் சமம். அதனால் அதனுடைய எச்சில் தெய்வத்துக்குப் பங்கம் விளைவிக்காது என்பது வழக்கு. அவள் இப்பொழுது சொல்வது நியாயம்தான். அதை யாரும் மறுக்க முடியாதுதான்.

அவள் என்ன சொல்வது என்று புரியாமல் பேசாதிருந்தாள். இதை ஒருபக்கம் இருந்து கவனித்துவந்த கோமாளிக் கிழவர், "யாருடா சொன்னது கொளந்தைகளுக்கு, கரகப்பானைக்கு பூஜை செய்யாமே சோறு போடப்படாதுன்னு? புத்திக்குத் தெரிஞ்சும், தெரியாதமாரி ஒரு காரியம் செய்யறது தான் பாவம். நமக்குத் தெரியுது கரகப் பானைக்குப் பூஜையிடாமெ சோறு திங்கப்படாதுன்னு. நாம தின்னால் பாவம், கொளந்தைக்குப் பல்லு விழுந்தாலும் விழாட்டியும் அதன் பலாபலன் தெரியுமா? அதுவரையிலும் அதுகள் கொளத்தைகளே, அதுக சாப்பிடலாம்" என்று ஒரு பிரசங்கமே பொழிந்து தள்ளிவிட்டார்.

இனி யார் தடை சொல்லிவிட முடியும்?

குழந்தைகளுக்கெல்லாம் உணவு பரிமாறப்பட்டது.

பறைமேளம் முழங்க கரகப்பானைக்குப் பூசை முடிக்கப்பட்டது. மணப்பெண்ணும் தண்ணீர் ஊற்றிக்கொண்டு மாப்பிள்ளைக்கு உணவு படைத்தாள். பிறகு முறைப்படி உறவினர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது.

சிலர், 'சோறு நன்றாக வேகவில்லை' என்றனர். சிலர், 'குழம்புக்கு உப்பு போதவில்லை' என்றனர். இப்படிப் பலர் பலவாறாகச் சொல்லிக்கொண்டு, சாப்பிட்டு முடித்தனர்.

மாரப்பனுடைய காதில் இதெல்லாம் விழுந்தது. 'பத்துப்பேர் சாப்பிடும்பொழுது பத்து விதமாகத்தான் சொல்வார்கள். வீட்டுச் சாப்பாடா அவர்களுக்குத் தெரிந்து செய்ய' என்று எண்ணிக்கொண்டு பேசாதிருந்தான். அப்பொழுது சாப்பிட்டு விட்டு ஒரு பக்கம் அமர்ந்திருந்த மாப்பிள்ளையின் மாமன் பெரியண்ணன், மாரப்பன் காதில் விழும் வண்ணம் பக்கத்தில் இருந்தவனிடம், 'பருப்பில்லாமெ பண்ணற கண்ணாலம் ஒரு கண்ணாலமா? அதுக்குக்கூடவா வழியில்லாமெ போயிடுச்சு?' என்று விருந்தில் பருப்பில்லாத குறையை - தான் இரண்டு மூன்று முறை நடந்து பெண் கேட்டதையும் மறந்து ஏதோ ஒரு கோரிக்கைக்கு இப்பொழுதே மனதைத் தயார்ப்படுத்திக் கொண்டு கேட்க முனைவதுபோல ஆரம்பித்தான்.

மாரப்பனுக்கு இந்தப் பேச்சு அவமானத்தை ஊட்டியது; கல்யாணத்துக்கு வந்திருந்தவர்கள் யாராவது சொல்லியிருந்தால், அதில் கோபமோ, வருத்தமோ பட அவசியமில்லை. மாப்பிள்ளைக்குத் தந்தையின் ஸ்தானத்தில் இருந்து எல்லாம் செய்த மாமனே இப்படிச் சொல்வதென்றால்..... அவன் மனம் துடித்தது, பதைத்தது. அதற்குப் பதில் சொல்லாமல் இருப்பது அவன் சுய கௌரவத்துக்கே இழுக்கு.

“என்ன மச்சா! தெரிஞ்சுதாம் பேசறையா, தெரியாமெ பேசறையா? பருப்பும் கத்தரிக்காயும் சேர்த்து சாம்பார் வச்சிட்ட அப்பறம் பருப்புப் போடற வழக்கமுண்டா? புளிக்கொளம்பு வச்சிருந்தாத்தான் பருப்புப் போடணும்” என்று வந்த ஆத்திரத்தில் மடமடவென்று பேசிவிட்டு, கோபத்தில் தவறியும் ஏதாவது விபரீதமான வார்த்தைகள் வந்து விடுமோ என்று பயந்து, யோசிப்பவன் போல் சற்று நிதானித்து, “நம்ம ஒரம்பறையே நம்மக் கேவலப்படுத்தறது” என்று பொங்கி வந்த கண்ணீரை வெளிக்காட்ட விரும்பாமல் குனிந்து மூக்கைச் சிந்துபவன் போல் புறங்கையால் கண்களைத் துடைத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டான்.

பெரியண்ணன் எதையோ ஒன்றை மனதில் நினைத்து விட்டான். இந்த சின்னக்காரியத்துக்கெல்லாம் இப்படிப் பிடித்துக் கட்டிப்பேச வேண்டியதொன்றுமில்லை. அப்படி யிருந்தாலும் சொந்த சம்பந்தியாக இருந்தால் கொஞ்சமாகிலும் பின்னால் ஏற்படும் விளைவுகளைச் சிந்தித்துப் பார்ப்பான். அவனுக்கு எதைப் பற்றியும் கவலையில்லை.

ஒரு புதிய தலைமுறையின் இணைப்புக்கு வழிகோலும் முதல் நாள் தொடக்கத்திலேயே, இப்படி அவசியம் இல்லாத ஒன்றை ஏன் கிளப்ப வேண்டும்? களங்கமில்லாது ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள தூய நெஞ்சோடு முனைவதற்கு முன்னால், அதில் நஞ்சைக் கலக்க வேண்டுமென்று ஏன் முயல வேண்டும்? ஒருக்கால் திருமணப் பந்தலில் தனக்குத் தனி மரியாதை கொடுத்துத் தனியொரு இடத்தில் அமர வைத்து விசேச விருந்து படைக்கவில்லை என்ற கோபமாயிருக்குமோ?

நல்லவேளை இந்த விவாதத்தை யாரும் கவனிக்கவில்லை. ஒன்று; யாராவது, பெண்ணொருத்தி கவனித்திருந்தால் அது விஷயமாகக் காதும் மூக்கும் வைத்துவிடப்பட்டிருக்கும்.

பொழுது நகர்ந்து கொண்டிருந்தது. ஏகாலி, கீழே உட்காருவதற்கு விரிப்பாகச் சேலையை விரித்து விட்டான். கோமாளிக் கிழவர், "வண்ணான் மாற்றில்" அமர்ந்து நாவித னிடம் 'பெண்ணுக்குச் சீர் வைக்கிறார்கள்' என்று எல்லோரை யும் கூப்பிடும்படி கூறினார். வெளியில் அமர்ந்திருந்த உறவினர்கள் எல்லோரும் உள்ளே வந்து சேர்ந்தனர்.

கோமாளிக் கிழவர் மாப்பிள்ளை வீட்டாரைப் பார்த்து "பொண்ணுக்கான பணம் எவ்வளவு வைக்கறீங்க?" என்று கேட்டார்.

"இருபத்தஞ்சு" என்று கூறிப் பணத்தை எடுத்துக் கிழவரிடம் கொடுத்தான் பெரியண்ணன்.

"பொண்ணூட்டுக்காரங்க?" என்றார் கிழவர்.

"அம்பது" என்று கூறி பெண்வீட்டார் சார்பில் ஒருவன் கொடுத்தான். கோமாளிக் கிழவர் இருவர் பணத்தையும் சேர்த்து மஞ்சள் துணியில் முடித்துப் பெண்ணிடம் கொடுத்துக் கும்பிடு வாங்கிக் கொண்டார்.

உடனே பெண்ணையும், மாப்பிள்ளையையும் பிள்ளையார் கோவிலுக்கு அழைத்துச் சென்று கும்பிட்டு விட்டு வந்து அமர்ந்தனர். கரவிளங்கப் பணம் கொடுக்க வேண்டும்.

சபையில் அமர்ந்த கோமாளிக் கிழவர் தமாசாக "மாப்பிள்ளையூடும், பொண்ணூடும் பணம் நெறையா வெச்சுக் குடுத்தா பொண்ணு மாப்பிள்ளைக்கு ஒதவும். என்னடான்னா வைக்கற பணம் ஒரு நல்ல சீலைக்குப் பத்தாதாட்ட இருக்கு' தென்று கூறிவிட்டு 'கரவிளங்க மாப்பிள்ளையூட்டுக்காரங்க எவ்வளவு வைக்கறீங்க?" என்றார்.

பெரியண்ணன் ரூபாய் ஐம்பது எடுத்துக் கொடுத்தான்.

"பொண்ணூட்டுக்காரங்க?" என்றார்.

பெண் வீட்டின் சார்பில் நூறு ரூபாய் கொடுக்கப்பட்டது. நூறு ரூபாய் என்றதும் பெரியண்ணனுக்குக் கோபம் நிலை கொள்ளவில்லை. மாப்பிள்ளைக்கென்ன அவ்வளவு ஐவீஸ் இல்லையா? தகப்பன் இல்லாத பையன் என்று பக்கத்தில் ஆதரவும், ஒத்தாசையுமாக இருப்பார்கள் என்றால் இப்படியா எடுத்த எடுப்பிலேயே பத்தும் அம்பதுமாகக் கொடுத்து கௌரவத்தைக் கெடுப்பது? இத்தனைக்கும் எத்தனை பவுன்கள் பெண்ணுக்கு போட வேண்டும் என்று கூடக் கேட்கப்படவில்லையே.

"நூறு ரூபாயெல்லாம் வேண்டாம், அதிகம் வைக்கணும்" என்றான் பெரியண்ணன்.

மாரப்பனுக்கு இப்பேச்சு எதிர்பாராத அதிர்ச்சியைக் கொடுத்தது. இப்படிக் கேட்பான் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை. இப்படியொரு எண்ணத்தை மனதில் வைத்திருந்து சபையில் மூக்கறுப்பான் என்று எண்ணவும் இல்லை.

"பரவாயில்லெ, அவ்வளவுதான்" என்றான் மாரப்பன். எந்தவிதச் சலனத்தையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் மாரப்பன் கூறியது பெரியண்ணன் செவியில் நுழைந்ததாகவே தெரியவில்லை. அவனுக்கு நுழைய வேண்டுமெனும் அவசியம் தான் என்ன?

இந்தப் பிச்சக் காசுக்குத்தா உன்னூட்டுலே பொண்ணுக்கட்ட வந்தமா? எந்தத் தொடுப்பும் இல்லாத ஒத்தப் பையனுள்ள ஊடு-நீ, நான்னு பொண்ணுக் கொடுக்க வந்தாங்க. இப்பச் பேசி என்ன பண்ணறது?" என்றான், சிந்தித்து முடிந்த விஷயத்தைக் கூறுபவன் போல.

இருந்தாலும் பெரியண்ணனுக்கு இவ்வளவு வாய்த்துடுக்கு இருக்கக் கூடாது. பெண் பார்த்துக் கேட்கும்போதே எல்லாவற்றையும் பேசி முடித்திருக்க வேண்டும். அப்படித்தான் என்ன,

மாப்பிள்ளை மட்டும் பெரிய பணக்காரனா? மாரப்பனாவது தன் மகளை இளம் பிராயத்திலேயே கட்டிக் கொடுத்து விட்டான். மாப்பிள்ளையின் அக்காளுக்கு இருபத்து அஞ்சு வயது வரையிலும் மாப்பிள்ளை கிடைக்காமல் கஷ்டப்பட்டு மணம் முடித்தார்கள். ஒன்றும் பெரிதாகக் கொட்டிக் கொடுத்து விடவில்லை. இதையாவது எண்ணிப் பார்க்க வேண்டாமா?

"உங்களுக்கு அது பிச்சக் காசா இருக்கலாம். எங்களுக்கு அதுதா பொளைப்பு" என்றான்.

"பொம்பள மாதிரி வெக்கமில்லாமெ பேசாதே. பணம் சேத்திக் குடுத்தாக்குடு, இல்லாட்டி வேண்டாம்' என்றான் பெரியண்ணன்.

விஷயத்தை முற்றவைத்து கந்தர்கோலம் செய்யாமல் போவ தில்லை என்ற முடிவோடு இருப்பவன்போல் காணப்பட்டான் பெரியண்ணன். எதையும், எப்படி பேசவும் தயாராயிருந்தான்.

"பெத்தவனுக்குத்தான் மானம் மரியாதெ தெரியும். வெக்கத்துக்கு அஞ்சுவான். உனக்கு மாப்பிளெ கெட்டா என்னா? பொண்ணு கெட்டா என்ன?" என்றான் மாரப்பன்.

"வாயெ அடக்கிப் பேசு! கட்டுவாரத்துக் கெடந்த உம்மவளெ நானிருந்து கட்டிவைக்க ஏற்பாடு செஞ்சே. நீ என்னடான்னா இப்பொ எனக்குப் பங்கம் பேசறே" என்றான் பெரியண்ணன்.

ஒரு தாய் எதையும் தாங்கிக் கொள்வாள். தான் பெற்று வளர்த்த பெண் கட்டுவாரற்றுக் கிடக்கிறாள் என்று பிறர் சொல்வதை மட்டும் ஏற்றுக்கொள்ள மாட்டாள். அப்படி ஏதாவது அந்தப் பெண் மொண்டியா, மூக்கரையா! பாட்டுக்கு வீங்கிச் சோகை பிடித்த சோம்பறியா? அவிசேரி போனவளா, அவர்கள் இன்னும் ஒரு வருடம் கழித்தல்லவா திருமணம் முடிக்கலாம் எனும் நினைவோடு இருந்தார்கள். பின் ஏன் அவன் அவ்வாறு சொன்னான்?

அங்கிருந்த எல்லோரும் இந்த வார்த்தையைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போயிட்டனர். இந்த வார்த்தை அபவாதமானது. வேண்டுமென்றே சொல்வது. எத்தனையோ மாப்பிள்ளைகள் வந்து போயினர். விரும்பியிருந்தால் எப்பொழுதோ திருமணம் முடிந்திருக்கும். ஒருநாளும் வீட்டில் அந்தப் பெண் சும்மா இருந்தது கிடையாது. அப்படியிருந்தாலும் மாரக்காள் அவள் காதில் விரலை விட்டுக் குடைந்து விடுவாள். புலிக்குப் பிறந்தது பூனையாகவா இருக்கும்.

மாரக்காள் சுற்றிநின்ற சூழ்நிலைகளை எல்லாம் மறந்தாள். கண்களில் தணல் கக்க, முகம் சிவந்து புருவங்களும் உதடுகளும் துடிக்க உடல் பதைபதைத்தாள். மீன்கொத்திப் பறவை நீரின் மேற்பரப்பில் பாய்வதுபோல் அவள் நெஞ்சில் ஆக்ரோசமும் வேதனையும் பாய்ந்து தாக்கின.

"டேய்! நாக்கெ அடக்கிப் பேசு. வெளக்குமாத்துக் கட்டையை எடுத்து நெறவிடுவே நெறவி, அட சண்டாளா! ஒரு பொண்ணு பொளப்பக் கெடுக்கலான்னு எத்தனை நாளு தவமிருந்தே?" என்று நெருப்பில் போட்ட மிளகாயைப் போலப் பொரிந்தாள். அவளுடைய பேச்சின் காட்டம் மிளகாய்க் கமறலைப் போல அவன் நெஞ்சையும், அடுத்தவரின் நெஞ்சையும் அறுத்தது.

ஒரு ஆண் அப்படிப் பேசியிருந்தாலும் பரவாயில்லை. ஒரு பெண் - அதுவும் பத்துப்பேர் உள்ள சபையில் - அப்படிப் பேசலாமா? பெரியவர்களின் கோபதாபம், வறட்டு கௌரவம் புதிய மலர்களைக் கருக்கித் தீய்த்துவிடும் போலல்லவா இருக்கிறது!

"நீ இதுக்குப் பதில் சொல்லாமே பொண்ணக் கூட்டிப் போவப் போறதில்லெ. என்ன திமிர் இருக்க வேணும் உனக்கு?" என்றான் அவமானமும், தோல்வியும் கலந்த குரலில் பெரியண்ணன்.

"எம்பொண்ணு கட்டுவாரத்துக் கெடந்ததுன்னு சொன்னியே அதுக்கு மொதல்லே பதில் சொல்லு! அப்பறம் நாஞ் சொல்றே. பெத்த வவுறு பதறுதடா பெத்த வவுறு பதறுது! தாலி கட்டுன அன்னைக்கே அறுத்துப்போற பொண்ணு எத்தனை பேரு ஒலகத்திலே? அப்படி எம் பொண்ணுக்கும் ஆச்சின்னு நெனுச்சுக்கிறே. அதுந் தலையெழுத்து அவ்வளவு தான்" என்ற நெஞ்சில் அடித்துக்கொண்டு கதறினாள்.

இந்த நிகழ்வுகளை எல்லாம் கவனித்த மணப்பெண்ணுக்கு எப்படியிருக்கும்? அவள் வாழ்வையல்லவோ பகடைக் காயாக்குகிறார்கள்! அவள் நேர்மைக்கல்லவா களங்கம் கற்பிக்க முயலுகிறார்கள்! கொண்டல் வளைந்து நிற்கும் சோளத்தட்டு மாதிரி தலை தாழ்த்திக் கண்ணீர் விட்டாள். நெஞ்சு விண்டு சிதறுவது போல் துக்கத்தையெல்லாம் அடக்கித் தேம்பித் தேம்பி அழுதாள்.

கூடி நின்ற பெண்களெல்லாம் மணப்பெண்ணைப் பார்த்துக் கண்கலங்கினர். சப்தமில்லாமல் கண்ணீர் சொரிந்தனர். அவர்

களுக்கும் இப்படிப்பட்டதொரு அனுபவம் நேர்ந்திருக்கலா மல்லவா? அவர்களும் ஒரு காலத்தில் மணவறையில் நின்று தாலி கட்டிக்கொண்டு இப்படிப்பட்ட வாக்குவாத சம்பவங்களையும் பார்த்து மனம் விண்டு புலம்பியிருக்கக் கூடுமல்லவா?

"பழனியம்மா! அழாதையாயா, இப்ப என்ன வந்துட்டுது?" என்று வயது சென்ற கிழவிகள் ஆறுதல் கூறினர்.

இந்தக் காட்சிகளைப் பார்த்து நின்ற மாப்பிள்ளை சுப்பனின் கண்களும் கசிந்தன. அவன் மனம் இத்தனை குழப்பத்துக்கும் மத்தியில் பழனியம்மாளை ஏற்றுக்கொண்டு விட்டதோ?

மாரப்பனுக்கு இருந்த எல்லா நம்பிக்கைகளும் இற்றுப்போன பழந்துணிபோல பிசுபிசுத்துக் கொண்டிருந்தன. நெஞ்சில் மட்டும் வடவாக்கினிபோல கோபமும், எழுச்சியும் கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருந்தன. கீழே குனிந்து உட்கார்ந்தவன் கால் பெருவிரல் நகத்தை விரல்களால் கிள்ளி உரித்துக் கொண்டே இருந்தான். சதையுடன் நகத்தைப் பிய்த்ததில் ரத்தமும் கசிந்து கொண்டிருந்தது.

என்ன நினைத்தானோ திடீரென்று எழுந்தவன் மனைவி மாரக்காளின் கொண்டையைப் பிடித்து வளைத்து குனிய வைத்து முதுகில் குத்து குத்துவென்று குத்தினான். அருகில் இருந்தவர்கள் எல்லாரும் சேர்ந்து அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தனர். அப்பொழுதும் குறுக்கிட்ட இரண்டொரு வர்களுக்கு அந்தக் குத்துத் தவறி விழுந்து விட்டது.

மாரக்காள் இத்தனைக்கும் அழுதிருக்க வேண்டுமே - கத்தியிருக்க வேண்டுமே - அதுதான் இல்லை! சித்தப்பிரமை பிடித்தவள் போல வெறித்தது வெறித்தபடி நின்றிருந்தாள்.

கோமாளிக் கிழவர், இந்தச் சூழ்நிலையை எப்படியாவது மாற்ற வேண்டுமென்று எண்ணினார். இதை வளரவிட்டால் பெரிய விபரீதமாக வந்து முடியலாம் என்று அஞ்சினார்.

கூட்டத்தை அமைதிப்படுத்தி விட்டு பெரியண்ணனைப் பார்த்து, "என்ன பெரியண்ணா? பருப்புஞ் சோறு தின்னு நிச்சயார்த்தம் பண்ணும்போது காவளங்க, பொண்ணுக்காங்க இவ்வளவு பணந்தா குடுக்கோனுன்னு பேசினியா" என்றார் கோமாளிக் கிழவர்.

"கேக்கலே மதுப்பறிஞ்சி நடந்துக்குவாங்கன்னு நெனச்சே" என்றான் பெரியண்ணன்.

"அப்படின்னா அவங்க சக்திக்குப் பிரகாரம் பேசுவதற்கு வழியில்லை. சற்று நேரம் பேசாமல் நிலத்தைக் கீறிக் கொண் டிருந்துவிட்டு "பொம்பளை அப்படிக் கேக்கலாமா?" என்றான் கோபத்தோடு.

"அது தப்புத்தா. ஆனா நீ பொண்ணப்பத்தி அப்படிப் பேசியிருக்கப்படாது." என்றார் கிழவர்.

"அப்படி என்ன நானு தப்புத்தண்டாவா சொல்லிவிட்டே?" கிழவர் மீண்டும் விஷயத்திற்குப் போக விரும்பவில்லை - அப்படிச் சென்றால், மீண்டும் விட்ட இடத்திற்கே விஷயம் வளர்ந்து சென்றுவிடும்.

"நடந்ததெ மறந்திடுங்கோ. உக்காந்த வேளெ சரியில்லெ" என்று காலத்தின் மீது சுமையை இறக்கி வைத்தார் கிழவர்.

பெரியண்ணன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டவன் போல மாப்பிள்ளையின் முகத்தைப் பார்த்தான். அவன் அவனின் விஷமத்தனமான பார்வைக்கு ஈடு கொடுக்க மாட்டாமல் கீழே குனிந்து கொண்டுவிட்டான். அவனும் தந்தையில்லாமலேயே நினைவு தெரிந்ததிலிருந்து பண்ணையம் பார்த்து இந்த உலகத்தின் நெளிவு சுளிவையெல்லாம் அறிந்து வைத்தவன் தானே?

பெரியண்ணன் திடீர் என்று எழுந்து இடுப்பில் தளர்ந்திருந்த வேட்டியை சரிசெய்து கொண்டு, "என் வேலெ முடிஞ்சுது. நா வாரே" என்று கூறிவிட்டு விடுவிடு என்று வேகமாக வெளியே சென்றான். இரண்டொருவர் சென்று தடுத்தனர். மாப்பிள் ளைப் பையனும் சென்று பரிதாபமாக அவன் முகத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்தான்.

"என் கடமையை நா முடிச்சுட்டே இன்னமே நீ புத்தியாய் பொளச்சுக்கோ. என்னூட்டுக்குக் கொண்டு போறதுக்காவ நா ஒண்ணும் சண்டை போட்டுக்கலெ" என்று அவனைத் தன் னிழுப்புக்கு வா என்றும் கூறாமல், போ என்றும் சொல்லாமல் குயுக்தியாகப் பேசினான்.

மாப்பிள்ளை சுப்பன் ஒன்றும் பேசாமல் நின்றான். கண்ணீர் மட்டும் கன்னத்தில் வழிந்து சட்டையை நனைத்துக் கொண் டிருந்தது.

"மாப்பளெ அழுவுது பாரு. அதுக்காகிலும் இருந்துட்டுப் போயிடு, இத்தனையும் செஞ்சு பிரயோசனமில்லியே" என்றனர் சமாதானப்படுத்த வந்தவர்கள்.

"நா, என்ன பெரிசாச் செஞ்சுட்டே" என்று கூறி விட்டுத் திரும்பிப் பார்க்காமல், யார் பேச்சையும் கேளாமல் வெளியேறி விட்டான்.

பெரியண்ணன் மனத்தில் இருக்கும் முடிவுதான் என்னவோ? ஒரு முக்கிய விசேஷங்களில் முன்னோடும் பிள்ளையாகச் செயல்படுபவருக்கு தனி மரியாதையும், கௌரவமும் கொடுத்துப் பத்துப் பேர் உள்ள சபையில் அவர்கள் கவனத்தைக் கவர்பவராய் உயர்த்தி வைக்கும் கிராமியப் பழக்கத்தின் சம்பிர தாயத்தைக் கடைபிடிக்கத் தவறியதினால் எழுந்த விளைவு தானோ இது? யார் கண்டது? அதுவுமாக ஏன் இருக்கக் கூடாது?

அதைத் தவிர சச்சரவுக்கான வேறு முகாந்திரங்கள் எதுவும் வெளிப்படையாகத் தெரியவில்லையே!

சுப்பன் எதுவும் பேசாமல் மணப்பந்தலுக்குள் வந்து நின்றான். அவன் இதில் என்னதான் முடிவெடுப்பது? உணர்ச்சிக்குச் சற்று ஆளாகி விட்டால் எதிர்காலக் குடும்ப வாழ்வே கேள்விக் குறியாக அல்லவா மாறிவிடும்!

கிழவர் எடுத்துக் கொடுத்த காவிளங்கும் பணத்தைப் பெற்றுக் கொண்டு பெரியவர்களிடம் நல்லாசியுடன் கும்பிடு பெற்றுக்கொண்டான்.

திருமணச் சம்பிரதாயச் சடங்குகளெல்லாம் முடிவடைந்து விட்டன. இனி பெண்ணைப் பெற்றவள் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் தயிர்சாதம் பிசைந்து ஏந்திய கைகளில் வைக்க, இருவரும் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு மாப்பிள்ளை வீட்டுக்குப் புறப்பட வேண்டியதுதான்.

அன்று வெள்ளிக்கிழமை ஆகவே பொழுதிருக்கப் பெண்ணை வழி அனுப்பி வைக்கமாட்டார்கள். வெள்ளிக்கிழமை ஒரு பொருளை விற்கவோ, பணம் கொடுக்கவோ அனுப்பி வைக்கக் கூடாது என்பது ஐதீகம். அப்படிச் செய்தால் லட்சுமி அந்த வீட்டை விட்டு வெளியேறிவிடுவாளாம். பெண்ணை அனுப்பி வைப்பதன் மூலம் லட்சுமியையும் அந்த வீட்டை விட்டு அனுப்பி வைக்க அவர்கள் விரும்பமாட்டார்கள்.

இது ஒரு பிரச்சனையாக வந்துவிடக் கூடாதென்று கோமாளிக் கிழவர் முன்யோசனையோடு, "இன்னைக்கு வெள்ளிக்கெளமை, பொண்ணைக் கண்கருவ நேரத்துக்குத்தா அனுப்பி வைக்கணும். இது இங்குமட்டும் புதுசில்லே" என்றார்

யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆலோசனைதான்; மறுத்துப் பேசுவதற்கு ஒன்றுமில்லை.

மணமகளின் தாய் மணமக்களுக்குத் தயிர் சாதம் பிசைந்து கொடுத்தாள். இருவரும் வாங்கிச் சாப்பிட்டனர். இத்தனை களேபரத்துக்கும் மத்தியில் மனம் உடைந்து நின்ற மாரக்கா ளுக்கு இந்தக் காட்சி மனத்தை நெகிழ வைத்தது. கண்களில் நீர் பனிக்க உடலைப் புல்லரித்தது. "யார் எப்படிச் சொன்னாலும் இந்த ரண்டும் ஒத்துமையாப் பொளச்சுட்டா அதுவே போதும்" - மனதுக்குள்ளாகவே அவர்களை அவள் வாழ்த்தினாள்.

கண்களுக்கு இரவு நேரம் வந்துவிட்டது. பெற்றோர்களிட மும், உற்றார்களிடமும், பெரியவர்களிடமும் கும்பிடு பெற்று அவள் புறப்படும் நேரம் நெருங்கிவிட்டது. இனி அவள் அந்த வீட்டுக்கு உறவினள்தான். நல்லது கெட்டதுக்கு வந்தால் இரண்டு நாள் தங்கிவிட்டுச் செல்லலாம். முன்னைப்போல் அந்த வீட்டிலுள்ள பொருள்களுக்கெல்லாம் அவள் உரியவள் அல்ல. இது இதுதான் அவளுக்குச் சொந்தமென்று வரையறுக்கப் பட்டுவிட்டது அந்த வீடு, அந்த அடுப்புக்குழி, அவள் இனிமை யாகப் போற்றிய எருமையும் அதன் கன்றும் ஊமைத்தனமாய்ப் புலம்புவதுபோல் அவளுக்கு மானசீகமாய்த் தோன்றியது.

அதோ - அவள் கொட்டைப் போட்ட வேப்பங்கன்று வாச லில் வளர்ந்து பூவும் பிஞ்சுமாக நிற்கிறது. தினமும் அதற்கு அவள் ஒரு குடம் தண்ணீர் ஊற்றுவாள். இனி அதற்கு யார் ஊற்றப் போகிறார்களோ? காற்றில் அசைந்து தழைகளை உதிர்க் கிறது. அவளின் பிரிவு அதற்குக் கூடத் தெரிந்து விட்டதோ? அதனால்தான் தழையை உதிர்த்துத் தன் துக்கத்தை வெளிப் படுத்திக் கொள்கிறதோ?

அவள் நெஞ்செல்லாம் நடுங்கியது. தன் ரத்த சம்பந்தமுடைய ஒருவரை இழந்துவிட்டதுபோல் வேதனை அறுத்தது. முதன் முறையாக அவள் வீட்டை விட்டு - யாரோ? எவரோ? என்று இதுவரையிலும் இருந்து வந்த ஒருவன் வீட்டை நோக்கி அவன் பின்னால் ஆட்டுக்குட்டியைப்போல் மௌனமாக நடந்து செல்லப் போகிறாள்.

செம்மண் வாடை வீசும் அந்தப் புஞ்சைப் பூமியில் தான் அவள் பிறந்து வளர்ந்தாள். நினைவு தெரிந்த நாள் முதல் அந்த மண்ணில்தான் அவள் உழைத்தாள். எத்தனையோ முறை அந்த மண்ணில் வறட்சியையும், வறுமையையும் கண்டிருக்கிறாள். இருந்தும் அந்த மண்ணின் மீது இருந்த பற்றுதலும் பாசமும்

அவளுக்கு நீங்கியதில்லை. இன்று அவள் அந்த மண்ணை மட்டுமா பிரிகிறாள்? இதுவரையிலும் அவள் நேசித்த யாவற்றையும் அல்லவா அவள் பிரியப் போகிறாள்? போகிற இடத்தில் எப்படியிருக்குமோ? மாமியாள் எப்படியோ? தனக்கு வாய்த்த கணவனின் குணம் ஒத்துப் போகும்படியாய் இருக்குமோ? எல்லாவற்றையும் அனுசரித்துப் போகும் குணம் அவர்களுக்கு இருக்குமோ?

ஓர் இடத்தில் தனக்கென்று மனதுக்கிசைந்த சிலதின் மீது நீங்காப் பாசமும், பற்றுதல் கொள்வதும் ஒரு கட்டத்தில் அந்த இடத்திலிருந்து நீங்கி வேறு ஓர் இடத்துக்குச் சென்று மீண்டும் அந்த இடத்தில் தனது மனதுக்கேற்றவற்றின் மீது பிரியங் கொள்வதுமான கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை பெண்கள் சமூகம் ஒன்றுக்குத்தான் சாபத்தீடோ?

மனதில் எதை எதையோ நினைத்தாள். அத்தனைக்கும் விடை காண்பது என்பது இயலாது.

முதல் முறையாகத் தகப்பனிடம் விடைபெறச் சென்றாள். வெற்றிலை பாக்கில் பணத்தை வைத்து மகள் கையில் அவன் கொடுத்தான். அவள் அதைப் பெற்றுக்கொண்டு தந்தையின் கால்களைத் தொட்டுக் கும்பிடக் குனிந்தாள். விழிகளிலிருந்து பெருகிய நீர் தகப்பனின் பாதத்தில் மலர் விழுவது போல் சொட்டியது. அதேபோல், அவள் தலையிலும் ஏதோ உஷ்ண மான ஸ்பரிசச் சொட்டு, அவள் தந்தையும் அவளைப் போலவே அழுகிறானோ?

"மகராசியாய் போயிப் பொளையம்மா உனக்கு ஆண்டவெ ஒரு கொறையும் வைக்கமாட்டான்" என்று மகளின் கூப்பிய இரண்டு கைகளையும் பிடித்து வாழ்த்தினான். அவன் கைகள் நடுங்கின. வார்த்தைகள் குழறின.

மகளின் எதிர்கால வாழ்வை எண்ணிக் குமுறினானா? இல்லை பிரிவின் துயர் தாங்க முடியாது துடித்தானா?

இரண்டாவதாகத் தாயிடம் விடைபெறச் சென்றாள். கொடுத்த வெற்றிலை பாக்கையும் பணத்தையும் பெற்றுக் கொண்டு தாயின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டாள். முன் போலவே அவள் கண்ணீர் தாயின் கால்களையும் ஸ்பரிசித்தது "பதினாறும் பெற்று மவராசியாப் பொளையம்மா!" என்று வாழ்த்தினாள். அவள் கண்களிலிருந்து நீர் வரவில்லை, அழ வேண்டியதையெல்லாம் முன்கூட்டியே அழுது தீர்த்து விட்டாளோ?

பெண்ணும் மாப்பிள்ளையும் எல்லோரிடமும் கும்பிடு வாங்கி முடிந்து விட்டது. கடைசி முறையாக வீட்டினுள் ஏற்றப்பட்டிருந்த எண்ணெய்த் தீபத்தின் முன் நின்று வணங்கி விடைபெற்றனர்.

பொண்ணும் மாப்பிள்ளையும் வண்டியில் ஏறி அமர்ந்தனர். வண்டி புறப்பட்டுவிட்டது.

மாரப்பனும், மாரக்காளும் நீர்த்திரை கண்களை மறைக்கும் வரை பார்த்துக்கொண்டே நின்றனர்.

## 12

இளவேனிற் கால காலை நேரம், பகற்பொழுதின் கடுமையான பூமி வெப்பமும், விடியற்காலையின் லேசான குளிர்வாடையும் சேர்ந்து உடலைத் தளரச் செய்யும் இறுக்கமான ஒரு சிலிர்ப்பை - அல்லது கதகதப்பை ஊட்டியது. அணில்கள் மூச்சு விடாமல் கூரை முகட்டிலும், தரத்திலும் குதித்தோடிக் கத்திக் கொண் டிருந்தன. ஒரு பெட்டைக் கோழி தன் கால்களால் தரையைப் பறித்துக் கிளறிய, கரையான்களைக் குஞ்சுகளுக்குக் கொடுக்க அவற்றைக் கேவியழைத்துக் கொண்டிருந்தது. கூரைச் சிட்டுக் கள் மண் புழுதியில் படுத்து சிறகையடித்துப் புரண்டன. காக்கைகள் - பெண்கள் விளக்குவதற்காக வாசலில் கொண்டு வந்து வைத்திருந்த சட்டி பானைகளை உருட்டிக் கொண்டிருந் தன. அவற்றைப் பார்த்த நாய் ஒன்று விரட்டி - பறந்து சென்ற அவைகளைப் பிடிப்பதற்காகத் தாவித் தாவிக் குதித்துக் கொண்டு ஓடியது.

மடி கனக்கப் பால் சுரந்த எருமைமாடு பண்ணைக்காரிச் சியைப் பால் கறக்க வருமாறு அழைப்பதுபோலக் கத்தியது. மாரக்காளும் பால் கறப்பதற்காக மடி கழுவுவதற்குச் சோடு போகணியில் தண்ணீரும் பால் காம்புகளுக்குப் பதங்கொடுப்ப தற்காக மொச்சைப் பருப்பு அளவு வெண்ணையும் எடுத்துக் கொண்டு கட்டுத்தரைக்குச் சென்றாள். பால்சுரக்க வைப்பதற் காகக் கன்றுக்குட்டியை அவிழ்த்துவிடச் சென்றாள். காலை நீட்டிப் பரப்பிப் படுத்திருந்த அது எழுந்திருக்கவில்லை. கையால் தட்டி உசுப்பிப் புரட்டினாள். அப்பொழுதும் எழுந்திருக்க வில்லை. ஆனால், அதற்கு உயிர் இருக்கிறது என்பதை வெப்ப மான அதன் உடலும் மூச்சுவிடுவதினால் எழுந்து தாழும் வயிறும் உறுதிப்படுத்தின.

“திமிரப் பாரே.... எழுந்திருக்க மாட்டேங்குது” என்றபடி. முளைக்குச்சியில் இருந்து அவிழ்த்த கயிற்றை எடுத்து அதன் முதுகில் லேசாகத் தட்டினாள். தலையைச் சற்று தூக்கிப் பார்த்து விட்டுப் படுத்துக் கொண்டு விட்டது.

மீண்டும் அதைப் புரட்டி எழுப்பிப் பார்த்தாள். எழுந்திருக்க வில்லை. மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்க லேசாக நடுங்கிக் கொண்டிருக்கிறது. உடலில் சாதாரண நிலையைவிட வெப்பம் அதிகமாயிருந்தது.

இப்பொழுதுதான் அவளுக்குப் புரிந்தது - கன்றுக்குட்டிக்கு ஏதோ நோய் தட்டியிருக்கிறதென்று.

முத்தம்மாளைக் கூப்பிட்டு, "உங்கண்ணே தோட்டத்திலே இருக்குது. கன்னுக்குட்டிக்கு என்னமோ நோவுதாக்கி பாலூட்ட மாட்டேன்னு காலப்பரப்பிக்கிட்டுக் கெடக்கறதாவச் சொல்லிக் கூட்டியா" என்று அனுப்பிவிட்டு எருமை மாட்டைக் கொண்டு வந்து கன்றுக்குட்டிக்கு முன்னால் கட்டிவைத்து மடிக்குத் தண்ணீர் அடித்துப் பால் கறக்கப் பால் காம்புகளுக்கு வெண்ணெயைத் தடவினாள். எருமை உதைத்துக் கொண்டு விலகிச் சென்று விட்டது. எவ்வளவோ தந்திரங்கள் செய்தும் பால் கறக்க முடியவில்லை. கன்றுக்காக வேண்டிப் பாலை அடக்கி வைத்துக்கொண்டு விட்டது போலும்.

இன்றைய பால் போய்விட்டதே என்ற கவலையில் சோறு போகணியைக் கொண்டு போய் வீட்டில் வைத்து விட்டு வந்தாள் மாரக்காள்.

எருமை மாடு கன்றுக்குட்டியை நக்கிக்கொண்டு நின்றது. அதன் பார்வையில் இனங் காணமுடியாத சோகச்சாயல் ரேகை கீறிவிட்டிருந்தது. மடியிலிருந்து, பால் சுரந்து சொட்டுச் சொட்டாகத் தரையில் விழுந்த வண்ணமாயிருந்தது. மண்ணில் சுவரிய பாலில், ஈக்களும், எறும்புகளும் மொய்த்துக் கொண் டிருந்தன.

தோட்டத்திலிருந்து - படபடப்பும், ஆவலும் நிறைந்தவனாக வந்த மாரப்பன், "கன்னுக்குட்டிக்கு என்ன பண்ணுது?" என்று கன்றுக்குட்டியண்டை வந்து அதை எடுத்து நிறுத்தினான். கன்றுக்குட்டி நடுங்கிக்கொண்டு சலைவாய் ஒழுகத் துவண்டு போய் மாரப்பனின் கைத்தாங்கலில் நின்றது.

"ராத்திரி நல்லாதானே பாலூட்டிக்கிட்டு நின்னுது!" என்றான் மாரப்பன்.

"ஆமா, நாந்தானே பாலூட்டுன பின்னாலே கட்டிப்புட்டு வந்தேன்" என்றாள் மாரக்காள்.

"சரி இரு; நான் போயி கோமாளி மாமனெ கூட்டிக்கிட்டு வாரேன்" என்று மாரப்பன் கூறிவிட்டுப் புறப்பட்டான்.

அந்த எருமைக் கன்று நல்ல முறையில் ஈனுவதற்காக அவர்கள் எத்தனை தெய்வங்களுக்கு வேண்டியிருப்பார்கள்? அந்தக் கன்றைப் போல உருச்செய்து வைப்பதாக எத்தனை முறை உறுதி எடுத்திருப்பார்கள்? அந்தக் கன்றை ஒரு குழந்தையைப் போலல்லவா பழனியம்மாள் வளர்த்தாள்? அது கிடாரிக் கன்றாக இருந்து விட்டால் வளர்த்துப் பலன்பட்டவுடன் மகள் பழனியம்மாளுக்கு 'ஆச்சி' கொடுத்து விட வேண்டும் என்றல்லவா அவளுடைய திருமணத்துக்கு முன்னாடியே திட்டங்கள் போட்டு வைத்திருந்தார்கள்?

"மனுசருதா தெரிஞ்சும் தெரியாமே போறாங்கன்னா, தெய்வத்துக்குக் கூடவா கண்ணவிஞ்சு போச்சு? நாங்க யாரு சொத்தெ அகீர் பகீர்னு அடிச்சுப் புடுங்கியாந்தோம்! மண்ணெத் தின்னுக்கிட்டு மாபாடுபட்டுச் சம்பாரிச்சதல்லவா இந்தச் சொத்து," என்று வேதனையும் உருக்கமும் தொனிக்கத் தனக்குத்தானே கூறிக்கொண்டாள். வெட்டுப் பட்ட சதுரக் கள்ளியிலிருந்து பால் சொட்டுவது போல அவள் கண்ணிலிருந்து கண்ணீர் வடிந்தது.

கன்றுக்குட்டியின் கண்களில் அண்டியிருந்த பீளையைச் சுற்றி ஈக்களும் கொசுக்களும் சூழ்ந்து அரித்தன. எந்த விதப் பிரக்ஞையும் இன்றி அது படுத்துக் கிடந்தது. இதைப் பார்த்த இவள் மனது பேதலித்துப் பொருமியது. முன்றானைத் தலைப்பால் விசிறி ஈக்களை விரட்டிவிட்டுப் பீளையைத் துடைத்துச் சுத்தம் செய்தாள்.

ரோமக் கால்கள் சிலிர்த்து நடுங்கின. மூச்சுக் குழல்கள் அடைக்கப்பட்டது போல் முக்கி முனகிக்கொண்டு மூச்சு வாங்கியது. சில நேரங்களில் வேதனையால் அழுவது போல அணத்தியது. அதற்கு வாய்பேசத் தெரிந்திருந்தால் என்னென்ன சொல்லியிருக்குமோ? எப்படியெல்லாம் முறையிட்டிருக்குமோ?

சலைவாய் வடிந்து வடிந்து வாய்க்குக் கீழ் பூமி மண் நனைந்து சேறாடிக் கிடந்தது. எறும்புகள் சுற்றிலும் மொய்த்துக் கிடந்தன. கன்றின் தலையை மாரக்காள் தூக்கிக் கையிலேந்தி மண்ணைத் துடைத்து விட்டு மடியில் வைத்துக் கொண்டாள்.

அதன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. அவளின் வாஞ்சைமிக்க பணிவிடைக்காக மனங்கசிந்து உருகுகிறதோ? தனது உடல் உபாதையைப் பொறுக்க முடியாமல் கண்ணீர் சிந்துகிறதோ?

அதன் ஆசன வாயை நக்கிக் கொண்டிருந்த தாய் எருமை "அம்மா" என்று நெஞ்சு வெடிக்கும் படியாகக் குரலெடுத்தது.

இப்பொழுது அதுவும் பூரணமாகப் புரிந்து கொண்டு விட்டதோ?

மாரப்பனும் கோமாளிக் கிழவனும் வந்து சேர்ந்தனர். கன்றுக் குட்டியைத் தூக்கி நிறுத்திப் பார்த்துக் கிழவர் சற்று நேரம் நோட்டம் விட்டார். கீழுதட்டைக் கடித்துக் கடித்து - புருவங் களை நெறித்துச் சுருக்கிப் பார்வையைக் கன்றின் மீது சற்று நிலைகுத்திப் பார்த்துவிட்டு "ஒரு விதத்தில் பார்த்தா முட்ட டப்பா மாதிரித் தோணுது. இன்னொரு விதத்திலே பணுப்பு மாதிரியும் தெரியுது. இந்த நோவத் தீக்கறதுன்னா சந்தேகந்தான்" என்று கூறி மாரப்பனின் முகத்தைப் பார்த்தார். பரபரப்பும் பீதியும் கொண்ட அவன் முகம் வெளிறித் துவண்டது. கை, கால், நரம்புகள் கடின உழைப்பில் ஈடுபட்டவனுடையதைப் போலச் சோர்ந்து குலைந்து நடுங்கின.

"மாமா! நீங்கதா அதெ எப்படியும் காப்பாத்தணும். அது போச்சுன்னா எருமையிலே பாலு பீச்சமுடியாது. அய்நூறு அறுநூறு ரூவா மொதலு வீணாப் போயிடும்." என்று குரல் கரகரக்க - தொண்டை அடைக்கக் கூறினான்.

"ஏதோ எனக்குத் தெரிஞ்ச மருந்தெக் குடுக்கறே. என்னாலே போச்சுன்னு சொல்லிடாதே. வேறே யாராவது கெட்டிக்காரப் பண்டுதரா எங்காவது இருந்தாப் பாரு. இது உசிரோட சமாசாரம்" என்று அனுதாபம் மிக்க குரலில் கிழவர் கூறினார்.

"இது ஒண்ணரை வருசத்துக் கறவையப்பா. பொசுக்குன்னு கெட்ட வழியாப் போயிட்டா அப்புறம் பாலு கறக்க முடியாதே! கன்னுப்போட்டு நாலஞ்சு மாசந்தானே ஆவுது?' என்று முகத்தில் கைவைத்துக் கொண்டு 'கோ' வெனக் கதறினாள் மாரக்காள்.

அந்தக் குடும்பத்தைப் பற்றிக் கிழவருக்குத் தெரியாததல்ல. மிகவும் நலிந்த குடும்பம், வாய்க்கும் கைக்குமே போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து ஒரு வருடம் மழை பொய்த்துவிட்டால் அந்தக் குடும்பம் பஞ்சாய்ப் பறக்க வேண்டும். இப்படியொரு நஷ்டம் நிகழ்ந்து விட்டால் அந்தக் குடும்பத்திற்குத் தாங்கக் கூடிய சக்தி இல்லை.

"என்னோட கன்னுக்குட்டி மாதிரிப் பாக்கறேம்பா. ஆனாலும் எனக்குத் தெரிஞ்ச மருந்திலே இது கொணமாகும்னு என்னாலே உறுதி சொல்ல முடியாதுன்னு சொல்லறே" என்று கிழவர் மேலும் மனமுருகக் கூறினார்.

கிழவர், வீட்டுக்குச் சென்று மரப்பட்டைகளும் இலைகளும் கொண்டு இடித்துத் தான் செய்த மாவை மோர்விட்டுப் பிசைந்து உருண்டை பிடித்துக் கன்றுக் குட்டியின் வாயைப் பிளந்து போட்டுவிட்டு, "என்னாலே முடிஞ்சது இவ்வளவு தான்" என்று கூறிப் போய்விட்டார்.

பொழுது உச்சிக்கு நகர்ந்து கொண்டிருந்தது. மாரப்பனும் மாரக்காளும் இன்னும் காலை உணவு உட்கொள்ளவில்லை. கந்தனும் முத்தம்மாளும் மாட்டை ஓட்டிக் கொண்டு தோட் டத்துக்குப் போய் விட்டார்கள்.

எருமைக் கன்றுக்கு நோய் என்று கேள்விப்பட்டதுமே கிராமத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவராக வந்து பார்த்து விட்டுப் போனார்கள். கிராமாந்திரங்களிலுள்ள மனித உறவுகளின் பிணைப்புகளும் பந்தங்களும் இதனால்தான் மிகக் சிக்கலானதாகவும், மிகப் புரிய முடியாததாகவும் இருக்கிறதோ!

சூரியன் அடிச்சாய்ந்துவிட்டான். கன்றுக்குட்டி, மேலும் நம்பிக்கை இழக்கக் கூடிய முறையில் சோர்ந்துவிட்டது. இதைப் பார்த்த ஒருவன் எதுக்கும் மாட்டாசுப்பத்திரி டாக்டரைப் பாத்து வாரது நல்லது. என் மாமனாரு வூட்டுலே ஒரு பசுமாட்டுக்கு இப்படித்தா இருந்தது. டாக்டரைக் கூட்டியாந்து ஊசிபோட நல்லாப் போச்சு" என்றான்.

பக்கத்திலிருந்த வேறொருவன் "சும்மா வந்தா ஊசி போட்டுப் போனான்?" என்றான்.

அவன் அருவருப்புக் கலந்த புன்னகையை உதிர்த்தவாறு இந்தக் காலத்திலே சர்க்காரு ஆபீசுத் திண்ணையிலே உட்கார்ந் திருந்தாக் கூட அது காசு கேக்குது; ராக்டரு மட்டும் சும்மா வருவானா? நாப்பது ரூவா குடுத்தாங்க" என்றான்.

"டாக்டரைத்தான் கூட்டிவந்து பார்க்கலாமா? என்று - பிறர் சொல்வதைக் கேட்டு யோசித்த மாரப்பன், பணம் என்றவுடன் அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டான். இருபது ரூபாய் மதிப்புள்ள கன்றுக்குட்டிக்கு நாற்பது ரூபாய் செலவு செய்ய அவன் என்ன குபேரனா!

பின்னால், இருநூறு முந்நூறு என்று அதனுடைய மதிப்பு உயருமென்றாலும் இப்பொழுது அதற்குச் செலவழிக்கத் தாக்குப் பிடிக்கணுமே! அண்மையில்தான் கடனும் உடனுமாக மகளுக்குக் கல்யாணம் பண்ணி முடித்தான். மகளுக்கு வைக்கும் சீர் சிறப்புகளில் பத்து இருபது ரூபாய்க்குக் கூட அவன் வறுமை நிலை காரணமாக புதிய வாழ்க்கை உறவை மகளுக்கு

ஏற்படுத்துவதில் சிறிது விரிசலையும் கீறலையும் - அவன் தன் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு எதிர்ப்பட வேண்டியிருந்ததே! அப்படியானால், டாக்டர் வந்தால் நிச்சயம் உயிர் பிழைக்கு மென்றால்கூட - அவனால் அது சாத்தியமல்ல; அவன் ஏற்கனவே கடன் தழும்பு பட்டு விட்டவன்.

ஒருக்கால் இப்படிப்பட்ட வறுமை நிலையின் காரணமாகத்தான் ஏழை - உழைக்கும் பாமர மக்கள் தங்களுக்கு நேரும் நோய் நொடிகளை, கஷ்டநஷ்டங்களைத் தீர்க்கும் பொறுப்புகளைக் கடவுள் மீதும், சாமி மீதும் போட்டுவிடு கிறார்களோ? பூசாரி, ஜோசியன் பொறுப்புக்கு ஒப்படைத்து விடுகிறார்களோ? ஒரு விதத்தில் டாக்டரை அணுகுவதைவிட, இவர்களை அணுகுவதற்கு நாலு வழி தெரிந்த முன்னோடும் பிள்ளையின் தயவு வேண்டியதில்லை என்பதாகவும் இருக்கலா மல்லவா?

அப்பொழுது அங்கிருந்த பெரியவர் ஒருவர் "என்னடா இன்னைக்குப் போயி புதுசா ஆசுப்பத்திரி வந்திடுச்சு! எல்லாம் காசப் புடுச்ச சனியந்தா. இவ்வளவு நாளா மாடு கன்னுக்கு நோவு நொடி வரல்லே? தீருலே! இது ஏதோ சாமித்தீட்டு போலி ருக்குது. கன்னுக்குட்டியை எடுத்துக்கிட்டுப் போயிக் காளியாயி கோயில்லே வேண்டிக்கிட்டு அங்கேயே வாசலிலே போட் டுட்டு வந்துடு. நல்லாவுதா இல்லையான்னு பாரு" என்றார்.

அப்பொழுது அங்கிருந்த வேறொருவன், "எந்த நோயாயிருந் தாலும் குப்பம்பாளையத்திலே ஒரு வைத்தியக்காரே இருக் கிறான். என்னமோ ஒரு பச்சிலைச் சாறைக் கசக்கித்தா காதிலே மூணு வேளே ஊத்தறான். எந்த நோவும் பஞ்சாப் பறந்து போயிடுது" என்றான்.

அவன் சொல்லி முடிந்ததும் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் என்ன பதில் அதற்குச் சொல்லப் போகிறார்கள் என்பதற்குக் கூட காத்திராதவன் போல, அங்கு வந்திருந்த ஒரு அயலூருக்காரன், "எங் கன்னுக்குட்டிகூட அப்படித்தா இருந்தது. சுக்காம்பட்டி கொண்டாஞ் சக்கலி, பாடம் போடறதிலே கெட்டிக்காரன்னு சொன்னாங்க. போயிக் கூட்டியாந்து ஒரு வேளதா பாடம் போட்டே, நோவு இருந்த எடம் தெரியாமெ பஞ்சாப் பறந்திட்டுது" என்றான்.

இப்படி அங்கு வந்த பலரும் பலவிதமாகச் சொல்லி விட்டுப் போகின்றனர். அவனும், பச்சிலை, பாடம் என்றெல்லாம் பார்த்து விட்டான் - ஒன்றும் கைகொடுக்கவில்லை.

கடைசியாக ஒரு வைத்தியன் வந்து, "இது ஒரு வகை முட்டடைப்பான்" என்றுக் கூறிக் கன்றைப் படுக்க வைத்து அதன் நெஞ்சுக்குச் சூடேற்ற நெருப்பு மூட்டுமாறு கூறினான்.

இனி, அது பிழைப்பது என்பது சம்பா நெல், சித்திரை வைகாசி மாதங்களில் பூட்டை வாங்குவது போலத்தான். எப்படியோ ஒரு வழி செய்யட்டும் என்று நம்பிக்கை இழந்தவனாக ஓரிடத்தில் சென்று வெயிலில் துவண்ட கீரைத் தண்டு போலத் தலையைத் தொங்கப் போட்டு அமர்ந்து விட்டான். அங்கிருந்தவர்கள் கன்றுக்குட்டியின் நெஞ்சுப் பக்கம் சருகுகளைக் கொண்டு வந்து நெருப்பு மூட்டிச் சூடேற்றினார்கள். இரண்டு பேரை - வால் பக்கம் ஒருவரையும் தலைப்பக்கம் ஒருவரையுமாக - பிடித்துக் கன்றுக் குட்டியை இழுக்கச் சொல்லி வைத்தியன் அதன் நெஞ்சுப் பகுதியில் தனது குதிகாலால் தன் பலம் கொண்ட மட்டும் உதைத்தான்.

கன்றுக் குட்டியோ, பலவீனமிக்க உடலிலிருந்து மூச்சு விட முடியாமல், உதையை வாங்கிக் கொண்டு அணத்திக் கொண்டு பெருமூச்சு விட்டது. வைத்தியன் பக்கத்தில் இருப்பவர்களிடம் "பார்த்தீங்களா, நெஞ்சிலே மூச்சடச்சுக் கிட்டதாலதா இவ்வளவு கஷ்டமும், இப்ப ஓதைக்க ஓதைக்க மூச்சு எப்படி வருது பாரு?" என்று வால்பக்கமும் தலைப் பக்கமும் இழுத்துப் பிடித்துக்கொண்டிருந்தவர்களை மேலும் பலமாக இழுத்துப் பிடிக்கும்படி கூறிவிட்டு, ஓங்கி நெஞ்சில் உதைத்தான்.

கன்றுக்குட்டி உதைப்பின் உபாதை பொறுக்க முடியாமல் துள்ளித் திமிறி எழுந்தது. அதன் கண்கள் பிரகாசமிக்க ஒளிச் சுடரைச் சிந்தின

"பாத்திங்களா, அசையாமெ படுத்துக் கெடந்த கண்ணுக் குட்டி துள்ளித் திமிறுது பாரு. முட்டடைப்பான் அப்படித்தான் செய்யும்" என்று தனது வைத்தியம் வெற்றியளிக்கப் போகிறது என்ற பெரும் நம்பிக்கையில் 'இழுத்துப் பிடியுங்கோ' என்று கூறியவனாக மீண்டும் அதன் நெஞ்சில் உதை கொடுத்தான்.

அந்தோ பாவம்! சாவதற்குத்தான் அது அப்படித் துள்ளியதோ! அடுத்த வினாடியே அது தன் கண்கள் செருக கால்களை நீட்டிப் பரப்பியபடி உயிரை விட்டு விட்டது.

வைத்தியனுக்கு முகத்தில் ஈ ஆடவில்லை. பிரேதக்களை தட்டி விட்டதுபோல் முகம் வெளுத்துவிட்டது. அவன் அதன் நெஞ்சில் உதைத்துக் கொண்டிருக்கும் பொழுதே அது செத்து விட்டதென்றால், அவனுக்கு எப்படி இருக்கும்? அதற்கு ஏதாவது ஒரு சமாதானம் கூற வேண்டாமா?

'நோவு தட்டின அப்பவே இந்த மாதிரி செஞ்சிருந்தம்னா தப்பிச்சிருக்கும், நோவு முத்திப்போச்சு' என்று கூறி விட்டு "அதுக்கு அவ்வளவுதா ஆயுசு" என்று புறப்பட்டு விட்டான்.

பொருளை இழந்த துக்கமும், விரக்தியும் தொனிக்க, "அவன் மட்டும் என்ன ரண்டாவது ஈசுவரனா? அதனோட தலச்சுளிப்பு என்னமோ அவ்வளவுதா. காத்துக்கு ஒதுக்குப் படலுவைக்க றாப்பலே நாம் ஏதோ மனசு கேக்காமெ செய்யறதுதா இதெல்லாம்" என்றான் மாரப்பன்.

அவன் மனது மட்டும் புத்திர பாசத்தில் தாக்குண்டவனுடை யதைப்போல் விம்மி விம்மி வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது.

ஒரு வாரமாகக் கன்றுக்குட்டிக்காக வைத்தியனிடம் அலைந்த அலைச்சல், இரவு பகல் பார்க்காமல் விழித்திருந்து அதற்குச் செய்த பணிவிடை - எல்லாம் பாழாய்ப் போய்விட்டன. அவன் தன் சக்திக்கு அதிகமாகவே கஷ்டப்பட்டான்.

இனி எப்படி எருமை மாட்டில் பால் கறப்பது? ஒரு வாரமாக முயற்சி செய்தும் கன்றுக்குட்டியில்லாமல் பால் கொடுக்க இணங்கவில்லை. ஆட்டுக்குட்டியை கூடக் கொண்டு வந்து பால்சுரக்க வைப்பதற்காக ஊட்டுக்கு விடப்பட்டது. அப்பொழு தும் இணங்க வைக்க முடியவில்லை. பின்னங்கால்கள் இரண் டையும் தளைந்து, முன்னங்கால் ஒன்றை மடித்து மொண்டி கட்டிப் பால் கறந்து பார்த்தார்கள் - எதற்கும் அது இணங்க வில்லை.

இனி, அது பால் கறக்கிற கதையாய்த் தெரியவில்லை. ஒரு வாரமாகப் பால் கறக்காமல் இருந்துவிட்ட பின்னரா இனி கறக்கப்போகிறது.

மாரக்காள் நெஞ்சிலும் தலையிலும் அடித்துக் கொண்டு கதறினாள். இரண்டு நஷ்டமல்லவா வந்து சேர்ந்து விட்டது? ஒன்று கன்றுக்குட்டியின் இழப்பு; இரண்டாவது எருமை பால் கறக்க முடியாமல் போனது.

ஊரிலுள்ளவர்களும், சுற்றத்தார்களும் வந்து துக்கம் விசாரித்துவிட்டுப் போனார்கள். பழனியம்மாளும், சுப்பனும், வந்து சேர்ந்தார்கள். மகள் தாயையும், தகப்பனையும் பார்த்த வுடன் 'கோ' வென்று கதறினாள்.

தகப்பனுக்கும் மகளைப் பார்த்தவுடன் துக்கம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. வேதனை தாளாமல் கண்களைக் கைகளால் பொத்திக் கொண்டான். ஊஞ்சை மரப்பட்டைகளுக்

கிடையே தெரியும் பிசின் போல அவன் விரல்களுக்கிடையே கண்ணீர் முத்துக்கள் துளிர்த்து ஒளி வீசிக்கொண்டிருந்தன.

அவள், தன் கல்யாணம் முடிந்து புருஷன் வீடு செல்லுமுன் அந்தக் கன்றை எவ்வளவு அருமையாக நேசித்து வளர்த்தாள்? வரப்புகளில் உள்ள அருகம்புல்லைப் பிடுங்கி மடியில் வைத்துக் கொண்டு குழந்தைக்கு ஊட்டுவதுபோலல்லவா ஊட்டினாள்?

வெளியிலிருந்து வந்தவர்களுக்குக்கூட இந்தச் சோகக் காட்சி கண்களில் நீரை வரவழைத்து விட்டது. அவர்களுக்கு ஆறுதல் கூறும் முறையில் வந்தவர்கள், "என்ன செய்யறது? நாம பார்த்து செஞ்சுக்கற வெசயமா? ஆளுக்கு ஆளா வளத்தின பையங்கூடப் போயிடறான். இதுக்கென்ன? காசு போட்டா இன்னொன்று வந்துடுது?" என்றார்கள்.

"ஏழைக்குப் பிள்ளை போறதுகூட அவ்வளவு கவலையில்லெ. மாடுகன்னுப் போறதுதா கவலை. பிள்ளை குட்டி போறதாலே காசு நட்டமில்லெ. மாடு கன்னுப் போறதுன்னா காசல்ல நட்டம்? அதெ ஏழை சம்பாதிக்கறதுன்னா அவ்வளவு சுலப மில்லையே?" என்று நிராசையுடனும், பரிதாபத்துடனும் தன் ஆதங்கத்தைக் கொட்டினாள் மாரக்காள்.

கன்றுக்குட்டியை எடுத்துச் சென்று குழிதோண்டிப் புதைத்து விட்டனர். கன்றுக்குட்டியை எடுத்துச் சென்றதிலிருந்து தாய் எருமை தலைக்கயிற்றை அறுத்துக்கொண்டு செல்ல விரும்புவது போல் முளைக்குச்சியைச் சுற்றி வட்டமிட்டபடி, "அம்மா" என்று இதயம் வெடிக்கும்படியாகக் குரலெடுத்து விட்டு மாரக்காளைப் பரிதாபமாகப் பார்க்கும்.

எல்லோரும் எழுந்து வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். அவள் மட்டும் சித்தப்பிரமை பிடித்தவள் போலத் தரையில் கால்கள் இரண்டையும் நீட்டிவிட்டு வலது முழங்கையைத் தொடை மீது ஊன்றி கன்னத்துக்குக் குத்துப் பாய்ச்சி அமர்ந் திருந்தாள். இப்பொழுது அவள் கண்களிலிருந்து கண்ணீர் வடியவில்லை. அழுது அழுது வற்றிப்போன கண்ணீருக்குப் பதிலாக இனி ரத்தத்தைத்தான் கண்ணீராக வடிக்க வேண்டும் என்பது போல வெள்ளை விழிப்பகுதி முழுவதும் சிவந்து ரத்தநாளங்கள் கீறலோடியிருந்தன. அப்பொழுது அந்தப் பக்கமாகத் திடீரென்று ஓடிவந்த ஒரு நாய், அவசர அவசரமாகக் காலைத் தூக்கி அவள் முதுகு மீது மூத்திரம் பாய்ச்சிவிட்டு எருமையைப் பார்த்துக் குரைத்துக் கொண்டு ஓடியது.

## 13

**பு**திய சூழ்நிலைகளைக் கொண்ட புதியதோர் இடத்துக்குப் பழனியம்மாள் சென்றுவிட்டாள். வயது வந்த பிறகு இப்படித் தனியாக எங்குமே அவள் போய்த் தங்கியதில்லை. தன்னை யொத்த பெண்களும், தனக்கு மூத்தவர்களும் திருமணமாகிக் கணவன் வீடு செல்லும்பொழுதெல்லாம் - "எப்படிப் போயி ஆயி அப்பனெ வுட்டுட்டு இருக்கிறது? என்னாலே முடியாது சாமி" என்று மற்றவர்களிடம் அவள் கூறியிருக்கிறாள். அப்படிப் பட்டவளுக்குத்தான் இப்படியொரு சோதனை வந்திருக்கிறது.

தாய் தகப்பனைப் பிரிந்து புறப்படும் பொழுதுகூட, "நான் இங்கேதான் இருக்கப்போறேன்" என்று கூற நினைத்தாள். அவள் நெஞ்சில் எத்தனையோ விதமான பாச உணர்ச்சிகளின் இறுகலான சலனங்கள் கொந்தளித்துக் குமுறத்தான் செய்தன.

ஆனாலும் பெண்ணாய்ப் பிறந்து விட்டவர்கள் என்றிருந்தாலும் புகழோடும், பெருமையோடும் வாழ வேண்டிய இடம் கணவன் வீடுதான் என்றும் அவள் பிறர் கூற அறிந்திருந்தாள்.

அவள் தன் புதிய வாழ்வை எண்ணிப் பார்த்தாள். இப்படி அவள் இதற்கு முன்னர் எண்ணிப் பார்த்தது கிடையாது. இனி அவள் ஒரு வீட்டுக்கு அரசியல்லவா? ஒருவனுக்கு - உலகறியச் சொந்தமாக்கப்பட்டுவிட்டாள் அல்லவா? என்றுமில்லாத படிக்கு அவளை அதிகாரம் செய்யவும் ஆட்சி புரியவும் ஒருவன் வந்துவிட்டானல்லவா?

அவளுடைய உலகம் எப்படியிருக்குமோ? எல்லாருக்கும் ஒருவருடையதைப் போலவே ஒருவருக்கு அமைந்துவிடாது. ஒவ்வொருவருடையதும் ஒவ்வொரு தனியுலகம். வெவ்வேறு பட்ட மன நிலைகளும், உணர்ச்சிதாபங்களும் குடிகொண்டது. அதற்கு ஏற்றாற்போல அந்த உலகத்தில் புகுபவர்கள் தங்களை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். அதற்கொரு விதி இப்படிப்பட்டதுதான் என்று கிடையாது. அப்படி அமைந்து

விடவும் முடியாது. அந்த உலகத்தில் வாழுகின்ற அந்த இரு ஜீவன்களும் தங்களுக்கென்று நிர்ணயித்துக் கொள்வதுதான் வழி. அது தப்பாகவும் இருக்கலாம். அல்லது சரியாகவும் இருக்கலாம். அது அவர்களின் உணர்ச்சிமயமான உணர்வுகளையும் வளர்ச்சியையும் பொறுத்தது. ஒருக்கால் காலப்போக்கில் அனுபவம் நிறைந்த வாழ்க்கைத் தழும்பு அவர்களுக்குப் பாடமாக அமையலாம்.

தனது எதிர்கால வாழ்வையும், பெற்றோர்களையும் எண்ணிப் பார்த்தாள். அவள் தாயும் தன்னைப் போல்தானே ஒரு காலத்தில் எண்ணியிருக்க வேண்டும். ஊரும் உலகும் அவளுக்குச் சுமத்திய ஒரு மகத்தான பொறுப்பை ஏற்று ஒருவனுடன் வாழ்ந்துதானே தன்னையெல்லாம் பெற்று வளர்த்தாள்? அவர்கள் இருவரும் தாங்கள் சமூகத்தின் முன் ஏற்றுக்கொண்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக எத்தனைக் கஷ்டப்பட்டார்கள்? படுகிறார்கள்? அவர்களின் உலகத்தில் மட்டும் கொந்தளிப்புகளும் குமுறல்களும் இல்லாமலா போய் விட்டன! இருந்தாலும், அவர்கள் இருவரும் எதற்கோ ஒன்றுக்குக் கட்டுப்பட்டவர்களாய் எல்லாவற்றையும் ஏற்று உழைத்தார்கள்; உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் அவளைப் போல் ஒரு காலத்தில் இருந்தவர்கள்தானே?

இதுநாள்வரைக்கும் அவளுடைய தேவைகளை போக்குகளை அனுசரித்துப் பெற்றோர்கள் - எவ்வளவு கஷ்டநஷ்டங்கள் ஏற்பட்டாலும் மௌனமாகச் சகித்துக் கொண்டு பூர்த்தி செய்து வந்தார்கள். அவளும் வளர் கிடாய்க் குட்டிப் போலப் பொறுப்பில்லாதவளாக வாழ்ந்து வந்தாள். போகிற இடத்தில் எப்படியிருக்குமோ? அல்லது பொறுப்புகள் பங்கிடப்பட்டு சம பங்காளிகளாக உழவு மாட்டைப் போல் இணைந்து செல்லும்படி இருக்குமோ? அல்லது எல்லாம் மறுக்கப்பட்டு ஒரு அடிமை போல - ஒரு விலங்கைப் போல ஊமையாய் இருக்க வேண்டி வருமோ?

இருவரும் ஒருவரையொருவர் ஏற்கெனவே புரிந்து கொள்ளாத புதிய பங்காளிகள். வாழையடி வாழையாகச் சமுதாயம் ஏற்றுக் கொண்ட ஒரு சம்பிரதாயத்தை அடியொற்றி ஒரு நம்பிக்கையின் பேரில் அவர்கள் பிணைக்கப்படுகிறார்கள். அந்தப் பிணைப்பின் வலிவறாத இறுக்கமும் பிடிப்பும் ஆணின் அந்தரங்க சுத்தியிலும் ஆளுகையிலும்தான் இருக்கின்றன. இவன் பார்த்து அந்த பந்தங்களை வலுவடையவும் வைக்கலாம்.

வலுவிழந்து சின்னாபின்னப்படுத்தவும் செய்யலாம். அப்படி யானால், ஒரு பெண்ணின் எதிர்காலமும் நம்பிக்கைகளும் மனோராஜ்யங்களும் ஆணின் விருப்பத்தைப் பொறுத்துத்தான் நிர்ணயிக்கப்படுகின்றனவா? நிறைவேற்றப்படுகின்றனவா?

அப்படியானால், அவன்தான் அவளுக்குச் சகலமும், அவனை நம்பித்தான் பெற்றோர்கள் அவளை இத்தனை வருஷங்களாக வளர்த்து வாழ்வித்து, புத்திரப் பாசத்தின் பிரிவையும் தாங்கி அவளை அவன் பின்னால் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய பந்தத்தில் சிறு விரிசல் கண்டால்கூட - அவளுக்கு மட்டுமல்ல - அவளைப் பெற்ற இரு ஜீவன்களின் மனத் தடாகத்திலும் பெரும்புயல் வீச நேரிட்டு விடும்.

அவள் விருப்பு வெறுப்புகளைக் கோபதாபங்களை அவன் அனுசரித்துப் போக வேண்டும் என்பதில்லை. ஆனால், அவனை அனுசரித்துப் போவதில்தான் அவளுடைய எதிர்காலமே இருக்கிறது. அதை அவள் ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வருவாள். ஆனால் அன்று திருமணத்தின்போது நடந்த சீர்வரிசைச் சிக்கல்களை அவன் மனதில் நினைத்துக் கொண்டு - அல்லது அவனுடைய உறவினர்களின் தூண்டுதலின் பேரில் முனைந்து நின்ற - அவன் ஏதாவது பாச உணர்வுகளை ஆரம் பத்திலேயே காயப்படுத்தும்படி நேர்ந்து விட்டால் .... அப்படி முடியாதென்று யார்தான் அறுதியிட்டுக் கூறிவிட முடியும்?

ஒருவனுக்கு ஒருத்தி உரிமையாகு முன்பே இதையெல்லாம் அவள் அவனிடம் கேட்டுவிட வேண்டும்! "எப்பொழுதுமே ஆணுடையதைப் போல் பெண்ணுடைய உணர்வுகளும் மதிக்கப்படுமா?"

அவர்களும் அதைக் கேட்கவே விரும்புவர். ஆனாலும் ஒரு தரப்பின் சம்மதம் இல்லாமலேயே சமூகச் சம்பிரதாயமென்னும் கொறடாவினால் அவர்களுடைய உணர்வெழுச்சிகள் பூராவும் நசுக்கப்பட்டு விடுகின்றனவே! இது என்றைக்குமே நீடிக்கக்கூடிய ஒன்றுதானா? அல்லது இதை எதிர்க்கும் குரல்களும் எழப் போகின்றனவா?

எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். எதையும் அவள் தாங்கிக் கொள்வாள். அவன் நிழலில் மட்டும் தங்குவதற்கு மூச்சு நிற்கும்வரை இடம்கொடுத்து விட்டால் போதும்.

சமூகத்தில் உரிமையற்ற ஒரு பெண்ணின் மகத்தான குறிக்கோள்களும், ஆசைகளும் இதுதான் போலும்.

எல்லாவற்றையும் ஒருசேர எண்ணிப் பார்த்தவளாய் கால்கள் இரண்டையும் நீட்டி குண்டாவிலிருந்த அரிசியைக் கல்நீக்கி உலையில் போடுவதற்குத் தொடைமீது வைத்து அரித்தெடுக்க அமர்ந்தவள், எந்த அசைவும் இன்றி, பேசாமல் குண்டாவில் கைவிட்டபடி சிலைபோல் இருந்தாள். கண்கருக்கும் நேரத்தில் வீட்டில் அணைவதற்காக வந்த கோழி திண்ணை மீதிருந்த வெற்றுக்கூடை மீது தாவி ஏற அது கீழே பொத்தென்று விழுந்தது. எந்த வெளித்தாக்குதலும் இல்லாத ஆழ்ந்த சிந்தனா லோகத்தில் லயித்திருந்த பழனியம்மாளை இந்தச் சத்தம் சுய சிந்தனைக்குக் கொண்டுவந்தது.

அரிசியை அரித்து உலையில் போட்டுவிட்டுக் கத்திரிக்காய்க் குழம்பிற்காக அம்மியிலிட்டுச் சாந்து அரைத்தாள். சோறு வடித்துக் குழம்புவைத்து முடிவதற்கும் தோட்டத்திலிருந்து அவள் கணவன் சுப்பனும், மாமியாள் கருப்பாயியும் வருவதற்கும் சரியாயிருந்தது.

வீட்டுக்கு வந்த முதல்நாளே சமையல் வேலையை மாமியாள் மருமகளிடம் ஒப்படைத்து விட்டாள், "இனி எனக்கு ஒரு வாய் சோறு போட்டால் போதும் எல்லாம் உங்கள் பண்ணைதான்" என்று கூறவும் ஆரம்பித்து விட்டாள்.

இது அவள் மருமகளின் ஆழம் - நீளம் பார்க்கும் பாவனையோ? அல்லது யதார்த்தமாகவே அவர்கள் கையில் பொறுப்பை ஒப்படைத்து விட்டு நிம்மதியாக அவர்கள் வழியில் குறுக்கிடாமல் இருக்கவேண்டுமென்ற முடிவோ?

அவர்களுக்குக் குழம்பில் காரம், புளி, உப்பு இவைகள் எப்படி இருக்க வேண்டுமென்று அவளுக்குத் தெரியாது. இரண்டொரு நாள் மாமியார், சமையல் வேலையில் இருந்து சமைத்து அவளுக்குப் போட்டிருந்தால் ஒரு விதத்தில் அந்த சுவையி லிருந்து இப்படித்தான் உணவு, குழம்பு வகை இருக்க வேண்டு மென்று ஒரு முடிவுக்கு வரலாம். அப்படியில்லாமல் எடுத்த எடுப்பிலேயே - வீட்டுக்கு வந்த அன்றே - சமையல் வீட்டில் புகுந்து விட்டால் அவர்களின் ருசி பேதத்தை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? ஒருக்கால் மாமியார், ஆரம்பத்திலேயே மருமகள் மீது குற்றங்காண வேண்டுமென்ற நோக்கோடு இப்படி செய்திருப்பாளோ? கணவன் தன் மனைவியைப் பற்றிய முதல் அபிப்பிராயத்தையே நல்ல முறையில் கொள்ளாமல் செய்வ தற்கு வேண்டிய இப்படியொரு தந்திரோபாயத்தைக் கையாண் டிருப்பாளோ?

அவள், தன் திறமையை எல்லாம் பயன்படுத்திக் குழம்பு வகைகளைக் தயார் செய்து வைத்திருந்தாள். எந்தச் சுவையும் மிகாமலும், குறையாமலும் சராசரி விகிதத்தில் செய்திருந்தாள். அவளுக்கோ, குழம்பில் உறைப்பு அதிகம் வேண்டும். தன் கணவன் வீட்டில் அதெல்லாம் மட்டாக உபயோகப்படுத்து பவர்களாக இருந்து விட்டால் என்ன செய்வது என்ற பயத்தில் சராசரி விகிதத்தில் வைத்தாள். முதலில் மாமியாருக்குக் குண்டாவில் சோறு போட்டு வைத்தாள். அவளும் விளக்கு வெளிச்சமில்லாத திண்ணையில் அமர்ந்து சாப்பிட்டு முடித் தாள். சாப்பிட்டானதும் படல் கட்டி மறைப்பு வைத்த அதே திண்ணையில் போடப்பட்டிருந்த பிய்ந்து கொடி கொடியாய்த் தொங்கிய புளிச்சநார் கயிற்றுக்கட்டிலில் இடுப்பில் உருட்டிக் கட்டியிருந்த முந்தானைத் தலைப்பை அவிழ்த்துப் போர்த் தியபடி படுத்தாள்.

தான் அந்த வீட்டுக்கு வந்து முதன்முதலில் செய்த சமை யலைப் பற்றி மாமியார் ஏதாவது அபிப்பிராயம் சொல்லு வாளோ என்று எதிர்பார்த்தாள். அவள் வாயிலிருந்து ஒரு அபிப்பிராயமும் வெளிவரவில்லை. இருந்தாலும் கேட்டுப் பார்த்து விடுவது என்ற முடிவுக்கு வந்தாள்.

“அத்தெ, கொழம்புக்குக் காரம், புளி, உப்பு எல்லாம் சரியா இருக்குதா?” என்றாள் பழனியம்மாள்.

திடீரென்று அவ்வளவு சுலபத்தில் புதிதாக வந்திருக்கும் மருமகளுக்கு நற்சான்றிதழ் வழங்கி விடலாமா? முதல் நாளே பாராட்டி விட்டால் போகப் போக தலைகால் தெரியாமல் அல்லவா நடக்க ஆரம்பித்து விடுவாள்? இந்த வீட்டுக்கு எஜமானி என்கிற அந்தஸ்தைக் காப்பாற்ற வேண்டுமல்லவா?

“கொத்தமல்லிச் சாந்து நல்லா அரச்சிருக்கணும். காயி கொளஞ்சு, ஒடையாமே எறக்கி வச்சிருக்கணும்” என்றாள் மாமியாள். வெளித்தோரணைக்கு தான் அப்படிக் கூறினாளே தவிர, அவள் முழுச் சோற்றையும் அந்த ஒரு குழம்பிலேயே சாப்பிட்டுவிட்டாள்.

இப்பொழுது பழனியம்மாளுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டு விட்டது. குழம்பில் காரத்தைப் பற்றியோ, புளியைப் பற்றியோ உப்பைப் பற்றியோ மாமியாள் ஒன்றும் சொல்லவில்லை. அப்படி யானால் அவள் தேர்ந்தெடுத்த அளவு சரிதான். மாமியாள் கூறுகிற அந்தக் குறைபாடுகள் எல்லாம் வெளிப்பாவனைக்காகத் தான் இருக்கக்கூடும். சந்தனம் போல் கொத்தமல்லியை

அரைத்ததினால் ஏற்பட்ட தோள்பட்டை வலி அவளுக்கல்லவா தெரியும்.

இருந்தாலும் முதல்நாளே மாமியார் வார்த்தைக்கு மறுப்புச் சொல்லலாமா? அதெல்லாம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று அவள் தாயார் முன்கூட்டியே போதித்திருக்கிறாள்.

"நீ பசியோட தோட்டத்திலிருந்து எங்கே வந்திடுவியோன்னு அவசர அவசரமா கொழம்பு வைக்கவேண்டியதாப் போச்சு, அதுனாலதா அந்தக் கொறை" என்று மிகப் பணிவாகவும் அடக்கமாகவும் பதில் கூறினாள்.

மாமியாருக்குச் சந்தோசம் தாள முடியவில்லை. முதல் சோதனையிலேயே மருமகள் தன் பேச்சுக்குக் கட்டுப்பட்டவள் போலப் பணிவான பதில் கூறிவிட்டாள். உண்மையில் அவள் குழம்பைப் பற்றிக் குறை கூறியது வேண்டுமென்றுதான். இருந்தாலும் மருமகள் தர்க்க வாதம் புரியவில்லையே? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போதாதா?

"தோட்டத்திலிருந்து நீ வந்த நேரத்துக்கு பொழுதிருக்கவே சோறு சாறெல்லாம் வச்சிருக்கலாமெ" என்றாள் மாமியார். தன் மருமகளைச் சிறு விஷயத்திற்குக்கூட விமர்சிக்கவும் கண்டிக்கவும் உரிமையுண்டு என்கிற தோரணையில் அந்தக் கேள்வி அமைந்திருந்தது. மருமகள் தன்னிடம் எப்படி நடந்து கொள்வாளோ எப்படி பேசுவாளோ என்றெல்லாம் அஞ்சி அஞ்சிச் சிந்தித்துக் கொண்டிருந்த கருப்பாயிக்கு மருமகளின் முதல் பதிலே அவள் ஆதிக்கம் செலுத்த முடியும் என்கிற "மாமியாள் குணத்தை" சன்னஞ் சன்னமாக அவள் உள்ளத்தில் உருவெடுத்து வளர உசுப்பிவிட்டதுபோல் ஆகிவிட்டது.

"வந்த நேரத்துக்குச் சமையல் வேலை வெளிச்சத்தோடு ஆயிருக்க வேண்டியதுதான், மாட்டுத்தாளிக்கு ஒரு சொட்டுத் தண்ணியில்லே, வூட்டிலே ஒலை வைக்கக்கூடத் தண்ணியில்லே. அதனாலே ஏழெட்டுக் கொடந்தண்ணி மொண்டுவர வேண்டியதாப் போச்சு" என்று மாமியாருக்குத் தெளிவாக்குவது போல் வார்த்தையில் வெடுவெடுப்போ, விகற்பமோ இன்றிப் பொறுப்புணர்வோடு கூறினாள்.

கருப்பாயி குரலெடுத்துக் கொட்டாவி விட்டபடி, "கோழி கூப்புடுற நேரத்துக்கு எந்திரிச்சு வூட்டு வேலையெல்லாம் கவுனிங்க. நேரத்தோடத் தோட்டத்துக்குப் போவணும்" என்று கூறிவிட்டுத் தூக்கம் கண்ணைச் செருகச் செருகத் தூங்க ஆரம்பித்துவிட்டாள்.

சுப்பன் மாட்டுக்குத் தீவனம் போட்டுவிட்டுக் குளித்துச் கொண்டு வீட்டுக்கு வந்தான். பழனியம்மாள் கணவனின் வரவுக்காக உடலில் புதிய ஒருவித அதிர்வும் புளகாங்கிதமும் துள்ள எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். முதன் முதலாகத் தனிமையில் ஒரு வீட்டில் சமூகத்திற்குப் பயப்படவோ, அஞ்சவோ தேவையின்றி ஒரு ஆணின் வரவிற்காகவும், உறவிற்காகவும் அவள் காத்துக் கிடக்கிறாள். உள்ளத்தில் ஒருவிதக் கிலேசமும். அச்சமும் இன்றிச் சுதந்திரமாக ஒரு ஆணைப் பற்றியும் அவனிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் அவள் சிந்தித்துக் கொண்டிருக்கிறாள். உலகம் அவர்களிடத்தில் எவ்வளவோ எதிர்பார்க்கிறது. எதிர்ப்படும் புதிய யுகத்திற்குத் துடிப்பு மிக்க புதிய சக்தியைப் படைத்துத் தருபவர்கள் அவர்கள்தானே!

நடுவீட்டில் உள்ள மாடக்குழியில் விளக்கெண்ணெய் விளக்கு அழுத்தம் மிக்க இருட்போர்வையினுள்ளிருந்து திமிறிக்கொண்டு வெளிச்சம் வருவது போல மங்கலான ஒளி நடுங்கிக் கொண்டிருந்தது. விளக்கெண்ணெய்ச் சுடரிலிருந்து எழுந்த புகை ஒருவித மணத்தைப் பரப்பிக்கொண்டிருந்தது.

திண்ணையில் கருப்பாயினுடைய குறட்டை ஒலி அவளின் ஆழ்ந்த தூக்கத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

சுப்பன் வீட்டினுள் சென்று பழனியம்மாள் சோறு போட்டு வைத்திருந்த கும்பாவின் முன் அமர்ந்தான். அவனும் ஒரு புதிய உணர்வோடுதான் இருந்தான். வயிறு காலியாக இருந்தும் சாப்பிட வேண்டும் என்ற உணர்வே எழவில்லை. அவன் உள்ளமும் உடலும் ஏதோ ஒருவித வேட்கையில் பசியை - சிந்தனைகளை எல்லாம் மழுங்கடிக்கும் ஒருவிதத் தகிப்பில் ஈடுபட்டிருந்தன.

சோற்றை உருட்டி வாயில் போட்டான். ருசி என்பதே என்னவென்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் மனமும் உணர்வுகளும் சோற்றில் லயித்திருந்தால்தானே அது தெரியும்?

அவள், சோற்றை உருட்டி வாயில் போட்டுக் கொள்ளும் அவனுடைய அழகைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுடைய பார்வை அவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தது. அவன் மனமும் உள்ளமும் எதையோ எண்ணித் தவித்தது

அவளுக்கு அவனுடைய விருப்பு வெறுப்புகளைப் புரிந்து கொண்டு நடப்பதுதானே பிரதானம்? உணவு விஷயத்தில்

அவளுடைய கைநேர்த்தி என்னவென்றாவது அவனிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டாமா?

"நான் ஆக்குன ஆனம் நல்லாயிருக்குதா?" என்றாள். கருணை சுரக்கும் கண்களுடனும் காதல் ஒளிரும் பார்வையுடனும்.

அவன் உடலெல்லாம் இன்ப வேகத்தால் சிலிர்த்தது. ஒரு பெண் தன் விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொண்டு முதல் முதலாகத் தன் அண்டையில் தனிமையில் நின்று காதல் சுரக்கும் கண்களால் பார்த்துப் பேசுவது எப்பேர்ப்பட்ட விஷயம்! அவன் மனது உணவின் மீது லயித்திருந்தாலும் லயிக்காவிட்டாலும் பசி கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் சாப்பிட்டேயாக வேண்டும். உணவைப் பற்றிப் புகழ்ந்தேயாக வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவள் தன் கணவனிடம் எதிர்பார்த்த முதல் நம்பிக்கையே முறிந்து போய்விடுமல்லவா?

"நல்லா இருக்குது. இன்னைக்குத்தா கத்தரிக்காய்க் கொழம்பிலும் இப்படியொரு ருசியிருக்கும்ன்னு தெரிஞ்சுக்கிட்டெ" என்று அவளை உற்சாகப்படுத்தும் விதத்தில் ஒரு பொய்யைச் சொன்னான்.

அவள், உண்மையிலேயே நன்றாகத்தான் குழம்பு வைத்திருந்தாள். ஆனாலும், அதை லயித்துச் சுவைக்கும் மனோநிலையில் அவன் இல்லை. புதிது புதிதாக ஒரு பெண்ணின் உடலின்பத்தில் கிடைக்கும் தணிக்க முடியாத வேட்கைக்கு ஏங்கிக் கிடந்தான் அவன்.

அவள் முகம் மலர்ந்தது. அவன் அவளைப் போலவே மனமார நேசிக்கிறான். தான் சமைக்கும் உணவும் அவனுக்குப் பிடித்துவிட்டது. இனி ஒரு பெண் தன் கணவனிடம் புதிதாகப் பழகும்பொழுது தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம்தான் என்ன?

அவன் குழம்புச் சோற்றைத் தின்று முடித்தான். கரைச் சோற்றுக்கு அவள் குத்துப் பிடித்துச் சோற்றை அள்ளிப் போட்டாள். அவன் அதுவே போதும் போதும் என்று எடுத்தான். அவள் மேலும் ஒரு குத்தை அள்ளி 'இன்னமே சோறு அதிகம் தின்னாவணும். விடுதி மாடு வந்து வேலை செய்யும் மாட்டெ எளைக்க வச்சதா ஆயிடப்படாது' என்றாள்.

இதைக் கேட்டதும் அவன் வாய்விட்டுக் கடகடவென்று சிரித்தான். அவளுக்கும் சிரிப்புப் பொத்துக்கொண்டு வந்தது. வெட்கமும் கூச்சமும் அவளை அலைக்கழிக்க வாயில் கையை

வைத்து மூடிக்கொண்டு தோள்பட்டையும் மார்பும் குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். அவர்கள் இருவரும் எதை நினைத்துக் கொண்டு சிரித்தார்களோ!

"சரி நீயுஞ்சாப்பிடு" என்றான். மோர் சாதத்தை ஊற்றிய சோற்றைக் கரைதுக் கொண்டே.

" நீ தின்னு முடி; அப்புறம் நான் ஒரே வேலையா உக்காந்துக்கிறேன்" என்றாள்.

"இல்லே பேசிக்கிட்டே ரெண்டு பேரும் தின்னலாம்" என்றான்.

அவள் குழம்பு ஊற்றி வைக்கக்கூடிய குண்டாவில் சோற்றைப் போட்டுக் கொண்டு கணவனின் எதிரில் அமர்ந்து சோற்றைப் பிசைந்து உருண்டை உருட்டி கையில் எச்சில் படாமல் வாய்க்குள் வீசித் தள்ளினாள். பொதுவாக எல்லோரும் உபயோகிக்கும் பாத்திரத்தில் எச்சில் படும்படியாக வயது வந்தவர்கள் சாப்பிடக் கூடாது என்னும் சம்பிரதாயத்தை ஒட்டித்தான் அவளும் நடக்கிறாள் போலிருக்கிறது. அவளுக்கென்று எச்சில்படச் சாப்பிடும் பாத்திரம் இனிமேல்தான் வாங்கியாக வேண்டும்.

"எங்கம்மா சோறு தின்னுட்டுதா" என்றான்.

"ம்... ம்... தின்னுட்டுது. தோட்டத்திலே வேலை இருக்குன்னு கோழிகூப்படற நேரத்துக்குள் எந்திரிச்சு வேலை செய்யணும்னு சொல்லுச்சு" என்றாள்.

"உங்க வூட்டுலே நீ நேரத்திலே எந்திருச்சிடுவியா?" என்றான்.

"மொதக் கோழி கூப்படற நேரத்துக்கே எங்கம்மா எழுப்பியுட்டுடும். அப்பவே எந்திரிச்சு சோளம் குத்துனாத்தா வூட்டு வேலை எல்லாம் முடிச்சுட்டு பளார்னு வெடிய காடு தோட்டத்துக்குப் போக முடியும்" என்றாள்.

சற்று நேரத்துக்கு முன் அவளிடம் குடிகொண்டிருந்த கூச்சமும், வெட்கமும் மறைந்து உற்சாகமும், சந்தோசமும் நிறையப் பதில் கூறினாள். அன்போடு அரவணைத்து வேலை வாங்கும் ஒருவனைத்தான் அவள் விரும்பினாள். அவள் இனி ஒருவனின் விருப்பு வெறுப்புக்கும், சந்தோசத்துக்கும் துக்கத்துக்கும் கட்டுப்பட்டவள்தானே? அவன் தான் இனி அவளுக்கெல்லாம். அவள் தலைவிதி அவன் கையில் இருக்கிறது.

"புது எடத்துக்குப் போறமேன்னு நெனைக்க உனக்குப் பயமா இல்லியோ"

குண்டாவிலுள்ள சோற்றை விரல்களில் கீறிக்கொண்டே, "இங்கெல்லாம் எப்படி இருப்பீங்களோன்னு எனக்குக் கவலை யாத்தா இருந்தது. ஆனா இப்போ..." என்று இழுத்தவாறு அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அவளை அப்படியே அணைத்துக் கொண்டு ஆசை தீர முத்தமிட வேண்டுமென்று அவன் உள்ளம் விழைந்தது. அந்த நேரத்துக்காக அவன் மனம் ஏங்கிக் கொண்டிருந்தது.

அவர்கள் இருவரும் சாப்பிட்டு முடித்தனர்.

வெளியில் கிடந்த கட்டிலை எடுத்து வந்து வீட்டினுள் போட்டுப் படுக்கையை விரித்துப் போட்டாள். அந்த நிமிடங்கள் ஒவ்வொன்றும் அவனுக்குக் குயவன் சூளையருகில் இருக்கும் தகிப்பைப்போல தகித்துக் கொண்டிருந்தது. அவள் மனதில் உள்ளதை எப்படி முதன் முதலில் கேட்பது என்ற கூச்சமும் அவனை வதைத்தது. "அவள் எனக்கு உரியவள். 'அதைக்' கேட்பதில் தப்பென்ன?" என்றும் அவன் மனம் ஓலமிட்டது.

"வேலை இன்னும் முடியலையா?" என்றான். அடுத்தவர் யாரும் கேட்கக் கூடாத - கணவன் மனைவி மட்டும் பேசும் ரகசியத்தைக் கேட்பதுபோல.

"மிச்சச் சோத்துக்குத் தண்ணி ஊத்திட்டு கொழம்பச் சூட்டடுப்பில் வச்சு மூடணும்."

"சீக்கிரம்! பாதி நேரம் ஆயிட்டுது."

அவள் ஒன்றும் பேசவில்லை. அவன் மனதில் இருப்பதைப் புரிந்துகொண்டு விட்டாளோ?

எல்லா வேலையும் முடித்துவிட்டாள். அடுப்பங்குழிப் பக்கம் ஒரு பாயை எடுத்துப் போட்டுவிட்டு விளக்கை அணைத்தாள். சுடரிலிருந்து கிளம்பிய விளக்கெண்ணெய்ப் புகை மனதுக்கு ஒரு வகைப் போதையை மூட்டியது.

சற்று நேரம் அவள் விளக்கடியிலேயே நின்றாள். என்ன செய்வதென்று அவளுக்குப் புலப்படவில்லை.

வெளிச்சத்தைவிட முகம் தெரியாத இருட்டுத்தான், புதிய தம்பதிகளின் முதல் இரவுக்குத் தைரியத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கும் போலிருக்கிறது! நேருக்கு நேர் இரண்டு முகங்களின் உணர்வோட்டங்களைக் காண முடிவதில்லையல்லவா?

குரலில் ஒரு நடுக்கமும் பயமும் தொனிக்க "இங்கே வா" என்றான். அதற்குள் அவளது நாவெல்லாம் வறண்டு விட்டது போல் இருந்தது.

அவளும் அவன் அழைப்புக்குக் காத்திருந்தவள் போல மெல்ல அடி எடுத்து வைத்து அவன் கட்டிலருகில் சென்றாள். பூமியில் படும் அவள் பாத ஓசை, அவனுடைய செவிக்கு எதிர்பாராத ஒரு இன்பச் செய்தியைத் தாங்கி வருவது போல இருந்தது.

அவள் அவன் கட்டிலண்டை சென்று மீண்டும் நின்று கொண்டாள்

அவன் ஒருபக்கமாக ஒருக்களித்துப் படுத்து இடது கையால் இருட்டில் துழாவினான். கட்டிலாண்டை நின்ற அவளது திரேகத்தின் மீது அவன் கரங்கள் பட்டதும் அவள் உடல் முழுவதும் ஒருவித இன்ப அதிர்வு கண்டது.

ஆண்மையும் எழுச்சிமிக்க உணர்வும் உந்திப் புடைக்க அவள் கரத்தைப் பற்றி இழுத்துக் கட்டிலில் அமர வைத்தான். இரு வரின் பாரம் தாங்காமல் கட்டில் சடசட என்று மூச்சு விட்டது.

நெட்டுயிர்த்து மூச்சு விட்டுக் கொண்டிருந்த கட்டில் சாந்த நிலையடைந்தது.

# 14

முறையே, முதுவேனிற் காலமும், கார் காலமும் பனிக்காலமும் ஆரம்பித்துவிட்டது. துரிதமாக மாறிக்கொண்டு செல்லும் காலத்தைப் போலவே மனித வாழ்விலும் பல்வேறு விதமான இன்ப துன்பங்களும், கஷ்ட நஷ்டங்களும் மாறித் தோன்றும் போலும்.

புஞ்சைக் காட்டில் செழித்து வளர்ந்து கறுத்த சோளப் பயிரும், கடலைக் கொடியும் பருவ முதிர்ச்சியால் வெளுத்துப் பழுத்து, வடகிழக்கிலிருந்து வீசிய காற்றில் கலப்படமான ஒரு வகை மணத்தை வீசிக்கொண்டிருந்தன. தோட்டக் காடுகளில் விதைத்த மார்கழிப் பட்டச் சோளம் எலிகளின் காதுகளைப் போல் பாத்திகளில் முளை விட்டுப் பாத்தி மண்களுக்கிடையில் முகம் காட்டிக் கொண்டிருந்தன. கதகதப்பும் இறுக்கமும் நிறைந்த ஒரு வகைப் புழுக்கம் இழையோடிக் கொண்டிருந்தது.

மார்கழி மாத மத்தியான வேளை. கோமாளிக் கிழவர் இச்சிமரத்துக் கல்லுக்கட்டில் உட்கார்ந்து கொண்டே கயிறு திரித்ததினால் ஏற்பட்ட இடுப்பு வலியை ஆற்றிக்கொள்ள கல்லுக் கட்டிலின் கீழ் மட்டத்தில் போடப்பட்டிருந்த சலவைக் கல்லில் நீட்டிப் படுத்து உடம்பை நீட்டி நெளித்தார்.

வானில் அழுக்கு நிற மேகங்கள் போர் போராக எழுந்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. அவற்றின் ஒவ்வொரு அசைவிலும் தான் எத்தனை விதமான உருவமாற்றங்கள்! காதலனும் காதலியும் தழுவிக் கொள்வது போலவும், வாலை நிமிர்த்திக் குரைக்கும் நாய் போலவும், வைக்கோல் ஏற்றி இழுக்கும் வண்டி போலவும், இரண்டு பெரும் மலைகளுக்கிடையே அமைதியாகச் செல்லும் நதி போலவும் இப்படி என்னென்னவோ, உருவ மாற்றங்களைக் காட்டியழித்து ஊர்ந்து சென்று கொண்டிருந்தது.

வானைப் பார்த்துப் படுத்திருந்த கிழவருடைய மனம் - இந்தக் காட்சிகளில் எல்லாம் லயிக்காமல் சில தினங்களுக்கு முன்

நடந்த அதாவது மாரப்பனைப் போலீஸார் கள்ளச் சாராயம் காய்ச்சியதாகப் பிடித்துச் சென்ற - அந்த மனங் கொதிக்கும் சம்பவங்களில் லயித்திருந்தது. அப்பொழுது ஏதோ வேலையாக வெளியூருக்குச் சென்றுகொண்டிருந்த பக்கத்தூரைச் சேர்ந்த மூன்று நான்கு பேர்கள் நிழலுக்காக இச்சி மரத்துக் கல்லுக்கட்டில் அமர்ந்தனர்.

பொதுவாகச் சுற்றுப்பக்கத்து ஊர்களுக்கெல்லாம் கோமாளிக் கிழவரை நன்கு தெரியும். அவருடைய தாத்பரியந்தான் ஏற்கனவே நமக்குத் தெரிந்த விஷயமாயிற்றே.

அங்கு வந்திருந்தவர்களில் முதலாமவன் கிழவரைப் பார்த்து "ஏன் தாத்தா, மாரப்பண்ணனே ரண்டு மூணு நாளைக்கு முன்னாலே போலுசுக்காரங்கோ புடுச்சுட்டுப் போனாங்களே என்ன சங்கதிங்க?" என்று உண்மையாகிலுமே விவரத்தைத் தெரிந்துகொள்ளும் நோக்கிலும் மௌனமாக உட்கார்ந்திருக்காமல் சற்று வாயாடிக் கொண்டு இருக்கலாமே என்ற யோசனையிலும் ஆரம்பித்தான்.

இந்த நேரம் வரையிலும் கூட அநியாயமும் அக்கிரமமும் நிறைந்த அதே துயரச் சம்பவத்தை நினைத்துக் கொண்டிருந்த கிழவருக்கு முகம் சிவந்து புருவங்கள் துடிக்க, ஆத்திரத்தில் வார்த்தைகள் எழாமல் சற்று மௌனமானார். முகத்தில் சிவ்வென்று கொதித்துப் பரவிய குருதி அலையைக் கைகளால் முகத்தைத் தேய்த்துச் சமனப்படுத்திக் கொண்டார். கைகள் இரண்டையும் விரித்துக் கோத்துத் தலைக்கு அடியில் தாங்கலாக வைத்தபடி அவர்களைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார்.

"மண்ணே பயிரத் தின்னுதுன்னா மக்களுக்குக் கெடைக்குமா. அப்படியிருக்குது இன்னைக்கு நாட்டு நடப்பு. ஏமாந்தவனுக்கும் எளச்சவனுக்கும் இது காலமில்லே" என்று கூறி மூக்கைச் சிந்தினார். தண்ணீர் போன்ற திவலை பரந்து சிதறியது. ஒருக்கால், அவர் உள்மனம் அழுகிறதோ? கண்ணீரை வெளிவிடாமல் உள்ளே விழுங்கியது மூக்கில் சுவறிக் கசிகிறதோ?

"ஒரு இனுசுப்பட்டரும், ரண்டு பொலூசுக்காரனும் ஏதாவது கேசு பார்க்கலான்னு வந்திருக்கிறானுவ. அப்பொ பிரசரெண்டும் முனுசீப்பும் - இன்னும் சிலரும் குடிச்சுப் புட்டுப் போதையிலே இதே கல்லுக் கட்டுலேதா காசு வச்சுச் சீட்டாடிக்கிட்டு இருந்திருக்கறாங்க. அவுங்களக் கண்டதும் எல்லாரும் எளுந்திருச்சி வூட்டுக்குப் போறாப்பலே போயிருக்காங்க. சந்தேகப்பட்ட அவனுக கூடவே போயிப் புடிச்சுக்கிட்டானுக. அவுங்க

எப்பவுமே சீட்டாடறவங்க. அவங்களப்பத்திப் போலீசு டேசனுக்கு நல்லா தெரியும். புடுச்ச உடனே பணத்தக் குடுத்துச் சரி பண்ணிட்டாங்க. கொஞ்ச நேரங்கழிச்சு அவுங்களையே கள்ளுத் தண்ணியும், ஒரு கோழியும் வாங்கியாரச் சொல்லியிருக்கிறார் இனுசுபட்டரு. கோழி இல்லைன்ன உடனே ஒரு போலீசுக்காரென வுட்டு ஊரச் சுத்திப் பாக்கச் சொல்லியிருக்கிறான். போனவன் எங்கல்லாமோ சுத்திப் பாத்துட்டு இல்லாமே கடைசியா மாரப்பன் வூட்டுலே கோழி இருந்ததைப் பார்த்துக் கேட்டிருக்கிறான். அது தன் மவ முத்தம்மாம ஆசையா வளர்த்தறதுன்னு சொல்லி, மாட்டேன்னு சொல்லியிருக்கறான். சரி, வந்து அய்யாகிட்டே சொல்லிட்டுப் போவலான்னு கூட்டிக்கிட்டுப் போயிருக்கானுக."

கோழி குடுக்க மாட்டேங்கறான்னு தெரிஞ்சதும் அந்த இனுசுப்பட்டரு "ஊ... கும்... உனக்கு அவ்வளவு திமுராயிட்டுதா? உக்காரு. அப்பறம் போவலான்னு உக்கார வச்சுட்டு எங்கையோ இருந்து புடுச்சாந்து சமைத்த கோழிக்கறியையும், தண்ணியையும் ஒரு புடி புடிச்சுட்டு," "நட உன் திமிரெ ஸ்டேசன்லே போயிப் பாத்துக்கலாம். உம்மாதிரி பசங்களெ வளரவுட்டா வூரு கெட்டுப் போயிடும்னு இழுத்துக் கொண்டு போயிட்டானுக" என்று தொண்டை விக்கக் கூடிய ஒன்றை விழுங்குபவர் போலக் கழுத்தைத் தாழ்த்தி நெளித்து எச்சிலை விழுங்கினார். கட்கத்தில் விரல்களால் தேய்த்துத் திரட்டிய அழுக்கை எடுத்து உருட்டி முகர்ந்து பார்த்தார். புழுதியும் வியர்வையும் கலந்து மனித உடலில் திரண்டெழுந்த அழுக்குடன் கலந்த புளிப்பு நெடியை முகர்ந்து பார்க்கும்போது, ஒருக்கால் கிழவருக்கு உத்வேகம் பிறக்குமா? இல்லையென்றால் தவிர்க்க முடியாத ஒரு பழக்கமாகக் கொள்வானேன்?

"அவனுக மனுசனுக்குப் பொறந்திருக்கமாட்டானுக. டேசனுக்கு இழுத்துக்கிட்டுப் போவும்போது மாரப்பெ குய்யோ மொறையோன்னு அவனுக காலிலே வுழுந்து கெஞ்சுன கெஞ்சு இருக்குதே - எனக்கு இப்பச் சொல்லும் போது கண்ணீருத் தண்ணி வருது" என்று தலையில் கட்டியிருந்த துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டார். இருண்ட ஆழமான குழாய்க் கிணற்றில் கிடக்கும் நீர் ஒளி விடுவது போல ஆத்திரமும் துக்கமும் நிரம்பிய சோபையிழந்த அவருடைய குழி விழுந்த கண்கள் பிரகாசித்தன.

"குடிச்சிட்டுச் சீட்டாடினவனெல்லாம் இதப் பார்த்து ஏளனச் சிரிப்புச் சிரிச்சுக்கிட்டு நிக்கறானுவ. மாரப்பெ போவும்

போது "மாமா நானு இன்னமெ என்ன செய்வே மாமா"ன்னு கோன்னு அழுதாம்பாரு... அந்தப் பாவம் இந்த நாய்க்குப் பொறந்த பசங்களெ சும்மா வுடாது. என்னதா இவனுக்கிட்டெ அதிகாரம் இருந்தாலும் இப்படியா அக்கரமம் பண்றது? இவனுக கள்ளுக் குடிக்க கோழி குடுக்கலேன்று டேசனுக்கு ஒரு ஏழை அப்பாவியை இழுத்துக்கிட்டுப் போறதுன்னா அப்புறம் என்ன இருக்குது? இன்னமே அவனுக குடி வெறியிலே வந்து நம்ம பொண்டாட்டி புள்ளைகளைப் புடிச்சு இழுத்தாக்கூட கேக்க முடியாதாட்டம் இருக்குது!" அவருடைய குரல் உணர்ச்சி வசப்பட்டதால் கரகரத்து நடுங்கியது. முதுமைப் பலவீனத்தால் அடக்க முடியாமல் எழுந்த கண்ணீரைக் கைகளால் துடைத்து விட்டுக் கொண்டு தொண்டையைச் செருமிக் கொண்டார். கேட்டுக் கொண்டிருந்தவர்களும் இந்தக் கொடுமை நிறைந்த அக்ரமச் செயலுக்கு வருந்துபவர்கள் போல தாடை எலும்புகள் நெரிபட, புருவங்கள் சுளிக்க கிழவரையே உற்று நோக்கி அமர்ந்திருந்தனர்.

"அப்பவே நானும் இன்னும் ரண்டு பேரும் நூறு ரூவாயை எடுத்துக்கிட்டு டேசன் போய்ச் சேர்ந்தோம். மாரப்பெ கள்ளச் சாராயம் காச்சனான்னு எழுத ஆரம்பிச்சுட்டானுவ. ஒலகம் இப்படியா இருக்கும்? செத்துப் போன நாயெ கழுகு கொத்த றாப்பலயல்ல இவனுக அக்ருமம் இருக்குது? அப்பறம் பாத் துட்டு இனுசுப்பட்டருக்கு அம்பது ரூவாயக் குடுத்துக் கூட்டி யாந்தோம். போலீசுக்காரன் பாத்து நெனச்சா உன்னக்கூட இந்த நிமிஷத்திலே என்னமும் செய்யலாம். இது அவனுக ராச்சியமா இருக்குது." அவரது பார்வை ஏதோ தவறவிட்டு விட்ட ஒன்றைத் தேட முயலுவது போல ஆழ்ந்து அமைந்திருந்தது.

"சோத்துக்குக் கல்லு சேர்மானங்கற மாதிரி எளச்சவனுக் குத்தா கடன் ஏறிக்கிட்டுப் போகும். அப்படித்தா மாரப்பனுக்கும் வந்து சேர்ந்துட்டுது" என்று கூறி முடித்தார்.

அங்கிருந்தவர்களில் ஒருவன், "இது மட்டுமென்ன? எங்கே போயிப் பாத்தாலும் காசு புடுங்கற வேலதா. குடியானவெ சம்பாதிக்கற காசு மட்டும் அவ்வளவு மலிவாப் போச்சு. அவனுக்கு வேணுங்கற வவத்துச் சோறு மட்டும் குதரக்கொம்பா இருக்குது. நானு கெணறு வெட்டறதுக்காவ சர்க்கார்லெ கடனா ஆயிரத்தைந்நூறு ரூபாயும் எனாமா அய்ந்நூறும் தாரதாவக் கேள்விப்பட்டு லோனுக்கு எழுதினேன். விண்ணப்பம் எழுதறதுக்கே கணக்குப் பிள்ளைக்கும், கிராம

சேவுகனுக்கும் அம்பது ரூவா குடுத்தேன். அப்புறம் ரிஜிஸ்தரா பீசிலே நெலத்துக்கு வில்லங்கம் பாக்கக் கட்டணமும், கணக்கப் பிள்ளெ போக வரச் செலவும், ரிஜிஸ்தராபீசுக்காரங்களுக்குப் பணமுமா அதுலே ஒரு எழுவத்தஞ்சு செலவாப் போச்சு. அப்புறம் பீடிஓவுக்கு நூறு கொடுக்க வேண்டியதாப் போச்சு. கடசியிலே பணம் சேங்குசன் ஆனப்பவும் பேங்குலே போயிப் பணம் எடுக்கும்போது எனக்குக் கையெழுத்துப் போடத் தெரியாததாலே சாச்சிபோட கணக்குப் புள்ளையக் கூட்டிப் போவ -"நானு இல்லாட்டி உனக்கு இந்தக் கடன் கெடைச்சு இருக்குமா? அய்ந்நூறு ரூவா எனாம் கெடைக்கும்போது எனக்க ஒரு நூறு கொடுக்கிறதுக்கென்ன"ன்னு மறுபடியும் ரூவா நூறு வாங்கிக்கிட்டான். கல்லுலே மோதினாலும் கணக்கனோட மோதப்படாதுன்னு சொல்லி வச்சிருக்கறாங்களே" என்று தலையில் கட்டியிருந்த தலைப்பாகையை அவிழ்த்து இரண்டு கை விரல்களாலும் குடுமி மயிரைக் கோர்த்து சொறிந்துவிட்டுக் கொண்டார். காக்காய் கூடு போலச் சிலிர்த்து நின்ற குடுமி மயிரிலிருந்து தயிர் வாடையும் எண்ணெய்ச் சிக்கும் சேர்ந்து ஒரு வீச்சம் வீசியது.

"கடைசியா பாத்தா எனாம் குடுத்த ரூபாய் அய்ந்நூறும் போயிடுச்சு. அப்புறம் இதோட வுட்டுதா? சர்க்காருலே கேக்கற ஒவ்வொரு லோனுக்கும் லிஸ்டெடுத்துக்கிட்டுத் திரும்பத் திரும்ப சர்க்காரு லோனு வாங்கினவங்கிட்டயே வந்துடறாங்க."

கிழவர் ஏதோ அசூசையைக் கண்டு முகம் சுளிப்பவர் போல முகத்தை வைத்துக் கொண்டு, "நம்ம ஆளுவ மனங் கூசாமெ ஒன்னத் தவர எல்லாங் கேட்டு வாங்கிட்டானுவ. ஒவ்வொருத் தன் வூட்டுப் பொம்பளையையும் வேணும்னு கேக்கறதுதா பாக்கி. லஞ்சம் வாங்கறதெ அசிங்கம்ன நெனைக்காதவ தங்க ஊட்டுப் பொம்பளையைக் கூட கூட்டிக் குடுக்கறதெ அசிங்கமா நெனைக்க மாட்டான்" என்று கூறி வெறுப்போடு எச்சிலைக் காறித் துப்பினார்.

அப்பொழுது மரத்தின்மீது அமர்ந்திருந்த காக்கையொன்று கிழவரின் தலைமீது சொட்டென்று எச்சமிட்டது. விருக்கென்று பயந்து தலையைத் தடவிப் பார்த்த கிழவர் காக்கை செய்த கோலமென அறிந்து, கீழே கிடந்த சிறு கல் ஒன்றை எடுத்து வலது ஆள்காட்டி விரலில் வைத்து இடது கையில் பிடித்து வில் போல வளைத்து மிரட்டினார். காக்கைகள் படபடவென்று பயந்து எழுந்து பறந்தன. மீண்டும் வந்து அமர்ந்தன.

கிழவருக்கு இதுவரையிலும் பேசிக்கொண்டிருந்த விஷயங்கள் அனைத்தும் முடிந்துவிட்டன. அவருக்குப் பிடித்தமான கதை சொல்லும் நிகழ்ச்சிக்கு ஏற்ப கருப்பொருள் கிடைத்து விட்டது. தன் தலையில் எச்சமிட்ட பிறகும் அந்தக் காக்கைகளைப் பற்றிய வரலாற்றை அவர் கூறாமல் இருப்பாரா என்ன?

அங்கு உட்கார்ந்திருந்தவர்களின் உணர்வோட்டங்கள் தான் சொல்லப் போகும் கதையைக் கேட்கக்கூடிய மனோநிலையில் - விருப்பத்தில் - இருக்கின்றனவா என்று ஆராய்பவர் போல, அவர்களை ஒருமுறை நோட்டம் விட்டார். அவர்களும் மடிப் பையிலிருந்த வெற்றிலைப் பாக்கை எடுத்து வாயில் போட்டுச் சாவதானமாக மெல்ல ஆரம்பித்தார்கள்.

"ஒரு காலத்திலே இந்த ஒலகமே பெரளயம் வந்து அழிஞ்சு போச்சு தெரியுமா?"

பெரளயம்னா இந்த ஒலவமே தண்ணியாப் போச்சு. வானத்துக்கும் பூமிக்கும் ஒரே தண்ணிமயம். எந்த உசுராவது பொளைக்க முடியுமா? அப்பத்தா ஒரு தகப்பனும், மவளும் ஒரு சொரக் குடுவைக்குள்ளே நொளைஞ்சு தண்ணியிலே மொதந்துக்கிட்டாங்க. எப்படியோ ஒரு காக்காயும் தொத்திக்கிட்டே போயி உள்ளே நொளைஞ்சுக்கிட்டுது" என்று கூறி வரும்போது ஒருவன் இடைமறித்துச் சொரக்குடுவையிலே மூச்சு வாங்கறது எப்படி என்றவுடன் கிழவருக்கு முகம் சிவக்க, புருவங்கள் துடிக்க "டேய்! நீ, நாங் காணப்பொறந்திருப்பே! எங்கிட்டையே கேள்வி கேக்கறையே. அவுங்க எப்படியோ காத்து வாங்குனாங்க" என்று கூறி விட்டு, "இப்படியெல்லாம் எடை எடையே கேள்வி கேட்டா எனக்கு எல்லாம் மறந்து போயிடும்" என்று மீசையை முறுக்கி விட்டு எதையோ குத்திட்டுப் பார்த்து அமர்ந்திருந்தார்.

கொஞ்ச நேரம் கழித்துத் தனது கரகரத்த தொனியில் உரக்கச் சத்தமிட்டு "எப்பவுமே தலையிலே வெசயத்தெ அதிகமா தேக்கிக்கிறது தப்பு. ஒரு தடவெ ஒண்ணக் கௌவிப் புடிச்சு மேலே கொண்டாந்து வுட்டுப்புட்டா, பொறவு தேடிப் புடிக்கற துன்னா சாமானியமில்லே. எப்பவுமே அறிவாளிங்க சொன்னெதெத் திரும்பச் சொல்லமாட்டாங்க. பாரு! அந்த அப்பனும், மவளும், காக்கையும் குடுவையிலேயே இருந்துட்டுத் தண்ணி வடிஞ்சப்புறம் வெளியே வந்தாங்க. ஆனா வெளியே வந்து பார்த்தா இவுங்களெத் தவர ஒரு பொறப்புமில்லே. காக்காதா அவுங்களுக்குக் கொளந்தையாட்டம்" என்று நிறுத்தினார். மேற்கொண்டு அவர் எதையோ சொல்லத் தயங்குவதுபோல முகத்தைச் சிரமப்பட்டு ஒரு நிலைப்படுத்திக் கொண்டு "அவங்க

ரண்டு பேரு கனவிலே கடவுளு வந்து இன்னமே இந்த ஒலவத்தைப் பொறப்பிக்கிற பொறுப்பு உங்கக் கிட்டதா இருக்குது நீங்க ரெண்டு பேரும் புருஷனும் பொண்டாட்டியா வாழணும்னு சொல்லிட்டார்.

என்ன பண்ணுவாங்க? அப்படியேதா வாழ்ந்தாங்க. வெளிச் சுவற்றில் கிடந்த அவன் கோவணத்திலே தங்கியிருந்த விந்தை அந்தக் காக்கா சாப்பிட சில மாசத்திலே மொட்டுட்டு அடப் படுத்துட்டுது. மவளுக்கும் அப்பன் மூலமாகக் கொளந்தையும் பொறந்திட்டுது. அப்பறம் அப்பனுக்கு மவ கொளந்தை கொளந்தையாய்ப் பெத்துத் தள்ளினா. இருட்டிலே ஒரு மனுசெ தப்பு செஞ்சுட்டான்னா அப்புறம் அதையவெ லேசுலே மறந்திட முடியாது" என்று ஏதோ சொல்லக்கூடாத ஒன்றைச் சொல் லியே தீரவேண்டிய நிலையில் சொல்லிவிட்டது போல் உதடு களைப் பல்லால் கடித்துக் கொண்டார்.

"இதுக்குப் பின்னாலே தகப்பனுக்கும் மவளுக்கும் இடையே பொறந்த கொளந்தைகள் பெருசாகி அவர்களுக்குள் குடும்பம் ஏற்பட்டு மேலும் வம்ச விருத்தி ஏற்பட்டது. இப்பக் கூட நம்மளுக்குள்ளே பார்த்தா அப்பனுக்கு மக பேருலேதா பிரியம் அதிகம் இருக்கும். மனுஷன் பொறந்து வந்த மூலப் பீடத்தை மறக்றதே இல்லே."

"அப்பனும் மகளும் தாங்க முந்தி வெவசாயம் செஞ்சப்போ இருந்த தவசத்தெக் குடுவைக்குள்ளே போறப்போ பத்திரப் படுத்தி வச்சிருந்தாங்க. அதைக்கொண்டு பயிரிட்டு தங்க கொளந் தைகளுக்கும் சொல்லிக் கொடுத்தாங்க. இது வரையிலும் வெளியிலே போயிப் புழுப் பூச்சி பொறுக்கித் தின்ன வந்த காக்காய் குடும்பம் அவங்க பயிரிட்ட தானியம் வெளஞ்சதும் வயலிலே போயிப் பொறுக்கித் தின்னுட்டு வந்தது. தகப்பனும் மவளும் காக்காக் குடும்பத்தெ நேசிச்ச மாதிரி அவங்க கொழந்தைக நேசிக்கலே. ஒரு நா ஒரு காக்காக் குஞ்செ அதுக அடிச்சுக் கொன்னுட்டுதுக. அன்னையிலிருந்து அதுக மரத் துக்கு ஓடிப்போச்சு. தகப்பனும் மவளும் காக்காக் கூட்டத்துக்கு எதுவும் குடுத்தாக்கூட அதுக வந்து முன்னப் போலக் கிட்ட வந்து எடுத்துக்கறதில்லே. வீசியெறிஞ்சாத்தா தூரத்திலிருந்து எடுக்கும். அவுங்க அடிச்சதிலிருந்து அதுகளுக்கு அவ்வளவு பயம்.

ஒரு நா அந்தத் தகப்பனுக்கு சாகற நேரம் வந்திடுச்சு. தனக்கு மனைவியான மகளைக் கூப்பிட்டு நா செத்துப் போனன்னா நீ தாலியறுக்கணும். உனக்கு நா தாலி கட்டலே, இருந்தாலும்

நூலச் சரட்டெக் கழுத்திலே கட்டி அன்னைக்காவ அந்தச் சடங்கச் செஞ்சாவணும். ஒலவத்திலே மீண்டும் மனுசப்பூண்டு தழைக்கறதுக்காவத்தா நாம சந்ததி விருத்தியிலே கடவுளு கட்டளைக்கிணங்க கணவனும் மனைவியுமா இருந்தோம். அது தப்பில்லே... ஆனா காக்கா மனுசப் பொறவியில்லையே? உனக்குத் தெரியும். மனுச விருத்திக்கு உம் மூலம் யாரு காரணமோ அதுபோல காக்காய்கள் விருத்திக்கும் யாரு காரணம்னு தெரியும். ஆனாலும், அதுக எனக்காவ தாலியறுக்க முடியுமா? இருந்தாலும் நா செத்தா நீ தாலியறுக்கறாப்பலே அதோட சம்மதத்தையும் வாங்கணும். அதுக்கு அடையாளமாக நா செத்துக் கருமாதி செய்யறப்ப அதுக்குக் கூரை மேலே சோறு போடுங்க. வந்து எடுத்துதா அது எனக்குச் செய்ய வேண்டிய காரியத்தைச் செஞ்ச மாதிரி. இல்லேன்னா என்னாவி அமைதியாவாது" என்று சொல்லிவிட்டுச் செத்துப் போனான். அப்படியே அவங்களும் கூரை மேலே சோறு போட்டாங்க. என்னத்தைச் சொல்ல? - அந்தக் காக்காய் கூட்டத்தோட வந்து சோத்தை எடுத்துக்கிட்டது. அதிலே இருந்துதா எழவாயி கருமாதி நடக்கும்போது மொதல்லெ காக்கைக்குக் கூரை மேலே சோறு போட்டுட்டு அப்புறம் மீதிப் பேருக்கு போடற வழக்கம் வந்தது. அதுக்கு அறுவு தலையிலே இல்லை, மூக்கிலே இருக்குது..." என்று முடித்தார்.

இதுவரையிலும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அவர்களில் ஒருவன் "அது நாளதா கூரை மேலே போடற சோத்தைக் காக்கா எடுக்கலின்னா செத்துப் போனவங்க மனது சாந்தியடையாதுன்னு சொல்றதா?" என்று கேட்டான்.

"ஆமா!" என்றார் கிழவர். கதை சொல்லியதன் களைப்பு மேலிட.

"ஏ தாத்தா பழைய காலத்து வெசயங்கள் விட்டுப் போவாமே நெனப்பு வச்சு சொல்றது இந்தப் பக்கத்துக்கு நீதா போல இருக்குது" என்று மற்றொருவன் கேட்டான்.

இது மட்டுமல்ல, எத்தனையோ வெசயங்களை இந்த நெஞ்சுக் கூட்டுலே வெச்சு பாதுகாத்து வாரேன். நான் கண் மூடிட்டா இந்த ஒலகத்துக்குத் தெரிய வேண்டிய எத்தனையோ பழைய காலச் சம்பவ நிகழ்ச்சிகள், கதைகள் ஒலகத்துக்குக் கெடைக்காமல் போயிடப் போவுது" என்று கூறுபவர் போல பாதி விழிகள் இமைக்குள் செருக அறிவுத் தீட்சண்யம் மிளிரும் லேசான புன்னகையொன்றை மலர விட்டார். அவர் வாயிலிருந்து பதில் வரவில்லை.

# 15

ஒரு மனிதனுடைய வாழ்வில் கஷ்டங்களுக்கும் அளவுண்டு. கஷ்டங்களே ஒரு மனிதனுடைய வாழ்வு என்று ஆகிவிட்டால் அதுவே ஒரு பெரும்பகுதி மக்களின் சமுதாயத்தின் உரிமை யென்றும் கூறப்பட்டால் - அப்பொழுதுதான் சம தரையி லிருந்து ஒரு இமய பருவதம் எழுவதுபோல் சமூகத்தில் ஒரு சிலர் மிகப்பெரும் செல்வம் படைத்தவர்களாக உயர முடிகிறது. ஒரு சமுதாயம் முழுவதின் கஷ்டம், நஷ்டம், துயரம், வேதனை அனைத்தும் ஒரு சிலரின் இன்பம், களியாட்டம், கேளிக்கை பொழுதுபோக்காக மாற முடிகிறது. வாழ்நாள் முழுவதும் இப்படியொரு சமுதாயம் தினம் தினம் வயிற்றுக் கஞ்சிக்கும், கடன் தொல்லைக்குமே தங்கள் ஜீவனையும் சிந்தனையையும் படைப்பாற்றலையும் அர்ப்பணம் செய்ய வேண்டியிருக்கிற தென்றால், அது எவ்வளவு பெரிய மாபாதகம். அம்மாபாதகத் தைக் கட்டிக் காப்பதற்கென்றே அவர்களுடைய சிந்தனைகள் வேறு வழியில் சென்றுவிடக் கூடாது என்று தடுப்பதற்கென்றே - இன்றைக்கு வரையிலும் மகான்களும் மதாச்சாரிகளும் தோற்றமெடுத்திருக்கிறார்கள் என்றால் அது எவ்வளவு பெரிய மோசடி? முடிச்சுமாறித்தனம்? இது ஒருக்கால் இந்திய சமுதாயத்தின் சாபத்தீடோ? அந்தப் புராதன சமுதாயத்தின் அளவுக்கு மீறிய சகிப்புத் தன்மையின் விளைவால் எழுந்த சகிக்க முடியாத கோழைத்தனமோ?

ஒரு சமுதாயத்தின் ஊமைத்தனமான இந்தக் குமுறல்கள்தான் பூமியின் அடிவயிற்றில் சலனமின்றிக் கொந்தளித்தெழும் எரிமலை போன்ற புரட்சி அலைகளோ? சகலத்தையும் சுட்டுப் பொசுக்கி நாசமாக்கும் இந்தத் தீக்கங்குகளின் வெம்மையைக் கண்டுதான் பேராசை கொண்ட ஓநாய்க் கூட்டங்கள் மனித உழைப்பின் பச்சை ரத்தம் குடிப்பதற்காக இப்படிக் கூச்சல் இடுகின்றனவோ?

இதெல்லாம் மாரப்பனுக்குத் தெரியாது. கடந்த ஜென்மத்தில், தான் செய்த பாவத்தின் வினையோ அல்லது தன் முன்னோர்கள் செய்த அடாதுடித் தனத்தின் பலாபலனோ என்றுதான் தன்னுடைய கஷ்டங்களுக்கு அவனால் காரணம் கற்பித்துக் கொள்ள முடிந்தது. இந்தக் கஷ்டங்களின் வேகத்தை - அதன் போக்குகளின் நேர்மையைச் சற்றுத் திசை திருப்பி விடவும், தணித்துக் கொள்ளவும் காலத்தையும், கர்மவினையை யும் அறிந்த பூசாரிகளையோ, மாந்திரீகர்களையோ, ஜோசியர் களையோ, தெய்வத்தையோதான் அவனால் நினைத்துக் கொள்ள முடிந்தது. பரிகாரம் காணவும் அவர்களின் கருணா கடாட்சத்தைத்தான் நாடிச் செல்ல மனம் விழைந்தது.

குழந்தையைப் பெற்றெடுத்த தாய் அது உயிர் வாழ வேண்டிப் பாலூட்டிக் காப்பது போலவே, அது சிந்திக்கத் தொடங்கியதும் அதன் நம்பிக்கையின் சிந்தனை வேரிலே அதன் தாயோ அல்லது சமுதாயமோ இந்த விஷ வித்தைத் தான் முதன் முதலில் தூவிவிடுகிறார்களோ? ஒவ்வொரு தாயும் தகப்பனும் குழந்தை யாக வெளிவந்து சிந்திக்கத் தொடங்கியதும் ஏற்றுக்கொண்ட ஞானஸ்நானமும் இதுதானோ?

இதைப் பற்றியெல்லாம் அவன் சிந்தித்ததில்லை. இதற்கு முன் அவனுக்குத் தெரிய வாழ்ந்தவர்களின் வாழ்க்கை தெரியும். அதுவே அவனுக்குப் போதும்.

அவனுக்குச் சில நாட்களாகச் சோறு செரிக்கவில்லை. மாடு கன்று நஷ்டம். கடன் தொல்லை. குடும்பப் பிரச்சனைகள் எல்லாம் சேர்ந்து அவனை உலுக்கியெடுத்துக் கொண்டிருந்தன. ஒரு வண்டியில் பாரம் ஏற்றும் வரையிலும்தான் ஏற்றலாம். மிகுந்து விட்டால் அச்சாணி வளைந்து முறிந்து போகத் தானே செய்யும்? மனித ஆத்மாவுக்கும், உடலுக்கும் வெளித்தாக்குதல் களின் உபாதைகள் வந்து சேரும்போது அது பழுதடைவது இயற்கைதானே?

அவனால் முன்னைப்போல் வேலை செய்ய முடியவில்லை. கைகால்கள் சுரணையிழந்து சோர்ந்து கலகலத்து விட்டன. இதை அறிந்த அவன் மனைவி தன் கணவனுக்கு யாருடையதோ கண்பார்வைதான் விழுந்திருக்கும் என எண்ணி மாலை மயங்கும் நேரத்தில் சமைத்த சோற்றைப் பிள்ளையாருக்கு முன் கொண்டு சென்று வைத்துப் படைத்துச் சாப்பிட வைத்தாள். இரவுச் சாப்பாட்டுக்கு முன்னர் யாருக்கும் தெரியாமல் கொண்டுவந்த மூன்று வீட்டுக் கூரைத் தட்டும், மூன்று வீதி கூடுமிடத்தில்

அள்ளிக் கொண்டுவந்த கால்மிதி மண்ணும், கூட மிளகாயும் உப்பும் போட்டுக் கணவனை நடுவீட்டில் கிழக்குமுகமாக உட்கார வைத்து எண்ணெயில் ஊறப்போட்ட திரியைக் கொளுத்தித் தலையைச் சுற்றித் தண்ணீரில் போட்டுப் பின்னர் மிளகாய், உப்பு முதலியவற்றையும் சுற்றி நெருப்புக் கனலும் அடுப்பில் போட்டுப் பொரிய வைத்தாள். அந்த நெடி வீட்டிலுள்ளவர்களின் மூக்கைக் கமற வைத்தது.

அந்த மிளகாயும் உப்பும் பொரிவதைப் பார்த்த அவள் "எந்த வேதியிலே போன முண்டையோ நெறையக் கண்ணு வச்சிருக்கறதா. அதுதான் மொளகா இத்தனை காரமாகப் பொரியுது" என்று சொல்லிவிட்டு மஞ்சள் தண்ணியில் போட்டு அவித்த திரியை ஊரடங்கிய பின்னர் மூன்று வீதி கூடுமிடத்தில் கொண்டு சென்று யாருக்கும் தெரியாமல் கொட்டிவிட்டு வந்தாள்.

சாப்பிட்டு முடித்தானதும் படுத்துக் கொண்டனர். மாரக்காள் கணவனிடம், "இப்ப அடிக்கடி நம்ம வூட்டுக்குப் பக்கத்திலே இருக்குற வேப்ப மரத்தில் வந்து ஆந்தை கத்துது. வூட்டுக் கூரை மேலே வந்து உட்கார்ந்து கத்துன அன்னைக் குத்தா உன்னெ போலீசுக்காரெ புடுச்சுக்கிட்டுப் போனது. இது என்னமோ கெட்ட கெரகந்தா. அதனாலதா என்னைக்குமில் லாமெ இப்பக் கொஞ்ச நாளா ஆந்தை வந்து கத்துது. நம்ம குடும்பத்துக்கு என்னு அவுக்கேடு வந்து சேரப் போகிறதோ" என்றாள்.

"இன்னமே என்னா கஷ்டம் புதுசா வந்துடப் போவுது? வாரதெல்லாந்தா வந்துடுச்சே" என்றான் ஏக்கங் கலந்த நம்பிக்கையின்மையுடன்.

"நம்ம காலத்து வரையிலாவது நாலு பேருக்கு முன்னாலே அர வவுத்துக் கஞ்சியாவது குடிக்க வாண்டாமா?"

"நம்ம சக்திக்கும் மீறிப்போச்சுன்னா என்னதாம் பண்றது"

அவள் ஒன்றும் பேசவில்லை. தூக்கம் கண்களைச் செருகத் தூங்கி விட்டாள்.

மங்கிய நிலவொளியின் ஆழ்ந்த இரவு. தென்கிழக்குத் திசையிலிருந்து வீசும் காற்று பனை ஓலைகளில் நுழைந்து நாதங் குலைந்த வீணையைப்போல் இசைத்தது. ஒரு நட்சத்திரம் பிரகாசமாக வெளிச்சம் காட்டிவிட்டுக் கீழ்நோக்கி விழுந்தது.

பகல் முழுவதும் உழைத்துக் களைத்த மனித ஆத்மாக்கள் இரவுப் போதில் எடுத்துக் கொண்ட தூக்க ஓய்வின் மூலம்

மீண்டும் தங்களைத் தயார் செய்து கொண்டு விரும்பியோ விரும்பாமலோ இயங்க ஆரம்பித்து விட்டன. இருளிலிருந்து வேலை செய்யும் மனிதக் கூட்டத்துக்கு வழி காட்டக் கிளம்பும் தீபச்சுடர் போல சூரியன் கீழ்த்திசையிலிருந்து எழுந்து நகர்ந்தான்.

கூட்டிலிருந்து திறந்து விடப்பட்ட முத்தம்மாளின் கோழியும் குஞ்சுகளும் ஓடிச்சென்று பக்கத்து வீட்டுக்காரியின் குப்பைக் குழியில் கிடந்த குப்பையைக் கிளற ஆரம்பித்தன.

அவளோ அறுத்துப் போன ஒரு வாலிபப்பெண். மாமனாரின் ஆளுகைக்குக் கீழ் இருந்தாலும் பூரண திருப்தி அடையாதவள். அவளுடலில் வாலிபத்தின் ஏக்கமும், அந்த ஏக்கத்தை தீர்த்துக் கொள்வதற்காக யாரிடமாவது வீண் சண்டைக்குச் செல்வதன் மூலம் கெட்ட வார்த்தைகளைக் கூச்சநாச்சமின்றிப் பேசுவதால் எழும் மனச்சாந்தியால் ஓரளவுக்குத் திருப்தியும் அடைந்து வந்தாள்.

கோழி குப்பையைப் பறித்த சிறிய விஷயம் பெரிய சண்டையாக முற்றிவிட்டது. ஒரு பெண்ணுக்குப் பெண்ணே கேட்க முடியாத அளவுக்கு வார்த்தைகளை அசிங்கமாகவும், தடிப்பாக வும் பேச ஆரம்பித்துவிட்டாள். ஒரு ஆண் பிள்ளையும் தான் எவ்வளவு நேரம் பொறுமையாக இருந்து பார்ப்பான்?

"புருஷனக் கொன்னுப்புட்டு மாமனாரோட போயிக் குட்டி போட்ட முண்டைக்கு வாயைப் பாரு வாயெ"

மாரப்பனுடைய இந்த வார்த்தைகளைக் கேட்ட பக்கத்து வீட்டுக்காரியான வீராயிக்குக் கோபம்! எல்லையை மீறி விட்டது. அவளும் எதையாவது ஒன்றைச் சொல்ல வேண்டும். சொல்வதில் உண்மையிருக்கிறதோ இல்லையோ என்பதல்ல பிரச்சனை. சொன்ன வாய் மூடாமல் இருக்கும்பொழுதே ஏதாவது ஒன்றைச் சொல்லியாக வேண்டும்.

"ஆமாண்டா! நா, என் மாமனாரோடதாண்டா போயிக் குட்டி போட்டேடே. உம் பொண்டாட்டியாட்டம் கீழ்ச்சாதிக் காரனோட போயிக் குட்டி போடலியே?"

அவள் சொல்வதில் எள்ளுப் பிரமாணமும் உண்மையில்லை. வேண்டுமென்றேதான் அப்படிச் சொல்கிறாள். குட்டையில் விழுந்து சேற்றைப் பூசிக்கொண்ட எருமை அண்டையில் போவோர் மீது வாலினால் வீசியாவது அடையாளம் செய்யத்தானே துடிக்கிறது?

வீட்டிற்குள் அடுப்பு வேலை செய்து கொண்டிருந்த மாரக்காள் இதைக் கேட்டதும் முயலைக் கண்ட வேட்டை நாய் பாய்ந்தோடிச் செல்வதைப் போலப் பாய்ந்து வெளியே வந்தாள். அவள் கையில் விளக்குமாறு இருந்தது.

"இந்தாடி நாதேரி முண்டே! இன்னொருக்கா அப்படிச் சொல்லு பார்க்கலாம். மயிரு கியிரு எல்லாம் அறுத்துடறே அறுத்து."

வீராயி மட்டும் அதுக்கு இளைத்தவளா என்ன? மாட்டுக் கட்டுத்தரை கூட்டிக்கொண்டு போட்டிருந்த கட்டையாப் போன விளக்குமாற்றை எடுத்து வந்து காட்டி, "வாடி பார்க்க லாம்..." என்றாள். சண்டைச் சத்தம் கேட்டதும் பெண்கள் கூட்டம் கூடிவிட்டது. வீராயி சண்டைக்குக் கிளம்பி விட்டாள் என்றால் அவள் வாயிலிருந்து கிளம்பும் அசிங்கமான கொச்சை வார்த்தைகளைக் கேட்பதென்றால் பெண்களுக்கு அலாதி விருப்பம். அதுவுமில்லாமல் கணவனில்லாத வீராயினுடைய வாழ்க்கையில் நிகழும் காதல் லீலைகளைப் பற்றிய புதிது புதிதான துப்புகளும் எதிர்த்தரப்புக்காரிடமிருந்து கிடைக்கு மல்லவா?

மாரக்காள் சொன்னாள்:

"ஆமாண்டி! பண்ணையங்கட்டற சக்கிலியெக் கூட்டிக்கிட்டு நாந்தா சோளக்காடு சோளக்காடா திரிஞ்சே! சிரிச்சுப் போன முண்டெ ஊருக்கு ஒவிடியம் பேச வந்துட்டா!"

ஆணைப்போல் ஏற்றம் இறைக்கவும், ஏர் உழவும் நிலத்தை மண்வெட்டியால் கொத்திப் புரட்டவும் ஆன வேலைகளை வீராயி செய்து வருவதால் அவளுடைய உடற்கட்டு ஆணுடை யதைப் போலவே இறுக்கமாகவும் பலம் பொருந்தியதாகவும் இருந்தது. அவள் எகிறி மாரப்பனுடையவும் மாரக்காளுடைய வும் குடுமிகளைப் பிடித்துக் கீழே அழுத்திக் கொண்டாளா னால் அவர்களால் திமிறி எழ முடியாது. அதற்கு அவளுடைய வாலிபமும் ஒரு காரணம்.

அவள் அண்மையில் நடத்திய புதிய சேஷ்டையை முதன் முறையாக மாரக்காள் ஊரறியப் பறை சாற்றிவிட்டாள். யாருமறியாமல் தான் நடந்து கொண்டதாக நினைத்திருந்த வீராயிக்கு இந்த ரகசியத்தின் அம்பலத்தை மாரக்காள் அம்பலப்படுத்தியதும் அடிபட்ட நாய்க்கெழும் சீற்றத்தைப் போல ரோசம் பொத்துக்கொண்டு வந்தது. கூடியிருந்த பெண் களும் இதைக் கேட்டதும் 'கசமுச'வென்று ஒருவருக்கொருவர் பேச ஆரம்பித்தனர்.

"ஆமாமா! பேத்தி பேரன் எடுக்கற வயசிலியும் நாந்தா..." என்று வாயை ஒருக்களித்துக் காட்டி கொச்சைத்தனமாகச் சைகை புரிந்தாள்.

மாரப்பன், மாரக்காளை வீட்டுக்குள் போகுமாறு கூறினான். அவளோ, "அவளென்ன பெரிய மாட்டுங்கன்னாப் போயிட்டா, நானு சின்ன மாட்டுங்கன்னா போயிட்டெ" என்று போக மறுத்தாள்.

அவனோ "அப்படியேதா இருந்துட்டுப் போறா. மொளங்கு துத்துன முண்டையும் நாம்பளும் சரியா?" என்று சமாதானப் படுத்தி வீட்டுக்குள் தள்ளி நடைக்கதவைச் சாத்தி சங்கிலியிட்டான்.

இதைக் கேட்டுவிட்ட வீராயி அவனை எப்படியாவது பத்துப் பேருக்கு முன்னால் கேவலப்படுத்த வேண்டுமென்கிற முடிவுக்கு ஏற்ப அவனை நேராகப் பார்த்து, "மொளங்கு துத்துனவன்னா சொன்னே! சின்னப்பயலே. வாடா மூஞ்சிலே தேச்சுடறேன்" என்று நாசித்துவாரங்கள் விரிய ஈற்றுத் தவறிய எருமைக் கிடாரி போல் மூச்சுவாங்கிக்கொண்டு நின்றாள்.

அவனுக்கு இதைக் கேட்டதும் பார்த்ததும் பயிரில் மேய்ந்த ஆட்டுக்குட்டி சொந்தக்காரனின் அதட்டலைக் கேட்டவுடன் தப்பிச் செல்ல சிறிய கடவில் நுழைந்துவிட்டு முன்னுக்கும் செல்ல முடியாமல், பின்னுக்கும் வரமுடியாமல் துடிப்படைப் போல அவன் மனது இதற்கு என்ன பதில் சொல்வதென்று புரியாது துடித்துத் தத்தளித்தது. ஆண்மை சிலிர்த்தது. ரத்த நாளங்கள் புடைத்து நெற்றிப் பொட்டு துடித்தது. கண்கள் சிவந்தன. மேய்ச்சல் காட்டில் நிற்கும் காளை திடீரென்று முட்ட வரும்பொழுது ஒருவனுக்கு ஏற்படும் அதிர்ச்சியும் பதைபதைப் பும் போல அவனுடைய அவயவங்கள் யாவும் பதறின. வெட்கமும் கோழைத்தனமும் நிறைந்த குரலில் அவளைப் பார்த்து, "ஏ நாதேரி முண்டே! அதை ஏங்கிட்ட வச்சுக்காத. மொறை கெட்டுத் திரிஞ்சின்னா நாயுங் கூடச் சமயத்திலே மூத்திரம் அடிச்சிடும். நல்லது கெட்டதையெல்லாம் மேலே போற ஒருத்தெ பார்த்துக்கிட்டுத்தாம் போவான். இப்படி மதம் புடிச்சுத் திரிஞ்சின்னா சொறி நாயைப் போல ஒரு நாளைக்கு மந்தையிலே சுத்தித் திரிய வேண்டியதா வந்திடும். ஓ! எல்லோருக்கும் படியளக்கற கடவுளே; இதெ நீதான் கேக்கணும்" என்று கூறி மண்ணை வாரித் தூற்றினான்.

அப்பொழுது அங்குக் கூடியிருந்த பெண்கள் அவளைப் பார்த்து, "ஆமாம் போ வீராயி, சின்ன மனுசெ பெரிய மனுசன்னு இல்லாமெ" என்று அவள் செயலுக்குக் கடிந்தனர்.

"அவெ பெரிய மனுசனா? அப்படியிருந்தா வெடியங்காட்டி பொம்பளையாட்டம் பங்கம் பொறுக்க வருவானா? அவனெ இந்த வெளக்கு மாத்துலியே நெறவியுட்டாத்தா என் சண்டாளம் ஆறும்" என்றாள்.

"என்ன இருந்தாலும் நீ பண்றது நல்லால்லே" என்றாள் ஒருத்தி. அவளின் பெண்மைக்கே முரணான செய்கையைக் கண்டு.

அங்குக் கூடியிருந்தவர்களின் அனுதாபம் தன் பக்கம் இல்லையென்பதைக் கண்ட அவள் "உனக்கென்ன தெரியும்? உன் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போ" என்றாள்.

சமாதானம் பண்ண வந்தவளின் முகத்தில் அடித்தாற் போல் இந்த வார்த்தையை வீராயி கூறவும், "அடி அம்மா! இடி பட்ட சோளம் கப்பியா இருந்தா என்ன? மாவா இருந்தா என்ன?" என்று இகழ்ச்சியும் கர்வமும் தொனிக்கக் கூறினாள்.

இதுவரையிலும் சுற்றி நின்றவாறு குசுகுசுவென்று அவளை நோக்கி அவர்கள் பேசியபோதெல்லாம் தன்னைப் பற்றித்தான் அவர்கள் தூஷித்திருக்க வேண்டும் என்று புழுங்கிக் கொண் டிருந்த அவளுக்கு இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட மனம் ஒப்பவில்லை.

"என்னடி சொன்னே! இடிபட்ட சோளம் கப்பியா இருந்தா என்ன? மாவா இருந்தா என்னவா? உங்களுக்கெல்லாம் பத்தரமா பூட்டுப்போட்டு வச்சிருக்குதோ?"

எதிர்பாராத இந்தத் தாக்குதலுக்குள்ளான அவள் "உன்ன நானு என்ன சொல்லிட்டெ. இப்படிச் சண்டைக்கு வாரியே! ஒரு வயசான ஆளெ இப்படிப் பேசலாமான்னுதானே கேட்டெ?" என்று இந்த வாய்ச்சண்டையிலிருந்து கழற்றிக் கொள்ள விரும்புபவள் போலக் கூறினாள்.

அவள் தணிவதைப் புரிந்து கொண்ட வீராயி "உனக் கென்னடி? எம்பக்கத்தூட்டுக்காரனும் நானும் இன்னைக்குச் சண்டை போட்டுக்குவோம். நாளைக்குச் சேந்துக்குவோம் உன்னை யாரடி நாயந்தீர்க்கச் சொன்னது?"

சண்டை வேறுதிசையில் திரும்பிவிட்டதைக் கண்ட மாரப்பன் இந்தச் சனியனுடன் வாய் கொடுத்தது தப்பாப்

போச்சு என்று முனகிக் கொண்டு மாட்டுக் கட்டுத்தரைப் பக்கம் சென்று மாட்டை அவிழ்த்துப் பிடித்துக்கொண்டு தோட்டத் துக்குப் புறப்பட்டு விட்டான்.

நடுவில் வந்து சிக்கிக்கொண்டவளும் எங்கே தனது பலவீனத்தை இவள் சந்தி சிரிக்க வைத்துவிடுவாளோ என்று பயந்து அந்த இடத்தைவிட்டுப் புறப்பட முனைந்தாள். இப்படி யவள் பிடித்த சண்டையை விட்டுவிட்டுப் புதுச்சண்டையைத் தொடருவாள் என்று எதிர்பார்க்கவில்லை. அப்படித் தெரிந் திருந்தால் வார்த்தையை நளினமாக வெளியிட்டிருப்பாள். அல்லது பேசாமலே இருந்திருப்பாள்.

"சரி சரி! நீங்க எப்படியோ போங்க. நல்லதச் சொல்லக் கெட்டதா வந்துட்டுது" என்று கூறிக்கொண்டே சென்று விட்டாள்.

இருந்தாலும் வீராயி அவளைச் சும்மாவிட விரும்பவில்லை. ஒரு பாட்டம் அவளுடைய கள்ளக்காதலர்களின் பட்டியலை யும், அவள் கணவனின் கையாலாகாத்தனத்தையும் அழுகி விட்ட மாட்டுக் கழுத்துப் புண்ணிலிருக்கும் புழுவை வெளித் தள்ளுவது போல வார்த்தைகளைக் கொட்டிக் கொண் டிருந்தாள்.

அவளின் முறைகேட்ட - கொச்சைத்தனமான செய்கை களைக் கண்ட கூட்டமும் கலைந்து சென்று கொண்டிருந்தது.

முக்காலியை வாசலில் எடுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டு பேச ஆரம்பித்தவள் எப்பொழுது நிறுத்தினாள் என்றே தெரியவில்லை! அவளுக்குச் சண்டைக்கு ஆள் கிடைத்து விட்டால் நாளும் பொழுதும் போவதைப் பற்றிக் கவலைப்பட மாட்டாள். அது அவளுடைய தனியான கலை. அந்தக் கலையை அவள் தனக்குக் கிடைத்த பெரும் பேறாக நினைத்தாள். காரணம் வீராயியிடம் வாய்கொடுப்பதென்றால் அந்தக் கிராமத்துப் பெண்களே அஞ்சித் தயங்குவார்கள். அதன் விளைவுகளைப் பற்றிக் கணவன் உள்ள மற்ற பெண்கள் கொண்ட கவலையைப் போல அவள் கொள்வதற்கு அவளுக்குக் கணவன் இருக்கிறானா, என்ன? இதனால்தானோ அவள் தன் கணவனுக்கு விஷம் கொடுத்துக் கொன்று விட்டாள்?

# 16

**கா**ர்கால இரவு. வானத்தில் அழுக்குப் பஞ்சுக்குவியல் போன்ற மேகங்கள் திட்டுத் திட்டாய் எழுந்தன. மழை வருவதற்கான புழுக்கமும் இறுக்கமும் கலந்து மந்தமாக இருந்தது. வானில் வெட்டியது. காற்றாடித் துருத்தியிலிருந்து ஓசையெழுவது போல வடக்குப் பக்கமிருந்து 'உஷ்' என்று காற்றுக் கிளம்பியது. மழை வாடை காற்றில் கலந்து ஈரப்பசை யுடன் உடலையும் உள்ளத்தையும் குளிர்வித்தது. மாட்டுத் தொழுவத்தில் கட்டியிருந்த மாடுகள் கொம்பசைக்கும் பொழுது கொம்பிலிருந்து எழும் மணியோசை காற்றில் கலந்து நாதமிசைத்தது.

வாசலில் வளர்ந்து நின்ற வேப்பமரத்தின் இலைகளுக் கிடையில் புகுந்து தழுவி வந்த காற்றின் இசையும், எருக்குழியி லிருந்து வெளிவந்த மண்ணோடு கலந்து மக்கிய சாணத்தின் மணமும் காதுக்கும் மனதுக்கும் இதமளித்தன.

வேகவைத்துத் தாளித்த தட்டைப்பயறை ஒவ்வொருவருக்கும் தட்டில் கொட்டிக் கொடுத்தாள் மாரக்காள். எல்லோரும் அமர்ந்து பயறைச் சாப்பிட ஆரம்பித்தனர். மாரப்பனின் கரம் பயறை எடுத்து வாயில் போடப் பற்கள் மென்று கொண்டிருந் தனவே தவிர அவன் மனது, அன்று மத்தியானம் மாடு மேய்த்துக் கொண்டிருந்த இடத்தில் செங்கோடன் என்பவன் தனது மகன் கந்தனுக்கும் பாப்பாயிக்கும் உள்ள தொடர்பையும் அவர்கள் இருவரும் தனிமையில் மாடு மேய்க்கும் பொழுது நடந்து கொள்ளும் போக்கையும் ஒன்றுக்கு இரண்டாகக் கூறி - இன்னும் சில நாளில் இரண்டு பேரும் ஊரை விட்டு ஓடிப்போகத் திட்டமிட்டு உள்ளனர் என்று ஒரு படி மேலே சென்று கூறி வைத்தான்.

அவன் மூளையில், செவ்வெறும்பு கடித்து ஊருவது போல அதைப் பற்றிய நினைவு அவன் சிந்தனையில் அரித்துக் கொண் டிருந்தது. எப்படி அந்த விஷயத்தை மகனிடம் ஆரம்பிப்பது என்றும் துடித்துக் கொண்டிருந்தது.

மாரக்காளின் சிந்தனையோ, வேறு திசையில் ஓடிக் கொண்டிருந்தது. மகள் ஊருக்கு வந்து விட்டுப்போய் ஆறு ஏழு மாதங்கள் ஆகின்றன. இங்கிருந்தும் யாருக்கும் போய்ப் பார்த்துவிட்டு வர நேரமில்லை. "நாய்க்கு நிற்கத்தான் நேர மில்லை. ஆயினும் வேலையில் ஒன்றுமில்லை" எனும் பழமொழி போல அவர்களின் அலைச்சல் இருந்தது. விடியற் காலை நான்கு மணிக்கு எழுந்தால் இரவு எட்டு மணி வரையி லும் சற்றும் இளைப்பாறக்கூட நேரமில்லாமல்தான் உழைக்கி றார்கள். இருந்தாலும், சாதாரண உணவு, உடைத் தேவை களைக் கூடக் கடன் தொல்லையின்றி ஏனோ சமாளித்துக் கொள்ள முடியவில்லை. இது அவர்களுக்கும் புரியவில்லை. அவர்களைப் போல் உழைக்கும் மற்றவர்களுக்கும் புரியவில்லை. இந்த விடுகதையை விடுவிக்கும் சக்தி ஒருக்கால் அவர்களிடம் இல்லையோ? இல்லை. இனிமேல்தான் அவர்களிடயே இருந்து யாராவது பிறப்பெடுக்க வேண்டுமோ?

இதையொரு வாழ்க்கை முறையாக அவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். சொல்லப்போனால் அவர்களின் முன்னோர்கள் இவர்களைவிடவும் உழைத்திருக்கிறார்கள். எத்தனையோ கஷ்டங்களையும் ஏற்றிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் ஒப்பிடும்பொழுது இவர்கள் வாழ்க்கை எவ்வளவோ பரவாயில்லை. இந்த நினைப்புத்தான் ஒருக்கால் அவர்கள் சிந்தனைகளை முடமாக்கிவிட்டனவோ? அல்லது பூமியின் வயிற்றில் சலனமின்றிப் பக்குவமடைந்து - ஒருநாள் திடீரென்று பீறிட்டுக் கிளம்பியெழும் எரிமலைக் குழம்பு போல, அவர் களின் உள்ளேயே வாழ்க்கை, நிர்ப்பந்தமாய் சுமத்தியிருக்கும் கொடுமைகளும், துன்பங்களும், ஒரு நாள் திடீரென்று வெறுப்பாகவும் வீராவேசக் கோபமாகவும், இந்தச் சமூகத்தின் அக்யானங்களையெல்லாம் துடைத்துச் சுத்தம் செய்யச் சலனமின்றிப் பக்குவமடைந்து கொண்டிருக்கிறதோ?

"பழனியம்மாளப் பாத்துட்டு வந்து ரொம்ப நாளாவுது மனசுக்கு பொக்குன்னு இருக்குது" என்றாள் மாரக்காள்.

சுவை மிக்க பதார்த்தத்துடன் கலந்துவிட்ட மண்துகளை மெல்லவும் முடியாமல் துப்பவும் முடியாமல் தத்தளிக்கும் ஒருவனின் மனோநிலையில் அவன் அப்பொழுது சிக்கியிருந் தான். அவன் மனதில் புழுங்கிக் கொண்டிருப்பதை வெளிக் கொட்டுவதா? அல்லது மனைவியின் கேள்விக்குப் பதில் சொல்வதா?

'போகணுந்தா... பிள்ளைக்கும் அங்கே என்ன வேலை வெட்டியோ? யாரும் வந்து பார்த்துட்டுப் போகலியேன்னு அதுக்கும் மனப்பாடாத்தான் இருக்கும். என்ன செய்யறது! ஊருலே இருக்கிற பசங்க எவ்வளவு கருமானமா ஆயி அப்பெ சொல்ற வேலையச் செய்யிது. நம்ம பயலும் பாக்கற வேலையப் பாத்துட்டுப் போற மாயம் தெரியாம வார மாயம் தெரியாம போயிப்பாத்துட்டு வந்துடலாம். ஆனா நம்ம பயதா தெள்ள வேரி பெத்ததாப் போயிடுச்சே' என்றான் மனதில் நினைத்ததை வெளிப்படையாகச் சொல்லாமல்.

என்றைக்கும் இல்லாத முறையில் பையனைப் பற்றி மாரப்பன் இப்படிப் பேசியது மாரக்காளுக்கு மிகுந்த வேதனையையும் மனக்கிலேசத்தையும் உண்டுபண்ணியது. அவன் பிற பையன் களைப் போலப் பீடி - சிகரட்டோ கள்ளுச் சாராயமோ குடிப்ப வனல்ல. அவன், சிறுவயதில் பள்ளிக்கூடத்துக்குப் போக வசதி யில்லாமல் ஆடுமாடு மேய்த்து விட்டு இரவுப் பள்ளிக்கூடத் துக்குப் போகும்பொழுது அவனுடன் படிக்க வரும் சில பையன்கள் யாருடைய தோட்டத்திலாவது சென்று தேங்காய் பறிப்பதும், வெள்ளரிக்காய் திருடுவதுமான செயல்களில் ஈடுபட்டுக் கண்டிக்கப்பட்டனர். அப்பொழுது கந்தனுடைய நடத்தையையும் அவன் படிப்பில் வெகு கெட்டிக்காரனாய் விளங்கியதையும் ஊராரும் உபாத்தியாயரும் புகழ்ந்து பேசி யதைக் கண்ட மாரப்பன் நம்ப பையனுக்கு வசதியிருந்து பள்ளிக் கூடத்திலே படிக்க வச்சா சட்ச்சாக்கூட வந்துடுவான்னு ஊருலே பேசிக்கிறாங்க என்றும் அவன் ஒரு காலத்தில் கூறும்படியாக அவனுடைய நடத்தை இருந்து வந்திருக்கிறது. இன்று மட்டும் என்ன? தாய் தகப்பன் சொல்லை அவன் எந்தவிதத்தில் மீறி நடந்திருக்கிறான்? அப்படி ஏதாவது ஒரு குற்றசாட்டை அவர்களால்தான் கூற முடியுமா? பின் ஏன் தன் கணவன் அப்படிக் கூறினான்? அவளால் ஒரு பதிலும் இதற்குக் கண்டுபிடிக்க முடியவில்லை.

"ஆமா, நாம பெத்த பிள்ளைகள்லே எது வூட்டுக்கடங்காமே நடந்துட்டுது? அப்படித்தா நாம என்னைக்கு பழனியம்மாளெ பாத்துட்டுவரச் சொல்லி அத மீறி நடந்துட்டான்? ஒரு ஆளுக்கு ஆன பயெல முன்னாலே வச்சிக்கிட்டு இப்படி பேசப்படாது" என்று கணவனைக் கடிந்து கொள்வது போலப் பேசினாள்.

"காலம் முச்சூடும் நீ இப்படிப் பேசித்தா அவனெக் கெடுத்துக்கிட்டு வாறே" என்று கூறி, அவன் எதையோ சொல்ல

வந்த ஒன்றைப் பலங்கொண்ட மட்டும் அடக்கி நிறுத்துபவன் போல முகம் சிவந்து புருவங்கள் நெறிபட்டுத் துடிக்கக் கந்தனை ஏறிட்டுப் பார்த்தான். கந்தன் மேலும் என்ன சொல்லப் போகிறான் என்று அறிந்துகொள்ள ஆவல் மிக்கவளாக அவளும் அவனை ஏறிட்டு நோக்கினாள்.

இருவர் பார்வைகளும் சற்றுச் சந்தித்துத் துடித்தன. அவன் எதைத்தான் மனதில் வைத்துக் கொண்டு புழுங்குகிறான்? சொல்வதைத்தான் சீக்கிரம் சொல்லித் தொலைக்கட்டுமே!

"நீ என்ன சொல்றே? மனசிலே இருக்கிறதைத்தா மனம் விட்டுப் பேசேன். இங்கே அசலு சனங்க யாராவது இருக்க றாங்களா என்ன?" என்றாள்.

கந்தனுக்கும் தகப்பனுடைய கோபம் புரியவில்லை. அப்படி யும் அவன் மனதறியத் தகப்பன் கூறிய ஒன்றையும் தட்டி நடக்கவில்லை. பின் எதற்காக இப்படிப் பேச வேண்டும் என்று யோசித்தான். அவன் தன் காதல் உறவைப் பற்றிச் சிந்திக்கவே யில்லை. அதைப் பற்றி யாருக்கும் தெரியாதென்றல்லவா அவன் நினைத்து வருகிறான்.

நன்கு வாழ்ந்து ஓய்வற்ற உழைப்பால் தளர்ந்து குன்றிப் போன கிழட்டு எருதைப் போல அவன் பார்வையில் சோகமும், துக்க மும் நிழலாடின. கோபத்தின் சாயலைக் கூடத் தன் பார்வையில் உணர்த்த முடியவில்லை. அதற்குள் அவ்வளவு பலவீனப்பட்டு விட்டன அவன் உடலும் மனமும்.

"டேய்! உனக்கும் பாப்பாயிக்கும் என்னடா ஒறவு? அப்படி ஒறவுன்னாலும் அவ என்ன சாதி? நீ என்ன சாதி?" என்றான் மாரப்பன் திடீரென்று.

கந்தனுக்கு இப்பொழுதுதான் விசயம் புரிந்தது. யாருக்கும் தெரியாதென்று நினைத்து வந்த அந்த ரகசியம் எப்படியோ அவன் தகப்பனுக்கும் எட்டிவிட்டது. தகப்பனை நேர் கொண்டு பார்க்கவும் அவன் மனம் கூசியது. அவன் இதற்கு என்ன பதில் சொல்வான்?

இதுவரையிலும் கந்தனை ஒரு குழந்தையாகவே எண்ணி வந்த மாரக்காளுக்கு இப்பொழுதுதான் அவனும் ஒரு வாலிபன் என்றும் தங்களை எதிர்பாராமலேயே எந்த முடிவிற்கும் வர அவனுக்கு இயற்கை, வளர்ச்சியையும், மனோபலத்தையும் அளித்திருக்கிறது என்றும் யூகித்தாள். அப்படியேயிருப்பினும் அவன் மேற்கொண்டிருக்கும் செயல் மன்னிக்க முடியாத

ஒன்றென்றும் எண்ணினாள். பெற்று வளர்த்து வாலிபனாக்கிய பெற்றோர்களுக்குத்தான் ஒரு பெண்ணைப் பார்த்து மணம் முடித்துவைக்கும் உரிமையும் அதிகாரமும் இருக்கிறதென்று சிந்தித்தாள். அவன் எப்பேர்பட்ட பழியை அந்தக் குடும்பத்திற் குக் கொண்டுவந்துவிட்டான். வாழ்க்கையில் அனுபவிக்கிற இத்தனை கஷ்டங்களும், துயரங்களும் போதாதென்று சமூகத்தின் தாக்குதலுக்கும், தண்டனைக்கும் வேறுமா அந்தக் குடும்பம் ஈடு கொடுக்க வேண்டும்? வாழ்க்கைப் பாரத்தால் கூனிக் குறுகிய அந்தக் குடும்பத்தால், இவ்வளவு பெரிய இடர்ப்பாட்டுக்கு எங்ஙனம் ஈடு கொடுக்க முடியும்?

என்ன இருந்தாலும் பெற்ற தந்தையின் மனதைப் போல இவ்வளவு சீக்கிரத்தில் உணர்ச்சி வசப்பட்டு கொந்தளிக்க வில்லை. "உனக்கு யாரு சொன்னது? வழியிலே போறவெ வாரவெ பேச்சைக் கேட்டுக்கிட்டுக் குதிக்காதே" என்றாள்.

"நானொன்றும் தெரியாமெ பேசலே. ஏண்டா லே! அந்தப் பற நாயோட சோளக்காட்டு வரப்பிலே சுத்தலே? நெசத்தச் சொல்லுலே. இன்னைக்கே சாவுக்கெரை ஆக்கிவிடுவேன்" என்று தன்னை மறந்த கோபத்தில் காயடிக்கப்படும் பன்றி மாதிரி இரைந்து கத்திக்கொண்டிருந்தான்.

"இல்லை" என்றான் விரக்தியும் அழுத்தமும் நிறைந்த குரலில்.

'என்ன சொன்னே?' என்று துடிதுடித்து எழுந்த அவன் கந்தனின் தலை உச்சிமயிரை எட்டிப் பிடித்து உலுக்கியபடி "டேய் படுவாப்பயலே! நெசத்தச் சொல்லு. எம்மானம் மருவாதியைக் கெடுத்துப்புடாதேடா" என்றான்.

எங்கே ஆளுக்கு ஆளான வாலிபப் பையனை அடித்து விடுவானோ என்ற பயத்தில் "சர்தா உடு. என்ன ஏதுன்னு வெசாரிச்சுத் தெரிஞ்சுக்காமலேயே கட்டுப்புடிக்க போயிட்ட" என்று அவன் பிடியிலிருந்த கந்தனின் தலைமயிரை விடுவித்து விட்டாள் மாரக்காள்.

ஓடிக்களைத்த நாயின் நாக்கு தொங்குவது மாதிரி பயத்தால் துவண்டு களைத்துப் போய் அமர்ந்திருந்தான் கந்தன். அவன் இதயம் மேலேறிக் காதுப்பக்கம் சேர்ந்து விட்டது போல காதுச்சவ்வுகள் பட்பட் என்று அடித்துக்கொண்டன. அவனுக்கு எதுமே புலப்படவில்லை

எந்த ஆண்தான் கள்ளதனமாகப் புரிந்த காதலை ஏற்றுக் கொள்ளாத பெற்றோர்களின் முன்னிலையில் மனம் கூசாமல்

*காதலைச் சொல்லத் துணிவான்? அப்படிச் சொன்னாலும் அதனால் எழும் விளைவுகளை எதிர்நோக்கும் மனோபலமும் தற்காத்துக் கொள்ளும் திடச்சித்தமும் எத்தனை பேருக்கு இருந்து விடுகின்றன?*

"ஒண்ணு அவெ இந்த வூட்டுலே மானம் மருவாதியோட இருக்கணும். இல்லே நான் கயித்தப் போட்டுக்கிட்டுத் தொங்கணும்" அவன் கண்கள் கண்ணீரைச் சிந்தின. பலவீனமிக்க எண்ணங்கள் அவன் மனதைச் சூழ்ந்தன. சமூகத்தின் எந்தெந்தத் தாக்குதலுக்குத்தான் அவன் ஈடுகொடுப்பான்? குடும்ப பாரம், வறுமைக் கஷ்டம், கடன் தொல்லை, சமூக நிர்ப்பந்தம், வலியோர் தாக்குதல் - இத்தனைக்கும் ஒருவன் மனம் சலியாது நிற்பதென்றால் அது யாரால்தான் முடியும்? அதுவும் ஓர் ஏழைக் குடியானவனுக்கென்றால்....

ஏனோ அவள் மனது மட்டும் மகன் மீது இன்னும் கோபம் கொள்ளவில்லை. இதை எப்படியும் முற்றாமல் ஆற்றிவிட வேண்டுமென்று எண்ணியவளாக மகனை நோக்கி "தம்பி அப்படி ஏதாச்சும் நடந்துடப் போவுது, அவுங்க பறச்சாதி. நாமளோ கவுண்டசாதி. அப்பறம் நம்மெ சாதி வெலக்கி வச்சிட்டாங்கன்னா நாம செய்யறதுக்கு ஒண்ணுமே இல்லே. உத்தார் ஓரம்பறை, சாதி, சனங்கள் யாரும் நம்மெ ஏறெடுத்துப் பாக்கமாட்டாங்க, நாயக்கூட நாலுபேரு கூப்புடுவாங்க நமக்கு அந்த மதிப்பு கூட இருக்காது. சாகுங்காலத்திலே எங்களை எல்லா கருத்தையும் எழந்து அனாதைப் பொணமாச் சாக வச்சிடாதே" என்று பொங்கி வந்த அழுகையை அடக்கி முகத்தைத் தன் இரண்டு கரங்களாலும் ஏந்திப் பிடித்தவளாக விம்மினாள்.

ஆதரவற்ற குழந்தையைப் போலத் தேம்பித் தேம்பி அழும் அவளின் நிலை அவன் மனதைக் கரைத்துவிட்டது. அவனை அவள் எவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்திருப்பாள்! இள வயதிலேயே எங்கே தாய்ப்பாலை மறக்கச் செய்தால் குழந்தை ஏமாந்து போகுமோ என்று பயந்தவளாக அவனே நினைவு தெரிந்து வேண்டாமென்று குடிப்பதை நிறுத்தும் வரை - அவள் அவனுக்குச் செல்லமாகப் பாலூட்டி வந்தாள். அவன் வயது வந்து குறும்பு செய்யும்பொழுதெல்லாம் அவன் தந்தை கோபப்பட்டு அடிக்க முனையும் பொழுது அவன் தாயார் குறுக்கிட்டு எத்தனை முறை அவனுக்கு விழ இருந்த அடியை, தான் வாங்கியிருக்கிறாள்.

அவன் ஒருமுறை கடுமையான காய்ச்சல் கண்டு நாட்கணக்கில் கட்டிலில் படுத்திருந்த பொழுது தூக்கம், களைப்பின்றிக் கட்டிலருகே இரவு பகல் பாராமல் கண்ணீர் சிந்தியபடியே பணிவிடை செய்ததும் அதைத் தொடர்ந்து என்ன காரணத்தாலோ ஒரு காலும் ஒரு கையும் செயலற்றுப்போக அவனைத் தூக்கிக் கொண்டு மைல் கணக்காக சாமியிடமும் பூசாரியிடமும், வைத்தியனிடமும் நடந்து அதைக் குணப்படுத்தியதும் ஆன தாயன்பை அவன் ஒரு கணம் எண்ணிப் பார்த்தான். அவன் கண்கள் பனித்தன. மனது இளகியது. தாயன்பிற்கும் காதல் பாசத்திற்குமான தவிர்க்கமுடியாத மனப் போராட்டத்தில் அவன் சிக்கித் தவித்தான். இந்நேரம் அவன் தந்தைக்குப் பதில் கூறுவதாக இருந்தால் வைராக்கியத்தோடு "நீ சொல்வது நடக்காது" என்றே கூறியிருப்பான். ஆனால் அவன் தாயின் முன்னிலையில் அவனால் அப்படிப் பேச முடியவில்லை. இன்னும் சற்று நேரம் தாயின் முன்னிலையில் அவன் இருந்தால் தாயன்பின் பலவீனத்தால் எங்கே - தான் மனம்விட்டு எதையாவது உளறிவிடுவானோ என்று பயந்து எழுந்து சென்று விட்டான்.

அவன் எழுந்து சென்றதும் மாரக்காள் கணவனிடம் "ஆமா உனக்கு இதெல்லாம் யாரு சொன்னா?" என்ற கேட்டாள்.

'யாரு சொன்னா என்ன? ஊருக்குள்ளே எல்லாருந்தா பேசிக்கிறாங்க. இன்னமே ஏதாவது எங்காதுக்கு தப்புத் தவறா வந்துன்னா உங்க ரண்டு பேரையும் மயிரப்புடுச்சு வெளியிலே இழுத்து வுட்டுடுவே.

"வலுசத்தனமா அவெ அப்படி ஏதாவது நடந்திருந்தாலும் இன்னமெ அப்படி நடக்க மாட்டான்" என்று குழைவும் பாசமும் தொனிக்கக் கூறினாள்.

அவன் ஒரு பதிலும் பேசவில்லை. செம்பிலிருந்த தண்ணீரை எடுத்து வாயில் ஊற்றிக் கொப்பளித்துக்கொண்டே மடக்மடக்கென்று ஒரு செம்புத் தண்ணீரையும் குடித்துத் தீர்த்தான். தண்ணீர் இறைக்கும் ஏற்றத்தில் பின்னுக்கு வரும் எருதைப் போல 'கக்கஸ்' என்று மூச்சு வாங்கினான். தலையில் சுற்றியிருந்த துண்டை எடுத்து மூஞ்சியை அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

"அவனெ இன்னமே ஏதும் பேசிப்புடாதே. ஆளுக்காளா வளந்திட்டவே ஒரு வேளையைப் போல எப்பவும் இருந்துடாது."

அவன் பார்வை எதிரிலிருந்த சுவரை நோக்கிக் குத்திட்டுப் பதிந்திருந்தது. இடது கை ஆள்காட்டி விரலிலிருந்த நகத்தை வலதுகை ஆள்காட்டி விரலாலும் பெரு விரலாலும் கிள்ளிப் பிய்த்துக் கொண்டுவர, ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவன் தன்னை மறந்த நிலையில் அப்படி என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்? பழைமையில் ஊறித் திளைத்த அந்த மூடச் சம்பிரதாயங்கள் கொண்ட மனதில் என்னதான் ஊழிப் புயல் வீசியடிக்கிறதோ?

திடீரென்று தென் கிழக்குத் திசையிலிருந்து காற்று வீசியது. கவிந்திருந்த மேகங்கலைந்த இடங்களில் நட்சத்திரக் கூட்டங்கள் கண் சிமிட்டி மினுக்கின.

அனைவரும் அவரவர் படுக்கைக்குச் சென்றனர். கந்தனுடைய மனதில் என்னவோ அமைதியில்லை. கஷ்டம் மிகுந்த குடும்ப நினைவு ஒரு பக்கம். மனதை அள்ளும் காதல் நினைவு மறு பக்கம். எதைத் தவிர்ப்பது? எதைக் கொள்வது?

மனிதன் எதை வேண்டுமானாலும் தவிர்த்து விடுவான்; அவனுடைய இளமைக்கால முதற் காதல் உறவிருக்கிறதே, அதை இழப்பது அவ்வளவு சுலபமல்ல. உப்புத் தண்ணீரைக் குடிக்கக் குடிக்கத் தாகம் மிகுவது போலவே காதலுறவின் மறக்க வொணா நினைவும் நெஞ்சில் தலைதூக்கும் போதெல்லாம் மனம் அமைதியுறாது. வேட்கையின் அலைநாதம் நாடிக் குருத்தைத் தொட்டுத் தடவும் பொழுதெல்லாம் நெஞ்சம் சாந்தியடையாது.

அவனும் மனிதப் பிறவி தானே! காதலுக்குச் சாதி சமயம் உண்டா? எப்படியோ களங்கமற்ற அவன் உள்ளத்தில் அவளின் காதல் நினைவு முத்திரையிட்டு விட்டது. இனி அவளை மறப்பது முடியாத காரியம்.

எல்லோரும் உறங்கி விட்டார்கள். தினமும் இரவில் மாட்டுக்குத் தீவனம் போடுவது அவனுடைய வேலை. ஆனால் அன்று அவன் தீவனம் போடச் செல்லவில்லை. மனதில் அமைதியின்மையே அதற்குக் காரணம்.

கட்டுத்தரைக்குச் சென்று தட்டை அள்ளி மாட்டுக்கு முறித்துப் போட்டுவிட்டுத் திரும்பினான். அப்பொழுது உஸ் என்ற சப்தம் தட்டுப்போரின் நிழலிலிருந்து எழுந்து வந்தது. அவன் காதில் விழுந்தது. அது மனிதர் சத்தமே - அதில் ஒன்றும் சந்தேகமில்லை.

சத்தம் வந்த திசையை நோக்கி "யாரது" என்றான்.

"நான்தான்" என்றது ஒரு குரல். அதில் நடுக்கமும் பெண்மையின் துடிப்பும் கலந்து இழையோடின.

அந்தக் குரல் அவன் ஏற்கனவே கேட்டுப் பழகிய குரல்போல் ஒலித்தது. "அது யாராக இருக்கலாம்? பாப்பாயியின் குரலோ? அவள் இந்த நேரத்தில் எதற்கு வருகிறாள்?" அவன் அவள் நினைவாகவே உருகி அவளை நெருங்கும்போதெல்லாம் அவள் அவனை நெருங்க விடாமல் பேச்சுச் சுவையோடு அனுப்பி வைத்து விடுவாளே! அவள் தன்னைக் காத்துக் கொள்வதில் அவ்வளவு கருத்தாக இருப்பவள். அப்படிப்பட்டவள் இந்த அர்த்தசாமத்தில் எதற்காகத் தேடி வரப் போகிறாள்?

இத்தனை நாளும் அவள் அவனைச் சோதித்துப் பார்த்திருப்பாளோ? அல்லது தனது குருதி கொப்பளிக்கும் காதல் வேட்கையின் தணிக்க முடியாச் சித்திரவதையைத் தாங்க முடியாமல் அவளும் குழைந்து மருகிப்போயிருப்பாளோ! யாருக்குத் தெரியும்.

நிழலிலிருந்து அந்த உருவம் அவனை நோக்கி வந்தது. என்ன ஆச்சரியம்! பாப்பாயிதான்!

"பாப்..." அவன் அவள் பெயரை முடிக்குமுன்னரே அவன் வாயில் கையை வைத்து மூடிப் பேசாமல் சற்றுத் தூரம் வரும்படி காதோரம் கிசுகிசுத்தாள். இருவரும் பேசாமல் நடந்து சென்று ஒரு மரத்தின் அடியில் நின்றனர்.

* * *

மாடுகளின் தீவனம் கடிக்கும் சத்தமும், அசைபோடும் ஓசையும் இரவின் நிசப்தத்தை இலேசாகக் கலைத்தன. அப்போது வெளுத்த அடிவயிறும், கறுத்த மார்பும், நீண்டுயர்ந்த கால்களும், குறுகிச் சிறுத்த உடம்பும் கொண்ட அக்காண்டிப் பறவை ஈடேற முடியாத காதலின் சோகமும் விரக்தியும் நிறைந்த மனித ஆத்மாவின் இதயத்தை விண்டு கீறிக் கிளறுவது போல அந்த இரவு நேரத்தில் தேம்பித்தேம்பி எங்கோ இருந்தபடி சோக கானம் இசைத்தது.

அது இன்றைக்கு மட்டுமா பாடுகிறது,

மனிதன் என்றைக்குக் காதலிக்கவும் கண்ணீர் சிந்தி உருகவும் கற்றுக் கொண்டானோ, அன்றிலிருந்தே அந்தப் பறவையும் தாபம் நிறைந்த ஆத்மாவுக்கு - இதயத்துக்கு ஆறுதல் அளிப்பது போலக் கார்கால இரவுகளில் பாடிப் பறந்து திரிகிறது. அந்த

இசையை இரவு முழுவதும் கேட்டுக்கொண்டே நம் நெஞ்சி லிருக்கும் வேதனையைக் கண்ணீராக வடித்துக் கொண்டே யிருக்கலாம் போலிருக்கிறது. மனிதன் இசைக்கும் சோக கானத் தைவிட வீணையெழுப்பும் விரக தாபத்தைவிட - புல்லாங்குழல் எழுப்பும் காதல் வேட்கையை விட - அந்தப் பறவையின் குரலில் மட்டும் இயற்கை என்ன அற்புதமான சோக ஒலியைப் படைத்து விட்டது. அதைக் கேட்டுக்கொண்டே காதல் நினைவினால் கனத்த இதயத்தை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருக்கலாம் போலிருக்கிறது.

வாழ்க்கை பூராவும், காலங்காலத்துக்கும் அது தேவைதானே? மனித சமூகத்தில் காதல் தகிப்பும், காதல் முறிவின் மறக்க வொணாச் சோக உறுத்தலும் ஒரு தொடர் கதைதானே?

“இந்த நேரத்திலே எதுக்கு வந்தே?”

“நா வரப்படாதா?” - கட்டு மீறிப் பாய்ந்துகொண்டு வரும் அழுகையை அடக்க முயல்வது போலத் தொண்டை இறுகிக் கரகரத்தது.

“நா அதுக்குச் சொல்லலே, வழக்கத்துக்கு மாறா இருக்கு துன்னு கேட்டேன்”

“ஆமா” - அவளது குரலில் வைராக்கியம் தொனித்தது.

கார் காலத்துக்குரிய பருவநிலை மாறறங்களும், இயற்கை உலகுக்களிக்கத் தன் கருப்பையில் சூல் கொண்டிருக்கும் மதிப்பிடற்கரிய இரகசியப் பொக்கிசங்களும் அந்த இரவில் அந்தப் பிரதேசம் முழுவதும் பெருமூச்சு விட்டுச் சலன மெழுப்பின.

“பாப்பாயி...” அவன் குரல் நடுங்கியது. அவள் கரத்தைப் பிடித்து அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான். சற்று முன் இருந்த மனோபாவம் இப்பொழுது இல்லை. இதன் பின் விளைவுகள் எதுவாக இருக்குமென்று கூட நினைத்துப் பார்க்கவில்லை. அவன் ஒரே உணர்ச்சி மயமாய் நின்றான்.

அப்பொழுது எங்கிருந்தோ வந்த குளிர்க்காற்று சோபை யிழந்த அவள் முகத்தையும், கலைந்து கிடந்த கூந்தலையும், திறந்திருந்த ரவிக்கையையும் தழுவித் துழாவிச் சென்றது. சோர்ந்து மயங்கிய தன் கண்களை உருட்டி விழித்தபடி அவனைச் சோகமும் கோபமும் பொங்கப் பார்த்தபடி அவன் பிடியிலிருந்து விலகி நின்றாள்.

அவனோ இளமை வெறியோடும் தணியாத வேட்கைக் கனலோடும் அவளை நோக்கினான். இருட்டில் அவள் முகத்

தில் தோன்றும் குண மாறுதலை அவனால் கண்டுகொள்ள முடியவில்லை.

இரண்டாம் தேய்பிறைச் சந்திரன் கீழ்வானில் உதயமாகிக் கொண்டிருந்தான். புகை கலந்தாற் போன்ற மந்தமான ஒளிக்கிரணங்களை வாரியிறைத்தபடி மேலும் மேலும் உயர்ந்து கொண்டே வந்தான். மரத்தின் பக்கமாக நின்றுகொண்டிருந்த அவர்கள் மீது உதயச் சந்திரனின் ஒளிக்கதிர்கள் பட்டு அவர்களை இனங்காட்டிக் கொண்டிருந்தன.

அவள் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். நிலவொளியில் அவன் முகம் நன்றாகத் தெரிந்தது. வெட்கமும் வேதனையும் நிறைந்த பாரம் அவள் இதயத்தைக் கனக்கச் செய்தது. மௌனமாக ஆசையையும், வேட்கையையும் வெளிப்படுத்திய அவனது கண்களைக் கண்டாள். பளிங்கு போல் இருந்த அவன் முகத்தில் இழிவான - கீழ்த்தரமான வேட்கையின் ரேகை கீறலோடியிருப் பதைக் கண்டாள்.

"நான் அதுக்கு வர்லே" - அவன் நெஞ்சில் அரைகுறையாக இருந்த சந்தேகத்தையும் நீக்குவது போல அவள் குரல் தொனித்தது. "நம்மைச் சம்பந்தப்படுத்திய சில விஷயங்களெப் பேசலாம்னு வந்தெ."

தாகம் நிறைந்த கண்களால் அவளை அவன் நோக்கினான். பயத்தால் நடுங்கும் கால்களைப் பலமாக ஊன்றிக் கொண்டு உணர்ச்சியோ, சிந்தனையோ எதுவுமின்றி வெந்து குழைந்த நிராசையடைந்த ஆத்மாவை அரிக்கும் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

குழைந்துபோன மாம்பழக் கீற்றுப்போல நவுப்புத் தட்டிய வான்முகட்டில் நிலவொளி தோய்ந்து வடிந்தது. தவளைகளின் வறட்டுக் கூச்சலும், சில்வண்டுகளின் ரீங்காரமும் இடை யிடையே விட்டு விட்டு எழுந்தன.

"என்ன வெசயம்?"

"நாளைக்கு என்னப் பொண்ணுப் பாத்து நிச்சயம் பண்ண யாரோ வாரதாவ எங்கம்மா சொல்லுச்சு."

எழுச்சியுடனும், கோபத்துடனும், இளமை துள்ளும் கண்வீச்சுடனும் அவளை அவன் பார்த்தான். அவள் அவன் எதிர்பார்க்காத ஒரு செய்தியை எதற்குத்தான் கூறினாளோ? அவன் தேகாந்திரமும் நடுங்கிக் குலுங்கியது. நெற்குருத்தைப் பூச்சி அரிப்பதுபோல அவனுடைய உள்ளத்தில் கவலை அரிக்க ஆரம்பித்து விட்டது.

“உனக்குச் சம்மதந்தா?” - கலக்கமடைந்த கண்களால் லேசாகப் புகை மூட்டம் சூழ்ந்த விண்ணகத்தில் வெளிறிய நிலவொளியைப் பார்த்துக்கொண்டு எதையோ சிந்தித்து ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டவன் போல “ம்...ம்... விதி யாரைவிட்டது?” என்று புலம்பினான்.

துக்கத்திலே எழுந்த வெறுப்பும், கசப்பும் அவளது கனன்ற வதனங்களில் ரேகையிட்டன. அதரங்களை இறுக மூடிக் கொண்டு நெடுமூச்சு விட்டாள்.

“எனக்குச் சம்மதம்னா உன்னைத் தேடிக்கிட்டு நான் எதுக்கு வாரேன்?” -சலிப்பும் கசப்பும் கலந்த குரலில் கேட்டாள்.

அவன் கண்கள் வெறுப்பையும், உள்ளூறக் குமுறும் கோபத்தையும் வெளிக்காட்டிக் கொண்டிருந்தன. சகிக்க முடியாத புதிய சக்தியுடன் புத்துணர்ச்சி பெற்ற அவன் “அப்படின்னா நாம என்ன செய்யணும்!” என்றான்.

ஒரு கணம் அவள் நெற்றியும் உதடும் நடுங்கின. முகத்தில் சோக நிழல் படர்ந்து கவிந்தது. விரிந்த கருவிழிகள் அச்சத்தை வெளிப்படுத்தின. நெஞ்சுக் கூட்டில் சிறுவெள்ளிச் சுத்தியால் அடிப்பதுபோல் மார்பு படபடத்தது. வியர்வை அந்தக் குளிரிலும் முகத்தில் அரும்பியது. கிளர்ச்சியால் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

“என்ன செய்யணுமா? ஒருத்தி ஒருத்தங்கிட்டெ நெஞ்சப் பறிகொடுத்துட்ட பெறகு அந்த ஆம்பிள்ளெ என்ன செய்யணுமோ அதச் செஞ்சாப்போதும்.

வேதனையால் சுருங்கிய இதயத்துடன் கையில் கிடைத்த ஒரு இலையைத் தூள் தூளாக நகத்தால் கிள்ளிப் போட்டுக் கொண்டிருந்தான். அவன் முகம் ரத்தசோகை கண்டவனின் முகத்தைப் போல வெளிறுவதையும், கண்கள் பசி கண்ட பூனையைப் போல் பிரகாசிப்பதையும் அந்த மங்கிய நிலவொளியிலும் அவளால் பார்க்க முடிந்தது.

“கொஞ்ச நாளுப் பொறுத்திருக்கணும். நமக்குன்னு வாழ ஒரு எடம் தேடிக்கிட வாண்டாமா?

“அதப்பத்தி நானு ஒண்ணும் சொல்லலே. நாளைக்குப் பொண்ணுப் பார்க்க வந்து நிச்சயமும் செஞ்சிட்டுப் போயிட்டாங்கன்னா அப்பறம் கண்ணாலம் முடிஞ்சிடுமே. அதுக்கு நாம என்ன பண்ணறது?

அவன் எதைச் சொல்வான்? உன்னை நான் காதலித்த தெல்லாம் சற்று நேர உடல் உபாதையைத் தீர்த்துக் கொள்ளத் தான் என்று கூறுவானா? அல்லது இந்த உயிர் உள்ளளவும் உன்னோடு நான் சேர்ந்து வாழத்தான் என்று சொல்வானா? இப்பொழுது அவளைச் "சரி ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறி விட்டால் சில நாட்களுக்குள் அவளை அவன் சமூகம் அறிய மனைவியாக ஏற்றுக்கொண்டாக வேண்டும். அப்பொழுதுதான் நடைபெறவிருக்கும் கல்யாணத்தைத் தடுக்க முடியும், அப்படி யவன் செய்து கொள்வதற்கு மனோதிடமும், பெற்றோர்களின் குரலைக் கேட்டு செவிசாய்க்காத தீரமும் உண்டா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். ஏனெனில் அந்தக் குடும்ப வாழ்வும் தாழ்வும் அவனைப் பொறுத்தே இயங்கி வருகிறது.

"எதப் பத்தியும் எனக்கு யோசனை இல்லெ, திடீர்னு நாம கண்ணாலம் பண்ணிக்கிறதுன்னா உன் பெற்றோரோ என் பெற்றோரோ ஒத்துக்குவாங்களா? நிச்சயம் மாட்டாங்க. ஒரே வழி ஓடிப்போறது ஒண்ணுதா. அந்த வேலையை இப்போ என்னாலே செய்ய முடியாது. ஏன்னா எனக்குன்னு இருக்கற சில குடும்பப் பொறுப்புகளெ செஞ்சாவணும். அதில்லாமே என் சந்தோஷத்தையே நானு பெருசா நெனச்சேன்னா அது பெரிய பாவம்" என்று எதோ திடீரென்று உபதேசம் புரிபவன் போலக் கூறினான்.

இதைக் கேட்டதும் அவளுக்கு, தான் நிர்க்கதியாகவும் பாழ்பட்ட வாழ்க்கையின் பிம்பமாகவும், குரூரச் செயலின் சின்னமாகவும் பிறருக்குத் தோன்றுவதாக எண்ணி வெட்கி னாள். அருகம்புல்லில் பனித்துளி தேங்கியிருப்பது போல கண்ணிமை மயிர்களில் கண்ணீர் பனித்துத் துளிர்த்தது. அவள் உலர்ந்த அதரங்கள் பரிதாபமாக நடுங்கின. இதயத்தில் அமுக்கி வைக்கப்பட்டிருந்த துக்கம் வேதனை எல்லாம் சேர்ந்து விம்மலாக விசித்தன.

முற்றிப் பழுத்த பீர்க்கந்தழையைப் போல அவள் முகம் சோபையிழந்து வெளுப்பது போலவும், கண்ணிமைகள் கருவட்டம் பாய்ந்து சுருக்கம் விழுவது போலவும், கன்னங்கள் குழிந்து ஒட்டிவிட்டன போலவும், கண்களிலே நம்பிக்கை யிழந்த ஆவல் குறி நர்த்தனமிடுவது போலவும் அவளுக்குப் பட்டது.

"அப்படின்னா நீ என்னெ சுத்திச் சுத்தி வந்ததெல்லாம் உன் ஆசையெத் தீத்துக்கத்தானா? உன்னெ அப்படியே நம்பியிருந்

தாலும் என் ஒடலும், மனசும் கறைப்பட்டுப் போக வேண்டியது தானா?'' என்று விரோதமும் அசட்டையும் நிறைந்த வெறுப்பு மனப்பான்மையுடன் அவனைப் பார்த்து அவள் சீறினாள்.

அவள் என்றுமே நினைத்துப் பார்க்காத அந்தச் சம்பங்களை இப்பொழுது நினைத்துப் பார்க்க முனைந்தாள். இதுவரையிலும் அதைப் பற்றி அவள் கிஞ்சிற்றும் மனோவிகாரத்துடன் அணுகியதில்லை. இப்பொழுது அதுவே அவள் மனதில் மூர்க்காவேசமான சந்தேகங்களைக் கிளப்பியது.

அவன் அடிக்கடி நடுச்சாம வாக்கில் தெற்குத் திசையிலிருந்து அவர்கள் தெரு வழியாக நடந்து வீட்டுக்குச் செல்வதைப் பார்த்திருக்கிறாள். அப்பொழுதெல்லாம் அவளுக்கு அதைப் பற்றிய சிந்தனையே கிடையாது. அதை தெரிந்து கொள்ளும் ஆவலும் அவளுக்கு ஒருபொழுதும் எழுந்ததில்லை. இன்றைக்கு அதுவே முகத்துக்கு நேராக துவேசம் கற்பிக்கும் காரணமாக அவளுக்கு வாய்த்தது.

அவள் சொன்னாள்:

“நீ எதத்தான் சொல்ல மாட்டெ? இப்பொ உன் நாட்டமெல்லாம் வேறொருத்திக்கிட்டெ போயிடுச்சல்ல? நீ அடிக்கடி ராக் காலத்திலே தெக்குத் தெசையிலிருந்து வாரதப் பார்த்த போதே எனக்குச் சம்சயம் ஏற்பட்டுது. அதனோட உண்மையெல்லாம் இப்பத்தா எனக்குப் புரியுது. பல்லுக்கூசும் போதுதா ருசிக்குக் கூடச் சலிப்புத் தோணுது.''

அவள் கூற்றிலுள்ள உண்மையைப் புரிந்து கொள்ள அவனுக்கொன்றும் சிரமம் ஏற்படவில்லை. அவள் சொல்லுவது முற்றிலும் உண்மையே. ஆனால் அவள் கருதுவது போன்ற உண்மை அதில் இல்லை.

அவன் சென்று வருவதில் எந்தவிதமான ரகசியமும் இல்லை. கொஞ்சம் உலக விசயம் புரிந்தவர்களுக்கெல்லாம் அதன் பட்டவர்த்தனமான ரகசியம் தெரியும்.

அவனைப் போன்றவர்களுக்கு இரவு நேரம்தான் ஓய்வு நேரம். அப்பொழுதுதான் அவன் சில விஷயங்களைப் புரிந்து கொள்ள முடியும். அப்படித்தான் அவனும், சிலரும் அங்கு போய் வருகிறார்கள்.

இந்தச் சமுதாயத்தைப் பற்றி அவனுக்குத் தெரிய வேண்டும்; அரசியலைப் பற்றித் தெரிய வேண்டும். அவனைச் சுற்றியுள்ள அடிமைத்தனத்தைப் பற்றி, வறுமை நிலையைப் பற்றித் தெரிய வேண்டும். அதற்கான காரணத்தை அவன் அறிய வேண்டும்.

அந்த உரிமை அவனுக்கிருக்கிறது. அதை யாரும் மறுத்து விடமுடியாது.

அவன் அந்த உண்மையைத் தேடித்தான் சேரி வாலிபர்கள் சிலருடன் அங்கு போய் வருகிறான்.

அவன் அவளுக்கு விளக்கமாகச் சொன்னான்.

"அது ஒரு ரகசியந்தான். ஏழை பணக்காரனை எதிர்க்கத் துணியும் ரகசியந்தான் அது" அவன் சொல்லியது அவளுக்கு அவன் மீது நம்பிக்கை வர?

அவனும் அதற்குமேல் அதைப்பற்றிப் பேசவில்லை.

மண்ணின் மணமும் பெண்ணின் பரிமளமும் வீசும் ஒளிமிக்க அவளது கரிய கூந்தலைக் கைகளால் கோதிவிட அவன் அவள் அருகில் நெருங்கினான். எப்பொழுதும் அவள் மனதைப் பரவசமூட்டும் ஓடைக்கல் வாசமும், சாணத்தின் கமறலும் வீசும் அவனுடைய உடலின் வியர்வை மணம் அப்பொழுது அவளுக்குக் குமட்டலை எடுத்தது. தூர விலகி நின்று "என்னைத் தொடாதே. இன்னமே நானுனக்கு அந்நியமானவ" என்றாள்.

அவன் அவளை வெறுக்கவில்லை. மனமாரவே நேசித்தான். இருந்தும் அவள் ஏன் அவனைப்பற்றி அப்படித் தப்பாக நினைத்துக் கொள்ள வேண்டும்? 'அவசரப்பட வேண்டாம் பொறுத்து ஒரு முடிவு செய்யலாம்' என்று கூறியதற்காகவா! அப்படியே அவன் சொல்வது போலவும் பொறுத்திருக்கலாம் ஏது? நாளைப் பெண் பார்க்க வருகிறார்களே, அதற்கு அவள் என்ன சொல்வது! அல்லது என்ன முடிவெடுப்பது! அவள் கோரிக்கையும் நியாயமானதுதானே? அதைப் புறக்கணிப்ப தாகாதா என்ன?

"நாளைக்கு வர மாப்பிள்ளையெ எனக்கு வாண்டான்னு நீ சொல்லிப்புடு. அவனென்ன எவன் வந்தாலும் மாட்டேன்னே சொல்லிப்புடு. கூடிய சீக்கிரத்திலே நாம என்ன செய்றதுன்னு முடிவுக்கு வருவோம்" என்றான்.

"இப்பொழுதே வேணும்னாலும் என்னெ எங்கேயாவது கூட்டுக்கிட்டுப் போயிடு. ஆனா பெத்தவங்களுக்கு முன்னாலே தர்க்கம் போட்டுப் பேச என்னாலே முடியாது. பாசமும் கண்ணீரும் ஆம்பளைங்களுக்கு விட பொம்பளைங்களுக்கு ரொம்ப நெருக்கமானது"

அவன் இனி எதுவுமே சொல்வதற்கில்லை. அவளது கரங்களை அவன் அவசர அவசரமாகப் பற்றி "நீ எந்த முடிவு

செஞ்சிட்டாலும் இன்னமே நான் எந்தப் பொம்பளையையும் புதுசா நெனைக்கவோ கொள்ளவோ செய்யப்போறதில்லெ. நீ இல்லின்னா என் வாழ்வு ஒத்த வண்டிப் பயணந்தான்!" என்று கூறிக் குனிந்து முத்தமிட்டான்.

அவள் அந்த மங்கிய நிலவொளியில் நெஞ்சுவெடிக்க விம்மித் தேம்பியவாறு சென்று கொண்டிருந்தாள்.

அவன் நெஞ்சிலோ ஓராயிரம் ஊழிப்புயல்கள் ஹுங்கரித்து ஓலமிட்டன.

# 17

மேக மூட்டம் கனத்துத் தொங்கியது. ஐப்பசி மாத வெயிலில் மேகத்திரைகளுக்கிடையே விட்டு விட்டு வெளிப்பட்டது. கோடைகால வெயில் கூடத் தோற்றுப்போகும்படியாக அவ்வளவு சுள்ளென்று அடித்தது.

மழைக்கு அறிகுறியாக வாடைக் காற்றும் வீசியது. சாம்பல் வண்ண மேகம் பஞ்சுப்பொதி போலப் பரந்து கனத்துக் கவிழ்ந்தது. மழை வாடையும் ஈர மண்ணின் வாசமும் கலந்து காற்றில் பரவியது. கம்மம்பூவின் வாசமும் கடலைப் பூவின் மணமும் ஈர வாடையில் கமகமத்தது. வேலியில் செய்யான் பூச்சியின் 'ஞொய்' .... என்ற காதைப் பிளக்கும் கிறீச்சொலி அமர்க்களப்படுத்தியது. இப்பொழுது சூரியன் முற்றாக மேகத்துள் மறைந்து விட்டான். கிழக்கத்திய மழை பனிமூட்டம் 'உஸ்' என்று இரைச்சலிட்டுக் கொண்டு வந்தது. மேய்ச்சலுக்குச் சென்ற ஆடுகள் மழையில் நனைந்து ஓடிவந்தபடி கூரையில் நின்று உடலைச் சிலுப்பியது. ஈரத்தலையில் விளக்கெண்ணெய் தேய்த்த இளநங்கையைப் போல கோழிகள், நனைந்த இறகை இடுக்கி வாலைத் தொங்கப் போட்டு ஆடிஆடித் தட்டுப் போருக்கடியில் சென்று நின்று கொண்டன. விவசாயப் பெண்களும் ஆண்களும் கோணிச் சாக்கைக் கொங்கடை யிட்டுத் தலையில் போட்டுக் கொண்டு வேலை செய்து கொண்டிருந்தனர்.

திடீரென்று தென் கிழக்குக் காற்று வீசியது. மேக மூட்டம் கலைந்தது. வெயில் சுள்ளென்று வீசியது. வீதியில் தேங்கி நிற்கும் தண்ணீரில் குழந்தைகள் வாய்க்கால் பிடித்து விளையாடினர். மீண்டும் மழை வருவதற்குள் ஆடுமாடுகளை மேய்த்து வயிற்றை நிரப்பி வரவேண்டுமென்று அவற்றை ஓட்டிக் கொண்டு விவசாயிகள் சென்றனர்.

ஆவணி மாதத்திலேயே நெல் விதை போட்ட ஒரு வயலில் களை வளர்ந்து கிடந்தது. இதுவரை கடலைக்காடு செத்தை

பிடுங்கவும், களை வெட்டவும், கம்மங்காட்டின் 'ஓரம்' பயிர் ஓட்டவும், காட்டில் ஓரம்பாரம் சோளம் விதைக்கவும் ஆன வேலைகளில் ஈடுபட்டிருந்தபடியால் வயலில் களை எடுக்கும் வேலையை யாரும் கவனிக்க முடியவில்லை. வேறு வேலை செய்ய முடியாத அடை மழை நாளிலாவது தலையில் சாக்கைப் போட்டுக் கொண்டு வயலுக்குச் சென்று களையெடுக்கலா மென்று, கந்தனிடத்தில் மாட்டுக்கு காட்டிலுள்ள சோளத் தட்டைத் தோகையில் மழைத்தண்ணீர் வடிந்தவுடன் பிடுங்கி வந்து வைக்கச் சொல்லிவிட்டு, முத்தம்மாளை மாலையில் சோறு சமைத்து வைக்கச் சொல்லிவிட்டு, மாரக்காள் கணவனும் தானுமாகக் களையெடுக்க வயலுக்குச் சென்றாள்.

கடந்த ஒரு வருடமாக மழை சரிவரப் பெய்யவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்னால் இந்தத் தோட்டம் முழுவதும் வயலடிக்கப்பட்டு தோகை சாய்ந்து நின்ற நெற்பயிர்கள் காற்றின் அசைவில் பார்ப்பதற்கு மாலை நேரத்தில் நீலநிறக் கடல் அலைவீசி எழுவது போலக் காட்சியளித்தது. இன்றோ மழை பெய்யும் என்று எதிர்பார்த்தபடி வயலில் ஆடிப் பட்டப் புஞ்சைத் தானியங்கள்கூட விதைக்கப்படாமல் போய்விட்டது.

எவ்வளவு வேலையிருந்தாலும் தோட்டம் பூராவும் நன்செய் செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில் கூலியாட்களை விட்டாவது வேலை முடித்திருப்பார்கள். ஆனால் ஒரு வயல் என்கிறபோது கூலி கொடுத்து வேலை செய்ததால் வரும் லாபத்தைக் காட்டிலும் பொறுத்திருந்து தங்கள் சொந்த உழைப்பால் பார்த்துக் கொள்வதால் எழும் நட்டம் மேலானதாகவே அவர்களுக்குப்பட்டது. அதனால் தான் அவர்கள் தெரிந்தும் களை வளர விட்டனர்.

மாரப்பனும் மாரக்காளும் களை பறிக்க வயலுக்குள் இறங்கினர். சேறு கலக்கப்பட்ட பழுப்பு நிறமான அந்தத் தோட்டத்து மண்ணுடன் வேப்பந்தழையைப் போட்டு மிதித்ததினால் அந்த மண் நிறம் மாறி தண்ணீர் விட்டுப் பிணையப்பட்ட வைக்கோல் சாம்பலின் நிறமாக மாறியிருந்தது. தண்ணீர் தேங்கி நின்ற நெல் வயலில் கால்களை விட்டதும் பழனிப் பஞ்சாமிர்தம் பிணையத் தொட்டிக்குள் கால்களை விடுவதுபோலக் குளுமையாகவும், மென்மையாகவும் இருந்தது.

நெல் வயலின் தண்ணீருக்கு மேல் அடுப்பில் சுண்டப் போடப்பட்ட பாலின் மீது படர்ந்திருக்கும் பாலாடையைப் போன்ற பாசானை வழித்து வழித்து சேற்றுக்குள் வைத்துப்

புதைத்தனர். களையைப் பிடுங்கி வரப்பிலும் வாய்க்காலிலும் போட்டனர்.

நெற்பயிரைவிடச் செழித்து ஊக்கமாக இருக்கும் கோரை களையும், செத்தவைத் தாட்களையும் கண்ட மாரப்பன் "இந்த வயலிலே வெளையற நெல்ல வித்துக் குடுத்தாலும் இதுக்குக் களையெடுக்கற கூலிக்குக் கட்டாது போலிருக்குது" என்றான்.

தலையிலிருந்து நழுவிச் சென்ற சாக்குக் கொங்கடையை இழுத்துவிட்டுக் கொண்டு "வாழாத கொமரிக்கு வாயி ரொம்ப வெளையாத வயலுக்கு வேலை ரொம்பன்னு தெரியாமலா சொல்றாங்க?" என்றாள் மாரக்காள்.

"ஆமாம் போ! இருக்கறதப் பார்த்தா அப்படித்தாந் தெரியிது" என்றான்.

வெயில் நீங்கி வானத்தில் மேகங்கவிய ஆரம்பித்தது. வாடைக் காற்று சிலுசிலு என வீசியது. சேற்றின் சிலுசிலுப்பும் வயல் நீரின் குளிர்ச்சியும் கால்களை மரத்துப் போகும்படி செய்தன. வாடைக்காற்று உடலில் சிலிர்ப்பூட்டியது. தண்ணீருக்குள் கையை விட்டுக் களையை அலச அலச குளிரின் சிலிர்ப்பால் சில சமயங்கள் விரல்களை அசையவொட்டாமல் இழுத்துப் பிடித்துக் கொண்டன. குளிர் நடுங்க பற்கள் அடித்துக் கொண்டன.

'சோ....' என்று மழை மீண்டும் பெய்ய ஆரம்பித்தது. வயல் தண்ணீரில் விழுந்த மழைத் துளிகள் இளநங்கையின் கால்களில் ஓசையிடும் கொலுசுமணி நாதம் போலக் கிணுகிணுத்தது.

மாரப்பனின் விருப்பமாயிருந்தால் இந்த அடைமழைக் குளிரில் களையெடுக்க வந்திருக்கமாட்டான். இப்படிப்பட்ட வேளைகளில் உழைப்பதை நிறுத்துவதன் மூலம் இரண்டு வேளை உணவு ஒரு வேளையாகக் குறையக் கூடுமென்றாலும் அவன் அதை ஏற்றுக் கொள்ளத் தயங்க மாட்டான். ஆனாலும் மனைவியின் வற்புறுத்தலை அவனால் மீற முடியவில்லை. அந்தக் குடும்பத்தின் முன்னேற்றத்துக்காக அவள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் - ஈடுபடுத்தும் உழைப்புகள் - இவற்றின் முன் அவனால் ஏதும் மறுதலித்துப் பேச முடிவதில்லை. அவள் வழியில் தன்னையும் முழுக்க ஈடுபடுத்திக் கொண்டான்.

"ஒரு நாளைக்குப் பத்து ரூவா கூலி கொடுக்கறதாகச் சொன்னாக்கூட கூலிக்காரங்க இந்த மழையிலே வேலை செய்ய மாட்டாங்க" என்று நடுங்கிக்கொண்டே கூறினான் மாரப்பன்.

"நம்ம நெலமே கூலிக்காரனுதிலியும் கூட்டில்லாமெ நெலக்காரனுதிலியும் கூட்டில்லா மொண்டுங்கெட்டானா இருக்குது. நம்ம நெலத்துலே நாமாப் பாடுபட்டுக்கிட்டா கூலி கெடைக்கும், அதுவும் மழை மாரி ஒத்துப் பேஞ்சு வெள்ளாமை நோவு நொடி தாக்காமெ வந்து சேரணும். இல்லின்னா நம்மபாடும் போயி முட்டுவளி நட்டமும் வந்து சேர்ந்துடும். கூலிக்காரங்களுக்கு வேலைக்குப் போவாத நாளுக்கு மட்டுந்தா நட்டம். நமக்கோ கூலி நட்டமுமில்லாமே முட்டுவளிக்குப் போடும் பணநட்டமும் வந்து சேர்ந்திடும்" என்று கணவனுக்கு ஏதோ புரியாத ஒன்றைப் புரிய வைக்க முயற்சி எடுத்துக் கொள்பவள் போல எடுத்துக் கூறினாள்.

மீண்டும் மழை நின்று வெயில் அடிக்க ஆரம்பித்தது. குளிரால் விறைத்துச் சிலிர்த்த உடம்புக்கு அது இதமூட்டுவதாக இருந்தது. லேசாக வீசிய காற்றில் சுள்ளிப் பூவின் மணம் மிதந்து வந்தது.

களை பிடுங்கிக் கொண்டே செல்லும்பொழுது வயலின் இடையில் நெற்பயிர்கள் அறுபட்டுக் கிடப்பதைக் காண்கிற போது சற்று நேரம் அவர்களுக்கே ஒன்றும் புரியவில்லை. சுற்றிலும் ஓரப் பக்கத்தில் இல்லாமல் நடுவில் வந்து இப்படி நடக்கிறதென்றால் வியப்பும் கவலையும் தோன்றத்தானே செய்யும்! இப்படியே தினமும் கிடக்குமானால் வைத்த வேளாண்மையை எப்படி எடுப்பது?

சற்று யோசித்தவுடன் மாரப்பனுக்குப் புரிந்து விடுகிறது. சாரைப் பாம்புனாலதான் இப்படிப்பட்ட வேலையைச் செய்ய முடியும். இரவு நேரத்தில் சாறு நிறைந்த நெற்றாளை நறுக்கி நறுக்கி ரசத்தைப் பருகும். கரடி, தேன் குடிப்பதில் இன்பம் காணுவதுபோல நெற்பயிரின் சாற்றைக் குடிப்பதில் சாரைப் பாம்புக்கு ஒரு அலாதிப் பிரியம்.

இதை எப்படி தடுப்பது?

அதுதான் குடியானவர்களுக்கு இன்னும் புரியவில்லை. விவசாயப் பயிர்களுக்கு நேரிடும் அழிவுகளைத் தடுப்பதற்கு எத்தனையோ தடுப்பு முறைகள் சொல்லித் தரப்பட்டு விட்டன. ஆனால் இந்தப் பாம்பின் அழிவிலிருந்து தடுப்பதற்கு மட்டும் ஒரு தடுப்பு முறையும் சொல்லித் தரப்படவில்லை.

யார் சொல்லித் தந்தாலும், தராவிட்டாலும் தங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களுக்குப் பரிகாரம் காணுவதற்குத் தலைமுறையாகத் தங்கள் முன்னோர்கள் எந்தவிதக் கேள்வியும்

எழுப்பாமல் நியாயாதிபதி என்று கருதப்படும் தெய்வத்தின் முன்னால் முறையிட்டு வந்தார்களே அந்த முறையீடு அவர்களுக்கும் இருக்கிறது.

கவலையும் நம்பிக்கை, இன்மையும் தொனிக்க, "இது சாரப் பாம்பு செய்யற வேலைதான்" என்றான்.

"மொதல்லே எலிகளாக்கும்னு நெனச்சே, ஆனா இவ்வளவு தாளை நறுக்க ஒரு கூட்டமே சேந்தாத்தானே முடியும்? அப்படி இருக்கறதுக்கும், வரப்பு வழியிலே ஒரு வளையும் இல்லியேன்னு மொதல்லே எம்மனசு ஓடிச்சு. அப்பறந்தா சாரப்பாம்பா இருக்கும்னு நானும் நெனச்சே" என்று தானும் இந்த அழிவைக் கண்டுபிடிப்பதில் எப்படி எப்படியெல்லாம் சிந்தித்தாள் என்று அவனுக்கு விளக்குபவள் போலக் கூறினாள் மாரக்காள்.

சற்றுப் பொறுத்து மீண்டும் மாரக்காள், "நாம வருசா வருசம் தோட்டத்துக்குக் கருப்பனாருக்கு வச்சு வந்த பொங்கலெ இந்த வருசம் வைக்காததாலதா கருப்பனாரு தங்கோவத்தே இப்படிக் காட்டிச் சேதத்தெ உண்டு பண்ணுது" என்றாள்.

அவனுக்கும் இது சரியென்று பட்டது. தெய்வக் கோபத்துக்கு ஆட்படும் பொழுதுதானே மானிடர்களுக்கு நோய் நொடி களும், வறுமைகளும் கஷ்ட நஷ்டங்களும் ஏற்படுகின்றன என்று அவர்களுக்கு இதுகாறும் போதிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

"ஆமா!" என்றான், சுருக்கமாக.

"எல்லாம் வந்தப்பறந்தா நமக்குத் தெரியுது. அதுக்கு முன்னாலே ஆம்பிளைக்கோ பொம்பளைக்கோ ஒருத்தருக்குமே அது மனசிலே படறதில்லை" என்று தன்னையும் இக்குற்றத் துக்கு விமர்சித்துக் கொள்பவள் போலக் கூறினாள்.

"இன்னமே அதுக்கு என்ன செய்யலாம்" என்றான்.

"பாம்பு உருச்செஞ்ச வச்சு, கோழி அறுத்துப் பொங்க விடறதாவ வேண்டிக்கணும்."

ஏழைக் குடியானவனின் வாழ்க்கையோ பிரச்சனை மலிந்தது தான். பிரச்சனைகளின் பிரச்சனை என்றே அவனைக் கூறலாம். அவன் நிரந்தரக் கூலியுமல்ல; நிலத்து வருவாயைக் கொண்டே வாழக் கூடிய தகுதி படைத்தவனுமல்ல. தன் நிலத்தில் வேலை யில்லாத போது கூலி வேலைக்கும் போவான், கூலியைவிட ஏழைக் குடியானவனின் அந்தஸ்தென்னவென்றால் சகிக்க முடியாத கஷ்ட நேரங்களில் வட்டிக்காரர்களிடம் சிறு கடன் பெறுவதற்கான கையகல மண் இருக்கும் அந்தஸ்து ஒன்றுதான்.

அவன் அந்தக் கையகல மண்ணின் மீது கொண்ட, பசி இருக்கிறதே, அது அவனைச் சஞ்சலமிக்கவனாக, தணியாத கவலை கொண்டவனாக நாளும் அரித்துக் கொண்டிருந்தது. வெறித்தனமான சொத்துடைமைப் பசியின் அசுர கணங்களுக்கு முதற் பலியாகக் கூடியவனும் உழைக்கும் உடைமையற்ற வர்க்கத்தின் நம்பகமான உற்ற தோழனாக முதன் முதல் சேரக் கூடியவனும் அவன்தான்.

நிலத்தின் வருவாயைக் கொண்டு எதை எதைச் செய்யலாம் என்று அந்தக் குடும்பம் திட்டமிட்டதோ அதன்படி எதுவுமே நிறைவேறவில்லை. ஆனால் எப்படியோ மூத்த பெண்ணுக்குக் கல்யாணம் முடித்து விட்டார்கள்.

ஏட்டில் எழுதி வைத்து வாசிப்பதுபோல அந்தக் குடும்பத்திற்கு அத்தனைக் கஷ்டங்கள், சோதனைகள் சம்பவித்துக் கொண்டேயிருந்தன. "இது விதியின்செயல், இதைத் தவிர்ப்ப தற்கு நமக்குச் சக்தியில்லை." என்கிற ரீதியில் கடவுள் மீது பாரத்தையும் கோரிக்கைகளையும் சமர்ப்பித்தபடியேதான் அவனும் செயல்பட்டுக் கொண்டு வருகிறான்.

அவர்களுக்கிடையில் சற்று நேரம் அமைதி நிலவியது. அவர்களைப் பற்றியோ அல்லது சுற்றி இருப்பவர்களைப் பற்றியோ பேசுவதைத் தவிர, அவர்களுக்குச் சிந்திக்க எது இருக்க முடியும்? அவர்கள் உலகமே வீடும், அந்த வீட்டுக்கு வந்து போகும் பாச பந்தம் கொண்டவர்ளேயாகும். அவர்களே உலகம் என்று இருக்கும் பொழுது அவர்களுக்கு எதைப் பற்றித் தெரியும்? அவர்களைப் பற்றிப் பேசினால் அவர்கள் காது விரியும் - அவ்வளவே.

மாரக்காளுக்கு தான் காலையிலிருந்து கேட்கவேண்டுமென்று நினைத்து மறந்து போயிருந்த ஒரு விஷயம் இப்பொமுது நினைவுக்கு வந்தது. அதை அவள் நினைவுக்குத் திரும்ப இழுத்துப் பிடித்துக் கொண்டு வருவதற்குக் கொஞ்ச நேரம் செலவழித்த பின்னர்தான் அது சாத்தியப்பட்டது. அதை அவள் நழுவவிட மாட்டாள்.

"ராத்திரி ஊருக் கூட்டம் கூடுச்சே என்னாச்சு?" என்றாள்.

"என்னமோ அந்த அம்மன் கிருபையிலே அப்படியிப்படின்னு பேசினாலும் எல்லாம் ஒரு நெலைக்கு வந்து சேர்ந்துட்டுது. ஆனாலும் கோயிலுக்கட்டும் வரி பணக்காரனுக்கும், ஏழைக்கும் சரிசமந்தான்னு சொன்னதுலேதா கொஞ்சம் ஒத்துமெ கொலஞ்சது. ஆனாலும் ஒண்ணு சொன்னாங்க.

ஊருப் பொதுப்பணம் ரண்டொரு பணக்காரங்கிட்டே இருக்கு தல்ல, அது மொதல்ல வரட்டும். அப்புறம் எவ்வளவு குடுக்கற துன்னாலும் கடனெ ஒடனெ வாங்கிக் குடுத்துடறம்னு சொன் னாங்க. அதச் சொன்னாலே கோயிலைக் கட்டும் வேலை நடக்காது போல இருந்தது. என்ன பண்ண? ஏழைக்குத்தானே சாமி வேண்டியிருக்குது? மழை மாரி இல்லின்னா நோவு நொடி வந்துட்டா நாமதானே சாமிகிட்டே ஓடறவங்களா இருக்க றோம்? பணக்காரனுக்கு அதப்பத்தி என்ன கவலை? எப்படியோ கோயிலுக் கட்டற வேலை நடந்து முடிஞ்சா சரின்னு ஒத்துக்கிட்டு வந்தாச்சு. பணந்தான் காணோம்" என்றான்.

"அப்படின்னா வூடொண்ணு எவ்வளவு பணம் குடுக்கணும்?"

"வூடொண்ணு அம்பது ரூவா"

அம்பது ரூபாய் என்றவுடனேயே தன்னுடைய சப்த நாடியே நின்றுவிட்டது போல் உணர்ந்தாள். இந்த வருடமோ சரியான மழையில்லாமல் கிணற்றில் தண்ணீர் இல்லை. புஞ்சை வெள்ளாமையோ போட்ட முட்டுவளிச் செலவுக்குக் கூட ஆகாது போலிருக்கிறது. பார்க்கப் போனால் நிலத்தில் பாடு பட்டுவிட்டுக் கடன் வாங்கித்தான் இந்த வருடம் சாப்பிட வேண்டும் போலிருக்கிறது. திடீரென்று நேற்று நீர் இறைக்கும் பறி கிழிந்துவிட்டது. மீண்டும் தைத்துப் பார்த்ததில் அதன் தையல் நிற்காமல் மேலும் கிழிந்து விட்டது. இன்றைக்கு அடை மழை பெய்து கொண்டிருப்பதால் நெல் வயலுக்கு இறைப்பு இல்லை. மழை நீங்கியவுடன் தண்ணீர் இறைப்பதற்குப் பறி வேண்டும். இந்தக் காலத்தில் பறி தைப்பதென்றால் தோல் விலை என்ன அவ்வளவு குறைவாகவா இருக்கிறது? பவுன் விலை அல்லவா போகிறது? பார்க்கப் போனால் வயலில் இருக்கும் நெல் அவ்வளவு விலைதான் போகும். அதற்கென்று விட்டுவிட முடியுமா என்ன? இரண்டு பாத்திக்கே பாயக்கூடிய அளவு இருக்கிறதென்றாலும், தண்ணீரை இறைக்காமல் இருந்து விட முடியுமா?

ஒரு சேர மனத்தில் எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்தாள். இந்த நிலையில் புதிதாகக் கோயில் கட்டுவதற்கு ஐம்பது ரூபாய் வரியா? வசதி படைத்தவர்களெல்லாம் ஊர்ப்பொதுப் பணம் இரண்டாயிரம் வரை பல கதைக்குதவாத காரணங்களை கூறிக் கொண்டு கொடுக்க மாட்டேன் என்று வைத்திருந்து வருகி றார்கள். அதெல்லாம் வந்தால் விதித்திருக்கும் வரியில் பாதிக்குக் கட்டி வரும். ஆனால் அவர்களை அசைத்துக் கேட்போர்

யாருமில்லையே! அவர்களுக்கென்ன இது மாதிரி பத்துமடங்கு போட்டாலும் கட்டலாம். அவர்கள் உழைத்த காசா என்ன? ஊர்ப் பொதுப் பணம்தான் இருக்கிறதே? அவர்கள்தான் நியாயம் பேசுபவர்கள். அவர்கள் தான் தீர்ப்பும் கூறுபவர்கள். பின் எப்படியிருக்கும்.

“ஒருத்தரும் மாட்டேன்னு சொல்லலையா?” ஆக்ரோசம் பொங்கக் கேட்டாள்.

“சாமி காரியத்துக்கு யாரேனும் மாட்டேன்னு சொல்லு வாங்களா? வசதியப் பொறுத்து வரி போடுங்கன்னுதா கேட்டாங்க.”

“அப்படியா போட்டிருக்குது?”

“அதத்தா பண்ணயூட்டுக்காரங்க ஒத்துக்கலையே, வசதிக் காரெ நாலு சாமியும் இல்லாதவெ ஒரு சாமியுமா கும்பட றான்னு கேக்கறாங்களே.”

“அப்படின்னா பொதுப்பணத்தெக் குடுத்துட்டுப் போறது தானே?

“அதெ நீ சொல்லிக் குடுக்கறதில்லெங்கறாங்க. அதுவுமில் லாமே நாங்களெல்லாம் கூட மொறம் பொறுக்கிக்கிட்டு குடியோடப் போறவங்களா? எந்த விசயம் பேசினாலும் பொதுப்பணம் பொதுப்பணமுன்னு கேக்கறீங்களே, அதெ எப்பக் குடுக்கணும்னு எங்களுக்குத் தெரியும். கோயிலக்கட்டுனா கட்டுங்க, கட்டாட்டிப் போங்கன்னு முறிச்சுக்கிட்டுப் பேசறாங் களே?”

“இப்ப நமக்கு மட்டும் என்ன? சாமி தெனமும் நம்ம கூரையப் பிரிச்சுக்கிட்டுச் சலசலன்னு பணத்தைக் கொட்டறது நின்னு போயிடுமா? ராவு பவலாக் கஷ்டப்பட்டு ஒளச்சாச் சோறு. இல்லின்னா பட்டினி, கோயிலுக்கட்டுலேன்னா அதுனாலே நமக்கென்ன நின்னு போயிடப் போவுது? தெனம் பாடுபடாமெ மூணு வேளையும் சாமி கோயில்லெ போயி இப்படிச் சம்பாத் தியம் கெடைக்கணும். அப்படிச் சம்பாத்தியம் கெடைக்கணும்னு சாமி கும்பிடறது இவனுக தானே? நம்மப் போல இருக்கறவங்க நோயி நொடின்னாத்தா கோயிலுக்குப் போறோம்” என்றாள் மாரக்காள்.

அவனுக்குத் தெரியும் நேர்மை தவறிய செய்கையை அவள் ஒருபோதும் ஒத்துக்கொள்ள மாட்டாளென்று, அதனால் எவ்வளவு சங்கடங்கள், கஷ்டங்கள் நேர்கிறதென்றாலும் அவள்

ஒரு வீராங்கனையைப் போல அவற்றை நேர் கொள்ளத் தயங்கா ளென்று. அவள் வாழ்க்கை அனுபவத்தில் அதைப் பூரணமாகத் தெரிந்து கொண்டிருந்தான். அப்படிப்பட்ட சிக்கலான நேரங்களில் அவன் மிகவும் சோதனைக்குள்ளாவதுண்டு.

“பொதுப் பணத்தை வச்சுத் திங்கறவந்தா குபரேனா இருந் திட்டுப் போகட்டும். சாமி காரியத்துக்குக் குடுக்கறதாலே நாம ஒண்ணும் கெட்டுப் போயிட மாட்டோம். கஷ்டத்தோட கஷ்டமா நாம அம்பது ரூவா வரிப் பணத்தைக் குடுத்துடுவோம். சாமி அதுக்கொரு வழி காட்டாமலா போயிடுமின்னு கூட்டத் திலே பத்து பேரு சொல்லும்போது நாம எதச் சொல்ல முடியும்?” என்றான் மாரப்பன்.

அவளுக்குச் சாமிப்பற்று அற்று விட்டதென்றோ கோயில் கட்ட வரிப்பணம் கொடுக்கக் கூடாதென்றொ தெய்வ நிந்தனை மேலோங்கி விட்டதென்றோ கூற முடியுமா? வாழ்க்கையில் நிகழும் தினசரி கஷ்டங்களுக்குப் பரிகாரம் காண வாய்க்கு வாய் தெய்வத்தைப் பார்த்தே முறையிடும் அவள் மனதில் அப்படிப் பட்ட செயலுக்குத் துளியளவும் இடமிருக்க முடியுமா? அவள் ரத்தத்திலும் சிந்தனையிலும் தெய்வ பக்தி என்கிற போதை யல்லவா தினம் தினம் கிறங்கடித்துக் கொண்டிருக்கிறது?

அங்குதான் நாம் அவளைப் புரிந்துகொள்ள வேண்டியிருக் கிறது. வறுமை நர்த்தனம் ஆடுமிடத்தில் தெய்வ சகாயம் கிடைப்பதில்லை. ஆனால் தெய்வம் மட்டும் அந்த இடத்தில் அதிகம் சலுகையை எதிர்பார்த்து விடுகிறது. அவர்களால் முடிந்தது தங்களின் இதயபூர்வமான தொழுகையைச் சமர்ப்பிப் பது என்பதுதான். அதையவர்கள் என்றுமே விசுவாசமாக நிறைவேற்றி வருகிறார்கள். ஆனால் அவர்களது வயிற்றி லடிப்பது போல் தெய்வத்திற்கென்று - அவர்கள் உண்ணும் உணவையே பறிப்பதுபோல் செயல்கள் நடைபெறுகிறதென் றால் அதைத்தான் அவளால் பொறுத்துக் கொள்ள முடிவ தில்லை. இப்பொழுதுங்கூட “காளியாயி! ஊருப் பணத்தை உப்பில்லாமே திங்கிறவனெல்லாம் உம் பேராலே எங்களெக் குடியெழுப்பி வுடுவாங்க போலிருக்குது. நீயுங்கூட இந்த நேரத்திலே கண்ண மூடிக்கிட்டு இருந்தின்னா நாங்கெல்லாம் என்னமாப் பொளைக்கிறது” என்றுதானே புலம்புகிறாள்?

“காசிருக்கறவெ வாயி நோவாமே சொல்லிட்டுப் போயிட லாம். கஞ்சிக்கே கரணம் பாயறவெ மனசு, ஒடம்பு எல்லாமே நோவறதாவ அல்ல இருக்குது? அம்பது ரூவா நாம கோயிலுக்

காவக் கொடுக்கறதுன்னா ஏத்தல்ல போற ஒரு எருத்தெ வித்துக் கொடுத்துட்டு அதுக்குப் பதிலா நாம கழுத்துக் குடுத்துக்க வேண்டியதுதா" என்று நொந்துபோன அதிருப்தியான உணர்ச்சியோடு கூறிவிட்டு "கோமாளி அப்பங்கூட ஒண்ணுமே சொல்லலியா?" என்று கேட்டாள்.

"ஏழபாழ மீது இவ்வளவு வரி வெச்சாத் தாங்காது. இந்தக் காலத்திலே சோறு திங்கறதே விழிபிதுங்கிப் போவுதுன்னு சொன்னாரு. அப்பொ பண்ணையூட்டுக்காரெ கோயிலுக்கட்டறதெ நீங்கதா கெடுத்தோட்டுவிங்க போலிருக்குதன்னு சொல்லி விட்டான். அப்ப அவருக்கு வந்த கோவத்தப் பாத்திருக்கணுமே! ஆனாலும் சாமி காரியம்னு பேசாமெ இருந்துட்டாரு" என்றான்.

தூர் வெடித்து விரித்திருந்த செத்தவைப்புல்லை பலங் கொண்ட மட்டும் முயற்சித்துப் பிடுங்கி எறிந்தபடி "அப்படின்னா நீ குடுக்க முடியாதுன்னு சொல்லலியா?" என்றாள்.

"என்னால் வரிப்பணம் அம்பது ரூவா கொடுக்க முடியாது" என்று கூறியிருப்பதைத் தவிர அவளுக்கு நிறைவுறக்கூடிய பதில் எதுவும் இருக்க முடியாது. அவனால் கூறமுடியாத பதிலல்ல அது. கூறியிருக்க முடியும். ஓர் ஏழை விவசாயி நாலு பெரிய மனிதர்களின் முடிவை மீறி ஒன்றைச் சொல்லி விடுவானென்றால் அதனால் ஏற்படும் பின்விளைவுகள் அவனுக்கும் தெரிந்ததே. அதனால் பத்துப் பேரும் ஏற்றுக்கொண்ட விஷயத்தை விருப்பமில்லாமல் முடியாதவர்களுடன் சேர்ந்து முணுமுணுத்தாலும் வாய் எதிர்ப்பை முழங்கவில்லை.

அவன், அவளது கேள்விக்கு ஒரு பதிலும் சொல்லவில்லை.

"வரிப்பணத்துக்குக் செப்பாலடிச்சக் காசுகூடப் போறாது. சோத்துக்கில்லாமெ ஏழைக கஷ்டப்படறபோது கோயிலுக் கட்டணும்னு சாமி யாரையும் கழுவிலே நிறுத்தலே. நீயுந் தெரிஞ்சுக்க உங்க கோயிலுப் பண்ணைக்காரனும் தெரிஞ்சுக்கட்டும்" என்று ஒரு ஆணைப் போல சபதம் கூறினாள்.

* * *

அப்பொழுது மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. இருவரும் வயலிலிருந்து வெளிப்பட்டு வாய்க்காலில் கிடந்த தண்ணீரில் கைகால்களில் ஒட்டியிருந்த சேற்றை அலசிக் கொண்டிருந்தனர். கால்களும் கைகளும் தண்ணீருக்குள்ளேயே அமிழ்ந்திருந்ததினால் வெளுத்து சுண்ணாம்புச் சுவரைப்போல் சுருக்கம் பாய்ந்து இருந்தன. குனிந்து கொண்டு வேலை செய்ததி

னால் கண் இமையின் கீழ்ப் பகுதியும் முகமும் ரத்தச் சோகை கண்டவனுடையதைப் போலச் சுரந்திருந்தன.

பிடுங்கிப் போட்ட செத்தவைப்புல்லின் வேரை நறுக்கிக் கற்றை கட்டி எடுத்துக் கொண்டு மாரக்காள் முன் நடக்க மாரப்பன் பின்னால் நடந்து சென்றான். நீரினுள்ளிருக்கும் மீனை வெளியில் எடுத்துப் போட்டால் துள்ளுமே, அதுபோல் வயலில் வேலை முசுவில் இருந்த அவளுக்கு வெளியில் வந்தவுடன் குளிர் நடுக்கியது. முன்தானைச் சேலையை எடுத்துப் போர்த்துக் கொண்டாள்.

மழைத்தூறல், குழந்தையென சிணுங்க ஆரம்பித்தது.

இருவரும் மாட்டுக் கொட்டகையை அடைந்தனர். கொண்டு வந்த புல்லைப் போடுவதற்குப் படுத்திருந்த எருதை மாரப்பன் எழுப்பினான். பிள்ளை எருது பின்னங்காலை மடித்து எழுந்து நிற்பதற்கு மிச் சிரமப்பட்டது. எழுந்து நின்றவுடன் வலது பின்னங்காலைச் சரியாகத் தரையில் ஊன்றாமல் நின்றது. எருதிற்கேற்பட்ட இந்த திடீர் நிலை மாரப்பனுக்கும் புரிய வில்லை. "நாளைக்கு யாரிடம் போய் எருது கேட்பது" என்று கவலைப்பட்டவனாக எருதை அதட்டி இன்னும் சில எட்டுகள் எடுத்து வைக்க ஏற்பாடு செய்தான். எருது காலைத் தரையில் ஊன்றுவதற்கு மிகவும் தத்தளித்துத் தடுமாறியது.

இதைப் பார்த்த மாரக்காள் "எருதுக்கென்ன இப்படித் திடீர்னு வந்துட்டுது?" என்றாள்.

"அது தானே எனக்கும் தெரியலெ" என்று பரபரப்போடு புல்கட்டைக் கீழே போட்டுவிட்டு அதன் தொடைப் பக்கத்து எலும்பைப் பிடித்துப் பார்த்தான். சப்பை எலும்பு ஏதாவது அதன் ஸ்தானத்திலிருந்து நழுவியிருந்தாலும் இருக்கலா மல்லவா? அப்படி நழுவியிருந்தால், அதை அடிப்பதற்குப் பிடித்துக் கொடுக்கவேண்டியதுதான். பின் பக்க சப்பை மூட்டு நழுவிய எந்தப் பிராணியும் குணமாவது மிகச் சிரமந்தான். அப்படியானாலும் கனத்த பாரம் இழுக்கும்பொழுது மீண்டும் அதற்கு ஆபத்து காத்தே இருக்கிறது. வேலை செய்யாத கறவை மாடு வேண்டுமானால் தப்பிக்கலாம்.

சப்பை எலும்பு நழுவி விட்டதா இல்லையா என்று பார்த்துக் கண்டுபிடிக்கும் திறன் அவனுக்குக் கிடையாது. இருந்தாலும் அவனுக்கேற்பட்ட ஆதங்கம் அப்படியெல்லாம் பார்க்கத் தூண்டியது. அவன் சப்பை எலும்பை நசுக்கிப் பார்த்ததும் அது அவனுக்குப் பிடிகொடுக்க இசையாமல் கொம்பை ஆட்டிக்

கொண்டு நகர்ந்தது. சப்பை நழுவிய மாடுகள் கூட வலியின் காரணமாகத் தொட்டுப் பார்க்க இடங்கொடுக்க மறுப்பதுண்டு. ஒருகால் இதற்கும் அப்படி நிகழ்ந்திருக்குமோ. அதனால்தான் தொட்டுப் பார்க்க இசையாமல் நகர்கிறதோ! இப்படிப் பலவாறாய் அவன் மனது புலம்பியது.

அவனுடைய செய்கைகளுக்குப் பின்னர் அவன் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக்கண்ட மாரக்காள் "மாட்டுக்குச் சப்பை ஏதாச்சும் நழுவிப் போச்சா?" என்றாள் பரபரப்பும் ஏக்கமும் நிறைந்த குரலில்.

"ஒண்ணும் தெரிஞ்சிக்க முடியலெ"

"நேத்தெல்லாம் நல்லா இருந்ததா?"

"காத்தாலெ நாம வயலுக்குப் போவும்போது நல்லாத் தானே இருந்தது?"

'அட கடவுளே! இதென்ன சோதனை?' என்றவள் கோவென்று அழ ஆரம்பித்து விட்டாள்.

'எறப்புச் சமயத்துலே வேறொரு மாடு வாங்க எங்கே போறது?.... அப்படித்தா காசு கொட்டியா வச்சிருக்குது ஓடி இன்னொன்னு வாங்கியார. ஒண்ணு போனா இன்னொன்னு இப்படித் தீம்பு வந்துக்கிட்டே இருந்துன்னா எப்படித்தா தாங்கறது."

ஒன்றும் புரியாத மாரப்பன் "யாரு கெரக பலனோ சரியில்லெ. நம்ம எல்லோரோட சாதகக்குறிப்பையும் கொண்டு போயி சோசியங்கிட்டே பார்த்துட்டு வரணும்..... என்னதா இருந்தாலும் இப்படியா ஒண்ணுமாத்தி ஒண்ணு கஷ்டம் வந்துகிட்டே இருக்கும்" என்றான்.

"இன்னைக்குள்ளே ஏதாவது மாட்டுக்கு ஆயிருந்தா பயலுக்குத் தெரியோனுமல்ல" என்றவளாக கந்தனைக் கூப்பிட்டாள். வீட்டிலிருந்த கந்தன் குரல் கொடுத்தபடி கட்டுத்தரைக்கு வந்து சேர்ந்தான்.

"மாடென்னடா காலு மொண்டுது?" என்றாள் அதிகாரமும் கோபமும் தொனிக்க.

"அதுவா? லாடத்திலே ஒரு ஆணி எங்கயோ வுழுந்துட்டுது. லாடமொகப்புத் திரும்பி உள்கொளம்புல குத்திக்கிட்டுது, லாடக்காரனைக் கூட்டியாந்துதா புடுங்கணும்" என்றான்.

"ஏ! இன்னவரையிலும் என்ன செஞ்சே? கூட்டியாந்து புடுங்கியிருக்கலாமல்ல" என்றான் தகப்பன், குழப்பத்திலிருந்தவனாக.

"போயிருந்தே. லாடக்காரெ வூட்டுலே இல்லே. வந்த உடனே வரும்படியாச் சொல்லிட்டு வந்திட்டெ"

இப்பொழுதுதான் மாரக்காளுக்கு நிம்மதி வந்தது. கொஞ்ச நேரத்துக்கு முன்னர் வயற்காட்டில், கோயிலுக்கு இவ்வளவு அதிக வரி கொடுக்க முடியாது என்று கூறிக் கொண்டிருந்த தினால் தானோ என்னவோ மாட்டுக்கு இப்படித் திடீர் என்று ஆபத்து வந்திருக்கிறது போலும் என்று கூட நினைக்க ஆரம்பித்து விட்டாள். பாவம்! கஷ்டங்கள் எப்படி வந்து சேரு கின்றன என்பதன் மூலகாரணத்தையும், அதை எப்படிக் களை வதற்கான நடவடிக்கை எடுப்பது என்பதன் முறைகளையும் அறியாத அந்தப் பாமர மக்கள் கடவுளையும் கண்மூடிப் பழக்க வழக்கங்களையும் கைக்கொள்வதில் ஆச்சரியம் என்ன இருக்க முடியும்?

எல்லோரும் வீட்டுக்குச் சென்றனர். 'சிலு சிலு' என்று வீசிய காற்றினால் வீட்டு வாசலின் முன்னால் இருந்த வேப்பமரத்து இலைகளில் தங்கியிருந்த நீர்த்துளிகள் சொட்டுச் சொட் டெனத் தரையில் விழுந்தன. அடை மழை மேகம் வான் முழுவ தும் பரந்து கிடந்தபடியால் இருளின் வருகை சற்று முன்கூட் டியே துவங்கிவிட்டது. வீட்டுத் திண்ணைகளில் ஏறி நின்று கத்திக் கொண்டிருந்த கோழிகளைப் பிடித்து அடைத்துக் கொண்டிருந்த முத்தம்மாள் பெற்றோர்களைப் பார்த்ததும் "இன்னமெ இதையெல்லாம் கொண்டு போயி வித்துடணும். மழைக் காலத்திலே பேனுப் புடுச்சுட்டா வூட்டுலே படுத்திருக்க முடியாது" என்றாள்.

"நீதாம்மா வளத்தணும்னு வளத்தறே!" என்றான் மாரப்பன் சிரித்தபடியே.

"இவ்வளவு நாளா அந்தக் கொட்டாயிலே அணஞ்சிது. இப்ப வூட்டுத் திண்ணைக்கே ஓடியாருது" என்று, முந்தியெல்லாம் தொந்தரவு கொடுக்கவில்லை என்று கூறுவது போலப் பதில் அளித்துவிட்டு, "இதெ வித்து ஒரு ஆட்டுக் குட்டி வாங்கியுட் டரணும் அண்ணா" என்று அதை அவள் அவ்வளவு அக்கறை யுடன் ஏன் விற்கச் சொன்னாள் என்பதற்கான உள்நோக்கத் தையும் கூறிவிட்டாள் தன் தந்தையிடம்.

இதைக் கேட்டதும் வாய்விட்டுச் சிரித்த மாரப்பன் முத்தம்மாளைக் கூர்ந்து நோக்கினான். அவளது எழுச்சிமிக்க நெஞ்சு மூச்சு விடும்பொழுது ஏறித் தாழ்ந்து கொண்டிருந்தது அப்பொழுதுதான் அவளுக்கு ஒரு தோடு செய்துபோட

வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு உதித்தது. கொட்டை முத்து விற்றுக் கோழி வாங்கி விடும்போது முத்தம்மாள் கூறிய யோசனை இதுதானே? ஆமாம்! அவள் ஒரு கோழியை பலதாக ஆக்கி விற்று ஆடு வாங்கி வளர்த்து அதன் மூலம் தோடு வாங்கி அணிந்து கொள்ள விரும்புவதாகத்தானே அன்று தந்தையிடம் சொன்னாள். இந்த நினைவில் ஆழ்ந்தபடி அவன் அவளையே பார்த்தபடியே இருந்தான். என்றைக்கும் பாராதபடி தந்தை தன்னை அப்படிப் பார்ப்பதை அறிந்த அவள் வெட்கம் மேலிட்டவளாக அடுப்படிக்குச் சென்று மறைந்தாள்.

"சரிம்மா! கோழியெ வித்து ஆடு வாங்கிக் குடுத்துடறேன்" என்ற பலவித எண்ணச் சுளிப்புகள் நெஞ்சக்கடலில் எழ, தன்னால் ஒரு தோடு வாங்கிப் பெண்ணுக்குப் போட முடியவில்லையே என்ற துயரத்தில் கண்களில் பனித்து நின்ற கண்ணீரைக் கொட்டாவி விட்டுக் கண்களைத் தேய்த்து விட்டுக் கொள்பவன் போலத் தேய்த்துவிட்டு நிலைமையைச் சமாளித்துக் கொண்டான்.

அடிபருத்துக் கிளைகள் விட்டு வளர்ந்திருந்த வேப்ப மரத்தில் வேகமாக வீசிய வாடைக் காற்று மழைத் தண்ணீரில் ஒட்டிய இலைகளைப் பிரிப்பதிலிருந்து ஒருவித ஒலியை எழுப்பி இசைமாரி பொழிந்தது.

அன்றைய உடலுழைப்பின் தேய்மானத்திற்கு ஈடுகட்டுவதற்காக அவர்கள் அனைவரும் ஆவி பறக்கும் சுடுசோற்று வட்டியுடன் முன்னால் அமர்ந்திருந்தனர். குளிரால் விறைத்து மரத்துப் போன உடலுக்கு அப்படி உட்கொண்டால்தான் கதகதப்பாக இருக்கும்.

# 18

மகளைப் பார்த்துவிட்டு வருமாறு தன் கணவனிடம் முறுக்குச் சுட்டுத் தூக்குப்பையில் போட்டுக் கொடுத்து அனுப்பினாள் மாரக்காள். தலைக்குத் தயிர் தேய்த்துக் குளித்துக் கொண்டு எண்ணெய்ப் பசையற்று தோல் சுருங்கி சட்டை விட்டுப் போயிருந்த திரேகத்துக்கு விளக்கெண்ணெய்ப் பசை போட்டு பாசான்வாடையும், உலர் மண்ணின் மணமும் கலந்த வெளுத்த வேட்டியை எடுத்து முறுக்கிச் சுருக்கம் செய்து கட்டிக்கொண்டு சிட்டைத் துண்டால் தலையில் உருமால் சுற்றியவாறு வீட்டை விட்டு புறப்பட்டான்.

வீட்டை விட்டு வெளியேறிப் புறப்பட்டதும் சுற்றி முற்றும் ஒரு முறை கண்ணோட்டம் விட்டான். கிழக்கு வீதியிலிருந்து வண்ணான் அழுக்கு மூட்டையை சுமந்தபடி மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தான். "வண்ணான் வருவது நல்ல சகுனம்" என்று தனக்குள் கூறி மேற்கொண்டு நடையைச் செலுத்தினான்.

இச்சிமரத்துக் கல்லுக் கட்டிலில் அமர்ந்து கயிறு திரித்துக் கொண்டிருந்த கோமாளிக் கிழவர் மாரப்பனைப் பார்த்து, "எது வரையிலும் மாப்பிள்ளே பயணம்?" என்று கேட்டார்.

முகத்தில் அரும்பிய புன்னகையைச் சிரமப்பட்டு அடக்கிய வனாக ,"பழனியம்மாளெப் பார்த்துட்டு வரலான்னு போறே மாமா, அவுங்களும் ஒண்டிக்காரங்க பொளைப்பு வந்துட்டுப் போவ முடியாமெ இருக்கிறாங்க. இங்கயும் அந்த வேலையும் இந்த வேலையுமாத் தொட்டுக்கிட்டுப் போவ முடியாமெ தவணையான தவணையாப் போச்சு" என்றான்.

"நம்மை வந்து இன்னமெ அவுங்க பாத்தா என்ன? பாக்காட்டி என்ன! அதுங்கஞ்சியை அது குடிச்சிட்டு ஒத்துமையாய்ப் பொளச்சாச் சரி" என்று ஆறுதல் போல் கிழவர் கூறினார்.

"ஏதோ ஆண்டவன் புண்ணியத்திலே அந்தக் கவலையில் லிங்க" என்று, எங்கே கிழவர் பேச்சுத் துணைக்குக் கெட்டியாகப்

பிடித்துக் கொள்வாரோ என்று பயந்தவன் போலப் பேசிக் கொண்டே நடந்து சென்று கொண்டிருந்தான்.

கொஞ்ச தூரம் மாரப்பன் நடந்து சென்றவுடன் கிழவர் மாரப்பனை நோக்கி, “மாப்பிள்ளேய்!” என்று குரல் கொடுத் தார். குரல் கேட்டு மாரப்பன் நின்று திரும்பிப் பார்ப்பதையறிந்த கிழவர் “ஒரு கட்டுப் புளிச்சநார் அம்மா வூட்டுலே இருந்தா நா கேட்டதாவ வாங்கிட்டு வாங்க. கட்டில் கவுறு அறுந்து போச்சு” என்றான்.

மாரப்பன் கையையும் தலையையும் ஆட்டிக் கொண்டு “அது கென்னங்க, இருந்தா வாங்கிட்டு வாரனுங்க” என்று நடந்து சென்றான்.

கிழவர், மாரப்பன் போகிறானா நிற்கிறானா என்று நன்கு உறுதி செய்து கொள்ள விரும்புபவர் போல கண் புருவங்களுக்கு மேல் இடது கையைக் கூப்பி வைத்து நோக்கி, “போறாப்பலே இருக்குது”என்று தனக்குள் கூறிக் கொண்டார்.

சூரியன் உச்சிக்கு நகர்ந்து கொண்டிருந்தான். பகல் வெப்பத் தில் வாடி வதங்கிப் புஞ்சைப் பயிர்களின் மணம் காற்றில் வந்து கொண்டிருந்தது. ஆடுகளும், மாடுகளும், மனிதர்களும் நடந்து நடந்து புழுதி எழுப்பிய இட்டேறி மண், மூக்கைக் கமறியது. கொன்னை வாய்க் குருவிகள் கூட்டம் கூட்டமாக ஊஞ்சை மரத்தில் அமர்ந்து கத்திக் கொண்டிருந்தன. பனை மரத்தில் அமர்ந்திருந்த ஒரு காகம் பனை ஓலையில் தன் அலகைத் தீட்டி ஓசை எழுப்பிக் கொண்டிருந்தது.

அவன் சென்று கொண்டிருந்த இட்டேறியில் அவனுக்கு முன்னால் ஓர் இரட்டை மாட்டுவண்டி சென்று கொண்டிருந் தது வண்டியில் சில மூட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன. வண்டிக்காரன் ஏதோ ஒரு கிராமியப் பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தான். அவன் குரலில் கம்பீரமும், இசை நயமும் இன்றிக் கொச்சைத்தனமாகச் சிதைந்து குரலெடுத்துப் பாடிக் கொண்டிருந்தான். அதிலொரு இனிமை இல்லாவிட்டாலும் கவர்ச்சி இருந்தது! இயற்கையாகவே கிராமியப் பாடல்களின் மனதையள்ளும் எழுச்சி மிக்க சத்பவக் கோர்வைகளும் அலங்கார வர்ணனைகளும் ஒரு கால் அந்தக் கவர்ச்சியாக இருக்கலாம். கிராமியப் பாடல்களை மிக மோசமான இசை வளம் கொண்டவன் பாடினாலும் கூட அதன் பாங்கு கேட்ட வர்களைக் காது கொடுத்து மனமொன்றி ரசிக்கும்படிச் செய்யும். அதனால் தானோ என்னவோ வழி வழியாகவே பாமர

மக்களால் பலப் பல சகாப்தங்களாகப் பாடப்பட்டுக் கொண்டே எந்த ஏட்டிலும் எழுதப்படாமலேயே நிலைத்து வாழ்கிறது போலும்.

மாரப்பனுக்கு - அந்த வண்டி எங்கு செல்கிறதென்று கேட்டுத் தெரிந்து கொண்டு அதில் ஏறிக்கொள்ள வேண்டுமென்று நினைப்பு. திடீரென்று இந்த வண்டி எங்கு செல்கிறதென்று கேட்பதும், இதில் ஏறிக் கொள்ளலாமா என்று வினவுவதும் அவ்வளவு உசிதமல்ல என்றும் மனதில் ஓடுகிறது. ஒரு கால் அனுகூலமான பதில் கிடைக்காமல் போய்விட்டால் மனசுக்குக் கஷ்டமாகப் போய்விடும் என்று நினைக்கிறான்.

வேகமாக நடந்து வண்டியண்டை சென்று, “ஏண்ணா வண்டியிலே என்ன மூட்டை?” என்று மிகப் பழக்கப்பட்டவனிடம் கேட்பது போலக் கேட்டான்.

வண்டிக்காரன் திரும்பி மாரப்பனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, “தவுட்டு மூட்டை” என்றான், அதிருப்தியும் எரிச்சலும் தொனிக்க.

“வெலை என்னண்ணா?”

சற்றுநேரம் எதிலோ லயித்திருப்பன்போலப் பேசாதிருந்துவிட்டு“அதுதா நெல்லு விலை விக்கிது” என்றான்.

“வெலை ஒசந்து போச்சுங்களா?”

“ஆமா!”

அவனின் இந்தத் திருப்தியற்ற அலட்சியமான பதிலை மாரப்பன் புரிந்து கொண்டவன் போல அவனுடைய கவனத்தை ஈர்க்கும்படியான வேறு விசயத்துக்குப் பேச்சை மாற்றினான்.

அது அவனுடைய மனதுக்குத் திருப்தியையும் சந்தோசத்தையும் கொடுக்குமென்று தெரியும். ஒரு விவசாயியினுடைய மனதை லகுவில் திருப்திப்படுத்த வேண்டுமென்றால் அவனுடைய நிலத்தையும், மாட்டினுடைய வேலைத் திறத்தையும் பற்றிப் புகழ்ந்து கூறினால் போதும். அந்தக்கலை ஒருக்கால் மாரப்பனுக்குத் தெரிந்தும் இருக்கலாம். ஏனென்றால் அவனும் விவசாயிதானே!

“இந்த வலத்துக்காளை என்ன வெலைக்கு வாங்குனீங்க?”

“இது மாட்டுங்கன்னு. வளத்தினது” என்றான் வண்டிக்காரன்

“நல்ல புடிவாலு மாடு. குறுங்காலும் ரட்டக் கழுத்துமா இருக்குது. எந்த வேலையிலே கட்டினாலும் துரும்பு மேலே

மோத முடியாமெ போவும்" என்று தொண்டையைக் கனைத்துக் கொண்டு வண்டிக்காரனைப் பார்த்தான். அவன் முகத்தில் இருந்த அலட்சிய பாவம் மாறி வாஞ்சை நோக்கு மேலிட்டிருந்தது. "இன்னைக்கு வித்தாலும் ஒத்தை ஆயிரத்துக்குப் போவுமே!" என்றான்.

வண்டிக்காரனுக்கு சந்தோசம் மிகுந்து விடுகிறது. அவனே சிறு கன்றுமுதல் அதை வளர்த்தி இந்த நிலைக்குக் கொண்டு வந்தான். தான் உருவாக்கிய ஒரு பொருளுக்கு மதிப்பு வருகிறதென்றால் சந்தோசம் பிறக்கத்தானே செய்யும்?

"இந்தக் காளைக்குத் தெனமும் எவ்வளவு பாவனை தெரியுமா? நா, தெனமும் அதுக்குப் பக்கத்திலே போயி தாடியத் தடவிக் குடுத்துத் தீனி போடுலின்னா திங்காது. நா, ஒரு நாளைக்கு ஊருக்குப் போயிட்டேன்னா அது என்னைக் காணான்னு தீனி திங்காமெ கத்திக்கிட்டெ கெடக்கும். அதுக்கு எம்மேலே எவ்வளவு பாசம். அது தன் ஆயுசு முடியற வரையிலும் நம்ம கிட்டேயே இருக்க வேண்டியதுதா. அது வேலைக்கு வந்ததிலிருந்துதா எனக்கும் கொஞ்சம் நல்லகாலம் பெறந்துருக்குது" என்று கூறிவிட்டு வெற்றிலைப்பையை அவிழ்த்து வெற்றிலை போட்டுக் கொண்டான்.

வெற்றிலைப் பாக்கை வாயில் போட்டு மென்று எச்சிலைக் கீழே துப்பி நாக்கை நீட்டிச் சிவந்திருக்கிறதா என்று நாக்கைத் துருத்தித் தெரிந்து கொண்டு புகையிலைத் துண்டை எடுத்து வாயில் போட்டு அதக்கிக் கடைவாயில் அடக்கிக் கொண்டு, "நீங்க எந்தூருவரையிலும் போறீங்க?" என்று கேட்டான்.

"புதுப்பாளையத்துக்கு"

"நம்ம சொந்த ஊரு?"

"பொன்னேரி"

"ஓ! அப்படின்னா வண்டியிலே ஏறிக்குங்க. நாங்கூட புதுப்பாளையம் தாண்டித்தா போவணும்" என்று மாரப்பனை வண்டியில் ஏற்றிக் கொண்டான்.

வண்டியில் ஏறிக் கொண்ட மாரப்பன் வண்டிக்காரனை நோக்கி, "நீங்க எந்தக் கோயிலுக்குப் போறவங்க?"

"நாங்க காக்காவிரி அண்ணமார் கோயிலுக்கு"

"அடேடேய் கிட்டப்புடுச்சுப் பார்க்கப் போனா நாம ரண்டு பேரும் ஒரு கொலமாப் போச்சு. நாங்க மோளிப்பள்ளி அண்ணமார் கோயிலுக்குப் போறவங்க. கோயிலுத்தா வேறே, கொலம் ரண்டும் ஒண்ணாப்போச்சு" என்றான் மாரப்பன்.

வண்டிக்காரனும் ஆச்சரியம் தொனிக்க, நீங்க வெளயம் கொலந்தானா?'' என்று கேட்டு விட்டு “உங்க கோயில் கூட புதுசா கட்டிக்கிட்டிருந்தாங்களே முடிஞ்சு போச்சா?'' என்றான்.

“வேலையும் முடிஞ்சு போச்சு. தர்மகர்த்தாவும் செத்துப் போயிட்டான். அந்தச் சாமிகிட்டெட மட்டும் தப்புச் செய்யுறவங் களே வுட்டு வைக்கிற பழக்கமில்லே. எல்லாச் சாமியும் பொறுத்திருந்து செய்யும். அதுகிட்டெ அப்படியில்லெ கைக்கு முய்யாப் பார்த்துடும்'' என்றான் மாரப்பன்.

இப்படியே இருவரும் - மாரப்பன் பிரியுமிடம் வரும் வரையிலும் பேசிக் கொண்டே சென்றனர். புதுப்பாளையம் வந்ததும் மாரப்பன் வண்டிக்காரரிடம் சொல்லிக் கொண்டு வண்டியை விட்டு இறங்கி மகள் வீடு நோக்கிச் சென்றான்.

வீடு பூட்டிக் கிடந்தது. பக்கத்து வீட்டில் வயது முதிர்ந்து நரைத்துத் திரைத்துப் போன கிழவி ஒருத்தி கட்டிலில் அமர்ந்து இடித்துத் தூள்செய்த வெற்றிலை பாக்கை வாயில் போட்டு அதக்கிக் குதப்பிக் கொண்டிருந்தாள். கண்பார்வை அவ்வளவு சுத்தமாகத் தெரியாது. புகை படர்ந்த நிழலில் உருவங்கள் தோன்றுவது போல் மங்கலாக உருத்தோற்றங்கள் கிழவியின் பார்வைக்குப் பட்டன.

மகளும் மருமகனும் எங்கு சென்றிருக்கிறார்கள் என்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென மாரப்பன் கிழவியிடம் சென்றான். காலடி ஓசை மூலம் வருவதை உணர்ந்து கொண்ட கிழவி - முகத்தை காலடி ஓசை வரும் திக்கை நோக்கித் திருப்பி அந்த ஓசை மேலும் கிட்ட நெருங்கி வருவதை உணர்ந்த கிழவி, “யாரப்பா அது?'' என்று வினாவினாள்.

“நாந்தானாயா'' என்றான் - தன் குரலைக் கேட்டவுடன் கிழவி புரிந்து கொள்ளக்கூடும் என்கிற முறையில்.

“நாந்தானாத் தெரியலியே? ..... என்றாள் கிழவி.

“தெரியலியா? நாந்தா பொன்னேரியிலிருந்து வாரேன்'' என்றான்.

கிழவி சற்று நேரம் மாரப்பன் யாரென்பதை நினைவுக்குக் கொண்டு வருபவள் போலப் பேசாதிருந்து விட்டு, “ஓ! பொன்னேரித் தம்பியா? எப்பய்யா வந்தே?'' என்றாள்.

“இப்பத்தானாயா வாரே, வூட்டுலே பாத்தே. ஒருத்தரையும் காணோம், நீ உட்கார்ந்திருக்கறது தெரிஞ்சது. அப்படியே பாக்கலான்னு வந்தே'' என்றான்.

"சோளக்காடோ என்னமோ களை வெட்டாட்ட இருக்குது. நேரத்தோட எல்லாரும் தோட்டத்துக்குப் போயிட்டாங்க." என்று அவன் கேட்காமலேயே கிழவி பதில் சொன்னாள்.

'உம்....ம்" என்று குரல் கொடுத்துவிட்டு "கட்டெ ரொம்ப ஆத்துக்கிட்டாப்பலே இருக்குது?" என்று கிழவியின் தளர்ச்சியைப் பற்றிக் கேட்டான்.

நின்று கொண்டிருந்த மாரப்பனை அருகில் வந்து அமரும் படி கூறி "இன்னமே அப்படித்தா. கடவுளு சீக்கிரமே வந்து கூட்டிக்கிட்டுப் போயிட்டா நல்லாப் போயிடும். வயல்லெ வெதைக்கற பயிரு பருவம் வந்த ஒடனே அறுவடை செஞ்சிட் டாத்தா மதுப்புண்டு. அதுபோல மனிசரும் பொளச்சு வாழ்ந் துட்ட பொறவு போற எடத்துக்கும் போயிட்டாத்தா மதுப்பு. ஆண்டவன் இன்னும் என்னென்ன கஷ்டத்தக் கொண்டாந்து வுடறானோ தெரியலியே" என்று கிழவி அங்கலாய்த்தாள்.

"நம்ம கையிலே என்னாயா இருக்குது? நாம பொறக்கும் போது எப்படி எப்படி வரம் வாங்கிட்டு வந்தோமோ அப்படித் தானே நடக்கும்!" என்றான்.

நிழல் மூடிய உரல் கிணற்றின் அடிமட்டத்தில் கிடக்கும் தண்ணீர்த் தோற்றம்போல் கிழவியின் குழிவிழுந்த இருண்ட கண்களில் கண்ணீர் திரையிட்டு நின்றது. நடுங்கும் தழுதழுத்த குரலில் "ஓட, நடக்க இருக்கும் பொழுதே போயிட்டாத்தா நல்லது. இல்லின்னா ஒருத்தி கையிலெ இடி வாங்கிச் சீப்பட்டு சின்னப்பட்டுத்தா போவணும்" என்று வயது வந்த தள்ளாத வயதில் மருமகளின் ஆளுகையில் ஏற்படும் இன்னல்களை மனதில் தேக்கி வைத்துக்கொண்டு பேசுவது போலப் பேசினாள்.

மாரப்பன் கிழவிக்கு ஆறுதலும் நம்பிக்கையும் ஊட்டும் முறையில், "நமக்கென்னாயா ஒருத்தரு ஆசவமாச் சோறு போட றாங்க. நம்ம கையெ காலக் கொண்டு கருமானதமச் சம்பாதிச்சு வச்ச சொத்திலே அவுங்க சோறு திங்கும் பொழுது நமக்கு இல்லின்னு ஆராயா சொல்லிட முடியும்?" என்றான்.

"நாமதா கட்டலோட உக்காந்துக் கிட்டமே என்ன செய்ய முடியும்?" என்றாள், மூக்கில் நீரைச் சிந்திக்கொண்டு.

"என்ன போலத்தவம் பேருமே எழுதி வையாயா. கட்டலுக்குத் தயிருஞ்சோறு வருதா இல்லின்னு பாரு"

கிழவியின் முகத்தில் இலேசான புன்னகை மலர்ந்தது. இருள் மூட்டத்தின் மத்தியில் காலைக் கிழக்கு வானில் தோன்றும்

ஒளிவிளக்கைப் போல அவள் முகம் தோற்றமளித்தது. பாசம் கனிந்த குரலில் "என்னதாங் குடுத்தாலும் அசலுப்பிள்ளெ அசலுப் பிள்ளதா. நல்லதா இருந்தாலும் கெட்டதா இருந்தா லும் நம்ம வவுத்திலே கெடந்ததுதானே நம்ம பேருச் சொல்லும்? சோறு போட்டா என்ன போடாட்டி என்ன? நாம இன்னமே கொடிகட்டியா ஆளப்போகிறோம்? நாம என்னைக்கிருந்தா லும் சாவத்தானே போறோம்? பாக்கறவங்களுக்கு இன்னொரு பிள்ளையான்னு நல்லாப் பொளைச்சாப் போதும்" என்று உணர்ச்சி வசப்பட்ட நிலை மாறி தாய்மைப் பாசத்தின் தியாக உணர்வோடு பேசினாள்.

"வூட்டுலே எல்லாரும் சவுக்கியமா?" என்று பேச்சை வேறு திசையில் திருப்பினான் மாரப்பன்.

"எல்லாரும் சவுக்கியந்தா, கெணத்திலேதா தண்ணி பத்தலே, தோடாயம் ஏற்பட்டுப் போச்சு" என்றாள்.

"எங்கேயும் அப்படித்தா, இந்த வருஷத்திலே மழையே பெய்யலே" என்றான்.

கிழவி அவன் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவள் போல "ஏ தம்பி! ரொம்ப நாளா இந்தப் பக்கமே காணோம்?'

"அங்கேயும் இப்படித்தா வேலையும் வெட்டியுமா, நகர்ற துக்கு முடியலெ."

"வூட்டுலே இருந்து ஒருத்தரும் வந்து போவிலியேன்னு அடிக்கடி எங்கிட்டெ பழனியம்மா சொல்லிக்கிட்டெ இருக் கும்" என்று கூறிச் சற்றுப் பேசாதிருந்துவிட்டுத் திடீரென்று "மூணு மாதமா அது முழுவாமே இருக்குது" என்றாள் கிழவி.

எதிர்பாராத இந்தச் செய்தி மாரப்பனுக்கு வியப்பையும் குதூகலத்தையும் உண்டாக்கியது. கிழவியிடம் என்ன சொல்வது என்று புரியாமல் பேசாது மௌனமாக இருந்தான்.

"ஏதோ அதுவும் வவுத்திலே ஆங்குருத்து ஒண்ணெக் கடவுளு பொறப்பிச்சுட்டான்னா அதுக்கு ஒரு ஆதரவாப் போயிடும்" என்றான் மீண்டும்.

ஒரு பெண் தாய்மை அடைகிற போதுதான் அவளின் முழுப் பெருமையும் தெரியுமோ? தாய்மையுறாத ஒரு பெண் கவனிப் பாரற்ற தரிசுநிலம் போன்றவள்தானோ? அதுவும் அவள் ஆண் குழந்தைக்குத் தாயாக வேண்டும்.

"நம்ம கையிலே என்னாயா இருக்குது? பொறப்பிக்கிறவங் கையலேயல்ல இருக்குது" என்றான்.

மாரப்பன் பேச்சை முடித்துக் கொண்டு தோட்டத்துக்குச் செல்லலாமென்று நினைத்தான். மகள் கர்ப்பமாக இருக்கிறாள் என்கிற செய்தியறிந்ததும் அவன் கவனம் கிழவி பேச்சில் லயிக்கவில்லை. கூடிய சீக்கிரத்தில் அவன் அப்பிச்சி ஆகப் போகிறான். அவன் குடும்பச் சந்ததியெனும் விருட்சத்தில் மற்றுமொரு புதிய விழுது இறங்கவிருக்கிறது. மரத்தின் கிளையில் துளிர்த்திருக்கும் அந்த இளம் விழுது, நிலத்தில் ஊன்றி உறுதிப்படும் வரையில் அதைக் கண்ணுங் கருத்துமாகப் பேணிக் காக்க வேண்டும்.

பழனியம்மாள் சிற்றாடையின்றிப் பிறந்த கோலத்துடன் புழுதியில் புரண்டு விளையாடிய காட்சி அவன் நினைவுத் திரையில் விழுகிறது. நேற்றுப் பார்த்தது போல அல்லவா அந்த நினைவுகள் பசுமையாக விளங்குகின்றன. அந்தப் பிஞ்சுக் குருத்து இன்று ஒரு பிஞ்சுக் குருத்துக்குப் பிறப்பிடமாகியிருக்கிறதென்பது எவ்வளவு மகிழ்ச்சியும், இனிமையும் கொடுக்கக்கூடிய விசயம்!

கிழவி சுற்றிலும் திரும்பிப் பார்த்துவிட்டு மாரப்பன் காதண்டை தன் முகத்தைக் கொண்டு சென்று, "தம்பி! இந்தப் புருசனத் தின்ன முண்டே பிள்ளையப் பேசுற பேச்சு காதுலே கேக்க முடியலே. இத்தனைக்கும் வேறொரு பிள்ளையா இருந்தா என்னைக்கோ வாழாமே பொறந்த எடம் போய்ச் சேர்ந்திருக்கும்" என்று நடுக்கமும், ரகசியமும் தொனிக்கக் கூறினாள்.

இந்தச் செய்தி சற்று நேரத்துக்கு முன் மனதில் நிலவிய பெருமிதத்தையும், பூரிப்பையும் குலைத்துவிட்டது. அடிவயிற்றில் ஏதோ ஓர் எரிபொருள் புகுந்து அலைக்கழிப்பது போல் உள்மனம் பதைத்தது. மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு, "எதுக்காவ அப்படிப் பேசறாளாயா?" என்று ஆத்திரமும், துடிப்பும் நிலவக் கேட்டான்.

கிழவி குதப்பிக் கொண்டிருந்த வெற்றிலைச் சாற்றைத் துப்பிவிட்டு, 'நீ சீரு செறப்பு கண்ணாலத்துக்குப் பொறவு அதிகமாகச் செய்வின்னு சம்பந்தம் எடுத்தாளாம். ஆனா நீ இன்னும் மூணு காசுஞ் சீரு செய்யலியாம்" என்று கூறிவிட்டு, 'இவ மட்டும் தம் பிள்ளைக்கு எதெதை வாரிக் குடுத்துப்புட்டா? 'கெடக்கறா நாதேறி முண்டெ!" என்று அவனுக்குப் பரிந்து பேசுவது போலப் பேசினாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை. குழந்தைப் பாசம் அவன் கண்களில் நீரைச் சுரக்கச் செய்தது. உடனே மகளைச் சென்று

காண வேண்டுமென்று உள்ளம் துடித்தது. கிழவியிடம் விடைபெற்றுக் கொண்டு செல்ல எழுந்தான்.

கிழவி அவன் கையைப் பிடித்துக்கொண்டு, "மாப்பளப்பயெ தங்கமானவெ. அவனோட அனுசரணையில்லாட்டிப் புள்ளே எந்தக் காலமோ வூடுவந்து சேர்ந்திருக்கும்" என்று முன்ன தாகவே அவனுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் விட்டு விட்டது போல் கூறிவிட்டு, "தம்பி! நா சொன்னேன்னு மூச்சுட்டறாதே எம்மவங் காதுக்கு போச்சுன்னா சோறே ஊத்தமாட்டா" என்று தாழ்ந்த தொனியில் வேண்டிக் கொண் டாள்.

"நா, எதுக்காயா சொல்றே?" என்று பரிவும் நம்பிக்கையும் ஊட்டும் குரலில் கூறிவிட்டு, சரி! தோட்டத்துக்குப் போயிட்டு வாரனாயா" என்றவாறு எழுந்தான். அப்பொழுதும் கிழவி அவன் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவள் போல, "தம்பி! நாஞ் சொன்னதே மூச்சுட்டடாதையா. என்னுசுரு இருக்காது...." என்று மீண்டும் வேண்டிக் கொண்டாள்.

மாரப்பனும் மீண்டும் அழுத்தமாக, "இல்லியாயா!" என்று கூறிவிட்டுக் கிழவி கையில் ஒரு முறுக்கை எடுத்துக் கொடுத்து விட்டுப் புறப்பட்டுச் சென்றான்.

"அந்த வேதியிலே போன முண்டை காதுக்குப் போச்சின்னா எந்தலையிலே ஒரு மசுரு வெச்சிருக்கமாட்டா" என்று கிழவி, மாரப்பன் புறப்பட்டவுடன் அவன் சம்பந்தியைப் பற்றி தனக்குள் கூறிக்கொண்டாள்.

* * *

மகளைப் பார்க்க வந்த சந்தோசம் மாறி, மாரப்பன் மனதில் துயரம் குமுறிக் கொண்டிருந்தது. எத்தனையோ கஷ்டங்கள் வந்த காலத்திலும் மகளை முகம் கோணாது பாதுகாத்து வந்திருக்கிறான். அப்படி வளர்த்த பொண்ணுக்குக் கொடுத்த இடத்தில் மாமியார் மூலம் கொடுமை இழைக்கப் படுகிற தென்றால் அது எவ்வளவு பெரிய துரதிர்ஷ்டம்! அவள் ஆயுள் பரியந்தமும் தாயும் தகப்பனுமாக இருந்து பாதுகாத்து வருவ தாகவல்லவா மணம் முடித்துக் கொண்டு வந்தார்கள். அந்த வாக்குறுதி இவ்வளவு சீக்கிரமாகவா பொய்யாக வேண்டும்?

அவன் தோட்டத்துக்குப் போய்ச் சேர்ந்தான். மத்தியான வேளையில் மகளும், மாப்பிள்ளையும் கஞ்சி குடித்து விட்டுக் களைப்பாறுவதற்காக மரநிழலில் அமர்ந்திருக்கிறார்கள். மாப்

பிள்ளையின் தாயாரும் கொஞ்ச தூரம் தள்ளி இருந்த ஒரு மரத்து நிழலில் அமர்ந்திருந்தாள். மாரப்பனைக் கண்டதும் மகளும், மருமகனும் எழுந்து நின்று வரவேற்று, "நேரா ஊரிலி ருந்துதா வாரீங்களா?" என்று கேட்டனர்.

கையிலிருந்த பையை மகளிடம் கொடுத்துவிட்டு, "ஆமா, ஊரிலிருந்துதா வாரே" என்றான் மாரப்பன்.

சற்று நேரம் அவர்களிடையில் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்கும் வகையில் சுப்பன், "ஊர்லெ, அத்தெ எல்லோரும் சௌக்கியங்களா?" என்றான்.

"சௌக்கியந்தா!"

"கெணத்திலே தண்ணீ கெடக்குதுங்களா?" "வெள்ளாமெ எல்லாம் ஒண்ணும் சொகமில்லெ. காட்டு வெள்ளாமை கூட ஏமாத்திட்டுது."

மத்தியான வேளையில் களைப்போடு வந்திருக்கும் தகப்ப னுக்குச் சமையல் செய்யவேண்டும். ரொம்ப நாளுக்குப் பின்னல் லவா வந்திருக்கிறான், விசேசமாக ஏதாவது செய்யாமல் சாதார ணமாகச் சாப்பாடு போட முடியுமா? அன்பாக வளர்த்திய தகப்பனுக்கு மனம் மகிழும்படி நடந்து கொள்ள வேண்டு மல்லவா? பிறந்த வீட்டில் இருந்த காலத்தைக் காட்டிலும் தகப்பன்மீது இருந்த வாஞ்சை அதிகமாக நெஞ்சுத் தடாகத்தில் குமிழிட்டது.

தான் வீட்டுக்குச் சென்று தகப்பனுக்குச் சமையல் செய்யப் போவதாக அவள் தன் கணவனிடம் கூறுமுன்பே அவனாகவே, 'நீ போயி மாமனுக்குச் சோறாக்கு. பசிநேரம் ஆச்சு" என்று கூறிவிட்டான். ஒரு மனைவிக்கு, இதைவிடச் சந்தோசப்படுத்தும் செய்தி எதுவாக இருக்க முடியும்! பிறந்த வீட்டாரின் விசயத்தில் கணவன் இணக்கமாகவும், சந்தோசமாகவும் நடந்து கொள்ளாத போதுதானே குடும்பத்தில் புயல் கிளம்ப ஆரம்பிக்கிறது?

அவள் கேட்க நினைத்ததை கணவன் சொன்ன உடனேயே மனைவிக்கு உள்ளூரப் பூரிப்பும் மகிழ்ச்சியும் பொங்க ஆரம் பித்து விட்டது. கணவன் சொன்ன உடனேயே தான் புறப்பட்டு விட்டால், 'தன் அப்பனுக்கென்று தானே சொல்லியும் சொல்லா மல் இருக்கும்பொழுதே புறப்பட்டு விட்டாள்" என்று மனதில் அவன் எண்ணாமல், "பாரு அப்பன் வந்திருக்கும்பொழுது கூட அப்பனைக் கவனிக்காமல் வேலை மீது கவனமாக இருக்கிறாள்" என்று எண்ணும்படியாக "கொஞ்சந்தானே களைவெட்டு இருக்குது? ஆளுக்குக் கொஞ்சமா வெட்டிப்புட்டுப் போவ

எவ்வளவு நேரமாவும்?" என்றாள். உள்ளூர அவள் மனது எவ்வளவு சீக்கிரத்தில் சென்று சமையல் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் செல்ல விரும்பியது. திடீரென்று தன் பதிலுக்குக் கணவன் இசைந்து சரியென்று சொல்லிவிட்டாலும் என்ன பண்ணுவது என்றும் மனம் புலம்பியது.

திடீரென்று சுப்பன் முகம்சுருங்க, 'ஆமா ஆமா!, கொஞ்ச நேரத்திலே நீ வெட்டி முறிச்சது போதும். மொதல்லே சோறாக்கி மாமனுக்குப் போடு" என்று ரோசம் கொப்பளிக்கக் கூறினான்.

மகள் சொன்னதின் அர்த்தத்தை மாரப்பன் கொஞ்ச நேரத்துக்கு முன்னர் கிழவிகூறியதன் சூழலிலிருந்து புரிந்து கொண்டு விட்டான். மகள் இப்படிப் பொறுப்புடன் நடந்து கொள்வதைப் பற்றி உள்ளூர மகிழ்ந்தான். எப்படியிருந்தாலும் அவர்களுக்குள் ஒற்றுமையாயிருந்தால் போதுமல்லவா? ஆனால், தனக்கு முன்னால் நடக்கும் உரையாடல் தன்னை ஒட்டி நடப்பதால் தான் அதற்கொரு பதிலும் கூறாமல் இருப்பது கௌரவக் குறைவல்லவா?

"எனக்கொன்றும் பசியில்லெ மாப்பிள்ளெ. ஒரேயடியா வேலையை முடிச்சுட்டுப் போயிடலாம்" என்றான்.

"வேலையைப் பத்தி என்னங்க. இன்னைக்கு முடியலின்னா நாளைக்குக் கொஞ்ச நேரம் சேத்திச் செஞ்சிக்கிட்டாப் போவுது? தெனம் தெனம் இப்படியே நல்லது கெட்டதுன்னு இல்லாமெ வேலை செஞ்சு என்னைத்தெத் தலையிலே வாரிக் கட்டிக்கிட்டுப் போவப்போறோம்?" என்றான் சுப்பன்.

பழனியம்மாளுக்கு அளவில்லா மகிழ்ச்சி. தன் கணவன், தன் தகப்பன் விஷயத்தில் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டு கூறுவான் என்று எதிர்பார்க்கவில்லை. தனது மாமியார் தினமும் தன் பெற்றோர்களைப் பற்றி இழிவாகப் பேசிவரும் போது எங்கே தன் கணவனும் - வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், உள்ளூர வெறுத்து வருகிறானோ என்று நினைத்து வந்தாள். அவனுடைய நடவடிக்கை இப்பொழுது அதற்கு நேர்மாறாக அல்லவா இருக்கிறது!

பழனியம்மாள் தன் தகப்பனைப் பார்த்து, "நா, முன்னாலே வீட்டுக்கு போறே. நீ 'சீக்கிரம் வாண்ணா!,' என்று கூறிவிட்டு, களை வெட்டும்பொழுது எழுந்த மண் புழுதியும் வியர்வையும் கலந்த மார்பை மூடியிருந்த ரவிக்கையை நனைத்து உடலில் எழுப்பிய ஒருவித வாடையைப் போக்கிக்கொள்வதற்காக

ரவிக்கையைக் களைந்துவிட்டு ஏற்றத்தில் வாளியில் சேந்தி எடுத்த தண்ணீரைக் குனிந்து நின்று கைகளால் வாரி உடம்பைக் கழுவினாள்.

பின்னர் அவள் வீட்டுக்குப் புறப்பட்டுவிட்டாள். அவள் தோற்றத்தில், அசைவில் தாய்மைக்கோலம் பூண்டிருந்தது.

தூரத்தில் மரத்தடியில் அமர்ந்திருந்த சுப்பனின் தாயார் கருப்பாயி எழுந்து வந்து மாரப்பனும் சுப்பனும் இருந்த இடத்தில் கிடந்த கொத்தை எடுத்துக்கொண்டு களைவெட்ட வயலுக்குப் புறப்பட்டாள். ஊரிலிருந்து வந்த சம்பந்தியை, 'வாங்க' என்று கூடக் கேட்கவில்லை. இது வரையிலும் தூரத்தில் அமர்ந்திருந்தபடியால் தெரியவில்லை என்று கொள்ளலாம். ஆனால் இப்பொழுது அருகில் வந்து கூடப் பேசாமல் செல்கிறாள் என்றால்...? ஒருக்கால் கிழவி மாரப்பனிடம் கூறிய பிரகாரம் அவனை அவள் மதிக்காமல் வெறுக்கிறாளோ? அப்படியே ஒருக்கால் அவள் நடந்துகொண்டாலும் அதை அவன் பொருட்படுத்தி அவனும் அவள் போல் நடந்து கொள்ளலாமா? என்ன இருந்தாலும் அவன் அப்படி செய்ய முடியாது. அவன் தன் பொருளை ஒருவரிடம் ஒப்படைத்திருக்கிறான். அந்தப் பொருள் உள்ளளவும் அதில் அவனுக்கு அக்கறையும், ஆசையும் உண்டு. ஏற்றுக்கொண்டவர்கள் இடறுகிறார்கள் என்று அவன் இருந்துவிடமுடியாது. ஏற்றுக் கொண்டவர்களைவிட ஒப்படைத்தவனுக்குத்தான் நஷ்டம் அதிகம். எதையும் அவன் தாங்கி ஏற்றே ஆக வேண்டும்.

மாரப்பன் சம்பந்தியிடம் பேச்சை ஆரம்பிக்கும் முறையில் "ஏம்மா ஒரு மாதிரியா இருக்கிறீங்க? ஒடம்புக்கு சரியில்லிங்களா?" என்றான்.

தான் பேசாமல் இருந்தால் மாரப்பன் பேச மாட்டான் என்று நினைத்திருந்த கருப்பாயிக்கு அவன் செய்கை வியப்பை அளித்தது. தான் உண்மையிலேயே தெரிந்து பேசாமல் இருந்துவிட்டதாகக் கருதிவிடக்கூடாது என்ற கவலையில், "அடடா! நீங்களா! எப்ப வந்தீங்க? நான் கூட யாரோன்னு நெனைச்சு இருந்திட்டேட. இப்ப என்னமோ கொஞ்சநாளா பொகை சூழ்ந்தாப்பலே பார்வை சரியாத் தெரியமாட்டேங்குது. எந்தச் சாமி கோபமோ தெரியலே. என்னன்னு தெரிய யாராவது பூசாரியப் போயி பார்த்துட்டு வரலான்னா நேரமில்லே" என்று துணிந்து மனமறியப் பொய்யொன்று பேசினாள்.

அவளிடம் ஏற்பட்ட முகபாவங்களின் மாறுதலிலும், பேச்சின் தடுமாற்றத்திலும் இருந்து அவள் உண்மையிலேயே பொய்

பேசுகிறாள் என்று தெரிந்துகொண்ட மாரப்பன். அதனால் எழும் உளப் பிரதிபலிப்பைக் காட்டிக் கொள்ளாமல், "அப்படின்னா அதை ஒடனடியாகப் பார்க்க வேண்டாமா? வேலை இன்னைக்கில்லின்னா நாளைக்குச் செஞ்சுக்கிறது......" என்று அவளுக்குப் பரிந்துபேசுபவன் போலப் பேசினான்.

"இன்னமே போயிப் பார்த்தாத்தான் முடியும் போலிருக்குது" என்று கூறிவிட்டு மகனைப் பார்த்து, "எங்கடா பழனியம்மா அவுங்களுக்குப் போயி சோறாக்கச் சொல்லறது தானே!" என்று அக்கறையும் பரிவும் மிக்கவள் போல் தன்னைக் காட்டிக் கொண்டாள்.

"அவ முந்தியே போயிட்டா" என்று சுப்பன் அழுத்தமாகப் பதில் கூறினான். தனது மாமனார் வந்திருப்பதை உண்மையி லேயே தெரிந்திருந்தும் தெரியாதது போல பாவனை செய்யும் இழிகுணத்துக்காக அவன் கடிந்துகொள்வதுபோல் அவன் குரலில் எழுந்த தொனி புலப்படுத்தியது.

"ஊரிலே எல்லோரும் சவுக்கியந்தானுங்களே?"

"சவுக்கியந்தாம்மா!"

இருவரிடையிலும் சற்றுநேரம் மௌனம் நிலவியது. முகம் கொடுத்து மாரப்பனிடம் பேச அவள் மனம் கூசியது; அவனிட மிருந்து பேச்சை சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டுமென்று 'சரி, நீங்க வூட்டுக்குப் போங்க. நாங்க களைவெட்டிட்டு வாரோம்" என்று கூறிவிட்டு வயலுக்குள் இறங்கினாள்.

சுப்பனும், "நீங்க வூட்டுக்குப் போயி சாப்பிடுங்க பசியாயிருக் கும். இன்னும் கொஞ்ச நேரத்தில் களைவெட்டிட்டு வந்துடறே" என்று கூறினான்.

"நானும் வாரே எல்லோருமாச் சேர்ந்து வெட்டிப்புட்டு போயிடலாம். நம்மையறியாமே பசியென்ன அப்படி வந்துடப் போவுது" என்று கூறிக் களைக் கொத்தை எடுக்கப் போனான் மாரப்பன்.

சுப்பன் தனது மாமனாரை வீட்டுக்குப் போகுமாறு வற்புறுத்தி அனுப்பி வைத்தான். மாரப்பனும் மருமகனின் நிர்ப்பந்தம் தாளாமல் வீட்டுக்குப் புறப்பட்டான். "சம்மந்தி எப்படியோ இருந்துட்டுப்போவுது. மாப்பிள்ளை ரொம்ப பிரியமாத்தான் இருக்கறாரு." என்று தனக்குள் கூறியவாறு சென்றான்.

தகப்பன் வீடு செல்வதற்குள் பழனியம்மாள் தகப்பனுக்காக உளுந்துவடை சுட்டு, மொச்சைப்பருப்பு ரசம் வைத்து

சோறாக்கி இருந்தாள். மாரப்பன் வீடு சென்றதும் வெளி வாசலில் உப்புப்படர்ந்து, உள்ளே பாசான் பிடிந்திருந்த மண்பானையில் இருந்த தண்ணீரை வாப்பாடு உடைந்த மண் செப்பால் மொண்டு கைகால்களைக் கழுவிக்கொண்டு சென்று திண்ணை மீது அமரப்போனான். பழனியம்மாள் கிழிந்த ஒரு ஜமுக்காளத்தை எடுத்துத் தகப்பனுக்கு உட்கார விரித்துப் போட்டாள். காய்ந்த வாழை மட்டையால் தைத்த இலையைப் போட்டு வடையை எடுத்துவைத்தாள்.

வடையைக் கையில் எடுத்துக் கடித்து மென்று விழுங்கி விட்டு, "ஏம்மா ஊரையே மறந்திட்டியா? உப்பு ஈரத்தோடே; உழவெ மண்ணோடேன்னு பெரியவங்க சொல்லுவாங்க" என்று சாதாரண முகபாவத்தோடு கூறியவன், திடீரென்று வலியச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "கல்யாணம் ஆன உடனே...." என்று எதையோ சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்காமல் சிரித்தான்.

அப்பொழுது வாசலிலிருந்த வேப்ப மரக் கிளையில் ஒரு காகம் அமர்ந்து கத்த ஆரம்பித்தது. இதைக் கேட்ட பழனி யம்மாள், "விடியக் காத்தாலே இந்தக் காக்கா இந்த மரத்து தாவிலெ உக்காந்து கத்துச்சு, அப்பவே நெனச்சே. இன்னிக்கு ஆராவது ஒறம்பரை வருவாங்கன்னு. வெடியக் காத்தாலே இந்தத் தாவிலே என்னைக்குக் காக்கா உக்காந்து கத்தினாலும் அன்னைக்கு ஆராவது ஒறம்பரை வருவாங்க' என்று கூறி விட்டுத் தகப்பனுக்குக் குடிக்கச் செம்பில் தண்ணீர் கொண்டு வந்து வைத்துவிட்டு ஏதோ ஒன்றை நினைத்தவள் போலத் தகப்பனைப் பார்த்தாள். அவள் நினைவில் பாசம் பாசத்தின் அலை புரண்டது. 'கல்யாணம் ஆன உடனே..." என்று தகப்பன் கூறி முடிக்காமல் விட்ட அந்தச் சொல் அவள் மனதை அறுத் தது. அவள் என்ன செய்வாள்? அவள் நினைவுகள் எல்லாம் தான் பிறந்த வீட்டைப்பற்றியே தினமும் எழும். மாமியாளின் தொணதொணப்பும் மொறுமொறுப்பும் அவள் மனம் பிறந்த வீடு செல்ல இடம்தரவில்லை. அவள் கணவன் போய்விட்டு வருமாறு கூறுவான். இருந்தாலும் மாமியாரின் விருப்பமில்லா மல் செல்லுவது குடும்பத்தில் அநாவசியமான புகைச்சலையும் பூசலையும் உண்டுபண்ணும் என்று அவளுக்குத் தெரியும். இவற்றையெல்லாம் எப்படித் தகப்பனிடம் கூறுவது? அப்படிக் கூறினால் புகுந்த இடத்தைப் பற்றித் தப்பான எண்ணம் முளைத்து விடாதா?

“எனக்குத்தான் இங்கே வேலைன்னு வரமுடியாமப் போச்சு. நீங்களாவது வந்திருக்கப்படாதா?” என்று தந்தையைத் திருப்பிக் கேட்டாள். அவள் சென்று பெற்றோரைப் பார்த்து வருவது தான் நியாயம். அது அவளுக்குத் தெரிந்ததுதான். இருந்தும் அவளுக்குக் குடும்பச் சூழ்நிலை இடம் தரவில்லையே.

மகள் ஊருக்கு வராததைப்பற்றி அவனுக்கும் வருத்தம் கிடையாது. இப்படிக் கேட்டாலாவது மகள் தன் குறையைக் கூறமாட்டாளா என்று எதிர்பார்த்தான். ஆனால் அதையவள் தன் தகப்பனிடம் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. மகளின் இந்தப்போக்கு தகப்பனுக்கு ஆறுதலளித்தது. என்றைக்குமே, “புகுந்த வீட்டின் குறைகளைப் பெற்றோர்களிடம் முறையிடாத பெண்ணும், சேறு கலக்கியவுடன் தண்ணீர் உறிஞ்சாத நிலமும் செழிப்படையும்” என்னும் வாக்கை நினைத்து மகிழ்ந்தான்.

“எல்லா அப்படித்தாம்மா! அங்கேயும் இப்படித்தா வேலை வெட்டியுமாப் போச்சு” என்றான்.

வடை சாப்பிட்டு முடிச்ச தகப்பனுக்குச் சோற்றை வைத்துப் பருப்புப் போட்டாள். அவள் உள்ளத்தில் விவரிக்க வொண்ணாத மகிழ்ச்சியும், அதே பொழுதில் இனந்தெரியாத சோகமும் எண்ணெய்யும், தண்ணீருமாகக் கலந்து மிதந்தன.

அவள் ஒன்றும் பேசவில்லை.

ஒடம்புக்கு இதுவரையிலும் ஒண்ணும் இல்லையே என்று ஏதோ நலன் விசாரிப்பது போல் விசாரித்தான். ஆனாலும் அவன் கேட்டதின் அர்த்தம் அதுவல்ல. கருவுற்றிருக்கும் அவள் உடலுக்கு ஏதாவது மசக்கை ஏற்படுகிறதா என்று கருவுற்றிருக்கும் விஷயம் கிழவி மூலம் அறிந்ததை உறுதி செய்து கொள்ளவும்தான் அவன் அந்தக் கேள்வியைக் கேட்டான்.

“ஒடம்புக்கு ஒண்ணுமில்லே. இப்ப பத்து நாளாத்தா என்னமோ பித்தமாட்டமா தலையைச் சுத்திகிட்டு மயக்கமா வருது” என்றாள். அவள் நேரடியாக விஷயத்தைக் கூறாவிட்டாலும் மறைமுகமாக உணர்த்திவிட்டாள். அது போதும்! அவன் கொடுத்து வைத்தவன். “கல்யாணம் செய்த ஒரு வருஷத்தில் கைக்குழந்தை காணாத பெண்ணும் கடைவாய்ப்பல் முளைக்கு முன் காளை சேராத கிடாரியும் காலத்துக்கு இகழ்வானவர்கள்” என்னும் பழமொழியை நினைத்து மகிழ்ந்தான்.

மகள் கருவுற்ற செய்தியை மனைவியிடத்தில் சென்று கூற வேண்டும். அவள் மிகவும் பெருமைப்படுவாள். அவளும் அவளைப்போல் ஒரு காலத்தில் இருந்து வாழ்ந்தவள்தானே!

அவன் மனம் ஊரை நோக்கிப் பயணம் கிளம்பிவிட்டது. எவ்வளவு சீக்கிரத்தில் ஊரைச்சென்று அடைய முடியுமோ? அவ்வளவுக்கு நல்லது.

அவன் சாப்பிட்டு முடித்தான்.

சற்றுநேரத்தில் சுப்பனும், அவன் தாயாரும் தோட்டத்தி லிருந்து வந்து சேர்ந்தனர். சுண்ணாம்புநீர் தெளித்தாற் போன்று அவர்கள் உடம்பில் வியர்வைநீர் உப்புப்பூத்திருந்தது. உழைப் பின் களைப்பால் எழும் சோர்வும், சிடுசிடுத்த பாவமும் அவர்கள் முகத்தில் பிரதிபலித்தன.

மாரப்பன் ஊருக்குத் திரும்ப ஆயத்தமானான். சம்பந்தியிடத் திலும் ஊருக்குச் சென்று வருவதாகக் கூறினான்.

"இப்ப என்னங்க மாமா அவசரம்? நாளைக்குச் சாவகாச மாய்ப் போறது" என்றான் சுப்பன்.

"இல்ல மாப்பளெ - போவணும். இல்லாட்டி எந்த வேலையும் சொகப்படாது" என்று கூறிவிட்டுச் சம்பந்தியைப் பார்த்துப் 'போயிட்டு வாரனம்மா' என்றான்.

அவள் ஏதோ கூறினாள். அவளின் சிரத்தையற்ற குரல் அவனுக்குக் கேட்கவில்லை.

புறப்பட்ட தந்தையைப் பார்த்த மகள், "போயி மறக்காம எங்கம்மாளெ வரச்சொல்லண்ணா" என்று மடித்து மடித்துச் சொன்னாள்.

நிச்சயம் வரச்சொல்வதாக மகளைப் பார்த்துக் கூறி விட்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் சென்றான். அவனையே பார்த்து நின்ற அவளது கண்களில் நீர்த் திரையிட்டு அவளது பார்வையி னின்றும் அவனை மறைத்தது.

# 19

ஆடி மாதப் பருவமழை பெய்துவிட்டது. இந்த வருசம் கொஞ்சம் பின்தங்கித்தான் மழை பெய்தது. இருந்தாலும் பரவாயில்லை. ஆடிமாதம் முடிவதற்குள்ளேயே மழைபெய்து விட்டது. ஆவணிமாதம் பிறந்து மழை பெய்திருந்தால் அது செத்தைப் பட்டமாக இருக்கும். பயிர் அவ்வளவு ஓங்காது. அதுவரையிலும் விவசாயிகள் கொடுத்துவைத்தவர்களே!

மழை பெய்தும் வானம் புழுக்கமாக இருந்தபடியால் யாரும் ஏர்பிடிக்கவில்லை. மேல்காற்று வீசாமல் வானம் புழுக்கமாக இருக்கும் பொழுதே விதைப்பு நடந்து விட்டால் - மேலே மழை பெய்து உழவுச்சாலை மூடிவிட்டால் என்ன செய்வது என்ற கவலை இருந்தது.

மாரப்பன் வீட்டில் எந்த வேலையும் மிக நேர்த்தியாகவே நடக்கும். எப்பொழுதுமே அவன் விவசாய வேலைகளை முதலிலேயே செய்து முடித்துவிடுவான். அப்படி முன் கூட்டியே முடித்துவிட்டால் அடுத்தவங்களுக்குக் கூலிக்கு உழப் போகலாமல்லவா? அவள் மனைவியும் அடிக்கடி இப்படிக் கருத்தாகப் பிழைக்கவில்லையென்றால் இந்தக் கையகல மண்ணை வைத்துக் கொண்டு எப்படிப் பிழைப்பது? என்றும் ஓதிக்கொண்டே இருப்பாள்.

அன்று மாலையே கலப்பையை எடுத்துக் கொண்டு ஆசாரியிடம் சென்றான். அவனுக்கு முன்னாடியே சில விவசாயிகள் கலப்பையைக் கொண்டுவந்து ஆசாரிப் பட்டறையில் வைத்துக் கொண்டிருந்தனர். கொல்லுப்பட்டறை உலை வாயிலில் கிடக்கும் கோலாங் கட்டியின் மணமும், துரு ஏறிய இரும்பின் நெடியும், பலவகை மரங்களைச் செதுக்கிய சிராய்த் தூள்களின் வாசமும், மழை ஈரத்தால் எழுந்து கலந்து ஒரு புதுவிதமான சுகந்தத்தை வாரி இறைத்துக் கொண்டிருந்தது.

வரிசைப் பிரகாரம் ஆசாரி கலப்பைகளைச் சீர் செய்து கொடுத்துத் கொண்டிருந்தான். ஒவ்வொருவரும் "சீக்கிரம் சீக்கிரம்" என்று அவசரப்படுத்திச் கொண்டிருந்தனர்.

"எல்லோரும் இன்னைக்கே வந்து தண்ணி கொதிக்கறாப்பலே கொதிச்சா ரண்டு கையிலே என்ன செய்ய முடியும்? சும்மா இருந்தபொழுது கொண்டாந்திருந்தா உங்க வேலையும் முடிஞ்சிருக்கும். எனக்கும் சிரமம் கொறஞ்சிருக்கும்" என்று ஆசாரி கூறினான்.

"கொக்கு கூட்டமாகத்தான் பறந்து போகுமாம். குடியானவெ குலையெரியும்போதுதா சாப்பிடுவானாம். இன்னக்கிப் புதுசாப்போயி அவங் கொணத்தே மாத்திக்கோன்னு சொன்னா முடியற காரியமா?" என்றான் ஒருவன்.

அப்படின்னா பொறுமையாத்தா இருந்து வேலையெ முடிச்சுக்கிட்டுப் போவணும். அவசரப்பட்டு என்ன செய்ய முடியும்?" என்று நெற்றியில் படிந்த வியர்வையை வழித்து விட்டுக்கொண்டு கூறினான்.

கொல்லன் பட்டறையில் கூட்டம் இருப்பதைக் கண்ட கோமாளிக் கிழவர் பொழுதைப் போக்குவதற்காக அங்கு வந்து சேர்ந்தார். ஆசாரி கூறியதைக் கேட்ட கிழவர், வயது முதிர்வின் உரிமையோடு "என்னடா ஆசாரி எல்லோரையும் வெரட்டறே?" என்றார்.

கிழவர் ஏதோ கதை ஆரம்பிக்கும் பீடிகையோடு இந்தக் கேள்வியைப் போடுகிறார் என்று புரிந்துகொண்ட ஆசாரி, சிரித்துக்கொண்டு, 'நா வெரட்டி இவுங்கெல்லாம் பயந்துடு வாங்களா கவுண்டரே?' என்றான்.

கட்கத்துச் சந்தில் விரலைவிட்டுத் தேய்த்துத் திரண்ட அழுகை உருட்டி முகர்ந்து பார்த்துவிட்டு "ஊரையழிக்க ஒரு நெருப்பு; உழவையழிக்க ஒரு கொல்லன்னு சும்மாவா சொல்றாங்க?" என்றார் கிழவர்.

* * *

கிழவர் கதை சொல்லத் துவங்கிவிட்டார் என்பதையறிந்து அங்குள்ளவர்கள், ஏதாவது ஒரு விதத்தில் அவரவர் வேலை முடியுமட்டும் பொழுதுபோக வேண்டும் என்பதற்காகக் கிழவரை உற்சாகப்படுத்தும் முறையில் "கொல்லெ அவ்வளவு கெட்ட சாதிப் பயலா தாத்தா?" என்று கேட்க ஆரம்பித்தனர்.

பந்தற்காலின் அருகில் ஒரு துண்டுக் கட்டையை இழுத்துப் போட்டு அமர்ந்து முதுகைப் பந்தற்காலில் சாய்த்துக் கொண்டு "ஊருக்கொருத்தன்னாலும் பறவைக்கு ராஜாளியாட்டத்தா" என்றவர் தொண்டையைக் கனைத்து இருமிக் கொண்டு "அந்தக்

காலத்திலேயே ஒரு சாதிக் கூட்டத்தையே ஒழிச்சுக் கட்டத் திட்டம் போட்டு நடத்தியுங் காட்டிட்டாங்களே" என்று கூறி நிறுத்தினார்.

கிழவர் கூறப்போகும் கதை என்னவென்று தெரிந்துகொள்ள ஆவல் மிகுந்தவர்களாகக் கிழவரை நேரடியாகக் கதைக்கு வருமாறு வற்புறுத்தினார்கள். இடையில் இடைமறித்துக் கிழவரின் மூப்புத்தன்மையால் எழும் மறதிக்கு இட்டுச் செல்லும் அவர்கள் இடையீட்டைக் கண்ட கிழவருக்கு ஆத்திரம் மேலிட்டது. "வாரியை நோக்கித்தா தண்ணீர் ஓடுமே ஒழிய நம்ம வாதனைக்காவ மோட்டிலே பாயாது" என்று கூறி விட்டுப் புருவத்தைச் சுளித்து நெற்றியை உயர்த்தி ஏதோ சிந்தனையில் நிலைத்தவராக இருந்துவிட்டு, "ஒரு காலத்திலே பறையர்களுக்கும், ஆசாரிகளுக்கும் பகை மூண்டது. ஆனாலும் பகையைக் காட்டிக்காமே மறந்துட்டதாகப் பாவனை காட்டிகிட்டு பறையர்கள் எங்கெங்கு உண்டோ அங்கிருந்தெல்லாம் ஒருவர் பாக்கியில்லாமல் ஆசாரிக விருந்துக்கு அழைச்சாங்க. அதுக்காவ விசை வச்ச கல்பந்தல் ஒண்ணு போட்டு அதுலே விருந்து வச்சாங்க. எல்லாரும் வண்ணான் விரிச்ச மாத்துலே உக்காந்து விருந்து சாப்பிட ஆரம்பிச்சாங்க. உற்சாகமாகச் சாப்பிட்டுக் கிட்டு இருக்கும்பொழுது ஆசாரிகள் விசைக்கயிற்றை இழுத்து கல்பந்தலைத் தள்ளி எல்லாரையும் உள்ளேயே வச்சுக் கொன்னுட்டாங்க. அப்பொ ஒரு பையன் மட்டும் தப்பிச்சு அங்கிருந்த வண்ணான் கிட்டெ அடைக்கலம் பூந்துக்கிட்டான். அவனும் பந்தி விரிக்கக் கொண்டு வந்த துணி மூட்டைக்குள் தப்புச்ச பயலை வைத்துக் கட்டி எடுத்துப் போயி வூட்டுலே வளர்த்தி வந்தான்."

ஆசாரிங்க 'பறைப்பூண்டு இல்லாமே அழிச்சிட்டோம்'னு இறுமாந்து இருந்தாங்க. தப்பிச்ச பயலும் வண்ணான் வூட்டிலே வாலிபனா வளர்ந்துகிட்டு இருந்தான்.

ஒரு நா நல்ல மழை பேஞ்சு ஏரியிலே தண்ணி நெறஞ்சிடுச்சு. மேலே மேலே வெள்ளமும் ஏரிக்கு வந்துக்கிட்டு இருந்தது. ஏரியிலே தண்ணி வடியறதைத் தடுத்தாத்தா குடியானவங்களோட வயல்லே இருக்கிற மகசூலுத் தப்பும்.

ஏரி நெறையும் போதெல்லாம் ஏரிக்கரை மேலே நின்னு பறையர் பறையடிச்சா தளும்பி வழியும் தண்ணீர் கூட ஏரிக் கரைக்குக் கீழே ஒடுங்கி நின்னுடும். ஆனா ஆசாரிங்களுக்கோ பறையர் இலலாததாலே ஏரி ஒடஞ்சி குடியானவங்க

வெள்ளாமை அழிந்து அவுங்க கொட்டம் ஒடுங்கப் போவு துன்னு கொண்டாட்டமா இருந்தது.

குடியானவங்க எல்லாம் ஒண்ணு சேர்ந்து இதுக்கு என்ன பண்ணறதுன்னு ஓசனை பண்ணினாங்க. வண்ணான் வூட்டுலே பறப்பிள்ளை ஒண்ணு தப்பிச்சு இருக்கறதை வண்ணான் மூலம் அறிஞ்சு அந்தப் பயலைக் கூட்டிக்கிட்டு ஏரிக்கர மேலே நின்னு பறையடிச்ச ஒடனே நெறஞ்சு வழிஞ்ச தண்ணி மந்தரக்காரனுக்குக் கட்டுப்பட்ட பாம்பாட்ட ஒடுங்கிக் கொறஞ்சிடுச்சு" என்று கூறிச் சற்று நிறுத்தினார். வேலை செய்யும் ஆசாரியைத் தவிர அங்கு இருந்தவர்கள் எல்லாரும் கிழவரின் முகத்தையே பார்த்தபடி அமர்ந்திருந்தனர்.

தான் கூறுவதை எல்லோரும் ஆவலுடன் கவனித்து வருவதைக் கண்ட கிழவர் பெருமிதமும், கர்வமும் பொங்க கீழுதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டு எதையோ ஆழ்ந்து சிந்திப்பவர் போலத் தோன்றினார். பின்னர் சற்றுப் பொறுத்து, "பறையோசை கேட்ட ஆசாரிகள் பறைப்பிள்ளை எப்படித் தப்பிச்சு இருக்குது? அதையும் கருவறுத்துடணும் என்று வீராவேசமாகப் புறப்பட்டனர். இதையறிந்த குடியானவர்கள் பறைப்பிள்ளையைத் தப்புவிக்க வேண்டி "இவெ எங்க பயல்தா" என்றனர்.

இதைக் கேட்ட ஆசாரிகள் "அப்படின்னா ரண்டு பேரும் சேர்ந்து ஒரே எலையில் சாப்பிடுங்க பார்க்கலாம்" என்றனர்.

குடியானவர்களுக்குச் சற்று நேரம் என்ன கூறுவதென்றே புலப்படவில்லை. அதில் ஒருவன் யுக்தானுபவம் கொண்ட சிந்தனையோடு "சரி சாப்பிடறோம்" என்று கூறி விட்டு ஒரு இலையில் சோற்றைப் போட்டு பறைப் பிள்ளையையும் கூட அமர வைத்தான். சோற்றைப் பிசைந்து கொண்டே, இருவரும் சாப்பிடும் உணவைப் பிரிக்கும் முறையில் ஆசாரிகளுக்குத் தெரியாமல் இலையில் நடுவில் விரலால் ஒரு கோடு கீறினான். அப்படி விழுந்த கோடுதான் இலையின் நடுவில் இருக்கும் நரம்பு. அதுக்கு மின்னே அப்படி எலையிலே நரம்பு கெடையாது.

அப்புறம் ஆசாரிகளும் பேசாமெப் போயிட்டாங்க. அன்னைக் கிருந்துதா குடியானவருக்கும், பறையருக்கும் தொடர்பேற் பட்டது. அப்பறந்தா குடியானவங்க வூட்டிலே ஏதாச்சும் சாவு வுழுந்திட்டுதுன்னு பறையருங்க வாய்க்கரிசி வாங்கற பழக்கம் வந்தது. அதனாலதா குடியானவனுக்கு, பறப்பிள்ளைக தலப்பிள் ளைன்னு ஆச்சு" என்று கூறிக் கதையை முடித்தார்.

குறுஞ்சிரிப்புடன் கிழவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டு வேலை செய்து கொண்டிருந்த ஆசாரி "அப்பவும் எங்களெ ஒண்ணும் பண்ண முடியலியே கவுண்டே" என்றான்.

"அப்படியிருக்கங்காட்டித்தா ஒழவு வேலச் சமயத்திலே ஊருக்குடியானவனெல்லா உங்கிட்டெ வந்து நிக்கிறானுவ"

இதைக் கேட்ட ஆசாரி முகத்தில் கர்வமும், கம்பீரமும் தாண்டவமாட மாரப்பனை நோக்கி, "உங்கலப்பையை எடுத் தாண்ணா!" என்று கூறி விருத்துப் போன கால்களை இடம் மாற்றி அமர்ந்து கொண்டான்.

கலப்பையை எடுத்துச்சென்று ஆசாரியின் முன்னால் வைத்த மாரப்பன் "கலப்பை கடுசா இருக்குது, த்ணிசுக்கு வச்சுக் குடு" என்றான்.

கலப்பையைப் பழுது பார்த்து முடிந்ததும் வீட்டுக்கு எடுத்து வந்து மேழி, கொழு முதலானவற்றைக் கலப்பையுடன் பூட்டி மறுநாள் காலையில் விதைப்புக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடு களை முன்கூட்டியே சரிசெய்து வைத்தான். அன்று இரவில் விதைப்பதற்கான தானியங்களை எடுத்து ஒரு கூடையில் கொட்டி ஒவ்வொருவராகத் தங்கள் கையால் தொட்டுக் கலக்குமாறு கூறினான். முதன்முதலில் முத்தம்மாளின் கையை தானியத்திற்குள் விட்டுக் கலக்குமாறு செய்தான். அதிர்ஷ்ட முள்ள யாருடைய கையாவது படுவதால் நல்ல விளைச்சல் காணாதா என்ற நம்பிக்கையில்தான்.

இப்பொழுது அவன் சிந்தனை பூராவும் விதைப்பைப் பற்றியே இருந்தது. இனி அந்த வேலை முடியும் வரையிலும் அவன் சரியாக உறங்க மாட்டான். நிம்மதியாக உட்கார்ந்து பேசவோ, ஓய்வெடுத்துக் கொள்ளவோ மாட்டான். இனி அவன் விசை தட்டிவிட்ட ராட்சச யந்திரம்தான்.

"நீ நேரத்திலேயே எழுந்து கம்பு குத்திக் களிக்கிளறிச் சோத்தெ எடுத்துகிட்டுக் காட்டுக்குச் சாலுப்போட வந்து சேரு. கூட இன்னும் ரவுண்டுஏருக் கூப்புட்டிருக்கறே. ஆரண்ட ஈரமா இருக்கறதாலே சீக்கிரமா வெதச்சுப்புட்டு அடுத்தவங்களுக்குக் கூலிக்குப்போயி அந்தக் கூலியெ அடச்சுப்புடலாம். நானும் மொதக் கோழி கூப்படலியே எழுந்து காட்டுக்குப் போயி குட்டான் குட்டானாக் கெடக்கற குப்பையெ எறச்சு வைக்கறே. மசக்கல்லியே ஏருப்புடுச்சுட்டா கூலியேரு வரங்காட்டி காக்காயங்காட்டிலே ஒரு அணப்பு உழுது முடிச்சுடலாம். அப்புறம் எல்லா ஏரும் சேர்ந்து உழுதமனா உச்சிப் பொழுதுக்

குள்ளே காக்காயங்காடு உழுதாயிடும். பொறவு ஏருட்டு மாட்டுக்குத் தீனிபோட்டு தண்ணி காட்டிக் கொண்டாறதுக் குள்ளே கெழவங் காட்டுலே சரிஞ்சு கெடக்கற பொளிக்கல்லை யெல்லாம் நா, பொறுக்கி வச்சுடுவே. நீ எதுக்கும் காத்தாலச் சோத்தோட மத்தியானச் சோத்தையும் சேத்திக் கொண்டாந் திடு" என்று தன் மனைவியிடம் இடைவிடாமல் பேசித் தீர்த்தான்.

அதன்படியே அன்று அதிகாலையில் காட்டுக்குச் சென்று உழவுக்கு முன் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து முடித் தான். உழவு பிடிக்கும் நேரம் மனைவி சோற்றுப் பானைகளைக் கூடையில் அடுக்கிச் சுமந்தபடி காட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

வானம் மோடம் போட்டிருந்தது. மேல் காற்று லேசாக வீச ஆரம்பித்தது. விதைப்புக்கு ஏற்ற நல்ல பருவச் சூழ்நிலை. வெப்பத்தின் புழுக்கமோ, உருக்கமோ இல்லை.

கடலைப் பருப்புப் போடுவதற்கு முன்னர் சுற்றிலும் இருந்த ஓரப்பகுதிகளில் சோளம் விதைக்க எண்ணினான். தப்பித் தவறி நுழையும் ஆடுகளும் உடனே கடலைச் செடியைக் கடிக்காமல் இருப்பதற்கும் ஒரு பாதுகாப்பாக இருக்குமல்லவா? கூலி ஏர் வருவதற்கு முன் ஓரப்பகுதிகளில் சோளம் விதைத்துவிடலாம்.

மேழி தொடுவதற்கு முன்னர் கிழக்கு முகமாக நின்று கை கூப்பிச் சூரியக் கடவுளை வணங்கிவிட்டு விதைப் பெட்டியை எடுத்துச் சனி மூலைப் பக்கத்திலிருந்து விதைத் தானியத்தை விதைக்கத் துவங்கினான். அவனுடைய லாவகமான கைவீச்சால் விதைப் பெட்டியில் பட்டுச் சிதறியோடும் தானிய ஓசையும், தாளம் பிசகாத காலெட்டும் முகத்தில் தேங்கி நின்ற உழைப்புப் பூரிப்பின் பெருமிதமும் ஒரு கலைச் சூழ்நிலையை உருவகப் படுத்திக் காட்டியது.

சோளம் விதைத்து முடிந்ததும் மேழியைத் தொட்டு வணங்கி கைக்கு எச்சிற்பதம் இட்டுக்கொண்டு மாட்டை அதட்டி உழ ஆரம்பித்தான். நின்ற மாடு மூத்திரம் பாய்ச்சிப் புறப்பட்டது. 'இந்த வருசம் நிச்சயம் நல்ல மழை பெய்யும், பசு மூத்திரம் விடுவது செழிப்புக்கு அறிகுறி!' அவன் மனம் நிறைந்தது, மழை விழுந்து மேல் காற்று வீச ஆரம்பித்து விட்ட உடனேயே மண்மகளின் உடலில் எவ்வளவு சீக்கிரமாகப் பருவ மாற்றம் நிகழ்ந்து விடுகிறது! ரத்தம் போன்று சிவந்திருந்த மண், நாட்டுச் சர்க்கரையைப் போன்று மாறி விட்டது. தன் உடலில் விதைக் கருவை ஏற்றுப் பயிர் விடுவதற்கு முன் தன்னைத் தாய்மைக்குத்

தயார்படுத்திக் கொண்டதோ? தன் உடலின் உயிர்ச்சத்தை யெல்லாம் திரட்டி ஒரு நிலைப்படுத்தி வைத்துக் கொண்டதோ? விதைப்பை ஏற்கத் தயாராக இருக்கும் மண்ணும் சூல் கொண்ட பெண்ணும் ஒரு கயிற்றின் முடுச்சுகள் தானோ?

உழப்பட்ட பூமி மண்ணின் காரமிகுந்த ஈரம் அவன் பாதத்தில் பட்டு உடலையும் உள்ளத்தையும் புளகாங்கிதமுறச் செய்தது. அருகம்புல்லின் வேரும்; கோரைக்கிழங்கும் கலப்பையில் பட்டுப் புரண்டு காற்றில் மணங்கிளர்த்தும் வாசனையைப் பரப்பிற்று, மண் மணந்தது.

விதைப்புக் காலங்களில் குறி சொல்லும் தாதர்கள் ஒவ்வொரு காட்டிற்கும் சென்று விவசாயப் பலன் கூறி விட்டு தானியங்களை வாங்கிக்கொண்டு செல்வர். மாரப்பனுடைய காட்டிற்கும் வழக்கப்படி ஒரு தாதன் வந்து சேர்ந்தான்.

அவன் ஏரின் அண்டை வந்து சேர்ந்ததும் மாரப்பன் ஏரை நிறுத்திவிட்டு நின்றான். அழுக்கேறி நைந்த ஒரு கந்தல் துணியை இடுப்பில் கட்டிக்கொண்டு, மான் தோலால் தைத்த ஒரு பையில் சங்கு சேகண்டியைப் போட்டுத் தோளில் மாட்டிக்கொண்டு, அழுக்கேறிச் சிக்குப்பிடித்துச் சடை விழுந்த முடியோடும் ஊத்தைப்பிடித்துக் காவி படிந்த பற்களுடனும் அடர்ந்து வளர்ந்த தாடியுடனும், சுருக்கு விழுந்து கறுத்த நெற்றியில் தரித்த நாமத்துடனும் விளங்கும் அவன் தோற்றத்தைக் கண்ட எருதுகள் இரண்டையும் உயர்த்தி அவனை இறைக்க இறைக்கப் பார்த்தான். அவன் மீதிருந்து அழுக்கும், கவிச்சியும் நிறைந்த - மனதைக் குமட்டும் ஒரு வகை வீச்சம் அடித்தது.

"தாதரய்யா! இந்த வருஷம் வெள்ளாமை ராசி பலன் எப்படியிருக்குது?" என்று கேட்டான் மாரப்பன்.

"தை மாசம் வெள்ளி மீன் மேற்கே உதிக்கும்போது தெற்கே இருந்து வடக்கு நோக்கிப் போனா நல்ல மழை பேயும்; வடக்கே இருந்து தெக்கு நோக்கிப் போனா அப்படி மழையிருக்காது. இந்த வருஷம் தெக்கே இருந்து வடக்கு நோக்கிப் போயிருக்குது. அதனாலெ மழை ராசி நல்லா இருக்குது. அதுவுமில்லாமெ என்னோட கனவிலேயும் சருமலையாண்டி வந்து நெறை பாலுக் கொடத்தை குடுத்துட்டுப் போயிருக்கிறாரு" என்று கூறிவிட்டு அழுக்கண்டிய ஒரு துணிப் பையிலிருந்து திருநீறை அள்ளி மாரப்பனுக்குக் கொடுத்தான். தலையில் உருமால் கட்டியிருந்த துண்டையெடுத்து, இடுப்பில் கட்டிக்கொண்டு இடது கை - *உள்ளங்கைக்கு மேல் வலது கையை வைத்துப் பவ்வியமாகத்

திருநீற்றை வாங்கி நெற்றியிலும், கழுத்திலும் பூசிக்கொண்டு "ஆயா மகமாயி! வெள்ளாமை இந்த வருஷம் நல்லாவெளை யோணும் ஆயா!" என்று கூறி ஒரு துளித் திருநீறை வாயில் போட்டுக் கொண்டு மனைவியைப் பார்த்தான். அவளும் அப்படியே "... தெரிஞ்சிருக்கும். தெரியாமையும் இருக்கும். எல்லோருக்கும் பொதுவாக தலைக்கு மேலே எரிஞ்சுக்கிட்டுப் போற கடவுளே! நீதா எல்லாம் பொறுத்து ஏழைக்குப் படியளக் கணும்!" என்று கூறித் தன் நெற்றியில் பூசிக் கொண்டது போக மீதமிருந்த திருநீறை மாட்டின் முதுகின் மீது தூவினாள்.

மாரப்பன் கூடையிலிருந்த சோளத்தை அள்ளித் தாதனின் கோணிப்பையில் போட்டான். தாதன் சேகண்டியை அடித்து சங்கு முழங்கி "மாடு, மனுசருக்கு நோவு நொடியில்லாமெ, காடு தோட்டத்திலே கருத்தா வெளஞ்சு செறக்க வாழணும்" என்று ராகமிட்டு நீட்டிப்பாடி, மாரப்பன் பிச்சையிட்ட தானியத்தி லிருந்து இரண்டு மாடுகளுக்கும் ஒவ்வொரு பிடி அள்ளித் தின்பதற்குக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றான். கனமழை பெய்யாததினால் ஓரக்கால் நிலங்களில் உழுத கலப்பைகள் மேல்நோக்கி எவ்வின. வேண்டா வெறுப்பாகப் பூமித்தாயின் வாயில் உணவைத் திணிப்பதைப் போல மனிதனும் மாடும் போராட்டத்துடன் தானியத்தை உழவு சாலில் நுழைக்க முயற்சித்தனர்.

சோள விதைப்பு முடிந்து கடலைப் பருப்புப் போடுவதற்கு ஆயத்தமாயினர். கூலி ஏர்களும் வந்து சேர்ந்தன. ஒவ்வொரு ஏருக்குப் பின்னும் ஒவ்வொரு கடலைப்பருப்பு சால் போட் டனர். இளஞ்சூடு பட்ட மண்ணின் ஆவி எழுந்து மனதுக்கு இதமளித்தது.

கிராமத்தின் ஜீவ துடிப்பெல்லாமே காட்டின் உழுபடை மண்ணுடன் ஐக்கியமாகிக் கிடந்தன. ஒரு வருட வாழ்வின் திட்டங்களும், நம்பிக்கைகளும் அந்த மண்ணின் மாண்பை - மழையைப் பொறுத்து இருந்தன. அதை நம்பி எத்தனைவிதமான கனவுகள், லட்சிய வேட்கைகள், அவரவர் நிலைக்கேற்ப அத்தனையும் உருவாயின. மண்ணுடன் அவர்கள் பேசினர். முனகினர், சிரித்தனர். ஏன்? அழக் கூடச் செய்தனர். அது பேசமுடியாத மண்தான். இருப்பினும் அது பிறப்பிக்கும் ஒவ்வொரு பயிரும், செடியும், மரமும் அவர்களுடன் பேசின. உறவாடின. அவர்கள் கனவின் நம்பிக்கை ஒளியாய்த் துலங்கின. அவர்கள் விருப்பமெல்லாம் - வேட்கையெல்லாம் அவற்றின்

செழிப்பை, அவற்றின் நலனை பலனை முன்னிறுத்தியே தீர்மானிக்கப்பட்டன. மண்ணில் விதைகளைப் போட்டதிலிருந்து எத்தனை தெய்வங்களுக்கு வேண்டுதல், எத்தனை விதமான பாதுகாப்பு! உஷ்ணமும், வேட்கையும் மிகும் மனிதக்கரங்கள் படும்போதெல்லாம் பயிர்கள் கறுத்துச் செழிக்கும். அவற்றின் தொடர்பற்றுப் போகும்போதெல்லாம் சோகை பிடித்தாற் போல் வெளுத்திருக்கும். மனிதக்கரங்களின் தீண்டுதலுக்குத் தான் எவ்வளவு எதிர்பார்ப்பு! காதலின் பிரிவை எதிர்நோக்கியிருக்கும் காதலி போல. ஓ! விவசாயிகளின் ஆத்ம திருப்தியும், செழிப்பும் மண்ணின் உறவைக் கொண்டுதான் தீர்மானிக்கப்படுகிறதோ. அது இல்லாவிடில் அதன் உறவு சுமுகமடையாவிடில் அவனால் வாழ முடியாது.

நேரம் செல்லச் செல்ல லேசாக வீசிய மேல் காற்று நின்று விட்டது. அழுக்குப் படர்ந்தாற் போன்ற வெண்மேகங்கள் திட்டுத்திட்டாக எழுந்து வானில் சஞ்சாரமிட்டன. இடையிடையே வெப்பமும், புழுக்கமும் மிக்க சூரிய ஒளி பூமியைத் தழுவியது.

“இதுவரையிலும் மேகாத்துப் பொறப்பட்ட மாதிரி இருந்தது. இப்ப என்னடான்னா சப்புன்னு காத்து நின்னு போச்சே! ஒரு எட்டு நாளைக்கு மழையில்லாமெ போயிட்டா, காடு செம்பாடா களை, செத்தை மொளைக்காமெ தப்பிச்சிக்கும். மேலே மழை பேஞ்சு மூடல்பட்டுதுன்னா களை வெட்டுச் செலவு ஏகப்பட்டதாயிடும்” என்று மாரப்பன் பின்னேர்க்காரர்களிடம் கூறினான்.

உழவு சாலில் விழும் கடலைப் பருப்புகளைக் காக்கைகள் பின்னால் பறந்து வந்து பொறுக்கிக் கொண்டிருந்தன. பின்னேர்க்காரன் கையிலிருந்த சாட்டைக்குச்சியால் காக்கையைச் சுழற்றி விரட்டியவாறு, “குடியானவெ இந்த ஒரு சாணு வவுரு வளர்த்தறதுக்காவ புழு பூச்சி முதல் குருவி காக்காய் வரை ஏதேதுக்குத்தா காவலிருந்து கஷ்டப்படறது, இந்தக் குடியானவச் சாதியத் தவிர மீதி எந்தச் சாதி இவ்வளவு சிரமப்படுது” என்று கூறி மாட்டை, அதட்டி ஓட்டினான். அவனைப் போலவே உழுது அலுத்துப்போன அந்த எருதுகள் தான் இதற்குமேல் வேகமாக நடக்கமுடியாது என்று தனது மறுப்பைக் கூறுவதுபோல் கழுத்தில் சுமந்திருக்கும் நுகத்தடியில் தனது தலையைச் சாய்த்துக் கொம்புகளால் ‘படக் படக்’ என அடித்துக்கொண்டு எப்பொழுதும் போலவே நடந்து சென்றன.

களைப்பின் மிகுதியால் அவற்றின் வாயிலிருந்து பால் போன்ற நுரை திரண்டு ஒழுகிக் கொண்டிருந்தது.

சூரியன் உச்சிக்கு ஏற ஏறக் காற்றின்மையால் உழவு மண் சுட்டது. ஈரமும், கதகதப்பும் நிறைந்த மண்ணிலிருந்து ஆவி எழுந்து களைப்புற்ற உடலுக்கு இதமளித்தது. பூமி குளிர்ந் திருந்தாலும் காற்றில்லாத, புழுக்கம் நிறைந்த வெப்பம் உழவர் களுக்கும், மாடுகளுக்கும் களைப்பை உண்டு பண்ணியது. குடத்தில் கொண்டு வந்து வைத்திருந்த தண்ணீரும் வெப்பத்தால் சூடு தட்டிவிட்டது. தாகத்தைத் தீர்த்துக் கொள்ளத் தண்ணீரை மொண்டு மொண்டு குடித்தாலும் தாகம் தீரவில்லை.

வேனிற் காலப் புதுப்பானையிலிருந்து தண்ணீர் கசிவது போல திரேகத்திலிருந்து வியர்வை வடிந்துகொண்டேயிருந்தது. நெற்றியிலிருந்து வடிந்த வியர்வை கண்களில் இறங்கிக் கரித்தது. செம்மண் புழுதி படர்ந்த உடம்பிலிருந்து வடிந்த வியர்வை ரத்தம் ஒழுகுவதுபோலக் காட்சியளித்தது. தீயில் வாட்டிய கத்தரிப்பிஞ்சு போல வெப்பத்தில் கருகிய சுருக்கம் விழுந்த முகம் பழுப்பு நிறமாகத் தோன்றியது. கடலைப்பருப்பு சால் போடும் நடுத்தர வயது மாதர்களின் கழுத்திலிருந்தும், நெஞ்சிலிருந்தும் வியர்வை ஆறெனை வழிந்தோடியது.

சூரியன் அடிச் சாய்ந்துவிட்டான். கால் புழுதி சுட ஆரம்பித்து விட்டது. மாடுகள் 'கஸ் கஸ்' என்று மூச்சுவிட ஆரம்பித்து விட்டன. இடையிடையே தாகத்துக்குத் தண்ணீர் குடிக்க இரண் டொரு மாடுகள் கத்தின. காலை நேர உழவு முடியும் வேளை வந்துவிட்டது.

எல்லோரும் ஏர் விட்டுவிட்டு மத்தியானச் சாப்பாட்டுக்குப் புறப்பட்டனர். மாடுகள் தாகம் மிகுதியால் கட்டுத்தரைக்கு இழுத்துக் கொண்டு நின்றன.

"போயிட்டுக் கொஞ்சம் சீக்கிரத்திலேயே வாங்க" என்று ஏர்க்காரர்களைப் பார்த்துக் கூறிய மாரப்பன் "மாட்டை தண்ணி காட்டித் தீனி போட்டுச் சீக்கிரமே புடிச்சா" என்று மகன் கந்தனிடம் கூறிவிட்டு ஒரு மரத்து நிழலில் சென்று அமர்ந்தான். அவனுக்குத்தான் காலைச் சோற்றோடு மத்தியானச் சோறும் சேர்ந்து வந்துவிட்டதே!

# 20

மகப்பேற்றுக்காகத் தாய் வீட்டுக்கு அழைத்து வரப்பட்ட பழனியம்மாள் இன்று புகுந்த வீட்டுக்குப் புறப்படவிருக்கிறாள். குழந்தை பிறந்து ஐந்து மாதங்கள் ஆகின்றன. 'பூஜாபலன்' செய்தவள் அவள். சில கருமம் செய்த பெண்களைப் போல அவள் பெண் குழந்தைகளைப் பெற்றெடுக்கவில்லை. முதற் பிரசவத்திலேயே குலவாரிசுக்கு ஆண் குழந்தையைப் பெற் றெடுத்துக் கொடுத்து விட்டாள். ஆண்குழந்தை என்றவுடனேயே மருமகளிடத்தில் பிணக்கும் பொருமலுமாக இருந்த மாமியார் கூட - ஒடோடி சம்பந்தி வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

அன்றுதான் பிரசவமான முதல் நாள். மறைப்புக்குப் படல் வைத்து வேப்பிலை செருகிய ஒட்டுத் திண்ணையில் படுத்திருந்த மருமகளையும், வெள்ளை வெளேரென்று முதல் குட்டி போன்று தாயின் மார்புக் கதகதப்பில் முகத்தை அணைத்தவாறு படுத்திருந்த பேரக் குழந்தையையும் பார்த்தாள். இறந்துபோன தனது கணவனின் உருவத்தைப் போன்றே அக்குழந்தை இருந்தது. தொடர்பறாத சந்ததி முடிப்பில் மேலும் ஒரு முடிச்சு விழுந்துவிட்டது. அவள் புண்ணியம் செய்தவள்.

பிரசவக் களைப்பில், எப்படிப் படுத்திருக்கிறோம் என்ற பிரக்ஞையேயன்றிப் பழனியம்மாள் தனது இடது காலை மடித்து சுவரோடு சாய்த்த வண்ணம் படுத்திருந்தாள். இதைப் பார்த்த மாமியாருக்கு அச்சமும், கோபமும் எழுந்தது. "இதுக்கு முன்னாலே பிள்ளெப் பெத்தவங்க இங்கே ஒருத்தருமே இல்லியா? கொளந்தெ பொறந்த உடனே ஒருத்தி எப்படிப் படுத்திருக்கணும்னு கூடச் சொல்லிக் குடுக்காமெ இருந்திருக்கி றாங்களே!" என்று வாய்விட்டுக் கூறியபடி, குத்துப்பாய்ச்சி இருந்த பழனியம்மாளின் காலைப் பிடித்து இழுத்து நீட்டி இரண்டு காலையும் ஒருசேர இணைத்து வைத்து "ஏல்லே! இப்படியா படுத்திருக்கறது. பச்சை ஒடம்பிலே!" என்று கண்டித் தாள். களைப்பிலிருந்த அவளுக்கு இவ்வார்த்தைகள் எங்கோ

வெகு தொலைவில் யாரோ கூறுவது போலிருந்தன. கண்விழித்துப் பார்த்த பிறகுதான் அவளுக்குத் தன் மாமியார்தான் என்று தெரிந்ததும் வியப்பு மேலிட "எப்படி அத்தெ வந்தே?" என்று கேட்டாள்.

அவள் என்ன கூறினாள் என்பதைக் கூட காதில் வாங்கிக் கொள்ளாமல் "ஒடம்பெ ரண்டு மூணு நாளைக்கு நல்லாப் பாத்துக்கணும். சுக்குப் போட்ட கருப்பட்டி நெறயா திங்கணும். அப்பத்தா ஒடம்பிலே உதிரம் தங்காது" என்று கூறிப் பேரனை எடுத்து இரண்டு கைகளாலும் மாவுருண்டையை ஏந்தியிருப்பது போல ஏந்தி இருந்தாள்.

மென்மைமிக்க மார்பின் இளஞ்சூட்டிலிருந்து விடுபட்ட அவன் "வீச் வீச்" என்று கத்தினான். பையன் துள்ளிக் கொண்டு கத்துவது அவளுக்குப் பரம சந்தோஷத்தை அளித்தது. சூட்டிகையும் சுறுசுறுப்பும் உள்ள குழந்தைகள் தான் முதல் நாளே கையில் எடுக்கும் பொழுது உதைத்துக் கொண்டு அழும் என்பார்கள். அதுவும் அப்படித்தானே அழுகிறது?

பழனியம்மாளின் கணவனும் உடனே வந்து பார்த்துச் சென்றான். அதற்குப்பின் இந்த 5 மாத காலத்தில் கணவனும் மாமியாரும் வாரத்துக்கு இரண்டு நாள் குழந்தையை வந்து மாற்றி மாற்றிப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். எப்பொழுது மருமகளைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வது என்று எதிர்பார்த்துக் கொண்டே இருந்தாள் மாமியார்.

பேரன் வீட்டுக்கு வந்துவிட்டால் அவன் நடந்து விளையாடும் வரை அவள் தோட்டத்துக்கு வேலை செய்யச் செல்ல மாட்டாள். அவனுக்குக் குளிப்பாட்டுவதும், மாவடிப்பதும், பொட்டு வைப்பதும் பால் வார்ப்பதும், தூங்க வைக்கத் தொட்டிலிட்டுப் பாடுவதும் ஆன இந்த வேலைகளில் தன்னை அர்ப்பணித்துக் கொள்வாள். வயதுவந்த பாட்டிமார்களின் கடமை அது. குழந்தைகள் அடம்பிடித்துச் செய்யும் குறும்புத் தனத்துக்கெல்லாம் பொறுமையாக ஈடுகொடுக்கும் மனதும் அவர்களுடையதுதானே?

"கொளந்தே மொலப் பாலுக்குடிக்க அழும்பொழுது மட்டும் அவகிட்டே கொடுப்பே. அப்புறம் அது எங்கிட்டெதா இருக்கணும்" என்று தனக்குள் அடிக்கடி கூறிக்கொள்வாள். இரவு நேரங்களில் பஞ்சு போன்று வெதுவெதுப்பான அதன் பிஞ்சு உடல் மார்புடன் ஒட்டிக் கொண்டு படுத்திருப்பதன் இன்பத்தை நுகர்ந்தவர்கள் யார்தான் அதை இழக்க விரும்புவார்கள்? அவள் மட்டும் அதை இழக்கப் பைத்தியக்காரியா என்ன?

இப்படி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்த பின்னர் சந்தோசமும் பெருமையும் கொள்ளத்தக்க விதத்தில் பழனியம்மாள் கணவன் வீடு செல்லப் போகிறாள். பெரியதாக அவள் பெற்றோர்கள் ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும் தலைச்சன் குழந்தைக்குத் தாய் வீடு வந்து செல்பவளுக்கு நாட்டோர் செய்யும் மாமூல் சிறப்புகளையாவது செய்து அனுப்ப வேண்டாவா? அப்படிச் செய்யவில்லையென்றால் கொண்டவர்களுக்கும் சிறப்பில்லை, கொடுத்தவர்களுக்கும் சிறப்பில்லை, பட்டினி கிடந்தாவது சமூகத்தின் போலிச் சம்பிரதாயங்களுக்கு ஈடு கொடுக்க வேண்டும்.

மாரப்பனும் மாரக்காளும் பேரனுக்கு ஒரு பவுனில் சங்கிலி செய்து போட்டு, அனுப்பலாமென்று எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார்கள். ஒன்றும் முடியவில்லை. கடைசியில் வெள்ளியால் செய்த அரைஞாணும், கை கால்களுக்குக் காப்பும் செய்து போட்டார்கள்.

இது பழனியம்மாளுக்குச் சற்று மனக்கஷ்டமாகத்தான் இருந்தது. எவ்வளவு கஷ்டப்பட்டாவது ஒரு பவுனில் சங்கிலி செய்து போட்டிருந்தால் மதிப்பாக இருந்திருக்கும் என்று நினைத்தாள். வாய்விட்டுக் கேட்கவும் செய்துவிட்டாள்.

அப்படியானால் அவளுக்குத் தனது பெற்றோர்களின் வீட்டுக் கஷ்டநஷ்டங்கள் தெரியாதா? அல்லது தனது பேராசைக்காகத் தனது பெற்றோர்கள் துன்பம் அடைவதில் தவறில்லை என்று நினைக்கிறாளா?

அப்படியொன்றுமில்லை. எல்லாம் அவளுக்குத் தெரியும். எப்பொழுதும் போலவே அவளுடைய மாமியார் அவளிடத்தில் பிரியமற்றிருந்தால் இதுவும்கூட இல்லாமல் அனுப்பி வைத்தாலும் சென்றிருப்பாள். அதற்கு மாறாக பேரன் பிறந்தவுடன் தன் மீதும் குழந்தை மீதும் மாமியார் செலுத்துகிற அன்பு எங்கே திடீரென்று இதன் காரணமாக வற்றி விடுமோ என்று பயந்தாள். இதைக் காப்பதற்காக வேண்டியே பெற்றோர்கள் மேலும் கொஞ்சம் சிரமப்பட்டு விட்டால் கூடப் பரவாயில்லை என்று நினைத்தாள்.

அவள் வாய்தான் அப்படிக் கேட்டுவிட்டதேயொழிய இதயம் புலம்பிக்கொண்டே இருந்தது. கண்கள் நீர்கொட்டிக் கொண்டேயிருந்தன. இதைக் கவனித்த பெற்றோர்களும் துக்கம் கொண்டவர்களாக "இப்பவே பவுனுச் சங்கிலி பண்ணிப் போட்டாத்தானா? ஆமானுக்கு வாங்க. எல்லாம் இல்லாக்

கொடுமைதா. நாங்களும் கொஞ்சம் கொஞ்சமாக மனுசனாயிக் கிட்டு அப்புறம் பண்ணிப்போடறோம். உனக்கு யாரும் இல்லின்னு சொல்லலியே?" என்று சமாதானம் கூறினார்கள்.

அவளுக்கு இதெல்லாம் தெரியாதா என்ன? ஒரே பேச்சில் 'உங்களுக்குச் சௌகரியப்பட்டபோது கொடுங்கள்' என்று கூறிவிடலாம். இதனால் அவள் குடும்பத்தில் அமைதி குலைந்துவிடக் கூடாது அல்லவா? அது குலைந்துவிட்டால் காலங் காலத்திற்கும் ஒரே கணவனை அண்டி வாழும் ஒரு பெண்ணின் எதிர்காலம் என்னாவது? அதைப் பார்க்கும் பொழுது இது சிறிய விசயம்தான். பெற்று வளர்த்து ஒரு நம்பிக்கையான ஆடவனிடம் ஒப்படைக்க எடுத்துக்கொண்ட முயற்சியையும் கவலையையும் ஒப்பிடும்பொழுது இது சுலபம்தான்.

ஆனாலும் அந்தக் குடும்பத்துக்குண்டான பாரமும் கவலை யும் மிகவும் பெரியதே!

அந்தக் குடும்ப விருட்சத்தில் தோன்றிய முதல் விழுதின் சந்தோசத்தைக் கொண்டாட்டத்துடன் தெரிவிக்க வேண்டிய அவர்கள் உள்ளத்தில் துக்கத்தின் இருளல்லவா கப்பிக்கிடக் கிறது.

மழைக் காலத்தில் தொல்லை கொடுக்கும் கொசுக்களைப் போலவே அந்தச் சிந்தனைகள் அவர்களது மனதில் அரிப்பை யும், அவலத்தையும் சேர்த்தன. காற்றில் படபடக்கும் தென்னங் கீற்று மாதிரி பாசச் சிலிர்ப்பு நெஞ்சை, நினைவை நடுங்க வைத்தது. "நீ சந்தோசமா வாழறதாச் சொன்னாத்தானம்மா எங்களுக்குப் பெருமை, அதில்லைன்னா எங்களுக்கென்ன பெருமை. சரி! கன்னுப் போட்டிருக்கிற எருமை மாட்டையாவது ஓட்டிக்கிட்டுப் போம்மா. ஆண்டவன் கொடுத்த கையும் காலும் இருக்குது எப்படியோ பொளைச்சுக்கிறோம்" என்று பீறிட்டுக் கொண்டு வந்த அழுகையைப் பலவந்தமாக உள்ளடக்கியவாறு உள்ளார்ந்த பாசமும் நேசமும் தொனிக்க மாரப்பன் கூறினான்.

அப்பொழுதும் அவள் கண்கள் குளமாகத்தான் நிறைந்திருந் தன. இரு வேறுபட்ட மனப் போராட்டங்களின் களமாக அவள் நெஞ்சு ஆட்பட்டிருக்கும்பொழுது சந்தோசத்திற்கு இடமிருக்க முடியுமா என்ன? எந்த முடிவும் அவள் மனதைச் சமாதானப் படுத்திவிட முடியாது; அவள் விதி அப்படிப் போலும்.

மகளை எவ்வளவு தூரம் சந்தோசமாக அனுப்பி வைக்க வேண்டுமோ அவ்வளவுக்கு அவர்கள் முயற்சி செய்து

வந்தார்கள். தங்கச் சங்கிலி ஒன்றுதானே போட முடியவில்லை? அந்தக் குடும்பத்தின் ஜீவநாடியாக விளங்கிய எருமையைக்கூடப் பிடித்துக் கொடுக்க முடிவு செய்து விட்டார்களே! கணவன் வீடு சென்றவுடன் பிற வீட்டிற்குக் குழந்தைக்குப் பால் வேண்டு மென்று செல்ல வேண்டிய அவசியமும் நேராமல் அல்லவா செய்திருக்கிறார்கள். இந்தக் கஷ்டத்திலும் இவ்வளவு தூரம் செய்ய முன்வந்த அவர்களைப் பாராட்டவல்லவா வேண்டும்?

பேரனையும், மருமகளையும் இன்று அழைத்துப் போவதென நல்லநாள், நேரம் பார்த்து வந்து சொல்லிவிட்டுப் போன சம்பந்தியை இன்னும் காணவில்லை. அவளை எதிர்பார்த்து தான் எல்லோரும் காத்திருக்கிறார்கள். உடைமைக்குரியவனிடம் உடைமை போய்ச் சேர்வதுதானே நியாயம்?

மாரப்பன் காலைச் சாப்பாட்டை இன்னும் முடிக்கவில்லை. வெம்மைமிக்க கோடை காலத்தில் கரையானைப் பொறுக்கித் தின்னும் கோழியைப் போல ஆவலுடன் வயிறு நிறைய உணவை அள்ளிப் போட்டுக் கொண்டான். சாப்பிட்டானதும் வெண்கலக் கும்பாவில் கையைக் கழுவிக்கொண்டு வாய் கொப்பளித்தவாறு தண்ணீரை உமிழ வாசலுக்கு வந்தான் அப்பொழுது சில ஊர்ப்பிரமுகர்களும், கோமாளிக் கிழவரும் அவனது வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். தன் வீட்டுக்குத்தான் வருகிறார்கள் என்பதை அறிந்துகொண்ட மாரப்பன் ஒரு கட்டிலை எடுத்து வாசலிலிருந்த வேப்பமரத்து நிழலில் போட்டு அவர்களை வரவேற்று அமர வைத்தான்.

வெயிலிலிருந்து நிழலுக்கு வந்த அவர்கள், "வேப்ப மரத்து நெழல் நல்லாக் குளுகுளுன்னு இருக்குது" என்றனர்.

சற்று நேரம் அமைதி நிலவியது. ஒருவரும் பேசவில்லை.

ஒரு காகம் கத்திக்கொண்டு வந்து வேப்பமரக் கிளையில் அமர்ந்தது. மாரப்பன் அதைப் பயங்காட்டி விரட்டியடித்தான்.

அவர்கள் வந்திருக்கும் தோரணையிலேயே 'கோயில் வரிப் பணம் வாங்க வந்திருக்கிறார்கள்' என்பதைப் புரிந்து கொண்டு விட்டான். அவர்கள் வரிப்பணத்துக்காகக் கெடு வைத்த தேதி யும் எப்பொழுதோ முடிந்துவிட்டது. இப்போது ஒரு செப்புக் காசும் அவன் கைவசம் இல்லை. இருந்ததெல்லாம் சேர்த்துப் பிடித்து மகளுக்குப் புடவையும், குழந்தைக்குச் சொக்காயும், வெள்ளி நகைகளும் வாங்கிக் கொடுத்துவிட்டான்.

வந்தவர்களில் சற்றுப் பருத்து குள்ளமாக இருந்த ஒருவன் "என்ன மாரப்பா! கோயிலுக்கட்ட வரி குடுக்கறதுக்காவக்

கெடுவச்சு எத்தன நாளாச்சு? எல்லாரும் இப்படிக் குடுத்தா எப்படிச் சாமி வேலை ஆகும்?" என்றான். அவன் குரலில் மிடுக்கும் அதிகாரக் கர்வமும் மேலோங்கி நின்றன.

மாரப்பனால் இதற்குத் திடீரென்று பதில் கூற முடியவில்லை. நெஞ்சக் கடலில் கிடக்கும் ஏதோ ஒரு யோசனையைத் தேடித் துருவி வெளிக்கொண்டு வர முயற்சிப்பவன் போல முகத்தில் ஒருவிதச் சலனத்தை வரவழைத்துக் கொண்டு "என்னாலே இப்ப முடியாது. வெள்ளாமை வந்தப் பெறகுதான் கொடுக்க முடியும்" என்றான்.

எதிர்பாராத விதத்தில் மாரப்பனிடம் இருந்து வந்த இந்தப் பதிலைக் கேட்ட அவனுக்கு அதிர்ச்சியும், வியப்பும் மிகுந்தது. "இது மனுசரோட காரியமல்ல; சாமியோட காரியமாக்கும்!" என்றான்.

"தெரிஞ்சுதா சொல்லறே. எப்பவுமே சாமி அவசரப்படற தில்லே"

"உங்கிட்டெ நாங்க தர்க்கம் பேச வரலே. இன்னக்கிப் பணம் வந்தாவணும், அதுவும் இந்த நிமிசத்திலியே...."

மாரப்பனுக்கு ஒன்றும் புரியவில்லை. இரும்பைத் துரு அரிப்பது போலப் புதிய கவலைகள் அவன் நெஞ்சை அரிக்க ஆரம்பித்தன.

"இல்லைன்னா?"

மாரப்பன், தான் உண்மையிலேயே பணம் கொடுக்கவில்லை என்றால் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளவே விரும்பினான். அந்த நோக்கில்தான் அவன் அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தான். அவர்களோ அந்தக் கேள்வியை ஒரு சவால்போல எடுத்துக் கொண்டனர். அவர்கள் மனதில் அவனைப் பழி வாங்கவேண்டுமென்ற எண்ணமே மேலோங்கி நின்றது.

"மொதல்லே வூட்டுக்குக் கதவெப் புடுங்கிக்கிட்டுப் போவோம். அப்புறம் நாலு பேரு பார்த்துச் சொல்றபடி நடக்கும்"

இந்த நல்ல நாள் பார்த்துத்தானா இவர்கள் வந்து அவன் குரல்வளையைப் பிடிக்க வேண்டும்? அதுவும் சம்பந்தி வரவிருக்கிற இந்த நேரத்தில்தானா? அவனால் எதுவும் அதற்குப் பதில் கூற முடியவில்லை. பட்ட மரம் போல் பேசாமல் நின்றான்.

தாயுடன் சேர்ந்து இதைக் கேட்டுக்கொண்டிருந்த பழனியம்மாளுக்கு ஆத்திரமும் அழுகையும் பொத்துக் கொண்டு வந்தது.

வாய்விட்டுத் தொண்டை கிழிய 'ஓ..' என்று அழவேண்டும் போலிருந்தது. அதைத்தவிர அவளுக்கு மனதை ஆற்றிக்கொள் ளும் வழிதான் ஏது?

"உண்டு; அல்லது இல்லைன்னு சொல்லு. எங்களுக்கொண் ணும் சம்பளம் அவுப்பாரில்லெ" என்றான் அந்தக் குள்ள மானவன்.

"அப்படி நா சொல்ல மாட்டனுங்க. கையிலிருக்கும் போது கொடுத்துடறனுங்க" என்று சற்று தாழ்த்து கெஞ்சாத குறை யாகக் கூறினான் மாரப்பன்.

அவன் தங்களுடன் வந்திருந்த தலையாரியைப் பார்த்து "டேய்! இந்த வூட்டுக் கதவப் புடுங்கி வெளியிலே போடு! சாமி வரி வந்த பின்னாடி வூட்டப் பூட்டட்டும்" என்றான்.

இந்தக் காட்சிகளை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்த மாரக்காளுக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. அவளுக்கு இருக் கும் கோபத்திற்கு அவன் குரல்வளையைக் கூடக் கடித்துக் குதறிவிடுவாள் போலிருந்தது.

"இந்த ஒரு மொறையும் மன்னிப்புக் கொடுங்க" என்று கெஞ்சாத குறையாகக் கேட்டான் மாரப்பன்.

"மன்னிப்புங் கெடையாது. மாராப்புங் கெடையாது. இந்த நிமிசத்திலே பணம் வர்லின்னா வூட்டுக்கதவு ஏலம் போவும்" என்று கூறிக் கதவுப் பக்கம் நெருங்கினான்.

தூர எட்டி நின்று பார்த்துக் கொண்டிருந்த மாரக்காள், "உனக்கென்ன அதிகாரமிருக்குது கதவப் புடுங்க? உங்கிட்டெ ஏதாவது கடங்கிடெ வாங்கிக் கட்டாமெ இருக்கறமா? என்ன நாயத்துக்காவப் கதவுப் புடுங்கப் போறேங்கறே" என்றாள், அழுகையும் ஆத்திரமும் பொங்க.

எதிர்பாராத இந்தப் பேச்சு அவன் கௌரவத்துக்குச் சவால் விடுவதாக இருந்தது. மாரப்பன் கேட்டிருந்தால் கூட பொறுத் துக் கொள்ளலாம். ஒரு பெண் இப்படிக் கேட்பதா?

"மாரப்பா! நாளைக்கு ஊர்க் கூட்டத்திலே - உம் பொண் டாட்டி பேசினதுக்கு நீ பதில் சொல்லியாவணும். என்னைக்கும் சொந்தக் கத்தரிக்கா வித்துச் சொமை எறங்கப் போறதில்லெ" என்று கூறி, அவனை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு "கதவப் புடுங்குடா" என்றான் தலையாரியிடம் மீண்டும்.

இப்படிப்பட்ட நேரங்களிலெல்லாம் மாரப்பன் கோழையைப் போல குழைந்து குறுகுவானே தவிர எதிர்த்து ஒரு வார்த்தை

கூடப் பேசமாட்டான். வாழ்க்கை விதித்த கடுமையான அனுபவத்தின் சூட்டுத்தழும்பு அவனை அப்படிப் பணிய வைத்து விட்டதே? அல்லது வாழ்க்கைப் பூராவும் பயந்து பயந்தே வாழ்ந்ததினால் ஏற்பட்ட தெளிவின்மை அவனை அப்படி உருவாக்கி விட்டதோ? அவன் வெயிலிலும் காய்வான்; மழையிலும் நனைவான்.

“டேய், கதவைத் தொடாதே!” என்றுதலையாரியைப் பார்த்துச் சத்தமிட்டபடி நெருங்கிய மாரக்காள் கோமாளிக் கிழவரைப் பார்த்து, “ஏழபாழைங்க கிட்டேக் கூட இப்படித்தா சாமி கோயிலுக் கட்ட வரி வசூலுப் பண்ணச் சொல்லுச்சா? இத்தனை வருசமா ஊர்ப் பொதுப் பணத்தெ வெச்சுக்கிட்டு கோயிலுக்கட்டற நேரத்திலியும் கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்ட அந்த நாய கெரசத்தனையெல்லாம் உட்டுப்புட்டு எங்களெ மட்டும் அதிகாரம் பண்ணவாச் சொல்லுச்சு இந்தச் சாமி?” என்று அழுகையும் ஆத்திரமும் பொங்க நொந்து போன அதிருப்தியான உணர்ச்சியோடு கூறினாள்.

மானஸ்தரான கிழவருக்கு நிராதரவான அவளின் குரல் உள்ளொடுங்கிக் கிடந்த அவரின் நியாய உணர்வைத் தூண்டி விட்டது. முதிர்ந்தோருக்குள்ள சக்தி வாய்ந்த துயர்தோய்ந்த மீளாத சோகக் குரலுடன், “அந்தக் கதவத் தொடறதுக்கு ஒருத்தருக்கும் உரிமையில்லெ” என்று தன்னை மறந்தவராகக் கூறினார்.

கிழவருடன் வந்த ஊர்ப்பெருந்தனக்காரர்களுக்குக் கிழவரின் இந்தத் திடீர்க் குரல் ஆச்சரியத்தையும், தோல்வி மனப்பான்மையையும் தோற்றுவித்துவிட்டது. கிழவரின் குரல் எப்பொழுதுமே நியாயத்தின் பக்கம்தான் ஒலிக்கும் என்பது இவர்களுக்குத் தெரியாததல்ல. இருந்தாலும் அவ்வளவு திடீரென்று ஒரு பெண்ணின் புலம்பலுக்காக அவர் இப்படி உணர்ச்சிவயப்படுவார் என்று எதிர்பார்க்கவில்லை.

“இப்படி மனசு கலஞ்சம்னா எப்படித்தா கோயிலுக்கட்டி முடிக்கிறது?” என்றான் முகத்தில் அம்மைத் தழும்பு விழுந்து நெட்டையாக வளர்ந்த ஒருவன்.

“இத்தனை வருசமா ஊருப் பொதுப் பணத்துக்கு என்ன வழி பண்ணுனீங்க?” என்றார் கிழவர்.

“அதெ அந்தச் சாமி கேட்டுக்குது. நாம என்ன செய்ய முடியும்?”

இந்தப் பதில் கிழவருக்கு ஆவேசத்தை மூட்டியது. உணர்ச்சியும் நடுக்கமும் கலந்து பேச்சுக் குழறி, "உள்ளவங்கோழி மொட்டு உருக்கணக் கூடை ஒடைச்சிடுமாம். இல்லாதவங் கோழி மொட்டை எடுக்கையிலே ஒடஞ்சிடுமாம்" என்றார்.

"அப்படின்னா வரிக்குடுக்காதவங்களுக்குக் கோயில் கெடையாது" என்று - கிழவர் என்ன கூறினார் என்பதைக் கூட கேளாதவன் போலக் கூறினான். கடைசியில் இப்படிக் கூறுவதிலாவது பலன் கிட்டுமா என்று சோதித்துப் பார்த்தான்.

"கோயிலு வாண்டாம். இத்தன நாளுப் பட்ட கஷ்டத்தவிடப் புதுசா ஒண்ணும் இன்னமே வந்துடப் போறதில்லெ" அவள் அவன் தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவேதான் அப்படிக் கூறினாள். உண்மையிலேயே அவள் மனது அதற்காக வேண்டி, பிராயச்சித்தம் வேண்டியது. அவளின் வறுமை, இல்லாக்கொடுமை எல்லாம் சேர்ந்து சில சமயங்களில் அப்படியெல்லாம் பேச வைத்து விடுகிறது. மனந்தெளிய தெய்வ நிந்தனை கொண்டவளல்ல.

"இன்னமே சாமி மெரமனை வரும்போது உன்னூட்டுப் பூசை வாங்காது"

இப்பொழுது அவளால் ஒரு பதிலும் சொல்ல முடியவில்லை. அவ்வளவு சுலபமாகச் சொல்லக்கூடிய பதிலும் அல்ல அது. சாதிசனங்களுக்கு மத்தியில் அவள் குடும்பமும் மதிப்பாக விளங்க வேண்டுமானால் திருவிழாவின்போது ஊர்சுற்றி மெரமனை வரும் சாமி அவள் வீட்டிலும் வந்து இறங்கி அவள் வேண்டுதலுக்குத் தலைசாய்க்க வேண்டும். அந்த உரிமையை விட்டுவிட்டால் அந்தக் குடும்பத்திற்குண்டான அந்தஸ்துதான் என்னாவது? அதற்காக எத்தனையோ கோர்ட்டுகளிலெல்லாம் ஏறி நிலைநாட்டிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அவள் வாய் மௌனமாகிவிட்டது. மௌனமே மகாபுத்திசாலித்தனம் என்பது நெருக்கடி காலத்திற்கான வேதவாக்கோ!

தாழியில் விழுந்த கோழிக்குஞ்சு பதறுவது போல மாரப்பன் மனம் பதறியது. "அப்படியெல்லாம் சொல்லிடாதீங்க. நா இன்னும் ரண்டொரு மாசத்திலே தந்துடறே" என்று கூறித் துக்கமும் ஏக்கமும் நிறைந்த கண்களோடு அவர்களைப் பார்த்தான்.

"மெரமனையே நிறுத்தறதுக்கும், கோயிலுக் கட்டறதுக்கும் ஒரு சம்பந்தமில்லெ. கோயிலுக் கட்ட வரிக் குடுக்கலின்னா கோயிலுக்குள்ளே பூசையில்லேன்னு சொல்லிடலாம். அது

போலத் திருவிழாவுக்கு வரி குடுக்கலேன்னாத்தா மெரமனைப் பூசையை நிறுத்த முடியும்" என்று கூறித் தீர்வு காண முடியாத ஏதோ ஒரு சூத்திரத்துக்கு தீர்வு கண்டு விட்ட மாணாக்கனைப் போல சந்தோசம் அடைந்தார் கிழவர்.

கிழவரும் அவர்கள் பக்கம் சேர்ந்துவிட்டார் என்பதையறிந்த அவர்கள் சலிப்பும் விரக்தியும் தொனிக்க, "எங்க வூடுகட்டிக் கிறதுக்கா நாங்க வசூல் செய்யறம். எல்லாருக்கும் சம்மதம்ன்னா எங்களுக்கும் சம்மதம். இல்லைன்னா எங்களுக்கும் இல்லே" என்று கூறிவிட்டு ஊர்க்கூட்டத்தைக் கூட்டிப் பரிகாரம் காணுவதாகக் கூறிப் புறப்பட்டுச் சென்றனர்.

நல்லவேளை! கோவில் கட்டும் வரிப்பணம் கொடுக்க முடியாத நிலைமையிலிருந்தும் அவர்களின் அவல நிலையைக் காணும் பாக்கியம் அவர்கள் சம்பந்திக்குக் கிட்டாதது குறித்து அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். அப்படியாவது நேர்ந்திருப்பின் சம்பந்தக்கால வழியில் மகளுக்குத் தீராதவொரு அந்தஸ்துக் குறைவையல்லவா ஏற்படுத்தியிருக்கும்? இனி அதைப் பற்றிக் கவலையில்லை. உடுத்தியிருக்கும் ஆடையைக் கண்டு உள்ளூறுப் புகள் வெட்கப்பட்டுக் கொள்கின்றனவா என்ன?

சம்பந்தி கருப்பாயியும் வந்து சேர்ந்தாள்.

சம்பந்தியை வரவேற்கும் தோரணையில் சற்றுமுன் ஏற்பட்ட மனக்கிலேசத்தையும், மனச்சோர்வையும் மறைத்துக் கொண்டு வரவேற்றனர். பேரனைக் காணும் ஆசையில் அவளும் எதைப் பற்றியும் மனங்கொள்ளாமல் பேரனண்டை ஓடிச் சென்றாள்.

பேரனைக் கண்டதும் அவனைக் கையிலெடுத்து முகத்துக்கு நேராகத் தூக்கிப்பிடித்து, "நேரத்திலேயே வரலான்னு பாத் தன்டா கண்ணு. பன்னண்டு மணிக்கு மின்னே நல்ல நேரம் இல்லின்னு பஞ்சாங்க அய்யரு சொன்னதால தேங்கி இந்நேரம் வரவேண்டியதாப் போச்சு" என்று தன் வருகையின் தாமதத் திற்குக் குழந்தையின் மூலமாக எல்லாருக்கும் சமாதானம் கூறினாள்.

"நாங்களும் அப்படித்தா நெனச்சோம். வேலை வெட்டியெ ஏழு மணிக்கு முன்னாலே முடிச்சிட்டு வரமுடியாமெ போயிருக்கும். அப்புறம் பன்னண்டு மணிக்குத்தான பொறப்பட முடியும்னு நெனச்சோம்" என்றான் மாரப்பன்.

கருப்பாயி வீட்டுக்குள் வந்து நுழைந்தும் நுழையாததுமாக "சீக்கிரம் எங்களை அனுப்பி வையுங்க. நாங்க போகணும்" என்று சிறு குழந்தையைப் போல ஒற்றைக்காலில் நின்றாள்.

"என்னம்மா அது?... வந்து சோறு தண்ணி ஒண்ணும் குடிக்கங்காட்டி ஊருக்குப் போவணும்னு ஒத்தக்காலுலே நிக்கறீங்க? உங்க பேரனெ நாங்க ஒண்ணும் உப்புக்கண்டம் போட்டுக்க மாட்டோம். உக்காந்து சோறு தின்னுங்க" என்று வற்புறுத்தினாள்.

"ஒருவா சோறு கூட வாண்டாம். இப்பத்தா பொறப்படும் பொழுது குடிச்சிட்டு வந்தே. சுடுச்சோறுத் தின்னிட்டு வெயிலிலே ஒடியார ஒடியார தண்ணித்தாகம் கொள்ளாமே தண்ணியா இழுத்துக் கட்டிட்டுது" என்று கூறினாள்.

"கொஞ்சமாலும் எலையெ நனைக்காமே போகப்படாது" என்று கூறி காய்ந்துபோன வாழை மட்டை இலையைப் போட்டு கருப்பட்டி போட்டுச் சுட்ட உளுந்து வடையை எடுத்து இலையில் வைத்தாள் மாரக்காள்.

"ஐயோ! எனக்குப் பசியே இல்லியே" என்று கூறிய கருப்பாயி வடையை மட்டும் சாப்பிட்டு விட்டு, "சோறு வாண்டாம்" என்று கூறி விட்டாள்.

மகளை அனுப்பி வைப்பதற்கான ஆயத்தத்தோடு மகன் கந்தனிடம், "தம்பி! எருமையெப் புடிச்சுக்கிட்டுப் போயி அம்மா வூட்டுலே உட்டுட்டு வா. கன்னுக்குட்டிக்கு வெயிலிலே எளப்புக் கண்டுக்கிட்டு இருக்கும். பத்தரமாகக் கொண்டு போயி வுட்டுட்டு வா" என்று கூறிவிட்டு மனைவியிடம் சென்று, "ம்... ம் பொறப்படு நேரமாவுது" என்றான் மாரப்பன்.

"சரி வெளியிலே போயி எட்டிப்பாரு. யாராவது முண்டதண்டெ, வெறவு சுள்ளி வரப்போவுது" என்று குழந்தையை எடுத்துக் கொண்டு புறப்படும் பொழுது ஊர் எல்லையைத் தாண்டும் வரையிலும் சகுனம் நிகழக் கூடாது என்று சம்பிரதாய முறைப்படி பார்த்து எச்சரிக்கக் கணவனை முன்னாள் அனுப்பி வைத்தாள்.

கெட்ட எந்தச் சகுனமும் நிகழவில்லை என்றுணர்ந்த மாரக்காள் பேரனை எடுத்து இரண்டு கைகளாலும் சேர்த்து மார்போடணைத்துக் கொண்டு முந்தானிச் சேலையால் போர்த்தியபடி நடந்து சென்றாள். பழனியம்மாள் தொட்டில் சேலை, பால் சங்கு முதலானவைகளைப் பையில் போட்டு எடுத்துக் கொண்டு தன் மாமியாருடன் பின் தொடர்ந்தாள்.

முதன்முதலாக அந்த இளம் பாலகன் இந்த உலகத்தில் தனது முதற் பிரயாணத்தைத் துவங்கி விட்டான். அது அவனுக்கே தெரியாமல் நடக்கிறது.

# 21

வருடத்துக்கு வருடம் மழை சுருங்கிக் கொண்டே வந்தது. கிணறுகள் பரவலாகக் காய்ந்து கொண்டிருந்தன. நன்செய் வெள்ளாமை மாறிப் புஞ்சை வெள்ளாமைக்கு வந்து விட்டது. நான்கு மாடு வைத்திருந்தவர் இரண்டு மாட்டுடன் நின்று கொண்டால் பரவாயில்லை என்று நினைக்க ஆரம்பித்தனர். இப்படியே சிறுகக் சிறுக இன்னும் இரண்டு மூன்று வருடங் களுக்குப் பருவமழை பொய்த்தால் போதும்; ஊரில் உள்ள சிறு விவசாயிகள் எல்லாம் நிலத்தை இழந்து நிரந்தரப் பண்ணக் கூலிகளாக மாற வேண்டியது தான்.

எந்த நிலையிலும் ஒரு வயலாவது நன்செய் வெள்ளாமை வைத்திருக்கும் மாரப்பன் கூட இந்த வருடம் நெற்பயிரிடத் துணியவில்லை. இப்பொழுதுள்ள ஊற்றை நம்பி வயலடித்துப் பின் மழையில்லாமல் போய்விட்டால் ஒன்றுக்கும் உபயோக மில்லாமல் ஒருக்கால் காய்ந்துகூடப் போய்விடலாம். அப்படி நாற்றங்கால் இடையிலேயே காய்ந்துவிட்டால் மனிதருக்குத் தானியம் கிட்டாவிட்டாலும் மாடுகளுக்காவது தீவனம் ஆகுமாவென்றால் அதுவும் பயன்படாது. ஆகவே, இப்பொழு திருக்கும் கிணற்றுத் தண்ணீரை நம்பி ஆடிப்பட்டக் கேழ்வரகு நட்டுவிட்டால், எவ்வளவு மழை பொய்த்தாலும் மனிதருக்கும் உணவு கிடைத்துவிடும். மாட்டுக்கும் தீவனமும் கிடைத்து விடும்.

பருவங்கண்டு வெள்ளாமை வைப்பவனும், பக்குவம் தெரிந்து முடிவெடுப்பவனுமே விவசாயத்தில் காலூன்றி நிற்க முடியும். அப்படியில்லாதவனுக்குப் பூமித்தாயின் கருணை கிடைப்பது அரிதே!

உழுது கட்டியுடைத்துப் புழுதி செய்யப்பட்ட பாத்திகளில் ஏற்றத்தின் மூலம் இறைக்கப்பட்ட தண்ணீர் மெதுவாக ஓடிப் பாய்ந்து கொண்டிருந்தது. மையுறிஞ்சும் தாளைப் போலச் சமப்படுத்தப்பட்ட நிலம் ஓடிவரும் தண்ணீரை மெதுவாக உறிஞ்சித் தாகம் தீர்த்துக் கொண்டிருந்தது. பூமியிலிருந்து

வெப்ப ஆவியும் வண்டல் மண்ணின் இனிய மணமும் எழுந்து காற்றில் கலந்து கொண்டிருந்தது. பாதங்களுக்கிடையில் மண்ணைக் கரைத்துக் கொண்டு பாயும் தண்ணீர் குழந்தையின் பூக்கரங்கள் பாதத்தை வருடுவது போல கிசுகிசுத்தது. மண்ணின் இடைவெளியில் அண்டிக் கிடந்த தத்துப் பூச்சிகள் தாவித் தாவிக் குதித்துக் கொண்டிருந்தன. மைனாக்குருவிகள் தாவிக் குதித்து வரும் தத்துப் பூச்சிகளைப் பறந்து பறந்து கொத்திப் பிடித்துக் கொண்டிருந்தன. ஈரப் பாத்திகளின் மேற்பரப்பில் நெளிந்து கொண்டிருக்கும் மண் புழுக்களைக் காக்கைகள் தங்கள் அலகால் கொத்திப் பொறுக்கிக் கொண்டிருந்தன.

மண் கலயங்களில் ஊற்றி வந்த சோற்றைக் காக்காய், குருவிகள் அலம்பாமல் இருப்பதற்காகக் கலயத்தின் வாயைச் சுற்றித் துணியால் மூடிக்கட்டி வயலின் ஒரு ஓரத்தில் வைத்து விட்டுப் பெண்கள் வயலில் இறங்கினர். முழங்காலுக்கு மேலாக சீலையை உயர்த்தி முந்தானையால் இடுப்பைச் சுற்றிக் கச்சை கட்டுவதுபோல் கட்டி வயலுக்குள் நாற்று நடுவதற்குக் குனிந்தனர். தாயின் இதழ்கள் குழந்தையின் கன்னத்தில் முத்தம் பதிப்பதுபோல நாற்றை ஏந்திய அவர்கள் கரங்கள் அவற்றை மண்ணில் பதித்துக் கொண்டிருந்தன.

கிராமங்களில் ஒவ்வொருவருக்கும் விளையாட்டு முறைப் பெண்கள் இருந்தே தீருவார்கள். இருபாலரிலும் வாயாடியும், கையாடியும் உள்ளவர்களே அந்தக் கேலி விளையாட்டில் கலந்து கொண்டு தப்பிக்க முடியும். இன்றேல் மிக மோசமான முறையில் நான்கு பேருக்கு மத்தியில் கேலிக்குரியவர்களாகி விடுவார்கள்.

வட்ட முகமும், திரண்ட கட்டான உடலும் கொண்ட ஒரு பெண் நடவுப் பாடல் ஒன்றை நெஞ்சினிக்கப் பாடிக் கொண் டிருந்தாள். வறண்ட மண்ணில் நீர் பாயும் பொழுது எழும் மெல்லிய கிசுகிசுப்பொலியும், கை வளையல்களின் ஒலியும், இடையில் நுழையும் காற்றின் சீழ்க்கையும் சேர்ந்து அந்தப் பாட்டுக்குச் சுருதி கூட்டிக் கொண்டிருந்தன.

"உனக்குச் சம்மதம்னா நா வந்து நட்டுக் காட்டறே" என்றான் - அவன் குரலில் குத்தலும் கிண்டலும் தொனித்தன.

"சரி வாவே! உங் கைவரிசையைத்தா சித்தெ பாப்பமெ" என்றாள், அவன் இரு பொருளில் கூறியதை உணராதவளாக.

கள்ளத்தனமாகப் புன்னகை புரிந்தவாறு அவளைப் பார்த்து "அப்புறம் பொல்லாப்புச் சொல்லப்படாது. வயசாயிட்டாலும்

வெறப்புக் கொறஞ்சு போச்சுன்னு நெனைக்காதே இன்னும் ரண்டு கொமரிங்க வந்தாக்கூட சமாளிக்க முடியும்" என்றான்.

இதைக் கேட்டதும் மற்ற பெண்களெல்லாம் 'கொல்' என்று சிரித்தனர். அவன் கூறியதன் அர்த்தம் இப்பொழுது பட்டவர்த் தனமாகப் புரிந்து விட்டது. அவள் பொய்யான கோபத்தை வரவழைத்துக் கொண்டு "நெனப்புத்தா பொளப்புக் கெடுக்குது. கொட்ட பிதுக்குன பழத்தெ ஒட்டி சேர்க்க முடியாது? எப்படி தளந்த மனுசனுக்கு குட்டி பார்க்க முடியாதுன்னு சும்மாவா சொல்லறாங்க" என்று முகத்தை ஒரு வெட்டு வெட்டி துவேசமும் எரிச்சலும் பொங்கப் பார்த்தாள்.

"நா இப்ப என்ன சொல்லிட்டே? நீ என்னென்னமோ சொல்றயே! நாத்து நட்டுக் காட்ட முடியுமான்னு கேட்டே. நா சரின்னே" என்று பீறிட்டு வந்த சிரிப்பை அடக்க முயற்சித்த வனாகக் கூறினான்.

பேச்சு இன்பத்தில் திளைத்திருந்த மாரப்பனுக்கு வேறு எதன் மீதும் முழுக்கவனம் செல்லவில்லை. இறைப்பு மாட்டை முன்னுக்கும் பின்னுக்குமாகப் பழக்க தோசத்தின் சிந்தனா உணர்வின்றி இழுத்துத் தண்ணீர் மொள்ளவும் ஓட்டித் தண்ணீர் சாய்க்கவுமாக இருந்தானேயன்றி, அறிவுப்பூர்வமாக அவன் கவனம் அதில் லயிக்கவில்லை. தண்ணீர் மொள்ள மாடுகளை அடிவாரிக்கு இழுத்து வந்தவுடன் அசைபோட்ட மாடுகள் இரையை விழுங்கிவிட்டனவா இல்லையா? என்று கவனிக்காமல் இரையை விழுங்கும் நேரத்தில் நீர் நிறைந்த பறியை இழுத்துச் செல்ல அதட்டி ஓட்டினான். தலையைக் கீழே தாழ்த்தி முன்னங்கால் இரண்டையும் வலிய ஊன்றி வடத்தால் பறியில் இணைக்கப்பட்ட நுகத்தடியைக் கழுத்தைக் கொடுத்து இழுத்தன. நுகத்தடியைக் கழுத்தோடு இணைத்துக் கட்டியிருந்த தும்புக் கயிறு குரல் வளையை அழுத்தவும் விழுங்கிய இரை உள்ளேயும் போகாமல் வாயிலும் நிற்காமல் மூச்சுக்குழாயை அடைத்தது. நிறைபறியோடு சில எட்டுத் தூரங்கள் நடந்து சென்ற ஒரு மாடு மூச்சுத்திணறச் சுருண்டு கீழே விழுந்து விட்டது. திடீரென்று நிகழ்ந்துவிட்ட இந்தச் சம்பவத்தால் பதைபதைத்துச் சத்தமிட்டபடி நிறைபறித் தண்ணீரைக் கவிழ்க்க வால்கயிற்றைப் பிடித்துப் பறியைக் கவிழ்க்க முயற்சித்தான். அவன் சக்திக்கும் மீறி நீர் நிறைந்த பறி கீழ் நோக்கி அவனையும் மாடுகளையும் இழுத்துக் கொண்டு இறங்கியது. இதைக் கண்ட நடவு நட்டுக்கொண்டிருந்த பெண்கள் வேகமாக ஓடி வந்து

அவனுக்கு உதவி செய்து பறியிலிருந்த தண்ணீரைக் கவிழ்த்துப் பாதுகாத்தனர். அந்த வேளையில் உதவிக்கு ஒருவரும் வராமல் இருந்திருந்தால் மாடும், ஆளும் கிணற்றுக்கு இரையாக வேண்டியிருந்திருக்கும்.

மாரப்பனுக்கும், மாரக்காளுக்கும் இந்தச் சம்பவத்தின் அதிர்ச்சி சற்று நேரம் ஒன்றும் பேசமுடியாமல் செய்து விட்டது. சம்பவத்தின் விவரம் அறியாத மாரக்காள் விழித்தாள். சம்பவம் நேர்ந்ததற்கான காரணத்தை அறிந்த மாரப்பன் கலங்கினான்.

ஏற்றத்தில் மாடு பின்னுக்கு வந்ததற்கான காரணத்தை மாரக்காள் துருவித் துருவிக் கேட்டாள். அவன் அதற்கான உண்மைக் காரணத்தைக் கூறாமல் ஏதேதோ காரணத்தைக் கூறி மனைவியிடமிருந்து தப்பித்துக் கொண்டான். உண்மை நிலையை அவள் புரிந்திருப்பாளேயானால் புயலாகத்தான் மாறியிருப்பாள். அவன் வாழ்க்கையில் இப்படிப் பட்டதொரு கவனக்குறைவு என்றுமே நிகழ்ந்திருக்காது. இந்த நிகழ்ச்சி ஒரு துரதிருஷ்டவசமானதே!

சம்பவத்தின் உண்மைக் காரணத்தை அறிந்து கொள்ளாத மாரக்காள் கணவனின் சாமர்த்தியத்தினாலும், முன் யோசனை யினாலுமே தங்கள் குடும்பத்தையே பாழாக்கவிருந்த ஆபத்தி லிருந்து தப்ப முடிந்தது என்று மகிழ்ந்தாள்.

“இப்ப தண்ணி பாஞ்சிருக்கிற காடு புடுங்கியிருக்கிற நாத்துக் குச் சரியா இருக்கும். பத்தலின்னா மத்தியானத்துக்கு மேலே ஏத்தக் கட்டிக்கலாம். மாட்டை அவுத்து செத்த நேரம் காலாற உட்டுக் கொண்டா” என்றாள்.

மாரப்பனும் மாடுகளை ஏற்றத்தில் இருந்து அவிழ்த்து அண்ணந்தாள் இட்டு விட்டு தரிசாகக் கிடந்த புறம்போக்கு நிலத்திற்கு ஓட்டிச் சென்றான். மாடுகள் காய்ந்துபோன அருகம்புற் கட்டைகளை மேயத் துவங்கின. தரிசில் நின்ற ஒரு வேலமரத்து நிழலில் சென்று அவனும் அமர்ந்தான்.

காலையிலிருந்தே அவன் உடலில் ஒரு புது வேகம் செயல் படுகிறது. அதன் காரணத்தை அவனால் கண்டுபிடிக்க முடிய வில்லை!

கிழக்கிலிருந்து ஒரு சுழல் காற்று புழுதியையும் தூசியையும், குப்பையையும் வாரி இறைத்துக்கொண்டு கணவேகத்தில் அவனைத் தாண்டிச் சென்றது. அருகிலிருந்த வாகை மரங்களின் காய்களும், ஊஞ்சை மரங்களின் காய்களும் ‘சோ’ என்று

இரைச்சலிட்டு சலசலத்தன. பனை மரங்கள் நெடுமூச்சு விட்டு இரைந்தன! சங்கம் புதரில் அண்டியிருந்த செம்பூத்து மதுரகீதம் இசைத்தது. வேப்பமரக்கிளையில் அமர்ந்திருந்த ஓர் ஆண்குயில் விசனத்துடன் தன் எதிர்காலத்தை எண்ணிப் புலம்பியது! பனைமரத்தில் அமர்ந்திருந்த ஓர் மைனாப் பறவை கீழே தாவி ஒரு பூச்சியைக் கவ்விக் கொண்டு தனது கூட்டை நோக்கிப் பறந்தது. இளஞ்சிவப்பு நிறம் படர ஓர் ஓணான் மரக்கிளையில் இருந்தபடி அருகில் வந்த அணிற்பிள்ளையைப் பார்த்துத் தண்டால் எடுப்பது போல நான்கு கால்களையும் மரக்கிளையில் நன்கு பதித்து எழுந்து தாழ்ந்து மிரட்டியது. இதைப் பார்த்த அணில் கீச்சுக் கீச்சென்று கத்திக் கொண்டு உச்சாணிக் கிளைக்கு ஓடுவதும் ஓணானின் அருகில் வருவதுமாக இருந்தது.

ஊஞ்சை மரத்தில் இருந்து கசிந்து இறுகிய ஒருவகைக் கட்டியான பிசினை ஒரு நாய் நக்கிச் சுவைத்துக் கொண் டிருந்தது! உவர்மண் பொடிந்து உப்புப் படர்ந்த களர் நிலத்தை ஒரு கிழட்டெருது மிருதுவாக நக்கிச் சுவை பார்த்துக் கொண் டிருந்தது; ஒரு தாய்ப் பசு மரத்து நிழலில் நின்று கன்றின் ஆசன வாயை நக்கிக் கொண்டிருந்தது. கன்று உடல் சிலிர்க்க வாலைத் தூக்கியபடி நின்று கொண்டிருந்தது. பனை ஓலையின் நிழலில் அமர்ந்திருந்த ஒரு காகத்தின் தலையை வருடியபடி ஆண்காகம் மகிழ்ந்திருந்தது. பெட்டைக் காகமோ கண்களை உள்வாங்கிச் சுருக்கிச் சுழற்றிக் காதல் மயக்கில் கனவு காண்பது போல் இருந்தது. வட திசையிலிருந்து தென் திசை நோக்கித் தேனீக் கூட்டம் ஒன்று ரீங்காரமிட்டுப் பறந்து சென்றது.

ஆடு மேய்த்துக் கொண்டிருந்த பையன்கள் அனைவரும் ஆடுகளை வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு செல்ல யத்தனித்தனர். சூரியன் உச்சிக்கு வர வர ஆடுகள் மேயாமல் மரத்து நிழலில் கும்பல் கும்பலாகத் தலையைக் கால்களுக்கிடையில் தொங்கப் போட்டு நின்று கொண்டிருந்தன. இனி வெயில் தாழ மாலை நேரத்தில் தான் அவை மேயும். அதற்கிடையில் அவர்கள் அவை களுக்குத் தண்ணீர் காட்டி கடலைக் கொடியோ, பயிர் வகை களின் பொட்டோ வைத்து மரத்து நிழலிலோ பட்டியிலோ அடைத்து விடுவார்கள்.

மாடுகளும் மேய்ச்சலை நிறுத்திவிட்டு மரத்து நிழலில் படுத்துச் சற்று அசை போட்டுக் கொண்டிருந்தன. தாகம் மிகவே கட்டுத் தரையை நோக்கி அவைகளும் புறப்பட்டன. மாரப்பனும் சிந்தனை வயப்பட்டவனாக எழுந்து பின் தொடர்ந்தான்.

மாடுகளை வீட்டுக்கு ஓட்டிச் சென்ற மாரப்பன் அவைகளுக்குத் தண்ணீர் காட்டித் தவிடு போட்டுத் தானும் சோறு குடித்து விட்டுச் சற்று வீட்டில் ஓய்வெடுக்கக் கட்டிலில் சாயந்தான். வாசலில் இருந்த வேப்ப மரத்துக் காற்று சிலு சிலு வென்று வீச, தூக்க சேர்க்கை அவன் இமைகளைத் தழுவியது. வாயைப் பிளந்தபடி "கொர்கொர்" என்று மூச்சு விட்டான்.

வியர்த்துக் களைக்க தோட்டத்திலிருந்து வந்த கந்தன் தன் தகப்பனைப் பார்த்து "அண்ணா! அண்ணோய்" என்று தூக்கத்தைக் கலைக்கும் முறையில் சத்தமிட்டுக் கூப்பிட்டான். தூக்கக் கலக்கத்தில் இருந்த அவனுக்குக் கந்தன் கூப்பிட்ட சத்தம் ஏதோ ஒரு ஆபத்தை அறிவிக்கத் துடித்துப் பதறுவது போலப் பட்டது. திடுக்கிட்டு எழுந்து அமர்ந்த மாரப்பன் மகனைப் பார்த்து "என்ன" வியப்பும் ஆச்சரியமும் தோன்றப் பார்த்தான்.

"மிச்சங்கெடக்கிற வடக்குக் காட்டு வயலையும் இன்னைக்கே நாத்து நட்டுடலான்னு இப்ப நாத்துப் புடுங்கிட்டு இருக்கறாங்க, அதனாலே ஏத்தங்கட்ட மாட்டப் புடுச்சுக்கிட்டு எங்கம்மா உன்னை வரச் சொல்லுச்சு" என்று முகத்தில் வடிந்த வியர்வையைத் தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்துத் துடைத்துக் கொண்டு முதுகில் வியர்வைப் பதத்தால் ஏற்பட்ட அழுக்குமய மயப்பைத் துண்டைத் திரிபோல் முறுக்கிக் குறுக்குவாக்கில் பிடித்துத் தேய்த்துக் கொண்டும் கூறினான்.

"காத்தாலே தண்ணி பாய்ச்சுன வயலெல்லாம் நாத்து நட்டாச்சா?"

"ட்... ம்ங்" அதுக்குச் சரியாப் போச்சு, வடக்கால வயலுக்கு இப்பப் புடுங்கறாங்க"

"சரி அப்படின்னா நீ சீக்கிரம் வா. தண்ணி கட்டறதுக்கு ஆளு வேணுமல்ல?" என்று கூறிவிட்டுக் கட்டிலை விட்டு இறங்கிச் சிக்குவிழுந்த தலை மயிரைக் கோதி முடிந்து கொண்டு "ம்....ம்.... பருவமழை பெய்யலின்னா இப்ப நட்டிருக்கற காடே தண்ணி பாயாது, என்னமோ மனசு கேக்காமே செய்யறோம்" என்று தனக்கு விருப்பமில்லாதது போலவும், மனைவியின் வற்புறுத்தலுக்கு வேண்டியே செய்வது போலவும் கூறினான்.

அந்தக் கிணற்றில் நீர் ஊறுகிற நிதானத்துக்கு இப்பொழுது நாற்று நட்டிருக்கிற காடே அதிகமானது. அப்படியிருக்க ஏன் இன்னும் அதிகமாக நட்டு வைக்க விரும்புகிறார்கள்? எப்பொழுதுமே விவசாயிகள் விதைப்புப் பட்டத்தில் இருக்கிற ஈரத்தை

யோ, நீரையோ கொண்டு அதிகபட்சம் எவ்வளவு காட்டில் விதைத்து முளைக்க வைக்கவோ நட்டுத் தழைய வைக்கவோ முடியுமோ அவ்வளவு முயற்சியும் செய்து பார்த்து விடுவார்கள். இப்படிச் செய்வதால் அவர்கள் எதிர்பார்த்ததைவிடக் குறை வாக மழை பெய்தால் ஏற்படுகிற நஷ்டத்தைவிட அவர்கள் இப்படிச் செய்யாமல் அளவோடு செய்யும் பட்சத்தில் பின்னால் எதிர்பார்த்த மழை பெய்து விட்டால் அதனால் ஏற்படும் நஷ்டம் அதைவிடப் பத்து மடங்கு ஏற்பட்டு விடுவதாக ஆகிவிடும். ஆகவே தான் கொஞ்சம் விதைத் தானிய நஷ்டத் துக்குப் பயந்தால் பின்னால் பெரியதொரு நஷ்டம் ஏற்பட்டா லும் ஏற்பட்டு விடும் என்று அவர்களும் வேலைச் சிரமத்தையோ நஷ்டத்தையோ பாராமல் அதிகமாகக் கேழ்வரகு நடவு போடத் தீர்மானித்து விட்டனர்.

"'எங்கம்மா முன்னாடியே உன்னெச் சோறு கொண்டு வரச் சொல்லுச்சு" என்று கூறி வீட்டினுள் சென்று இரண்டு அகப்பை சோளக்களியை எடுத்துக் சோடு போவணியில் போட்டு நீர்த்த தண்ணியை ஊற்றிக் கடித்துக்கொள்ள இரண்டு வறுத்த மிளகாயையும் எடுத்துப் போட்டுக் கொடுத்தான். சோற்றை வாங்கிக் கொண்டு புறப்பட்ட தகப்பனிடம் எதையோ மறந்துவிட்டவன் போல் "இருண்ணா வாரெ" என்று மீண்டும் வீட்டினுள் சென்று வெற்றிலைப் பாக்குப் புகையிலைகளை கொண்டுவந்து கொடுத்தான். சோறு ஒருவேளை இல்லாவிட் டாலும் மாரக்காள் பொறுத்துக் கொள்வாள். 'வாய்க்கு' இல்லாவிட்டால் அவளால் சற்று நேரங்கூட பொறுக்க முடியாது. அவ்வளவு பைத்தியம் வெற்றிலைப்பாக்கு மீது.

"அப்படின்னா மாட்டெ ஆரு புடுச்சாருவா?" என்றான், மீண்டும் மீண்டும் தான் வரவேண்டி இருக்குமோ என்ற சந்தேகத்தில்.

"சோறு குடிச்சிட்டு நா புடுச்சார்றெ!"

"சரி நா போறே, நீ சீக்கிரமா ஓடியா" என்று கூறிச் சற்று நடந்தவன் எதையோ நினைத்து நின்றவாறு, "வூட்டெ சரியாப் பூட்டிட்டு வா" என்று கூறி நடந்தான்! இன்னும் விளையாட்டுக் குழந்தை என்பது அவன் நினைப்பு.

இதைக் கேட்ட கந்தனுக்குச் சிரிப்புத்தான் வந்தது! எந்தப் பெற்றோர்களும் தன் மக்களை என்றுமே குழந்தையாகவேதான் நினைத்துக் கொண்டிருந்தார்கள். எந்தக் குழந்தைகளும் பின்னால் பெற்றோர்களாகத்தான் மாறுகிறார்கள். ஆனால் பெற்றோர்களின் நினைப்பு மாறுவதில்லை!

கந்தன் ஏதோ பதில் சொன்னான்! மாரப்பன் நடந்த படியே 'உம்' கூட்டியவாறு சென்றான்! அவன் நடந்த செருப்பிலிருந்து பிய்ந்த அடிப்பாகத்தின் ஒரு பகுதி சூடு கண்ட புழுதி மண்ணில் நடக்க நடக்க இழுபட்டுப் புழுதியை வாரித் தூற்றியது! தளர்ந்து குன்றிப் போன நொண்டிமாடு நடந்து செல்வதுபோல அவன் புழுதியை வாரித் தூற்றிய படி நடந்து சென்றான்.

அவன் தோட்டத்துக்குச் செல்வதற்கும், எல்லோரும் கிணற்று மேட்டு மரத்து நிழலில் வந்து சோறு குடிக்க அமர் வதற்கும் சரியாக இருந்தது. மாரக்காளும் அவன் கொண்டுவந்த சோற்றைக் கரைத்து கையில் அள்ளிக் குடித்தாள். பாத்திரம் எச்சில் படுமென்று வலது கையை வாய்க்கும் இடது கையால் தூக்கிப் பிடித்த போவணியின் விளிம்புக்கும் இடையில் இணைத்துப் பிடித்துச் சாய்த்து மிளகாயை கடித்துக் கொண்டு சோற்றைக் குடித்தாள்.

வானில் பருவ மழைக்கான அறிகுறிகளே தென்படவில்லை. சென்ற ஆண்டின் இதே நேரத்திலெல்லாம் ஆடிப்பட்ட புஞ்சை விதைப்பெல்லாம் முடிந்துவிட்டது. இந்த வருடமோ ஆடி தாண்டி ஆவணிக்கோ, புரட்டாசிக்கோதான் மழை பெய்யும் போலிக்கிறது! கீழ்க் காற்று இன்னும் வீசிக் கொண்டிருக்கிறது. நன்கு பருவ மழை பெய்யும் காலங்களில் எல்லாம் வைகாசிக் கடைசிக்கெல்லாம் கீழ்க்காற்று நின்று மேல்காற்றும் துவங்கி மழை பெய்வதற்கான மேக மூட்டங்களுடன் ஒரே புழுக்கத்தைக் கொடுக்கும். இந்த வருஷம் என்னவென்றால் இன்னும் கீழ்க் காற்றே வீசிக் கொண்டிருக்கிறது! இது சரியான பருவமழைக்கு அடையாளமல்ல. மழை வறட்சி ஏற்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கு இல்லை!

ஆடி மாதமோ முடியப்போகிறது, ஆவணி பிறந்துவிட்டால் செத்தைப் பட்டம் ஏகப்பட்ட காசு கொடுத்து களை வெட்டி யாக வேண்டும். ஆவணிப்பட்டத்தில் அவ்வளவு புற்கள் முளைக் கும் என்பார்கள், என்ன செய்ய? மனிதர்கள்தான் மனிதர்களைச் சோதிக்கிறார்கள் என்றால் வானம்கூட மனிதர்களைச் சோதிக்க ஆரம்பித்து விட்டதே!

அங்கு அமர்ந்து சோறு குடித்துக் கொண்டிருந்தவர்களில் ஒரு பெண், "இந்த வருஷம் நாங்கெல்லாம் எப்படித்தா பொளைக்கப் போறோமோ? வருசத்துக்கு வருசம் மழை இப்படியா மோசம் பண்ணிக்கிட்டுப் போவும்? மோசம்னு சொன்ன போன வருசமே, இந்த வருசத்துக்கு எவ்வளவோ பரவாயில்லே போலிருக்கிறதே" என்றாள்.

இதைக் கேட்ட மாரப்பன் "நானெல்லாம் சின்னஞ்சிறுசா இருந்தப்போதுதா ஒளக்குப் பஞ்சம் வந்தது. அதாவது படியிலே தவசம் அளந்தது போயி ஒளக்கிலே அளக்க ஆரம்பிச்சாங்க. அப்படிப் பஞ்சம் இப்படியே இன்னும் ரண்டு வருசம் மழை பேஞ்சா ஒளக்கிலேதா அளந்து போடணும்" என்றான்.

சோறு குடித்து முடித்து மூக்கைச் சிந்தியபடி 'வாய்க்கு'ப் போட்டுக்கொண்ட மாரக்காள் "நா ஒரு கனாக்கண்டே" என்று கூறி மென்று குதப்பிய வெற்றிலைச் சாற்றைக் கீழே துப்பினாள். "ஒரு பரதேசி தூங்கிட்டு இருந்த என்னெ எழுப்பி தங்கிட்டெ இருந்த சின்ன உளக்கெக் குடுத்துட்டு வூட்டுலே இருந்த பெரிய வள்ளத்தை எடுத்துக்கிட்டும் போயிட்டா" என்றாள்.

இதைக்கேட்ட வயது முதிர்ந்த ஒருத்தி "இது கெட்ட துக்குத்தா அறிகுறி. பெருசக் குடுத்துச் சின்னதெ வாங்கிப் போயிருந்தா அது சோகத்துக்கு அறிகுறி. சின்னதா குடுத்துப் பெரிசா வாங்கிப் போயிருக்கறதாலே இது வரப்போற பஞ்சத் துக்கு அறிகுறி. அதுவும் பரதேசியா வந்திருக்கறதாலே நிச்சயம் கடவுளு அவதாரம்தா, அது பொய் போவாது" என்றவள் சற்றுப் பொறுத்து "அந்தப் பரதேசி உடுத்தியிருந்தது என்ன துணி?" என்று கேட்டாள்.

"கொக்கு வெள்ளத்துணி" என்றாள்.

"ஓ! அப்படின்னா நிச்சயம் இந்த வருசம் மழையில்லெ. சுத்த வெள்ள, வானத்திலே கருவோட்டமில்லாததெக் காட்டும். வெள்ள மேகம் எழுந்தா மழை பெய்யுமா? அழுக்கு நெறக் கருமேகந்தா மழையைக் குடுக்கும். பரதேசி வெள்ளத்துணிக்குப் பதிலா வேறு எதுவும் உடுத்தியிருக்கணும். இது அபசகுனந்தா" என்றாள்.

பெருமூச்சும், ஆதங்கமும் தொனிக்க "இப்ப இருக்கற மழை நேசரப் பார்த்தா அப்படித்தாந் தெரியும். நாம பார்த்து செஞ்சுக்கற வெசயம் இதுலே என்ன இருக்குது?" எப்படிப் படி போட்டானோ அப்படி நடந்து தானே தீரும்? ஆட்டுக்குக் கூட ஆண்டவெ வாலெ அளந்துதானே வச்சிருக்காரு?" என்றான்.

அப்பொழுது கந்தன் மாட்டைப் பிடித்து வந்து வாரியில் நிறுத்தினான். வானத்தை அண்ணாந்து பார்த்த மாரக்காள் "பொழுது சந்தை நேரத்துக்கு மேலே ஓடிப்போச்சு, எந்திரிங்க இந்த வயலை இருட்டாவங்காட்டி நாத்து நட்டு முடிக்கணும்" என்று கூறி எழுந்து வயலை நோக்கி நடந்தாள். உழப்பட்டுக் கட்டி பெயர்ந்த மண் மீது நடந்து சென்றாள். கையகல வரப்பின்

மீது அவள் சென்ற காட்சி ஒற்றைக் கம்பியில் கழைக் கூத்தாடி நடந்து செல்வது போலிருந்தது!

மாரப்பனும் எழுந்து சென்று மாட்டைப்பிடித்து நுகத்தடியில் மாட்டி நீர் இறைக்க ஆரம்பித்தான். கந்தன் முன்போலவே பாத்திகளுக்குத் தண்ணீர் கட்டச் சென்றான்.

மாரப்பன் ஏற்றம் இறைத்துக் கொண்டு "இளநீருத் தண்ணி போல எறைக்குந் தண்ணி வயலும் பாய தளதளக்க வந்த பயிர் சாஞ்சு காத்திலாடும்" என்று பாட ஆரம்பித்தான்.

அப்பொழுது மாரப்பனுக்குப் பழக்கப்பட்ட பக்கத்தூரைச் சேர்ந்த செல்லப்பன் என்பவன் அவ்வழியாக எங்கோ சென்றவன் மாரப்பனைக் கண்டதும் நின்று பேச்சைத் துவங்குகிற ரீதியில் "அண்ணே எறைக்குதுங்களா?" என்று கேட்டான்.

வடத்திலமர்ந்து கொண்ட பறித்தண்ணியை சாய்ப்பதற்கு மாட்டை முன்னுக்கு ஓட்டிச் சென்றவன் பின்னால் வந்து நின்ற செல்லப்பனைப் பார்க்க முடியவில்லை. குரல் கேட்டதும் யாரென்று தெரியாமல் திரும்பிப் பார்த்த மாரப்பன் "ஓ! வாப்பா தம்பி எது வரையிலும்? என்றான்.

"மேக்கே ஊஞ்சப்பாளையம் வரையிலும் போயிட்டு வரலான்னு போறண்ணா"

"நம்ம கெணத்திலே வயலடிக்கத் தண்ணியிருக்குதா?"

"ஏதோ சுமாரா இருக்கும். நாத்துக்கூட வுட்டு வச்சிருக்குது. மழையில்லின்னா ஏதோ ரண்டொரு வயலுத்தா அடிக்க முடியும். நம்மளுதெல்லாம் எப்படி?" என்று கிணற்றை எட்டிப் பார்த்தான். தண்ணி தொலைக் குழியில் அரைப் பறியும் கால் பறியுமாக மொண்டு கொண்டிருந்தது.

"கெணறு ஊத்தம் இவ்வளவுதா, அதனாலதா கேவுரு நடுது. பின்னாலெ ஏதாவது மழை மாரி கனமாய்ப் பேஞ்சுதுன்னா வயலடுச்சு வெத போடலான்னு இருக்கறே. நாத்துட்டு வச்சு மழை பெய்யலின்னா வீணாத்தானே போயிடும்?"

"கெணறு மேகெணறு தானாட்ட இருக்குது, எங்க கெணறு எல்லாம் எவ்வளவோ ஆழம் போயிட்டுதே! ஏ, ரண்டு மெட்டுப் பறிச்சுடறதுதானே? எந்த வெட்டைக்கும் அசராதே"

மாட்டைப் பின்னுக்கிழுத்து வந்து தண்ணீர் மொண்ட மாரப்பன் "எல்லாம் கையிலெ காசில்லாத மொடைதா. நீ சொல்லறாப்பலே இன்னும் ரண்டு மெட்டுப் பறிச்சுட்டா பூரா நெலத்திலும் முப்போவம் நெல்லு வைக்கலாம்" என்றான்.

"எல்லாம் அதுலேதா இருக்குது. காசு மட்டும் கையிலே இருந்துட்டா கபோதிகூடக் கடவுளே வெலப் பேசலான்னு சொல்லுவாங்க" என்றான் செல்லப்பன். அவன் பேசிய தோரணையிலும், நடவடிக்கையிலும் அவன் ஏதோ ஒன்றை வெளியிடுவதற்கு ஏதேதோ சுற்றி வளைத்துப் பேசுவது போல இருந்தது.

அவன் இதைக் கூறும்பொழுது மதகில் சாய்ந்த பறித் தண்ணீர் குபுகுபுவென்று சத்தமிட்டுச் சென்றபடியால் அவன் கூறியது மாரப்பன் காதில் சரியாக விழவில்லை. முன்னுக்குச் சென்று நீர் நிறைந்த பறியைச் சாய்த்த மாடுகளைப் பின்னுக் கிழுத்தபடி செல்லப்பனைப் பார்த்த மாரப்பன் "ம்.... நம்ம ஒருத்தனுக்காகவா மழை பேயுது? கடவுளு எல்லாருக்கும் வுட்ட தடம் நமக்கும்" என்றான்.

எதை எதையோ பேசிக் கொண்டு வந்த செல்லப்பன் திடீரென்று "தண்ணி கட்டற பயனா நம்ம பயெ?" என்று கந்தனைப் பார்த்தபடி கேட்டான்.

"ஆமா!" என்றான் மாரப்பன்.

"பயெ ஆளாயிட்டானே, வயசு பதினேழு பதினெட்டு இருக்குங்களா?" என்றான்.

"இரவத்திரண்டு இரவத்திமூணு வயதிருக்கும்"

"ஏ, கண்ணாலம் பண்ணலாமே?"

மாரப்பன் ஒரு பதிலும் சொல்லவில்லை.

"இந்தக் காலத்திலே பதனஞ்சு பதினாறு வயசுப் பசங்களுக்கு கூட கண்ணாலம் பண்ணி வச்சுடறாங்க. ஆளுக்கு ஆளா வந்துட்டவனே இன்னும் சும்மா வச்சிருக்கிறீங்களே?" என்று ஏதோ அந்தக் குடும்பத்தின் மீது அக்கறையும் பொறுப்பும் கொண்டவன் போல் கூறினான்.

மாரப்பனுக்கு என்ன பதில் கூறுவதென்று புரியவில்லை. கல்யாணம் பண்ணுவதற்குக் கையில் காசில்லை என்றோ, கடன் கட்டிவிட்டுத்தான் கல்யாணம் பண்ணுவதென்றோ கூற முடியுமா? அது குடும்பத்துக்கு அவ்வளவு கௌரவம் அல்லவே!

"அவனுக்குப் பத்தொன்பது வயசிலேயே சனிதெசெ ஆரம்பிச்சிட்டுது. இருவத்தி மூணுலதா அது வெலகி குரு தெசை நடக்கப் போவுதுன்னு அவெ சாதகம் சொல்லுது. அதுனாலதா இவ்வளவு நாளா ஒத்திப் போட்டாச்சு" என்றான் மாரப்பன்.

"இந்த நடப்பு வருஷத்தோட சனி தெசெ வெலகப் போவுதா."

"ஆமா வார சித்தரையோட வெலகப் போவுது."

அவன் எதையோ ஒன்றை அடிக்கக் குறிவைக்கிறான். அது காற்றிலாடும் பொருள்போலக் குறிதவறி அசைகிறது. அசையும் பொருள் தன் இருப்பில் நிற்கும் நேரத்தை எதிர்பார்க்கிறான்.

"சித்தரைக்கு மேலே கண்ணால காரியத்தை முடிக்கறாப்பலே தானே?"

மாரப்பனுக்கும் என்ன கூறுவதென்று புரியவில்லை. கேட்பவனும் விடமாட்டான் போலிக்கிறது. தன்னுடைய பொருளாதார பலவீனத்தையும் காட்டிக் கொள்ளாமல், அதே பொழுதில் திருமண விசயத்தையும் முறித்துக் கொள்ளாமல் அவன் பதில் கூறியாக வேண்டும்.

"கண்ணாலப் பொருத்தம் வந்து கூடிட்டா நாம பார்த்து நில்லுன்னாலும் நின்னுடப் போறதில்லெ. வான்னாலும் வந்துடப் போறதில்லெ. நம்ம கையிலே என்ன இருக்குது" என்று பட்டும் படாமலும் கூறினான்.

பசையற்ற நீருருளை கீச்சிட்டது. கொன்னவாய்க் குருவிகள் மரக்கிளையில் அமர்ந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தன. வேகமாய் வீசிய காற்றின் ஊதல் வேலாமரத்து இலைகளில் புகுந்து இசைமீட்டியது.

மாரப்பனிடமிருந்து அவனால் தனக்குச் சாதகமான பதிலை எதிர்பார்க்க முடியவில்லை. அவன் தன் மனதில் இருப்பதை இனிக் கூறிவிட வேண்டியதுதான். எப்பொழுதுமே பெண் பெற்றவர்கள்தான் இறங்கிப்போக வேண்டியுள்ளது.

"சித்தரைக்கு மேலே பயலுக்குக் கண்ணாலம் பண்ணறதா இருந்தா நம்ம ஒறம்பரையிலே ஒரு பொண்ணிருக்குது. வேல வெட்டிக்கெல்லாம் யாரும் கோளாறு சொல்ல வேண்டிய தில்லெ" என்று கூறியவன் திடீரென்று எறும்புக் குழிப்பழக்கம் இருந்த காலில் எறும்பு கடிக்கவும் சுடுகளியில் கை வைத்துவிட்டு உதறுபவன் போலக் காலை உதறி எடுத்துச் சொறிந்து கொண்டு "அப்படி ஏதாலும்னா ஒரு பேச்சு நம்ம காதுலே போடுண்ணா. சீரு செறப்பப் பத்தியெல்லாம் ஒண்ணும் ஓசிக்க வேண்டாம்" என்றான்.

மாரப்பனுக்கு இப்பொழுதுதான் அவன் ஏன் இப்படிச் சுற்றி வளைத்துப் பேசினான் என்பது புரிந்தது. அதுவுமில்லாமல் தன் மகனுக்கும் இப்படியொரு கிராக்கி இருக்கிறதென்பதும்

அப்பொழுதுதான் தெரிந்தது. எப்படியிருந்தாலும் கடனைத் தீர்க்காமல் தன் மகனுக்குத் திருமணம் முடிப்பது என்பதும் முடியாது. எப்பொழுதுமே ஒரு வீட்டுக்கு மருமகள் வந்துவிட்டாள் என்றால் சுயநலமற்ற குடும்ப பந்தத்தில் மகனுக்கும் பெற்றோர்களுக்கும் இடையில் சொத்துடைமையின் ஆழமான முரண்பாடுகள் பெரும்பாலும் எழுந்து விடுகின்றன. அப்படியொருகால் இங்கும் எழுந்து விட்டால் அவன் நிலை என்னாவது! அவனும் யோசிப்பதில் அர்த்தம் உண்டு தானே!

பாத்திகளுக்குத் தண்ணீர் கட்டிக் கொண்டிருந்த கந்தன் தண்ணீர் பாய்ந்து விட்டதென்று தகப்பனிடம் கூறி ஏற்றம் விடுமாறு கூறினான். பேசிக்கொண்டிருந்த செல்லப்பனும் "நானும் போயிட்டு வாரண்ணா!" என்று கூறிவிட்டு இடத்தை விட்டுப் பெயர்ந்தவன் மீண்டும் ஒருமுறை திருமண விசயத்தை ஞாபகப்படுத்தலாமா என்று சற்று நின்று யோசித்தான். 'நாம்தான் அதைப்பற்றி முனை காட்டி விட்டோமே. அப்புறம் பாப்போம்" என்று எண்ணியவனாக மீண்டும் மாரப்பனிடம் "போயிட்டு வாரண்ணா" என்று புறப்பட்டான்.

எல்லோரும் வேலை முடிந்து வீட்டுக்குப் புறப்பட கண் கருக்கும் நேரம் ஆகிவிட்டது. கந்தன் பறியையும், வடத்தையும் எடுத்துக் கொண்டு முன்னாடியே வீட்டுக்குச் சென்று விட்டான். மாரப்பனும், மாரக்காளும் மாட்டைப் பிடித்துக் கொண்டு பின்னாடி போய்ச் சேர்ந்தார்கள்.

எல்லோரும் வீடு போய்ச் சேருமுன்பே முத்தம்மாள் சோறாக்கிப் பருப்புக் கடைந்து பச்சைப்புளி கரைத்து வைத்திருந்தாள். எருமை மாட்டைப் பழனியம்மாளுக்குச் சீதனமாகக் கொடுத்துவிட்ட பின்னர் கரைத்த சோற்றுக்கு மோர் இல்லாதபடியால் பூண்டு சீரகம் மிளகாய் வைத்து அரைத்துக் கரைத்த புளிச்சாற்றுடன் கலக்கி ஊற்றிக் கொள்வது வழக்கம். அது அவர்களுடைய வேலைக்குச் சுலபமாகவும் இருந்தது.

எல்லோரும் சாப்பிட்டு முடித்துவிட்டு அவரவர் படுக்கைக்குச் சென்றுவிட்டனர். அமைதி நிறைந்த இரவில் புள்ளினங்களின் முணுமுணுப்பும், மனிதர்களின் இருமல் ஓசையும், அடைமூக்கு மாடுகளின் குறட்டை ஒலியும் எழுந்து இரவின் இயற்கைத் தன்மையைக் குலைத்துக் கொண்டிருந்தன.

குஞ்சுத் தாய்க் கோழி மீன் உச்சிக்கு வந்துவிட்டது.

அன்று பகலில் மாரப்பன் வயல் வேலையின் போது குமரிப்பெண்களுடன் பேசிய சல்லாபப் பேச்சும், மத்தியானம்

மாடுகளை மேய்க்கும் பொழுது ஆடுமேய்த்த சிறுவன் பெட்டையாட்டிற்குக் கிடாய் சேர்த்திய உணர்ச்சியைக் கிளர்த்தும் காட்சியும் அவன் மனதில் அமைதியின்மையை மூட்டித் தூக்கமில்லாமல் செய்து கொண்டிருந்தன. மகளுக்குக் கல்யாணம் செய்ததிலிருந்து அதிகமாக அவன் மனைவியை நாடுவது கிடையாது. மனைவியின் கண்டிப்பினாலும் இனி மேற்கொண்டு ஏதாவது கருவுற்றுவிட்டால் சமூகத்தின் முன்னால் அவக்கேட்டுக்கு ஆளாக வேண்டுமே என்ற மான உணர்ச்சியினாலும் அவன் முடிந்த அளவுக்குத் தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டான். அதுவும் இல்லாமல் ஓய்வற்ற உழைப்பின் அலைச்சலாலும், மனம் நிம்மதியற்ற தன்மையாலும் வறுமைக் கஷ்டத்தாலும் அவன் அந்த உணர்வுகளினின்றும் பெரும்பாலும் காயடிக்கப்பட்டிருந்தான். திடீரென்று அன்று நிகழ்ந்த அந்த எதிர்பாராத சம்பவச் சூழ்நிலைகளின் எதிரொலி அவன் மனதில் உணர்ச்சிமயமான கொந்தளிப்புகளைக் கிளறிவிட்டன. அக்னிக்குண்டத்தின் ஜுவாலைத் தகிப்புப் போல அவன் தேகாந்திரமும் தகித்துக் கொட்டியது. இந்த வயசிலும் இப்படியும் உணர்வுகள் எழக்கூடும் என்பதை அன்றுதான் அவன் உணர்ந்தான்.

அவன் மனதில் என்றும் நடக்காத ஒரு மனப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அவனால் தன் மனத்தை இனிக் கட்டுப்படுத்த முடியாது. ஒரு பெண்ணின் கதகதப்பு மிக்க ஆலிங்கனத்தில் ஐக்கியமாகாவிடில் ஒருக்கால் அவன் ரத்த நாளங்கள் வெடித்தாலும் வெடித்துவிடக்கூடும்.

மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு படுத்திருந்தவன் கட்டிலினின்றும் எழுந்து அமர்ந்தான். கட்டில் கிறீச்சிட்டு ஓய்ந்தது.

சற்றுத் தள்ளிப் போட்டிருந்த மகள் முத்தம்மாளின் கட்டிலைப் பார்த்தான். அவள் அயர்ந்து தூங்கிக் கொண் டிருப்பது மூச்சுவிடும் ‘புஸ் புஸ்’ என்ற சத்தத்திலிருந்து புலப் பட்டது. அதற்கடுத்துப் போடப்பட்டிருந்த மகன் கந்தனின் கட்டிலை உற்றுப் பார்த்தான். கட்டில் வெறுமையாயிருந்தது. கந்தனைக் காணவில்லை. அவன் மனம் திக்கென்றது. நடுச்சாமத் தில் அவன் எங்கு சென்றிருப்பான்?

சற்று நேரம் கட்டிலிலேயே அமர்ந்திருந்தான். ஒரு வேளை கந்தன் சிறுநீர் கழிக்க வெளியில் சென்றிருக்கவும் கூடும் என்ற

எண்ணத்தில் அப்படியும் அவன் வரக் காணோம். ஒரு விதத்தில் இந்த நேரத்தில் அவன் அங்கு இல்லாதது மாரப்பனுக்கு பரம திருப்தியாகவே இருந்தது. ஆளுக்காளான மகனை வைத்துக் கொண்டு கள்ளத்தனமாக மனைவியுடன்... அவனுக்கு நினைக் கவே கூச்சமாக இருந்தது. அவன் தன் மகன் இல்லாததை விரும்பினான்.

அவன் மனோநிலை சிற்றின்ப நினைவில் ஆழாமல் இருந்திருப்பின் அப்பொழுதே தன் மனைவியிடம் மகனைத் திட்டிக் கொட்டியிருப்பான். அந்தப் பசி எப்பேர்ப்பட்ட கடமைகளையெல்லாம் அற்பமாக்கி விடுகிறது.

பசி கண்ட பூனை அடுக்களையில் நுழைவது மாதிரி அவன் தன் மனைவியின் கட்டிலை நோக்கி வேகமாக நடந்து சென்றான். இதயத் துடிப்பு காதுக்கு ஏறி விட்டது போல் நரம்பு மண்டலத்தின் கூட்டு இயக்கம் செவிப்பறையில் பட்டென்று மோதி அறைந்து கொண்டிருந்தது.

மெதுவாக மனைவியின் கட்டிலில் சென்று அமர்ந்து அவள் மீது கையைப் போட்டான். தூக்கக் கலக்கத்தில் இருந்த அவளுக்கு அவன் கைப்பட்டது ஏதோ கூரையிலிருந்து மேலே விழுந்து விட்ட ஒன்றை விலக்குவதுபோலக் கையால் பிடித்துத் தூரத் தள்ளினாள். அப்புறம் சற்று நிதானித்துப் பார்த்த பின்னர்தான் தன் கணவன் அமர்ந்திருக்கிறான் என்பதை அறிந்தாள்.

அவன் அந்த நேரத்தில் மௌனமாகத் தன் மீது கையைப் போட்டவாறு அமர்ந்திருந்த நோக்கத்தைப் புரிந்து கொள்ள அவளுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. பூனையைக் கண்ட அடைக்கோழி கத்துவதுபோல அவனைப் பார்த்தவாறு 'என்ன' என்று தாழ்ந்த குரலில் கேட்டாள்.

"ஒண்ணுமில்லெ" என்று நிரடு தட்டிய குரலில் கூறியபடி தன் கைகளால் அவளது தலையையும் முகத்தையும் தடவிக் கொடுத்தான். அவன் சர்வாங்கமும் துடித்துச் சிலிர்த்தது

"நரியண்ணங் கோளாறு நடையிலியே தெரியாது" என்று மெதுவாகக் கூறியவள், இருட்டில் அமர்ந்து தன் தலையைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்த அவனது கையை விலக்கிவிட்டு "பேத்தி பேரன் எடுக்கற வயசிலியும் இந்தக் குறும்பு போகலியே" என்றாள்.

அவன் அன்பு குழைய அவள்மீது சாய்ந்தபடி "நீயும் தோட்டமுந்தானே எனக்கிருக்கிற ஒரே ஆறுதல். பகல்லியோ

என்ன மறந்து தோட்டங் காட்டுலே வேலை செய்யறே, ராத்திரி நேரத்திலே நீதானே எனக்கு நிம்மதியக் கொடுக்கணும், அது கூட இல்லின்னா எனக்கு அப்புறம் ஏது நிம்மதி?" என்று உருக்கமாகக் கூறினான்.

இதைக் கேட்ட அவள் மனது கரைந்து விட்டது. இத்தனை கஷ்ட நஷ்டத்திலும் சில வினாடிகளாவது தன்னை மறந்த நிலையில் இருக்க வைக்கும் ஒரு வாய்ப்பு இந்த உடலுறவு விசயந் தானே! அதையும் அவள் அவனுக்குக் கொடுக்க மறுப்பாளா னால் அது மன்னிக்க முடியாத விசயந்தான். ஆனால் அவள் அப்படிச் செய்யத் துணியவில்லை.

"ஆளுக்காளான பயல் முன்னாடி படுத்திருக்கும் போதா!" என்று அன்பும் நாணமும் குழைய ஏதோ திடீரென்று நினைவு வந்தவள் போலக் கேட்டாள்.

"அவனக் காணோம், கட்டில் சும்மா கெடக்குது" ஏதோ ஒரு மனத்திருப்தியோடு பதில் கூறுவது போல அவன் அவளுக்குக் கூறினான்.

ஆனால் அவனின் "இல்லை" யென்ற பதில் அவள் தலையைப் பிசைந்தது. நடுச்சாமத்தில் கண்ணாலம் செய்யாத ஒரு வாலிபப் பையனைக் காணோமென்பது அவ்வளவு சின்ன விசயமல்ல!

அவன்மீது தப்புக்காணும்தோதெல்லாம் சீறிவிழும் ாரப்பன் அதைப்பற்றித் துளிகூட ஆதங்கப்படாமலும், 'தற்றமடையாமலும் பேசுவது அவளுக்குப் புதிராக இருந்தது. ருக்கால் அவன் எப்படியோ கெட்டலைந்து போகட்டும் ன்று தன் கணவன் முடிவு செய்துவிட்டானோ? அப்படி ானால் அது குடும்பத்தின் அழிவு காலம்தான்.

தன் கணவன் தன்னிடம் இந்த விசயத்தை ஒரு சர்வ ாதரணமாகச் சொல்லியது எந்தக் காரணத்தைக் கொண்டு ருக்கும்? எந்தக் காரணமானாலும் கொஞ்சமும் பதட்டமோ, ணர்ச்சிவசப்படவோ அற்ற விசயம் அல்லவே? அவளால் தையும் யூகித்துக் கொள்ள முடியவில்லை. இப்படிப்பட்ட ரண்பட்ட போக்கை இன்றுதான் அவனிடத்தில் காண்கிறாள்.

"அவெ எங்கே போயிருப்பான்?"

"அந்தப் பறச் சிறுக்கியே பார்க்கப் போயிப்பான். இல்லெ...."

"அப்படின்னா வேறெ என்ன வெசயம் இருக்கு?"

அவன் தடுமாறினான். தன் போக உணர்வை முன்னிறுத்தி, அவள் கேள்வியினின்றும் அவளைத் திருப்புவதா அல்லது அவள் கேட்கும் கேள்விக்குப் பதில் கூறுவதா என்று சற்றுக் குழம்பினான். என்ன இருந்தாலும் ஒரு தந்தை என்ற நிலையில் அவள் கேட்கும் கேள்விக்கு உடன் விளக்கம் தராமல் இருக்க முடியவில்லை. அவன் தன் மகனைப் குறை கூறும் போதெல் லாம் அவள் தன் மகனுக்கு அனுசரணையாகப் போனதன் பலன் தான் இது என்று அவன் அவளுக்கு உணர்த்தக் கடமைப் பட்டுள்ளான். அதற்கு ஏற்ற தருணமும் இதுவே.

"பறைக்கல் வலசு சேனாபதிக் கவுண்டரு இருக்காரல்ல - அதுதா நம்ம பழைய முட்டாதரரு - அவருக்குத்தா அந்தக் காவேரி வாய்க்காலோரத்தில் உள்ள நூத்துக்கணக்கான ஏக்கரும் சொந்தம். இப்பத்தா காலம் ரொம்பவும் மாறிப் போச்சே. அப்பல்லாம் ஒரு பண்ணையிலே வேலைசெய்யும் ஒரு கூலியாளையோ, அடிமையையோ அடித்து சித்ரவதை செஞ்சாலும், கொன்னாலும் கேக்க முடியாது. இன்னிக்குச் சங்கம் சேத்திக்கிட்டு நம்ம கவுண்டரெ எதுக்கறாங்களாம். அதுவும் ராத்திரிநேரத்திலே சொல்லிக் குடுக்கறாங்களாம். இந்த தெள்ள வேரி நாயும் அங்கேதா போயி வருதாம்!"

"ஏ ராத்திரி நேரத்திலே கூட்டி அந்தக் கம்மனாட்டிக் கச்சிக் காரங்க சொல்லிக் குடுக்கணும்? பகல்லே கூட்டுனா என்ன வாம்?" என்றாள் ஒன்றும் புரியாதவளாக.

"நாயமான வெசயம் பேசுன்னா பகல்லே கூடணும். அக்ருமம் செய்யச் சொல்லிப் பேசுனா ராத்திரியிலே தானே கூடணும்? பிசாசுக்கு ராத்திரியும் பக்தகுரங்குக்கு பகலும்னு சும்மாவா சொல்றாங்க" என்றான்.

"கவுண்டரெ கொன்னு போடச் சொல்லித் தாராங்களா?" என்றாள் ஆதங்கமும் வேதனையும் தோனிக்க.

"கடசியிலே அப்படிக் கூடச் செய்வாங்க. இப்பக் குடுக்கற கூலி பத்தாதாம். எச்சாக் குடுக்கணுமாம். அவவெ முட்டுவளி போட்டுப் பண்ணை பாச்சல் வெச்சிருந்து பாத்தாத் தெரியும். கையகலநெலம் வச்சிருக்கற நமக்கே முட்டு வெளிச் செலவு கண்ணு முழி பிதுங்கிப் போவுது. பெரிய பண்ணையெல்லாம் எப்படித் தாக்குப் பிடிக்கும்? திருகைக்குள்ளே தொவரை அள்ளிப் போடறவனுக்கல்ல அததோட கஷ்டம் தெரியும்?" என்றான்;

"இதெல்லாம் உனக்கு ஆரு சொன்னது?"

"கோமாளி மாமே சொல்லுச்சு"

"எங்கிட்டெ நீ ஏ சொல்லவே இல்லியே"?

அவன் அவள் கேள்விக்குச் சூடாகப் பதில் சொல்ல விரும்பினான். அவளுடைய செல்லத்தினாலேதானே அவன் இவ்வளவு கெட்டான். அதை அவன் சொல்லப் போனால் அவர்கள் பேச்சு அத்துடன் முடிந்து சண்டையில்தான் நிற்கும். அதை அவன் விரும்பவில்லை.

அவன் சொன்னான்.

"மாங்கா காயாக இருக்கும்போது புளிக்கும். கனியும் போதுதா இனிக்கும். எதையும் சரியாப் புரிஞ்சுக்கறதுக்கும் ஒரு காலம் வரணும். சம்பா நெல்லெ குறுவைப் பட்டத்திலே போட்டா வெளையுமா? அப்படித்தா எந்த ஒரு வெஷயமும்"

அவன் அவளது தலையை வருடினான். அந்தப் பேச்சை இப்பொழுது விட்டுவிடு என்று கூறுபவன் போல அவள் கீழுதட்டை உருட்டிப் பிடித்து நிமிண்டி "மனுஷனோட ஆசைக்கு வயசு வரம்பு எங்கே நிக்கிறது?" என்றான்.

அவளோ ஏதோ தெரிந்து கொள்ளவேண்டிய பரிகாரம் காண வேண்டிய ஒரு பிரச்சனையான விஷயத்தை விட்டு விட்டுப் பத்துப் பேருக்கு முன்னால் நகைப்பிற்கும், நாணத்துக்கும் உட்படக்கூடிய செயலில் இறங்கப்போவது போல அவனுடைய செயலை உணர்ந்தாள்.

"இப்போ இது இல்லாட்டி உசிரே போயிடுமா?" என்று அவனைச் செல்லமாகக் கடிந்தாள்.

அவன் அதற்கு ஒரு பதிலும் கூறாமல் இலவம்பஞ்சு போன்று நைந்த அவளது மார்புக்கு வட்டில் முகத்தை வைத்து அணைத்தவாறு சிணுங்கினான். அதில் ஒரு குழந்தையின் பிடிவாதமும் தூய்மையும் இருந்தது.

"நா வாண்டான்னு சொல்லலே, மருமவன் எடுத்துப் பேரன் பெறந்துட்ட பொறவும் நாம இப்படி நடக்கறதாலே ஏதாச்சும் ஆயிட்டா அது பாக்கறவங்களுக்கு மானக்கேடாய் போயிடு மேன்னு சொல்லறே." என்று திடீரென்று ஏதோ ஒரு அடக்கப் பட்ட உணர்விலிருந்து விடுபட்டவள் போல அவனைத் தன் மார்பின் மீது இழுத்துச் சேர்த்து அணைத்தவாறு பெருமூச்சு விட்டாள்.

*அவன் அவள் பக்கம் ஒரு சேர இணைந்து படுத்தான். அவன் வெப்ப மூச்சு அவள் முகத்தில் தாக்க "நீ என் தங்கமல்ல" என்று அவளது காதில் கிசுகிசுத்தான்.*

*அவளோ நாணமும் கூச்சமும் கலந்த குரலோடு "ஏஞ் சொல்லமாட்டே; மானமில்லாமெ பேத்தி பேரன் எடுத்திட்ட பெறகும் உனக்கு எடங் குடுக்கறனல்ல?" என்று பொய்க் கண்டிப்புடன் கூறினாள்.*

*அதுதான் தாம்பத்திய வாழ்வின் ரகசியம் போலும்!*

# 22

விடியற்காலையில் மாரப்பன் எழுந்து கந்தனின் படுக்கையைப் பார்த்தான். பனிக்காலத்தில் நாய் படுத்திருப்பது போல் பன்னாடை போல் சுருண்டு போர்த்திப் படுத்திருந்தான்.

அன்று மாரப்பன் அவனை எழுப்பவும் இல்லை; வேலை சொல்லவும் இல்லை.

பொழுது விடிந்ததும் கந்தன் தூங்கிக் கொண்டிருந்தான். அது என்றைக்கும் மாறான நிகழ்ச்சி. தூக்கங்கெட்ட அலைச்சலால் அவன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான்.

மாரக்காளும் மகன் மீது துவேசம் காட்டிவிட முடியுமா? ஒருகால் தந்தை ஆயுள் பரியந்தமும் மகனிடம் துவேசம் பாராட்டியே இருந்து விடலாம். தாயால் அப்படி இருக்க முடியுமா? ஆவேசத்தில் எழும் கோபத்தினால் சில நாட்கள் இருக்கலாம். என்றைக்கும் அது முடியாதே!

தாயின் பலமும், பலவீனமும் அங்குதான் உள்ளது.

ஒரு தரப்பு அடித்தால் இன்னொரு தரப்பு அணைக்க வேண்டும்.

அவள் அவனன்டை சென்று "தம்பி! கந்து" என்று செல்லமும் எரிச்சலும் நிறைந்த தொனியில் தட்டிக் கூப்பிட்டாள்.

சுருண்டு படுத்திருத்தவன் காலை நீட்டி விறைத்துக் கைகள் இரண்டையும் தலைக்குமேல் நீட்டி முறுக்கி நெளித்துக் கொட்டாவி விட்டபடி கண்விழித்துப் பார்த்தான். பொழுது கிளம்பி இளவெயில் லேசாகப் பூமிப் பரப்பில் படர்ந்து கொண்டிருப்பதைக் கண்டான்.

அவன் விழித்துக்கொண்டதைக் கண்ட மாரக்காளும் அவனிடமிருந்து சமையல்கட்டுப் பக்கம் புறப்பட்டபடி "வேலையுண்டு வெட்டியுண்டுன்னு இருந்தோம்னா நேரங்காலத்திலே படுத்து நேரங்காலத்திலே எழுந்திருக்கச் சொல்லும், காத்தி மாசத்து காராட்டு நாயாட்ட விடிய விடிய ஊரு சுத்தனா

தூக்கமும் கெடும் வேளை கெட்ட வேளையிலே தூங்கவும் சொல்லும்" என்று பூடகமாகச் சொன்னாள்.

கந்தன் அதைப் புரிந்து கொள்ள முடியாத பக்குவம் கொண்டவனா என்ன?

அதனால்தான் தந்தை என்றும் போலத் தன் காலைக் கடமைகளைச் செய்யத் தன்னைத் துயில் எழுப்பிவிடவில்லை போலிருக்கிறது என்று யூகித்தான்.

அவன் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக எழுந்து கட்டிலை எடுத்துச் சாத்திவிட்டு மாட்டுக் கட்டுத் தரைப்பக்கம் சென்றான். வழக்கத்துக்கு மாறாக அவனது வேலை செய்யப் பட்டிருந்தது. அவனுக்கு இப்பொழுது எல்லாம் பட்டவர்த்தனமாகப் புரிந்துவிட்டது.

அவன் தோட்டத்தை நோக்கிச் சென்றான்.

மசக்கலிலேயே கோமாளிக் கிழவருடன் தோட்டத்துப் பக்கம் போன மாரப்பன் வீட்டிற்குத் திரும்பிவரும் வழியில் எதிர்த் திசையிலிருந்து மகன் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். அவனை நேரில் சந்திக்கக் கூடாது என்ற மனப்புழுக்கத்தோடு வேறுதடம் போட்டு வீட்டுக்குக் கோமாளிக் கிழவருடன் சென்றான்.

கோமாளிக் கிழவருடன் வீட்டுக்கு வந்தவன் மாரக்காளைப் பார்த்து "இந்தா பாரு! இந்தக் காயிதம் வேலாமரத்துப் பொறட்டிலே சொருகி வச்சிருந்தது. கொடுவாக் கத்தியே ரண்டு நாளைக்கு முந்தி அந்தப் பொறட்டிலே வச்சிட்டு வந்திருந்தே. காத்தாலப் போயி அதெ எடுக்கக் கையுட்டா கொடுவாளோடு சேர்ந்து இந்தக் காயிதமும் வருது. நாம என்ன படிச்சா இருக்கிறோம், எல்லாந் தெரியுறதுக்கு? மாமன் பாத்துட்டுச் சொன்னாங்க. இது நம்ம கவுண்டரெ எதுக்கற சங்கத்துக்காரங்க பேப்பராம். இதுலே நம்ம கந்தன் 'பாப்பாயி பாப்பாயி' ன்னு எடமில்லாமே எழுதி வச்சிருக்கிறானாம். இவனாலே நம்ம குடும்பம் அழிஞ்சாப்பலேதான்" என்று அவனுடைய நிலையை அறிந்து கொள்வதற்கு விடிய விடியத் துடித்துக் கொண்டிருந் தவன் போலக் காலையில் எழுந்தவுடன் என்றுமில்லாத வழக்கப்படி கோமாளிக் கிழவருடன் சென்று வந்ததும், அவன் கிரகித்துக் கூறும் செய்திகளும் புலப்படுத்தின.

அப்பொழுதும்கூட தாயுள்ளம் மகன் மீது குற்றங் காணத் தயங்கியது. "சந்தச் செலவுப் பொட்டலங்கட்டிய காகிதமா இருந்திருக்கும். ஆராவது வெத்தலபாக்கும் மடிச்சுக்கிட்டுப்

போயி வச்சிருப்பாங்க" என்று நம்பக்கூடிய முறையில் காரணத்தோடு கூறினாள்.

"அப்படியும் இருக்கலாம். ஆனா அவனோட நடத்தையெ ஒத்திட்டுப்பாத்தா அதெ நம்ப வழியில்லாமெ இருக்குது" என்ற மாரப்பன் "அவனொட யோக்கியதையே நீங்க சொல்லுங்க மாமா" என்றான்.

கிழவர் எதைச் சொல்வார். இருவர் மத்தியிலும் எதைச் சொன்னாலும் ஏதோ ஒரு தரப்பில் சினத்தை மூட்டவே செய்யும்.

"வாலிப வயசிலே எல்லாரும் அப்படித்தா இருப்போம். ஒரு காலுக்கட்டு கட்டிட்டா, குடும்ப பாரம் தலைக்கேறிட்டா எல்லாம் சரியாயிடும். இதப்போயி பெரிசு படுத்திக்கிட்டு பேசறதாலே நல்லதாயிடப் போறதில்லை. எங்காதுக்கு எட்டுனதெ உங்கிட்டெ எதுக்குக் காலுக்காட்டுனேன்னா காலாகாலத்திலே செய்ற கடமையைச் செஞ்சுடுங்கன்னு புரிய வைக்கறதுக்காவத்தா" என்று "இது ஒரு பெரிய விசயமாய் புலம்பிக்கொள்ள வேண்டியதில்லை" என்று சமாதானம் கூறுபவர் போலக் கூறினார்.

இதைக் கேட்டதும் தனக்குச் சாதகமான பதில் கிடைத்து விட்டது போல் மகிழ்ந்த மாரக்காள், "அதத்தா நானும் சொல்லறேன்! உங்க மருமவனுக்கு ஏறுனாத்தானே" என்றாள்.

"தேரைத் தேங்காயானாலும் ஒடைக்காதிருக்கிற வரையிலும் அதுக்கு மவுசுண்டு. அதப்போல பிள்ளைக நமக்குத் தெரியாதுன்னு செய்யற தவறை பிள்ளைகளுக்கு முன்னாலே தெரிஞ்ச தாக்காட்டிக்கிட்டுச் சண்டையிடறதாலே நன்மையாயிடறப் போறதில்லே. தெரியாதமாதிரி காட்டிக்கிட்டுச் செய்ய வேண்டியதச் செய்யணும்" என்றார் கிழவர்.

அது அவர்களுக்குச் சரியாகப் பட்டிருக்க வேண்டும். அதற்கு மேல் அவர்கள் அதைப் பற்றிப் பேச்செடுக்கவில்லை.

# 23

கந்தன் இப்பொழுது மிகவும் மிகவும் குழம்பினான். அவனுடைய பெற்றோர்கள் அவனுக்கு விரைவிலேயே திருமணம் முடிக்க ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

அவன் பாப்பாயியை இனி மறக்க முடியாது. அதை விடவும் அந்தச் சேரி மக்கள் பாறைக்கல் ஜமீன்தாரை எதிர்த்து நடத்தும் வீரமிக்கப் போராட்டம் இருக்கிறதே, அது அவனை மிகவும் ஈர்த்துவிட்டது. எந்தவிதச் சொத்துமில்லாமல் உழைப்பை மட்டுமே கொண்ட அவர்கள் ஒரு பெரும் நிலப்பிரபுவை எதிர்த்து நிற்கும் சக்தியை ஊட்டிய தீட்சண்யம் மிக்க அந்தக் கொள்கை அவனைக் கவர்ந்தது. அதற்கும் மேலாக அந்தச் சேரி மக்களை வழி நடத்திச் செல்லும் அந்த மனிதரின் தொடர்பு அவனைச் சுய சிந்தனையாளனாக்கியது.

முதன்முறை சந்தித்தபோது அந்த மனிதர் - சம்பந்தம் கூறியது அவன் நினைவில் அப்படியே பதிந்துவிட்டது. அந்த முதல் சந்திப்பில் அவர் அந்தச் சேரி மக்களிடம் "நீங்கள் இழக்கப் போவது இந்த உலகத்தில் ஒன்றுமே இல்லை - உங்களைப் பிணைத்திருக்கும் அடிமைத்தளையைத் தவிர" என்ற வார்த்தைகள் அவனை மிகவும் சிந்திக்க வைத்துவிட்டது. இந்த உலகத்தில் அவன் பெற்ற முதல் ஞான வெளிச்சம் அதுவே.

அன்றிலிருந்து அவன் மனதிலும் மூளையிலும் ஒரே அரிப்பு. இந்த உலகத்தில் நாம் ஒன்றுமே தெரியாமல் வைக்கப்பட்டுள்ளோம் என்ற தவிப்பு.

சம்பந்தம் அந்தச் சேரி மக்களின் பிரச்சனை சம்பந்தமாக அவர்களைக் கூட்டி விவாதிக்கும்போதும், அவர்களுக்கு அரசியல் விளக்கம் கொடுக்கும்போதும் அவன் அங்கு செல்லத் தவறுவதில்லை.

அந்தத் தொடர்பின் பலன் அவன் இந்த உலகத்தைப் புரிந்து கொள்ள வகை செய்தது. உழைப்பவர்களின் கஷ்டங்களுக்கெல்

லாம் பூர்வஜென்மப் பலனோ, தலைவிதியோ, கடவுள் விட்ட வழியே அல்ல என்பதை அறியும்படி வைத்தது. சொத்து பத்துக்கள் ஒரு சிலரிடம் குவிந்து கிடப்பதே இந்த கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் எனக் கூறி தெளிவடையச் செய்தது.

அவனுக்கு இப்பொழுது உலகத்தைப் பற்றிக் கொஞ்சம் தெரியும். சில விஷயங்களைக் கேட்டும், படித்தும் புரிந்து கொள்ள முற்பட்டு விட்டான்.

'எனக்குத் தெரிஞ்ச அளவு விஷயங்கள் இந்த நாட்டில் சாதாரண ஜனங்களுக்குத் தெரிஞ்சுட்டா, அப்புறம் கஷ்டமெதுக்கு இருக்குது?' என்று அவன் அடிக்கடி நினைத்துப் பார்ப்பான். 'ஜனங்க அந்த அளவுக்கா இருக்கறாங்க? எத்தனையோ படிச்சவங்களும் இருக்கிறாங்களே. அவுங்க இதப்பத்தியெல்லாம் பேசுறதில்லையே? யாரோ ஒரு சம்பந்தம் தானே இதையெல்லாம் சொல்லறாங்க" என்று சிந்திப்பான்.

அந்தச் சேரி மக்களிடத்தில் சம்பந்தம் அடிக்கடி கூறும் எத்தனையோ விஷயங்களில் மற்றொரு விஷயமும் அவனை உத்வேகப்படுத்தியது. "இந்த உலகத்தின் சகல வளர்ச்சியும் உங்களால்தான். உங்கள் கைகளை அசைக்காமல் கட்டிக் கொண்டு அமர்ந்து விட்டீர்களானால் உலக வாழ்க்கையே இயங்காமல் நின்றுவிடும். உங்கள் பலரின் துயரில்தான் சிலர் சுகிக்கிறார்கள். இனி நாங்கள் துயர்பட மாட்டோம் என்று உழைப்பவர்கள் ஒன்றாக எழுந்துவிட்டால் உங்கள் துயரத்துக்கு முடிவு காலம் ஏற்பட்டுவிடும். யானைக்குத் தன் பலம் தெரிவதில்லை. தெரிந்துவிட்டால்..."

இப்படி அவன் எத்தனையோ விஷயங்களைக் குறுகிய காலத்தில் தெரிந்து கொண்டுவிட்டான்.

ஒரு நாள் அவன் சம்பந்தத்திடம் தன் காதல் விவகாரங்களைக் கூறினான். தன் பெற்றோர்களின் மனநிலையையும் கூறினான். அந்த அளவிற்கு அவன் சம்பந்தத்திடம் பழகினான்.

அதற்கு சம்பந்தம் கூறினார்:

"சொத்துடைமை அமைப்புதான் ஜாதிகளைப் படைச்சது. சுரண்டறவங்க மக்களை வேற்றுமைப்படுத்தி வச்சுக்கிட்டெ சுரண்டறதுக்கு இடையூறு இல்லாமெ இருக்க ஜாதி தேவைப்படுது." சுரண்டறவங்க கவுண்டராக இருந்தாலும் பறையராக இருந்தாலும் சுரண்டறதிலே வித்தியாசப்படறதில்லை. சுரண்டப்படுபவர்கள் கவுண்டராக இருந்தாலும் பறையராக இருந்தாலும் சுரண்டப்படறதிலே சலுகை பெற்றிடறதில்லே.

எல்லாத்துக்கும் இந்தச் சொத்துடைமை அமைப்புதான் காரணம். சொத்து மனுச வாழ்க்கையிலே முதன்மை வகிக்கிற நிலை போயி, உழைப்பு முதன்மை வகிக்கிற நிலை வந்துட்ட துனா ஜாதி மதமெல்லாம் இருக்கிற இடந்தெரியாமப் போயிடும்.

"நா ஒண்ணு கேக்கறே, இந்தச் சேரியிலே ரத்தமும் சதையுமா கவர்ச்சியா இருக்கற எந்த ஒரு பொண்ணும் இந்த மேல் ஜாதிப் பண்ணையாருங்க கண்ணுலே பட்டு தப்பிச்சுப் போயிருக்க முடிஞ்சிருக்கா? இங்கெல்லாம் ஜாதி வித்தியாசம் வந்து இருக்கிறதில்லெ. தங்க சுகத்துக்கும், வருமானத்துக்கும், சுரண்ட லுக்கும் ஆபத்து வரும்போதுதான் ஜாதி மதமெல்லாம் வந்து நிற்கும். ஜாதிங்கறது சொத்துடைமைச் சமுதாயம் படைச்சு விட்ட சாபத்தீடு" என்று கூறினார்.

அதற்குமேல் அவன் அவரிடத்தில் தன் காதல் விஷயங் களைப் பற்றி விவாதிக்க விரும்பவில்லை.

அவன் மனதிலிருந்த சஞ்சலங்களும், போராட்டங்களும் கொஞ்சம் கொஞ்சமாக அகன்று வந்தன.

பாப்பாயியைத் திருமணம் செய்து கொள்வதில் அவன் முன்னால் நின்ற பிராதனமான இடையூறுகள் தன் பெற்றோ ரிடமுள்ள சொத்துத்தான். இப்பொழுது அவன் அதைப்பற்றி லட்சியம் செய்யவில்லை.

தன் கரங்கொண்டு உழைத்துச் சாப்பிட முடியும் என்ற திடம் அவனுக்கு ஏற்பட்டு விட்டது. தாழ்ந்த ஜாதிப் பெண்ணைக் கட்டிக் கொள்கிறோமோ என்ற கௌரவ நிலை எழும் அழுக்காறும் அவனை விட்டோடிவிட்டது. இருள் மயமான மூடச் சம்பிராயத்தினின்றும், பிடிப்புகளினின்றும் கொஞ்சங் கொஞ்சமாக விடுபட்டு வெளியேறத் துடிக்கும் துடிப்புள்ள இளைஞனாக அவன் உருவாகிவிட்டான்.

மனங்கிளர்த்தும் காதல் உணர்வெழுச்சி அவனை இப்படிப் பட்டவனாக உருவாக்கியதோ? வாழ்க்கை நிர்ப்பந்தத்தான் அவனை இப்படிப்பட்டவனாக உந்தித் தள்ளியதோ?

அது எப்படியாக இருந்தால் என்ன? இப்பொழுது அவன் ஒரு புதிய மனிதன்.

## 24

இதம் நிறைந்த காலை நேரம். ஈரம் கலந்த காற்றில், புகைபடர்ந்து கூரைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்தது. பெண்கள் வாசலைப் பெருக்கிச் சாணம் தெளித்துக் கொண் டிருந்தனர்.

மாரப்பனின் மகள் பழனியம்மாள் வீடு இன்னும் கூட்டப் படாமல் குப்பையும் கூளமுமாய்க் கிடந்தது. தரையில் தண்ணீ ரும் குழம்பும் சோறும்பட்டு அழுக்குப் படிந்து புள்ளி புள்ளி யாகக் காட்சியளித்தது. ஈக்கள் தரையெங்கும் மொய்த்துக் கொண்டிருந்தன. வீட்டில் புளித்த மோரின் வாடையும் கெட்டுப்போன பருப்பின் நெடியும் மூக்கை மயமயத்தன.

அன்று தோட்டத்தில் குத்துக் கடலைக் காடுகளை வெட்ட நேரத்தோடு வீட்டு வேலைகளை முடித்து விட்டுத் தோட் டத்துக்குப் போக வேண்டுமென்று முதல் நாள் இரவில் படுக்கப் போகும்போது எண்ணிக்கொண்டு படுத்த பழனியம்மாள், களைப்பின் மிகுதியாலோ என்னவோ விடியும் வரையில் படுத்திருந்துவிட்டாள். எப்பொழுதுமே நேரத்தோடு எழுந் திருக்கும் அவள் மாமியார் கருப்பாயி, மருமகள் பேரில் கொஞ்ச நாட்களாகக் காட்டி வந்த வெறுப்பின் மிகுதியால் ‘எந்நேரம் தான் எழுந்திருப்பாளோ பார்க்கலாம்’ என்ற வேக்கட்டுடனும், இதன் மூலம் சுப்பன் மனைவியைக் கடிந்து கொள்வதால் எழும் மனக்கசப்பையும் பார்த்து சந்தோசப்படலாம் என்ற பொறாமை யுடனும் பழனியம்மாளை எழுப்பி விடாமல் அவளும் விழித்தபடி கட்டிலில் படுத்திருந்தாள்.

பளபளவென்று கிழக்க வெளுக்க எழுந்த பழனியம்மாள் வாரிச்சுருட்டி எழுந்தபடி ‘நெதானமிழக்க மூதேவி வந்து எப்படி அண்டிக்கிச்சு’ என்று ஆச்சரியம் தொனிக்கத் தனக்குத்தானே கேட்டுக்கொண்டு வீட்டினுள்ளிருந்து வெளியே வந்தாள்.

பகற்பொழுதில் இருண்ட மரப்பொந்தில் உட்கார்ந்திருக்கும் ஆந்தையைப் போல, பழனியம்மாள் வீட்டினுள்ளிலிருந்து

எழுந்து வந்த சத்தத்தைக் கேட்டதும் கட்டிலில் சுருண்டு படுத்திருந்த கிழ மாமியார் பொடக் பொடக்கென்று பார்த்தாள். அந்தப் பார்வையில் விஷமமும் வன்மமும் சுடர்விட்டன.

விழித்துக் கொண்டிருந்த மாமியாரைப் பார்த்த பழனியம்மாள் 'ஏ, அத்தே, முன்னாடியே எழுப்பியுடறதுதானே?' என்று கபடமற்ற அனுசரணையுடன் கேட்டாள்.

வெந்து குமைந்து கிடந்த மாமியார் "அடி ஆயா! நீ எப்படிப் படுத்திருந்தா எனக்கென்ன! தெறமான புருஷங் கட்டிக்கிட்டவ எப்படி வேணும்னாலும் படுத்திருப்பா! வீட்டிலிருக்கிற விடுதி மாட்டப்பாத்து வண்டியிலே போற வத்த மாடு நெனக்கறதுக்கு என்ன இருக்கு?" என்று நீட்டி நெளித்து நெட்டூரம் பேசினாள்.

அவளின் எண்ணப்போக்கைப் புரிந்துகொண்ட பழனியம்மாள் அவளிடம் ஒன்றும் பேசாமல் முகம் கழுவி, வாய் கொப்பளித்துக் கொண்டு, சமையலுக்காக உலைத்தண்ணீர் ஏற்றி அடுப்பில் வைத்து நெருப்பு மூட்டினாள். பகல்சோற்றுக்கான சோளத்தை எடுத்துக் குண்டாவில் போட்டு அரித்து இடிப்பதற்காக செக்கில் போட்டாள். முதல் நாள் உபயோகப் படுத்திய பாத்திர பண்டங்களைச் சுத்தம் செய்ய வெளியில் கொண்டு வந்து வைத்தாள். அப்பொழுதுதான் கருப்பாயி எழுந்து இடுப்புச் சேலையை உருட்டிக்கட்டி முந்தானைத் தலைப்பில் மண்டாக்கு கட்டிக்கொண்டு வாசல் தெளிப்பதற்காகச் சாணம் எடுத்துவர கட்டுத்தரைக்குச் சென்றாள். அப்பொழுது ஒரு வாலிபன் அவ்வழியாகத் தண்ணீர் இறைப்பதற்குப் பிடித்துச் சென்ற இரண்டு பசுமாடுகள் மூத்திரம்விட ஆரம்பித்தன. அதைக்கண்ட கருப்பாயி அதன் பக்கம் ஓடிச் சென்று இரண்டு கைகளையும் ஏந்தி வெதுவெதுவென்றிருந்த சுடு மூத்திரத்தைப் பிடித்து முகம் கழுவி உள்ளுக்குள் ஒரு மிடறு குடித்தாள்.

இதைக்கண்டு ஆச்சரியமுற்ற அவ்வாலிபன் 'என்னம்மா பசு மாட்டு மூத்திரத்தைக் குடிக்கறே' என்று கேட்டான்.

திகைப்புமிக்க அவன் குரலைக் கேட்ட கருப்பாயி "ஒலவத்திலே இருக்கிற நூத்தியெட்டு வெசாதியையும் தீக்கற சக்தி அதுக்கிருக்குது. ஒடம்பிலே எவ்வளவு சூடு இருந்தாலும் எட்டு நாளைக்குப் பசுமாட்டு மூத்திரத்தை விடியக்காத்தாலே வெறு வவுத்துலே குடிச்சுவந்தா ஒடம்பு குளுகுளுன்னு ஆயிடும். அதுக்கு அவ்வளவு சக்திருக்குதாம் சத்து" என்றாள்.

இதைக்கேட்ட அவ்வாலிபனுக்கும் ஒரு பக்கம் வியப்பும், மறுபக்கம் அதன் சூட்சுமத்தைத் தெரிந்துகொள்ள வேண்டு மென்ற ஆவலும் மேலோங்கி நின்றன. அவனுக்கு அடிக்கடி மூத்திரம் விடும்பொழுது எரிச்சலும் கண் பொங்குதலுமாக இருந்தது. அதுவுமில்லாமல் வாயில்வேறு புண் ஏற்பட்டுச் சாப்பிட முடியாமல் தொந்தரவும் கொடுத்து வந்தது. பார்த்த வர்கள் உஷ்ணத்தினால் வருவது என்றும், வாரத்துக்கு இரண்டு முறை எண்ணெய் தேய்த்தால் போய்விடும் என்றும் கூறினர். அந்த விதமாக அவன் செய்தும் தீரவில்லை. இருந்தாலும் உடல் உஷ்ணம் சம்பந்தமாக யாராவது மருந்து சொல்லி விட்டால் போதும் அதைக் கேட்கத் தவறமாட்டான்.

"ஆமாம் ஆயா! எனக்கு அடிக்கடி சூடு கண்டுக்கிட்டுக் கண்ணுப் பொங்குது. அதுவுமில்லாமே வாயிலே வேற புண்ணு வந்து சோறு திங்கறதுக்கு முடியாமே தொந்தரவு பண்ணுது" என்று வாயைத் திறந்தபடி கருப்பாயியிடம் காட்டினான். அவளுக்கு ஏதோ வைத்தியத்தில் அதிகப்படியான பரிச்சயம் இருக்கும் என்ற நினைப்பில்.

கருப்பாயியும் அதைப்பார்த்துவிட்டு, "அய்யய்யோ என்று நாக்கைக் கொடுக்கிக் கொண்டு செருப்புக்கு ஆணி அடிச்சாப் பலையல்ல நாக்கிலே புண்ணு எந்திரிச்சுக் கெடக்குது. இது உள்சூடு. கொடலே வெந்து வாய்க்கு வீசிட்டுது" என்று கூறி பசுமூத்திரத்தால் முகத்தைக் கழுவிக்கொண்டே ஈரத்தை முந்தானைத் தலைப்பால் துடைத்துக்கொண்டாள். பசுமூத்திரத் தின் இளஞ்சூடும் நெடியும் அவளுக்கு உற்சாகம் மூட்டியிருக்க வேண்டும். இன்றேல் சற்று நேரத்துக்கு முன் எள்ளும் கொள் ளும் வெடிப்பது போல முகத்தை வைத்திருந்தவள் இப்படிப் பேசுகிறாள் என்றால், காரணம் இருக்க வேண்டுமல்லவா?

"அதுக்கு என்னாயா பண்றது?"

"அதுக்கொரு சுலபமான மருந்திருக்குது. காசுபணம் செலவு பண்ண வேண்டியதில்லெ. நம்ம சுப்பனுக்கு அப்படிப் போன வருசத்திலே உனக்காட்ட வாய்ப்புண்ணு வந்து தடுமாறிப் போயிட்டான். அப்பொ எங்கியோ போயிட்டு வந்த நம்ப சம்பந்தியூருக் கோமாளி அப்பொ இதப் பார்த்துட்டு ஆட்டு ஒதப்பிய எடுத்துப் புளிஞ்சு ஒரு அரப்படிக்குக் குடிச்சா நாலு நாள்ளே சருவாக் காஞ்சு போயிடும்னு சொன்னாரு. அப்படியே செய்ய, சொன்னபடியே நல்லாப்போச்சு" என்று அனுபவ ரீதியான வெற்றிக் களிப்போடு கூறினாள்.

"ஆடறுக்கற அன்னைக்குத்தானே ஓதப்பி கெடைக்கும். அதுக்காக ஏம் பார்த்துக்கிட்ட இருக்கணும். நம்ம ஊரு சந்தையன்னைக்குக் கசாப்புக்கடை சாயபுக்கிட்டே சொன்னா எடுத்துத் தாரான். அதுவுமில்லாமெ பாடங்கூடப் போட்டுக் குடுப்பான். அது இன்னுந் தெடமாப் போச்சு" என்றாள்.

இதைக் கேட்டதும் அவனுக்கு வேறு ஒரு நினைவும் வந்தது. அவனுடைய தாயார் கறி எடுப்பதென்றால் எப்பொழுதுமே அங்குக் கூடும் திங்கட்கிழமைச் சந்தையன்று கசாப்புக்கடை வைக்கும் கனி சாயப்பிடம் தான் எடுப்பது வழக்கம். காரணம் பாடம்போட்ட சாயபுவினுடைய கறி ருசியாக இருக்குமென்று கூறுவார்கள்.

"சரியாயா! அதுவும் நல்ல ஓசனைதா" என்று கூறி, ஏத்தப் புடிக்க நேரமாச்சு. நீ சொன்னபடியே செஞ்சு பாக்கறே" என்று மாட்டை நடத்தியவாறு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான்.

தான் சற்றுச் சோம்பலாக இருந்தாலும் வித்தியாசம் காட்டாமல் ஓடியாடி வேலை செய்த கருப்பாயி கொஞ்ச நாளாகவே வேலையிலே மெத்தனம் காட்டுவதும், எடுப்பாகவும் இகழ்ச்சியாகவும் பேசி வருவதும் பழனியம்மாளுக்குப் புரியாமலில்லை. தன் மகளுக்கு எவ்வளவு சீர் கொடுக்கிறாளோ அதுபோல இன்னொரு பங்கு சீர் சேர்த்துத் தன் மருமகள் கொண்டுவர வேண்டுமென்று கருப்பாயி எதிர்பார்த்தாள். முதன்முதலில் பேரன் பிறந்த பிரியத்தில் கொஞ்சகாலம் சந்தோசமாக இருந்துவந்தாள். நாள் செல்லச் செல்ல தன் மகளுக்கு ஏற்படும் சிரமத்தின் பாரத்தை மருமகள் சுமக்கட்டும் என்ற முடிவுக்கு வந்து அவளுக்கு மறைமுகமாகத் தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தாள்.

அத்தனையையும் பழனியம்மாள் பொறுத்துக் கொண்டு பேசாமல் இருந்து வந்தாள். இரண்டொரு நாட்களாகக் கருப்பாயி தன் மருமகளை வெறுப்பது அதிகரித்துக் கொண்டு வந்தது. அதன் பிரதிபலிப்புத்தான் பழனியம்மாள் அவசர அவசரமாக வேலை செய்து கொண்டிருக்கும்போதுகூட வழக்கத்துக்கு மாறாகக் கருப்பாயி வேலை நேரத்தில் சாவதானமாகப் பேசிக் கொண்டிருப்பது.

கருப்பாயினுடைய மனோநிலையைப் புரிந்து கொண்டுங்கூட நேரங்காலத்துடன் தோட்டத்துக்குப் புறப்பட வேண்டும் என்னும் பதைப்பில் "பயெ வவுறு பசிக்குதுன்னு அழுவறா அத்தெ. பழசு கொஞ்சம் போட்டு வையி. நா அதுக்குள்ள

வட்டிச் செம்பு விளக்கிட்டு வந்திடறே" என்று கூறிச் சேலையின் முன்தளவைத் தூக்கி இடுப்பில் செருகிக் கொண்டு பாத்தி ரத்தை எடுத்துச் சாம்பலால் விளக்க ஆரம்பித்தாள். மட்டை யுரித்த வாழைத்தண்டு போல ஒளிபடாத அவளின் தொடைகள் இளவெயிலின் பிரகாசத்தில் மஞ்சள் வண்ணமாக மினுமினுத் தது. சாம்பலும் பித்தளைப் பாத்திரங்களின் களிம்பும் கலந்து ஒரு வகை நெடி காற்றில் கலந்து எழுந்தது. கருப்பாயி வீடுகூட்டி அடுப்பில் தள்ளிய குப்பையிலிருந்து உப்பு சடச்சட என்று பொரிந்தது. மிளகாய் கரிந்து மூக்கைக் கமறியது. அடுப்பிலிருந்து பின்னர் ஒருவகைச் சுவையற்ற வாசனை எழுந்தது.

மிளகாய்க் கருகலின் கமறல் கருப்பாயினுடைய மூக்கை அறுக்க இருமிக்கொண்டு தும்மினாள். "வேதியிலெ போன முண்டெ எவளோ திட்டறா!" என்று 'அவலை நினைத்து உரலை இடித்தது போல' மருமகளை மனதில் நினைத்துக் கொண்டு அடுப்புக் கமறலைச் சாக்காக்கிக் கொண்டு திட்டினாள்.

பருப்புப்போட்டு பிணைந்த பழைய சோற்றை இரண்டுவாய் அள்ளிப்போட்டு விழுங்கிய பையன் "ஆயா, எனக்கு இதுலே மோரூத்து" என்று சிணுங்கினான்.

எப்படியாவது மருமகளைச் சண்டைக்கு இழுக்க வேண்டு மென்று எண்ணியிருந்த கருப்பாயி, பேரன் மீது வைத்திருந்த பேரன்புக்கு விரோதமாக, "எரப்பானி முண்டெ பெத்தது என்னென்ன பண்ணுது. பருப்புச் சோத்துக்குள்ளே கொண்டு போயி மோரூத்தணுமாம் மோரு." என்று திட்டிக்கொண்டு மோரை எடுத்து வட்டிலில் ஊற்றினாள்.

தன்னை இரப்பானி என்று கூறிய மாமியாளின் பேச்சு பழனியம்மாளுக்கு நெஞ்சைப் பிய்த்துக் கொண்டு நின்றது. கணவன் வீட்டுக்கு வந்த இந்த நான்கு வருடத்தில் பகிரங்கமாகத் தெருவிற்கு வந்து மாமியாருடன் சண்டை போடாமல் இருந்து விட்டு இனிமேலா அப்படிச் செய்வது என்று பொறுத்துப் போகப்போக அவள் அதை நிதானித்ததாகத் தெரியவில்லை. இருந்தாலும் பழனியம்மாள் அதைக் கேட்டுக்கொண்டும் கோபத்தை ஆற்றிக் கொண்டாள்.

பருப்போடு மோர் ஊற்றியும் அவன் அதைச் சரியாகச் சாப்பிடாமல் கசச்கசவென்று நொறுங்கப் பிசைந்து வைத்து விட்டு"ஆயோவ், எனக்கு வாண்டா. சோளச்சோறுதா வேணும்" என்று அடுப்பில் கிண்டி மூடியிருந்த சோளக் களிச்

சட்டியைக் காட்டியபடிக் கூறினான். கருப்பாயினுடைய பொசு வித்தனத்துக்கு ஏற்ப அவனுடைய செய்கைகளும் தூபமிட்டன.

"நீ என்னென்ன பண்ணறே? உன்னைக் கொண்டு போயி தண்ணியில்லாத காட்டிலே வெட்டிப் போட்டாத்தா என் சண்டாளம் தீரும்" என்ற குழந்தையைப் பார்த்து வாயால் கூறப்படாத வார்த்தையைக் கூறினாள். அப்படிக் கூறியது அவளுக்கே வேதனையளித்தது. மருமகள் கர்ப்பமாக இருந்த பொழுது தலைச்சன் குழந்தை ஆணாக இருக்க வேண்டுமென்று எத்தனைத் தெய்வங்களை வேண்டியிருப்பாள். அவன் பிறந்த பிறகும் அவனைத் தாய்ப்பால் குடிக்கும் நேரம்போக மீதி நேரத்தில் தாயிடம் விடாமல் தன் மார்பு மீதே போட்டுக் கொண்டல்லவா பாதுகாத்தாள். அவள் வாயிலிருந்து குழந்தையைப் பார்த்து அப்படிப்பட்ட வசவுகள் நிச்சயம் வராது. இருந்தாலும் மருமகள் மீது கொண்ட கசப்பை இப்படித்தான் காட்ட வேண்டியிருந்தது. அதுவும்கூடப் பேரன் மீது கொண்ட பாசத்தால் வருத்தப்படும்படியே செய்தது.

தனது மாமியாள் இன்றைக்குத் தன்னிடம் எப்படியாவது ஒரு வழியில் சண்டைக்கு வருவது என்கிற முடிவில் செயல்படுகிறாள் என்பதைப் புரிந்து கொண்டுவிட்டாள் பழனியம்மாள். அதையறிந்த அவள் மாமியார் சொல்வதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவள் போல நடந்து கொண்டாள். அதனால் மிக நெருக்கமாக வந்த சண்டைக்கான சந்தர்ப்பங்கள் கூட விலகிக் கொண்டே சென்றன. அவளும் பாத்திரங்களை எல்லாம் விளக்கிச் சுத்தம் செய்து அவசர அவசரமாக வீட்டுக்குள் எடுத்து வந்தாள். அப்பொழுது ஒரு வெங்கலத் தம்ளர் வாசற்படிக் கல்லின்மீது விழுந்து உடைந்துவிட்டது.

* * *

வெறும் வாயை மென்று கொண்டிருந்தவளுக்கு விசயம் கிடைத்துவிட்டது. இனி அதைக் கருப்பாயி லேசில் விடமாட்டாள். அவளுடைய பெற்றோர்கள் அவளுக்குச் சீர் கொடுத்த சாமான்களில் ஒன்று அந்த உடைந்துபோன தம்ளர். அதைப் பற்றி அவள் தன் வீட்டிற்கு விருந்தினர்கள் வரும்போதெல்லாம் அதில் ரசமோ மோரோ ஊற்றிச் சாப்பிட்டு இலைமுன் வைக்கும்போது, 'களிம்புதட்டிப் போயுடப் போவுதம்மா' என்று விருந்தினர்கள் கூறுகையில், - "இந்தத் தம்ளர் சுத்த வெங்கலமுங்க... ரண்டு நாளைக்கு இப்படியே வச்சிருந்தாலும் துளி களிம்பு ஊறாதுங்க... இப்படியெல்லாம் எங்கப்பே,

எங்காயி அந்தக் காலத்திலே பத்துக் கொன்னாப் பார்த்துத் தேடியாந்து குடிவச்சாங்க!" என்று அப்பொழுது கணவனுடன் குடும்பம் நடத்தும்பொழுது - ஏற்பட்ட மனத்தாங்கலை வெளிக்காட்டிக் கொள்பவள் போலக் கூறிக்கொள்வாள். அப்படிப் புகழுக்குரியதான தம்ளர் உடைந்து விட்டதென்றால் அவள் சும்மா இருந்தாலும் அவள் மனது சும்மா இருக்குமா?

"ஏண்டி விதியத்த முண்டே! உங்க அப்பமூட்லே இருந்து பொளங்கறதுக்கு சாமான் கொண்டாறாமே எஞ்சாமானத் திலே பொளங்கிக்கிட்டு கீலேயுமா போட்டு ஒடச்சிட்டே. நானாயிருந்தா ஒரு சாணு கவுத்துப் போட்டுக்கிட்டுச் செத்துப் போயிடுவே செத்து. எம் மவனுக்கு எங்கெல்லாமோ இருந்து பொட்டியிலே பணம் வச்சுத் தாறதாகச் சொன்னதையெல்லாம் உட்டுட்டு, தெரிஞ்ச எடமாச்சே சீரு சிறப்பெல்லாம் கேட்டுக் காட்டிச் செய்ய மாட்டாங்களான்னு நெனச்சுச் செய்யப் போவ இப்போ ஒரு வேளை கஞ்சிக்கே மார்க்கமத்துப் போச்சு" என்று மூச்சுவிடாமல் நீண்ட நாட்களாக வெளியில் கூறமுடியாமல் அடக்கி வைத்திருந்த கருத்துகளை வெளியில் கொட்டித் தீர்த்தாள்.

எப்பொழுதுமே நாங்கள் பிறந்த வீட்டாரைப் பற்றி பிறர் இகழ்வாகப் பேசிவிட்டால் பெண்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். அதுவும் தன் மாமியார், தன் பெற்றோர்களின் பொருளாதார நிலையைப் பற்றிக் கேவலமாகப் பேசும் பொழுது சும்மா இருக்க முடியுமா? புகுந்த வீட்டில் தனது நான்கு வருட வாழ்க்கையில் இப்படியொரு மானக்கேடான பேச்சும், குற்றமான வார்த்தையும் கேட்டதில்லை. எந்த ஒரு ரோஷமுள்ள மருமகளும் கேட்டுக் கொண்டிருக்கக் கூடிய பேச்சல்ல இது. அப்படியே ஒருத்திக் கேட்டுக்கொண்டு அமைதியாக இருக்கி றாள் என்றால், அது அவளுடைய மழுங்கத் தனத்தின் கெட்டித்த போக்காகத்தான் இருக்க முடியும்?

கலைந்துபோன மயிரை அடித்து முடிந்துகொண்டு இடுப் பில் தூக்கிச் செருகியிருந்த முன்தளவை அவிழ்த்து விட்டுவிட்டு முழங்கால் வரையிலும் சேலையை உருட்டிக் கட்டியவாறு, "என்னடி சொன்னே? நீ மட்டும் கண்ணாலம் பண்ணி புருஷ னூடு வந்த அன்னைக்கேவா சாமானெல்லாம் கொண்டாந்தே. புள்ளை குட்டி இல்லாமே நம்ம சாதியிலே சாமான் கொடுத்து வேறை வைக்கிறது உண்டா? நீ இவ்வளவு நீட்டி நிட்டூரம் பேசறியே, உன்னோட மவளுக்கு எத்தன வருஷம் கழிச்சு வேறை வச்சே? ஏ? அப்படித்தானே அடுத்தவங்களும் செய்வாங்க?"

என்று ஆத்திரமும் அழுகையும் பொங்கக் கூறினாள் பழனிம்மாள்.

நான்கு வருட காலமாக மாமியாருக்கும் மருமகளுக்கும் வீட்டுக்குள் எவ்வளவு புகைச்சல் இருந்து வந்தாலும் வெளியில் ஒருவருக்கொருவர் வாய்க்கூசப் பேசாமல் இருந்து வந்தது அக்கம்பக்கத்தார்களுக்கு ஆச்சரியமாகவே இருந்து வந்தது. சில மாமியார்கள், "மருமகன்னு இருந்தா இப்படியல்ல இருக் கணும்" என்று பழனியம்மாளை உதாரணங்காட்டி தங்கள் மருமகள்மாரிடம் கூறிக்கொள்ளவும் ஆரம்பித்தார்கள்!

இதனால் பொறாமையடைந்த சில மருமகள்கள் இவர்களுக் குள் சண்டை மூளாதா என்று வெகு ஆவலோடு எதிர்பார்த்து வந்தார்கள். அப்படியொரு சம்பவம் நிகழ்ந்துவிட்டால் எந்த மருமகளும் எவ்வளவு நல்லவிதமாக நடந்தாலும் சண்டையின்றி மாமியாரிடம் நல்ல பெயர் எடுக்க முடியாது என்று நியாயம் கற்பிக்க வகை ஏற்படுமல்லவா? அவள் ஒருத்தி சப்தமின்றி இருப்பதால் தானே மாமியார்கள், தங்கள் கிதாப்பை பற்றி யெல்லாம் பெரிசாகப் பேசிக்கொள்ள முடிகிறது?

இந்த நிலையில் எதிர்பாராத விதத்தில் நான்கு வருட ஒத்துழைப்பிற்குப் பிறகு மாமியார் மருமகளிடையே சண்டை மூளுவதற்கு எந்தவிதமான தோதும் கிடையாது என்று அக்கம் பக்கத்தார் முடிவுகட்டியிருந்த வேளையில், இப்படியொரு வாய் கூசும்படியான ஏச்சுடன் சண்டை துவங்கியுள்ளதென்றால் அவர்களுக்குச் சொல்லவா வேண்டும்? எல்லோரும் தாங்கள் செய்து வந்த வீட்டு வேலைகளை அப்படி அப்படியே போட்டு விட்டு அவர்கள் வீட்டு வாசல் பக்கமே வந்து குழுமிவிட் டார்கள்.

வெயிலில் காயப்போட்ட சாணித்துணி மாதிரி துருத்தித் துடித்துக் கொண்டிருந்த நாக்கை உள்ளிழுத்துப் பதப்படுத்திக் கொண்ட கருப்பாயி, "ஊஸ்... எம்மவளும் நீயும் ஒன்னுதானே? அவ நடைக்கும் அழவுக்குமே லட்சம் குடுத்துக் கட்டிக்கிட்டுப் போவாண்டி! உன் வெடியா மொவரையப் பார்த்தாலே இருக்கற லச்சுமியும் ஓடிப்போயிடுமடி. எம்மவ உனக்கினு பொறந்திருந்தா. இல்லாட்டி நீ ஊரு மேலே தாண்டி மேஞ்சுக்கிட்டு இருப்பே" என்று மேலும் ரோசம் கிளம்பப் பேசிவிடுகிறாள்.

— அவர்கள் சண்டையை ஆவலோடும், விஷமத்தனத்தோடும் கூர்ந்து கவனித்துவந்த அயலாரின் முகங்களைப் பார்த்ததும்

பழனியம்மாளுக்கு எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகியது. வண்டல்மண் போல் கறுத்திருந்த அவள் முகம் கோபத்தால் துடித்தது. கண்களில் நீர் திரையிட்டது. வரவிருக்கும் புயலின் அறிகுறியோ இது!

"உம்மவளைவிட யாரடி மாப்பிள்ளை கெடைக்காமெ அஞ்சு வருசமா ஊட்டுலியே அறுப்புப் புடிக்காமெ கெடந்தது. சமிஞ்ச ரண்டொரு வருசத்திலேயே நீ நான்னு மாப்பிள்ளைங்க வந்து எனக்குக் கண்ணாலம் முடிஞ்சு போச்சேடி" என்று வன்மம் தொனிக்கக் கூறினாள்.

நூறுபேர் உள்ள கூட்டத்தின் மத்தியில் தன் மகளைப் பற்றி இவ்வளவு கேவலப்படும்படியாகப் பேசுவதா என்று கருப்பாயி துடித்தாள். சண்டைக்கு நிற்கும் ஆட்டுக்கிடாயைப் போல உள்ளமும், உணர்வும் சிலிர்த்துப் புடைக்க வாசலில் கிடந்த கிளக்குமாற்றை எடுத்துக் கையில் பிடித்தபடி, "இதை நிரூபிக்கலன்னா உன்னெ வூட்டுக்குள்ள நொளைய விட மாட்டே" என்று மருமகளின் மயிரைப் பிடித்து வளைத்துக் குனியவைத்து விளக்குமாற்றால் அடித்து விட்டாள்.

அப்போது அண்மையில் நின்றவர்கள் கருப்பாயினுடைய செய்கையைக் கண்டு வெறுத்தவர்களாக, "ஆமாம் போ! வாயிலே ஆயிரம் பேசிட்டாலும் இப்படி மாத்திலே அடிக்கலாமா?" என்று அவள் கையிலிருந்த மாற்றைப் பிடுங்கி எறிந்தனர்.

இதுவரையிலுங்கூடத் தன்னை முடிந்த அளவுக்குக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த பழனியம்மாளின் உள்ளம் இந்தச் செய்கைக்குப் பிறகு ருத்ராகரமாக பொங்கிக் கனன்றெழுந்தது. இனியும் அவள் பொறுத்துக் கொண்டிருந்தால் அவளுடைய பொறுமையை பலவீனமாகக் கூட எடுத்துக் கொண்டு மயிரைப் பிடித்து, வீட்டைவிட்டே கூட மாமியாள் வெளியில் இழுத்து விடக்கூடும். அவள் மனம் எவ்வளவோ போராடியது. தான் பெற்ற குழந்தையைக் கூட குறும்பு செய்யும் பொழுது அடிக்க மனம் துணியாத அவள், வயசில் தாயைப் போன்றிருக்கும் மாமியாரை எப்படி விளக்குமாற்றால் திருப்பி அடிப்பது என்று தயங்கினாள். அவளது வாழ்க்கையில் இப்படியொரு நிகழ்ச்சி இன்றுதான் சம்பவித்திருக்கிறது. இதற்கு அவள் பணிவதா? அல்லது அந்தக் குடும்பத்தில் அவள் நிலைத்துக் கௌரவமாக மாமியாளின் இடையீறு இன்றி வாழ்வதற்கு இன்று துவங்கிய இந்த ஆரம்ப நிகழ்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதா?

அண்டையில் இருந்தவர்கள் கருப்பாயியைத் தடுத்து அவள் செய்கையைக் கடிந்து கொண்டிருக்கும்பொழுது மூர்க்காவேச மாகக் கோபமும், துடிப்பும் பொங்கப் பழனியம்மாள் கீழே கிடந்த விளக்குமாற்றை எடுத்துத் திடீரென்று மாமியாரின் கொண்டையைப் பிடித்து வளைத்துக் குனியவைத்து சாத்து சாத்தென்று சாத்தி விட்டாள். பக்கத்தில் இருந்த எல்லோரும் அவளின் எதிர்பாராதவிதமான இந்தத் தாக்குலைக் கண்டு திகைத்து அவளைப் பிடித்து அப்புறப்படுத்தினர். அவளின் சர்வாங்கமும் கணவன் வந்த பின்னர் என்ன நேருமோ என்ற பெண்மையின் பலவீனத்தால் லேசாக நடுங்கிக் கொண்டிருந் தது.

மாமியாரை அடித்துவிட்ட சற்று நேரங்கழித்துதான் அவள் உள்மனம் என்ன காரியம் ஆத்திரத்தில் செய்து விட்டோ மென்று ஊமைத்தனமாக அழுது புலம்பியது. அதறகுப் பின்னர் அவள் வாய்திறந்து மாமியாளை ஒரு வார்த்தைகூட இகழ்ச் சியாகப் பேசவில்லை. கண்கள் மட்டும் நீரைச் சிந்தத் தேம்பித் தேம்பி அழுதுகொண்டு நின்றாள். அவள் நெஞ்சில் பொங்கி வழிந்த அத்தனை அழுக்குகளும், கோபப் பிரவாகங்களும் எப்படித்தான் அந்தச் சம்பவத்திற்குப் பிறகு ஒரு நொடியில் ஆறித் தணிந்ததோ? இல்லை, பூமியின் கர்ப்பக் கிருகத்துக் குள்ளே யாவருக்கும் தெரியாமல் குமுறிக் கொந்தளித்துக் கிடுகிடுக்கும் எரிமலைக்குமுறல் போல், அவள் நெஞ்சிலும் குமுறித் தணிந்து ஒரு நாள் திடீரென்று வெளிப்பட அமைதி காட்டுகிறதோ? எல்லாரும் கூறுவது போலப் பெண்களின் மனம் புதிரானதுதானா?

மருமகள் கையில் அடிபட்ட மாமியாள் விடைக்கோழி போல் எகிறிப் பாய்ந்த நிலைமாறி, வாசலில் கிடந்த ஆட்டுக் கல்லில் அமர்ந்து இரண்டு தொடைகள் மீதும் குத்துப் பாய்ச்சிய கைகள் மீது முகத்தை வைத்து அமர்ந்தபடி, "இன்னமே நானிருந்து எதுக்காவுது. இத்தனையுஞ் சம்பாதிச்சி எடுப்பாரத்த ஒரு எரப்பானி முண்டை கையிலே சீவக்கட்டை யடிபட வேண்டியதாப்போச்சு. என்னக் கட்டிகிட்ட புருஷனோ, பெத்த பயனோ சீன்னு ஒரு வார்த்தை தப்பாப் பேசியிருக்க மாட்டாங்க" என்று குரலெடுத்து ஒப்பாரி வைத் தாள். அதில் ஆற்றாமையின் தவிப்பும் பழி தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற உறுத்தலின் உந்துதலும் மேலோங்கி ஒலித்தன.

பழனியம்மாள் எதை நினைத்தாளோ, ஏதோ ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்து விட்டவள் போல தாய்க்கும் பாட்டிக்கு

மிடையில் நின்று இருவருடைய முகங்களையும் மாறிமாறிப் பார்த்து அழுது கொண்டிருந்த குழந்தையைப் பல நாள் பிரிந்தவள் போல வெறியும் ஆவேசமும், உணர்ச்சியும் கொப் பளிக்க மாறி மாறி முத்தமாரி பொழிந்து கீழிறக்கி விட்டுவிட்டு வேகமாக ஓடித் திண்ணையில் கிடந்த கயிற்றை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்று தாளிட்டுக் கொண்டாள்.

அவளின் இச் செய்கையைக் கண்ட அங்கிருந்த கூட்டத்தினர் கிளர்ச்சியும், பதைபதைப்பும் அடைந்தவர்களாக "அய்யய்யோ! தூக்குப் போட்டுக்கப் போறாலிருக்குது" என்று கூவியபடி அவளின் பின்னால் ஓடிச்சென்று கதவைப் பிடித்துத் தள்ளினர். கதவு தாளிடப்பட்டதினால் திறக்கவில்லை.

தனது மருமகள் தூக்குப் போட்டுக்கொள்ள சென்று விட்டாள் என்பதை அறிந்த மறுவினாடியே கருப்பாயினுடைய உள்ளத்தில் மருமகள் மீது மேலோங்கி நின்ற வெறுப்பும் குரோதமும் நீங்கி - தோட்டத்துக்குப் போயிருக்கும் மகன் வந்தால் என்ன பதில் கூறுவது என்ற பயமும், திகிலும் மேலோங்கியது. மேலும் இந்த வயதிலே மகன் முண்டையாகி, பேரன் தாயில்லாக் குழந்தையாவதா என்ற கவலையும், இன்னொருத்தி வந்து மட்டும் எப்படி இருந்துவிடப் போகிறாள் என்ற சந்தேகமும் அவளைத் தீவிரமாக விரட்டின.

அவள் இதுவரையிலும் பேசிய எல்லாவற்றையும் ஒரு நொடியில் மறந்துவிட்டு, "ஏ பழனியம்மா! உன்னெ நானென்ன சொல்லிட்டே. கதவைத் தெறல்....லே" என்று கூறிக்கொண்டே கதவைத் தட்டினாள்.

உள்ளே இருந்து ஒரு பதிலும் வரவில்லை. விட்டத்தில் ஏறிக் கூரை முகட்டில் கயிறு போடுகிற சத்தம் மட்டும்தான் கேட்டது. கருப்பாயி நெஞ்சிலும் தலையிலும் அடித்துக் கொண்டு "அய்யய்யோ ஆம்பளைங்க ஒருத்தரையும் காணோமே! ஆரையாவது கூப்பிடுங்க. கவுறுபோட்டுக்குவா போலிருக்குதே" என்று கூட்டத்திலிருந்த பெண்களை நோக்கி முறையிட்டு விட்டு "நம்ம சாமியறிய இன்னமே உன்னெ ஒண்ணுமே சொல்லலே. எனக்காக மனது கரையலன்னாலும் நீ பெத்த பயலுக்காவது நெனச்சப் பாரு" என்று பேரனை கதவிடுக்குப் பக்கம் கொண்டு சென்று அவன் அழுவதை அவள் காதில் விழும்படியாகச் செய்தாள்.

அதற்குள் அக்கம்பக்கத்திலிருந்த ஆண்களும் ஓடி வந்து தாழ்ப்பாளை உடைத்து உள்ளே நுழைந்து கழுத்தில் கயிறு

மாட்டிக் கொண்டிருந்தவளைக் கீழே இழுத்துவிட்டு, "என்ன நெனப்பு உனக்கு!" என்று கடிந்துவிட்டுக் கருப்பாயியைப் பார்த்து "இந்தக் கெழடுட்டுக்கெல்லாம் ஏ ஒரு சாவு வரமாட்டேங்குது. மவனாச்சு, அவம் பொண்டாட்டியாச்சு உனக்கென்ன? இன்னமே ஒருவா சோறுதானே. அதுகளைச் சாவடிச்சிட்டு நீ பொளைக்கப் போறியா? என்னைக்குமே மாமியார் கழுதை முண்டைங்களுக்கு இந்த ஈனத்தொழிலுதானே போவ மாட்டேங்குது? அவ சீர் கொண்டாந்தா என்ன, கொண்டா ராட்டி என்ன?" என்று கடிந்து கொண்டனர்.

தோட்டத்தில் இருந்த மகனும் வீட்டில் முன்னால் நின்ற கூட்டத்தையும் கூச்சலையும் கேட்டு ஒன்றும் புரியாதவனாக நெஞ்சில் திகில் கவ்வ ஓட்டமாக ஓடிவந்தான். வந்து செய்தியறிந்ததும் இந்த நேரத்தில் தாயைத் திட்டுவதா? அல்லது மனைவியைத் திட்டுவதா? என்று குழப்பமும் வேதனையும் மிக்கவனாக "இந்த எழவையெல்லாம் எடுக்கறதுக்கு முன்னாலே தலமேலே சீலையெ ஒதறிப் போட்டுக்கிட்டு நாம போய்த் தொலஞ்சிட்டா பரவால்லே போலிருக்குது" என்று கூறினான்.

அந்த நேரத்தில் அதைத் தவிர அவனால் வேறு எதைக் கூற முடியும்?

கூட்டமும் கலைந்து பலவாறாகப் பேசியபடிச் சென்று கொண்டிருந்தது.

அவனோ திண்ணை மீது கால்களைக் குத்துப் பாய்ச்சி அமர்ந்து முழங்கால்களுக்கிடையில் தலையை மடித்துத் தொங்கப் போட்டவாறு ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்தான். தகப்பனைக் கண்டு ஓடிவந்த குழந்தை அவன் கழுத்தைத் தாவிப்பிடித்துத் தொங்கியவாறு, "அண்ணா! அண்ணா! அம்மாளும் ஆயாளும் அடிச்சுக்கிட்டாங்க" என்று மழலைமொழியில் கூறித் தந்தையை வெறித்து நோக்கியது.

தந்தையிடமிருந்து அது எதை எதிர்பார்க்கிறதோ?

# 25

மாரப்பன் மசக்கலிலேயே வயலுக்குப் புறப்பட்டு விட்டான். போகும்பொழுது மனைவியிடம் 'நேரத்தோட சோறு கொண்டாந்துடு. ஒரு வாரத்துக்கு நாம ரெண்டு பேரும் வேலை செஞ்சம்னா அந்த வயல் சுத்தமாயிடும்' என்றான்.

"என்னத்தச் செஞ்சு என்ன பிரயோசனம். நீரில்லா நெலத்துக்குக் கொடுக்கற பாடும். நீசனுக்கு ஓதற நீதியும் பாழுன்னு சொல்லறதிலே தப்பில்லே" என்று மனச்சோர்வும் தெம்பின்மையும் தொனிக்கக் கூறினாள்.

"நம்ம கடமையை நாம செஞ்சிடுவோம். அப்புறம் விதிபோல நடக்குது" என்றான் மாரப்பன்.

"விதி பட்டினி கெடக்கோணும்னுதா இருக்குது. இதுவரையிலும் செஞ்ச வேலையைவிடவா இன்னமே செஞ்சிடப் போறம்" என்றாள்.

அவள் என்னவோ புதிர் நிறைந்த சிக்கலை விடுவிக்க முயலுபவள்போல அவனிடம் கேள்வி போட ஆரம்பித்து விட்டாள். அவனுக்கு மட்டும் என்ன தெரியும்? இந்த உலகில் பிறப்பெடுத்ததே உழைப்புக்கு மட்டுந்தான் என்று எண்ணி வருபவன். அதன் பலாபலனைப் பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாது. அது அவன் தலைச்சுளிப்பு. அது மட்டும் அவன் தாய்ப்பாலுடனேயே ஊட்டி உணர்வு மயமாக்கப்பட்டிருக்கிறது.

"குடியானவெ மட்டும் பலாபலனை எதிர்பார்த்து எதுவும் செஞ்சிட முடியாது. நம்பிக்கைதா அவனுக்கு ஆதாரம். அந்த அடிப்படையிலேதா இத்தன காலமா அவெ பொளச்சு வந்திருக்கிறான். குடியானவெ ஒரு வெள்ளாமையைப் பயிரிட்டான்னா அது கைக்கு வந்து சேரும் வரையிலும் அதுக்கெதாலும் உத்தரவாதமிருக்கா? எல்லா ஒரு நம்பிக்கை பேருலதா நடந்து வருது. சரி சரி நீ பொறப்பட்டு வா. நா போறே. மண்ணுக்கு வஞ்சகமில்லாமெ பாடுபட்டுடுவோம். மண்ணெ

வஞ்சிக்கிறவனுக்கு மறு உலகத்திலே கூட எடங்கெடைக்காதும் பாங்க." என்று கூறிவிட்டுத் தோட்டத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

அந்த வயலில் அருகம்புல் மண்டி மனித உடலில் புற்றுத்திசு எப்படியெல்லாம் வேர்விட்டுப் பரவியிருக்குமோ அப்படி மண்ணில் கால் பாய்ச்சிப் படர்ந்திருந்தது. ஒருமுறை சேர் கலக்கி வயலடித்துப் போட்டுவிட்டால் அது அத்து வாரியாகிவிடும். ஆனால் அவ்வளவு வேலைக்குக் கிணற்றில் தண்ணீர் இல்லை. ஆகவே வயலில் மண்ணை முழங்கால் ஆழத்துக்கு வெட்டிப் புரட்டிப் போட்டால் அது செத்துவிடும். அதுதான் இந்த நேரத்துக்குச் செய்யக்கூடியது. அப்படிச் செய்து வைத்துவிட்டால் மழை பெய்து கிணற்றில் நீர் பெருகும் பொழுது வெள்ளாமை வைப்பதற்கு நிலம் திடமாக இருக்கும்.

திறமை மிக்க விவசாயிகள் நிலம் வெள்ளாமையில்லாமல் கிடக்கும்பொழுதும், தங்களுக்கு ஓய்விருக்கும் பொழுதும் இதைத்தான் செய்வார்கள். நிலத்திற்கேற்பட்டிருக்கும் ஊட்டக் குறைவையும் நிலத்திலிருந்தே அதன் சக்தியை உறிஞ்சிக் குடித்துவரும் பயனற்ற, புல், களை வகைகளையும் களைந்து புதுப் பிரசவத்துக்குத் தயாராகும் தாயைப் பேணுவதுபோல பேணி வரவேண்டும். அப்படித்தான் மாரப்பனும் செய்ய விரும்பினான்.

மாரப்பன் மண்வெட்டியும் அறுகுவெட்டியும் எடுத்துக் கொண்டு வயலில் இறங்கினான். தனது குலதெய்வம் இருக்கும் திக்கை நோக்கிக் கையைத் தூக்கிக் கும்பிட்டு விட்டு வாயில் எதையோ முனகியவாறு, வறட்சியான கைகளுக்குப் பதம் கொடுப்பதற்காக எச்சிலைத் துப்பி இரண்டு கைகளாலும் தேய்த்துக்கொண்டு அறுகுவெட்டியைப் பிடித்து வயலில் கொத்தினான். வயல் மண்ணை வெட்டி வெட்டி ஒரு பக்கமாக இருந்து புரட்டத் தொடங்கினான். முழங்கால் ஆழத்துக்கும் கீழே சில இடங்களில், மணலாகவும், செம்மண்ணாகவும், ஓடை மண்ணாகவும், சாலையாகவும் இப்படிப் பலவாறாகத் தென்பட்டன. மேல்மட்டம் மட்டும் முழங்கால் ஆழத்துக்குக் கறுத்த குளத்து வண்டல் மண்ணாக இருந்தது.

எத்தனை தலைமுறைகளாக மனித உழைப்பும், மாடுகளின் உழைப்பும் அதற்குப் பலியிடப்பட்டிருக்கும்? எத்தனை பேருடைய வேதனைக் கண்ணீரையும் வியர்வையையும் ரத்தத்தையும் உணவாக்கியிருக்கும்? எத்தனை பேருடைய சாகசத்திற்

கும், வேகத்துக்கும் அது ஈடு கொடுத்திருக்கும்? இளம் காதலர் களின் காதல் சல்லாபத்திற்கு நெஞ்சு தாங்கியிருக்கும்?

காலங்கள் மாறியிருக்கும். பருவங்கள் புரண்டிருக்கும். வெள்ளப் பெருக்கும் வறட்சியும் மாறி மாறி நிகழ்ந்திருக்கும். எத்தனை நிகழ்ந்தாலும் மண்ணின் வனப்பும், வளமும் மனிதக் கரங்களின் ஜால வித்தையினால் யுகத்துக்கு யுகம், காலத்துக்குக் காலம் வளர்ந்து கொண்டுதானிருக்கிறது. மண் அழியாதது. அதன் இதயத்தில் இந்த மனித குலத்தின் சுபிட்சத்துக்காக எத்தனையோ விதமான விலைமதிப்பிடற்கரிய பொக்கிசத்தை வருகின்ற சந்ததிக்கெல்லாம் வழங்கப் பாதுகாத்துப் பக்குவப் படுத்திதான் வந்திருக்கிறது.

அவன் அறுகு வெட்டியால் மண்ணைக் கொத்திக் கட்டி கட்டியாகப் புரட்டிப் போடும் பொழுதும் அவனுடைய வாய் இறுக மூடிப் பற்கள் ஒன்று சேர்ந்து கடிக்கப்பட்டிருந்தன. தாடை எலும்புகள் மேலும் கீழும் அசைய நெற்றி பொறுத்துத் துடித்துக் கொண்டிருந்தது. ஒரு பலமிக்க எதிரியை வெட்டி வீழ்த்திச் சிதைப்பது போன்ற வெறியும், எடுத்த காரியத்தின் வெற்றிப் பெருமிதமும் அந்தப் பாவத்தில் பிரதிபலித்தன.

சூரியன் உச்சி நோக்கி எழுந்து கொண்டிருந்தான்.

அவன் நெற்றியிலிருந்து வடிந்த வியர்வை கண்களில் இறங்கிக் கண்ணைக் கரிக்கச் செய்தது. வெடித்துச் சிதறிய தட்டைப் பயிர் போல, உருண்டு வந்த வியர்வை முத்துக்கள் கண்ணீர் சொட் டுவது போல மூக்கு நுனியில் திரண்டு சொட்டிக் கொண்டிருந் தன. மூடியிருக்கும் நீராவிப் பாத்திரத்தில் சேர்ந்திருக்கும் நீர்த்திவலை போல அவன் உடல் பூராவும் வியர்வை அரும்பி கரும்புழுதியில் குழம்பிச் சேறாடிப் போயிருந்தன.

இன்னும் சாப்பாடு வந்து சேரவில்லை. கடின உழைப்பால் உடல் துவண்டு களைப்பு மேலிட்டு விட்டது. நீண்ட நேரம் சண்டையிட்ட கோழி சோர்ந்து கொத்திக் கொள்வது போல, அவன் நாழிக்கொரு கொத்தாக அறுகு வெட்டியால் நிலத்தைக் கொத்திக் கொண்டிருந்தான்.

புரட்டிப் போடப்பட்ட இறுக்கம் மிக்க அடிமண்ணிலிருந்து ஆவி கிளம்பி மறைந்தது. தோட்டத்துக் கரையிலிருந்த வேப்பமரத்திலிருந்து கனிந்து விழுந்த வேப்பம் பழத்தின் வாசம் நெஞ்சை அள்ளியது! வசந்த பருவத்தில் சகல மரங்களும் உதிர்த்த சருகுகளின் கதம்ப சுகந்தம் மனதுக்குப் போதை மூட்டியது. ஒரு நாள் இந்த எழுச்சியின் தெம்பில்தான் மாரப்பன்

கூட இது நேரம் வரையிலும் களைப்புக் கண்டும் வேலை செய்து வருகிறான் போலும்.

மாரக்காளும் ஒட்டுக் கூடையில் சோற்றை வைத்துச் சுமந்த படி வயலுக்கு வந்து சேர்ந்தாள். பாவம்! இந்தக் குடும்பத்தின் நலனுக்காக அவளும்தான் எத்தனை சௌகரியங்களைத் துறந்திருக்கிறாள். அவளே அந்தக் குடும்பத்துக்கு இல்லாமல் இருக்கும்பட்சத்தில் என்றைக்கோ அந்தக் குடும்பம் பெயர் சொல்லாமல் ஊரை விட்டே மறைந்து போயிருக்கும்.

அறுகு வெட்டியை வயலில் போட்டுவிட்டு சோற்றுக் கூடை இறக்கி வைக்கப்பட்டிருந்த வேப்பமரத்து நிழலில் சென்று அமர்ந்தான். வெயிலில் வேர்த்துப்பூத்த உடம்புக்கு நிழலின் குளிர்ச்சியூட்டும் காற்று உற்சாகமும், தெம்புமூட்டியது. குனிந்து வேலை செய்ததினால் ஏற்பட்ட இடுப்பு வலியைப் போக்கிக் கொள்வதற்காகத் துண்டைத் தரையில் விரித்துப் போட்டு மல்லாந்து படுத்து இடுப்புக்கடியில் இரண்டு கைகளையும் பக்கவாட்டில் அணை கொடுத்து உயர்த்தி நெட்டி முறித்தான்.

கணவனின் இச்செய்கையைக் கண்ட மாரக்காள் மனம் பொக்கென்று போய்விட்டது. இப்படி எத்தனை காலந்தான் அந்த ஜீவனும் ஓய்வொழிச்சல் இன்றி உழைப்பது? அதற்கொரு முடிவே கிடையாதா?

மாரப்பனைக் கேட்டால், "அது அவர்களுடைய தலைவிதி, அதற்கு யார்தான் என்ன செய்யமுடியும்?" என்று ஒரு நொடியில் அலட்டிக்கொள்ளாமல் பதில் கூறிவிடுவான். சுற்றுச்சார்பும் சமூகமும் கற்றுத்தந்த பாடம் அது. அவன் கண் முன்னால் விதியும் விதிக்கான காரணமும் செயல்பூர்வமாகப் பொய்ப்பித்துக் காட்டாத வரையில் அவனையும், அவன் போன்றவர்களையும் மாற்றிவிட முடியாது.

"கை கழுவு. சோத்த தின்னாவாவது தெம்பு வரும்" என்றாள் மாரக்காள்.

"சோத்தத் தின்னா மட்டுமா மனுசனுக்குத் தெம்பு வந்துடப் போவுது?" என்று கூறி எழுந்த மாரப்பன், மண்ணை அள்ளிப் பற்களைத் தீத்தினான். பசைமிகுந்த வயல் மண் எச்சில் பட்டு ஊறி, நாவிற்கு சுவையூட்டியது. அந்தச் சுவையின் ஈடுபாடுதான் எத்தனை கஷ்டநஷ்டம் வந்தாலும் அந்த மண்ணைப் பிரிவதற்கு அவர்களுக்கு மனம் வருவதில்லை போலும்! அதுனால்தான் பச்சைக்குழந்தையாக இருக்கும்பொழுதே அவர்களின் உணர்வி லும், உள்ளத்திலும், குருதியிலும் நிரந்தரமாக அந்த உத்வேகத்

தைப் பரம்பரை பரம்பரையாக வளர்த்து வர வேண்டுமென்று வயல் மண்ணை எடுத்துத் தண்ணீரில் கரைத்து அவர்களுக்கு ஊட்டி விடுகிறார்கள்.

பல் தீத்தி முடித்ததும் வாய்கொப்பளிக்க ஆரம்பித்தான். இனிமையூட்டும் அந்த மண் குழம்பைக் கீழே கொப்பளித்து உமிழ மனம் வரவில்லை. அவ்வளவு ருசி அந்த மண். ஆனாலும், பல் அழுக்குச் சேர்ந்துவிட்டதே என்கிற அருசை அவனைக் கீழே உமிழ வைத்தது. வாய் 'சள்' என்றிருக்கும் சில நேரங்களில் அவன் மண்ணைத் தெள்ளிக் கற்களை நீக்கிவிட்டுக் கொழி மண்ணை எடுத்து வாயில் போட்டுச் சப்பிச் சுவைத்துச் சக்கையைக் கீழே துப்பிவிடுவான்.

மண்தான் அவர்களுக்குச் சகலமும். அது பகைத்தால் அவர்கள் வாழ்க்கை இருண்டு விட்டதாகத்தான் அர்த்தம். மண்ணிடமிருந்து மரணம் ஒன்றுதான் அவர்களைப் பிரிக்க வேண்டும். மரணம் மண்ணுடன் அவர்கள் புரியும் அற்புதங் களைத்தான் துண்டித்துவிட முடிகிறதே ஒழிய, அந்த மண்ணி லேயே தங்கள் உடலை ஐக்கியப்படுத்தி அதனுடன் தங்களை இரண்டறக் கலந்து கொள்வதை அதனால் தடுத்துவிட முடிவ தில்லையே? அதுதான் மண்ணுடன் மனிதனுக்குள்ள விசேச மகத்துவம் போலும். அந்த நீக்கமற்ற உறவுதான் அவனுக்கு எத்தனை சோதனைகள், கஷ்டங்கள் நேர்ந்த போதிலும் சமா ளித்து நிற்கத் தெம்பையும், ஆதர்சத்தையும் அளிக்கிறது போலும்.

அவன் கொப்பளித்துத் தரையில் உமிழ்ந்த மண்ணை தலைக்குமேல் மரக்கிளையில் அமர்ந்திருந்த காக்கை ஒன்று பறந்து வந்து கொத்தி விழுங்கியது. மனிதனைப் போலவே அதுவும் மண்ணை நேசிக்கிறதோ? அல்லது அழுக்குச் சுவை நிறைந்து கொப்பளித்து உமிழ்ந்த தண்ணீரில் ஊறிய மண் என்பதற்காக அது விரும்பியதோ? யாருக்குத் தெரியும்! ஆனால் பொதுவாக மனிதனுடன் உறவாடும் ஆடு, மாடு, கோழி முதலி யவை மண்ணை விரும்பி உண்பதை நம்மால் பார்க்க முடியும். ஒருக்கால், மனித உறவின் தவிர்க்க முடியாத விளைவுகளோ அவை?

"சோத்தக் குடி, எதைப்பேசறதுக்கும் செய்யறதுக்கும் ஒடம் பிலே தெம்பிருந்தாத்தானே முடியும்?" என்று கூறிக் குண்டாவி லிருந்து ஆனத்துடன் பிணைந்து உருட்டிய சோளக்களியை, அவன் இணைத்து நீட்டிய வெற்றிலை போன்ற கரங்களில்

வைத்தாள். உருட்டிப்போட்ட களியை இடது கையால் ஏந்திக்கொண்டு வலது கையால் பிட்டு பிட்டு வாயில் போட்டு மெல்லாமலே வெளுக்வெளுக்கென்று விழுங்கினான்.

சோறு தின்றுவிட்டுக் கைகளைக் கழுவிக்கொண்ட மாரப்பன், "பசி ருசியறியாதுங்கறது நெசந்தான் போலிருக்குது. இப்ப என்ன தின்னோம்கற ருசியே தெரியலே" என்று கூறியவண்ணம் துண்டை உதறி வாயையும் கையையும் துடைத்துக்கொண்டான்.

மாரக்காள் கந்தனின் திருமணத்தைப் பற்றிப் பேச்செடுத்தாள்.

ஒரு கட்டம் வரையிலும் கந்தனுடைய திருமணத்தைப் பற்றி வேகமாகச் சிந்தித்துச் செயல்பட்டு வந்த மாரப்பனுக்கு இப்பொழுது மனத்தெம்பு சற்று தொய்ந்துவிட்டது. கல்யாணத்தை நினைத்தால் கடன் சுமை உடனே வந்து நெஞ்சை அழுத்துகிறது. அந்தச் சுமையில் கல்யாண நினைவும் அழுந்தி விடுகிறது.

கந்தனுக்குக் கல்யாணம் செய்யாததினால்தான் அவன் எப்படியோ சுற்றித் திரிகிறான் என்பது மாரப்பன் முடிவு. அதற்காக அவனுக்கு உடனடியாகத் திருமணம் முடித்துவிட வேண்டுமென்று மாரப்பன் செயல்பட்டு வந்ததும் உண்மை தான்.

ஆனால், சில புதிய நெருக்கடிகள் அவனை மறுசிந்தனை செய்ய வைத்துள்ளன.

மாரக்காளுக்கோ மாரப்பனின் மெத்தனத்தைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

"குருவியைப் புடுச்சோம், றக்கையை முறிச்சோம்னு இருக்கணும். அதில்லாமெ அவனோட கண்ணாலத்தப் பத்தியே பேசிக்கிட்டு இருந்தோம்னா அது அவனெ மேலும் கெடுக்கத் தாஞ் செய்யும்" என்றாள் மாரக்காள்.

சாந்த நிலையில் இருந்த அவன் முகம் இதைக் கேட்டதுமே கருத்து இருண்டது. குச்சியை எடுத்துத் தரையில் கோணல் மாணலாகக் கீறியபடி "கூவற கோழிக்குக் குண்டியா வலிக்குது? கோழி கூப்பிட்டதும், எழுந்து வேலை செய்யறவங்களுக்கல்ல தெரியும்?" என்றான். குரலின் கடினபாவமும் நொந்து அலுத்துப்போன கவலையின் பலவீனமும் அதில் தொனித்தன.

“வெந்து தீயுது வவுத்துப் பசின்னா, வெந்துக்கிட்டிருக்குது கொழுக்கட்டை”ங்கற மாதிரி உம் பேச்சு இருக்குது. இந்தக் காலத்துப் பசங்க போக்கறிந்து பெத்தவங்களுக்கு நடக்கத் தெரியலைன்னா பெரு மோசந்தா வந்து சேரும்.”

அவன் சற்று நேரம் அமைதியானான். அவனுக்கு மட்டும் மகனுக்குத் திருமணம் செய்து வைக்கக் கூடாது என்கிற கொள்ளையா என்ன? எல்லாப் பெற்றோர்களுக்கும் இருக்கிற கவலையும் அவனுக்கு உண்டு. கல்யாணம் என்பது பேச்சுவார்த்தைகளின் உறுதியின் மீது முடிந்து விடுகிற விஷயமாக இல்லையே? அவனுக்கென்று ஒரு பெண்ணை அவனுடன் இணைத்து வாழ வைப்பதென்றால் அதற்காகும் செலவிருக்கிறதே அது கொஞ்ச நஞ்சமா? பரம்பரையாகச் சமூகம் கடைபிடித்து வந்திருக்கும் சம்பிரதாயச் சடங்குகளை அவனால் புறக்கணித்துவிட முடியுமா? அப்படி அவன் முனைந்தால் தான் மேலும் பொருளாதார நசிவில் சிக்காமல் தப்பித்துக் கொள்ள முடியும். அதற்கவனுக்கு வலிவுமில்லை. அப்படியவன் வலிவு படைத்தாலும் சமுதாயத்தை நோக்கிச் சவால் விடும் ஞானமுமில்லை.

“நீ சொல்றது எனக்குப் புரியாமலில்லெ. தண்ணியில்லாமெ அரிசி வெந்துவிட முடியுமா?” என்றான்.

“நாம சுடுகாடு போற வரையிலும் நம்ம நெழலு நம்மோடுதா இருக்கப்போவுது. அதுக்காவ நம்ம கடமையை நம்ம சக்திக்கு ஒத்தவாறு செய்யாமெ வுட்டுடறதா என்ன?” என்றாள்.

“கடனோட கடனா ஆயிட்டுப் போவுது. மனுசெ கடனத் தேடுறானா கடன் மனுசனத் தேடுதா? நாம் செய்யற கடமையெ செஞ்சு முடிச்சிட்டம்னா அப்புறம் விதியப்போல நடக்குது. கடசியிலே மிச்சமிருந்தா குடுத்துட்டுப் போறது. இல்லின்னா இருக்கிற நெலத்தெ வித்துக் கடன்காரங்கிட்டெக் குடுத்துட்டுப் போயிடறது. அதுக்காவப் பாத்தா என்னைக்குத்தா குடியுங் குடித்தனமாக்கறது?” என்றாள்.

பையன்கள் விசயத்தில் என்றைக்குமே அவசரப்பட வேண்டியதில்லை. பெண்கள் விசயத்தில்தான் அவசரமும் கவலையும் காட்ட வேண்டியுள்ளது. ஆண்பிள்ளை சமூகத்திலே ஒரு தப்புச் செய்து விட்டால் அதனால் அவன் வாழ்க்கை பங்கப்பட்டுப் போய் விடுவதில்லை. பெண்பிள்ளை ஏதாவது ஒரு தவறு இழைத்துவிட்டாலோ அல்லது கணவன் வீட்டுக்குப்போன பின்னர் பெற்றோர்கள் செய்ய வேண்டிய சீர்வரிசைகளைச்

செய்யாவிட்டாலோ அதன் வாழ்க்கை இடர்மிக்கதாகி விடுகிறது. இப்பொழுது அவர்களது முதற்கடமை கணவன் வீட்டிலிருந்து சீராட்டு வந்திருக்கும் மகள் பழனியம்மாளுக்கு வேறைவைப்பு வைத்தாக வேண்டும். பெரிதாக ஒன்றும் செய்யா விட்டாலும் வீட்டில் புழங்கக்கூடிய சாமான் வகையறாக்கள், ஆட்டுக்கல், அம்மி, கட்டில், வசதிக்கேற்றாற் போல தானிய மூட்டை, ஏதோ சபையில் கொஞ்சம் பணம் முதலியவைகள் வைத்தால் போதும். எவ்வளவு குறைவாகச் செய்தாலும் ஆயிரம் ரூபாய் வேண்டும். முன்பே சுமக்க முடியாத கடன். கந்தனுக்கு வேறு கல்யாணமென்றால் இருக்கிற சொத்துக்களை விற்றாலும் போதாது. எதையும் நிதானித்துத்தான் செய்ய வேண்டும். எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் முதலில் பெண்ணுக்குச் செய்ய வேண்டியதைச் செய்தாக வேண்டும். அவன் இப்பொழுது யோசித்துத் தயங்குவதற்கு இதுதான் காரணம்.

"சீராட்டும் பேருலே வூட்டுக்கு வந்திருக்கிற பழனியம்மாளை மறந்துட்டியா? இப்போ உனக்கு எது முக்கியமாப்படுது? பயெ பத்தூரு பறந்து திரிஞ்சாவது பொளைச்சுக்குவான். பொட்டப் பிள்ளையை பங்கமில்லாதல்லவா பாத்து அனுப்பணும்?" என்றான்.

அது மகத்தான உண்மைதான். அவள் அந்த நினைவின்றிப் பேசிவிட்டாள். ஒரு தந்தையை விடத் தாய்க்குத்தான் பெண் ணின் நலனில் அக்கறை இருக்க முடியும். எப்படியென்றால், அவள் தான் ஒரு பெண்ணாக வேறு ஒரு வீட்டிலிருந்து பிறந்து வளர்ந்து இடையில் வாழ்க்கைப்பட்ட வீட்டில் படும் கஷ்ட நஷ்டங்களை அறிகிறாள். ஒவ்வொரு தாயும் தன் வாழ்க்கை அனுபவத்தின் மூலம் தன் மகளைப் பார்க்க முடிகிறது. அந்த அனுபவம் தகப்பனுக்குக் கிடையாதல்லவா? இப்படி இருக்கும் பொழுது வீட்டில் வந்து இருக்கும் மகளின் நினைவு அவளுக்கு ஏற்படாதது விந்தைதான். ஒவ்வொரு சமயத்தில் தன் மகன் அந்தப் பறைப்பெண் பாப்பாயியின் மீது ஆசை கொண்டிருப்பது அவளுக்குப் பெரும் வேதனை அளித்திருக்க வேண்டும். அதிலிருந்து கந்தனை மீட்க ஒரே வழி திருமணம் முடிப்பதுதான் என்றும் - அது முடிந்துவிட்டால் அவன் சேரியை நாடிப் போகாமல் இருப்பதன் மூலம் அந்தச் சங்கத் தொடர்பும் விட்டுப் போய்விடும் என்றும் எண்ணியிருக்க வேண்டும். இருந்தாலும் மகளின் நிலையைக் கணவன் நினைவுக் குக் கொண்டு வந்ததும் அந்த எண்ணம் பறந்தோடி விட்டது.

"ஆமாம்" என்றவள் தன்னையுமறியாமல் கண்களில் சுரந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "மறந்தே போச்சு மொதல்லே அதைச் செஞ்சு முடுச்சுட வேண்டியதுதா" என்று கூறி, 'இதற்கான பணத்துக்கு என்ன வழிசெய்யப் போகிறாய்' என்று வினவுவது போல அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

அவளது பார்வையின் உள்ளார்ந்த அர்த்தத்தைப் புரிந்து கொண்டவன் போல "இன்னமே கடன் அவ்வளவு சுலபமா பாண்டு பேரிலே கெடைக்காது. இந்தத் தோட்டந் தொரவு வச்சுத்தா கடன் வாங்க முடியும்" என்று தொண்டையடைக்கக் கூறினான்.

"அதுக்காக நம்ம பெண்ணை வூட்டோடு நிறுத்திக்க முடியுமா?"

அவன் ஒன்றும் பேசவில்லை. கண்கள் இரண்டும் சிவக்க உணர்ச்சி பொங்கும் அழுகையை நிறுத்தப் போராடிக் கொண்டிருந்தான். உதடுகளைக் கடித்துக்கொண்டு பெருமூச்சு விட்டான்.

"இன்னைக்கே போயி புடிக்காதவங்க காலப் புடிச்சாவது பணத்துக்கு வழிபண்ணு"

அவனது தலை மட்டும் கீழும் மேலும் ஆடியது. கண்ணீருக்குப் பதிலாக மூக்கிலிருந்து தடிப்பற்ற திரவம் சொட்டியது. குனிந்தபடி மூக்கைச் சிந்திக் கொண்டான். தூவானம் போன்ற நீர்த்திவலை வெளிப்பட்டுச் சிதறியது.

அவள் மேலும் தொடர்ந்தாள்.

"நாம சட்டியெடுத்து எரந்து குடிச்சாலும் நாட்டு நடப்பிலே உள்ளபடி செய்யவேண்டிய சீர்வரிசைகளைச் செஞ்சு முடிச்சுடணும். பொண்ணைப் பெத்தவங்களுக்கு அதுதா மருவாதெ."

"எம்மனசிலே மட்டும் அந்த நெனப்பு ஓடாமலில்லே"

எந்தவிதமான உணர்ச்சியுமின்றி அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிப்பட்டன. இப்படியே கடன்கள் ஏறிக் கொண்டு சென்றால் அந்தக் குடும்பம் வட்டிக்காக மட்டும் தான் உழைத்தாக வேண்டும் போலிருக்கிறது. நிம்மதியற்ற வாழ்க்கையின் மையப்புள்ளிதான் விவசாயிகளின் குடும்ப அமைப்போ? அப்படியானால் அவர்கள் எந்த நம்பிக்கையின் மீதுதான் வாழ்ந்து வருகிறார்கள்.

பொழுது சாய்ந்துவிட்டது. கிளிகள் கத்திக்கொண்டு தங்கள் இருப்பிடத்திற்குப் பறந்து சென்றன. வேலை முடிந்து வீடு

திரும்பும் பசுமாடுகள் பால் கறக்கும் மடியோடு கன்றுக்குட்டிகளை நினைத்துக் கதறின. கரிக்குருவிகளும், காக்கைகளும் மரக்கிளைகளில் அமர்ந்து காதடைக்கக் கிறீச்சிட்டன. அடிவானத்தில் நெருப்புப் பிடித்து விட்டதுபோல் செவ்வொளி படர்ந்தது.

அன்று முடித்த வேலையின் அலுப்போடு மாரப்பனும், மாரக்காளும் வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். பயனற்ற உழைப்பின் ஒட்டுமொத்த உருவமாக அவர்கள் தளர்நடை காட்சியளித்தது.

# 26

பழனியம்மாள் கணவன் வீட்டிலிருந்து கோபித்துக் கொண்டு வந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. மாமியாருக்கும் தனக்கும் சண்டையேற்பட்டதும் அதனால் தூக்குப் போட்டுக் கொள்ள முயன்று ஊரார் காப்பாற்றியதும், இதனால் வெட்கமும், கவலையும் கொண்டவளாகக் கணவனிடமிருந்து எந்தவிதக் கோபமும் இல்லாமலே பையனை விட்டு விட்டு வந்து விட்டதும் அவள் நெஞ்சை அறுத்துக் கொண்டிருந்தது.

கணவன் அவளை அடித்தோ, திட்டியோ அனுப்பியிருந்தாலாவது மனம் வெறுப்படைந்திருக்கும். தன்னை ஏற்றுக் காலங்காலமும் காப்பதாக வாக்களித்த கணவன் மீது எந்தவிதக் குற்றமும் இல்லாமல், ஏதோ மாமியாளுக்கும் தனக்கும் ஏற்பட்ட தகராறின் பேரில் வந்துவிட்ட அவள் மனம் குழந்தையைப் பற்றியும், கணவனைப் பற்றியுமே நினைந்து புலம்பிக் கொண்டிருந்தது. அவள் கோபத்தில் தெரியாத்தனம் புரிந்து விட்டாள். இப்பொழுது நினைத்தால்கூட கணவன் வீட்டுக்கு ஓடிச் சென்று விடலாமா என்றிருக்கிறது. வந்துவிட்ட இனிமேல் அப்படிப் போவது பெற்றவர்களுக்குத்தான் அவமரியாதையையும் நீங்காத இழுக்கையும் சேர்த்தது போலாகும். கணவன் வந்து ஒரு வார்த்தை சொல்லட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் கல்யாணமானதிலிருந்து இவ்வளவு நாட்கள் ஒரு முறை கூட வந்து பிறந்த வீட்டில் இருந்ததில்லை. வந்தால் இரண்டொரு நாட்களிலேயே திரும்பி விடுவாள். இன்னும் இரண்டு நாட்கள் தங்கிவிட்டோ, அல்லது அறுவடை வேலைகள் இருந்தால் முடித்து விட்டுப் போகலாமென்றோ பெற்றோர்கள் கூறினால் "எனக்கு மட்டும் அங்கே வேலை, வெட்டி, பிள்ளை, பொளப்பு இல்லெ?" என்று சிரித்துக் கொண்டு கூறியபடி புறப்பட்டு விடுவாள். குடும்பத்தின் மீது அவ்வளவு கரிசனமும் அக்கறையும் கொண்டு பாராட்டி

வந்தாள். அப்படிப்பட்டவள்தான் இன்று மூன்று மாதங்கள் ஆகியும் பையனையும், பண்ணையம் பாய்ச்சலையும் மறந்து தங்கிவிட்டாள். இல்லை - தான் அறியாமல் வந்துவிட்ட தவறுக்காக வருந்தித் தன் கணவன் வந்து அழைக்கும் நாளை எதிர்பார்த்திருக்கிறாள்.

மாதங்கள் நகர்ந்துகொண்டே போகப்போக இப்பொழுது அவள் மனதில் அவளையறியாமல் ஒரு பயமும் உருவாக ஆரம்பித்துவிட்டது. கணவன் தன்னை எதுவுமே கடிந்து கொள்ளாத நிலையில் கணவனிடம் கூடப் போய் வருவதாக ஒரு பேச்சும் சொல்லிக்கொள்ளாத பொழுது கணவன் தன்னை வந்து எதற்காகப் பார்த்துக் கூப்பிட வேண்டும் என்று நினைத்து இருந்துவிட்டால் என்ன செய்வது என்று எண்ண ஆரம்பித்தாள். அப்படியொருவேளை நிகழ்ந்து விட்டால் அது துரதிஷ்டவசமாகத்தான் இருக்கும்.

அவள் தனது பெற்றோர்களிடத்தில் முழு விவரத்தையும் கூறாமல் மனதில் பொங்கி வழிந்த ஆத்திரத்தில் “நீங்க இன்னும் வேறை வைக்காததனால்தான் எனக்கு இந்தச் சீரழிவு” என்று கூறிவிட்டாள். இதைக் கேட்ட அவளுடைய பெற்றோர்கள் இவ்வளவு நாளாகப் பெருமையாக நினைத்து வந்த மாப்பிள்ளை மீது தப்பபிப்பிராயமும் தகாத கோபமும் கொண்டிருக்கலாயினர்.

அவர்கள் ஒரு பக்கம் எப்படியாவது கடன் உடன் பட்டாவது மகளுக்கு வேறை வைப்புடன் அனுப்பி வைத்து விடுவது என்று சிந்தித்துக் கொண்டிருக்கையில் பழனியம்மாளோ தன் கணவன் வந்து ஒரு வார்த்தை கூறிவிட்டால் போதும் புறப்பட்டு விடலாம் என்று துடித்துக் கொண்டிருந்தாள். ஒரு பெண் எவ்வளவுதான் பெருமை மிக வாழ்ந்தாலும் தன் கணவனுடன் பிறந்த வீட்டிற்கு சந்தோசமாக வராதவரையிலும் அந்தப் பெண்ணுக்குப் பிறந்த வீட்டிலாகட்டும், பிறரிடத்திலாகட்டும் எள்ளளவும் மரியாதையில்லை. அதையும் அவள் நன்றாகவே அறிந்து வைத்திருந்தாள். இருந்தாலும் என்ன செய்வது?

மிகச்சில நேரங்களில் மனிதர்கள் நினைப்பது போலவே காரியங்களும் நடந்து முடிந்து விடுகின்றன. அந்த நம்பிக்கை தான் மனிதனை இத்தனை துன்பம் நிறைந்த போராட்டங்கள் மத்தியிலும் உயிர் வாழத் துடிப்புக் கொள்ளச் செய்கிறது போலும்!

அவள் கணவன் சுப்பனும் அன்று அவளை அழைத்துப் போக வேண்டி வந்து சேர்ந்தான். அவன் வருவதற்கு முன் தன் கணவன் வந்துவிட்டால்போதும், கூட ஓடிப்போய்விடலாம் என்று நினைத்து வந்தவள் அதற்கு எதிர்மாறாக அவனை வாசலில் கண்டதும் காணாதது போல வீட்டிற்குள் சென்று விட்டாள். வந்தவுடனேயே அவள் சந்தோசமாகக் கணவனுடன் பேசி விட்டால், ஊர்தான் என்ன நினைக்கும்? அல்லது அவள் வந்து, இங்கு இத்தனை நாட்களாக இருந்ததன் விரதம் தான் என்னாவது?

அவள் இப்பொழுது வென்று விட்டாள்!

அவள் வேண்டுமானால் தன் கணவனுடன் பேசாமலே இருந்து விடலாம். அவன் கோபமாக வந்துள்ள அவளை அழைத்துப் போகத்தானே வந்திருக்கிறான். அந்த வீட்டில் வருபவர்களை வரவேற்கும் உரிமை படைத்த அவளது பெற்றோர்கள் அவளைப்போலப் பேசாது இருந்துவிட முடியுமா என்ன?

"வா தம்பி" என்று வாசலில் நின்று கொண்டிருந்த மாரக்காள் மருமகனை வரவேற்றாள். மாரக்காள் கரைத்து லோட்டாவில் ஊற்றிய கம்பஞ்சோற்றை வெங்காயத்தைக் கடித்துக் கொண்டு குடித்த மாரப்பன் மருமகனை நிமிர்ந்து பார்த்தான். வெங்காயத்தையும் சோற்றையும் மென்று குதப்பியபடி வார்த்தையேதும் பேசாமல் நிமிர்ந்து பார்த்த அவன் தோற்றம் வீட்டிற்கு வந்த மருமகனை வாவென்று வரவேற்பதா, வேண்டாமா என்று குழப்பத்தில் ஆட்பட்டவனுடையதைப் போலக் காட்சியளித்தது. இருந்தாலும் சோறு - வாயிலிருந்து தொண்டைக்குள் இறங்கியதும் அவனையறியாமலே "வாங்க மாப்பிளே!" என்ற வார்த்தைகள் வெளிப் பட்டன.

முகத்தில் ஒருவிதக் கூச்சமும், குழப்பமும் நிழலாட 'வாரனுங்க' என்று கூறியவனாகத் திண்ணை மீது அமர்ந்தான். முகம் தரையை நோக்கிக் கவிழ்ந்திருக்க இடது கை ஆள்காட்டி விரலைத் தரையில் தட்டித் தாளமிட்டுக் கொண்டிருந்தான்.

சற்று நேரம் சந்தடியற்ற நிசப்தம் நிலவியது. புளியங் காய்க் காற்றின் 'விர்' என்ற இரைச்சல் கூரையிடுக்கிலும், மரங்களிடையிலும் புகுந்து அமைதியைக் குலைத்தது.

மாரப்பன் சோறு குடித்த லோட்டாவையும் குண்டாவையும் கழுவி வாசலில் ஊற்றிய மாரக்காள் சுப்பனைப் பார்த்து "பயெ

அழுவாமெ நல்லபடியா இருக்கறானுங்களா?'' என்று கேட்டுச் சற்று நிறுத்தி எதையோ நினைத்துக் கொண்டவள் போல, "வரும்போது கையோட கூட்டிக்கிட்டு வந்திருக்கலாங்களே'' என்றாள்.

அவன் என்ன பதில் கூறுவான்? சந்தோச நிலையில் அவனுடைய வருகை இருந்திருந்தாலாவது அதற்கு அவன் பதில் கூறலாம். அப்படியில்லாதிருக்கும்பொழுது எப்படிச் சரியான பதில் கூறமுடியும்? அவன் ஒன்றும் பேசவில்லை.

மருமகனின் இக்கட்டான நிலையைப் புரிந்துகொண்ட மாரக்காள் சட்டென்று பேச்சை விட்டுவிட்டு, "சரி; எந்திறீங்க, சோறு திங்கலாம்'' என்றாள்.

"எனக்கொன்னும் பசியில்லெ. இப்பத்தா வரும்பொழுது தின்னுட்டு வந்தே''

ஒரு பேச்சிலேயே விட்டுவிடுவது சம்பிரதாய முறைக்கு உகந்ததல்ல என்றுணர்ந்த மாரக்காள், "ஒருவா ஆனஞ் சோறா வது திங்கலாம்'' என்று மேலும் வலியுறுத்திக் கூப்பிட்டாள்.

சுப்பனோ இந்த நேரத்தில் உண்மையாகிலுமே சாப்பிட முடியாது என்கிற தொனியில், "நெசமாலுமே சாப்பிட முடியாதுங்க'' என்று கூறினான்.

அந்த நேரத்தில் அவன் அந்த வீட்டிற்கு அந்நியமாகவே விளங்கினான். மனம் விட்டு எந்தத்தரப்பிலும் எதுவும் பேச முடியவில்லை. மாரக்காளோ வீட்டிற்குள் சென்று உடைத்த தட்டைப்பயறு ஊறப்போட்டு வடை சுட ஏற்பாடு செய்யும்படி மகளிடம் கூறிவிட்டு வெளியே வந்தாள்.

மாரப்பன் கூரையிலிருந்து கம்பந்தட்டு ஈக்கியொன்றை உறித்துப் பல் குத்திக்கொண்டு அமர்ந்திருந்தான். ஈறிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அவன் மனதில் ஏதோ மனப் போராட்டம் நடந்து கொண்டிருக்க வேண்டும்.

மீண்டும் மாரக்காள் அங்கு நிலவிய அமைதியைக் கலைக்க வேண்டிய, "ஏ தம்பி, பழனியம்மா கோவுச்சுக்கிட்டு வந்துட்டது?'' என்றாள்.

"அதென்னமோ எனக்கென்ன தெரியும்? வந்தவ சொல்லி யிருப்பாள்ல?'' என்றான் கோபமும் அலட்சியமும் தொனிக்க.

அவளுக்கு அதற்குப் பதில் கூறும் திராணியில்லை - மௌனமானாள்.

மாரப்பன் ஏற்கனவே தேக்கி வைத்திருந்த கோபத்தை வெளிக்காட்டிக் கொள்பவன் போல "அரசனில்லா வூட்டுக்குப் போற மருமவளும், ஆடில்லாப் பட்டிக்குப் போற நாயும் அதிக காலம் நெலைக்க மாட்டங்கறது தெரியாமெ சொல்லலே" என்று மனைவியைப் பார்த்துக் கூறினான்.

தனது மாமனார் தனக்கு உறைக்கட்டுமென்று சாடை கூறுகிறார் என்பதைப் புரிந்துகொள்ள அவனுக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை. அந்த வார்த்தை கண் விழியில் ஊசியை விட்டுக் குடைவது போல வேதனையளித்தது. அப்படித்தான் அவன் என்ன தப்பிலித்தனம் புரிந்து விட்டான். இதுவரையிலும் மாமனாரிடம் வைத்திருந்த பயமும், பரிவுங்கலந்திருந்த அடக்க உணர்ச்சியை மீறிக்கொண்டு தன்மான உணர்வு மேலெழுந்தது. 'எங்கே தன் கட்டுப்பாட்டையும் மீறித் தகாத வார்த்தைகள் வாயினின்றும் வெளிப்பட்டு விடுமோ' என்று அஞ்சியவனாக "அப்பனில்லாத நானு என்ன தப்புத்தண்டா செஞ்சிட்டே? வல்லடி வழக்கடிக்குப் போயி குடும்பத்தை நாசப்படுத்திட்டெ?" என்றான்.

அதற்குள் செக்கிலிட்டு மாவாட்டி, அடுப்பில் வைத்த இரும்புச் சட்டியில் கொதிக்கும் எண்ணெயில் மாவை உருட்டி உருட்டிப் போட்டு வடை சுட்டுக் கொண்டிருந்த பழனியம்மாளுக்கு அவர்கள் வெளித்திண்ணையில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது. எங்கே இந்த வார்த்தைகள் தடித்து மனமுறிவு ஏற்படும்படி நடந்து விடுமோ என்று மனதிற்குள்ளாகப் புலம்பிக் கொண்டிருந்தாள். அப்படித்தான் அவளுடைய சீராட்டுக்கும், அவளுக்கும் சம்பந்தமுண்டா? இதை விளக்கித் தன் பெற்றோர்களிடம் கூறி அவருக்கும், இதற்கும் தொடர்பில்லை என்று கூறிவிடலாமா என்றும் எண்ணினாள். தன் மகளின் நலனுக்காகப் போராடுவதாக எண்ணி நெஞ்சில் பெற்ற பாசத்தின் கனல் சுட்டெரிக்க மருமகனிடம் கடிந்து கொண்டிருக்கும் பொழுது அவள் தன் கணவன் நிரபராதி எனக் கூற முற்பட்டு, அதனால் தனக்கும் தந்தைக்கும் ஏதாவது மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது என்றும் பயப்பட்டாள். இந்த நேரத்தில் அவள் எதைச் சொன்னாலும் அவை சுவைக்காது.

மாரப்பனும் தன் மகள் வீட்டுக்கு வந்ததிலிருந்து தன் மருமகனைப் பற்றி இல்லாதது பொல்லாததையெல்லாம் கற்பனை செய்து கொண்டு ஒரு தப்பான முடிவில் மனதை நிலைநாட்டியிருந்தான்.

- பேச்சைத் துவக்குவதற்கு முன்னரே கோபம்தான் முன்னோடி வந்தது.

“கட்டின பொண்டாட்டியே காபந்து பண்ணத் தெரியாமெ அப்பமுட்டுக்கு முடுக்கி அடிக்கிறவெ இன்னும் என்னதாஞ் செய்யணும்?” என்றான்.

சுப்பனுக்குக் கோபம் தாங்கவில்லை. பெண்ணைக் கொடுத்தவனே தன் முன்னிலையில் பெண்ணுக்குச் சோறு போட முடியாமல் விரட்டி விட்டான் என்று தன்னைப் பார்த்துக் கூறுவதா? ஒரு பெண்ணை ஒருவன் ஏற்றுக்கொள்ள முன்வரும் பொழுதே, தான் அவளுக்கும் அவள் தன் மூலம் பெற்றெடுக்கும் குழந்தைகளுக்கும் சோறு போட முடியும் என்று உறுதி கொண்டதாகத்தானே அர்த்தம்? அப்படியிருக்க அவன் அவ்வாறு கூறலாமா? அது அவன் ஆண்மைக்கு விட்ட சவாலாகாதா?

அவள் கோபத்திற்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று அவனால் கூறமுடியும்; ஆனால், அப்படிச் சமாதானம் கூறும் காலம் கடந்துவிட்டது. பரஸ்பரம் உபயோகித்துக் கொண்ட வார்த்தைகளின் தடிப்பு அச்சூழ்நிலையைக் குலைத்துவிட்டது. மனதில் கொதிப்பும் கோபாவேசமும் விஞ்சி நின்றன.

“அப்படியா? இதோ இப்பொழுதே கூட்டிக்கிட்டுப் போறெ” என்றவனாக எழுந்து வீட்டினுள் அடுப்படியிலிருந்த மனைவியை நோக்கி நடந்தான்.

மாரக்காளுக்கு அவர்களின் வாக்குவாதம் தர்மசங்கடமான நிலையில் கொண்டுவந்து நிறுத்திவிட்டது.

கணவனைக் கடிந்து கொள்பவள்போல “மண்டமயிரு நரைக்க மூளையுமா நரைச்சுப் போச்சு?” என்றுகூறிவிட்டு, ‘தம்பி பொறு. கோவுச்சுக்காதே. பலகாரம் தின்னுட்டுப் பேசிக்கலாம்’ என்று தன் மருமகனின் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள்.

அவனோ, “எந்த ரோசமுள்ள ஆம்பளையும் இதைக் கேட்ட பொறவும் கைநனைச்சானா, அவன் முகத்திலே மீசையில்லாத பொட்டைப்பயலாத்தான இருக்க வேணும்” என்று கூறிவிட்டு “பழனியம்மா புறப்பட்டு வா போகலாம்” என்று கணவனுக்குள்ள அதிகார மிடுக்கோடு சப்தமிட்டான்.

தன் கணவன் வந்து ஒரு வார்த்தை கூப்பிட்டால் போதுமென்று எண்ணியவளுக்கு இப்பொழுதைய அவனுடைய அழைப்பு என்னவோ செய்தது. அவனுக்கு அவள் உரியவ

ளானாலும், அவன் அழைப்புக்கு அவள் செவி சாய்க்க வேண்டியவளானாலும் ஏனோ அவளால் இப்பொழுது முடியாமலிருந்தது.

அதன் ரகசியமும் எதுவாக இருக்கக்கூடும்? ஒருக்கால் பெற்றவர் பாசம் மேலோங்கிவிட்டதோ? அவள் கணவனிடம் கூறினாள்.

"உக்காந்து இந்த வடையைத் தின்னு. அப்பறம் போவலாம்" என்றாள்.

அவள் சாதாரணமாக இந்த வார்த்தையைக் கூறியதும் அவனுக்கு மேலும் கோபந்தான் பொத்துக்கொண்டு வந்தது. தன்னை அவமரியாதைப்படுத்திய இடத்தில் அவள் எதுவும் பேசாமல் இருக்கிறாளே என்று வெதும்பினான். இனி ஒரு நொடி அவள் இடத்தில் இருக்கக்கூடாது. "எனக்கு எதுவும் பேச நேரமில்லெ. உடனே பொறப்படு. போவணும்" என்றான்.

அவன் போகிற வேகத்துக்கு அவளும் இடங்கொடுத்தால் எங்கே பெற்றோர்களின் உறவு முறை அறுந்துவிடுமோ என்று கவலை கொண்டாள். எப்படியாவது அவனை நிதானிக்க வைத்துப் பின்னர் புறப்படலாமென்று முடிவு செய்தாள்.

"ஏ, அப்படிக் குதிக்கறே? அவங்க என்ன அப்படிச் சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டாங்களா?" என்று நீராளமற்றுக் கணவனை உரிமையோடு சாந்தப்படுத்துகிற ரீதியில் கூறினாள்.

அவள் யதார்த்தமாகக் கூறினாலும், அவனுக்கது வேதனையளித்தது. அவள் ஒருக்கால் தன்னைப் பற்றி இல்லாத பொல்லாத செய்திகளை எல்லாம் கூறியிருப்பாளோ என்றும் எண்ணமிட்டான். தனக்கு முன்னால் தன் கணவனின் மதிப்புக்குப் பங்கம் நேருகிற முறையில் தன் பெற்றோர்கள், பேசுகிற பொழுது அதை ஒருத்தி சகித்துக் கொண்டிருப்பதா? அப்படியிருப்பின் அவள் எங்ஙனம் தன் கணவனை நேசிக்கிறாள் என்று கூறுவது?

அவன் புதிது புதிதாகத் தன் மனைவியைப் பற்றி எதை எதையோ கற்பனை பண்ணிப் பார்த்தான். எதுவும் அந்த நேரத்தில் அவனுடைய உணர்வுகளுக்கு ஊக்கமூட்டுபவையாகவே இருந்தன. வழிதவறிய குருடனுக்கு ஒளியும் இருட்டும் ஒன்றுதானே!

"என்னலே சொன்னே? உடனே பொறப்பட்டு வாரியா, இல்லையா?" என்று துடிதுடிப்பும் துர்க்குணமும் ஒலிக்கக் கூறினான்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த மாரப்பனுக்கு பொறுமை பறந்தோடி விட்டது. நல்லது கெட்டதை நிதானித்து அறிய வைராக்கியமும் தலைதூக்கி நின்றன.

அவன் சொன்னான்:

"நா, இப்ப என்ன சொல்லிட்டே? இந்தக் குதி குதிக்கறே மாப்பிள்ளே? இப்ப நீ நிக்கிறது என்னூடாக்கும் நெதானித்துப் பேசு" என்றான்.

மாரக்காள் கணவனின் முன்னால் வந்து நின்று இந்தச் சண்டை மேலும் முற்றிவிடக் கூடாது என்ற கவலையில் ஒருத்தருக்குப் பொண்ணைக் கொடுத்துட்ட பொறவு எப்படிப் பேசுணுமுனுதா மூள செத்த முண்டத்துக்குத் தெரியுதா? "பொண்ணைப் பெத்தவெ. பேச்சுக் கேட்டுத்தா ஆவணும்: புள்ளையச் செமந்தவ வலியத் தாங்கித்தா ஆவணும்" என்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்று எதிரிலுள்ள கொட்டகையில் கிடந்த கட்டிலில் உட்கார வைத்தாள்.

பழனியம்மாளுக்கு ஒன்றும் ஓடவில்லை. எப்படியாவது சமாதானப்படுத்தி சந்தோசமாகப் போகவேண்டுமென்று விரும்பினாள். தான் கொஞ்சம் முரண்டு பிடித்தாலாவது தன் கணவன் இறங்கி வருவானோ என்று சபலப்படவும் ஆரம்பித் தாள். ஆனால் நடந்ததென்னவோ அதற்கு நேர்முரணாக நடந்தேறி விட்டது.

சுப்பன் விடுவிடு என்று வீட்டினுள் ஓடிச்சென்று அமர்ந் திருந்த பழனியம்மாளின் கொண்டையைப் பிடித்து வெளியில் இழுத்து வந்து கழுத்தைப் பிடித்து நெட்டித்தள்ளியவாறு "பொறப்படறையா? என்ன சொல்றே?" என்றான்.

இனி விசயம் முற்றிவிட்டது. எந்தச் சமாதானமும் யாரையும் சாந்தப்படுத்தி விடப்போவதில்லை.

சிறு விசயத்தைப் பெரிதாக வளர்த்துக்கொண்டு விட்டார்கள்.

இந்த நிலையில் ஒன்று. அவள் கணவன் பேச்சுக்குக் கட்டுப் பட்டுப் பின் தொடர்வாளா? அல்லது தனது நலனுக்காகப் போராடும் தன் தகப்பனின் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுப் பாளா? இருதலைக்கொள்ளி எறும்பு போலத் துடித்தாள். தேம்பலும் விக்கலும் எழும்பக் கண்ணீர் விட்டு அழுதாள்.

அவள் மேலும் புறப்படாமல் நின்றதை அறிந்த சுப்பன் "என்னலே நா சொல்றே நீ மதியாமெ நின்னுக்கிட்டிருக்கறே?"

என்று அவள் மயிரைப் பிடித்து வளைத்து முதுகில் ஒரு குத்து விட்டான். இந்த அடி கூட அவளுக்கு வலியையோ அவன் மீது கோபத்தையோ உண்டு பண்ணவில்லை. யாருடைய மனதாவது இதனால் இளகி இரங்காதோ என்று கடவுளைத் தனக்குள்ளாக வேண்டிக் கொண்டாள். மேலும் தேம்பித் தேம்பி அழுதாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த பெற்றோர்களின் மனது பதறியது. தங்கள் கண் முன்னாலேயே தாங்கள் பெற்று வளர்த்த மகள் அடிபடுவதா? அவர்கள் கண்களும் நீரை உதிர்த்தன. மாரப்பன் எழுந்து மகளை நோக்கியவாறு எதையோ கூற முனைந்தவனாக நடந்து வந்தான். அவன் முகத்தில் தோன்றிய உள்ளுணர்வில் சலனரேகை அவள் மனவோட்டத்துக்கு முரணாக இருப்பதை ஊகித்து உணர்ந்து கொண்ட அவள் "அண்ணா! ஒண்ணுஞ் சொல்லாதே நா போறே" என்றவளாக அவன் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறினாள்.

மகளின் மனதைப் புரிந்து கொள்ள மாரப்பனுக்கு ரொம்ப நேரம் ஆகவில்லை. பிழைத்துக்கொள்ள வேண்டுமென்கிற தாகம் அவளிடத்தில் வேட்கையாய்த் தகிப்பதை ஒவ்வொரு வார்த்தையிலும் கண்டான். இருந்தாலும் தகப்பனுக்குண்டான கடமையை அவன் வெளிக்காட்டாமல் இருக்க முடியுமா? மனது நெகிழக் கூறினான்.

"உம்மனசுக்கு சரியில்லேன்னா போக வேண்டாம்மா. ஒரு பயனோட இன்னொரு பயன்னு நெனச்சுக்கிறே. இத்தன நாளா வளர்த்து வாழவும் செஞ்சேன். இன்னமெ சோறு போட முடியாதா என்ன?" என்றான்.

"ஒரு பொம்பளைக்கு அதுவல்லவே பெரிசு" என்று கூறியவளாய்ச் சற்றுச் சிந்தித்து முன்கூட்டியே கூற வேண்டிய ஏதோ ஒன்றை இது வரையிலும் கூறாது ஒரு பெருந் தவறைப் புரிந்துவிட்டவள் போல, "அவுங்க பேரிலே ஒரு குத்தமும் இல்லே" என்றாள்.

மனத்துயரும் நெஞ்சுக் குமுறலும் கொண்ட மாரப்பன் செவிகளில் அவள் கூறிய வார்த்தைகள் விழவில்லை. அவள் ஏதோ தன் வாழ்க்கை நிலையை நொந்து கொண்டு முறை யிட்டது போல நினைத்துக்கொண்டு, "அதுக்கு என்னம்மா செய்ய உந்தலையெழுத்து அப்படி" என்றான்.

அவள் இனி பேசிக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. மீண்டும் ஏதாவது விரும்பத்தகாத வாக்குவாதங்கள் நிகழ்ந்து விட்டால் என்ன செய்வதென்று பயந்தாள். அதேபொழுதில்

இதுவரையிலும் நிகழ்ந்துவிட்ட கசப்பான சம்பவங்களின் மனஉறுத்தலினால் எங்கே தன் கணவனின் மனது கோணல் பட்டு விடுகிறதோ என்றும் மருகினாள். இனி அவள் கையில் எதுவுமே இல்லை.

“எந்தலையெழுத்து அப்படியே இருந்தாலும் நா அங்கேதா போய்ச் சாகணும். இங்கிருந்தா ஒல...” என்று கூறி முடிக்காமல் கோவெனக் கதறினாள். அதன் பொருள் தகப்பனுக்கும் புரியக் கூடியதுதான். இருந்தாலும் தகப்பன் பதில் சொல்லக்கூடிய விஷயமா அது?

மடமடவென்று வீட்டினுள் நுழைந்தாள். அழுகையும் கண்ணீருமாக நின்றிருந்த தாயிடம் கூறிவிட்டுப் புறப்பட ஆயத்தமானாள்.

மகளின் மனவோட்டத்தைப் புரிந்து கொண்ட தாய் ஒன்றும் கூறாமல், “பொறும்மா” என்றபடி ஒரு கூடை நிறைய நெல்லைக் கொட்டி அதனுள் வடையும் வாழைப்பழமும் கொண்ட துணி மூட்டை ஒன்றை வைத்து, “இந்தாம்மா! எடுத்துக்கிட்டுப் புறப்படு” என்றாள்.

கூடையை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்ட பழனி யம்மாள், தந்தையை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் கண்களி லிருந்து கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது. அவளால் எதுவுமே பேச முடியவில்லை. தொண்டை வரை வந்த தேம்பலை அடக்கிக்கொண்டு “போயிட்டு வாரெ அண்ணா! போயிட்டு வாரெ அம்மா!” என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள். கணவன் வேகமாக முன் நடக்க தாயை இழந்த ஆட்டுக்குட்டியைப் போலப் பின்தொடர்ந்தாள்.

மாரப்பன் கால்கள் அவனையுமறியாமல் அவளைப் பின்தொடர்ந்தன. அவன் உள்ளத்தைப் புரிந்துகொண்ட பழனியம்மாள், “என்னப்பத்திக் கவலப்படாதே! நா ஒண்ணும் அப்படியெல்லாம் செத்துடமாட்டே” என்று கூறினாள்.

தகப்பன் நினைத்ததை அவள் எப்படித்தான் அவ்வளவு துல்லியமாகப் புரிந்துகொண்டு விட்டாளோ? அவள் ஒன்றும் அப்படித் தற்கொலை சொய்துகொண்டு விட மாட்டாள்.

அவன் தன் மனதில் சொல்வதா வேண்டாமா என்று போராடிக்கொண்டு வைத்திருந்த அந்தச் செய்தியை அவளே ஊகித்தறிந்து கொண்டது அவனுக்குச் சற்றே நிம்மதியளித்தது. அவன் இனி தன் மனதில் இருப்பதைத் தடையின்றிக் கூறி

விடலாம். அதை அவன் கூறித்தானே அவளைப் பின்தொடர்ந்து அவன் செல்கிறான்.

"ஆமாம்மா! அப்படி ஏதாவது நெனச்சுடாதே. இந்தக் கட்டை இருக்கிறவரைக்கும் உங்களைப் பரதேசியா வுட்டுடு வேன்னு எண்ணிடாதீங்க! உங்களைப் பத்தித்தாம்மா இந்தக் கட்டையிலே உசிரே இருக்குது. இல்லேன்னா என்னைக்கோ போயிருக்கும். ஏதாவது ஒண்ணுன்னா நேர வூட்டுக்கு வந்துசேந்துடு" என்று பேரனையும் சேர்த்துத் துக்கித்தவனாகத் தொண்டையடைக்கக் கூறினான்.

ஒரு பெரிய தேம்பலைத் தவிர அவளிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. ஒருமுறை நின்று அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு நடந்து சென்றாள். அந்தப் பார்வையில்தான் எத்தனை விதமான சோகம்! துக்கம்!

இதைப் பார்த்த அவன் மனது கனத்தது. கண்கள் பனித்தன. கைகள் இரண்டும் முகத்தைப் பொத்தியபடி "கடவுளே! உனக்கு முன் சென்மத்திலே நா என்ன பாவம் செஞ்சனோ!" என்று புலம்பியபடி மகளின் உருவம் கண்ணை விட்டு மறையும்வரை பார்த்துக்கொண்டே நின்றான்.

## 27

**தா**ய் வீட்டுக்குச் சீராட்டுச் சென்ற பழனியம்மாள் மூன்று மாதங்கள் கழித்து கணவன் வீடு வந்து சேர்ந்தாள். அந்தக் காலங்களில்தான் மனதில் எத்தனை விதமான சஞ்சலங்கள் பதைபதைப்புகள்.

அந்த ஒரு குழந்தை மட்டும் இல்லாமலிருந்தால் அவள் தன்னைப் பற்றித் தீர்மானிக்கும் முடிவு மிகச் சுலபமாக இருந்திருக்கும். அவள் வாழ்வதும், நம்பிக்கை கொள்வதும் அவளது வயிற்றில் முளைத்த அந்த ஒரு குருத்துக்காக மட்டும்தான்.

அவள் அந்த வீட்டில் நுழைந்ததும் அவளை எந்தவிதமான குரோதமும் வெறுப்புமின்றி - முன்னைக்காட்டிலும் அதிகப் படியான பாசத்தோடும் நேசத்தோடும் வரவேற்ற ஒரு ஜீவன் அந்தக் குழந்தைதான்.

மூன்று மாதங்களாகத் தாயைக் காணாத ஏக்கமும் நினைவு தெரிந்த பிறகும் - தாய்ப்பால் வற்றியும் - பழக்க தோசத்துக்காக தாயின் மடியில் படுத்து வெறும் மார்பைச் சுவைத்த இன்ப விளையாட்டும் அவனை சவலைப்பிள்ளையாக இளைக்க வைத்திருக்கிறது.

தலையில் வைத்திருந்த கூடையை இறக்கித் திண்ணையில் வைத்துவிட்டுப் பீறிட்டுக் கிளம்பும் தாயின் ரத்தபாசத்துடன் குழந்தையை எடுத்து மார்புசேர அணைத்து அதன் கன்னங் களில் மாறி மாறி முத்த மாரி பொழிந்தாள். தயிர்க்கட்டி போன்ற குளுமையும் மென்மையும் நிறைந்த அதனுடைய கன்னங்கள் அவளுக்குச் சொல்ல முடியாத இன்பத்தை அளித்தன. அவள் வயிற்றில் கிடந்து வளர்ந்து உருவான அந்த ஜீவனிடத்தில்தான் எவ்வளவு பூரிப்பும் நம்பிக்கையும் கொள்ளச் செய்கிறது.

குழந்தையும் தன் பிஞ்சுக்கரங்களால் தாயின் கழுத்தை சுற்றிப் பிடித்து இறுக்கியபடி, "ஏம்மா ஆயா உன்னையே செத்துப்

போச்சுன்னு சொல்லுச்சே, அப்படின்னா என்னம்மா?" என்று கபடமும், களங்கமும் இன்றிக் கேட்டது.

அவள் தன் தாய் வீட்டுக்குக் குழந்தையை விட்டு விட்டுச் சீராட்டுச் சென்ற பின்னர் அந்தக் குழந்தை, தன் பாட்டியைப் பார்த்து "அப்பத்தா, அம்மா எங்கே போயிட்டுது?" என்று அடிக்கடி வற்புறுத்தும். அப்படி வற்புறுத்தும்போதெல்லாம் அவள் ஊருக்குப் போய்விட்டாள் என்று கூறினால், "என்னை ஏ கூட்டிக்கிட்டுப் போவுலே. நீ என்னை அங்கே கூட்டிக் கிட்டுப்போ என்று சிணுங்கிச் சீராடும். இந்தத் தொல்லையைத் துர்க்க அவள், "உங்கம்மா செத்துப் போயிட்டா" என்று கூறுவாள். அதை விளக்குவதற்காக அவனோடு தினமும் சேர்ந்து விளையாடும் ஒரு பையன் இறந்துவிட்ட நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டினாள். இப்படியாக அவனுடைய மனதில் தாயைப் பற்றிய நினைவை மறக்கடிக்க அவள் கையாண்ட உபாயம் எங்கே பழனியம்மாளுக்குத் தெரியப்போகிறது?

பழனியம்மாளின் கண்களில் கண்ணீர் பொல பொலவென வழிந்தோடியது. குழந்தையைத் தனது முகஞ்சேர அணைத்து 'நா உன்னையே வுட்டுட்டுப் போவனாக்கண்ணு... என்னப் பெத்த மவராச!' என்று கொஞ்சினாள். துக்கமும் வேதனையும், இனந்தெரியாத கோபமும் அவள் முகத்தில் மாறி மாறி நிழலாடியது.

தான் இல்லாத காலத்தில் குழந்தை எப்படியெல்லாம் கஷ்டப்பட்டிருக்கும்? என்று சற்றுக் கற்பனை செய்து பார்த் தாள். அவளது அடி வயிற்றினுள்ளே ஏதோ ஒன்று சுறுசுறு என்று பிணைவது போல வலித்தது. அது கர்ப்பப் பையாகவும் இருக்கலாம்.

எந்தத் தாய்க்குமே - தன் குழந்தைகளைத் தன்னைவிடப் பிறர் பாதுகாக்க முடியாது என்ற நினைப்பு இருப்பதும் இயல்பு. அப்படித்தான் பழனியம்மாளுக்கும் இருந்தது. ஆனால், உண்மை என்னவென்றால், எந்தத் தாயையும்விட குழந்தைகளின் பாட்டிமார்கள்தான் அதனிடத்தில் செல்லமும், கவலையும் கொண்டிருப்பார்கள் என்பது அந்தத் தாய்மார்களுக்குப் புரிவதில்லை.

"அப்பத்தா, உனக்குத் தெனமும் பாலுக்குடுக்குமா?" என்று சோகங்கலந்த புன்னகையுடன் குழந்தையைக் கேட்டாள்.

அவளது மடியில் அமர்ந்திருந்த குழந்தை அவளது கழுத்தில் கிடந்த தாலிக்கொடியைப் பிடித்து உருவிவிட்டவாறு "ம்... ம்...

சும்மா சும்மா என்னையே குடி குடின்னு ஓரியாடும்மா நாந்தா எங்கம்மா எங்கே? காட்டுனாதா குடிப்பேன்னு அழுவே" என்றது.

எதன் மீதோ கவனத்தைப் பதித்த ஆழ்ந்த சிந்தனையோடும் மிடுக்கான தோற்றத்தோடும் அமர்ந்திருந்த குழந்தையைப் பார்த்த பழனியம்மாளுக்கு நெஞ்சில் உவகை ஊற்றுக் கொப்பளித்தது. இதை விட்டுத்தானே நானும் மூன்று மாதங்களாகப் பிரிந்து இருக்க முடிந்தது என்றால் என்ன கல் மனது இருந்திருக்க வேண்டும்? என்று எண்ணினாள். அவள் மனது அதுக்கு அதன் அன்றாடக் கடமைகளெல்லாம் தடையின்றி, அதன் மனம் கோணாது நிறைவேற்றப்பட்டதா என்று அறிந்து கொள்ளவும் துடித்தது.

"உனக்கு அப்பத்தா சடப்பின்னியுடுதா? மூஞ்சிக்கு மாவடிச்சு அங்காரக்குப் போட்டுடுமா?"

இதைக் கேட்ட குழந்தை கையைக் கொட்டிச் சிரித்தது. "அப்பத்தாளுக்கு சீவத் தெரியல்லம்ம. மணியூட்டு அம்மா கிட்ட கூட்டிப் போய்த்தா சடைப் பின்னியாரும்" என்று கூறிவிட்டுத் தாயின் முகத்தை நிமிர்ந்து நோக்கியது. அவளுடைய சிந்தனையும், பார்வையும் எங்கோ லயித்தபடி, தான் கூறுவதைக் கவனியாதிருப்பதைப் பார்த்து அவள் கன்னங்கள் இரண்டையும் தன் பிஞ்சுக்கரத்தால் தட்டி, "நா சொல்றதைக் கேளம்மா" என்றது. அவளோ, "தன் குழந்தைக்குப் பெற்றவளிருக்க யார் வந்து சடைப்பின்னி விடுவது?" என்று தன் பங்காளிச்சியை எண்ணி என்றைக்காவது சண்டை வந்துவிட்டால் இந்த உதவியைக்கூட அவள் சுட்டிக்காட்டுவாளே என்று நினைத்து மறுகிக் கொண்டிருந்தாள். அது எங்கே குழந்தைக்குத் தெரியப்போகிறது?

குழந்தையின் தீண்டுதலால் சுய நினைவுக்கு வந்தவள் குழந்தையைப் பார்த்து "அப்புறம்... சொல்லடாக்கண்ணா சொல்லு" என்றாள். குழந்தை மீண்டும் அங்கராக்குக்கூடப் போடத் தெரியாதம்மா. அங்கராக்கத் திருப்பிப் பொறந்திக்குப் போட்டுதம்மா. அப்பத்தாளுக்கு ஒண்ணுமே தெரியலை. நீதாம்மா நல்லம்மா" என்று மழலை மொழியில் திக்கித் திக்கிக் கூறியது.

இதைக் கேட்கத் தாய்க்கும் பூரிப்புத் தாங்க முடியவில்லை. நெஞ்சில் நிறைந்திருந்த கவலைகளும், துவேசங்களும் தற்காலிகமாக ஓடி மறைந்தன. அதன் சின்னஞ்சிறு குஞ்சைப் பிடித்து

நிமிண்டி முத்தமிட்டு விட்டு 'உனக்குக் கொள்ள அறுவுடா கண்ணு கொள்ள அறுவு' என்றாள்.

தான் கொண்டு வந்து வைத்த கூடையிலிருந்த வடையை எடுத்துக் குழந்தையின் கையில் கொடுத்தாள். குழந்தை தாயின் பிடியிலிருந்து விடுபட்டுக் கூடையருகில் சென்று ஒவ்வொன் றாகக் கையை விட்டுக் கிளறி நோட்டம் பார்த்தது. கூடையி னுள்ளே வேப்பந்தழையும், துரு ஏறித் தேய்ந்த லாடமும், அடுப்புக்கரியும் கிடந்தன. குழந்தை அவற்றை எடுத்துப் பார்த்து "இத எதுக்கம்மா?"என்றது.

இதன் தாத்பரியத்தை எப்படி விளக்குவது என்று அவளுக்குப் புரியவில்லை. தின்பண்டங்களில் காற்றுக் கறுப்பு அண்டிக் கொள்ளாமல் இருப்பதற்காக இவற்றைக் கூடையில் வைத்துக் கொண்டு வந்ததாகக் கூறினால் புரியுமா என்று யோசித்தாள்.

பிறகு "இது உனக்கு வெளையாடக் கொண்டாந்தண்டா கண்ணு" என்று சொல்லி மழுப்பி "ஆமா ராத்திரிக்கு அப்பத் தாளோடு படுத்துக்குவியா? அண்ணனோட (அப்பாவோட) படுத்துக்குவியா?" என்று கேட்டுப் பேச்சின் திசையை மாற்றி னாள்.

குழந்தை மூஞ்சியைச் சுருக்கிச் சிணுங்கியவாறு "ராத்திரிக்கு அண்ணனோட படுத்தா எம்மேலே பொறண்டு பொறண்டு அமுக்கிப்புடுது" என்று சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டு "அண்ணன் ராத்திரிக்குக் கொர் கொர்ணு சத்தம் போடுதம்மா. கேக்கப் பயமா இருக்கம்மா" என்றது.

இதைக் கேட்ட தாய்க்கும் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. அவளும் அந்த ரசமான அனுபவங்களுக்கு ஈடுகொடுத்தவள் தானே!

வடையைக் கடித்து மென்ற குழந்தைக்குக் கூடையிலிருந்த வாழைப்பழம் ஒன்றை எடுத்து உரித்துக் கொடுத்தாள். அதைக் கண்ட குழந்தை "இது வாண்டாம்மா. இதத் தின்னா வவுறு உப்பிச் செத்துப் போயிடுவாங்க. அம்மாளுக்கு இது கூடத் தெரியலே." என்று தாய்க்குத் தெரியாத ஒரு பெரிய விஷயம் தனக்குத் தெரிந்திருப்பது போலச் சிரித்துக்கொண்டு கேலியாகக் கூறியது.

குழந்தையின் பதில் தாய்க்குத் திகைப்பைக் கொடுத்தது. அவள் இல்லாத இந்தக் குறுகிய காலத்தில் அந்தப் பிஞ்சு மனத்தில்தான் எத்தனை விசயங்கள் புகுந்துவிட்டன. அவள்

ஏதும் புரியாதவளாகக் குழந்தையைப் பார்த்து "உனக்கு ஆருடா கண்ணு அப்படிச் சொன்னது?" என்றாள்.

"அன்னைக்கு ஒருத்த ஊருக்குள்ளே பழங் கொண்டாந்திருந் தானா? நா அண்ணங்கிட்ட வாங்கிக் குடுக்கச் சொன்னே. அண்ணெ அதுக்கு பழந்தின்னா வவுறு உப்பிச் செத்துப் போயிடுவாங்க. அமாசை ஊட்டுப் பயனும் அப்படித்தா செத்துப்போயிட்டான்னு சொல்லிச்சு. ஆமாம்மா! நாங்கூடப் பாத்தே. அவெ காளியா கோயக்கிட்டே மத்தியானத்திலே வவுறுப்பிச் செத்துப்போயிக் கிடந்தானாம்மா" என்று கூறியது.

குழந்தையின் தொந்தரவிலிருந்து தப்புவதற்காக கையாண்ட இந்தத் தந்திரம் எப்படிக் குழந்தையின் மனதில் வேரூன்றி விட்டதென்பதை அறிந்த பழனியம்மாள், அந்த அபிப்ராயத்தை மாற்றுவதற்காக "அது வேற பழம்டா கண்ணு இதத் திங்கலாம்" என்றாள்.

குழந்தை ரொம்பவும் தெரிந்தது போல "ம் ஹூ அம்மா ளுக்குத் தெரியலெ. அந்தப் பழமும் இப்படித்தான் செவப்பா இருந்தது" என்று தனக்குத் தெரிந்திருந்த நிறத்தைக் கூறியது.

பழனியம்மாள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். குழந்தை அதை ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. அவள் அதில் தோல்விதான் கண்டாள். அதற்குத்தான் எவ்வளவு அறிவு!

ஏதோ சொல்லொணா உணர்வு அவள் நெஞ்சத்தில் எழுந்து திக்குமுக்காடியது. கண்கள் பனித்தன. பூரிப்பால் வடிந்த ஆனந்தக் கண்ணீரோ?...

குழந்தையை எடுத்து மடியில் உட்கார வைத்தாள். திமில் போல் சரிந்திருந்த மார்பைக் கண்டதும் அதற்குப் பால் குடிக்க வேண்டுமெனும் ஆவல் எழுந்தது. தாயின் மடியில் சாய்ந்து இடது தொடை மீது தலையை வைத்துத் தனக்கு அமுதம் வார்த்த மார்புக் கலசத்தைப் பிடித்து வாயில் வைத்துச் சூப்பியது. மூன்று மாதங்களாகப் பிறர் கரம்படாத அந்த மார்ப கங்கள் கிசுகிசுவென அவளுக்குக் கூச்சத்தையும் சிலிர்ப்பையும் உண்டுபண்ணியது. அடிவயிற்றை எக்கிக் கொண்டும் பூமியதிர்வு போன்ற மார்பு நரம்புகளின் லேசான அதிர்ச்சியின் குறுகுறுப்பைத் தாங்கிக்கொண்டும் "பாலு வருதாக் கண்ணு. இத்தனை நாளா நீ எப்படி சும்மா இருந்தெ" என்று கூச்ச மிகுதியால் அதன் வாயை அகற்ற மார்புக் குவட்டை விலக்குவது போலவும், அதேசமயம் பூரிப்பின் கிளர்ச்சியில் அது மார்பைச்

சப்புவதை ஒருவித இனந் தெரியாத மகிழ்ச்சியில் ஏற்றுக் கொண்டிருப்பது போலவும் இருந்தாள்.

“ராத்திரிக்கு அப்பத்தா கூடத்தா படுத்துக்குவே. நா அழுதேன்னா அப்பத்தா மொலையக் கொண்டாந்து என் வாயிலே திணிக்கும். நா அதை சப்பிக்கிட்டே தூங்கிடுவே. அது உன்னுதாட்ட இல்லியம்மா” என்று மூஞ்சியை சுளித்து நொக்களை காட்டியவாறு கூறியது.

தாய்க்குச் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை. கண்களில் நீர் முட்டும் வரை சிரித்து ஓய்ந்தாள். குழந்தை வெட்க மேலீட்டால் கால்களை உதைத்துக் கொண்டு மார்புச் சேலைக்குள் முகத்தைப் புதைத்தவாறு “ம்... ம்.. போம்மா... ம்...ம் போம்மா.. சிரிச்சின்னா நா உங்கிட்ட பேச மாட்டெ” என்று சிணுங்கியது.

அவள் நெஞ்சில் பழைய நினைவுகளோ புதிய நினைவுகளோ எதுவுமே இல்லை. குழந்தையாடு ஒன்றிப் போய் மனம் விட்டுச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

அப்படிப்பட்ட வசியசக்தி, குழந்தைகளிடம் மட்டும் தான் இருக்கிறதோ?

## 28

மாரப்பனுக்கு இப்போது எந்த வேலையும் ஓடுவதில்லை. எதன் மீதும் நாட்டமும் இல்லை. அவன் மூளை சுறுசுறுப்பை இழந்துவிட்டது. அவன் கலகலப்பாகப் பேசியதைப் பார்த்தே பல நாட்கள் ஆகிவிட்டன. அவன் பேசுவதையும் நடந்துகொள்ளும் முறையையும் பார்த்தால் வாழ்க்கையில் இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கைகளையும் இழந்து, தனக்கென எதுவும் இல்லை என்ற முடிவில் எண்ணி வருந்திக் கொண்டிருப்பதுபோல் பட்டது. ஒருக்கால் அது உண்மையாகவும் இருக்கலாம்.

அந்தக் குடும்பத்தில் பொருளாதாரக் கஷ்டங்கள் நேர்ந்தவுடனே ஒருவர் மீது ஒருவர் எரிந்து வீழ்வதும், கஷ்டங்களுக்கே காரணம் இன்னார்தான் என்று முனகுவதுமாக இருந்தனர். விரோதமும் ஒழுங்கின்மையும் குற்றச்சாட்டுதல்களும், தொண தொணப்புகளுமே மலிந்திருந்தன. குடும்பத்தில் தலைமை என்பதே நொறுங்கிக் கொண்டிருந்தது. சமைத்து வைத்த சோற்றை அவரவர் பாட்டுக்கு அவரவர்கள் போட்டுக் கொண்டனர். அவரவர் இஷ்டத்துக்கு அவரவர் வேலைசெய்யச் சென்றனர். கூடிக்கலந்து ஒரு வேலையைச் செய்வதோ, பேசுவதோ முறிந்துவிட்டது. ஒருவரையொருவர் ஜன்ம விரோதிகளாகவும் யாராவது செத்துத் தொலைந்தால்தான் இந்தக் குடும்பம் முன்னேறுமென்றும் பேசவும் வெறுக்கவுமாக இருந்தனர். அவர்களின் முகத்தில் இருந்த களையும் ஒளியும் மங்கி விட்டன. சிடுசிடுப்பாகவும், மீண்டும் பெறமுடியாத ஒன்றை இழந்து விட்டது போலவும், துக்கச்சாயலும் பிரேதக்களையும் அண்ட நடமாடினர். பெருமூச்சும் சபிக்கும் குரலும் நொடிக்கொருதரம் வெளிப்பட்டது. தந்தைப் பாசமும் தாயன்பும் குழந்தைகள் நேசமும் குடும்ப இணைப்பும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நின்றன. எல்லாம் கஷ்டத்தைச் சுற்றியே வறுமையைச் சுற்றியே சுழன்றன. சமூகம் விதித்த அந்த நிர்ப்பந்தத் துன்பங்களை அறியாத அந்தப் பாமரக் குடும்பத்தில் நிம்மதியற்ற புயலும் சாந்தமற்ற கொதிப்பும் எழுந்து குமுறிக்கொண்டே இருந்தன.

இனி வேறு வழியே இல்லை. கிணற்றிலும் நீர் வற்றி விட்டது. கடனோ ஏறிவிட்டது. ஜீவியத்திற்கு உழைப்பதா, கடன் பட்ட வட்டிக்கு உழைப்பதா? இரண்டுக்கும் உழைப்பதென்பது சாத்தியமில்லை. கையுழைப்பைக் கொண்டு வயிற்றைக் கழுவுவதே மரணப்போராட்டமாக இருக்கும் பொழுது வட்டி வேறு செலுத்துவது எங்ஙனம் சாத்தியம்?

இந்த நிலையில், மகனுடைய போக்குகளும் எப்படி எப்படியோ மாறி வருகின்றன. இனி அவன் தன் ஒத்துழைப்பைக் குடும்பத்துக்குத் தருவதென்பது இயலாதது போல் அவன் நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன. இந்த நிலையில் உழைத்துக் கடன் கட்டுவதெப்படி? மாரப்பனால் தனித்து அதைச் செய்ய முடியாது. நிலத்தை விற்றுக் கொடுத்து விட்டால் கடன்காரர்களின் தொல்லையும் பேச்சும் இல்லாம லாவது கொஞ்சம் ரோசத்தோடு கையுழைத்து ஜீவிக்கலாம்.

சொந்த நிலமென்றாலும் கூலி உழைப்பைவிட - அதிகமாக வல்லவா இதில் ஈடுபடுத்தி உழைக்க வேண்டியிருக்கிறது? அப்படியுழைத்தும் நிம்மதியான வாழ்க்கை இல்லை. நிலச் சொந்தம் என்கிற ஒன்றுக்காக நிம்மதியற்ற வாழ்க்கை வாழ் வதைவிட நிலமில்லாமல் கூலி ஜீவனம் செய்து வாழ்ந்து விட்டால் போதுமென்றிருக்கிறது. அவன் மனம் எப்படியெல் லாமோ குழம்பியது.

தன் மகன் கந்தனிடம் யோசனை கேட்டான். உனக்கு எப்படி சௌகரியமோ அப்படிச் செய்து கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்று கூறிவிட்டான்.

'அப்படியானால் எனது ஆயுள் கால ஜீவிதம்...?' என்றும் கேட்டுப் பார்த்தான்.

'நான் இருக்கிற இடத்தில் நான் என்ன சாப்பிடுகிறேனோ அது நிச்சயம் உண்டு' என்று கூறிவிட்டான்.

தான் பட்டினி கிடந்து செத்தாலும் அப்படிப்போகும் நிலை ஏற்படாது என்று தனக்குள் வைராக்கியம் கூறிக் கொண்டான்.

இனி அவன் நிலத்தை விற்கத் தீர்மானித்து விட்டான்.

அது அவனின் உளப்பூர்வமான தீர்மானமல்ல. ரோசமுள்ள ஒரு விவசாயிக்கு அதைத் தவிர மாற்றுவழி கிடையாது.

நிலம், மாடு, கன்றுகள் அனைத்தையும் விற்றுவிட்டான். கடனுக்கும் வட்டிக்கும் விற்ற பணம் சரியாகி விட்டது. முப்பது சதம் வட்டியல்லவா கொடுத்துத் தீர்த்தான்!

*நிலத்தை விற்றுவிட்டு, வெறுங்கையோடு எப்படி வீட்டிற்குச் செல்வது என்ற மனவேதனையில் ஒரு ஐம்பது ரூபாயாவது வட்டியில் குறைத்துக் கொள்ளும்படி வட்டிக்காரனை மன்றாடிப் பார்த்தான். மூவாயிரம் ரூபாய் கடனாகக் கொடுத்து விட்டு ஆறாயிரம் ரூபாய் பெறுபவனுக்கு ஒரு ஐம்பது ரூபாய் வட்டியில் குறைத்துக் கொள்வதற்கு மனம் இடம் கொடுக்க வில்லை. கடைசியில் பத்து ரூபாயை எடுத்து, "இந்தா நல்ல மனுசன்னு உனக்கு இதக் கொடுக்கறே. என் கையாலே தர்மம் ஒரு பைசாக் கொடுத்தாலும், ஒரு ஆயிரம் கொடுத்தாலும் ஒண்ணுதா. எங்கையாலே ஆருக்கும் தர்மம் கொடுக்கறதில்லே. கொடுத்திட்டா அவெ குபேரனாயிடுவா" என்று கூறிக் கொடுத்தான்.*

*எவர் தர்மத்திலும் இதுவரையிலும் வாழ்ந்தறியாத மாரப்பனுக்கு இந்தக் கந்துக்காரனின் பேச்சு அவனுள் மான உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்தது கசாப்புக்கடைக்காரன் அகிம்சா தர்மம் பேசுவது போலப் பட்டது. அவன் நீட்டிய பத்து ரூபாயை வாங்கிக் கசக்கி வீசியவனாக, "பட்டு மெத்தை யில் படுத்திருந்தாலும் நாயக் கொண்டாந்து மெத்தையில் வுட்டா நரவலத் தேடித்தானே ஓடும்? உங்கிட்டே இருக்கிற காசு மந்தையிலே இருக்கிறதும் ஒண்ணுதா" என்று ஆத்திரமும் அழுகையும் பொங்கக் கூறிவிட்டு அவனை விட்டு அகன்றான்.*

*இந்த ஐம்பது ஆண்டு காலத்தில் அவன் கரங்கள் எத்தனை ஆயிரம் பேருக்கு உணவளித்திருக்கும்? எத்தனை பொதி தானியங் களை விளைத்துக் குவித்திருக்கும்? எத்தனை பரதேசிகளுக்குக் கைகூசாமல் களத்து மேட்டுக்கு வந்து விட்டால் வாரிக் கொடுத் திருக்கும்? இவற்றையெல்லாம் அவன் தர்மமாகவே கருத வில்லை. விவசாயியாகப் பிறந்து விட்ட ஒவ்வொருவனுடைய கடமை என்று கருதினான்.*

*அவன் இதுவரை பிறரிடம் கடன் கேட்டிருக்கிறான். பிச்சையோ யாசகமோ கேட்டதில்லை. அசலுக்கு அசல் வட்டி கொடுத்திருக்கிறான். தனக்குக் கொடுத்த பணத்தை விட, தான் செலுத்தும் வட்டி மிகமிக அதிகம் என்று தெரிந்துங்கூட ஏற்றுக் கொண்ட வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டி சொத்தையே இழந்திருக்கிறான். தான் சாக நேர்ந்தாலுங் கூட நாணயஸ்தனாக வாழவேண்டுமென்று நினைத்தான். அப்படிப்பட்டவனுக்குத் தான் அவனைப் போன்றவர்களின் உழைப்பில் மட்டும் வாழ்பவன் தர்மம் கொடுப்பதாகச் சொல்கிறான். என்ன விந்தை! என்ன கொடுமை!*

தான் இந்த ஊரை விட்டே போய் விட்டால் மனச்சாந்தி யாவது கிட்டுமென்று நினைக்கிறான். இங்கு கூலி வேலைக்கு இடமிருந்தும் மனம் மறுக்கிறது. சொத்து வைத்துப் பிழைத்தவனல்லவா?

இரண்டொரு கிணற்றைத் தவிர எல்லாக் கிணறுகளும் வறண்டுவிட்டன. நல்லவேளையாக ஊர்க்கிணற்றில் வறட்சி யேற்படவில்லை. ஊர்க்கிணற்றில் வறட்சி ஏற்பட்டிருப்பின் தண்ணீர்க்காகவே பண்ணையாரிடம் உழைப்பை விற்க வேண்டி வந்திருக்கும்.

மரங்களெல்லாம் தழையுதிர்ந்து விதவைக் கோலம் பூண்டிருந்தன; புஞ்சை மண் பொடிந்து பெரு மூச்சு விட்டு நடுங்கியது. தோட்டத்து வயல் மண்வெடித்து நெருப்பில் வாட்டிய பன்றியின் உடலைப் போல காட்சியளித்தது. காய்ந்த புதர்களும் தழையுங்கூட பூமி பரப்பிலின்றி கால்நடைகள் துவட்டித் தின்று விட்டன. வற்றியுலர்ந்த மாடுகள் சில வேளைகளில் மண்ணைக்கூடக் கறண்டு கொண்டிருந்தன.

தன்னுடன் இது காலம் வரையில் வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும் அவனை விட்டுப் பிரியாமல் அவனுக்கு ஒரு ஊக்கமும் உத்வேகமும் அளித்து வந்த நம்பிக்கையும் ஆதர்சமும் ஊட்டி வந்த அந்த நிலத்தை நிரந்தரமாகப் பிரிந்து செல்லப் போகிறான். ஒரு விவசாயி எதனிடமிருந்து வேண்டுமானாலும் பிரிந்து விடுவான். நிலத்திடமிருந்து மட்டும் அவனைப் பிரிப்பது அவ்வளவு சுலபமல்ல. அவனுக்கு அது உயிர் போவது போலத்தான்.

மாலைநேரம். குங்குமச்சிவப்பை மேற்கு வானில் வாரி இறைத்தது போலச் செவ்வொளி படர்ந்த நேரம் செல்லச் செல்ல வெளிர்மை தட்டிவருகிறது. மேல்காற்று உஸ் என்று வீசுகிறது. அழுக்கு படிந்த மேகத்திட்டுகள் பிசிறு பிசிறாகப் பிய்ந்து எங்கோ சீராட்டுப் போகின்றன. நீரூற்றுள்ள தோட்டங் களில் மட்டும் திட்டுத்திட்டாகப் பசுமை காட்சியளிக்கிறது. கோடைப்பட்டச் சோளம் தன் சிகப்புக் கொண்டையை ஆட்டியபடி காற்றில் ஒய்யார அசைவு கொடுக்கிறது. காற்றின் அரவணைப்பால் ஏற்படும் உடல் சிலிர்ப்பில் தோகைகள் சலசலக்கின்றன. அதன் அரவணைப்பு நீங்கி இடைவெளி ஏற்படும் பொழுது 'உஸ்' என்ற விரகதாபப் பெரு மூச்சுப் போல சத்தம் எழுந்து மறைகிறது. கிளிகள் அதன் கொண்டையில் அமர்ந்து தாயின் தலையில் குழந்தை குனிந்து முத்தமிடுவது

போல, பால் முற்றாத சோள மணிகளைக் கவ்விச் சுவைக் கின்றன. கூடு தேடிச் செல்லும் பறவையினங்கள் புரியாத மொழியில் மென்மையாகவும் குழைவாகவும் வேதனையாகவும் கரடு முரடாகவும் பேசியோ புலம்பியோ பாடியோ சீறியோ செல்கின்றன. அந்தச் சம்பாத்தியம் நிறைந்த குடும்பங்களிலும் மனிதனுக்குள்ளது போன்ற கவலைகளோ, மனஸ்தாபங்களோ பூரிப்போ இருக்கலாமல்லவா?

அவன் தன் நிலத்தில் காலடி எடுத்துவைத்து நடக்கிறான். கோபங்கொண்டு பெரு மூச்சு விடும் மனிதனைப்போல மாலை நேர உஷ்ணப் பெருமூச்சை அது மூர்க்கமாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. அது அவன் பிரிவதை நினைத்துத் துக்கப் படுவது போல அதன் இதயத்தில், உடலில் நரம்புகள் பிரிந்து செல்வதைப் போல வெடித்து வெம்பிக் கிடந்தது. பொடிந்த அதன் மேல் மண் அவனைப் பார்க்க மனமில்லாமல் காற்றில் வேகமாகப் பறந்து மறைந்து கொண்டிருந்தது. ஒரு அக்காண்டிப் பறவை நெஞ்சு விம்ம சோக ஒலி எழுப்பியபடி அவன் தலைக்கு மேல் பறந்து சென்றது. தழையடர்ந்த வேப்ப மரக்கிளையில் ஒரு செம்பூத்து ஜலதரங்கம் மீட்டுவது போல காதல்கீதம் இசைத்தது. பட்டிக்கு ஆடு ஓட்டிச் செல்லும் சிறுவர்கள் காவல் நாய்களை கூப்பிடும் "த்வோ, த்வோ" என்னும் சத்தம் திசைக்குத் திசை மாறி எதிரொலித்தது. குட்டிகளைக் காணாத ஆடுகள் அடிக்கொரு தரம் கத்திக்கொண்டு அங்குமிங்கும் ஓடிக்கொண் டிருந்தன. எங்காவது நீரோட்டமுள்ள கிணறுகள் ஏற்றம் இறைக்கும் உருளைகளின் கிறீச்சிடும் சப்தமும், மாடு ஓட்டுபவன் அவைகளை அதட்டும் ஓசையும் கேட்டன.

அவனுடைய கவனத்தை அவைகளால் கவர முடியவில்லை. அவனுடைய சிந்தனை பூராவும் நிலத்தைப் பிரியப் போகி றோமே என்ற கவலையின் வயப்பட்டே கிடந்து தத்தளிக்கின் றன. அவன் தன் ஆயுளிலேயே இப்படியொரு பிரிவை மனவேதனையை அடைந்திருக்க முடியாது.

வயலில் இறங்கி வரப்பின் மீது ஏறி நின்ற அவன் மனத்தில் எத்தனை விதமான கடந்தகாலச் சம்பவங்கள் எழுந்து அலை மோதின? எத்தனை விதமான அனுபவங்கள் குரல் கொடுத்தன.

அவன் எத்தனை முறை இந்த வயல் வரப்புகளின் மீது நடந்து சென்றிருப்பான். அவன் வரப்பினூடே நடந்து செல்லும் பொழுது முற்றித் தலை சாய்த்த தங்க நிற நெற்கொண்டைகள் பணிவடக்கத்துடன் அல்லவா தலைதாழ்த்தி வரவேற்கும்;

அவன் நடக்கும் பொழுது காற்றினால் எழுந்த அசைவில் அவை ஒலிகிளப்பி அவனுடைய சேறு படர்ந்த பாதத்தை நோக்கித் தாழ்ந்து ஏதோ ரகசியம் பேசுவது போலல்லவா குனிந்து தாழும். அவைகளுக்கு அவனை நன்கு தெரியும்; காலங் காலமாகத் தங்களின் வாழ்க்கையில் எவ்வளவு அக்கறை செலுத்தி வந்திருக்கிறான் என்பதைப் பற்றி வயலில் கொஞ்சம் தண்ணீர் இன்றிக் காய்ந்தாலோ, போதிய ஊட்டமின்றி வெளுத்துக் குன்றினாலோ, நோய் பட்டுக் கருகினாலோ, காற்றின் வேகத்தால் கீழே சாய்க்கப்பட்டாலோ, அவன் தன் குழந்தைக்கு நோய் வந்தால் தெய்வங்களை வேண்டிக் கொள்வது போல வெள்ளாமைத் தெய்வமான கருப்பனாரை வேண்டிக் கொள்வதும், கடவுளை நினைத்துக் கொள்வதும் அவைகளுக்குத் தெரியாததல்ல. அவைகள் அவனை வரப்பின் மீது காணுந் தோறும் மானசீகமாக வாழ்த்தி வணங்குவது போலத் தலை தாழ்த்தும். அவன் அதைப்பார்த்துப் பெருமிதம் கொள்வான். அந்த வளமிக்க காலங்களெல்லாம் கதைகளிலோ, கனவிலோ கண்டது போல் ஆகி விட்டன. இனி அப்படிப்பட்டதொரு அனுபவத்தை என்றைக்குக் காணப்போகிறான்?

தன் உயிர் இதுவரையிலும் நிலைத்திருப்பதற்கே காரணமான அந்த நிலத்திடம் மானசீகமாக விடைபெற்றுப் போவதற்காக அங்கு வந்து நிற்கிறான். அவன் மனதில் தான் எத்தனை விதமான போராட்டங்கள்! சிந்தனைகள்!....

ஒரு மனுசன்னு பொறந்தா அவனுக்கு ஒரு பொம்பளை எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் வேர்வை சிந்தி ஒழைக்கிற வெவசாயிக்கு நெலம் சொந்தமா இருப்பதும். ஆ! அப்படியிருந்துட்டா நவநவ்மான கொளந்தைகளை அவ பொறப்பிச்சு இந்த ஒலகத்துக்குத் தருவான் தெரியுமா? ஒலகத்தையே சொர்க்கமாக்கிக் காட்ட மாட்டானா என்ன? வேர்வை சிந்தி ஒழைக்காதவங்கிட்டே இருக்கிற நெலமெல்லாம் அவனுக்கு அது பொண்டாட்டியைப் போல அல்ல; வேசியைப்போல. வேசியும் பொண்டாட்டியும் ஒண்ணாவ முடியுமா?

- அவன் வாய் என்னென்னவோ முணு முணுத்தது. நெற்றியிலிருந்து பாதம் வரையிலும் வியர்வை பெருக்கெடுத்தது. அவன் முகம் விகாரமாக சுளிப்புற்றிருந்தது. நெற்றிப் பொட்டில் நரம்புகள் துடித்துக்கொண்டிருந்தன. பாதத்துக்கடியில் வியர்வை சுவறிய அந்த மண் மறைந்தது. குனிந்து எதையோ தேடுவது

போல உற்றுப் பார்த்தான். திடீரென்று ஒருபிடி மண்ணை அள்ளி வேட்டியின் ஒரு தளவில் முடிந்து கொண்டு காற்றில் உந்தித் தள்ளப்படுபவனைப் போல அடிபெயர்ந்து தள்ளாடி நடந்தான். கண்களில் மட்டும் ஏனோ கண்ணீர் வரவில்லை. வைராக்கியம் மிகுந்த ஒரு உறுதியே அதில் ஜ்வலித்தது. வியர்த்து ஈரம்படிந்த பாதங்களின் ஓரத்தில் ஒட்டியிருந்த அந்த மண் மட்டும் அவனது உடலைப் புல்லரிக்கச் செய்தது.

அவன் வாழ்நாள் பூராவும் இணைந்திருந்த நிலத்திடம் விடை பெற்றுக் கொண்டு விட்டான். அவ்வளவு சுலபமாக என்றென் றைக்குமே அதைப் பிரிய நேரிடும் என்று அவன் எண்ணிய தில்லை. பஞ்சம் பிழைக்க வேற்றூர் சென்றாலும் கூட ஒரு வருடம் கழித்தோ இரண்டு வருடம் கழித்தோ- காலம் செழித்த வுடன் வந்து விடலாம். ஆனால் நிலத்தை விற்றது அப்படி யல்லவே. இனி அதை என்றைக்கு விரும்பினாலும் அவனால் அதனுடன் உறவாட முடியாது. சொந்தங் கொண்டாட முடியாது. அப்படிப்பட்டவனின் கையில் அது சிக்கிக்கொண்டு விட்டது. அவன் வீடு நோக்கி நடந்தான்.

# 29

வசந்த காலக் காலை நேரம். ஊஞ்சைப்பூவும் வேப்பம் பூவும் கலந்த வாசம் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. வானம் மந்தாரமாக வழக்கத்துக்கு மாறாக இருண்டு கறுத்தது. எந்த நிமிசத்திலும் மழை பெய்ய ஆயத்தமாக இருப்பது போல வெளுத்து தூரத்தில் நீர்க்கால் பாய்ச்சியது. மண் வெளிப்படுத்தும் ஆவியுடன் மழை மணந்தது.

பூமிப்பரப்புக்கு மேல் இரவில் கரையான்கள் எழுப்பிய கூட்டைக் கோழிகள் கிளறிக் கொண்டிருந்தன. கூரைச்சிட்டுகள் மண் புழுதியில் படுத்து இறக்கைகளை விரித்து மண்ணை அலம்பித் தூற்றிக் கொண்டிருந்தன. கீழே படுத்திருந்த ஒரு பெட்டை நாயைச் சுற்றி நான்கைந்து கடுவன் நாய்கள் காவல் காப்பது போலக் குந்தியிருந்தன.

வழக்கம் போல் அந்த கிராமத்தின் காலை நேர இயக்கம் வெகு சுறுசுறுப்பாகவே இருந்தது. ஆண்களும் பெண்களும் வேக வேகமாக ஊர்க் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு சென்றனர். வீடு வாசல் பெருக்கினர். கம்பு சோளத்தைக் களி சமைப்பதற்காகச் செக்கிலிட்டுக் குத்தினர். மாடுகளுக்குப் பருத்திக் கொட்டையாட்டினர். எருதுகளைப் பிடித்துக்கொண்டு தோட்டம் காடுகளுக்கு ஏற்றம் இறைக்கவோ, உழவோ சென்றனர்.

மாரப்பன் வீட்டில் மட்டும் ஒரு வித தேக்கம், சோகம், அமைதியின்மை குடி கொண்டிருந்தது. மாரப்பன் திண்ணை மீது குத்துக்கால் பாய்ச்சி கிழக்குப் பார்த்து அமர்ந்திருந்தான். மாரக்காள் அருகில் இருந்தாள். கோமாளிக் கிழவர் இருவரையும் பார்த்தபடி கீழ்ப்புறத் திண்ணையில் தென்மேற்குத் திசையைப் பார்த்து அமர்ந்திருந்தார்.

"உடைப்பு விழுந்த வயலில்தான் மண் அடித்துக் கொண்டு செல்லும், நஷ்டம் மிகுந்த குடும்பங்களில் தான் கஷ்டங்கள் பெருகும் போலிருக்கிறது" இல்லையென்றால் மாரப்பன் வாழ்வில் இத்தனை கஷ்டங்கள் நேர்ந்திருக்க வேண்டாமே!

அவன் குழந்தைகளை கஷ்டமும் வறுமையும் நேர்ந்த காலத்திலெல்லாம் எவ்வளவு அன்போடு வளர்த்துக் காப்பாற்றி யிருக்கிறான். யாராவது சிறு தின்பண்டங்கள் வழியில் கொடுத்தால் கூட அதைத் தின்னாமல் வேட்டித் தலைப்பில் முடிந்து முண்டாசில் கட்டிவைத்திருந்தல்லவா குழந்தைகளைக் காணும் போது எடுத்துக் கொடுப்பான். கரைத்த சோற்றைத் தெளிய வைத்துவிட்டு சோற்று வண்டலைக் குழந்தைகளுக் கல்லவா பரிவோடு ஊட்டுவான். அப்படி அவன் நேசமுடனும், பாசமுடனும் காத்து, வயது தளர்ந்த பிற்காலத்தில் தங்களை அவர்கள் பாதுகாப்பார்கள் என்று எண்ணிய மனக்கோட் டைகள் தகரும்படி சம்பவங்கள் நடந்துவிட்டால் அந்த உள்ளம் பதறாதா என்ன?

தன் குடும்ப பாரத்தைத் தன் மகன் எடுத்து நடத்தி, தான் இதுகாறும் பட்டு வந்த மன உளைச்சலிலிருந்து விடுதலை தருவான் என்று எதிர்பார்க்கப்பட்ட மகன், தன்னையும் குடும் பத்தையும் விட்டு விட்டு அந்தப் பறைச் சிறுக்கியைக் கூட்டிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டான் என்ற செய்தியை இன்று விடியற்காலையில் அறிந்ததும் அவனது சப்த நாடிகளும் சற்று ஒடுங்கின. மனம் பதைத்தான். உள்ளம் வேதனையுற்றது. அவன் இத்தனை காலம் கட்டிக்காத்து வந்த சமூக சம்பிரதாயக் கோட்டைகள் இடிந்து சரிந்து தூளாகி விட்டன. அவன் எப்படி தன் சாதி சனங்களின் முன்னால் தலை நிமிர்ந்து நடப்பான்?

நிலம் கை விட்டுப்போன வேளையில் இது வேறு துக்கமா?

எந்த அவக்கேட்டை வேண்டுமானாலும் அவன் பொறுத்துக் கொள்வான். வருவோர் போவோர் எல்லாம் "இந்தக் காலத்துப் பிள்ளைகள் இப்படிக் கொளுத்துப் போயித் திரியப்படாது. மேசாதி கீசாதின்னு பாக்காமெ போயிம் போயி பறச்சியையா கூட்டிக்கிட்டுப் போறது? மாரப்பா நீ வாங்குன பூசாபலன் அப்படி என்ன இருந்தாலும் இன்னமே உனக்குத் தலை ஏறக்கந்தா" என்று கூறுவதை அவனால் தாங்கிக் கொண்டிருக்க முடியவில்லை.

தன்னையறியாமல் தன் மகன் இப்படியொரு முடிவெடுத்து விட்டது. அவன் மனதுக்குப் பெரும் வேதனை அளித்து வந்தாலும், அதையெல்லாம் விட வருவோர் போவோர் ஏதோ அவனுக்கு அனுதாபமும் ஆறுதலும் கூறுபவர்கள் போலத் தங்களின் குறுகிய பொறாமைக் குணத்தையும், பிறர் துன்பத்தில் மகிழ்ச்சியடையும் சிறுமைத்தனத்தையும் கண்டுதான் பெரிதும்

துன்பப்பட்டான். தன் மனது தன் மகனின் நடத்தை தப்பு என்று சபித்துக்கொண்டிருந்தாலும், தன்னுடைய வேதனைத் தீயில் குளிர்காய முனைபவர்களை நோக்கி 'ஆமா, அவெ அப்படிப் போனதாலே என்ன தப்பு? அவெ பறச்சியைத்தானே கூட்டுக் கிட்டுப் போயிட்டான்? உங்களாட்ட ஒருத்தருக்கும் தெரியாமே ராத்திரியோட ராத்திரியா போருச்சந்துலயும் சோளக் காட்டுல யும், இழிந்த சாதின்னு எதுவுமே மிச்சம் வெக்காமெ மேஞ்சிட்டு பத்தினி வேசம் போடலியே? அவெ தன்னப் பொறுத்தவரையும் நேர்மையான காரியம் செய்திருக்கிறான்' என்று தொண்டை கிழியக் கத்த வேண்டும் போல இருந்தது அவனுக்கு. இருந்தா லும் அந்த உணர்ச்சிக் கொந்தளிப்பின் பலவீனம், எங்கே அவனையறியாமல் நடந்தேறிவிட்ட அவன் மகனின் செயலை அவன் மனதறிந்தே செய்யவைத்து விட்டு நியாயப் படுத்துக் கிறான் என்று ஊரார் எண்ணி சமூகவிலக்கம் செய்து வைத்து விடக் கொண்டு சென்றுவிடுமோ என்று பயப்பட வைத்தது.

வேட்கை மிக்க மக்கள் கூட்டத்தின் உடல் உணர்ச்சிகளுக்கு மட்டும் எந்த வித்தியாசமும் இருப்பதில்லை. ரத்தமும் சதையு முள்ள கவர்ச்சி மிக்க உடல் இருந்துவிட்டால் அங்கு தீண்டாமையும் ஏழ்மை வித்தியாசமும் கிடையாது. எல்லாம் சௌகரியத்துக்குப் பங்கமேற்படாமல் இருக்கும் வரை விருப்பமானதே. மாறுபட்டால்தான் எல்லாச் சம்பிரதாயங் களும், சாஸ்திரங்களும் வந்து சேரும். இவைகளின் விஷமமிக்க கருத்துகள் யாவும் வசதி படைத்த சுரண்டும் கூட்டத்தின் கண்டு பிடிப்புகள் போலும். இல்லையெனில் அவர்கள் படைத்து தூர ஒதுக்கி வைத்துள்ள மக்களிடத்தில் உடலுறவைத் தவிர மீதி விஷயங்களில் அவர்களை ஒதுக்கித் தூர வைப்பதன் நோக்கம் என்ன?

கந்தனின் நடவடிக்கைகள் ஊரில் சிலரின் கொள்ளிக் கண்களில் படத் தவறவில்லையென்றாலும் இப்படியொரு துணிவான நடவடிக்கை அவர்கள் எடுப்பார்கள் என்று அவர்கள் கருதவில்லை. அப்படி ஈடுபடுபவர்கள் வழக்கம்போல கண்டும் காணாமல் என்ன செய்வார்களோ அப்படியேதான் இவர்களும் செய்வார்கள் என்று கருதியிருந்தனர். ஆனால் அவர்கள் மேற்கொண்டதோ அந்த கிராமத்தின் சரித்திரத்தி லேயே இந்தச் சம்பவம்தான் முதலாவது. அப்படியானால் அந்த ஊர் வாயில் அந்தக் குடும்பம் எப்படியெல்லாம் சிக்க வேண்டி யிருக்குமோ?

இந்த மனோவேதனையில் சிக்கியிருந்த மாரப்பனையும் மாரக்காளையும் பார்த்துத்தான் கோமாளிக் கிழவர், "நடந்து

போனதுக்காகவா வருத்தப்பட்டு என்ன செய்யறது? அதுந் தலச் சுளிப்பு அப்படியிருந்தா அது நம்ம தவறல்லவா" என்று கூறியவர் கட்டை விரலால் தேய்த்து புளிப்பும் அழுக்கும் கலந்த வாடையை முகர்ந்து பார்த்தார். அவர் புருவங்கள் மேல்நோக்கி உயர்ந்து எதையோ அசூசையுடன் வெறுப்பது போலச் சுளிப்போடின.

"அதப் பற்றிக் கவலைப்படலே, வளத்தற கடமையை வளர்த்துட்டோம். அப்புறம் அவந் தலையிலே அவனே மண்ண வாரிப் போட்டுக்கறதுன்னா நாம என்ன செய்ய முடியும்? ஆனா நாங்க பயப்படறதெல்லாம் இந்த ஊரு பேசறது இருக்குதே அதுக்காவத்தா" என்று நிறுத்திக் கிழவனை ஏறிட்டு நோக்கிய மாரப்பனின் கண்களில் இருந்து கண்ணீர் பொல பொலவென் வடிந்தது. துக்கத்தினால் தொண்டையடைக்க விம்மினான்.

மாரக்காளும் பொங்கி வந்த துயரை அடக்க முடியாதவளாக வாயில் முந்தானைச் சேலையின் தலைப்பைத் திணித்தபடி சப்தமில்லாமல் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள். பெற்ற பாசத்தின் ஆதங்கமும், ஊர் பழிச்சொல்லின் வேதனையும் அவளது இதயத்தைக் குழப்பியடித்து அணு அணுவாக அறுத்துக் கொண்டிருந்தது. வேறொரு சந்தர்ப்பமாக இருந்தால் இப்படிப்பட்ட பழிச்சொல் யாரிடமிருந்து பிறப்பெடுத்து வடிவெடுத்துப் புறப்பட்டதென்று துருவில் பிடித்து மூல இடத்தைச் சென்றடைந்து, அவர்களைச் சந்திக்கிழுத்து வந்து மான பங்கப்படுத்தியிருப்பாள். ஆனால் இது கூறிச் சமாதானப்படுத்த முடியாத நடவடிக்கையாய் இருக்கிறதே!

"வெனை வெதச்ச வேதனையை அறுத்திட முடியாதே? இப்படிப் பேசறவங்களுக்கும் ஒரு நாளைக்கு இக்கதி வந்தே தீரும்" என்றார் கிழவர்.

"அதப்பத்தி இல்லேப்பா, விதி அப்படியிருந்தா ஆரை வுட்டுது. என்னமோ அவுங்க இஷ்டப்பட்டாங்கோ போயிட் டாங்க. ஆனா ராவும் பகலுமில்லாமெ கண்ணாலம் பண்ணாத சிறுக்கி சக்கிலிப் பறையனோட கும்மாளம் அடிச்சிட்டு வவுத்திலே வாங்கிக்கிட்டு எருங்கலங் குச்சியை துணுச்சுக்கிட்டு நோவு தாக்குன கோழியாட்டக் கெடக்குறாளுவ, அதவிடவா! இது பயங்கரமாப் போச்சு, ஆம்பளை ஒண்ணச் செஞ்சாலும் பின்னாடி அது மறைந்து போயிடும்" என்று விரக்தியினால் ஏற்பட்ட சோர்வும், அதிருப்தியும் கலந்த குரலில் பற்றற்றவள் போல் பேசினாள் மாரக்காள்.

"அது நெசந்தா, பரம்பரையா ஏற்பட்டிருக்கற கட்டுக்குள் ளேயே எத்தன நடந்தாலும் அது கெட்டதாப்படாது. அதை மீறிப் போவும் போதுதா அது தப்பாப் படுது. எந்தப் பணக்கா ரங்க அவுங்க கைவேலை, கால்வேலை, கூலிவேலை செய்யற கட்டான கீழ்சாதிப் பொம்பளைங்ககிட்டே சகவாசம் வச்சுக்கா திருக்கறாங்க? எல்லாம் கையிலே ரெண்டு காசு இருந்திட்டால் பேச்சு வராது." என்று கூறி சற்று நிறுத்தியவர், வாயில் இருந்த எச்சிலைத் துப்பி விட்டு ஏதோ யோசனையில் இருந்து விழித்த வராக 'நம்ம பக்கத்தூரு ஜமீந்தாரு மவளோட கொளுந்தியா, அவுங்க பண்ணையிலே மாடுமேய்ச்சுக்கிட்டு இருந்த சக்கிலிய னோட ஓடிப் போயிட்டா. இவுகளும் காரு போட்டுக்கிட்டு ஒரு மாசமாகத் தேடாத எடமில்லை. அப்புறம் எப்படியோ கண்டு பிடிச்சுக் கொண்டாந்து பட்டணத்திலே உள்ள சொந்தக் காரங்க வூட்டிலே வச்சிருந்து அவ பேருலே லட்ச ரூபா மதிப்புள்ள நெலத்தை எழுதிவச்சு ஒரு படிச்ச மாப்பிள்ளைக்குக் கட்டிக் குடுத்துட்டாங்களாம். அவெ இப்போ எங்கேயோ சில்லாக்கலைக்டரா இருக்கறானாம். ஆனா ஒண்ணு பாரு. கண்ணாலம் பண்ணுன ஏழாவது மாசத்திலேயே கொழந்தை பொறந்துட்டதாம். அதுவும் அந்த சக்கிலியன் மாதிரியே இருந்ததாம். அதனாலே அந்தக் கொழந்தை பொறந்ததிலிருந்து அதெ இங்கே கூட்டி வரவே இல்லியாம். இதெல்லாம் பாத்தா எனக்குக் கூட இதெல்லாம் பொய்யான பொளப்பாப்படுது. நெஞ்சுக்கொவ்வாத ஒண்ணெ மறபொருளாச் செய்யறதவிட பகிரங்கமாகவே செஞ்சுடறது அவ்வளவு பெரிய தப்பில்லெ" என்றார்.

கிழவர் என்ன சொல்கிறார் என்பதை மாரப்பனால் புரிந்து கொள்ள முடிந்தாலும், மாரக்காளால் புரிந்துகொள்ள முடிய வில்லை. இருந்தாலும் அவள் ரத்தத்திலே ஊறிப் போயிருந்த ஜாதி வேற்றுமை ஏற்படுத்தியிருந்த எண்ணங்களே அவள் உள்ளத்தில் மகனின் செய்கை மீது ஒருவித வெறுப்பையும், சினத்தையும் மூட்டவே செய்தன. தன் இனத்தார்கள் கேவல மாகப் பேசுகிறார்கள் என்று எண்ணியபோது ஏற்பட்ட மனோநிலைக்கு மாறுபட்ட விதத்தில் இப்பொழுது எண்ணங் கள் உதிக்கலாயின. கோபத்தில், உணர்ச்சி வேகத்தில், யதார்த் தத்துக்கு மாறுபட்ட விதத்தில் எண்ணங்கள் உருவாயினாலும் நிதானித்துச் சிந்தித்துப் பார்க்கும் பொழுது தனது மகன் செய்த காரியம் பேதம் மிக்க சமூகத்தின் முன்னால் தலைகுனியக் கூடியதே என்று கருதினாள்.

*கிழவரைப் பார்த்துக் கூறினாள்:*

*"என்னத்தா இருந்தாலும் இன்னமே நம்ம பையனுக்காவப் பார்த்து பறைச்சியே மருமவளா வூட்டுலே வச்சுக்க முடியுமா? அதை விட நானுக்கிட்டுச் செத்துடறது மேலு. என்னைக்கு அவெ நம்ம வூட்ட விட்டுப் போயிட்டானோ அன்னைக்கே அவெ செத்துப் போயிட்டான்னு நெனைச்சுக்க வேண்டியது தா. இந்த வைராக்கியத்தோட இருந்திட்டா ஊரு ஒலவத்திலே பத்துப்பேருகிட்டையாவது மட்டும் மரியாதையும் இருக்கும். செத்தாலும் நம்ம சாதி சனம் வந்து எடுத்துப் போட்டுப் பொதைக்கும்" என்றாள்.*

*கிழவர் சாந்தமாக, "இப்ப என்னம்மா குடி முழுகிப் போச்சு? நம்ம சாதி சனம் தள்ளி வைச்சுட்டா பொணம் போவாதா?" என்றார்.*

*கிழவரின் மனவோட்டம் என்னவென்று புரியவில்லை. இந்த முறையை ஆதரிக்கிறாரா? அல்லது எதிர்க்கிறாரா? எந்தக் கருத்தையும் அவர் பதிலிலிருந்து கண்டுகொள்ள முடியவில்லை. பொட்டல் பரப்பாய்க் கிடக்கும் நிலத்தில் மழை பெய்தவுடன் பச பச வென்று புற்கள் துளிர்ப்பது போல், வாழ்வில் எவ்விதப் பிடிப்புமற்ற அவர் உள்ளத்திலுள்ள புதிய கருத்துகள் துளிர்விட ஆரம்பித்து விட்டனவோ?*

*அதை எப்படிச் சொல்ல முடியும்?*

*ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அந்தப் பகுதியின் மக்கள் தொண்டரான சம்பந்தம், அந்தப் பக்கம் வந்து போகும் போதெல்லாம் கிழவரைச் சந்திக்காமல் போவதில்லை. சம்பந்தம் கிழவரிடம் என்னென்னவோ விசயங்களைப் பற்றி யெல்லாம் பேசுவதையும் கிழவர் சில நேரங்களில் "என்னமோ எங்காலமெல்லாம் முடிஞ்சுப் போச்சு. இன்னைக்கோ நாளைக் கோன்னு உசிரு இருக்குது. நானு இந்த விசயத்தையெல்லாம் புரிஞ்சு விவாதிச்சு என்ன ஆவப் போவுது? எப்படியோ நீ சொல்றலாப்பலே எல்லாரும் வித்தியாசம் இல்லாமெ பொளைச்சா நா செத்துப் போயிட்டாக் கூட என்னோட ஆவி மேல் லோகத்திலே இருந்து வாழ்த்தும்" என்று கூறுவதைப் பலர் கேட்டிருக்கிறார்கள்.*

*மேலும் கிழவர் அவனைக் கிண்டிவிட நினைப்பவர் போல "நீ சொல்றதே சரிதான்னே வச்சிக்குவோம். கொஞ்ச நாளைக்கு முன்னாலே பாலக்கரைக்கு மந்திரி வந்தாரே தெரியுமா? அவரு அசல் பறச்சாதி. நமக்கெல்லாம் ஜாதி யுட்டுச் சாதி கலக்கப்*

படாது. கீழ்ச் சாதிக்காரங்க வூட்டுலே சாப்படப்படாது. அவுங்களை வாசலுக்குள்ளே கூட வுடப்படாது. அப்படி இப்படியெல்லாம் கட்டுப்பாடு விதிச்சவரும் அப்படியேதும் நடந்தால், அதை அந்தக் கிராமப் பெரியத்தனக்காரங்க அவருக்கு தெரியப் படுத்தினால் அதைப் பேசி நீதி வழங்குவதுமாயிருந்த பட்டக் காரப் பண்ணையார் அந்த மந்திரியை மாலை போட்டு வூட்டுக் குள்ளே அழச்சுப் போய் பெரிய விருந்து போட்டதும் ஊருக்குத் தெரியாதா? அவுங்களுக்கு ஆரு நாயம் பேசறது? அவுங்களைப் பத்தி ஆராவது தப்பாய்ப் பேசறாங்களா?" என்றார்.

இதைக் கேட்ட மாரக்காள் ஏதோ விரும்பாத ஒன்றைக் கேட்க நேர்ந்து விட்டவள் போல முகத்தைச் சுருக்கி நெரித்துக் கொண்டு "எல்லோரையும் கவனிச்சுக்கிட்டு ஆண்டவனொருத்தெ இருக்கிறான். அவனுக்குப் பயந்து நடந்தால் போதும், ஆளுக்கட்டுப் பணக்கட்டுலே செய்யறே அடாத்துடித்தனத்தையெல்லாம் ஒரு நாளைக்கு அவெ கவனிச்சுக்குவான்" என்றாள்.

இப்பொழுது அவர்களுக்குள் எழுந்த பிரச்சனைகள் எல்லாம் குடும்பத்தை விட்டு வெளியேறிவிட்ட மகனைக் கூட்டிவந்து ஏற்றுக்கொள்வதா? அல்லது முறைப்படி ஜாதித் தலைவர்களுக்குத் தெரியப்படுத்தி அதற்கான குற்றம் குறைகளைத் தீர்த்து அவன் செத்துப்போனவனாக எண்ணிக் கருமாதி செய்து விடுவதா? என்பதுதான்.

சில நேரத்தில் பெற்ற பாசம் அவற்றை மீறியெல்லாம் கலக உணர்வு பெற்றெழும். சில நேரத்தில் வாழ்க்கை மீதுள்ள ஆசாபாசங்கள் சுற்றத்தார் மீது கொண்ட பாசபந்தங்கள் ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டு மகனைப் புறக்கணிக்கவும் துணியும்.

ஒருபக்கம் சமூகக் கட்டுப்பாடு, மறுபக்கம் மாறிவரும் சமூகக் கருத்தோட்டங்களின் அசுரத்தனமான தாக்குதல். பாசத்துக்கு இடம் கொடுப்பதா? சம்பிரதாயத்துக்கு இடங் கொடுப்பதா?

ஓ! அழிவுக்கும், தோற்றுவாய்க்கும் இடைப்பட்ட சந்திப்பில் எரிமலைக்குழம்பு போன்ற மனோவலிமைக்கு இது ஒரு சவாலோ! அந்த வலிமை எப்பக்கம் திரும்பப் போகின்றதோ? அது எப்பக்கம் திரும்பினாலும் அதன் அகண்ட உஷ்ணப் பெருக்கில் எழும் காங்கை அதன் சுற்றுப்புற அசிங்கத்தை எல்லாம் நிர்மூலம் ஆக்கக்கூடியதாகவே இருக்கும்.

✹ ✹ ✹

# பாகம் 2

## 1

**பொ**ன்னேரியை விட்டு ஒரு மைல் தள்ளி காவிரி ஆற்று வாய்க்காலில் அமைந்துள்ள பாறைக்கல் வளசு சேனாபதிக் கவுண்டர் என்றால், கேட்பவர்களின் தலைமையில் இருக்கும் முண்டாசுக்கட்டு இடுப்புக்கு இறங்கிவிடும். குதிங்கால் மோதக் கட்டுப்பட்டு இருக்கும் வேட்டி இடுப்புக்கு ஏறிவிடும். முறுக்கி விடப்பட்டிருப்பவர்களின் மீசை கலைக்கப்பட்டு வாய்க்குத் தொங்கிவிடும். காலில் அணியப்பட்டிருக்கும் செருப்பு விலக்கப்பட்டுவிடும்.

பொதுவாக அவரைப் பெரியபண்ணை என்றுதான் கூறுவார்கள்.

அவர் நூற்றுக்கணக்கான ஏக்கர் வாய்க்கால் பாசனத்திற்குச் சொந்தக்காரர். நத்தமேடு, குன்றுடையான் பாறை, ராமன் கண்மாய், வண்ணான் துறை இப்படிப் பல பத்துப் பிரிவுகள் கொண்ட அவ்வளவு நிலங்களையும் மேற்பார்வையிடக் காரியஸ்தர்கள் உண்டு.

ஒரு அனப்பு விஸ்தீரணத்துக்குக் கட்டப்பட்டிருக்கும் பழைய காலத்துத் தொட்டிக் கட்டி வீடு. கருப்புட்டிச் சாறும் கோழி முட்டையும், சுண்ணாம்பு நீரும் சேர்த்துத் தீத்தப்பட்ட சுவரில் இன்றும் கூடக் கண்ணாடிக்குப் பதிலாக முகம் பார்க்கலாம். அரண்மனை தர்பார் மண்டபம் போன்ற விசாலமான கூடங்களும், ஓய்வறைகளும், படுக்கையறைகளும், தானியக்கிடங்குகளும் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்தில் என்ன நடக்கிறது என்று தெரிந்துகொள்ள முடியாத நீண்டு பரந்த விசாலமான அமைப்புகளும் கொண்டு பார்ப்பவர்கள் பிரமிக்கும்படியாக இருக்கும். சட்டை போடாத சிவந்த மேனி; உப்பிப் புடைத்த நீண்ட முகம்; எப்பொழுதும் பிதுக்கி விடப்பட்ட தக்காளிப் பழம் போன்ற சிவந்த கண்கள். எட்டிக் கொத்துவது

போன்ற கருடமூக்கு; காதில் துளைபோட்டுத் தொங்கும் வைரக்கடுக்கன். அழகூட்டும் சிறிய தொந்தி; ஆட்டுக்கிடாய் கொம்பு போன்ற முறுக்கி விடப்பட்ட கறுத்த மீசை. இதுதான் சேனாதிபதிக் கவுண்டரின் திவ்யதோற்றம்.

அவர் புதிதாக வாங்கிய காரில் மெதுவாகப் புறப்பட்டு விட்டால் வழியில் போவார் நெடுஞ்சாண் கிடையாகச் சாலை வழியில் வணங்கியெழ வேண்டும். அப்படிச் செய்வது நிழலுள்ள இடத்தில் செய்துவிடக் கூடாது. அவர் வண்டி வருகிறது என்று தெரிந்தவுடனேயே நிழலுள்ள இடத்தில் இருந்தாலும் வெயில் உள்ள பக்கம் ஓடிச்சென்று தான் வணங்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அதே இடத்திலேயே நிற்கவைத்து சவுக்கடி தண்டனை வழங்கப்படும்.

அதிஅபூர்வமான குதிரை பூட்டிய சாரட்டு வண்டியை, சௌகரியத்துக்கு வேண்டி விட்டுவிட்டுக் கார் வாங்கிக் கொண்டாலும் அந்தப் பழைய நடைமுறைகளை விட்டுக்கொடுக்க மனம் ஒப்பவில்லை. அந்த சம்பிரதாயங்களைப் பேணிக் காக்கவில்லை என்றால் அடிமைகளிடத்திலும், கூலிகளிடத்திலும் நிலவும் எஜமான விஸ்வாசம் குலைந்துவிடும் என்று கேட்பவர்களிடம் கூறிக்கொள்வார்.

சேனாதிபதிக் கவுண்டரின் பெருமையையும் ஆதிக்கச் செல்வாக்கையும் புரிந்துகொள்ள வேண்டுமானால் கடந்த காலச் சம்பவம் ஒன்றை நினைவுக்குக் கொண்டு வந்தால் போதுமானது. சுற்றுப்புற மக்கள் அவர் பெருமையைக் கூற முயலும்பொழுது அந்த நிகழ்ச்சியைத்தான் முதலில் குறிப்பிடுவார்கள்.

அவர் சம்மதமின்றி எந்தப் போலீசும் அவர் பண்ணைக்குள்ளோ, அல்லது கிராமத்திற்குள்ளோ சென்று யாரையும் விசாரிக்க முடியாது. ஒரு முறை, அப்பகுதிக்குப் புதிதாக வந்திருந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், கவுண்டரின் பண்ணையில் அவரின் அனுமதியின்றிச் சென்று திருட்டுக் குற்றத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சிலரைக் கைது செய்து விட்டார். இதைக் கேள்விப்பட்ட பண்ணையார் ஸ்தலத்துக்கு விரைந்து சென்று இன்ஸ்பெக்டரைப் பார்த்து "யாரையா உள்ளே-என்னோட அனுமதியில்லாமல் பண்ணைக்குள்ளே நொளையச் சொன்னது?" என்றார்.

இளமைச் சுறுசுறுப்பு, சட்டத்தைப் பாரபட்சமின்றி அமுல் படுத்த வேண்டும் என்ற துடிதுடிப்பும் நிறைந்த இன்ஸ்பெக்டர்

இதைக் கேட்டதும், "எங்கே சட்டத்தை மீறிய செயல்கள் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் அவை நடைபெறாது தடுக்கிறதுதா எங்க வேலை. சட்டத்தை மீறுகிறவங்கௌக் கேட்டுக்கிட்டுக் செய்யோணும்னு எங்களுக்கு விதிமுறை இல்லெ" என்றான் கர்வம் தொனிக்கும் முறையில்.

பண்ணையார் வந்து சேர்ந்ததுமே ஒரு கட்டிலை எடுத்து வந்து வேலையாட்கள் போட்டனர். அதில் அமர்ந்திருந்த பண்ணையார் நின்று கொண்டிருந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்து அகங்காரத்தோடு, "நா யாருன்னு உனக்குத் தெரியுமா?" என்றார்.

இன்ஸ்பெக்டர் பண்ணையாரை அவமானப்படுத்தும் முறையிலான ஒரு கேலிச்சிரிப்பு சிரித்துவிட்டு, பண்ணையார் அமர்ந்திருந்த அதே கட்டிலில் அமர்ந்து, "நீங்க யாருன்னு தெரிஞ்சிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லே. யாரு சட்டத்தை மீறினாலும் தண்டனையுண்டு" என்றான்.

அவருடைய வாழ்க்கையில் இதுநாள் வரையிலும் - தான் உட்கார் என்று சொல்லாமல் எந்த அதிகாரியும் அவருக்குச் சமதையாக உட்கார்ந்து பேசியதில்லை. அதுவும் இப்படிப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர்களை என்றைக்குமே அவர் உட்கார வைத்துப் பேசியது கிடையாது; நிற்கவைத்துப் பேசி அனுப்புவது வழக்கம். பெரும்பாலும் வருகிற அதிகாரிகள் அவரைப் பேட்டி காணமுடியாமல் சில மணி நேரங்கள் காத்திருந்து விட்டு நிறைவேற்றக்கூடிய கடமைகளை நிறைவேற்ற முடியாமல் சென்று விடுவதுண்டு. அதிகாரிகள் என்றால் அவர்களை லேசில் சந்திக்காமல் அவர்களைக் காக்கவைப்பதன் மூலம் தன் அந்தஸ்தை வெளிக்காட்டிக் கொள்பவர். அப்படிப்பட்டவரின் முன்னால் ஒரு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் இப்படி நடக்கிறாரென்றால் அவருக்கு எப்படியிருக்கும்?

கோபத்தால் முகம் ரத்த சிவப்பாக மாற, புருவங்களும் உதடுகளும் துடிக்க, மீசையை முறுக்கிவிட்டபடி, தன் முன்னால் நின்ற தடித்த எடுபிடியாளைக் கூப்பிட்டு "இவனெ இழுத்துப் போயி அந்த மரத்திலே கட்டுங்கடா! இந்தத் தேவடியாப் பயலுக்குக் கொடுக்கற மரியாதையைக் கொடுத்தாத்தா ஒழுங்குப்படும்" என்றார்.

இதைக்கேட்ட அவர்களும் அப்படியே செய்தனர். பண்ணையார் கையில் சவுக்கைப் பிடித்தபடி கட்டிலிலிருந்து எழுந்து "என்னடா சொன்னே? சட்டத்தை மீறவங்களுக்கு

தண்டனையா? சட்டம் எங்களுக்காகத்தான்டா படைச்சிருக்குது. எங்களுக்கு ஆபத்துன்னு உன்னைக் கூப்பிடும்போது தான்டா நீ தலையிடணும். அப்படியில்லாமே எம் பண்ணையிலே யாரு நொழையச் சொன்னது? சட்டம் கூலிக்காரப் பசங்களை அடக்க றதுக்குத்தா. எங்களையல்ல; வெளியே எப்படி வேணும்னாலும் செஞ்சுக்கோ. இந்தப் பண்ணைக்கோ, இந்தக் கிராமத்துக்கோ வாரதுன்னா முன் அனுமதியில்லாமே கூடாது. இப்படி வந்தவ போனவனெல்லாம் மேயறதுன்னு ஆயிட்டா எனக்கிங்கே என்னதா மரியாதையிருக்கு! என்னடா தெரிஞ்சுதா? இன்ன மேயாவது புத்தியாப் பொளச்சுக்க" என்று சவுக்கால் இரண்டு வீச்சு வீசினார்.

எவரையும் எந்த நேரத்திலும் சட்டத்துக்கு விரோதமாக நடக்கும்பொழுது அடக்கிஒடுக்கும் பொறுப்பைத் தன்னிடம் சர்க்கார் ஒப்படைத்திருக்கிறதென்ற இறுமாப்புடன் நினைத்து வந்த அவனுக்குச் சட்டம் உண்மையாகிலுமே தன் கையில் இல்லை என்பதை இன்னும் புரிந்துகொள்ள முடியவில்லை.

தன்னுடன் வந்து தனக்கேற்பட்ட அவலத்தை எல்லாம் - தொண்டையில் எலும்பு சிக்கிய நாய் விழி பிதுங்கித் திணறி விழிப்பதைப் போல விழித்துக்கொண்டு நிற்கும் போலீசைப் பார்த்து "ஏய்யா! பார்த்துக்கொண்டு நிற்கிறே. ஸ்டேசனுக்குப் போ ஒயர் குடுத்து ரிசர்வைக் கூட்டிவா!" என்றான்.

பண்ணையார் இகழ்ச்சி தொனிக்க அவனைப் பார்த்துவிட்டு 'டேய் அவனையும் பிடிச்சுக் கட்டுங்கடா' என்று கூறிவிட்டு "ஓஹோ! உனக்கு அவ்வளவு தெரியுமா? நீ செஞ்சதுக்கு மன்னிப்பு கேக்கறையா? இல்லே அதுக்குத் தண்டன வாங்கிக் கிறையா?" என்றார். அவமானத்தால் உந்தப்பட்ட அவன் "அந்தப் பேச்சுத்தா இல்லே. உனக்குத் தெரிஞ்சதெச் செஞ்சுக்கோ" என்று கூறினான்.

மேற்கொண்டு கவுண்டர் எந்தவிதமான பதிலையும் எதிர்பார்க்காதவராகத் தனது அடியாட்களைப் பார்த்து "அவனோட பத்து கை விரல்லையும் துணியச் சுற்றி சீமெண்ணெய் விட்டுத் தீ வையுங்கடா" என்றார்.

கவுண்டர் மீண்டும் அவனைக் கடைசிமுறை எச்சரிப்பவர் போல "நீ நெனக்கிறமாதிரியெல்லாம் சட்டம் எடங்கொடுக் கறதில்லை. எங்கள் போன்றவர்களைப் பாதுகாத்துக்கறதுக்காவ சட்டமெல்லாமே ஒழிய, எங்களையே அடக்கறதுக்காவ இல்லெ. பாவனைக்குச் சட்டம் எல்லோருக்கும் பொதுவுன்னா

லும் அது எங்களுக்கு எதிராகக் கௌம்பற சக்தியை ஒடுக்கிறதுக்காவத்தா. இங்கே மந்திரியா இருக்கிறதும் ஜட்ஜா இருக்கிறதும் யார் தெரியுமா? எல்லா என் சொந்தக்காரங்கதா. ஒரு நாளைக்கு அவங்களுக்கும் இன்னைக்கிருக்கிற இந்த அதிகாரத்தை வுட்டுட்டு வரும்பொழுது எனக்காட்ட அவங்களுக்கும் பூர்விகமாக இருக்கிற பண்ணையம் பாய்ச்சலைப் பார்க்க கிராமத்துக்கு வந்துதா ஆகணும். அப்போ இன்னைக்கு எங்களைப் போல இருக்கறவங்களுக்கு நேருகிற பாதுகாப்புதா நாளைக்கு அவுங்களுக்கும் நேரும். நீ தப்புக்கணக்குப் போட்டே. கடைசிமுறையாச் சொல்லறே மன்னிப்புக் கேட்டுக்கோ" என்றார்.

அப்பொழுதும் அவன் 'நீ செய்யறதச் செஞ்சுக்கோ' என்றுதான் கூறினான்.

அவன், விரல்கள் தீயிட்டுப் பொசுக்கப்பட்ட நிலையில் கட்டவிழ்த்துத் துரத்தப்பட்டான். பாவம்! இன்று அவர்களுக்கெல்லாம் கட்டளை பிறப்பிக்கும் பெரிய போலீஸ் அதிகாரி, அவருடைய வர்க்கத்தவர்தான் என்பது அவனுக்குத் தெரிய நியாயமில்லை.

இப்படி எத்தனையோ பல நிகழ்ச்சிக் கோவைகளுக்கு அவர் கதாபாத்திரமாக விளங்கிவந்தார். சர்க்காரின் உத்தியோகஸ்தர்களுக்கே இந்தக் கதி என்றால் பண்ணை அடிமைகளுக்குச் சுதந்திர வாழ்க்கை என்பது இருக்க முடியுமா? சுதந்திர சிந்தனைதான் இருக்க முடியுமா?

# 2

பெரிய பண்ணையார் அன்று மாலையில் பண்ணை அடிமைகளையும் கூலிகளையும் சந்திப்பதற்காகப் பிரத்யேக மாகக் கட்டப்பட்டுள்ள பங்களாவில் அமர்ந்தார். அது குடியிருப்புப் பகுதியை விட்டுத் தூரத் தள்ளி வயற்பரப்பின் மத்தியில் அமைந்திருந்தது. தீண்டத்தகாத பாமர மக்கள் அவரை அங்குதான் காண முடியும். பண்ணையார்களின் குடியிருப்பு வீதிப்பக்கம் அவர்களின் வாடைகூடக் காற்று வாக்கில் நுழைந்து விட முடியாது.

அங்குள்ள பண்ணையார்களின் மத்தியில் கொஞ்ச நாட்க ளாகவே பீதி கிளம்பி விட்டிருக்கிறது. அது பெரிய பண்ணையா ரையும் தாக்காமல் இருக்க முடியுமா, என்ன?

காலங் காலமாகக் காப்பாற்றப்பட்டு வந்திருக்கும் அந்தப் புனிதமான சம்பிரதாயத்தை மாயாண்டி பறையன் என்பவன் அத்துமீறி விட்டான்.

அவன் சிறுவயதிலேயே சிங்கப்பூர் சென்றவன். செல்லுமுன் அவன் அப்பன் பண்ணையார் முன் கூட்டி வந்து கெஞ்சாதது கெஞ்சிக் காலில் விழுந்து சிங்கப்பூர் செல்ல அனுமதி பெற்று அனுப்பி வைத்தான்.

அது நடந்து இருபது வருடங்கள் முடிந்துவிட்டன. அவன் அப்பனும் இறந்துவிட்டான். விஸ்வாசமிக்க ஓர் அடிமைப் பறையனாகவேதான் அவனும் இறந்தான்.

அவன் இறந்ததும்கூட, ஒரு பரிதாபமான நிகழ்ச்சிதான்.

அவன் கள் குடித்துவிட்டு அன்று பண்ணையின் பிரத்தியேக பங்களா முன் வந்திருக்கிறான். தன் உணர்வை மழுங்கடிக்கும் அளவுக்குக் குடித்திருக்கிறான்.

எதிர்பாராத விதமாகப் பண்ணையார் அப்பொழுது அங்கிருந்திருக்கிறார். அதைக்கண்ட அவனுடைய கூட்டாளி, தலையில் கட்டியிருந்த வேட்டியை அவிழ்த்துக் கக்கத்தில்

சொருகியபடி, 'எசமான் இருக்காருடா' என்று அவனிடம் கூறியிருக்கிறான்.

போதையில் இருந்த அவனோ "எசமா எங்கடா இருக்காரு நாந்தான்டா எசமா!" என்றிருக்கிறான். இப்படிப் போதையில் அவன் தன்னை மீறி ஏதேதோ உளறிக்கொண்டிருக்கிறான்.

ஓர் அடிமைக்கு அதெல்லாம் பேசுவதற்கு என்ன உரிமை யிருக்கிறது? அவன் உணர்வுகளையும் அபிலாசைகளையும் தன்னை மறந்த போதை மயக்கத்தில் கூட வெளியிடுவதற்கு யார் அனுமதித்திருக்கிறார்கள்?

எழுதப்படாத சட்டமல்லவா அது? எந்தக் காலத்துக்கும் நிலைநிறுத்தப்பட வேண்டிய நியதியல்லவா அது? அதை அவர் நிலைநிறுத்தியாக வேண்டும். அது அவருடைய கடமை.

அவர் சவுக்கடி அவன் உடலைப் பதம் பார்த்தது மட்டுமல்ல அவன் உயிரையும் குடித்தது.

கடைசியில் ஒரு தெருப் பொறுக்கி நாயைப் போல வாய்க்கால் நீரில் இழுத்தெறியப்பட்டு மிதந்து சென்றான். ஒரு அடிமையின் வாழ்வு இப்படி முடிந்தது.

அவன் மகன்தான் இப்பொழுது சிங்கப்பூரிலிருந்து மேட்டுமெராசாக வந்து சேர்ந்திருக்கிறான்.

மூன்று மைல் பக்கத்திலுள்ள ரயில்வே ஸ்டேசனிலிருந்து குதிரை வண்டி பிடித்து ஏறி அமர்ந்து 'பாறைக்கல் வளசுக்கு ஓட்டு' என்றவன் வழியில் தூங்கிவிட்டான்.

மாயாண்டியினுடைய நாகரிகத்தையும், பெட்டிபடுக்கை களையும் கண்ட வண்டிக்காரன் அவனை எழுப்பாமலேயே யாரோ பண்ணையார் வீட்டுக்குச் செல்பவன் போலிருக்கிறது என்று நினைத்துப் பண்ணையார்கள் வசிக்கும் மேட்டுக்குடி தெருவுக்கு ஓடிவந்து "அய்யா, ஊரு வந்தாச்சு: எழுந்திருங்க" என்றான்.

கண் விழித்துப் பார்த்த மாயாண்டி, தான் இருப்பது மேட்டுக்குடித் தெரு என்பதை அறிந்து, 'ஊருக்குள்ளே ஓட்டய்யா' என்றான்.

வண்டியும் ஊருக்குள்ளே சென்றது. மாயாண்டிக்கு தன் சேரி எங்கிருக்கிறது என்று புலப்படவில்லை. ஊரைவிட்டு சிறுவ'ய தில் சென்றவனல்லவா?

வண்டியைவிட்டு இறங்கிக்கொண்டான். பெட்டி படுக்கை களைக் கீழிறக்கி வைத்துவிட்டு அங்கு அவனைக் கண்டதும்

குழுமிவிட்ட ஜனங்களைப் பார்த்து தன் அப்பன் பேரைச் சொல்லி வீட்டைக் காட்டும்படி வேண்டினான்.

எல்லோரும் அவனை ஆச்சரியம் மேலிட கண்கள் அகல விரியப் பார்த்தனர். சிங்கப்பூர் சென்ற மாயாண்டிப் பறையனா இவன்? பண்ணையார் தெருவினூடே வந்துவிட்டானே என்ன நெஞ்சழுத்தம் வேண்டும் இவனுக்கு? தெரிந்தால் என்னவெல்லாம் நடக்கும் என்று யாராலும் கூற முடியாது.

அவன் அப்பன் இறந்துவிட்ட கதையைக் கூறினர். பரம்பரை பரம்பரையாக ஒழுகிவரும் நெறிமுறையை அவன் மீறும்படியாக பண்ணையாரின் வீதிவழியே வந்ததையும் கூறினர். அப்படியான உரிமை பறையனுக்கு கிடையாதெனவும் தெரிவித்தனர்.

அவன் மனம் உளைந்தது. வந்ததும் வராததுமாகச் சமுதாயக் கொடுமை அவனைக் கழுத்தை பிடித்துக் குஞ்சியிழுக்கிறது. அவன் என்னவெல்லாம் நினைத்து தாய்நாடு வந்தான். அவன் ஏதேதோ கேட்க வேண்டியிருந்தது. கேட்டான்:

‘பறையனும் மனுசந்தானே?’

அங்குள்ள எல்லோர் மனதிலும் அந்தக் கேள்வி முரசடித்துக் கொண்டுதான் இருக்கிறது. இருந்தாலும், ஒரு பறையனுக்கு அப்படியான சுதந்திரம் இல்லை.

ஒருவன் சொன்னான்:

‘நாம அடிமைப்பட்டவங்க!’

“அதுதான் கேட்கறேன் அவன் ஒடம்பிலும் ரத்தந்தானே ஓடுது?”

அவனிடம் பேச எல்லோரும் அஞ்சினர். அதன் விளைவுகள் என்னவெல்லாம் ஆகுமோ? ஒரு அடிமைப் பறையனுக்குக் கேள்வி எழுப்பவோ, விடை காணவோ உரிமை கிடையாது. அவனைப் பற்றிய செய்திகள் பண்ணையார் காதுக்கும் எட்டியது.

“ஒரு பறையன் பண்ணையார்களின் வீதியில் குதிரை வண்டியில் அமர்ந்து செல்ல எங்ஙனம் துணிவு புடைத்தான்?”

மாயாண்டிப் பறையன் அழைக்கப்பட்டான்.

ஒரு பறையனுக்கு இப்படியான மனத்துணிச்சல் எங்ஙனம் பிறந்தது? அதை அவர்கள் அறிந்தாக வேண்டும். அவனும் சொல்லக் கடமைப்பட்டவன்.

அழைக்க வந்தர்களிடம் மாயாண்டி கூறினான்:

"எனக்குத் தெரியும் - என் அப்பனை வாய்க்காலில் அடிச்சிப் போட்டது போல் என்னையும் போடுவாங்கன்னு. அப்படிப் போக என்னுசிரு கோழைத்தனம் கொண்டதில்லே."

அதற்குமேல் அவன் அங்கு நிற்கவில்லை. நீர் சூழ்ந்த நெல்வயல்களுக்கிடையில் அவன் எங்கோ ஓடி மறைந்தான்.

செய்தி கேட்ட பண்ணையார்கள் சினந்தார்கள்; சீறினார்கள்.

அன்று மாலையே மாயாண்டிப் பறையன் பவனிவந்த அந்தப் பண்ணையார்களின் வீதி நெடுக வைக்கோல் தூவி நெருப் பிட்டுக் கொளுத்தித் தீட்டைப் பொசுக்கினார்கள். ஐயர்கள் திவ்யஹோமம் வளர்த்தார்கள்.

இதற்கு முன்னாலும் இப்படிப் பல நிகழ்ச்சிகள் நடந்திருக் கின்றன. ஆனால், அதற்கான குற்றவாளி இப்பொழுது தான் முதல் முறையாகத் தப்பியோடியிருக்கிறான்.

# 3

**ப**ண்ணையார் வயற்பரப்பு பங்களாவில் அமர்ந்திருக்கிறார். ஆடிமாதத்தில் வெடித்துக் கிடந்த பூமிக்குள் வாய்க்கால் தண்ணீர் புரண்டு வந்து பாய்கிறது. காய்ந்த தாள் கட்டையில் நீர்ப் பாய்ந்து ஊறியவுடன் நாட்டுச் சர்க்கரையின் மணத்தைப் போன்ற சுகந்தம் எழுந்து நெஞ்சை அள்ளுகிறது. தத்துப் பூச்சிகள் நீர் பாயும் வெடிப்புகளில் இருந்து கூட்டங்கூட்டமாக எழுந்து பறக்கும் 'சிர்' என்ற ஒலி இசை போன்ற லயம் எழுப்புகிறது. வீசி அடிக்கும் தென்னங்காற்றில் பூமி குளிர்ந்து வயல்களில் நீர் தேங்கியதால் குளுமையோடுகிறது.

ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்துவிட்டது. வாய்க்காலில் தண்ணீர் அலைபாய்கிறது. வயல்வேலைகளில் அடிமைகள் வேகமாக இயங்கியாக வேண்டும். சென்ற வருடம் அறுவடை திருப்தி அளிக்கவில்லை. இந்த வருடம் அதை ஈடுகட்டியாக வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் நாளாவட்டத்தில் பண்ணையின் பழம்பெருமை காப்பாற்றப்பட முடியாமல் அழிந்துபோக நேரிடலாம்.

இந்த வருஷம் சம்பா அறுவடைக்குப் பின் வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்பட்டதிலிருந்து மாடு கன்றுகள் அனைத்தும் வயற்பரப்பிலேயே கிடை போடப்படுகின்றன. சாணத்துடன் மாட்டின் மூத்திரமும் சேர்ந்து மண்ணைத் திடப்படுத்தட்டும் என்கிற நோக்கம். சாணத்தைவிட அவற்றின் மூத்திரம் மண்ணுக்குச் சத்தூட்டும் என்பார்கள்.

நூற்றுக்கணக்கான மாடுகள் அல்லவா? தினம் நான்கைந்து ஏக்கர் பரப்புக்கு மாட்டுக்கிடை விழும் தலையாரி, காரியஸ்தன், ஏஜெண்ட் எல்லோரும் வந்துபோய் கொண்டிருக்கிறார்கள். பண்ணையார் வேண்டிய உத்தரவுகளைக் கூறிக்கொண்டிருக் கிறார்.

தூரத்தில் தலையாரி மாடப் பறையனும் கூட ஓர் இளைஞனும் நிற்பது தெரிகிறது. முழு நிர்வாணக் கோலம் - ஒரு கையகலகக் கோவணம் மட்டும் இடையில் ஒட்டியிருக்கிறது.

பிரேதக்களை தட்டிய முகம். சீயக்காய் போல் கறுத்து வற்றியுலர்ந்து போன உடல், கைகட்டி வாய் புதைத்துப் பாதங்கள் இரண்டையும் இணைத்து இடதுகால் பெருவிரல் மீது வலது கால் பெருவிரலை வைத்து நிற்கின்றனர்.

பண்ணையார், தங்கள் மீது கவனம் செலுத்துகிறார் என்பதை அறிந்தவுடன் அவர்கள் இருவரும் தரையில் நெடுஞ்சாண் கிடையாக, 'அடிமைகளைக் காப்பாத்தணும் எசமான்' என்று விழுகின்றனர்.

அந்தப் பறையர்களின் வெளியீடுகள், அபிலாசைகள் பண்ணையார்களுக்கு ஒரு பொருட்டல்ல. அதை ஏற்றுக்கொள் வதாகவோ அங்கீகரிப்பதாகவோ சமிக்ஞை காட்ட வேண்டிய அவசியமும் அவர்களுக்குக் கிடையாது. அந்த அடக்கப்பட்ட ஜீவன்கள் அவர்களுடைய அடிமைகள். அடிக்கவோ, கொல்லவோ, விற்கவோ அவர்களுக்கு உரிமை உண்டு.

பண்ணையார் கேட்டார்:

"என்ன சமாச்சாரம்?"

அவர்களுக்கு உத்தரவு கொடுத்தாய் விட்டது எழுந்து நிற்கின்றனர். மூக்கிலும், நெற்றியிலும் நெஞ்சிலுமாக மண்புழுதி ஒட்டியிருக்கிறது. பண்ணையார் முன்னால் ஒரு பொடி மண் துகளைக் கூட துடைத்துவிட்டுக் கொள்ளக்கூடாது. அது பண்ணையாருக்கெதிரான அபகீர்த்தி, அபவாதம்.

நெற்றியில் ஒட்டியிருந்த மண்புழுதி கண் இமைகளின் மீது உதிர்ந்து விழியை அடைகிறது. உறுத்துகிறது. அதைக் கையால் துடைத்துக் கொள்ள முடியாது. வாயில்லா ஜீவன்களுக்குக் கூட சில சுதந்திரங்கள் உண்டு. ஆனால், இந்தச் சபிக்கப்பட்ட மனித ஆத்மாக்களுக்கோ...!

மாடன் பவ்வியமாக விடையிறுக்கிறான்.

"மேலுமொரு அடிமைக்குப் புகலிடம் வேணும்."

ஓர் அடிமையைப் பேணிக்காப்பது அவர்களுடைய கடமை. அவனை ரட்சிப்பதற்கென்றுதானே அவர்கள் பிறப்பெடுத்திருக் கிறார்கள்? அந்த உரிமையை அவர்கள் விட்டுவிடக்கூடுமா என்ன?

அவர் கேட்டார்:

"எங்கிருந்து வாரான்?"

"செத்துப்போன நம்ம அடிமை தன்னாசிப்பறையன் மவன் காத்தானுங்க"

அதையெல்லாம் அவர் நினைவு வைத்திருக்க வேண்டுமென்ற அவசியம் என்ன இருக்கிறது? அவ்வளவு பெரிய முக்கியத்துவம் கொண்டவர்களா என்ன அவர்கள்?

அவனுக்கு ஒரு கால்கட்டுப் போட வேண்டும். அதற்கான செலவிற்குப் பணம் வேண்டும்.

அடிமைச் சாசனம் எழுதப்பட்டது. அதன் விலை நாற்பது ரூபாய்.

இனி அவனுக்கென்று உணர்வுகள் கிடையாது. விருப்பு வெறுப்புகள் கிடையாது.

# 4

**கோ**த்திரம் குலம் பார்க்காமல், ஜாதி வித்தியாசம் பார்க்காமல் ஒரு யுவனும் யுவதியும் காதல் வயப்பட்டு, பெரியவர்களுக்குப் பயந்து ஊரை விட்டே ஓடிய நிகழ்ச்சிகள் எத்தனையோ உண்டு. ஆனால், ஒரு கவுண்டர் ஜாதியைச் சேர்ந்தவன் பறைப் பெண்ணைக் காதலித்துக் கூட்டிக்கொண்டு கண்காணாத தூரத்துக்கு அல்லாமல் பக்கத்திலேயே குடித்தனம் நடத்திக் கொண்டிருக்கிற நிகழ்ச்சி இருக்கிறதே, அது இந்தச் சமூகப் பரம்பரைக்கே முதல் முறையாகும்.

சேனாபதி கவுண்டருக்கு இந்தச் செய்தி முறைப்படி தெரிவிக்கப்பட்டது. அவர்தான் நாற்பது ஐம்பது மைல் சுற்று வட்டாரப் பகுதியில் உள்ள கவுண்டர் சமூகத்திற்குத் தலைவர்.

சமூக அத்துமீறல் குற்றங்களை விசாரிக்கும் தலையாய பொறுப்பு அவரைச் சார்ந்ததே.

இதற்கு முன்னர் நடைபெற்றவைகளெல்லாம் கவுண்டர் குலத்தைச் சேர்ந்த பெண்கள் பிற ஜாதி ஆண்களுடன் தொடர்பு கொண்டது சம்பந்தமாகவோ, அறுந்துபோன சமூகக்கட்டுப் பாடு விதிகளுக்கு முரணாக நடந்துகொண்டது பற்றியோ ஆகும்.

இதுவரையிலும், சமூகக் கட்டுப்பாடுப் பிரகாரம் தண்டனைக்குட்பட்டவர்கள் பெண்கள்தான். ஆண்களின் ஒழுக்க நியதிகள் கட்டுப்படுத்தப்படவில்லை. அவர்கள் எந்தத் தாழ்ந்த சமூகத்துப் பெண்கள் மத்தியில் வேண்டுமானாலும் உறவு கொண்டிருக்கலாம். அதைப் பற்றிக் கவலையில்லை. அது சமூக ரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆனால், கூடவே அதற்கொரு நிபந்தனையும் இருந்தது. வேற்று ஜாதிப்பெண்களை மனைவி என்ற அந்தஸ்தோடு குடியும் குடித்தனமாகக் கொண்டு வாழக்கூடாது.

அது இத்தனைக்காலமும் அமல்படுத்தப்பட்டே வந்தது. இன்றுதான் அந்தக் கட்டுக்கோப்பை முதன்முறையாகக் கந்தன் உடைத்தெறிந்திருக்கிறான்.

எந்த ஒரு தாழ்த்தப்பட்ட பெண்ணையும் ஒரு மேல் ஜாதி ஆண் விருப்பப்பட்டால் அவன் எந்தத் தடையுமின்றி அவ ளுடன் சுகம் அனுபவிக்கலாம். அதன் பின்விளைவுகளுக்காக அவன் பாதிக்கப்பட வேண்டியதில்லை. ஆணுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இன்று நிகழ்ந்திருப்பது அதுவல்ல. ஓர் அடிமைப் பறைப்பெண்ணை சமூகக்கட்டுப்பாட்டை மீறி மனைவி அந்தஸ்துக்குக் கொண்டு வந்துவிட்டான் கந்தன். இதை அனுமதித்தால் சமூகக் கட்டுத் திட்டங்கள் குலைந்துவிடும். கீழ்ஜாதிக்காரரர்கள் சம்பந்தி உறவு கொண்டாட ஆரம்பித்து விடுவார்கள்.

இதற்கு ஒரு முடிவு கண்டேயாக வேண்டும். வேறு ஒரு பயமும் உள்ளூர அரித்தது. வெறும் சமூக அத்துமீறல் என்று மட்டும் இருந்தால் அதைச் சுலபமாக அடக்கிவிடலாம். கந்தனுக்குப் பின்னால் ஒரு இயக்கமே இருக்கிறது. கொஞ்சக் காலமாக சம்பந்தத்துடன் நெருங்கிப் பழகி தொடர்பு கொண்டிருப்ப தாகக் கேள்வி. தப்பிச்சென்ற சிங்கப்பூர் மாயாண்டியும் அவனுடன் இருப்பதாக வதந்தி.

இந்த நிலையில், கந்தன் கூட்டிச்சென்ற பாப்பாயியின் சமூகத்து மத்தியிலும் கந்தனுக்கு எதிரான மனோ உணர்வு களைத் தூண்டிவிட வேண்டும்.

சேனாபதிக் கவுண்டர் தன் கட்டுக்குட்பட்ட கிராமத் தலைவர்களையும், பிரமுகர்களையும் பொன்னேரிக் கிராமத் துக்கு வருமாறு தேதி குறிப்பிட்டு பிரச்சனை சம்பந்தப்பட்ட விவரங்களையும் குறிப்பிட்டு ‘ஓலை’ கொடுத்துத் தலையாரி மூலம் அனுப்பி வைத்தார்.

இந்த நிலையில் மாரப்பனோ ஊரைவிட்டே எங்காவது போய்விடலாமா என்று கூட நினைத்தான். அவன் தன் வாழ்வில் அப்படிப்பட்டதொரு அவமானத்தை இதுவரையிலும் நேர்கொண்டதேயில்லை. அவன் மட்டுமென்ன? அவன் சந்ததியேகூட இப்படிப்பட்டதொரு அந்தஸ்துக் குறைவைக் கண்டிருக்க முடியாது.

காட்டுத் தீ போல இந்தச் செய்தி கவுண்டர் சமூகம் எங்கெங்கு உள்ளதோ அங்கெல்லாம் பரவிவிட்டது. இப்படிப் பட்டதொரு அபவாதத்திற்கு தான்தானா பலியாக வேண்டும் என்று தன்னைத்தானே நொந்துகொண்டு தலையிலும், மாரிலு மாக அடித்துக்கொண்டு புலம்பத் தலைப்பட்டான். எல்லோர்

முன்னிலையிலும் திருடனைப் போல - கொலைகாரனைப் போல கூனிக்குறுகி நிற்பதைவிட ஒரு முழக் கயிற்றைக் கழுத்தில் மாட்டிக் கொண்டால் என்ன என்றும் புலம்புவான். "உன்னால் தான் இந்தத் தலைகுனிவு எல்லாம்" என்று மனைவியைப் பார்த்துத் திட்டவும் ஆரம்பித்தான்.

அவளுக்கு மட்டும் ரோச மானம் இல்லையா? பிறந்த பொழுது நாலுநெல்லை வாயில் போட்டு பாலை ஊற்றியிருந் தால் இந்த அவலநிலை ஏற்பட்டிருக்காதே என்று கூடத்தான் எண்ணினாள். ஆனால் இப்படி நடக்குமென்று யாருக்குத்தான் தெரியும்?

அன்று கந்தன் பாப்பாயியுடன் உறவு கொண்டிருப்பதைப் பற்றி மாரப்பன் தன் மனைவியிடம் சொல்லிக் கண்டித்தது உண்மைதான். அவளும் அப்படியெல்லாம் பையனைத் தாக்க வேண்டாம். காலப்போக்கில் சரியாகிவிடும் என்று கூறியதும் உண்மைதான். அவள் அன்று நினைத்ததெல்லாம் வயதில் யாருக்கும் இருக்கக்கூடிய ஒன்றுதான், காலப்போக்கில் போகப்போகச் சரியாகிவிடும் என்று நினைத்தாள். ஆனால் இப்படி அவன் கூட்டிக்கொண்டு போவான் என்று கனவிலும் எண்ணவேயில்லை.

தன் மகன் விசயத்தில் கொஞ்சமேனும் சபலத்துக்கு இடம் கொடுத்தோமேயானால் என்னவெல்லாம் நிகழுமென்பதைப் பற்றி சற்றுநேரம் கற்பனை செய்து பார்த்தாள்.

ஏறி வரமுடியாத புதர் மண்டிய பாழ்கிணற்றில் தவறி விழுந்து தன்னந்தனியாகத் தவிப்பது போன்று பிரமை மனதைச் சிலிர்க்க வைத்தது. ஊரார் யாரும் பேசமாட்டார்கள். நல்லது கெட்டதுக்குத் தாய், பிள்ளை முதற்கொண்டு யாரும் வரமாட் டார்கள். ஊர்ப் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாது. மன ஆறுதலுக்காகக்கூட ஊர்க்கோவில் சென்று மனம் விட்டுப் பிரார்த்தித்துக் கொள்ள முடியாது. முடவாண்டி புலவன், வள்ளுவன், பறையன், நாவிதன் யாவரையும் நிறுத்திவிடுவார் கள். சமூகக் கட்டுமானம் என்றால் இப்படித்தான் இருக்கும்.

இதை நினைக்க புருஷனைவிட அவளின் உள்ளம் பதறத் தான் செய்கிறது. கந்தனைக் கொண்டுவந்து அவள் முன்னால் நிறுத்தி தண்டனை கொடுக்கச் சொன்னால் பாறாங்கல்லைத் தூக்கி அவன் தலையில் போட்டுக் கொன்றே விடுவாள்.

எந்த ஒருபெண்ணிடத்திலும் இஷ்டப்பட்டால் உறவு வைத்துக்கொள்ளலாம் என்ற ஒரு சுதந்திரம் ஆண்களுக்கு

இருந்தும், அதையெல்லாம் பயன்படுத்திக் கொள்ளாமல் போயும் போயும் ஒரு பறைச்சியைக் கூட்டிக்கொண்டு வாழ்க்கை நடத்தப் போவதா? ச்சீ! அதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது.

மாரப்பன் மனைவியிடம் கூறினான்:

'நா இன்னைக்குச் சபை முன்னாலே நின்னு, அவன் எம்மவன் இல்லெ, அவனைப் பெத்த தோஷத்துக்கு வேண்டி என்ன தண்டனை வேணும்னாலும் எனக்குக் கொடுங்க. ஆனா என்னெ நம்ம சமூகத்து மத்தியிலே இருந்து மட்டும் பிரிச்சு வச்சுடாதீங்கன்னு கேட்கப்போறேன். நீ எதுவானாலும் சபைக்கு மத்தியிலே மவனுக்கு அனுசரணையா ஒரு வார்த்தை பேசினா லும் இன்னையோட உனக்கும் எனக்கும் இருக்கிற பந்தம் முறிஞ்சுபோயிடும். பெத்து வளர்த்துன தோசத்துக்கு இந்தத் தலைக்குனிவே போதும். இன்னும் ஒரு பொண்ணு இருக்குது. அதுக்காவது வாழ்ந்து தீரணுமே!' என்று அவனையும் மீறிக் கண்களில் நிறைந்த கண்ணீரைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு இந்தக் கட்டை எப்படியெல்லாம் அவமானப்பட்டுச் சின்னப்பட்டுச் சாவணும்னு இருக்குதோ என்று துண்டை மூஞ்சியிலே போட்டுக்கொண்டு கோவெனக் கதறினான்.

அவளுக்கு மட்டும் மானம் மரியாதை கிடையாதா? அவன் நினைப்பதுபோலவேதான் அவளும் நினைத்தாள். அவனைவிட ஒருபடி மேலே சென்று மகனை வெறுக்கவும் செய்தாள்.

அவள் சொன்னாள்:

"ஏதோ பத்து மாசம் சொமந்த பாசம், அவன் செஞ்ச தப்பை எல்லாம் அறியாத்தனம், மன்னிக்கச் சொல்லுனுச்சு, ஆனா இப்ப அவஞ் செஞ்சிருக்கிறது தாயுங்கற மொறையிலேயே எனக்குத்தா பெரிய அவமானம். தாயப்போலத்தானே பிள்ளை யும்னு ஊர்வாய் பேசும். சோறு தின்ன வந்தான்னா எங்கை யாலே மருந்து வைச்சுக் கொல்லவும் யோசிக்கமாட்டே. பெத்து வளத்துன தாய் தகப்பனைவிட ஒரு பொட்டச் சிறுக்கிதானே அவனுக்குப் பெரிசாப் போயிட்டா?"

அவள் முகம் பாறையைப் போல் இறுகிக் கனத்திருந்தது. மாரப்பன் கண்களில் நீர் துளிர்ப்பதுபோல் அவள் கண்களில் இப்பொழுதும் நீர் துளிர்க்கவில்லை. அவனைப்போல் அவள் அழுவதும் இல்லை. இந்த அளவுக்கு அவளுடைய பாசஉணர் வுகள் மகன் செயலை நினைக்க நினைக்கக் கெட்டித்துப் போய்விட்டன.

குறிப்பிட்டபடி சமூகக் கட்டுப்பாட்டுக் கூட்டம் கூடியது. மாரியம்மன் கோவில் முன்னாலுள்ள ஆலமரத்து நிழலில் போடப்பட்டிருந்த கட்டிலில் சேனாபதி கவுண்டர் அமர்ந் திருந்தார். பெரிய தனக்காரர்கள் முன்னால் விரிக்கப்பட்டிருந்த வண்ணான் மாற்றில் அமர்ந்திருந்தனர். பார்க்க வந்திருந்தவர்கள் நின்று கொண்டிருந்தனர்.

மாரப்பன், கவுண்டரின் முன்னால் நெடுஞ்சாண்கிடையாகப் படுத்துக் கிடந்தான். இப்படிப்பட்டதொரு அவமானத்தை அவன் தன் வாழ்நாளிலேயே சந்தித்ததே கிடையாது.

பிள்ளைகள் பெற்றவன் பூரிப்படைவான் என்று சொல் வார்கள். ஆனால் மாரப்பன் வாழ்வோ பெருந்துன்பத்தின் ஊற்றுக்காலாக அல்லவோ இருக்கிறது?

மாரப்பன் திரேகம் குலுங்கிக் குலுங்கி ஆடியது. அவன் மௌனமாக அழுதிருக்க வேண்டும்.

ஒரு பெரியவர் கூறினார்:

"மாரப்பா எழுந்து நில்லு. உம் பூசாபலன் அப்படி ஆண்டவெ எழுதுனெத அழித்தெழுத முடியுமா என்ன?"

மாரப்பன் எழுந்து நின்றான். சளியும் கண்ணீரும் முகம் முழுவதும் சேறாடியிருந்தது. இடுப்பில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து முகத்தை அடித்துத் துடைத்துக் கொண்டு மீண்டும் இடுப்பில் சுற்றியபடி கைகட்டி, தலை குனிந்தபடி நின்றான்.

கவுண்டர் மீசையை ஒதுக்கிவிட்டு முறுக்கியபடி கட்டிலில் போடப்பட்டிருந்த திண்டுவில் சாய்ந்துகொண்டு "மாரப்பா! உங்க குடும்பம் நம்ம ஜாதிக் கட்டுப்பாட்டை மீறியிருக்கிறதா இந்த சபை குற்றம் சாட்டுகிறது. நீ என்ன தகுமானம் சொல்லப் போறே?" என்றார்.

அவன் தேகாந்தமும் காய்ச்சல் கண்ட கோழி நடுங்குவது போல் நடுங்கியது. உடல் வியர்த்துக் கொட்டியது.

"நா மனசறிய ஒரு குத்தமும் செய்யலீங்களே! இந்த ஏழைக்குச் சமூகத்தெ மீறிக் குத்தம் செய்யறதுக்கு வலுவிருக்குதுங்களா?"

கவுண்டர் சொன்னார்:

"திருடெ இருட்டுலேதான் பொருளைப் பதுக்குவாம்பாங்க. ஆனா நீ பகல்லியே சாட்சித் தடயம் இருந்துங்கூட உண்மையெ மறைக்கப் பாக்கறே"

மாரப்பன் பேசாமல் மௌனமாக நின்றான்.

கவுண்டர் மேலும் தொடர்ந்தார்:

"வேளாளர் பரம்பரைக்கே உன்னாலே தலைகுனிவு ஏற்பட்டிருக்கிறது. இந்த ஜாதி மௌளச்ச நாளிலிருந்து இப்படி யொரு அபகீர்த்தி ஏற்பட்டது கெடையாது. அதுக்கு நீதா காரணம்."

மகன் செய்த குற்றம் தகப்பனை வாட்டுகிறது. 'அதற்கு' நீதான் பொறுப்பு என்றும் கூறப்படுகிறது. அதற்கு அவன் பதில் சொல்லியாக வேண்டும். அப்படிப்பட்டவொரு அபவாதத்திற்கு அவன் ஒரு நாளும் ஆளாக முடியாது.

மாரப்பன் சொன்னான்:

"எம்மவெ மன்னிக்க முடியாத தப்புச் செஞ்சிட்டாங்கறது உண்மைங்க. ஆனா எனக்கதுலே சம்பந்தமில்லிங்க. என்னைக்கு அவ கெட்டுப் போனானோ அன்னையிலிருந்து அவெ செத்துப்போயிட்டதாவ நா நெனச்சுக் கிட்டனுங்க."

கவுண்டர் வாய்விட்டுக் கலகலவென்று சிரித்தார். அதில் உலகத்துக் கயமையெல்லாம் சேர்ந்திருப்பது போலப் பட்டது.

"அவெ ஊரை விட்டுப் போறதுக்கு முன்னாலே உனக்கு இதப்பத்தி ஒண்ணும் தெரியாதுன்னு சொல்றையா?"

மாரப்பன் மௌனமாகி நின்றான். தெரியாதென்று அவனால் எப்படிக் கூறமுடியும்? ஆனால் மனைவியின் ஸ்தானத்திற்கு அவளை ஏற்றுக்கொள்வான் என்று அவனுக்கு நிச்சயம் தெரியாது.

கவுண்டர் மேலும் அழுத்தம் தொனிக்கக் கேட்டார்: "இந்த மாரியாத்தா சத்தியமா உனக்குத் தெரியாதுன்னு சொல்ல முடியுமா? தெரிஞ்சுதா இவ்வளவும் நடந்திருக்குது. அதுனாலதா நீயும் குத்தவாளின்னு சொல்றே"

அம்மன் சந்நிதியில் மாரப்பனால் தெரியாதென்று பொய்கூற முடியாது. சிரசே துண்டிக்கப்போகிறது என்றால் கூட பொய் சொல்ல அவன் சித்தமாயில்லை. 'சத்தியத்திற்கும் தெய்வத்திற் கும் முன்னால் பொய் பேசுபவன் தலைமுறை தலைமுறைக்குச் சாபக்கேட்டுக்கு ஆளாக வேண்டும்' என்ற பழமொழியை அவன் அவ்வளவு லேசில் மறந்துவிட முடியாது.

ஆனால் தெய்வ சந்நிதானத்தில் நின்று சத்தியவாக்கை நிறை வேற்றுவதாகக் கூறிவிட்டு பலர் இன்று அவற்றையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு இக்கூட்டத்தில் அமர்ந்திருப்பதை நினைத்துப் பார்த்தான்.

கொஞ்சநாட்களுக்கு முன்னால் நகர்ப்புறத்துக் கடைகளுக் கும் வீடுகளுக்கும் பால், தயிர், நெய், காய்கறிகள் விற்பனைக்குக்

கொண்டு செல்லும் வேளாளர் குலப்பெண்களைப் பற்றித் தப்பான அபிப்பிராயங்கள் பேசப்பட்டது. இதைக் கேள்விப் பட்ட சமூகத்தலைவர்கள் ஒன்றுகூடி ஒரு நெறிமுறையை வகுத்து இதே சந்நிதானத்தின் முன்னால் பிரகடனப்படுத்தி னார்கள்.

அதன்படி 'எந்த ஒரு வேளாளர் பெண்ணும் எந்தவொரு விற்பனைப் பொருளையும் தனிநபர் வீடு தேடிச் சென்று விற்கக்கூடாது. பொது மார்க்கெட்டில்தான் கொண்டு சென்று விற்க வேண்டும்' என்பதாகும். ஆனால், அந்தப் பிரகடனம் நீண்டநாள் உயிர் வாழவில்லை.

மாரப்பனோ இன்று வரையும் கடைப்பிடித்தே வருகிறான்.

ஆனால் மீறப்பட்ட அச்செயலின் விளைவாக இன்றும் அவச் சொற்கள் அப்படிப் போகும் பெண்களுக்கு ஏற்படவே செய்கின் றன. அதை அவர்கள் பொருட்படுத்தவேயில்லை. அவர்கள்தான் இந்த நியாயத்திற்கு வெற்றிலைபாக்கு வைக்கிறார்கள்.

'ச்சீ! என்ன கேவலமான மனிதர்கள் வாழ்கிறார்கள்!'

- திடீரென அவன் சிந்தையில் பட்டு உறுத்திய இவற்றைத் துடைத்து அகற்றுபவன் போல நெற்றியைத் தேய்த்து விட்டுக் கொண்டு 'எனக்கு அவன் நடத்தை தெரியுமுங்க. எஞ்சக்திக்கு முடிஞ்ச அளவுக்குக் கட்டுப்படுத்திப் பார்த்தனுங்க. ஆனா என்னையும் மீறி அது நடந்துப் போச்சுங்க. அதுக்காவ நீங்க என்ன செய்யச் சொல்றீங்களோ அதச் செய்யறேனுங்க' என்று கூறினான்.

கவுண்டரால் இதற்கு உடனடியாகப் பதில் கூற முடிய வில்லை. மாரப்பன் தன்னுடைய மகனின் நடவடிக்கை தனக்கும் கடைசிவரை தெரியாது என்று கூறுவான் என்றுதான் எதிர் பார்த்தார். மாரப்பனோ அதற்கு எதிர்மாறாகப் பளிச் சென்று உண்மையைக் கூறிவிட்டான். உண்மைக்கு முன்னால் கடுமை காட்ட அவருக்குப் போதிய சக்தி உடனே ஏற்படவில்லை.

கவுண்டர் சற்று பொறுத்திருந்து கேட்டார்:

"அப்பவே நீ அவனைக் கண்டிச்சு வூட்டை விட்டு வெளி யேத்தி இருக்கலாமல்லவா?"

மாரப்பன் கம்மிய குரலில் தயங்கித் தயங்கி, "திருந்துவான்னு நெனச்சு மோசம் போயிட்டேனுங்க. இப்படிச் செய்வான்னு தெரிஞ்சிருந்தா..."

"நீ தெரிஞ்சே சமூகத்துக்கான அபகீர்த்தியெத் தேடித் தந்திருக்கிறே. அப்படின்னா நீ குற்றவாளிதானே?"

இதற்குப் பதிலாக மாரப்பனுக்கும் எத்தனையோ சொல்வதற்கு இருக்கிறது. அதை அவனால் எடுத்துச் சொல்லவும் முடியும். ஆனால், அதை அவன் விரும்பவில்லை. ஒரு பலவீனத்தை இன்னொரு பலவீனத்தைக் காட்டிப் பாதுகாத்துக் கொள்வதை அவன் விரும்பவில்லை.

கீழ்ஜாதிப் பெண்ணுடனோ அல்லது ஆணுடனோ வேளாளர் வகுப்பைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் கள்ளத்தனமாகப் புழக்காட்டம் வைத்துக்கொண்டு இருப்பது ஊரறிந்த ரகசியமே! நியாயாதி சபைக்கு வராமல் இருப்பதற்கான ஒரே காரணம் அவர்கள் பகிரங்கமாக வீட்டைவிட்டுக் கிளம்பாமல் இருப்பதேயாகும்.

இது எந்தவிதத்தில் நியாயமானதாகும். இதைத் தெரிந்தே நாள்தோறும் அனுமதித்துக் கொண்டிருப்பவர்கள் அல்லவா, சமூகக் கட்டுப்பாடுகளை மீறியவர்கள்? அவர்கள் அல்லவா, நெஞ்சாரக் குற்றம் புரிந்தவர்கள்?

ஆனால் அதைப் பற்றி அவன் பேசப்போவதில்லை. அதற்கு என்ன வலு இந்தக் கூட்டத்தில் இருக்கிறது என்பது அவனுக்குத் தெரியும்.

“நான் திருத்தமுடியும்னு நெனச்சது தப்புன்னு சொன்னீங்கன்னா அதுக்கு நீங்க என்ன தண்டனை விதிக்கறிங்களோ அதை ஏத்துக்கத் தயாரா இருக்கறெனுங்க” என்றான் மாரப்பன்.

கவுண்டர் கட்டிலின்கீழ் கால்கள் இரண்டையும் தொங்கப் போட்டு அமர்ந்து கொண்டு கைகளையும் குத்துப் பாய்ச்சி கன்னத்தைத் தாங்கியபடி சற்றுநேரம் அமைதியாக இருந்து விட்டுக் கூட்டத்தைப் பார்த்து “நீங்க எல்லாம் என்ன சொல் றீங்க?” என்று கேட்டார்.

அவ்வளவு சுலபமாக யோசனை சொல்வதற்குத் தைரியம் படைத்தவர்களா அவர்கள்? ஆனால் யாராவது ஒருவர் முதலில் எழுந்து கூறிவிட்டால் போதும்.

கட்டுப்பட்டுக் கிடக்கும் தைரியம் தலை தூக்கிவிடும்.

கூட்டத்தில் சற்றுநேர அமைதிக்குப் பிறகு ஒருவர் சொன்னார்: “நீங்க பார்த்து எதச்சொன்னாலும் சம்மதம்.”

கூட்டத்தின் இடையிலிருந்து வேறொருவர் எழுந்து கூறினார். “மாரப்பனுக்குத் தெரிஞ்சேதான் குத்தம் நடந்திருக் குது. அதைத் தன்னாலே கட்டுப்படுத்த முடியல்லினாலும் ஊர்ப் பெரிய தனக்காரங்ககிட்டே கூறி அதுக்கு அப்பவே பரிகாரம் கண்டிருக்கலாம். அதச் செய்யாததாலே மாரப்பன் குற்றவாளியே.”

கூட்டத்தின் முன் பாகத்திலிருந்து மூன்றாவதாக ஒருவர் எழுந்தார். 'மாரப்பன் இதத் தெரிஞ்சேதா ஊக்குவிச்சிருக்கான். இதுக்கு நாம தக்க பரிகாரம் காணலின்னா நம்ம ஜாதிக் கட்டுப்பாடே ஒடஞ்சு தூளாயிடும்' என்றார்.

இப்படியே ஒவ்வொருவரும் மாரப்பன் மீது குற்றம் சாட்டிப் பழிவாங்கும் யோசனையைக் கூறினார்கள்.

அப்பொழுது கோமாளிக் கிழவர் எழுந்து நின்று, "உள்ளவந் தப்பு ஊரைப் பார்த்து சிரிக்குமாம். இல்லாதவன் ஒழுக்கம் எதிர்ப்பட்டவங்கிட்டே எல்லாம் ஒதைபடுமாம்" என்று கூறியவர், கூட்டத்தைப் பார்த்து "நா, வயசாயிப் போயிட்டவெ. ஒருவேளை சொல்றது இன்னொருவேளைக்கு நெனப்பிருக்கிற தில்லே. அதனாலே, நா சொல்றதில்லே தப்பிருந்தா மன்னிச்சுக் கணும். உண்மைக்கு மதிப்பில்லேங்கறது இந்த மாரப்பன் விசயத்திலே நல்லாத் தெரியுது. நா ஒன்று கேக்கறே; மாரப்பன் மவஞ்செஞ்ச வேலையை இங்கிருக்கறவங்களோட பெண்டு பிள்ளைக கள்ளத்தனமாகச் செஞ்சிட்டுருக்கறாங்கோங்கிறது யாருக்குத் தெரியாது. மொதல்ல அதையும் பேசுவோமா?" என்றார்.

இதைக்கேட்ட கூட்டத்திற்குத் தலையில் இடிவிழுந்தாற் போலிருந்தது. கோமாளிக் கிழவர் பேச ஆரம்பித்துவிட்டால் எந்த விளைவுகளைப் பற்றியும் கவலைப்படமாட்டார் என்பது அவர்களுக்குத் தெரியும். அவரைப் பேச அனுமதிப்பது அங்குள்ள முக்கியஸ்தர்களுக்கே தலைகுனிவை ஏற்படுத்தும்.

கூட்டத்திலே இருந்த ஒருவர் 'கோமாளி அப்பெ சொல்ற திலே தப்பில்லே. முட்டையா இருக்கும்போது அழுகலா நல்லதான்னு தெரிஞ்சிக்கிறது கஷ்டம். அது ஒடையும்போதுதா அதனோட நல்லது கெட்டது தெரியும். அப்படித்தா இன்னைய நாயமும்' என்று கூறிக் கூட்டத்தை ஒரு நோட்டம் விட்டுவிட்டு கவுண்டரைப் பார்த்தவராக, 'மாரப்பனக் குத்தம் சொல்ற துக்குப் பதிலா ஓடிப்போன அவெ மவன் சம்பந்தமாக நாம ஒரு முடிவுக்கு வாரதுதா சரியாக இருக்கும்" என்று கூறினார்.

கூட்டத்திலே பெரும்பாலோர் இதை ஆமோதித்தனர். ஆலோசனைக்கு எடுக்கப்பட்ட விசயத்திலிருந்து விவாதம் வேறு விசயங்களுக்குத் திரும்பிவிட்டால் அது ஒரு நிலையில் நிற்காது என்று உணர்ந்தனர். ஆகவே சீக்கிரம் முடிவை எதிர்பார்த் திருந்தனர்.

கவுண்டர் தீர்ப்பு வழங்கினார்:

"இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே செத்துப்போனவனுக்கு ஈமக்கிரியைகள் செய்வதுபோல மாரப்பன் தன் மகனுக்கு செஞ்சு முடிச்சிடணும். அப்புறம் அவனோட நெழலுக்கூடத் தீண்டாம பார்த்துக் கொள்ளணும். அவனோட எந்தத் தொடர்பும் இருக்கப்படாது. அதேபோலவே நம்ம ஜாதி அமைப்பு எல்லாம் நடந்துகொள்ளணும்" என்றார். மாரப்பனைப் பார்த்து அவனது சம்மதம் என்ன என்று தெரிந்து கொள்பவர் போல 'என்ன மாரப்பா! சம்மதம்தானே?' என்று கேட்டார்.

இந்தத் தீர்ப்பு தனக்குப் பெரிய விடுதலையை அளித்தது போல நினைத்தவனாக, "உங்க உத்தரவையெல்லாம் மீறமுடியுங்களா? அவெ எங்கண்ணு முன்னாலே பட்டாலே கண்ட துண்டமாகச் சீவியெறிஞ்சிடுவேனுங்க" என்றான் மாரப்பன். கவுண்டருக்கு இப்பதில் பரமதிருப்தி அளித்தது.

மாரப்பன் மகன் கந்தன், கவுண்டருக்கு விவசாயத் துறையில் பரமவிரோதியாக அல்லவா முளைவிட ஆரம்பித்திருக்கிறான்.

கவுண்டர் மேலும் கேட்டார்:

'சரி, இந்தக் கூட்டம் நடக்கிறதுக்கான செலவுக்கு என்ன வழி பண்ணியிருக்கறே? அதனோட சம்பிரதாயமெல்லாம் தெரியுமல்லவா?' என்றார்.

மாரப்பனுக்கு அதெல்லாம் தெரியும். அதை யாரும் மீறமுடியாது. ஆனால், அவனிடத்தில் சல்லிக் காசுக்கும் வழியில்லையே?

மாரப்பன் சொன்னான்:

'எல்லாம் தெரியுமுங்க. ஆனா!'

'ஆனான்னா? முடியாதுன்னு சொல்லறையா?' கவுண்டர் கொஞ்சம் கோபம் காட்டுபவர் போலக் குரலை உயர்த்தி அதட்டிப் பேசினார்.

'இல்லிங்க அப்படிச் சொல்வனுங்களா? காசுக்குத் தானுங்க ஒரு வழியும் இல்லிங்க' என்றான் மாரப்பன்.

'சரி யாரு கிட்டையாவது கேட்டுச் சரிபடுத்து' என்று கூறி, அவன் செல்வதற்கு அனுமதி கொடுத்தார்.

அவனும் பல சிரமங்களுக்கு மத்தியில் - கெஞ்சலுக்கும் வேண்டுதலுக்கும் மத்தியில் - தன்னிடம் மிஞ்சியிருக்கும் வீட்டை அடகு வைப்பதாகக் கூறி ஒருவரிடம் பணம் வாங்கி வந்து சபை முன்னால் கட்டினான்.

இப்படியாக, ஜாதிக் கட்டுப்பாடு என்ற பயங்கரத் தாக்குதலில் இருந்து மாரப்பன் விடுதலை பெற்றான்.

## 5

ஆற்றங்கரைப் பக்கத்திலுள்ள குட்டுக்காட்டில் சம்பந்தம், மாயாண்டி, கந்தன் ஆகிய மூவரும் அமர்ந்திருந்தனர். கலக்கி விடப்பட்ட செஞ்சோற்றுத் தண்ணீர் போல ஆற்றுவெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது.

ஈரம்பட்ட புங்கங்காய்களின் வாடையும், கோரைக் கிழங்குகளின் மனதை அள்ளும் சுகந்தமும் சேர்ந்து இதம் ஊட்டிக் கொண்டிருந்தன.

ஏதோ குழப்பம் அடைந்தவனைப் போலக் கந்தன் அமர்ந்திருந்தான். அது என்னவாக இருக்குமெனச் சம்பந்தம் அறிய விரும்பினார்.

“ஏன் ஒருமாதிரியா இருக்கறீங்க?” என்று கந்தனைப் பார்த்து சம்பந்தம் கேட்டார். அவர் குரலிலும் ஒரு ஆதங்கத் துடிப்பு வெளிப்பட்டது.

முகத்தைத் துண்டால் துடைத்துக் கொண்டு தொண்டையை இருமிச் சரிப்படுத்தியவனாக, “நான் பாப்பாயியைக் கட்டிக் கிட்டதாலே சாதி, சனம், சொந்தபந்தத்தைச் சேர்ந்த யாரும் என்னோட பேச்சுக்கூட வச்சுக்கக்கூடாதுன்னு எங்க சாதிக் கூட்டம் முடிவு செஞ்சிருக்குது. நான் அதுக்காகக் கவலப்படலே. பறைப்பொண்ணே நான் கட்டிக்கிட்டதாலே அந்த இனத் தாரும் எங்களப் புறக்கணிக்கணும்னு கவுண்டர் உத்தரவிட் டிருப்பதாகக் கேள்விப்பட்டே. அதப்பத்திதா உங்ககிட்டெ பேசணும்னு ஒரே சிந்தனையா இருந்தேன்” என்றான்.

சம்பந்தத்துக்கு விஷயம் தெளிவாகப் புரிந்துவிட்டது. தாழ்த்தப்பட்ட அடிமைகளின் மத்தியில் கந்தனின் பிரவேசம் கவுண்டரைக் கலக்கியிருப்பதில் ஆச்சரியமில்லை; அது அவருடைய பண்ணையடிமைகளின் மத்தியிலான கட்டுத் திட்டங்களைக் குலைக்கத் தூண்டுதலளிக்கும்.

‘கடிக்கிற நாய்க்கும் கல்லக் கண்டா பயமா இருக்கும். சுரண்டறவனுக்கும் சத்தம் போடறவனக் கண்டா விளிப்பாயிருக் கச் சொல்லும். ஆனா உங்க விஷயம் இருக்குதே அதைவிடவெல்

லாம் ஆபத்தானது' என்று கூறியவர், திடீரென 'உங்களுக்கு நாம ஏன்டா இப்படிப்பட்ட விவகாரத்துக்குப் போனோம்னு கவலையளிக்குதா?' என்று அவனது உறுதிப்பாட்டினை அறிந்துகொண்டு விசயத்தைப் பேசுவோம் என்பவர் போலத் திடீரென இடையில் கேள்வியெழுப்பினார்.

கந்தன் ஒரு குறுஞ்சிரிப்புச் சிரித்துக்கொண்டு 'சம்பந்தம் எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிற பாடம் அப்படிப்பட்ட தாயல்லெ. மொதல்ல எனக்கு அவள் பேருலே ஏற்பட்ட தொடர்பு சாதாரண மனிதர்கள் பெண்களிடம் எதிர்பார்க்கும் அளவுக்கே இருந்தது. ஆனா உங்களோட எனக்குத் தொடர்பு ஏற்பட்ட பிறகு அதனோட தன்மையே மாறிப்போச்சு. எந்தக் கஷ்டத்தையும் எதிர்நோக்கறதுக்கான தெடம் எனக்கு இப்ப இருக்குது' என்றான்.

எடுத்த எடுப்பிலேயே அவன் அந்த அளவுக்குப் பிடிமானம் உள்ளவனாக இருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட சம்பந்தம் இன்னும் ஆழமாகச் சென்று 'உங்களுக்குள்ளே ஏற்பட்டிருக்கிற காதல் மகத்தானது; எல்லாவற்றையும் விட மேலானது என்று நெனக்கறீங்களா?' என்று கேட்டார்.

சம்பந்தத்தின் இந்தக் கேள்வி கந்தனுக்குப் புதிராக இருந்தது. பதில் சொல்ல வேண்டிய பிரச்சனைகளை விட்டு விட்டு ஏன் காதல் சம்பந்தமான ஆராய்ச்சிக்குப் போவானேன் என்று எண்ணியவனாக 'எனக்கு மொதமொத அவளப் பார்த்ததும் ஒறவுகொள்ளணும்னுதா ஆசையேற்பட்டது. காதலப்பத்தி யெல்லாம் நான் நெனக்கல்லே, அப்படித்தா அந்த ஒறவும் வளர்ந்தது' என்றான்.

காரியவாதியான அசல் ஒரு விவசாயினுடையதைப் போன்ற பதிலைக் கேட்ட சம்பந்தம், 'நான் எதுக்கு இப்படியெல்லாம் கேட்கிறேன்னு உனக்கு ஆச்சரியமா இருக்குதல்லவா? உனக்கு இப்ப ஏற்பட்டிருக்கிற நெருக்கடி ஒரு தாழ்த்தப்பட்ட பெண்ணோட சம்பந்தப்பட்டு ஒரு வாழ்க்கை நடத்த முடிவெடுத்துட்டதாலே ஏற்பட்டதாகும். உனக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியின் நிர்ப்பந்தத்தை உன்னாலே புரிந்து கெள்ள முடியாமலோ அல்லது தாக்குப்பிடிக்க முடியாமலோ நம்முடைய இந்தக் காதலை உலகம் ஏற்றுக்கொள்ள முடியலேயே, ஏற்றுக்கொள்ள முடியாத இந்தக் குருட்டு உலகத்துக்கு முன்னாலே நம்முடைய காதலின் பிணைப்பை, பலத்தை, அன்பை நம்முடைய ஒன்றுபட்ட மரணத்தின் மூலம் மெய்ப்பித்துக் காட்டுவோம் என்று பல இளம் உள்ளங்கள்

தற்கொலை செய்து கொள்கின்றனவே அப்படிப்பட்ட பலவீனம் உன்னிடம் எந்த நெருக்கடிக் கட்டத்திலும் வந்துவிடக் கூடாதேங்கறதுக்காகத்தான். இப்படியெல்லாம் கேட்கறேன்' என்று கூறி நிறுத்தி, அவனை ஏறிட்டு நோக்கினார்.

கந்தன் எந்தவிதத்திலும் வழிதவறி குறிக்கோளற்று அழிந்துவிடக் கூடாதே என்பதில் அதிக அக்கறை காட்டுபவர் போல சம்பந்தத்தின் ஈடுபாடு எடுத்துணர்த்தியது.

சம்பந்தம் தொடர்ந்து கூறினார்:

'வாழ்க்கையைப் பற்றிக் கடந்த காலக் காவியங்களோ நிகழ்காலக் கதைகளோ நமக்கு என்ன போதிச்சு வருதுன்னா வாழ்க்கையில் அதற்கு எந்த இடையூறு வந்தாலும் அதற்காக வாழ்வைத் தியாகம் செய்வதில்தான் மனித லட்சியமே இருக்குது என்பதுமான பிரமையைத் தோற்றுவிப்பதில்தான் ஈடுபட்டிருக்குது. ஒரு சீதையை வச்சுத்தானே இராமாயணம்? ஒரு துரோபதையை வச்சுத்தானெ மகாபாரதம்? ஒரு மாதவியை வச்சுத்தானெ சிலப்பதிகாரம்? ஒரு அன்னத்தை வச்சுத்தானெ பாண்டியன் பரிசு? எல்லாம் மகத்தான காதலின் பேரால்! அழியாத மெய்க்காதலின் பேரால்! சகல பிரச்சனைகளும், போராட்டங்களும் அவற்றிற்கே என்பதன் பேரால்! இப்படியான போதங்கள் இந்த நாட்டு இளைஞர்களுக்கு ஊட்டப்பட்டிருப்பதாலே அப்படியான போதத்திலிருந்து நீயும் விடுபட்டாக வேண்டுமல்லவா? சில காரியங்கள் இளமையின் ஆவேசத்திலே நடந்து முடியும். ஆனபின்னாலே அதுக்கான தத்துவார்த்தத் தெளிவு இல்லாமே போச்சுன்னா வீரப்பிரதாப ஆவேசங்கள் மடிஞ்சு வாழ்க்கை கோழைத்தனமாகவும், நம்பிக்கை இழந்து விரக்திப்பட்டும் முடங்கி அழிஞ்சு போவும்...'

'என்ன நான் சொல்வது புரியுதல்லவா?' என்று கேள்வி போட்டு விட்டுத் தொடர்ந்தார்.

'மெய்க்காதல், புனிதக்காதல் என்பதெல்லாம் இந்த சமுதாயத்திலே பொய்யான, அசிங்கமான ஒரு குறியீடு; முதலாளித்துவ சமுதாயத்திலே காதல் என்பதற்குப் பெரும் பாலும் இடமில்லை. காதல் என்பது ஆண்-பெண் ஆகிய இரு பாலரின் உணர்ச்சிமயமான, அன்புக்குழைவான ஒரு புனிதப் பிணைப்பு. ஆனால், அந்தப் புனிதப் பிணைப்பென்பது வர்க்கத்தின் அடிப்படையிலும் ஜாதியின் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்பட்டுவிடுவது. இயற்கை உணர்ச்சிகளின் பிணைப்புகளால் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு அன்பு உணர்ச்சியால் பந்தப்படுத்தப்பட வேண்டிய காதல், வெறும் புற

உலகச் சம்பிரதாயங்களால் பலவந்தமாகப் பிணைக்கப்படும் பொழுது காதல் என்பது எங்கே வாழும்? அப்படியே வர்க்கம், ஜாதி, பணம் ஆகியவற்றைத் தாண்டி ஒரு காதல் உணர்வு வளர்ந்தாலும் நாளாவட்டத்தில் இந்த முதலாளித்துவ சமுதாயத்தின் வாழ்க்கை காதல் உறவால் பிணைக்கப்பட்ட குடும்பத்தில் உள்முரண்பாடுகளையும் தோற்றுவித்து அவ் வுறவை உடைத்துவிடுகின்றன. காதலுங்கறது சுதந்திரமாக, மனப்பூர்வ உள்ளன்போடு எந்தவிதக் கட்டுத்தளைக்கும் உட்படாமல், எந்தவித வாழ்க்கை நிர்ப்பந்தங்களும் அடிபணியா மல் இணையவும் பிரியவும் முடியுதோ அங்குதான் அதன் உண்மை அர்த்தத்தில் மிளிர முடியும். அது வர்க்கமற்ற பாட்டாளி மக்களின் சோசலிச சமுதாயத்தில் அந்தக் கலாசாரத்தில்தான் அதன் இனிய மணம் கமழ்ந்து வீசமுடியும். அப்பவும் அதுவே சிறந்த லட்சியம் என்பதை உணர்ந்து இதற்காகப் போராட முன்வரும் லட்சியவாதிகளிடையே அதன் இனிய மணம் கமழ்ந்து வீசமுடியும்.'

அவர் ஒரு குழந்தைக்குப் பாடம் சொல்லித் தருவதைப் போலச் சிரத்தையோடும், கனிவோடும் எடுத்துக் கூறினார் கந்தனுக்கு. மாயாண்டிக்கு எவ்வளவெல்லாம் சொல்லித் தரவேண்டுமோ அவ்வளவையும் சமயம் கிடைக்கும் போதெல் லாம் சொல்லித்தந்து விட வேண்டும் என்கிற தாளாத பசியோடு இருப்பவர் போலத் தோற்றமளித்தார்.

இப்படித்தான் நாம காதலப்பத்தியும், கல்யாணத்தப் பத்தியும் பார்க்க வேண்டியது; கல்யாணமும், காதலும் என்பதெல்லாம் வாழ்க்கையில் நேரிடுகிற பல பிரச்சனைகளில் ஒன்று. அதுவே எல்லாமும் அல்ல.

இப்படி அவனுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. 'சாதி சமயமற்ற, வர்க்க வித்தியாசமற்ற சோசலிச சமுதாயத்தில் தான் காதல் என்பதே மலர முடியும் என்றால், இத்தனை யுகங்களாக வாழ்ந்த முன்னோர்களின் வாழ்க்கை பூராவுமே ஒரு பாலுணர்வின் அடிப்படையிலேதான் நடந்தேறியிருக்கின்றனவா?'

தொடர்ந்து அவன் கேட்டான்.

'நீங்க சொல்ற பிரகாரம் காதல்ங்கிறது சொத்துடமைச் சமுதாயத்திலே இருக்க முடியாதுங்களா? அப்படினா, இதுநாள் வரையிலும் காதல் வாழ்க்கைங்கறதே இல்லாமதா இருந்திருக்கு துங்களா?'

இது கேட்க வேண்டிய கேள்விதான். காதல் என்பது ஒவ்வொரு மனித வாழ்விலும் தவிர்க்க முடியாத விசயம் தானே!

இடுங்கிய விழிகளும், மேல்நோக்கி உயர்ந்த புருவங்களுமாகக் கலைந்து கிடக்கும் முடியைச் சரிசெய்பவர் போல இடதுகையால் தலையைத் தடவி விட்டுக்கொண்டு 'காதல் வயப்படுதலுங்கிறது உயிருள்ள ஜீவராசிகள் அனைத்துக்குமே பொதுவான ஒன்று. ஆனால் மனுசனுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? மற்ற ஜீவராசிகள் பாலுணர்வின் அவஸ்தையைத் தீர்த்துக் கொள்வதோடு சரி! ஆனால் மனுச ஜீவிதம் அப்படிப்பட்டதுதானா? அதுக்கு மேல் வாழ்க்கையைப் பற்றியதான ஒரு குறிக்கோள் - எப்படி வாழ்வது என்பதான கட்டுப்பாடு-அதற்குள் ஒரு ஆணும் பெண்ணும் தங்களைப் பிணைத்துக் கொண்டு பரஸ்பரம் ஒத்து வாழ்வதற்கான மனச்சேர்க்கை ஆகியவை கொண்டதாகும். ஆனால், இவையெல்லாம் இரு பாலருக்கும் சமஉரிமையோடும் வழங்கப்பட்டிருக்குதா? அப்படி எங்கே இருக்குது? நம்ம கல்யாணச் சடங்கையே எடுத்துக் கொள்ளுங்களேன். எங்கோ வளர்ந்த ஒரு பெண் எங்கோ பிறந்த ஒருவனுக்கு முன்பின் புரிந்து கொள்ளாமலேயே பெற்றோர்களால் தாரை வார்த்தல்லவா கொடுக்கப் படுகிறாள்!'

இந்த அளவில் ஒரு மனைவி ஒரு கணவனுக்கு தன்னுடைய உள்ளுணர்வுகளுக்கு விரோதமாகத் தம்கணவன் நடந்தாலும் அந்தக் கணவனின் எல்லாவிதமான குணங்களுக்கும் அடிபணிந்து நடக்கும்பொழுதுதான் கணவனுக்குகந்த காதல் மனைவியாகத் திகழ முடிகிறது. குடும்ப உறவும் நீடிக்கிறது.

கணவனுடைய உணர்வுகளைப்போல் மனைவியின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்று மனைவி விரும்பும் பொழுது அவள் உணர்வுகள் சாட்டை வார்களினால் மழுங்கடிக்கப்பட்டு விடுகின்றன. இதுதான் இந்த இரண்டு சமுதாயத்துக்கும் இடையில் உள்ள குடும்ப உறவுமுறையின் காதல் வாழ்க்கை. அதாவது சொத்துடமைச் சமுதாயத்தில் காதல் என்பது பெண்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பெறும் ஆணின் ஒருவகைச் சுயநலம். சோசலிசச் சமுதாயத்தில் பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் பேணி வளர்க்கப்படும் இருமனச் சேர்க்கை. இந்த அடிப்படையில்தான் இரண்டு சமுதாயத்திலும் காதல் வாழ்க்கை மலர்கிறது, நீடிக்கிறது.

இதைக்கேட்கக் கேட்க கந்தனின் உடல் புல்லரித்தது. தெரிந்து கொள்ளப்பட வேண்டிய எவ்வளவு பெரிய விசயங்கள் இவை!

மாயாண்டிக்கும் அப்படியேதான். அவன் சொன்னான்:

'இருட்டிலே இருக்கிற வரையிலும் ஒருவனுக்கு அது மகத்தானதாகவே படுது. ஆனால் அவனே வெளிச்சத்தைப் பார்க்கும் போது அது வெறும் அற்பமாத் தோனிடுது. நீங்க இதுவரையிலும் சொன்னது எங்கண்களே அப்படித்தா தெறந்துவிட்டிருக்கிறது.'

இதைக் கேட்ட சம்பந்தம் ஒரு குழந்தையைப் போலச் சிரித்துக் கொண்டு 'இது ஒன்றும் பெரிய விசயமில்லெ. வாழ்க்கையைப் பத்திப் புரிஞ்சுக்கோணும்னு விரும்பற ஒவ்வொருத்தருக்கும் இப்படிப்பட்ட விசயங்கள் தேடிவந்து சேரும். நானும் அப்படித் தான் அடைஞ்சேன்' என்றவர் திடீரென்று 'சரி! நாம விசயத்துக்கு வருவோம்' என்று பீடிகை போட்டார்.

அப்பொழுது ஆற்றினிடையில் சலசலப்புச் சத்தம் கேட்டது. ஓசைவந்த திசையை மூவரும் நோக்கினர். ஒரு நாய் ஆற்றின் அக்கரையிலிருந்து கரைபுரண்டு செல்லும் வெள்ளத்தினிடையில் நீந்தி அவர்களுக்கு அருகில் வந்துகொண்டிருப்பது புலப்பட்டது.

அதன் எஜமானனிடமிருந்து எப்படியோ பிரிக்கப்பட்டு அக்கரைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அது தன் சொந்த இடத்தை நாடி வைராக்கியமும், விடாப் பிடியும் கொண்டு வெள்ளப் பெருக்கினிடையில் ஆபத்தை நோக்காது நீந்தி வருகிறது.

இதைப் பார்த்த மாயாண்டி, 'தன் குறிக்கோளை அடைய ணுங்கறதிலே இந்த நாயிக்கிருக்கிற விடாப்பிடியான முயற்சி கூட மனுச ஜீவனுக்கில்லையே?' என்றான்.

கரையேறி அந்நாய், உடலைச் சிலுப்பித் தண்ணீரை உதறிக் கொண்டு மெதுவாகப் பாதையினூடே ஓடியது. குட்டுக்காட்டில் மேய்ந்து கொண்டிருந்த மாடுகளின் கழுத்து மணியோசை ஸ்வரங்கெட்ட வாத்தியத்தைப் போல ஒலித்துக் கொண் டிருந்தது.

கால் விறுப்பை ஆற்றிக் கொள்வதற்காகச் சம்மணம் போட்டு அமர்ந்திருந்த கால்கள் இரண்டையும் முன்னுக்கு நீட்டிக் கைகள் இரண்டையும் பின்பக்கம் குத்துப் பாய்ச்சிச் சாய்ந்தபடி "மனுசனுக்குக் குறிக்கோளோ, விடாப்பிடித்தன்மையோ இல்லாம லில்லெ. மனித வரலாற்றின் இவ்வளவு பெரிய வளர்ச்சிகளெல்லாம் அவனுடைய விடாமுயற்சியின் விளைவு தான். ஆனா அதனோட ஒட்டுமொத்தப் பலன் இருக்குதே அது மனிதகுலம் முழுமைக்கும் பொதுவாக்கப்படாமே சிலர் கையிலே தங்கிப் போச்சு. அதன் விளைவு என்னாச்சின்னா உழைக்கற

மனுசனோட உணர்வுகள், தேவைகள் மதிக்கப் படாமே போச்சு. ஒரு நாயின் தேவை எஜமானால் எப்படிப் பூர்த்தி செய்யப் படுதோ அப்படி மனிதர்கள் தேவையும் வேலை கொடுக்கும் எஜமானின் இஷ்டப்படி பூர்த்தி செய்யப்படலாச்சு. பொதுவாச் சொல்லப் போனா அவர்களுக்கிருந்த ஒரே உரிமை அவுங்க உழைப்பை மலிவா விற்கலாங்கறதத் தவிர வேறெது வுமே இல்லெ. அவுங்க கட்டிப் போடப்பட்டு இருக்கறாங்க. அடிமைப் படுத்தப்பட்டு இருக்கறாங்க" என்று கூறிய சம்பந்தம் அவர்களைப் பார்த்து "நான் பொதுப்படையாச் சொல்லிப் போறது உங்களுக்குப் புரியுதா?" என்று சந்தேகப்பட்டுக் கேட்பவர் போலக் கேட்டார்.

அவர்களும் அதற்குப் புரியவில்லை என்று கூறுபவர்களைப் போலத் தலையாட்டினர்.

"நம்ம கண்ணுக்கு முன்னாலே கவுண்டர் பண்ணையிலே நடக்கிறதெ எடுத்துக்குவோம். இந்த தாழ்த்தப்பட்டவங்க எல்லாம் அவரோட அடிமைகள். அவர்களுக்கென்று எந்தச் சுதந்திரமும் விருப்பு வெறுப்புகளும் கெடையாது. அழுவதுக்கு மட்டுந்தா சுதந்திரமுண்டு. சிரிக்கக்கூட முடியாது. ஆனால், அந்தப் பண்ணையாரோட வாழ்வின் குறிக்கோளை நிறை வேற்றுவதற்காக அந்த அடிமைகள் எப்படியெல்லாம் பாடுபட வேண்டியிருக்கு! அவர்களுக்குப் பாத்திரத்திலே சோறு தின்ன உரிமையுண்டா? வேட்டி கட்ட உரிமை உண்டா? கட்டில்லே படுக்க உரிமை உண்டா? தன் மனைவியிடம் கொஞ்சுவதற்குத் தான் உரிமை உண்டா? பண்ணையார் வீதிகளிலே நடக்கத்தான் உரிமை உண்டா? இதுதான் ஏழை ஜனங்களோட வாழ்க்கை."

இதைக் கேட்டவுடனே மாயாண்டி பொறுமை இழந்த வனைப் போல "அதுதாஞ் சொல்றெ, இந்த சனங்கள் குறிக்கோளில்லாமெ வாழுறாங்கன்னு" என்றான்.

"நீங்க சொல்றதே நான் முழுசா மறுக்கலே. என்னைக்கு சுரண்டறவனும், சுரண்டப்படுறவனுமான சமுதாய அமைப்பு ஏற்பட்டதோ அன்னைக்கே சுரண்டப்படுகிறவனோடு சகல உரிமைகளையும், உணர்வுகளையும் பறிக்கும்படியான சட்டதிட்ட அமைப்புகளும் அடக்குமுறை பலாத்காரங்களும் நிலைநாட்டப்பட்டாச்சு. அதன் ஈவிரக்கமற்ற தாக்குதல்களுக்கு முன்னால் உழைக்கும் மக்கள் விலங்கினும் கேடாக நடத்தப் பட்டாங்க. அவர்களின் உணர்வு மதிக்கப்படலே. அவர்களின் அபிலாசைகள் ஏற்கப்படலே. மாறாக அவை மிலேச்சத்தனமாக அடக்கி ஒடுக்கப்பட்டன. இப்படி அவர்கள் தும்முவதற்குக் கூட

தடை செய்யப்பட்டிருக்கும் நிலையில் அவர்கள் தங்கள் பலத்தை உணர்ந்து ஒன்றுபட்டுப் போராடும் மனோபலத்தைப் பெறாத நிலையில், நீங்கள் சொல்லும் குறிக்கோளை நினைப்பது எங்ஙனம் சாத்தியம்?"

கந்தன் கேட்டான்:

'அப்படின்னா என்னா செய்யறது?'

"அதுக்குத்தான் காலம் ஒங்களெத் தேர்ந்தெடுத்திருக்கு. அதப்புரிஞ்சுதான் பண்ணையார் உங்களே ரண்டு தரப்பிலேயும் ஜாதிப்பிரதிஷ்டம் செய்யத் தூண்டியிருக்கறாரு. இருந்தாலும் அந்த ஏழைத் தாழ்த்தப்பட்ட மக்களின் மத்தியிலிருந்து வந்த மாயாண்டியும், அதில் சம்பந்தப்படுத்திக் கொண்ட நாங்களும் அந்த மக்களிடத்தில் சுலபமாக அணுகி தீப்பொறி ஏற்படுத்த முடியும்."

மாயாண்டி கேட்டான்:

'எந்த வழியில் அவர்களைத் திரட்டுவது?'

சம்பந்தம் சொன்னார்:

"முதல்லே அவுங்க மனுச ஜீவன்களாகவே பண்ணையார் களால் பாவிக்கப்படலே. பண்ணையார்கள் பார்வையில் தங்க ளுக்குக் குற்றமென்று பட்டவுடனேயே அவர்கள் ஏற்படுத்தி யிருக்கும் கோர்ட், சட்ட நடவடிக்கைகள் என்கிற அந்தக் குறைந்தபட்ச சுதந்திரத்தைக்கூட கொடுக்காமல் சாட்டையடி கொடுப்பதும், சாணிப்பால் குடிக்க வைப்பதும் கேள்வி முறை இல்லாமல் நாயைப்போல் அடித்துக்கொன்று தூக்கியெறி வதும் ஆன செயல்கள் இருக்கின்றனவே, அவற்றை ஒழித்துக் கட்ட அவர்களுக்கும் சிந்தனைத் தெளிவூட்டி ஒரு ஸ்தாபன அடிப்படையில் அவர்களை ஒன்று சேர்க்கணும். இதுதான் தலையாய கடமை."

இதைக் கேட்ட கந்தன் சம்பந்தம் சொல்வது போன்று அவ்வளவு சுலபமாக விஷயம் முடிந்து விடுமா என்ன என்று எண்ணியவனாக "சகல வல்லமையும் கொண்டவர்கள் என்று தாங்கள் கூறும் அவர்கள் இவ்வளவு அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் பொழுது ஒரு நாளில் நம்மைப் போன்ற சிலர் அவர்களைத் திரட்டி சேர்த்துவிட முடியுமா என்ன?" என்று கேட்டான்.

அவன் கேட்பது சரியான கேள்வியே. யுக யுகங்களாக அடிமைப்படுத்தப்பட்டு மழுங்கடிக்கப்பட்டுக் கிடக்கும் மனித சிந்தனையை விழிப்படைய வைப்பதென்பது லகுவான வேலையல்ல. கல்லில் நாருரிப்பது போன்ற சாகசச் செயல்தான்.

சம்பந்தம் சொன்னார்:

"நம்ம இஷ்டத்துக்கு உருவம் பிடிக்க உதவும் களிமண் போன்றதல்ல. மனிதர்களோட மனநிலை அது. கரடுமுரடானது. அடிமைத்தனத்தின் கொடூரத்தன்மையில் இனி மிச்ச மீதமில்லை என்கிற அளவுக்கு அனுபவித்து விட்ட இந்த ஜனங்களுக்கு சரியான வழிகாட்டுதல்களும், நம்பிக்கையும் ஊட்டக்கூடியவர்கள் அவர்களுக்காக நடைமுறையில் தங்களுடைய நலன்களைப் பாராது சர்வ பரித்தியாகம் செய்யக் கூடியவர்கள். ஒரு சரியான அரசியல் அடிப்படையில் வரும் பொழுது தான் - அதை யதார்த்தத்தில் அவர்கள் பார்த்துத் தெளியும் பொழுதுதான் - அவர்கள் ஒன்றுபடக் கூடிய சாத்தியம் ஏற்படும். அதைத்தான் முதலில் நாம் செய்யணும்."

அது ஒரு வேள்விதான்! ஜன சமுதாயத்தின் சுபிட்ச வாழ்வின் விடுதலைக்காக வேண்டி ஜனங்களின் உணர்வுகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களைச் சரியான பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டி, அவர்களுக்கான ஒரு அரசியல் ஸ்தாபனத்தை உருவாக்குவதில் சில தனி நபர்களின் தன்னலமற்ற சேவை மகத்தான பணி புரியவே செய்கிறது. அங்கே அந்தத் தனி நபர்கள் என்பவர்கள் ஸ்தாபனத்தின் - அந்த ஸ்தாபனம் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் உழைக்கும் மக்களின் - வரலாற்று ரீதியாகத் திரட்டப்பட்ட முன்னேற்றத்தின் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்கிறார்கள்.

சம்பந்தம் அன்றைய விவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பவர் போல, 'தோழர்களே! சரித்திரம் நமக்குப் பணித்திருக்கும் கட்டளை இது. நெடிய பல தியாகங்களுக்கு நாம் தயாராகணும்' என்றார்.

அப்பொழுது பக்கத்தில் குவிந்து கிடந்த சருகுகளின் ஊடே சல சலக்கும் சப்தம் கேட்டது. அவர்கள் அங்கு திரும்பிப் பார்க்கும்பொழுது ஒரு பாம்பு ஒரு தவளையைப் பிடிப்பதற்காக முயற்சித்துக் கொண்டிருந்தது தெரிந்தது. அவர்கள் கல்லை எடுத்துப் போட்டனர். பாம்பு தண்ணீரில் தாவிக் குதித்து மறைந்துவிட்டது.

மாயாண்டியும், கந்தனும் சம்பந்தத்திடம் விடைபெற்றுப் பிரிந்தனர்.

# 6

**ப**ண்ணையார் சேனாபதிக் கவுண்டர் அதிகாலையிலேயே வயற்பரப்பில் உள்ள தனது பிரத்தியேகப் பங்களாவில் அமர்ந்திருந்தார். வயலடிப்பு வேலை நடந்து முடியும் வரையிலும் அவர் அப்படி வந்திருப்பது வழக்கம். அப்பொழுதுதான் வேலைகள் துரிதமாக நடைபெற்று முடியும். வாய்க்காலில் தண்ணீர் நிரப்புவதற்கு முன் விளைச்சலும் முழுமையடையும்.

காரியஸ்தன் குஞ்சாண்டி பங்களா வாயிலின் முன்வந்து பணிவடக்கத்துடன் கூனிக்குறுகி நின்றான். பண்ணையாரின் பார்வை வேறு எங்கோ நிலைத்திருந்தது. தன் வரவை அறிவிக்கும் முறையில் மெதுவாக இருமிக்கொண்டான். தங்கள் வரவை அவர்கள் அப்படித்தான் தெரியப்படுத்துவது வழக்கம்.

பண்ணையார் வாயில்பக்கம் திரும்பிப் பார்த்தார். குஞ்சாண்டி தன் பணிவடக்கம் மிக்க வணக்கத்தைச் செலுத்திய வனாக, “மாரப்பனைக் கூட்டி வந்திருக்கறேனுங்க” என்றான்.

கொஞ்ச நேரம் அவருக்கு அவன் சொன்னது விளங்க வில்லை. புருவங்களைச் சுளித்து உதட்டைக் கூப்பியவராகச் சற்று சிந்தித்தார். விஷயம் நினைவுப் புலன்களுக்கு எட்டி விட்டது போலும்.

“ஓ! அந்த மாரப்பனா? எல்லா விவரத்தையும் சொன்னியா” என்றார்.

“சொன்னனுங்க!”

“என்ன சொன்னே?”

“காரியஸ்தனா வந்து பொறுப்பேத்துகிட்டா உனக்கிருக்கிற கடனப் பூராவும் தீர்த்துடறதாகப் பண்ணையாரு சொன்னாங் கன்னு சொன்னனுங்க.”

“அதுக்கு அவன் என்ன சொன்னான்?”

“அதுக்கு ஒரு பதிலுமே சொல்லலிங்க. சரி வந்து பண்ணை யாரப் பாத்துட்டுப் போன்னு கூட்டி வந்திருக்கறனுங்க.”

"எங்கே அவெ?"

"வெளியிலே நிக்கறானுங்க."

"சரி! அவனெ வரச்சொல்லிட்டு நீ போகலாம்."

பண்ணையார் ஒரு கல்லில் இரண்டு காயடிக்கப் பார்க்கிறார். மாரப்பன் கஷ்டப்படுகிறானே என்பதற்காகவோ, பண்ணை வேலையில் கெட்டிக்காரன் என்பதற்காகவோ அவனுக்கு அவர் கொடுக்கவில்லை. மாரப்பனை வேலைக்குச் சேர்த்துக் கொள்வதன் மூலம் தனது பண்ணையடிமைகளின் மத்தியில் அமைதியின்மை ஏற்படுத்த முனையும் கந்தனைச் சரிக்கட்ட முடியுமா என்பதற்காகத்தான்.

மாரப்பன், கவுண்டரின் முன்னால் வந்து பணிவடக்கத்துடன் கும்பிடு போட்டான். அவன் முகத்தில் ஆதரவற்ற தன்மையும் வாழ்க்கைத் தாக்குதலின் ஈவிரக்கமற்ற பழி வாங்கலும் பிரதிபலித்தன.

வாழ்க்கை, மனிதனை எப்படியெல்லாம் அலைக்கழிக்கிறது. இதுவரையிலும் சொந்த நிலம் உள்ள விவசாயி என்கிற அந்தஸ்தோடுதான் ஓய்வு நேரத்தில் பிறருக்குக் கூலி வேலைக்குச் செல்லும்பொழுதும் மதிக்கப்பட்டிருக்கிறான். ஆனால், இன்றுள்ள நிலை அப்படியல்ல. நிலமெல்லாம் இழந்து விட்ட வெறும் கூலி விவசாயி. அவனுக்கென இனி ஒரு அந்தஸ்துமில்லை. நமக்கொரு வேலை கொடுப்பார்களா என்று பிறர் தயவை எதிர்பார்க்கும் நிலை. அப்படிப்பட்ட அவலநிலையைப் பயன்படுத்தித்தான் கவுண்டர் அவனிடம் பேரம் பேச முயற்சித்தார்.

கவுண்டர் அழுத்தலான தொனியில் கேட்டார்:

"என்ன மாரப்பா! குஞ்சாண்டி விவரமெல்லாம் சொன்னானா?"

"சொன்னானுங்க"

"உன் விருப்பமென்ன?"

'எனக்குப் பண்ணைப் பொறுப்பேற்கற அளவுக்குத் தகுதியிருக்குதான்னு பயப்படறனுங்க!'

பண்ணையார் சிரித்து மாய்ந்தார். ஒரு செல்ல இருமல் இருமிக் கொண்டார். மீசையை இடதுகையால் நீவி முறுக்கி விட்டுக் கொண்டார்.

'மாரப்பா! இதுக்காகவா இவ்வளவு மலப்பு! நீதான் விவசாயத்துலே பட்டுத் தேர்ந்திருக்கிறீயே. இதவிட என்ன

அனுபவம் வேண்டிக் கிடக்கு? நீ நல்ல ஒரு கெட்டிக்காரன்னு தெரிஞ்சுதா உன்னை நா வழிந்து கூப்படற' என்றார்.

'ஆளுகளைக் கட்டி மேய்க்கணுங்களே?'

'நீ உன்னோட நெலத்திலே அவ்வப்போது கூலி ஆளுகக் கிட்டே வேலை வாங்கியிருப்பையல்ல. அப்படித்தா. இன்னும் சொல்லப்போனா அங்கெல்லாம் இல்லாத உரிமை இங்கொண்ணு உண்டு. ஒருத்தெ சரியா வேலை செய்யலேன்னு தெரிஞ்சாலோ இதோ பார்! இந்தச் சாட்டையாலே உன் விருப்பம் போலத் தண்டனை கொடுக்கலாம்.'

மாரப்பனுக்குச் சற்று உடல் சிலிர்த்தது. அவன் தன் கையால் இதுவரையிலும் அப்படி யாரையும் அடித்தது கிடையாது. மாட்டை அடித்துவிட்டால் கூட வேலை முடிந்தவுடன் அதைக் கையில் பிடித்துக்கொண்டு அடிபட்ட இடத்தைத் தன் கையால் தடவி விட்டுக்கொடுப்பான். அனுதாபப்படுகிறவன்போல் முனகிக் கொள்வான்.

அவன் மௌனத்தைப் பார்த்த கவுண்டர் கேட்டார்:

'என்ன பெரிசா யோசிக்கறே? அடியாத மாடு வெடியாப் போகாது. கடியாத வேலைக்காரெ துடியா வேலைசெய்ய மாட்டான். காரியஸ்தனாப் பொறுப்பேத்துக்கிட்டின்னா போகப் போகச் சரியாப் போயிடும். உன் குடும்பப் பிரச்சனையை நான் பாத்துக்கறே. இந்தக் கடைசி காலத்திலே வீணா ஏன் தடுமாறணும்... அதெல்லாம் யோசிக்காதே! இந்தா ஐந்நூறு ரூபா, அந்தக் கடனைத் தீர்த்திடு. இந்தா மேலே நூறு ரூபா வீட்டுச் செலவுக்கு வச்சுக்கோ... ம்... பிடிச்சுக்கோ' என்று நிர்ப்பந் தப்படுத்துபவர் போலக் கூறி அறுநூறு ரூபாய் நோட்டுக்களை மாரப்பன் முன்னால் வீசிப்போட்டார். மாரப்பன் எடாலில் சிக்கிக்கொண்ட முயலைப் போலத் தடுமாறினான், குழம்பி னான். இவ்வளவு பெரிய கருணை அவர் எதற்காகக் காட்டு கிறார், உண்மையாலுமே அவனுடைய வேலைத் திறமைக்காகத் தானா?

"நாளைக்கு ஏதாவது பெரிய எடத்திலே குத்தவாளியாப் போயிடக் கூடாதேன்னு யோசிக்கிறனுங்க. வூட்டோட பட்டினி கெடந்துட்டாலும்..." மாரப்பன் தொண்டை நெரடு பாய்ந்தது.

கவுண்டர் ஒரு விஷமச் சிரிப்பு சிரித்தபடி "பயித்தியக்கார ஆளப்பா நீ. எந்தக் காரியத்தையும் ஒரு தடவைக்கு நாலு தடவெ யோசிச்சுத்தான் செய்வேன். நீ ரொம்ப ரோசக்காரனும் நாணயஸ்தனுங்கறதே அன்றைய ஊர் நாயத்திலியே தெரிஞ்சுக்

கிட்டேன். உம்பேருலே எனக்கும் பூரணமான நம்பிக்கையிருக்கு. தயங்காதே. போயிட்டு நாளைக் காலையிலே வந்து சேரு. நாளான்னைக்கு வயல் வேலையெ ஆரம்பிச்சுக்கலாம்...'' என்று அவனைத் திடப்படுத்துபவர் போலக் கூறினார்.

பண்ணையாரின் வார்த்தைகளைத் தட்டிவிட்டுச் செல்லக் கூடிய அளவுக்கு அவனுக்கு வலுவில்லை. முன்போல் இருந்தால் அவன் திடமாகச் சொல்லி விடுவான். இன்று அவன் நிலைமை அப்படியில்லை. முன்போல் அவன் வீட்டு மண்பானைகளிலும் குதரிலும் தானியம் தங்கியிருக்கவில்லை. வாரத்துக்கொரு முறை சந்தையில் சென்று கையில் கிடைக்கும் கூலிப் பணத்திற்கேற்ப வாங்க வேண்டியிருக்கிறது. வீட்டுத் தேவைக்கேற்ப வாங்க முடிவதில்லை. வயது வந்த பெண் வேறு வீட்டில் இருக்கிறாள். கட்டிக் கொடுத்த பெண்ணுக்கு அவ்வப்பொழுது செய்யவேண் டிய சீர்வரிசைகள் இருக்கின்றன. குடும்பத்தலைவன் என்கிற முறையில் இதைப்பற்றியெல்லாம் அவன் சிந்திக்க வேண்டும். எந்தவகையான சித்திரவதைகளையும் ஒருவன் பொறுத்துக் கொள்ளலாம். வறுமையின் தாக்குதல் இருக்கிறதே அதை ஒருவன் பொறுத்துக் கொள்வதற்கு அசாத்திய மனோதிடம் வேண்டும்.

அவன், சரியென ஒத்துக் கொள்வதைத் தவிர வேறு வழி யில்லை. கவுண்டர் அவன் முன்னால் போட்ட ரூபாய் நோட் டைக் குனிந்து எடுத்து மடியில் வைத்துக் கட்டிக்கொண்டபடி கவுண்டரைத் தலைநிமிர்ந்து நோக்கினான். எதையோ ஒன்றை அந்தக்கணம் முதல் இழந்துவிட்டதைப் போன்று அவன் மனம் உறுத்தியது.

'சரி! நாளைக் காலையிலே வந்து சேரு.'

மாரப்பன் மிகத் தாழக் குனிந்து மரியாதை செலுத்திவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றான்.

சிந்தனைப்பாரம் அவன் நெஞ்சில் கனத்தது. சோகம் கப்பிய இதயத்தோடு சொல்லொணா மனப் போராட்டத்தோடு காற்றில் அலைக்கழிக்கப்படுபவனைப் போல அசைந்து அசைந்து நடந்து சென்றான்.

# 7

**மை**யிருட்டு. அந்தக் குடிசையில் ஒரு சிம்னி விளக்கு இருட்டின் பலவந்தத்தையம் மீறித் துடிப்பது போல் சுடர் விட்டுக் கொண்டிருந்தது. குடிசையைச் சுற்றிலும் தவளைகளின் பிலாக்கணம். சுவர்ப்பூச்சியின் 'நொய்' என்ற காது செவிடுபடும் இரைச்சல்.

தூண்டிவிட்ட சிம்னி விளக்கின் வெளிச்சத்தில் கந்தன் வட்டியின் முன்னால் அமர்ந்திருந்தான். அவனுக்கு முன்னால் பாப்பாயி அமர்ந்தபடி சோற்றை வட்டியில் அள்ளிப்போட்டுக் குழம்பை ஊற்றினாள்.

சோற்றைப் பிசைந்து வெகுசுவாரசியமாக வாயில் போட்டுச் சுவைத்துச் சாப்பிட்டான். அந்த ருசி அவனுக்குப் பிடிபடாத ருசியாக இருந்தது.

கந்தன் நேரங்காலம் இல்லாமல் வெளியில் சுற்றிக்கொண்டு இருப்பது மனைவி பாப்பாயிக்கு மனக்கவலை அளித்தது. ஜீவிதத்துக்கான வேலை வெட்டிகளைப் பார்த்து விட்டு, மனைவி குடும்பம் என்றில்லாமல் அலைவது அவளுக்குச் சரியென்று படவில்லை.

அவள் அவனைப் பார்த்துத் தயங்கித் தயங்கிக் கேட்டாள்:

"நீ இப்படியே இருக்கிறதாகவே முடிவு பண்ணிட்டியா?"

"எப்படி"

"சங்க வேலையும் பண்ணையாரை எதிர்க்கிறதும்"

"பண்ணையாரு எனக்கென்ன பங்காளியா? எனக்கும் அவருக்குமான சொந்தப் பகைக்கோ தகராறுக்கோ என்ன இருக்குது"

"பின்னெ ஏன் நம்ம பண்ணையாரோட வீண் பகைக்கு ஆளாகணும்?"

"அதுவா! அடிமைப்பட்ட மனுஷ சாதியை விடுவிக்கணும். அது பண்ணையாருக்குப் பாதகமா இருக்குது. அதுனாலே

அவரு என்னெ எதிரியா பார்க்கறாரு. என்ன மட்டுமில்லெ, என் இயக்கம் முழுவதையுமேதான்.''

''நமக்கது லாயக்கா? வசதி வாய்ப்புள்ளவர்களுக்கல்ல அந்த வேலை தோதுபடும்?''

அவன் எந்தத் தாழ்த்தப்பட்ட இனத்தின் விமோசனத்துக்காகப் போராடுகிறானோ, அந்த இனத்தைச் சார்ந்த அவளெ இந்த வேலையெல்லாம் நமக்கெதுக்கு என்று கேட்கிறாள். தான் ஜாதி அந்தஸ்துள்ளவனை மணந்து கொண்டு விட்டோம் என்கிற இறுமாப்போ? அவளுக்கு மட்டும் ஒரு விடுதலை கிடைத்து விட்டால் போதுமா? அதை அவள் அவசியம் சிந்திக்க வேண்டும்.

அவன் சொன்னான்:

'வசதியா ஒருவெ இருக்கிறதுன்னு சொன்னாலே சிலரது உழைப்பு அவனுக்கு கடமைப்பட்டிருக்கிறதுன்னு அர்த்தம். அப்படியிருக்கும் போது வசதி படைச்சவெ, வாழ்க்கையிலே கஷ்டப்படறவங்களுக்கு உதவி வராதுன்னா அவெ, மேலும் தன்னோட வாழ்க்கையை வசதிப்படுத்திக்க முடியாது. அப்படியான தியாகத்தைச் செய்யக்கூடிய தெம்பு யாருக்கு அதிகம் வரும்? வசதியைப் பெறாமல் பிறர் வசதிக்காக வாழ்க்கையை இழப்பவனுக்குத்தான் வரும்.'

இப்படியான தர்க்கரீதியான பதிலுக்கு அவளால் பதில் சொல்ல முடியாது. அவள் படித்தவளில்லை. அவளுக்குத் தெரிந்தது கண் நிறைந்த கணவன். தன்னோடு சமதையாக வயலில் வேலை செய்யும் ஒரு துணைவன். அவ்வளவுதான்!

அவள் சொன்னாள்:

'எனக்கு உன்னாட்ட அப்படியெல்லாம் தர்க்கம் போடத் தெரியாது. என்னோட அடிமப்பட்ட பரம்பரை சாதிக்காகவும், ஏழை பாழைகளுக்காகவும் நீ பாடு படறேங்கறது எனக்குத் தெரியுது. ஆனா சம்பந்தப்பட்ட அவங்களோ காது மடிச்சுக்கிட்டு அடியுதையுங்குடுத்து அரவவுத்துக் கஞ்சி ஊத்தினாலே போதும்னு ஒதைக்கறவங்க காலெத் தொட்டுக் கும்பிடும்போது நாம ஏன் அப்படிப்பட்டவங்களுக்காவக் கஷ்டப்பட்டுச் சாவணும்?'

அவள், அவன் நினைத்தது போல் சிந்திக்காமல் இல்லை. சிந்திக்கத்தான் செய்கிறாள். அவள் கேட்பதிலும் நியாயம் இருக்கிறது.

அவன் சிந்திக்கத் தொடங்கினான். அவள் எழுப்பியிருப்பது சாதாரணக் கேள்வியல்ல. சோற்றைப் பிசைந்து பிசைந்து

வாயில் போட்டு விழுங்கியபடி அவளது கேள்வியை அசை போட்டான்.

'கொழந்தைக்கு நாம பேச்சுக் கத்துக் குடுக்கும் பொழுது அது உடனே நாம சொல்றதை கிரகிச்சுச் சொல்ல முடியலேன்னு ஒதுக்கிவிடலாமா, என்ன? அது போலத்தா ஜனங்களிடத்திலே நம்ம கடமையும். அவுங்க கஷ்டத்துக்கான காரணத்தையும் புரிய வைக்கணும். வாழ்க்கையிலே நம்பிக்கை ஏற்படுத்தணும். ஒண்ணு சேர வைக்கணும். சரி; அது போகட்டும் நம் மாயாண்டி இருக்காரில்லே, அவரும் என்னாட்ட விவசாயத் தொழிலாளர் சங்கத்திலேதா வேலை செய்யறாரு. அவருக்குச் சாப்பிட வேறு எடமில்லை. நாம குடிக்கறதை அவருக்கும் ஊத்தணும்.'

கணவன் செயலே அவளுக்குத் திருப்திப்படாமல் இருக்கிறது. இருந்தாலும் தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்த தன்னை எல்லாவிதமான சமூகப் பகிஷ்காரங்களுக்கும், நிர்ப்பந்தங்களுக்கும் கட்டுப்படாமல் மனைவியாக ஏற்றுக் கொண்டு கௌரவித்த அவனின் செய்கை, அவளை அவனிடமுள்ள எல்லா அதிருப்தியிலிருந்தும் விலகி நிற்கத் தூண்டியது. அதனால் அவன் செய்கை அவள் வரையிலும் தவறாகத் தோன்றினாலும் அவளால் அவனைக் கண்டிக்க முடியவில்லை. அவளுக்கான அவனின் தியாகம் அவளை ஊமையாக்கியது.

அவள் சொன்னாள்:

'எனக்கு ஆட்சேபமில்லை. ஆனா நா ஒருத்தி வேல செஞ்சு எப்படிச் சோறு போட முடியும்?'

'அதுக்கான ஏற்பாடு இருக்குது. அதப்பத்தி நீ கவலைப்பட வேண்டா'

அவள் ஒன்றும் சொல்லவில்லை. ஆமோதிப்பவள் போலத் தலையசைத்தாள். அவள் நெற்றியில் கலைந்து சுருண்டு தொங்கிய தலைமுடி அழகூட்டியது. அவள் முன்னைக் காட்டிலும் இப்பொழுது என்ன அழகாகத் தோற்றமளிக்கிறாள்!

கந்தன் உண்டு முடித்துவிட்டுக் கை கழுவினான். 'கரச்ச சோறு வேண்டாமா?' என்று பாப்பாயி கேட்டாள்.

'இன்னைக்குக் கொழம்பு நல்லா இருந்தது. அதனாலே அதுலியே வவுரு முட்டச் சாப்பிட்டாச்சு.'

அவள் சிரித்துக் கொண்டாள். இந்தக் கொழம்பு அவனுக்குப் பிடிக்குமோ என்ற ஐயத்தில் ரசம் வேறு வைத்திருந்தாள். ஏனென்றால், அவனுக்குப் பழக்கமில்லாத இந்தக் குழம்பு ஒரு சமயம் பிடிக்காமல் போகலாம் என நினைத்தாள்.

கள்ளமற்ற குறுநகை பூத்தவாறு அவள் கேட்டாள்:

'சாப்பிட்டது என்ன கொழம்பு தெரியுமா?'

'தெரியலே! ஆனா நல்லா ருசியா இருந்தது.'

'நா சொன்னா கோவிச்சுக்க மாட்டியே?' - அவள் கலகலவெனச் சிரித்தாள்.

'எதுக்குக் கோவிச்சுக்கணும்? கைமணக்க வாய் ருசிக்க சமைச்சிருக்கும் பொழுது?'

'அது... அது...' அவளுக்கே சொல்லத் தயக்கம். கூச்சம். மீண்டும் சிரித்தாள்.

அவன் இடையில் இருந்த வட்டியை நகர்த்தி வைத்து விட்டு அவளை இறுகப் பிடித்து வளைத்தபடி மடியில் சாய்த்துக் கொண்டு 'சொன்னாத்தா விடுவே' என்று கெஞ்சினான்.

'கதவைத் தெறந்து போட்டுக்கிட்டு இப்படிக் கொஞ்சி னாத்தா நல்லாயிருக்குமா? சரி! வுடு' என்று திமிறினாள்.

அது அவளால் முடிகிற காரியமா?

'சொன்னாத்தா விடுவே.'

"அது... அது... நண்டுக் கொழம்பு" மீண்டும் குபீரெனச் சிரித்தாள்.

நண்டுக் குழம்பு என்றவுடன் ஒரு அகூசை அவனுள் மூண்டது. - வெறுப்புடன் அல்ல, கறி சாப்பிடாதவனுக்கு கறியைக் கண்டவுடன் எழும் ஒரு அகூசையைப் போல.

'அய்யே! ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தா என்னாலே சாப்பிட்டிருக்க முடியாது... நீ சரியான கள்ளி...!' என்றபடி அவளது அடிவயிற்றில் கிசு கிசு மூட்டினான்.

அவள் தாங்கமுடியாத கூச்சத்துடன் அடக்க முடியாது சிரித்தாள். கண்களில் கண்ணீர் முட்டச் சிரித்தாள்.

'வயிறு வலிக்குது என்னெ விட்டுடு' என்றாள்.

'என்னெ ஏமாத்துனியல்லவா அதுக்கு இதுதா தண்டனை' என்றான்.

'வயிறு வலிச்சா அது எனக்குத் தண்டனையில்லெ. உன்னோட...' அவள் நாணி முகம் புதைத்தாள். "அப்படின்னா" ஆச்சரியம் தொனிக்கக் கேட்டான்.

'அப்படின்னா, உன்னெ ஒதைக்க ஒருவ...'

அவன் இப்பொழுது புரிந்து கொண்டான். அவன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. அவளை - நிமிர்ந்து முகத்தைக் கைகளால் ஏந்தி ஏறிட்டு நோக்கினான்.

# 8

**கா**த்தானுக்குத் திருமணம் நடக்க வேண்டும். அதற்காக வேண்டித்தான் அவன் கவுண்டர் பண்ணையில் அடிமை வேலைக்காரனாக ஒப்பந்தம் எழுதிக்கொண்டான். அதற்கு அவன் தந்தையின் கூட்டாளி மாடன் உதவி புரிந்தான்.

அன்று கவுண்டரைப் பார்ப்பதற்காகக் காரியஸ்தனிடம் முதல் நாளே கொஞ்சம் ஓய்வு கேட்டிருந்தனர். அந்த ஓய்வுக்கான நேரத்துக்கு இருமடங்கு வேலையை முதல் நாள் இரவு செய்து விடுவது என்ற நிபந்தனையின் பேரில்தான் அனுமதி கிடைத்தது. அப்படியே வயலிலிருந்து நேராக உடம்பைக் கழுவிக் கொண்டு வந்தார்கள்.

அவர்களது உடல், திரவப்பசையின்றி வறட்சி தட்டியும் பாம்பு சட்டை உரித்தாற் போல் பிரு பிருப்பும் தோன்றியது. உடலில் சொறிந்த பக்கமெல்லாம் கரும்பலகையில் சுண்ணாம் புக்கோடு கீறியது போலத் தாரைகள் விழுந்திருந்தன. தலைமுடி எண்ணெய் காணாமல் வறண்டு புழுதியண்டிச் செம்பட்டை பாய்ந்திருந்தது. வேட்டை நாய்களினால் துரத்தப்பட்ட முயலைப் போல் ஆண்மை மிக்க அவர்கள் பார்வை, அடிமைத்தனத்தின் விளைவால் அலைக்கழிக்கப்பட்டிருந்தது. நடையில் வேகமின்றி இயக்குவிக்கப்படும் இயந்திரம் போல் அவர்கள் நடமாட்டம் இருந்தது. ஒரு மகிழ்ச்சியோ, கவலையோ அவர்கள் முகத்தில் நிழலாடவில்லை. சபிக்கப்பட்ட ஜீவித ஜீவன்களாகத் தோற்றமளித்தனர்.

கவுண்டர் வீட்டிலிருந்து பிரத்தியேகப் பங்களாவிற்கு வந்து கொண்டிருக்கும் சமிக்ஞை தென்பட்டது. காத்தானும் மாடனும் பங்களாவின் வாயிற்புறத்தினின்றும் தூர விலகி நின்றனர். கவுண்டரின் கார் பங்களா காம்பௌண்டின் எல்லைக்கு வந்தவுடனேயே மாடனும் காத்தானும் வழியில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினர். அதை அவர் மதித்துப் பார்க்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?

இருந்தாலும் அவர்களுக்கு அது கடமை. வழியில் எங்கு பார்த்தாலும் அந்த மரியாதையைச் செலுத்தியே தீர வேண்டும்.

காரிலிருந்து அவரைச் செந்தூக்காகத் தூக்கிச் சென்று இருக்கையில் வைக்காத குறை ஒன்றுதான். அந்த அளவிற்குப் பணியாட்களின் உபசாரங்கள், தொண்டூழியங்கள்.

ஏஜெண்டுகள், காரியஸ்தர்கள் எல்லோரும் வந்து போயினர். அன்றைய வேலைகளுக்கான கட்டளைகள், ஆலோசனைகள் ஆகியவைகளைத் தாங்கிச் சென்றனர். எல்லோரும் வந்து போய் விட்டனர். அடியாட்கள் இருவர் மட்டும் தம் அண்டையில் கைகட்டி நிற்க சோபாவில் சாய்ந்தபடி கால் நீட்டி அமர்ந்திருந்தார் கவுண்டர்.

மாடனும், காத்தனும் நேரம் பார்த்திருந்தனர். அவர் யாருடைய இடையீடும் இன்றித் தனித்திருக்கும் நேரம் பார்த்துப் போக வேண்டும். அதற்கிடையில் சென்றால் அவருக்கு அசாத்திய கோபம் கிளம்பிவிடலாம். அந்த இரு அடிமைப் பறையர்களின் முறையீடுகள், வேண்டுகோள்கள் அவருக்குப் பிரதானம் அல்லவே!

இருவரும் பயந்து பயந்து கவுண்டரின் பார்வை கிட்டும் இடத்திற்குச் சென்றனர். அவர்களின் இதயம் பயத்தால் 'விண் விண்' என்று துடித்தது. செவிப்பறையைத் தாக்குவது போல் அதன் துடிப்பு சுண்டியிழுத்தது. அவர் என்ன சொல்லப் போகிறாரோ? சில நேரங்களில் இப்படிப்பட்ட முறையீடு களுக்கே கூடச் சாட்டையடி கிடைக்கும். அவருடைய மனோ நிலை எப்படியிருக்கிறதோ?

மாடனும் காத்தானும் தரையில் நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்தனர். கவுண்டர் பார்த்தும் பாராததுபோல் அமர்ந்திருந் தார். அவர்கள் என்ன அவ்வளவு முக்கியத்துவம் படைத்தவர் களா? கொஞ்ச நேரம் காத்திருக்கட்டும். பெரிய பண்ணையின் கௌரவம் அவ்வளவு லேசுப்பட்டதா? ஆனானப்பட்ட பெரிய சர்க்கார் அதிகாரிகளே ஆலாய்ப் பறக்கும் போது இந்த எச்சிலைகள் எம்மாத்திரம்? இப்படிப்பட்ட அதிகாரத்தோடு தான் அந்தப் பரம்பரையே நீடித்து வந்திருக்கிறது. அதை அடிபிசகாமல் காப்பதுதான் அவரது கௌரவம்.

கவிழ்ந்து கிடந்த மாடனின் முகத்தில் செவ்வெறும்புகள் ஊர்ந்தன. கண் இமைகளைச் சுற்றியும் கடித்தன. பீழை அண்டிய அந்தப்பக்கம் அவற்றிற்கும் ஈடுபாட்டைக் கொடுத்திருக்கிறது. ஊசியால் குத்துவது போன்று வேதனை. முகத்தைத் தூக்கித்

துடைத்துக்கொள்ளவும் முடியாது. உத்தரவு கிடைக்கும் வரையில் அதைச் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும், வாழ்க்கையின் பேரால்! சம்பிரதாயக் கோட்பாடுகளின் பேரால்!

கவுண்டர் அப்பொழுது வேலையாட்களைப் பார்த்து ஜாடை காட்டினார். அவர்களில் ஒருவன் சாட்டையை எடுத்துச் சென்று அவர்கள் இருவர் முதுகிலும் ஆளுக்கொன்று வரைந்தான். சில நேரங்களில் அடிமைகளை இந்த முறையிலும் விசாரிப்பதுண்டு.

அவர்கள் இருவரும் எழுந்து நின்றனர். வியர்வை வழிந்து உடலை நீராட்டியது. தரைப்பகுதி உடலில் ஒட்டி வியர்வையுடன் கலந்து சேறாடியது.

காத்தானுக்கு இதெல்லாம் புதிய அனுபவம். வாழ்க்கைப் போராட்டத்தில் நேரடியாக மோதுகிறபொழுதுதானே அதனுடைய குரூரங்களைப் பார்க்க முடிகிறது! முன்னோர்களைப் போல் அவனால் அவ்வளவு ஊமைத்தனமாகச் சகித்துக் கொள்ள முடியாதுதான். இருந்தாலும் வாழ்ந்து தீரவேண்டுமே. மாடன் தன் கோரிக்கையை வெளிப்படுத்தினான்.

"அடிமைக்காத்தானுக்கு ஒரு கால்கட்டுப் போடணுங்க எசமா!"

வாய்க்காலில் தண்ணீர் வந்துவிட்டது. வேலையில் எல்லோரும் மும்முரமாக ஈடுபடும் நேரம் எவ்வளவு ஆட்கள் இருந்தாலும் கொள்ளாது. புதிதாக அடிமைச் சேவகத்திற்கு ஓராள் கூடுதலாகிறது என்றால் உவப்பான விசயந்தானே! இருந்தாலும் கேட்ட உடனேயே சம்மதம் கொடுத்து விடுவது கௌரவக் குறைச்சலல்லவா?

கவுண்டர் கேட்டார்:

"வேல நேரம் பார்த்துத்தானா இந்த நெனப்பு? என்ன தான் அக்கறையோட பாதுகாத்தாலும், விஸ்வாசத்தோடு உழைக்கணுங்கற புத்தி உங்களுக்குக் கொன்னு போட்டாலும் வராதோ?"

பண்ணையாரின் காலில் கிடக்கிற செருப்புக்குக் கூட ஓய்வு நேரமுண்டு. ஆனால் அந்த மனித ஜீவன்களுக்கோ சோர்வுற்றுத் துவண்டால் கூட தன்னுணர்விழந்து சாய்வதற்கு முடியாது. மாட்டிடம் கூட அதிகம் வேலை வாங்கினால் கொம்பை ஆட்டித் தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும். ஆனால், இவர்களுக்கோ முனகுவதற்குக்கூட உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும் பொழுதுதான் கவுண்டர் இந்த விதமாகக் கேட்கிறார்.

இல்லாத சலுகைகளை இருப்பதுபோல் காட்டுவதன் மூலம்தான், அவர்கள் ஏதாவது கோரிக்கைகளை எழுப்பாமல் தடுக்க முடியும். அதெல்லாம் சுரண்டும் வர்க்கத்தின் படிப்பிக்கப் படாத தனியான கலைகள்!

மாடன் கூனிக்குறுகி மிகத் தாழ்ந்தபடி "ராத்திரிப்பூராவும் வயல்லே இருந்துட்டுத்தானுங்க எசமா நேரா இங்கே வாரோம். எங்களுக்குத் தெரியாதுங்களா எசமா, யாருப்பைத் தின்னு சீவிக்கறோம்னு" என்றான். அவன் குரலில் எஜமான விஸ்வாசத்தின் தடித்த பக்தி சிரத்தை கீறலோடியது.

அந்த வாய்ப்பாட்டைத்தான் அவர் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறார். அதை என்றும் அவர்கள் மனனம் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

"பொட்டெ எங்கடா இருக்குறது."

பொண்ணு எங்கிருக்கிறா, என்று கேட்கக் கூட மனம் ஒப்பவில்லை. அப்படிக் கேட்பது அவர்களையும் உணர்வுள்ள ஜீவன்களாகத் தான் மதிக்க நேர்ந்து விட்டதாக அவர்கள் எங்கே கருதி விடுவார்களோ என்ற பயம் போலும்!

அப்படி கேட்டு விட்டதிலும் மாடனுக்குத் திருப்தி. அவர்களின் வரவை சாட்டை வாரினாலேயே தெரிந்து கொள்ள முனைந்தவர், இந்த அளவுக்காவது வாய் திறந்து பேசுகிறாரே!

மாடன் சொன்னான்:

"எச்செலைக்கு எந்த எடம்னு சாசுவதமுண்டுங்களா எசமா? உங்க விருப்பமில்லாமெ அடிமைக்குன்னு சொந்த விருப்பம் உண்டுங்களா எசமா?"

தன் விருப்பத்தின்படிதான் எல்லாக் காரியங்களும் தீர்மானிக்கப்படும் என்பது அவருக்குத் தெரிந்த விசயந்தான். இருந்தாலும் அவர்கள் அப்படிக் கூறக் கேட்பதில் ஓர் ஆத்மசுகம்.

கவுண்டர், தான் ஏற்கனவே தீர்மானித்து வைத்திருக்கிற விசயத்தைக் கூறுபவர் போல, "நொச்சிப்பட்டி நம்ம மாப்பளெ பண்ணையத்திலே பாரேன்டா!"

இதைக் கேட்டதும் காத்தானுக்கு உள்ளூரச் சந்தோசம் பொங்கியது. நொச்சிப்பட்டிப் பண்ணையின் அடிமை வேலைப் பெண்கள் பார்ப்பதற்கு அழகாகவே இருப்பார்கள். உடல் வாகும் நன்றாயிருக்கும். ஒரு வாலிபனுக்கு இதைவிட என்ன வேண்டும்.

கவுண்டர் உத்தரவு கொடுத்து விட்டார். அவர்களுக்கு விருப்பம் இல்லையென்றாலும் கூட அதைப் புறக்கணிப்பதற்கு அவர்களுக்கென்ன உரிமையிருக்கிறது? அவருடைய விருப்பு வெறுப்புகள் தான் அவர்களுடைய வாழ்வின் இன்பதுன்பங்கள்.

அந்த ஒரு வார்த்தையைத்தான் அவர்கள் எதிர்பார்த்து இருந்தார்கள். அது கிடைத்துவிட்டது.

மாடன் கை கொண்டு வாயைப் பொத்தித் தாழ்ந்தபடி 'இன்னைக்குப் போய் வர உத்தரவு....' என்றபடி குழைந்துருகினான்.

கவுண்டர் தனது வலதுகையைப் பக்கவாட்டில் நீட்டி உதறிவிட்டுக் கொண்டார். இதைப் பார்த்த அருகிலிருந்த அடியாட்கள் அந்தக் கையைத் தாங்கிப் பிடித்து மெதுவாகப் பிசைந்துவிட்டார்கள்.

கவுண்டர் முடிவாகக் கூறுபவர் போல, "காரியத்தை சீக்கிரமா முடிக்கணும். நடவு காலம் வந்திடுச்சு" என்றார்.

"சரிங்க எசமா" என்றபடி அவர்கள் இருவரும் அவரின் முன்னால் நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்தனர். விடைபெறுவதற்கான அறிகுறி போலும்.

எழுந்து நடந்தனர். ஏதோ ஒரு இமாலயக் காரியத்தைச் சாதித்து முடித்துவிட்டது போன்ற பூரிப்பு!

ஒரு புதிய அடிமை, பண்ணையின் செல்வத்தைப் பெருக்கிக் குவிப்பதற்கு மேலும் சில அடிமைகளைப் பெற்றுத் தருவதற்காக வரப் போகிறாள்.

அந்த ஒன்றுதான் அவர்கள் வாழ்வில் கிட்டும் மகத்தான பேரின்பம் போலும்!

# 9

குஞ்சுத் தாய்க்கோழி மீன் உச்சியில் நின்றது. அந்த நேரத்தில் எழுந்து புறப்பட்டால்தான் விடியலுக்குள் நொச்சிப்பட்டியை அடைய முடியும்.

அவர்கள் படுக்கச் செல்லும்போது அந்த முடிவோடு தான் சென்றார்கள். காத்தானின் தாயார் பொன்னா எழுந்து சிறுநீர் கழிக்கச் சென்றவள், வானத்தை அண்ணாந்து பார்த்தாள். தாய்க்கோழி மீன் உச்சியில் இருந்தது. இந்நேரம் புறப்படுவதற்கு ஆயத்தமாகியிருக்க வேண்டும். மூதேவி ஒரே அழுத்தாக அழுத்திக் கொண்டு விட்டாள்.

பொன்னா அவசர அவசரமாகச் சென்று மாடன், தன்னாசி, குஞ்சாண்டி ஆகியோரை எழுப்பி விட்டாள்.

எல்லோரும் எழுந்தனர். முகம் கழுவினர். பழைய சோற்றுத் தண்ணீரில் உப்புப் போட்டு ஆளுக்குக் கொஞ்சம் குடித்தனர். மாடன், தன்னாசி, குஞ்சாண்டி ஆகிய மூவரும் நொச்சிப் பட்டியை நோக்கிப் புறப்பட ஆயத்தமாயினர்.

தன்னாசி பொன்னாளைப் பார்த்துக் கேட்டான்:

"நாம குறிச்சிப் போற எடம் சரிப்பட்டு வல்லின்னா என்ன செய்யறது?"

பொன்னா அதற்கான திட்டத்தையும் வைத்திருப்பவள் போல, 'நாம பாக்கற வீரன் குடும்பம் ஒத்து வல்லின்னா மூக்கங் குடும்பத்துப் பொண்ணப் பாருங்க. அதுவும் ஒத்துவல்லின்னா பூனாச்சி குடும்பத்துப் பொண்ணப் பாருங்க' என்று கூறினாள்.

பொன்னா சொல்வதைப் பார்த்தால் எப்படியும் போகிற கையோடு விசயத்தை முடித்துவிட வேண்டும் என்கிற உறுதி தொனிக்கிறது. அப்படிச் செய்தால்தான்; இல்லையென்றால் அறுவடை முடிந்து வேலையில்லாதிருக்கிற நாட்களில்தான் முடியும். அதற்கு இன்னும் ஏழெட்டு மாதங்கள் காத்திருக்க வேண்டும்.

போகிறவர்கள் எப்படியும் ஏதாவதொரு பெண்ணை நிச்சயித்து விட்டுத்தான் வருவார்கள் என்பதை உணர்ந்த காத்தான், மாடனிடம் சென்று கூச்சமும், தயக்கமும் நிறைந்தவனாகக் கூறினான்:

"சித்தப்பா! நீங்க எப்படியும் வீரங்குடும்பத்துப் பெண்ணையே பார்த்து முடிச்சிட்டு வாங்க" என்றான்.

வீரன் குடும்பத்து வள்ளியைக் காத்தான் நன்றாக அறிவான். ஒருமுறை இங்கிருந்து பண்ணையடிமைகள் நொச்சிப்பட்டிப் பண்ணையின் வேண்டுகோளின் பேரில் சாமி தேர் இழுக்கச் சென்றிருந்தனர். அப்பொழுது காத்தானும் அவர்களுடன் சென்றிருந்தான்.

அந்தச் சேரியில் முதலில் அவன் கண்ணில் பட்டடது வீரன் மகள் வள்ளிதான். அப்பொழுது அவள் குளத்திலிருந்து தண்ணீர் மொண்ட ஒரு குடத்தைத் தலையிலும், மற்றொன்றை இடுப்பிலுமாகத் தாங்கியபடி ஈற்றுத் தவறிய பெட்டைக் குதிரை போல எடுப்பாக நடந்து சென்றாள். அவள் உடல்வாகு அவனை ஒரே நொடியில் கவர்ந்திழுத்துவிட்டது. ஓர் ஆண் பிள்ளையே தூக்க மலைக்கும் தண்ணீர்க் குடங்களையல்லவா அவள் அவ்வளவு லாவகமாகச் சுமந்து செல்லுகிறாள்!

அப்பொழுதே அவள் அவன் மனதில் சித்திரமாகப் பதிந்து விட்டாள். அவளைக் கல்யாணம் செய்து கொள்பவன் அதிர்ஷ்டக்காரனாகவே இருக்க வேண்டும். அவள் மேனி, அவள் அழகு, அவளின் கட்டான உடல் எந்தவொரு ஆடவனின் பார்வையையும் கொக்கிபோட்டு இழுக்கவே செய்யும். அவன் விரும்பியதெல்லாம் அவள் ஒரு மாபாட்டுக்காரியாக இருக்க வேண்டும் என்பதுதான். அது ஒரு குடும்பத்தின் கஷ்ட நிலையைப் போக்கத் துணைபுரியும். அதுதானே ஒரு கையுழைக்கும் குடும்பத்திற்கு அத்தியாவசியமானது. இதையெல்லாம் மனதில் கொண்டுதான் அவன் அவ்வளவு வலியுறுத்திச் சொல்லுவது.

காத்தானின் உள்ளக்கிடக்கையைப் புரிந்துகொண்ட மாடன் "வீரன் அதிகப்படியான பரிசங்கேட்டா என்ன பண்ணறது?" என்று கேட்டான்.

இப்படியொரு சிக்கல் இருப்பதை அவன் எதிர்பார்க்கவே யில்லை. இந்தக் கேள்வி அவனைத் திக்குமுக்காடவே வைத்தது. இது ஒரு சமூக சம்பிரதாயம். இதில் எந்தப் பண்ணையும் தலையிட முடியாது. இது மட்டும் அவ்வளவு வலுவாகக் கட்டிக்

காக்கப்பட்டு வருகிறது. தங்களையே பிறருக்கு அடிமைப் படுத்திக் கொண்டு விட்ட நேரத்திலும் இப்படிப்பட்ட சில சமூகச் சம்பிரதாயங்களை மட்டும் விட்டுக் கொடுக்காமல் சுயேச்சைத் தன்மையோடு பாதுகாத்து வருகிறார்கள். பண்ணையார் அனுமதி கொடுக்கும் சேரிக்கே பெண் கேட்கச் சென்றாலும், அந்த இடத்தில் பெண்ணின் தகப்பனின் முடிவே இறுதியானது.

காத்தான் கேட்டான்:

"அப்படி எவ்வளவு கேட்டுப்புடுவாங்க?"

மாடன் அவன் அறியாமையைக் கண்டு லேசாகச் சிரித்தான். அவனுக்கெங்கே தெரியப்போகிறது இந்த விவகாரங்களெல் லாம். பார்க்கக் கவர்ச்சியாகவும், வேலைக்குத் துடியாகவும் உள்ள பெண்களைப் பெற்றோர்களுக்கு அது ஒரு மூலதனம். அவர்கள் மாப்பிள்ளை வீட்டாரிடம் கிடைக்கும் வரையில் கறந்து விடுவார்கள். அதில் எந்தவிதத் தயவு தாட்சண்யமும் கிடையாது.

மாடன் சொன்னான்:

"முறுக்கான சரக்குக்கு மலிவான வியாபாரி வரமாட்டான். மலிவான சரக்குக்கு முறுக்கான ஏவாரி வரமாட்டான். சரக்கு முறுக்கு கேக்கறதக் குடுத்தா காரியம் முடியும்."

பதட்டமும் வேகமும் நிறைந்தவனாகக் காத்தான் கேட்ட தையே மீண்டும் திருப்பிக் கேட்டான்.

"அப்படி எவ்வளவுதா அதிகம் கேப்பாங்க?"

"அது பத்து மடங்கு வரை கூடப் போவலாம். அது பெத்தவனோட மனசப் பொறுத்தது."

ஓர் அடிமை எதைச் சொல்வான். அதிகம் கொடுப்பதற்கு அவனிடம் சொத்துச் சுகமா இருக்கிறது? இருந்தாலும் அவன் ஆறுதலற்ற மனத்தோடு சொன்னான்:

"உங்க மவனுக்கு எப்படிச் செய்வீங்களோ' அப்படி நெனச்சுச் செய்யுங்க. அவ கெடைச்சான்னா குடும்பத்துக்கு ஒத்தாசையா இருக்கும்"

பொன்னா பயணப்படும்படி துரிதப்படுத்திக் கொண்டிருந் தாள். அமிர்தயோகம் முடிவதற்குள் பெண் வீட்டிற்குச் சென்றுவிட வேண்டும். வள்ளுவப் பண்டாரத்துக்குத் தட்சணை வைத்து நேரங்காலம் பார்த்து வைத்திருக்கிறாள். அதை அவள்

புறக்கணிக்க முடியாது. குடும்பத்துக்குக் கெடுதி நேரிட்டு விடலாம்.

மாடன், குஞ்சாண்டி, தன்னாடி ஆகிய மூவரும் புறப்படுவதற்கு ஆயத்தமானபொழுது, பொன்னா எதையோ நினைத்துக் கொண்டவள் போலக் காத்தானை நோக்கி, 'ஓடிப் போயி கெட்ட சகுனம் நேராம இருக்க வழியிலெ முண்ட தண்டெ ஆராவது வரப்போவ இருக்காங்களான்னு பார்த்துட்டு வா' என்றாள்.

அது பார்க்க வேண்டிய ஒன்று. அதுவரையிலும் அதைப் பற்றி யாரும் நினைக்கவில்லை. அதைப் புறக்கணிப்பதால் பல வேளைகளில் எதிர்பார்க்கும் காரியமே கை கூடாமல் போவதும் உண்டு என்பதும், அப்படிப்பட்ட நஷ்டத்தைத் தங்களால் தாக்குப்பிடிக்க முடியாது என்பதும் அவர்களது அச்சம்!

காத்தான் ஊர் எல்லை முடிகிற வரையிலும் ஓட்டமாக ஓடிப் பார்த்துவிட்டு வந்தான். ஒரு இடத்தில் வெள்ளை உடை அணிந்த பெண் உருவம் முக்காட்டிட்டு நிற்பது போல் தெரிந்தது. அவர்கள் வரும் நேரத்தில் அந்த உருவத்தைப் பார்க்கக்கூடாது, அது அபசகுனம்.

அந்த உருவம் மறையட்டும் என்று கொஞ்ச நேரம் நின்று பார்த்தான். ஆனால் அது நகருவதாகத் தெரியவில்லை. அருகில் சென்று பார்த்தான். வேலாங்கொம்பில் கிழிந்து போன வெள்ளைத்துணி தொங்கிக் கொண்டிருந்ததின் தோற்றந்தான் அது! தன் அறியாமையை எண்ணித் தனக்குள் சிரித்துக் கொண்டான். வேகமாக ஓடிவந்து மூச்சு வாங்கிவிட்டு வாசலில் நின்றபடி "ஒரு தடையும் இல்லெ" என்றான்.

மூவரும் வீட்டை விட்டுப் புறப்பட்டனர்.

—

# 10

வீரன் பாறைக்கல் வலசிலிருந்து பெண் கேட்க வந்திருக்கும் செய்தியைத் தன் பண்ணையாரிடம் கூறினான். அவரும் அதற்குச் சம்மதம் தெரிவித்தார். சம்பந்தக் காலிலேயே அடிமைகள் பரிவர்த்தனை நடந்து முடிவதும் ஒருவிதத்தில் நல்லதுதான் என்று நினைத்தார்.

வீரன் சந்தோஷத்துடன் வீடு வந்து சேர்ந்தான். பேச்சைத் துவங்கும் முறையில் சம்பிரதாயப் பூர்வமாகக் கேட்டான்.

"ஜோலி என்னவோ?"

அவர்களும் சமூகப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியறாத பண்பாட்டின் பிரதிநிதிகளைப் போல "மாடொண்ணு பார்த்துட்டுப் போலான்னு வந்தோம்" என்றனர்.

நீரில் நனைத்தெடுத்த கோழியைப்போல மாட்டுக் கொழுப்பு நெய்யிட்டுப் படியச் சீவிய கூந்தலை அள்ளிச் செருகிக் கருஞ்சாந்துப் பொட்டிட்டுக் கண்டாங்கிச் சேலை உடுத்திய வாறு அழகுப் பதுமைபோல் வெற்றிலை பாக்குக் கொண்டுவந்து அவர்களின் முன்வைத்தாள் வள்ளி. கட்டான உடல் வசீகரம் வந்திருந்தவர்களை உண்மையிலேயே பதித்த கண் எடுக்காமல் அவள் மறையும் வரையிலும் பார்த்துக் கொண்டிருக்கச் செய்தது.

வள்ளி கிடைத்துவிட்டால் உண்மையிலேயே காத்தான் அதிருஷ்டசாலிதான் என்று தன்னாசி தனக்குள் எண்ணிக் கொண்டான். அவனுக்கு நினைவு தெரிய இப்படியொரு பெண் தங்கள் சேரியில் பிறக்கவும் இல்லை; வெளியிலிருந்து வந்து சேரவும் இல்லை.

வீரன் இரண்டு மூன்று வெற்றிலையை எடுத்து, ஆடு தழையைக் கடிப்பது போலக் கடித்துக் கொட்டைப் பாக்கைப் போட்டு மென்றான். ஊறிய எச்சில் கடைவாய் வழியாக ஒழுகிப் புல் கட்டைப் போன்று துளர்த்திருந்த தாடி மயிர்வழியாகப் பாய்ந்து நெஞ்சில் கால்வாய் இட்டு ஓடியது.

புதையலைப் பெற்றவனின் பூரிப்பு நிலையில் அவன் அமர்ந்திருந்தான். பதிலுக்கு அவன் கேட்டான்:

“எங்கிட்ட மாடு வாங்கற அளவுக்கு மொதலு வச்சிருக்கிறீங் களா நீங்க”

அவன் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. பரம்பரையாகக் கூறப்படுவதைத்தான் அவனும் கூறினான். ஆனால் அவர்க ளுக்கு அவன் கூறியதில் நையாண்டியும், குத்தலும் கலந்திருப்பது போலப்பட்டது.

குஞ்சாண்டி சொன்னான்:

“ஆடறுக்கறெவெ கத்தியில்லாமெ போகமாட்டான். அடுப்பூதறவ கொளாயில்லாமே குந்தமாட்டான்.”

அவன் நாசூக்காகப் பதில் கூறிவிட்டான். அப்படியென்ன ஊரிலில்லாத விலை உன் மாட்டுக்கென்று அவன் கேட்டு விடவில்லை. வார்த்தை நட்டுக்கொள்ளும். அதை அவன் அறிந்திருந்தான் போலும்!

வீரன் லேசுப்பட்டவன் அல்ல. எப்படியெல்லாம் மாப் பிள்ளை வீட்டாரிடம் பணம் கறப்பது என்கிற சிந்தனையி லேயே இருந்தான். அவன் சரக்கு அப்படி ஒன்றும் விலை போகாதது அல்ல. அதற்கான மவுசை அவன் நன்கு அறிந்திருந்தான்.

கடைவாயில் வழிந்த எச்சிலைக்கூட அவன் துடைக்க முனையவில்லை. ரத்தம் ஒழுகித் துவைந்தது போல் வெற்றிலைக் குழம்புடன் வடிந்தசாறு ரோமக்கால்களில் படிந்திருந்தது.

கண்களை இடுக்கி அவர்கள் மனதைத் துருவித் துளைத்துப் பார்ப்பவன் போல நோக்கிட்டு வீரன் சொன்னான்:

“நல்லா தர்க்கம் பேசத் தெரிஞ்சிருக்கறே நீ. ஆனா அதெல் லாம் எங்கிட்டெ நடக்காது. மாப்பிள்ளெ ஆருன்னு சொல்லி லியே”

“சர்கோடு தன்னாசி மவெ காத்தா”

“ஓ! அந்தப் பயதானா! பார்த்திருக்கறே. பண்ண வேலைக்கு எப்பச் சேந்தான்?”

‘இந்த வருசம் மொதலுக்குச் சேந்தாச்சு!’

வீரனுக்கும் மாப்பிள்ளையைத் தெரியும் போலிருக்கிறது. இல்லையென்றால் மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டுமென்று கூறினாலும் கூறலாம். அந்த வேலை மிச்சமாகிவிட்டது.

*வீரன் சொன்னான்:*

*'பயலப்பத்தி பேச்சில்லே. பண்ண வேலக்காரன்னாலே காவவுத்துக் கஞ்சியாவது கெடச்சிடும். அது போவட்டும். எம் பொண்ணக் கொண்டு போறதுன்னா, எவ்வளவு பரிசம் கெடைக்கும்?'*

*"நாட்டு மாமூல் தெரிஞ்சதுதானே! பத்தரெ ரூவா. ரண்டு மூட்டை நெல்லு"*

*வீரன் வாய்விட்டுக் கடகடவென்று சிரித்தான். தெரியாத ஒரு பொருளுக்குத் தெரிந்ததுபோல் விலை கேட்டுக் கேலிக்கிடமாகிற ஒருவனைப் பார்த்து நகைப்பது போலிருந்தது இது.*

*வீரன் சொன்னான்:*

*"எம்மவளுக்கு இந்தப் பரிசமெல்லாம் கட்டாது, கூட்டித் தரணும்"*

*தன்னாசி கேட்டான்:*

*'அதென்னது நடப்பிலில்லாத வழக்கம்?'*

*இந்தக் கேள்வி வீரனுக்குச் சற்று எரிச்சலையே கொடுத்தது. இருந்தாலும் அதை மனதுக்குள் போட்டு ஆற்றிக்கொண்டு "நா ஆருக்கும் மடியப் புடுச்சுப் போடலெ. சம்மதம்னா கட்டிக் கிட்டுப் போவலாம். இல்லின்னா வுட்டுடலாம்."*

*வீரன் கறாராகவும், தைக்கிறாற் போலவும் கூறிவிட்டான். இனிமேல் வழவழவென்று பேசிக் கொண்டிருப்பதில் பலனில்லை. பெண் வேண்டுமென்றால் கொஞ்சம் பரிசத்தை உயர்த்திக் கேட்க வேண்டும். இல்லையேல் விட்டுவிட வேண்டும்.*

*மாடன் கேட்டான்:*

*'எவ்வளவு ஒசத்திக் கொடுக்கணும்?'*

*"நூறு ரூவா"*

*அதை அவர்கள் நிச்சயம் கொடுக்க முடியாது. அதுதான் முடிவு என்றால் அவர்கள் எழுந்துபோக வேண்டியதுதான்.*

*மாடன் முடிவாகக் கேட்டான்:*

*"ஒரு அடிமெ இவ்வளவுக்கு எங்கே போவான். நீயும் ஒரு பண்ணெ அடிமைங்கிற மொறையிலே தெரிஞ்சிக்கிடணும்; ஏதோ கெட்டிக்காரப் பொண்ணுங்கற மொறையிலே இவ்வளவு கேக்கறோம். பத்து ரூவா பரிசத்திலே சேத்தித் தாறோம் அதுக்கு மேலே முடியாது."*

*வீரனுக்குச் சம்மதமில்லையென்றாலும் இது திருப்தியளித்தது. பெண்ணைப் பெற்றவன் யாருக்கும் கிடைக்காத பெருமை அவனுக்குக் கிடைத்திருக்கிறது. மாமூல் பரிசத்தை மீறி - அந்தப் பக்கத்தில் யாரும் இதுவரையில் வாங்காததை... அவன் வாங்கப் போகிறான்.*

*வீரன் அதிகம் வளர்த்தாமல் மேலும் ஐந்து ரூபாய் சேர்த்துக் கொடுத்தால் போதும் என்றான். ஐந்து ரூபாயென்பது அவ்வளவு சிறிய தொகையல்லவே! இருதரப்பிலும் நீண்ட நேரப் பேச்சுப் பரிமாற்றங்களுக்குப் பின் எட்டணா மேற்கொண்டு சேர்த்து இருப்பது ஒரு ரூபாயாகக் கொடுப்பதென முடிவு செய்யப் பட்டது.*

*உறுதி செய்யப்பட்டதற்கு அடையாளமாகக் கள்ளுப்பணம் என்று ஐந்து ரூபாயை எடுத்து வீரனின் கையில் கொடுத்தான் மாடன்.*

*ஓர் அடிமை தனக்கொரு அடிமையைப் பெறுவதற்காகக் கொடுக்கப்படும் அச்சாரம் போலும் அது!*

*இப்படியாக இரண்டு உள்ளங்களைப் பந்தப்படுத்துவதற்காக முதல் முடிச்சுப் போடப்பட்டது.*

# 11

மாரக்காள் ரொம்பவும் ஒடுங்கிப் போய்விட்டாள். வாழ்க்கையில் எத்தனையோ சோதனைகளை நேரிட்டவள் அவள். இருந்தும் அவள் சோர்ந்ததில்லை. நம்பிக்கை குறைந்ததில்லை.

இன்றோ கந்தனின் செயல் அவளை முற்றாக மாற்றியெடுத்து விட்டது. ஆரம்பத்தில் மகனைத் தன் கணவனை விடவும் வெறுத்துப் பேசியவள் - கையில் கிடைத்தால் நஞ்சு வைத்துக் கொன்று விடுவேன் என்று சூளுரைத்தவள் இன்று மகனின் நினைவாக எப்பொழுதும் புலம்பிக்கொண்டேயிருக்கிறாள். அவனை ஒரு முறையாவது யாருக்கும் தெரியாமல் சென்று பார்த்துவிட்டு வந்தால் என்ன என்றும் சிந்திக்கிறாள். ஆனால் மாரப்பனுக்குத் தெரிந்தாலோ அவ்வளவுதான் கொன்றே போட்டு விடுவான்.

அவளுக்கு இரவு பகலாக மகனைப் பற்றிய சிந்தனைகள் தான், அவன் 'தலைவிதி' எப்படியெல்லாம் ஆகிவிட்டது. பெற்றவர் கள் இருந்தும், சுற்றத்தினர் இருந்தும் அனாதை ஆகிவிட்ட வனைப் போல ஒதுங்கிப்போய் விட்டானே. தந்தையைக் கூட மறந்து விடலாம். தாயை மறந்து அவனால் எப்படி வாழ முடிகிறது? ஒரு பெண்ணின் கவர்ச்சி அவ்வளவு மகிமை வாய்ந்ததோ.

அந்தக்கை அவனை எத்தனையோ முறை அடித்திருக்கும். அதற்குமேல் எத்தனையோ முறை அணைத்துக் கொஞ்சி யிருக்கும். அவன் கோபித்திருந்தாலும் அவனைத் தழுவித் தழுவிக் கொடுத்திருக்கும். அப்பொழுதெல்லாம் அந்தத் தாய் மனசில் கல்மிசம் இல்லை. கருங்கல்லைப் போன்ற வைராக்கிய மில்லை. தகப்பன் திட்டியபோதெல்லாம், வெறுத்த போதெல் லாம் கவசம் போல் நின்று காத்திருக்கிறாள்.

ஆனால்... இன்று அந்த மனம் கசந்துவிட்டிருக்கிறது. ஒரு பெண்ணிற்காக வேண்டி, ஒரு தந்தைக்கு அப்படி நேரலாம். ஒரு தாய்க்கு அப்படி நேரலாமா?

அதனால் தான் அவள் மனம் அழுகிறது போலும். அதற்காக வேண்டித்தான் அவள் உடல் சந்தனக் கட்டையாகத் தேய்கிறது போலும். ஒரு தாய் என்றைக்குமே தன் குழந்தைகளிடத்தில் இரட்டை வாழ்க்கை வாழ முடியாது. அது சாத்தியப்படவும் படாது.

அவள் என்னவெல்லாமோ சிந்தித்தபடி மத்தியான நேரத்தில் வாசலின் முன்னுள்ள வேப்பமரத்து நிழலில் அமர்ந்து கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தாள். வீட்டில் யாருமே இல்லை.

அப்பொழுது கோமாளிக் கிழவர் அங்கு வந்தார். அவர் கட்கத்தில் கயிற்றுச் சுருள் ஒன்றை இடுக்கியிருந்தார். மாரப்பன் கட்டில் கயிற்றுக்காகப் புளிச்சநார் கொடுத்திருந்தான். அதைத் திரித்துக் கொண்டு வந்திருக்கிறார்.

மாரக்காளின் கோலம் கிழவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. எப்படியிருந்தவள் எப்படி உருக்குலைந்து போய் விட்டாள்? ஒரு காலத்தில் ஊர்ப்பெரிய தனக்காரர்கள் கோயில் வரி கொடுக்கப்படவில்லையென்று கதவு பிடுங்க வந்தபொழுது மாரப்பன் கூடப் பூனையாய் ஒடுங்கிக் கிடந்த நேரத்தில் அவள் எப்படி எதிர்த்து நின்றாள்! அந்தத் திடகாத்திரத்தின்... வைராக்கியத்தின் - நிழல் கூட இன்று காணோமே!

கிழவரின் சந்தடிகூட அவளை உணர்வடையச் செய்ய வில்லை. கிழவர் கயிற்றுச்சுருளைத் தொப்பென்று வாசலில் போட்டபடி "ஏம்மா உக்காந்திட்டெ?" என்று ஒப்புக்குக் கேட்டார்.

அப்பொழுதுதான் அவள் சுய உணர்வு பெற்றாள். அவசர அவசரமாக முந்தானையால் முகத்தைத் துடைத்துவிட்டுக் கொண்டு "சும்மாதாப்பா உக்காந்திருக்கறே. வேலெவெட்டி இல்லின்னா பைத்தியம் புடுச்சாப்பலே ஆயுடுது" என்றாள்.

"வேலவெட்டி இல்லின்னா ஒடம்பு குனுப்புத் தாக்கும்பாங்க. உனக்கென்னன்னா உடம்பு எளைச்சுத் தெப்பளமாய்ப் போயிட்டுதே" என்றார்.

மாரக்காள் ஒரு வறட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு "சோம்பலு செல்வத்தெ தின்னுமாம் துன்பம் சதையெத் தின்னுமாம்" என்றாள்.

அவள் தன் உடல் மெலிவை எவ்வளவு நயமாக எடுத்துணர்த்தி விட்டாள்.

கிழவருக்கா சொல்ல வேண்டும்? வேப்பமரத்து நிழலில் கிடந்த கட்டிலில் காற்றின் சுகத்தை அனுபவித்தவாறு

அமர்ந்திருந்தார். கட்கத்தில் விரலை விட்டுத் தேய்த்து உருட்டிய அழுக்கில் கமறும் வியர்வையும், புளிப்பும் நிறைந்த வாடையை நுகர்ந்து பார்த்தவராக 'கல்லுன்னாலும் கோழி ஜீரணிச்சுத்தா வெளியே தள்ளும். கத்தரிக்காம்புனாலும் குதிரெ காயம்படா மதா வெளியேத்தும்' என்றபடி வாயில் நிறைந்த வெற்றிலைக் குழம்பை உதட்டின் மீது இரண்டு விரல்களை வைத்துப் பதித்து 'சிதுக்'கென்று வெளியே துப்பினார். அப்படித் துப்பும்பொழுது எச்சில் தூவானம் பக்கத்தில் இருப்பவர்கள் மீது படியாமல் பீச்சுக்குழல் தண்ணீர் போல் நேராகச் சென்றுவிழும்.

கிழவர் சொல்வதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. எதையும் ஜீரணிக்கும் மனோவலிமை வேண்டும் என்று கூறுகிறார். அவள் மனோவலிமை இல்லாமலா இதுநாள் வரை வாழ்ந்து வந்தாள்? அவளுக்கு நேர்ந்திருப்பது சாதாரணப் பாதிப்பில்லையே. எந்த ஒரு தாயினாலும் தாங்கிக் கொள்ள முடியாத பாதிப்பு!

மாரக்காள் தொண்டை அடைக்கக் கூறினாள்.

"இன்னமே எதுக்காவப் பொளைக்கணும்? இது நாவரையி லும் பெத்தெடுத்த சின்னஞ் சிறுசுகளெப் பெருசாக்குனோம். எறகு மொளைச்சதும் அதது போக வேண்டிய எடத்துக்குப் போயிட்டது. நாம இருந்து என்னெத்தெ வாரிக் கட்டிக்கிட்டுப் போவப் போகிறோம். நெனவு தெரிஞ்சதிலே இருந்து இது நாவரையிலும் என்ன பூரிப்படைஞ்சோம்... பொளைப்பே பொய்ப் பொளப்பாய் போச்சு!"

வாழ்க்கையில் தனக்கென்று எந்தவிதப் பிடிப்புமில்லாமல் ஒண்டிக்கட்டையாக வாழ்ந்து வருபவர் கிழவர். அவரே கூட இப்படியெல்லாம் சிந்தித்தது கிடையாது. வாழ்க்கையில் இது வரையிலும் ஒரு நம்பிக்கையுடனயேதான் வாழ்ந்து வந்திருக் கிறார். ஆனால், மாரக்காளின் நெஞ்சை ஊடுருவும் இந்த வார்த்தைகள் கிழவரின் மனத்தை நெக்குருகவே செய்தன. பந்தங்களும், பிடிப்புகளும் கொண்டு வாழ்க்கையில் மேடு பள்ளங்களை எல்லாம் நேரிட்டுக் கலங்காமல் பயணத்தைத் தொடர்ந்தவர்கள் - மகனின் செயலால் எப்படியெல்லாம் அலைக்கழிக்கப்பட்டு விட்டாள்!

மாரக்காள் சில நேரங்களில் மனத்தைத் தேற்றிக் கொள்வதற் காக "நம்ம பையன் அப்படி திருடியோ தெள்ளவாரித்தனம் செய்தோவா கெட்டழிஞ்சு போயிட்டான். பறச்சியெ கண்ணா லம் செய்து கிட்டான். அவ்வளவு தானே. ஆனா அவனத்தானே

ஏழைபாளைகள் எல்லாம் வாயூரப் புகழறதாகச் சொல்றாங்க. அது போதாதா?" என்றபடியெல்லாம் சிந்தித்துப் பார்ப்பாள். ஆனாலும் ரத்தத்தில் ஊறிய மூடச் சம்பிரதாயங்கள் தலைதூக்கும் பொழுதெல்லாம் அவை அழிந்து சிதைந்துவிடும். இப்படி இரண்டுவிதமான மனோ பாவங்கள் முட்டிமோதிக் கொண்டாலும் ஆரம்பக் காலத்தைப் போலல்லாமல் மகன் மீது பரிவைக் காட்டும் சபலம் என்னவோ தலையைத் தூக்கிக் கொண்டேயிருக்கிறது.

மாரக்காளின் மனச் சபலத்தைப் புரிந்துகொண்ட கிழவர் தொண்டையைக் கனைத்துச் சரி செய்து கொண்டு சொன்னார்.

"பெத்த மனசெப் புரிஞ்சுக்க முடியுது. ஆன ஆம்புள மனசு அவ்வளவு சுலபத்திலே எளகிடாதம்மா. ஒரு தாய் தன்னோட மக்களெ ஒரு கோபதாபமுன்னு என்னதா வெறுத்தாலும் பகைச்சாலும் அது மனசாழத்திலே இருந்து பொறப்படறதல்ல."

மாரக்காள் சொன்னாள்:

"இப்படிப்பட்ட ரட்ட வாழ்க்கெ வாழறதெ விடச் செத்துப் போயிட்டா மேலுன்னு படுது."

"சாவறதுங்கறது பெரிய விசயமில்லேம்மா. வாழறதுதான மவத்தானது. எப்படியெல்லா இந்த வாழ்க்கையிலே நீ போராடின அந்த மனத்தெடம் எங்கே போச்சு?"

அவர் வார்த்தைகள் குழைவாக இருந்தன. ஒரு தந்தைக்குரிய வாஞ்சையோடு பேசினார்.

மாரக்காள் பெருகி வரும் துக்கத்தை விழுங்கிக் கொண்டு சொன்னாள்:

"நா எதுக்காவப் போராடினேனோ அதனோல பலன் கண்ணுக்கு முன்னாடியே அழிந்து போச்சு. என்னதா வாழ நெனைச்சாலும் மனசத் தேத்த முடியலெ. மனசெ ஒரு நேரம் தேத்துனாலும் ஒடலத் தேத்த முடியலே. சோறு மருந்தாப் படுது. தூக்கங்கறது வரவே மாட்டிங்குது. கடசீலே பார்த்தா எனக்கு நானே விரோதியாப் போயிட்டே"

கந்தனுடன் அவள் பேசாவிட்டால் - பேசி ஆறுதல் பெறாவிட்டால் - அவள் செத்தே போய்விடுவாள் என்று கிழவருக்குப்பட்டது.

அது உண்மையுங்கூட. வேதனைப்பட்ட ஆத்மாவின் திருப்தியுறாத சபலம்! வாய் திறந்து கூறமுடியாத ஊமைத்தனமான ஆவல்.

மாரப்பனைச் சரிப்படுத்தி ஏதாவது செய்ய முடியுமா என்று கிழவர் சிந்தித்துப் பார்த்தார். இந்த நேரத்தில் அது நிச்சயம் முடியாத ஒன்று. மாரப்பன் பண்ணையாரின் வசம் சிக்கிக் கொண்டிருக்கிறான். கந்தனோ பண்ணையாருக்கு வைரியாக முளைத்திருக்கிறான். மாரப்பனுக்கும் கந்தனுக்கும் தொடர்பு என்பதைப் பண்ணையாரினால் எங்ஙனம் தாங்கிக்கொள்ள முடியும்?

சொந்த பந்தங்களில் மனதைச் சிராய்க்கும் நிலை கிழவருக்கு இல்லை. அதனாலோ என்னவோ, அவர் சில சம்பிரதாயங் களைக்கூடப் புறக்கணித்துப் பேசுவதுண்டு. அவரின் கால பரிணாமத்திற்கு அது முரண்பட்டதாகத் தோன்றினாலும்கூட அவரின் வாழ்க்கை நிலை அவரை அங்ஙனம் சிந்திக்கத் தூண்டியதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

எதையாவது சொல்லி அவளைச் சமாதானப்படுத்த வேண்டு மென்று கிழவர் விரும்பினார். ஏதாவதொன்று அவளுக்கு சாந்தியளிக்கட்டும்.

கிழவர் சொன்னார்:

“போவப்போவ எல்லாம் சரியாப்போயிடும் அல்லவா! கல்லுத் தடத்தெ காணாதவனும் இல்லெ. முள்ளுத் தடத்திலே மொனையாதவனும் இல்லெ. குஞ்சுக்குளுவா ஏற்படட்டும் எல்லாம் சரியாய்ப் போயிடும். மனசெ அதுவரையிலும் தெடமா வச்சிரம்மா.”

அப்பொழுது மாரப்பன் வந்து சேர்ந்தான். கிழவர் இருக்கிற இடத்திலே கலகலப்பாக இருக்கும். ஆனால் அங்கு ஒரு இறுக்கமான சோகப்பரப்பு கப்பியிருப்பதையே கண்டான். அதனுடைய அர்த்தத்தைப் புரிந்து கொள்ள அவனுக்கு வெகு நேரம் செல்லவில்லை. அவள் மகனை நினைந்து மருகுகிறாள். வாழ்க்கை பயனற்றுவிட்டதே என்று புலம்புகிறாள்.

மாரப்பன் கிழவரை நோக்கிப் புன்னகை மலரக் கேட்டான்.

“வாங்க மாமா! எப்ப வந்தீங்க?”

“நாவந்து வெத்தல பாக்குக் கொறிக்கற நேரமிருக்கும்”

கிழவர் மேற்கொண்டு ஏதாவத பேசுவார் என்று எதிர்பார்த் தான். அவர் கேட்ட கேள்விக்கு மட்டும் பதிலோடு நின்று விட்டார். அப்படி அவர் பேசி அவன் கேட்டதில்லை.

அவன் கேட்டான்:

"ஏங்க மாமா! உங்க மவ ஒப்பாரி வெச்சிருப்பாளே கேட்டீங்களா?"

மாரப்பன் இருக்கிற இடமும் அவன் மனநிலையும் கிழவருக்குப் புரியாததல்ல. ஆகவே, அவர் எதையும் விவரிக்க விரும்பவில்லை. காலம் கனிய வேண்டும். அதுவரையிலும் பேசுவதில் பயனில்லை.

அவர் சொன்னார்:

"தாய்மார்களுக்குள்ள சுபாவம் அது. நமக்கது பிடிக்கலின்னாலும் அதுக மனசெ புண்படுத்தப்படாது."

மாரப்பன் பதில் பேசவில்லை. அவருக்கு முன்னால் அவனால் பேச மனம் ஒப்பவில்லை.

கிழவரும் "சரி வாறேன். அப்பறம் பேசிக்கொள்வோம்" என்று புறப்பட்டார். அவர்கள் இருவரும் நடந்து கொண்ட முறை மேற்கொண்டு இதை இப்பொழுது பேச வேண்டாம் என்று ஒதுக்குவதுபோல் பட்டது.

வள்ளியை நிச்சயம் செய்துவிட்டு வந்தது காத்தானுக்குப் பெருமகிழ்வளித்தது. அதற்காக வேண்டி அவன் எத்தனையோ தெய்வங்களை வேண்டிக் கொண்டான். அவளுடன் அவன் பேசி எண்ணங்களைப் பரிமாறிக்கொண்டு விட்டாலும் அன்று பார்த்த அந்த ஒரு வினாடியிலேயே அவன் மனதில் அவள் பதிந்து விட்டிருந்தாள்.

பரிசப்பணம் மட்டும்தான் அதிகமாக வாங்கிவிட்டார்கள். அது அவனுக்கு ஒரு பெரிய சுமைதான். பண்ணையடிமை ஒப்பந்தத்திற்கு வாங்கிய நாற்பது ரூபாய் போதாது. மேற்கொண்டு ரூபாய் பத்து பண்ணையாரிடம் கடனாகப் பெற்றிருக்கிறான். அவனது கூலியில் அது பிடித்துக் கொள்ளப்படும். அந்தச் சேரியில் மட்டுமல்ல அந்தப் பக்கத்திற்கே அவன்தான் நடைமுறையை மீறிய பரிசப்பணம் கொடுத்திருக்கிறான். இருந்தாலும், அது அவன் மனைவிக்குப் பெருமையளிக்கக்கூடிய ஒன்றாகும். அவள் அந்தஸ்து மற்ற பெண்களுக்குண்டானது போல அல்ல. அவளுக்கு அதிகப் பரிசப்பணம் கொடுக்கப்பட்டுள்ளது. அவள் விலை மதிப்புடையவள்.

கல்யாணத்துக்கான எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. பரிசத்துக்கான நெல்லை பதினொரு கட்டுக்கழுத்திப் பெண்கள் (சுமங்கலி) குத்தி அரிசியாக்கினர். அது அவர்களின் சம்பிரதாயம்!

தேங்காய், பழம், புட்டு, மஞ்சள், சீப்பு, கண்ணாடி முதலிய வைகள் பரிசத்துக்காக வாங்கப்பட்டன. அவற்றைக் குளக்கரை யில் வைத்துப் பெண்கள் நீராடிக் கும்மியடித்துப் பாட்டுப் பாடினர். திருமண வைபவத்தின் சிருங்காரம் அது.

மாடன், குஞ்சாண்டி, முனியன், கருப்பன், முத்தான் முதலான ஆண்களும், வேம்பி, வடிவழகி, கருப்பி முதலான பெண்களும் குழந்தைகளும் பெண் வீட்டுக்கான பரிசப்பொருளை எடுத்துக் கொண்டு கொட்டு முழக்கத்துடன் புறப்பட்டுச் சென்றனர்.

அவர்கள் கவலை மறந்து, உடல் உபாதையை மறந்து சற்று மன நிம்மதியைக் காணக்கூடியது இதுபோன்ற வாய்ப்புகள் நேரும் காலத்தில்தான். அதில் கிட்டும் ஓய்வும் மகிழ்ச்சியும்தான் அவர்கள் இதயப் பூமியில் அடைகின்ற மகத்தான பேரின்பங்கள், உன்னத லட்சியங்கள்.

அன்றுதான் வெளுத்த ஆடைகள் அவர்கள் உடலை அலங் கரிக்கும். வெளுத்தது என்றால் தினமும் உடலில் ஒட்டிக்கொண் டிருக்கம் கந்தலைப் போலல்லாமல் விசேஷ காலங்களில் மட்டும் மண்பானைக்குள்ளிருந்து வெளிவந்து உடலை ஸ்பரிசிப்பதாகும். மாட்டுக் கொழுப்பில் வடிக்கப்பட்ட நெய், தலைமுடிகளின் அடங்காப்பிடாரித்தனத்தைச் சற்று அடக்கிக் காட்ட முயற்சிக்கும். சேறு படர்ந்த உடல் தண்ணீரால் கழுவப்பட்டிருக்கும்.

அவர்கள் வழிநெடுக மனம் விட்டுப் பேசிச் சிரித்துக் கொண்டு சென்றனர். கபடு, சூது இல்லாமல் ஆண்களும் பெண்களும் தொட்டுப் பிடித்துக் குதித்து விளையாடினர். சிறுபிள்ளைகளைப்போல் அவர்கள் நடவடிக்கை இருந்தது. அடக்கி ஒடுக்கப்பட்ட அவர்களின் ஆவல் உணர்ச்சிகள் தக்க தருணம் பார்த்துக் கொண்டிருந்தது போல் தோன்றியது.

மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டையடைந்தனர். இரு தரப்புத் தகப்பன்மார்களும் முதலில் தண்ணீர்ச்செம்புகள் மாற்றிக் கொண்டனர். தண்ணீர் குடித்தனர். காத்தானுக்குத் தகப்பன் ஸ்தானத்தில் மாடன் செயல்பட்டான்.

பரிசப் பொருள்களை சபையின் முன்னால் வைத்தனர். பெண் வீட்டாரைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு பொருளாக நோட்ட மிட்டனர். நாட்டு நடைமுறைப்படி எல்லாச் சாமான்களும் இருக்கின்றனவா என்று எண்ணிப் பார்த்தனர்.

திடீரென்று ஒருவன் வாய்விட்டுக் கர்வத்தோடு சிரித்தபடி "மாடு தவுந்துப் போனா மாட்டுக்கார படுத்துப் போவாங்கறது

தெரியலெ போலிருக்குது" என்று கூறிவிட்டு "எங்களெ நீங்க ஏமாத்திடலான்னு நெனச்சா முடியுமா?" என்றான்.

இதைக்கேட்ட மாப்பிள்ளை வீட்டாருக்கு ஒன்றும் புரியவில்லை. ஏமாற்றுவதா? யாரை ஏமாற்றுவது? எதற்காக ஏமாற்றுவது? மாப்பிள்ளை வீட்டார் சார்பில் முனியன் கேட்டான்.

"என்ன சொல்றே நீ. புரியறாப்பலெ சொல்லு"

அவன் மீண்டும் நையாண்டி தொனிக்கக் கூறினான்.

"யாருக்குக் காதுகுத்தப் பாக்கறீங்க. குருவி கோழியை அடிச்சு துன்னானாம் ஒருத்தெ. இன்னொருத்தெ அப்படியில்லெ அதுங் குஞ்சுதா சேவலெ அடிச்சுதுன்னானாம் பார்த்துக்க. அப்படியிருக்குது நீங்க கேக்கறது" என்றான் விசயத்தைக் கூறாமல்.

அவன் பூடகமாகக் கூறுவது பெண் வீட்டாருக்குக் கூடப் புரியவில்லை. ஆனாலும் அவர்கள் சார்பில் அவன் விழிப்போடு இருப்பது அவர்களுக்குச் சந்தோசமேயளித்தது.

ஆனால், மாப்பிள்ளை வீட்டாருக்கு இது அவமான மாகப்பட்டது. ஏதோ அவர்கள் சுயமரியாதையைச் சீண்டி விடுவது போலத் தோன்றியது. கவனக் குறைவாக ஏதாவது நேர்ந்திருந்தாலும் சபைநடுவில் இப்படிச் சுட்டுக்காட்டுவது வேதனையளித்தது. இருந்தாலும் இனி விட்டுக் கொடுத்துப் பேச முடியுமா?

மீண்டும் முனியன் எரிச்சலோடு கேட்டான்:

"வெசயத்துக்கு வாய்யா! உங்க பொருளெ நாங்க என்ன திருடியா கொண்டாந்திருக்கிறோம்? என்னென்னமோ பேசறியே!"

மேற்கொண்டு விட்டால் சண்டையில் சென்று முடிந்தாலும் முடிந்துவிடலாம். இதையுணர்ந்த பெண் வீட்டுக்காரன் ஒருவன் நேரடியாக விசயத்தைக் கூறு, என்பது போல் சைகை புரிந்தான்.

அவன் சொன்னான்:

"எத்தன தேங்கா கொண்டு வந்திருக்கீங்க பார்த்தீங்களா?"

மாப்பிள்ளை வீட்டார் எண்ணிப் பார்த்தனர். இருபத்தொரு தேங்காய்க்கு பத்தொன்பது தேங்காய்தான் இருக்கிறது. சம்பிரதாயம் வழுவாமல் அவர்கள் இருபத்தொரு தேங்காய் எடுத்துக் கொண்டுதான் வந்தார்கள். வருகிற வழியில் ஐயனார் சாமிக்கும், காத்தவராயன் சாமிக்கும் இரண்டு தேங்காய்களை

எடுத்து உடைத்து விட்டார்கள். அதற்கான அதிகப்படியான தேங்காய் எடுத்து வந்திருப்பதாக நினைத்ததினால் எழுந்த தவறுதான் இது.

பரிசத்துக்காக எடுத்து வந்த தேங்காயில் இரண்டை சுவாமிக்கு எடுத்து உடைத்து விட்டதாகக் கூறுவதா? இல்லை அதிகப்படியான தேங்காய் இருப்பதாக நினைத்து இந்தத் தவறு நிகழ்ந்து விட்டதாகக் கூறுவதா?

எது கூறினாலும் உண்மையாகப்படாது. சம்பிரதாயப்படி செலுத்த வேண்டிய பரிசப் பொருளைக் கூட செலுத்தச் சக்தி யற்றவர்கள் என்றுதான் நினைப்பார்கள். சொல்லி அவமானத் தைத் தேடிக்கொள்வதைவிட, ஏதாவது ஒரு யுக்தி காண வேண்டும். அதுவே அவர்களது கௌரவத்தை காக்கக் கூடியதாக இருக்கலாம்!

மாடன் ஏதோ ஒரு முடிவை ஒரு முறைக்குப் பல முறை சிந்தித்துக் கூறுபவன் போலக் கூறினான்.

"எங்க பக்கத்திலே பத்தொம்பது தேங்காதா பரிசச் சீருக்கான வளமொறெ"

மாடன் சொல்லுவது முற்றிலும் பொய். இதை அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆதிகாலந்தொட்டு எல்லாச் சமூகத்துக்கும் போல் பறையர் சமூகத்துக்கும் சில சம்பிரதாயப் பழக்கவழக்கங்கள் உண்டு. அவர்கள் எங்கெல்லாம் வாழ்ந்தா லும் அது ஒரு பொது நெறியாகவே கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. அப்படியிருக்க இது எப்படி உண்மையாக இருக்கும்?

பெண்வீட்டைச் சேர்ந்த வயது சென்ற முதியவர் ஒருவர் கேட்டார்.

"அதெப்படி உங்களுக்கு மட்டும் புது வளமொறை?"

அதற்கு அவர்கள் சரியான பதில் கூறியாக வேண்டும். இல்லாவிட்டால் வளைதோண்டி எலி பிடிக்கப் போய் பாம்பு பிடித்த கதையாகத்தான் முடியும்.

குஞ்சாண்டி அதற்கு ஒரு வியாக்யானம் கூறினான். அது அவன் இட்டுக்கட்டியதுதான்.

"ஒரு மொறெ பரிசப் பொருளெ பெண்ணூட்டுக்கு அனுப்பற துக்காவ கொளத்தங்கரையிலே நீராடிக் கும்மியடிச்சுச் சாமி கோயில்லெ வச்சுச் சாமி கும்பிட்டிட்டு இருக்கறப்போ தட்டுலே இருந்து ரண்டு தேங்காய் தானாகவே கீழே விழுந்து

உருண்டு போயி ஒடஞ்சு போச்சு. இருபத்தொரு தேங்காய்ங் கறது தெய்வத்துக்கே விருப்பமில்லே போலிருக்கிறது. அதனா லதா ரண்டு ஒடஞ்சு போச்சுன்னு நெனச்சு பத்தொம்பது தேங்காக் கணக்கு வச்சுக்கிட்டோம்" என்றான்.

இந்தச் சமாதானம் மாடனுக்கும், மாப்பிள்ளை வீட்டாருக் கும் நிம்மதியளித்தது. நடைமுறைச் சம்பிரதாயத்தை மீறிய செயல் அல்லவா அவர்கள் நடவடிக்கை. அதற்குச் சரியான தகுமானம் கூறாவிட்டால் அவர்கள் கௌரவம் என்னாவது? எப்படியோ சமாளித்துக் கொண்டு விட்டார்கள்.

இந்தக் கூற்றைப் பொய் என்று கூறுவதற்கு பெண் வீட்டார் யாருக்கும் துணிவு பிறக்கவில்லை. கடவுள் சந்நிதானத்தில் அல்லவா இந்த முடிவு மேற்கொண்டதாகக் கூறுகிறார்கள் அப்படிச் சந்தேகப்படுவது கடவுளையே சந்தேகப்படுவதற்கு ஒப்பாகும்.

இருந்தாலும் அந்த முதியவர் கூறினார்:

"எது எப்படியிருந்தாலும் அந்த ரண்டு தேங்காயும் கொடுத்துடணும். அதுதான் எங்களுக்கு மதுப்பு."

மாடனுக்கு இப்பொழுது தைரியம் வந்துவிட்டது. குஞ்சாண்டி கூறிய சமாதானத்திற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பது போல் தெரியவில்லை. இருந்தாலும் சம்பிரதாய நடைமுறையைப் பின்பற்றுவதுதான் கௌரவம் என்று கூறுகி றார்கள். ஆனாலும், அவர்கள் நடைமுறைச் சம்பிரதாயத்தை மீறிய விதத்தில்தானே பரிசப் பணம் பெற்றார்கள்.

மாடன் சொன்னான்:

"பத்தர ரூபா தானே பரிசப்பணம்? அதுதானே சாதி சம்பிரதாய நடமொறை? ஆனா நீங்க அப்படித்தான் வாங்கிக் கிறீங்களா? நீங்க இந்த ரண்டு தேங்கா வெசயத்திலேயே கௌரவம் பேசினீங்கன்னா நாங்க பரிசப்பணம் சேத்திக் குடுக்கறதிலும் பார்க்க வேண்டி வரும்."

பெண்தரப்பார் இப்படியொரு வாதத்தை எதிர்பார்க்கவே யில்லை. நடைமுறைச் சம்பிரதாயத்தை முதன்முதலாக மீறிய வர்கள் இவர்களாகத்தானே இருக்கிறார்கள். அப்படி யிருக்க இவர்கள் எங்ஙனம் அதை நிர்ப்பந்திக்க முடியும்? புதிதாக முளைத்திருக்கிற பிரச்சனை இது. இதை வளர விட்டால் வாக்குவாதங்கள் எப்படியெல்லாமோ திசை திரும்பலாம். அதனால் கல்யாணமே நடைபெற முடியாத அளவிற்குக்

கைகலப்பிற்குச் சென்றாலும் செல்லலாம். இதற்குச் சரியான ஒரு தீர்வு காணவேண்டிய பொறுப்பு பெண் வீட்டார் கையில் தான் இருக்கிறது.

மத்திய வயதுள்ள ஒருவன் பெண் வீட்டுத் தரப்பில் கூறினான்.

"எல்லாத்தையும் வுட்டுத்தள்ளுங்க. 'தண்ணி'ச் செலவு மட்டும் பொண்ணூட்டுக்காரங்களெ ஏத்துக்கறதெ மாப்பிளெ வூட்டுக்காரங்களும் ஏத்துப் பகுந்துக்கட்டும்."

இதைக்கேட்ட மாடன் கோபம் பொங்க "கலப்பெ காலிலே ஏறுனதுமில்லாமெ கலச்சேத்துக்குள்ளே கொழுவெ விட்டுட்டுத் தேடவுஞ் சொல்லுச்சா"ங்கற மாதிரி நீங்க பரிசப் பணம் சேத்தி வாங்குனதுமில்லாமே தேங்கா பேருலே தண்ணிக்கும் பங்கு போடச் சொல்றீங்க. இதுக்கு மேலே எங்களாலே எதுவுமே முடியாது" என்று கூறினான்.

இனி தங்கள் பாச்சா பலிக்காது என்றுணர்ந்த பெண் வீட்டுக்காரர்கள் விசயத்தை வளர்க்காமல் பரிசப் பொருள் களை ஏற்றுக்கொண்டனர்.

வந்தவர்களுக்கு விருந்து பரிமாறப்பட்டது. கூடவே 'தண்ணி'யும் வழங்கினார்கள்.

எல்லோரும் பெண்ணை அழைத்துக்கொண்டு மாப்பிள்ளை வீட்டுக்குப் புறப்பட்டனர்.

'தண்ணி'யின் சுருதி பலரின் நாக்குகள் வாய்க்குள் கிடக்கா மல் துள்ளிக் குதிக்கத் தூண்டியது. எந்தக் கட்டுக்குள்ளும் அவர்கள் இப்பொழுது இல்லை. எந்தப் பண்ணையாரும் அவர்களை ஒன்றும் செய்வதற்கில்லை.

மாப்பிள்ளை வீட்டாரைப் பார்த்துப் பெண்வீட்டுக்காரன் ஒருவன் கேட்டான்.

"நாங்கெல்லாம் ஆருன்னு தெரியுமா?"

இதைக் கேட்டதும் முனியனும் கருப்பனும் 'ஓகோகோ' என்று இகழ்ச்சி தொனிக்கச் சிரித்தனர். அடக்கப்பட்ட ஹிருதயத்தின் எழுச்சிமிக்க வெளிப்பாடு போலும் இது.

முனியன் சொன்னான்:

"தெரியுமே! பழைய காலப் பண்ணையோட அடிமைக"

இதைக்கேட்ட பெண்வீட்டாருக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. பழைய காலப் பண்ணையென்றால்

என்ன அர்த்தம்? நாகரிகம் தெரியாதவர்களா? எல்லோருக்கும் இருக்கும் தகுதிக்கும் தாழ்ந்தவர்களா? அதை அவர்கள் தெரிந்து கொள்ள விரும்பினார்கள்.

"முகத்தில் அம்மைத் தழும்பும், நெற்றியில் காயத் தழும்பும் கொண்ட ஓர் இளைஞன் கேட்டான்."

"பழைய கால அடிமைன்னா என்ன அர்த்தம்?"

கருப்பன் அவிழ்ந்து போன வேட்டியை இறுக்கிக் கட்ட முயன்று முடியாமல்போகவே, அரைஞாண் கயிற்றை எடுத்து வேட்டிக்குமேல் இளக்கிவிட்டுக் கொண்டும், தோளில் கிடந்த வேட்டியை எடுத்துத் தலையில் கட்டிக்கொண்டும் சொன்னான்.

"என்ன அர்த்தமா? எங்க எசமா காரிலே போறாரு. உங்க எசமானோ இன்னும் குருதை வண்டி போட்டுக்கிட்டு அடிமகெள நாத்தள்ள முன்னாடியும் பின்னாடியும் ஓட வச்சுக்கிட்டு இருக்கறாரு"

அவன் சொல்லுவது உண்மைதான். கார் வைத்துக் கொள்ளக் கூடத் தகுதியிருந்தும் நொச்சுப்பட்டிப் பண்ணையார் குதிரை வண்டியில்தான் செல்கிறார். காரணம், அவருடைய ஜாதகத்தைப் பார்த்த ஜோசியன் இன்னும் ஐந்து வருடத்திற்கு சனி பலன் இருப்பதாகவும், ஆகவே கார் போன்ற வாகனாதிகள் வைத்துக்கொள்ளக் கூடாது என்றும் கூறினானாம். அதுவுமில்லாமல் அவருடைய குலதெய்வம் வேறு அவருடைய கனவில் பாம்பு போலத் தோன்றியதாம். பாம்பாகவோ, எருமையாகவோ, சொப்பனங்களில் வருவது ஆபத்தைக் குறிக்கும் என்பார்கள்.

ஒரு ரோசமுள்ள அடிமை இதைக் கேட்டுக்கொண்டு சும்மா இருக்க முடியுமா? இந்த உடலே அவர்களுடைய இஸ்ட பரிபாலனம் அல்லவா?

பெண் வீட்டாரைச் சேர்ந்த ஒரு கண்ணில் பார்வையிழந்த செம்பட்டை மயிர் கொண்ட ஒருவன் கேட்டான்:

"ஒரு அடிமையெ வண்டியின் முன்னும் பின்னும் ஓடாமெ நிறுத்திவிட்டது பெரிய விசயமோ? சாணிப்பாலும், சாட்டையடியும் நிறுத்த முடிஞ்சுதா?"

அவன் சரியான கேள்வி கேட்டுவிட்டான். அதற்குத் தக்க விடை அளிக்க வேண்டாமா? மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த அடிமை முனியன் சொன்னான்:

"அதவுட்டா ஒரு அடிமைன்னு சொல்லிக்கிறதுக்கு என்ன உரிமையிருக்கிறது? அதெ அவுங்க வுட்டாலும் ஒரு உண்மையான அடிமெ வுட்டுக்குடுக்க முடியாது."

வார்த்தைகள் தடித்து பேச்சுகள், எங்கெல்லாமோ சென்றன. தங்கள் பண்ணையாரின் அந்தஸ்தைக் காப்பது போல நினைத்து என்னென்னவோ பேசிக்கொள்ள ஆரம்பித்தனர். அடிமைக ளின் மனைவிக்கு அந்த எசமான் உரிமை கொண்டவராம் என்றும் பெருமை அடித்துக் கொள்ள முயன்றனர்.

வாழ்க்கை நடைமுறையில் எப்படியிருந்தாலும் ஒரு கூட்டத்தின் மத்தியில் ஓர் அடிமை இப்படிப் பேசிக்கொள் வதற்கு என்ன அருகதையிருக்கிறது? இதை இப்படியே வளர விட்டால் எப்படியெல்லாம் நீண்டு கிளைத்து விஷ வித்தைத் தூவுமோ?

மாடன் இடைமறித்துப் பேச்சை வேறு திசையில் திருப்பி னான். பலவும் பேசிக்கொண்டு மாப்பிள்ளை வீட்டிற்கு வந்து சேர்ந்தனர்.

பெண், மாப்பிள்ளை வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் கல்யாண வாசல் கலகலப்பும், பரபரப்பும் அடைந்தது. விடிவதற்குள் தாலி கட்டி முடித்துவிட வேண்டும்.

வாசலின் முன்னால் அரசாணைக்கால், அரசாணைப் பானை முதலியன வைக்கப்பட்டிருந்தன. அதற்குரிய சடங்குகளும் முறையாகச் செய்யப்பட்டன.

மாப்பிள்ளையும் பெண்ணும் மணவறைக்குக் கொண்டு வரப்பட்டனர். உலக்கையும் தடிக்கம்பும் கீழே பாவப்பட்டுச் சேலை விரித்து நெல்லு தூவப்பட்ட ஆசனத்தில் அமர்த்தி வைக்கப்பட்டனர்.

மாப்பிள்ளை வீட்டிலிருந்து ஒருவனைப் பண்ணையார் வீட்டிற்கு அனுப்பினர். பண்ணையார்தான் தாலி கட்டும் நேரத்தை நிர்ணயிக்க வேண்டும். சோமன் கூறை, தாலி முதலியனவும் அவரிடமிருந்துதான் பெற்றுவர வேண்டும்.

வீதிப்புறத்தில் நின்றுவிட முடியாது. கல்யாணக்காரர்கள் கூறைசேலைக்கும், தாலிக்கும் வருவார்களே என்று காத்திருந்து கொடுக்க வேண்டும் என்கிற அவசியம் என்ன இருக்கிறது, அவர்களுக்கு.

போகின்றவர்கள் பின்வாசற் கதவுப் பக்கம் சென்று காத்துக் கொண்டிருக்க வேண்டும். எந்த நேரம் பார்க்கிறார்களோ

அப்பொழுதுதான் விசயத்தைத் தெரியப்படுத்த வேண்டும். அவர்களைப் பொறுத்தவரையில் தாலி கட்டுவதற்கான நேரம் காலம் என்பது கிடையாது. பண்ணையாரின் கருணை எந்த நேரம் படுகிறதோ அந்த நேரம்தான் நல்ல நேரம்.

எப்படியும் இரவுக்குள்ளேயே எல்லாக் காரியங்களும் நடந்து முடிந்துவிடும். பகலுக்கு அனுமதிக்க மாட்டார்கள் பண்ணை யார்கள். சாஸ்திர சம்பிரதாயத்தை ஒட்டியல்ல; பகலில் வேலை கெடுமே என்பதற்காக.

சென்றவன் தொண்டையை இருமிப் பார்த்தான். கனைத்துப் பார்த்தான். ஒன்றுமே பலனில்லை. நீண்ட நேரம் காத்துக்கிடந்த பின்னர் ஏஜெண்ட் வெளியே வந்தான். தலையை நீட்டி ஒன்றும் தெரியாதவன்போல் என்ன என்று கேட்பது போல சிரசை அசைத்து சைகை புரிந்தான்.

வந்தவன் கூனிக்குறுகி "காத்தான் எந்த நேரம் தாலி கட்டணும்னு..." என்று அரைகுறையாக மென்று விழுங்கினான்.

கூறையும், தாலியும் வேண்டும் என்று கூடக் கேட்கத் துணிவு இல்லை. எப்பொழுது தாலி கட்ட வேண்டும் என்று கேட்பதுதான் அதைப் பெறுவதற்கான உபாயம் போலும்!

பண்ணையின் ஏஜண்ட் உள்ளே சென்று ஒரு பொட்ட லத்தைக் கொண்டுவந்து வாசற்படியில் நின்றவாறு அவனை நோக்கி வீசினான். நாய்க்குச் சோற்றுருண்டையைத் தூக்கி வீசுவதுபோல, துண்டை ஏந்திப் பிடித்து வீசிய பொட்ட லத்தைப் பெற முயற்சித்தான். அது அவன் முயற்சிக்கும் மீறிக் கீழே சென்று விழுந்து பொட்டலம் உடைந்து உள்ளிருந்த தாலிப்பாசி வெளியே நழுவி விழுந்தது.

தனிப்பட்ட முறையிலோ, சபையிலோ இது மாதிரிச் சம்பவங்கள் நிகழ்ந்தால் அபசகுனம் என்பார்கள். சில நேரங் களில் கூடிய காரியங்களைக்கூட கைவிட்டுவிடுவார்கள். ஆனால், இது மாதிரி இடங்களிலெல்லாமே அவற்றைச் சிந்திக்கவும் முடியாது. அவர்களுக்கு அந்த உரிமையும் கிடையாது.

கூறைப்புடவையையும், தாலிப்பாசியையும் எடுத்துத் துண்டில் முடிந்து கொண்டு விடைபெற்றபடி கல்யாண வாசலை நோக்கி நடந்தான். கொட்டுமேளத்துடன் அவற்றை அவர்கள் வரவேற்று ஏற்றுக் கொண்டனர்.

குடிப்பிள்ளை (வண்ணார்) சடங்கு செய்ய மணமகன் மணமகள் கழுத்தில் தாலியைக் கட்டி முடித்தான்.

சச்சரவுகளும், வீம்பு மனஸ்தாபங்களும் இன்றித் திருமணம் நடந்து முடிந்தது. இது ஒரு ஆச்சரியப்பட்டத்தக்க விசயந்தான். இப்படிப்பட்ட பெரும்பாலான திருமணங்கள் சண்டையிலும் வாய்மாச்சரியங்களிலும் சிக்கித் தவித்த பின்னர் தான் சமாதானம் அடையும். அப்படி நடந்து முடியும்பொழுது தான் திருமண வைபவத்தின் திருப்தியைப் பெற்றதுபோல அவர்களுக்குப் படும்.

உறவினர்கள் எல்லாம் புறப்பட்டுச் சென்று விட்டனர்.

மணமகனும் மணமகளும் அன்று மாலையில் பண்ணை யாரைப் பார்த்து ஆசி பெறுவதற்காகப் பண்ணையாரின் பிரத்தியேகப் பங்களாவிற்குச் சென்றனர்.

பண்ணையாருக்குத் தெரியும். தன் தொடர்பறாத பண்பு களைக் காப்பாற்ற வேண்டுமல்லவா? அந்த நினைவோடேயே காத்திருந்தார். இரு அடிமைகளும் அவரின் முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினர். பண்ணையார் அதை அங்கீகரிப்பவர் போல மூன்று வள்ளம் நெல்லை அடியாட்கள் மூலம் அவர்களின் முன்னால் கொண்டு சென்று கொட்டச் சொன்னார். அவர்களும் எழுந்து நின்றனர்.

பண்ணையார் வள்ளியை உற்றுநோக்கினார். அவள் உடல் வாகு, கவர்ச்சி அவர் கவனத்தை ஈர்த்தது. அவர் விருப்பப்படுகிற அடிமைப் பெண்கள் அவருக்குச் சொந்தம். ஓர் ஆணின் அடிமைப் பத்திரத்துடனேயே அவனுக்கான பெண்ணின் கற்பும் சொல்லாமல் விலைபேசப்பட்டு விடுகிறது. பண்ணையார் விரும்பினால் அதை எந்தக் கணவனும் ஆட்சேபித்துவிட முடியாது. எந்த மனைவியும் மறுதலித்துவிட முடியாது.

அவர் அவர்களுக்கு உத்தரவு கொடுத்தனுப்பும் முறையில் கூறினார்:

“டேய்! அவளெ சாணியெடுக்க அனுப்பி வெய்!”

அந்த வார்த்தையின் உட்பொருள் ஒவ்வொரு அடிமைக்கும் தெரிந்ததே. சந்ததியறாமல் பண்ணையார்கள் தங்கள் அடிமைப் புதுமணத் தம்பதிகளை நோக்கி முதல் நாளில் கூறும் வார்த்தை யது. அந்தக் கட்டளையை மீறுவதற்கு எந்த ஒரு அடிமைக்கும் துணிவு பிறப்பது அசாத்தியம். அப்படித் துணிவு படைத்தவன் ஆற்று வெள்ளத்தில் செத்த நாய்கள் மிதந்து செல்வது போல்தான் அடித்து வீசப்பட்டிருக்கிறான்.

கட்டின மனைவியிடம் உரிமை கொண்டாட முடியாத அவலம்! வாய் திறந்து அரற்ற முடியாத துக்கம்; வேதனை

*உறுத்தல்! அந்த நிராதரவான ஆத்மாக்கள் எதற்காகத்தான் பிறப்பெடுத்தனவோ?*

அவர்கள் ஒன்றும் பேசவில்லை. தரையில் விழுந்து வணங்கி எழுந்தனர். அவர்களுக்கு முன்னால் கொட்டப்பட்ட நெல்லை அள்ளித் துண்டில் கட்டியபடி வீடு நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர்.

காத்தானுக்கு அமைதியில்லை. சிந்தனைப் புயல்! மனப் போராட்டம். ரத்த நாளங்கள் வெடித்து விடுவது போன்ற கொதிப்பு. அவனால் இதற்குச் சம்மதிக்க முடியாது... அடிமைப் படுத்தப்பட்டிருப்பது அவனுடைய உழைப்புத்தான். அவனுடைய கௌரவம்... ஓர் அடிமையைக் கொல்லவும், விற்பதுமான சுதந்திரத்தைப் பண்ணையார்கள் ஏற்றெடுத்து விட்ட பின்னர், அதெல்லாம் எங்ஙனம் சாத்தியம்?

காத்தான் வீட்டுக்கு வந்தவுடன் சோகமும் அமைதியின்மை யும் துடிக்கத் தாயிடம் கூறினான்.

"அம்மா! நா சாணியெடுக்க வள்ளியை அனுப்ப மாட்டே"

பொன்னாளுக்கு இந்த வார்த்தை ஈரல் குலையில் சுடு எண்ணெயை எடுத்துக் கொட்டியது போலிருந்தது. ஓர் அடிமை பேசக்கூடிய பேச்சா இது? அவனுக்கு அதிகப்படியான உரிமை யார் வழங்கியது? அதன் விளைவுகள் எப்படியெல்லாம் போய் முடியுமோ? சிறு கன்று பயமறியாது.

அவளுக்கும் அந்த அனுபவங்கள் நேர்ந்ததுண்டு. அவள் தாய்க்கும் அந்த அனுபவங்கள் நேர்ந்ததுண்டு. அப்படியே அது ஒரு தொடர்கதை. ஒவ்வொரு தாய்மாரும் தன் மகளை மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படும்பொழுது இதைப்பற்றியெல்லாம் கூறித்தான் அனுப்பி வைப்பார்கள். வள்ளிக்கும் அந்தப் போதனை கிடைத்திருக்கும். அதில் சந்தேகம் இருக்க முடியாது.

இந்த உடல் அவர்கள் அளித்த சோற்றைத் தின்றுதானே வளர்ந்திருக்கிறது? பிறந்த அன்றே அந்த அடிமை முதலில் சுவைப்பது பண்ணை வீட்டிலிருந்து அப்பொழுது வாங்கிவரும் எண்ணெயைத்தானே! அதை உதட்டில் தடவிய பின்னர் தானே தாய்ப்பாலையே குழந்தை சுவைக்க அனுமதிக்கப்படு கிறது! அப்படியெல்லாம் பந்தப்பட்டிருக்கும் பொழுது ஓர் அடிமை எங்ஙனம் தன்னைச் சுலபமாக அறுத்துக் கொள்ள முடியும்? அப்படி அவன் முனையும் பொழுது, சில வேளை

அவன் அடித்துக் கொல்லப்படலாம். அந்தக் கொடுமைகள் அவ்வளவு சுலபமாக வர்ணிக்கப்படக்கூடியவையல்ல.

அவள் நெஞ்சு பதறி நாக்குழறக் கூறினாள்:

"அப்படிச் சொல்லாதேடா கண்ணு! நாமெல்லாம் சோத்துக் கான அடிமைக. நம்மளெ என்னவும் செய்ய அவுங்களுக்குச் சொந்தமிருக்கு. நம்மளோட ஒவ்வொரு அசைவும் அவுங்க ளோட கண்பார்வையிலே நடந்தாவணும். நாமெல்லாம் அவுங்களோட் சபிக்கப்பட்ட கொழந்தைக."

அவன் எப்படி அதை அவ்வளவு சுலபமாக ஏற்றுக்கொள்ள முடியும்? அவள் தனக்கு மனைவியாக வாய்க்க வேண்டுமென்று எப்படியெல்லாம் தெய்வங்களை வேண்டிக் கொண்டான்! அவளை அடைந்தது, தான் பெற்ற பெரும்பேறு என்றல்லவா எண்ணிப் பெருமிதம் அடைந்திருந்தான். அதற்காகத்தானே அவன் அடிமை வேலைக்காரனாகத் தன்னை உட்படுத்திக் கொண்டான். தனக்கே உரித்தான பொருளை எப்படி அவன் பிறருக்கு ஒப்படைக்க முடியும்? அவள் அவனுக்குச் சொந்த மானவள். அவள் அழகை இளமையைப் பிறர் அனுபவிக்க விழைவதென்பது... அவனால் நிம்மதியடைய முடியவில்லை. அவன் மனம் புண்பட்டு விட்டது.

அவன் தன் தாயை ஏறிட்டு நோக்காமலேயே தாழக்குனிந்த படி கூறினான். அவன் குரலில் தொனிக்கும் சோகம் தான் என்ன!

"அடிமைகளோட உணர்ச்சிக்கு எந்த மதிப்புமே கெடையாதா? அவன் வெறும் மண் உருண்டைதானா? இந்த அவமானம் என்னெ கொன்னுடும் போல இருக்குதம்மா!"

"வாண்டாண்டா கண்ணு. உங்கப்பெ என்னெ எப்படி சகிச்சுக்கிட்டாரோ அப்படி வள்ளியெ நீ சகிச்சுக்கணும். அது அவ குத்தமல்ல. உங்குத்தமும் அல்ல. முஞ்செம்மத்தோட சாபத்தீடு!"

அந்தச் செயலை அவன் மனது என்னவோ ஏற்றுக்கொள்ள வில்லை. இருந்தாலும், ஒரு சாமான்ய அடிமையால் என்ன செய்துவிட முடியும்? கடந்த காலத்தில் சிலர் செய்து கொண் டது போல தற்கொலை செய்து கொள்ளலாம். அதனால் என்ன பலன் கிடைத்துவிடப் போகிறது.

அவன் சொன்னான்:

"எனக்கு ஒரே கொளப்பமா இருக்குதம்மா. நா என்னதாஞ் செய்யறது?"

“நம்மளோட பொளப்பே இப்படித்தா. பன்னிக்குப் பிய்க்குட்டைதா பாக்யம். பறையனுக்கு எச்சில் பட்டதுதா சொர்க்கம்”

அவனால் ஒன்றும் சிந்திக்க முடியவில்லை. தாயே அவனுக்குப் புத்திமதி கூறுகிறாள். தாயும் அப்படித்தான் திருமணம் முடிந்த முதல்நாள் சாணியெடுக்கப் போயிருக்கிறாள். ஒரு சமூகமே அப்படித்தான் சந்ததியறாது அந்தப் பண்ணையைப் போற்றிப் பாதுகாத்து வருகிறது. ஒரு சமூகப் பண்புக்கு முன்னால் தனி மனிதன் எம்மாத்திரம்?

அவன் தலை குனிந்தான். மௌனமாகக் கண்ணீர்த் துளிகளை மட்டும்தான் அவனால் சிந்திக்க முடிந்தது.

அவள் தன் மருமகளை அலங்கார பூஜிதையாக அனுப்பி வைத்தாள். அந்தக் கோலம் அவள் வாழ்வில் அதுதான் முதலும் முடிவும். ஓர் அடிமைக்கு அப்படியெல்லாம் அலங்கரித்துக் கொள்ள உரிமை கிடையாது.

இன்று அவள் பண்ணையாரின் படுக்கையை அலங்கரிக்க விருக்கிறாள். அதற்கான சுதந்திரம் அது. அந்தச் சுதந்திரமும் அந்த ஒரு நாள் இரவுக்கு மட்டும்தான்.

அவள் அந்த வீட்டை விட்டுப் படியிறங்கி நடக்கிறாள்.

“பதமா நடந்துக்கோம்மா” என்ற மாமியாரின் குரல் மருமகளின் காதில் விழுகிறது.

அவள் பதுமை போல் நடந்து செல்கிறாள். ஆதரவற்ற அந்த ஜீவனின் ஆத்மா என்னவாகப் புலம்புகிறதோ! கற்பனைக் கனவுகளின் மனவோட்டங்கள் என்னவாக வெந்து சாம்பல் ஆகின்றனவோ

அவள் செல்வதற்குக் கண் பூக்கும் வரையில் பார்த்து நின்ற அவன் வாயில் துண்டை வைத்து அழுத்தியபடி வீட்டினுள் சென்று, தரையில் கவிழ்ந்து படுத்தபடி உடல் குலுங்கக் குலுங்க அழுகையை அரவமின்றி மென்று விழுங்கினான்.

அவர்கள் அடிமைகள்! நிந்திக்கப்பட்டவர்கள்!

அவர்கள் உணர்வுகளுங்கூட அப்படித்தானா?

# 13

இரவுப் பொழுது. ஆடி மாதக் குளிர்க் காற்று சில்லென்று வீசுகிறது. குடிலுக்குக் கதவில்லை. தென்னங்கீற்றில் கட்டப்பட்ட படல் சாத்தப்பட்டிருக்கிறது.

சேரி முழுவதும் ஆழ்ந்த உறக்கம். எங்கோ ஒன்றிரண்டு லயம் பிசகாத குறட்டைச் சத்தம். ஆடுகளின் அசைபோடும் ஓசை; பேன் பொறுக்கும் கோழிகளின் இறக்கை கோதும் படபடப்பு. குடிசைக்குள் மனித ஜீவன்கள் அழுக்கு மூட்டைபோல் சுருண்டு கிடக்கின்றன. அவர்களுக்குப் போர்வை கிடையாது. சாக்குப் பைக்குள் உடலைத் திணித்துக் கொண்டு தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்தனர். ஊசிபோல் சொருகும் ஊதல் காற்று அவர்களிடம் தோல்வியே அடைந்தது. அதனால் அவர்கள் தூக்கத்தைக் கலைக்க முடியவில்லை. மூட்டைப் பூச்சிகளும் கொசுக்களும், செய்ய முடியாத காரியத்தையா இந்தக் காற்று செய்துவிடப் போகிறது?

வெட்டியான் கொம்பு ஊதும் சத்தம் கேட்கிறது. மணி மூன்றைக் குறிக்கிறது. இயற்கையில் எந்தத் துன்புறுத்தலுக்கும் அசையாத அவர்கள் - தூக்கம் கலையாத அவர்கள் - கொம்புச் சத்தம் கேட்டவுடன் சாட்டையடி பட்டது போல் துள்ளி எழுகின்றனர்.

பண்ணை வேலைக்குப் புறப்படுவதற்கான முதல் சமிக்ஞை அது. மூன்றாவது ஊதல் சத்தம் கேட்கும்பொழுது களத்து மேட்டில் நிற்க வேண்டும். ஒவ்வொரு ஊதலுக்கும் இடை வெளிக்காலம் இவ்வளவு என்கிற நிர்ணயிப்பு ஒன்றும் கிடையாது. ஊதுபவனின் மனநிலையைப் பொறுத்தது. மூன்றாவது ஊதலின்போது களத்துமேட்டில் நிற்காதவனுக்குச் சாட்டையடி கிடைக்கும். சாணிப்பால் குடிக்க வேண்டி யிருக்கும்.

எழுந்த நேரத்தில், தொட்டியில் கிடக்கும் தவிட்டுத் தண்ணியை அலசும் பன்றியைப் போல அவர்கள் ஒவ்வொரு

வரும் பானையில் உள்ள பழையதை அலசி அப்படியே குடிக்கின்றனர். முகம் அலம்புவதோ, பல் தேய்க்க வேண்டியதோ அந்த நேரத்தில் அவர்களுக்கு அவசியமில்லை. தீய்ந்த வயிற்றுக்கு ஏதாவது பதமிட வேண்டும். வயலில் இறங்கினால் எந்த நேரத்தில் கஞ்சி குடிக்க அனுமதி கிடைக்கிறதோ... பசிக்கிறவனின் உணர்வுகளைப் பற்றிக் கவலையில்லை. அவர்களின் உணர்வுகள் யாருக்கும் ஒரு பொருட்டல்ல. பேசாமல் உழைக்க வேண்டும். பசிக்கிற நேரங்காலம் மேலாளுக்குத் தெரியும். அப்பொழுது அவர்கள் கஞ்சி குடிக்கச் செல்லலாம்.

ஒவ்வொரு குடிசையின் படலைத் திறக்கும் சத்தம் கேட்கிறது. வாசலுக்கு வந்தவுடன் ஒவ்வொருவரும் மற்றவரை உற்சாகப் படுத்தும் குரல் கேட்கிறது. யாரும் அலுப்பில் கிடந்துவிடக் கூடாதல்லவா? அப்படிக் கிடந்து விட்டால் என்னவெல்லாம் நேருமென்று யாராலும் கூற முடியாது.

சேரியின் முகந்தலையில் எல்லோரும் ஒன்று கூடுகின்றனர். சேர்ந்துதான் களத்துமேட்டுக்கு ஓடுவர். தனித்தொருவன் தாமதிக்கும்பொழுதுதான் தண்டனை கடுமையாகக் கிடைக்கும்.

அவர்கள் ஒவ்வொருவர் இடுப்பிலும் தடித்த அரைஞாண் கயிறு. அறுந்துபோன மாட்டின் மூக்கணாங்கயிறு அது. புதிதாகக் கயிறு வாங்கிக் கட்டிக்கொள்ள வசதியில்லை. அப்படியே இருந்தாலும் அனுமதி கிடையாது. அழுக்கண்டிச் சேவேறிய கையகலக் கோவணம் மானத்தை மறைத்திருக்கிறது. தலையில் ஆடையென்று சொல்லக்கூடிய ஒரு கந்தல்.

குடிசைய விட்டு வெளிவந்தவுடன் குளிர் வாட்டி எடுக்கிறது. மேலே போர்த்திக் கொள்ளவென்று தலையில் உள்ள கந்தலை எடுத்து விரித்தால் திரிதிரியாகக் கீழே விழுந்து விடலாம். அதனால்தானோ என்னவோ அதை விரிக்காமலேயே வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது.

அவர்கள் ஓடுகிறார்கள். உடல் சூடு தட்டுகிறது; வியர்க்கிறது. குளிரினின்று விடுபடுவதற்கான உபாயமோ அது?

களத்துமேட்டில் எல்லோரும் கூடுகிறார்கள். வெட்டியான்கள் ஒவ்வொருவர் பெயராகக் கூப்பிடுவார்கள். பெயர்ப்பட்டியல் இல்லை. நினைவு கொண்டே கூப்பிடுகிறார்கள். அனைவர் பெயரும் அவர்கள் நுனி நாக்கில் குடியிருப்பு. தூர நின்று தலைகளைப் பார்த்தாலே யார் யார் வரவில்லையென்று கூறிவிட முடியும். அவர்களுக்கு எத்தனை வருடப் பழக்கமது!

எல்லாப் பிரிவுகளிலும் ஏககாலத்தில் வேலை நடக்க வேண்டும். கொஞ்ச நிலமா என்ன? ஒவ்வொரு பிரிவிற்கும் வெட்டியான், காரியஸ்தன் உண்டு. விடியற்காலையில் வெட்டியான்கள் களத்துமேட்டில் கொம்பு ஊதி வருகை பார்த்து வேலைப் பிரிவினைக் கூறுவார்கள். காலை நாலரை மணியிலிருந்து ஆறு மணி வரை பண்ணை வீட்டுக்கான வேலைகள், மாட்டுத் தொழுவ வேலைகள், வயல் வேலைக்கான முன்தயாரிப்புகள் எல்லாம் நடைபெறும். ஆறு மணிக்கெல்லாம் ஏர் மாடுகளுடன் வயலில் இறங்கிவிட வேண்டும்.

அன்று காத்தானுக்கு கக்கூஸ் சுத்தம் செய்யும் வேலை. அந்த வேலை அவனுக்குப் புதிது. பண்ணையார்கள் உபயோகிப்பது பாதாளக் கக்கூஸ். உள்ளில் வேலை செய்பவர்களுக்குத் தினம் தினம் அப்புறப்படுத்தும்படியான திண்ணைக் கக்கூஸ். பின்புறச் சுவரோரமாக உள்ள கதவைத் திறந்து திண்ணைக் கக்கூஸி லுள்ள மலச்சட்டியை எடுத்துச் சென்று கொட்டிவிட்டு வந்த காத்தான், உள்ளிருந்த வேலையாள் தண்ணீர் ஊற்ற வெளிப்பக்கத்திலிருந்து காத்தான் துடைப்பத்தை விட்டு அடித்துத் தேய்த்தான். உட்பகுதி எட்டாமல் போகவே முதுகை உட்பக்கம் நீட்டி துடைப்பத்தை ஏற விட்டுத் தேய்த்தான். உட்பக்கம் இருந்தவன் தண்ணீரை வீசியடிக்க, அது அவன் முகம், தலை எல்லாவற்றையும் நனைத்து விட்டது. மூத்திரமும் மலக்குழம்பும் சேர்ந்த தண்ணீர் அது. சகிக்க முடியாத நாற்றம், குடலைப் பிடுங்கும்படியான ஓக்காளம். திறந்திருந்த வாய்க்குள்ளும் சென்று விட்டது.

அப்படியே போட்டுவிட்டு வாய்க்கால் பக்கம் ஓடினான். முகத்திலிருந்து மேலெல்லாம் சாறு வடிவது போல் ஒழுகியது. அந்த நிமிசத்திலேயே செத்து விடலாம் போல் இருந்தது அவனுக்கு.

அவன் இந்த வேலைக்குப் புதிது. எது நேரிட்டாலும் செய்யும் வேலையைப் போட்டு விட்டுப் போய்விடக்கூடாது, சகித்துக் கொண்டு வேலைநேரம் முடியும் வரையிலும் செய்ய வேண்டும். தன்னிஷ்டப்படி நடப்பதற்கு எந்த அடிமைக்கும் உரிமை கிடையாது. அப்படி விட்டால் வயற்பரப்பெங்கும் வேலை செய்யும் அடிமைகள் மத்தியில் கட்டுப்பாடு குலைந்து போகும். அது பண்ணையாரின் அந்தஸ்துக்குப் பங்கம் விளைவிக்கும்.

ஓர் அடிமை, தான் செய்வது யாருக்கும் தெரியாமல் நடப்பதாக நினைத்துக் கொள்ளலாம். அடிமைகளைக் கண்

காணிக்கிற விசயத்தில் ஒவ்வொரு சுவருக்கும் மரங்களுக்கும் கூடச் சிரத்தையிருக்கிறது. அது அவர்களுக்குத் தெரிவதில்லை. சில நேரங்களில் அது தெரிந்தாலும் தங்களுக்கு நேரும் சகிக்க முடியாத சோதனைகளை விடக் கிடைக்கும் தண்டனை மேலெனஎண்ணச் செய்தது.

காத்தான் வாய்க்காலில் மூழ்கி எழுந்து கழுவிக்கொண்டான். இருந்தும் அதன் வாடை போகவில்லை. ஓர் அடிமைக்கு அப்படிப்பட்ட உணர்வுகள் ஆபத்தை விளைவிக்கும். அது அவர்களுக்கு இருக்கக் கூடாத ஒன்று.

வெட்டியான் மூக்கன் இதையெல்லாம் கவனித்துக் கொண்டு இருந்தான்; அவனுக்கு இதெல்லாம் புதிதல்ல. புதிதாகச் சேற்றிலிறங்கும் உழவு மாடு கூசிக் கொண்டுதான் இறங்கும். அடி வாங்கியவுடன் எல்லாம் சரியாகி விடும். காத்தானும் புதிய அடிமை வேலைக்காரன் தானே?

பொழுது புலரும் நேரம். எல்லா வேலைக்காரர்களும் உழவு மாட்டுடன் வயலில் இறங்கினர். பெண்கள் சோற்றுப் பானையுடன் வயலுக்கு வந்தனர். வயலோரத்தில் குழிபறித்து வைத்தனர். காக்காய் குருவிகளோ நாய்களோ அலசி விடாமல் இருக்க வேண்டுமல்லவா?

காத்தானும் வயலில் வந்து இறங்கினான்.

வள்ளியும் எல்லாப் பெண்களைப் போல கஞ்சிப் பானை யைக் குழியில் புதைத்துவிட்டுச் சென்றாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி நிறைந்த குதூகலம். புதிய இடத்தின் அனுபவம் கிடைக்கப் பெறாதவள்.

மாரப்பனும் காரியஸ்தன் பொறுப்பேற்று வந்து வயல் மேட்டில் நின்றான். இவ்வளவு பெரிய ஆள் கூட்டத்திற்குத் தான் மேலாள் என்ற பூரிப்பு அவனைப் புளகாங்கிதமடையச் செய்தது. அவன் சொத்திழந்த கவலையைக் கூடச் சற்றுத் தணித்தது. உண்மையாகிலுமே பண்ணையார் தன்னை ரட்சிக்க வந்தவராகவே எண்ணினான்.

பண்ணையாருக்கு அவன் வஞ்சகமில்லாமல் உழைத்தாக வேண்டும். அவரின் கருணை அவன் குடும்பத்துக்குச் சோறிடு கிறது. அவர் தக்க சமயத்தில் கை கொடுத்திருக்காவிட்டால்... அவன் கண்கள் பனித்து முத்துத் துளிகளை அர்ப்பணிக்கின்றன... அவருக்கு அவன் மகன்தானா விரோதியாக முளைக்க வேண்டும்?

வெட்டியான் மூக்கன், மாரப்பன் அண்டையில் வந்து பணிவடக்கத்துடன் வணங்கி நின்றான். மாரப்பனுக்கு அந்த நடைமுறைகள் புதிது. அவன்தான் மேலிடத்தவருக்கு அப்படி வணங்கியிருக்கிறானேயொழிய அவனுக்கு யாரும் அந்த மரியாதை கொடுத்ததில்லை. இனி அவன் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்.

மூக்கன், மாரப்பன் காதில் எதையோ குசுகுசுத்தான். அவன் முகம் வெளிறியது. வந்தும் வராததுமாகவா புதிய புதிய பிரச்சனைகள்!

குழப்பமுற்றவனாக மாரப்பன் கேட்டான்:

"இதற்கு என்ன செய்யணும்னு உனக்குத் தெரியுமல்லவா? நான் இதுக்கெல்லாம் புதுசு. நீதா சொல்லணும்!"

மூக்கன் சொல்ல நினைத்தது இதுதான். 'காத்தான் வேலை நேரத்தில் வேலை செய்யாமல் வாய்க்கால் மேட்டில் சென்று சுற்றிவிட்டு வந்திருக்கிறான். இது அனுமதிக்க முடியாத நடைமுறை. இதற்குப் பரிகாரம் கண்டாகணும், இன்றேல் வயற்புறத்தில் அடிமைக்கும் எஜமானருக்கும் இடையிலான நடைமுறை விதிகள் குலைந்து போகலாம்.'

மூக்கன் சொன்னான்:

"கண்டிப்பும் விசுவாசமும் உள்ள காரியஸ்தங்க இது மாதிரி நடவடிக்கைக்கு சாட்டையடியும் சாணிப்பாலும் குடுப்பாங்க."

இதைக்கேட்ட மாரப்பனின் வயிறு கலங்கியது. முதல் நாளே சோதனை நாளா! அவன் சிந்தனை கலைந்தது. இதெல்லாம் வாயில் கண்டிக்க வேண்டிய குற்றங்கள் தானே...? அதற்கா இவ்வளவு பெரிய தண்டனை? அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அவனாக இருந்தால் அப்படித்தான் செய்வான். ஆனால் கண்டிப்பும் விசுவாசமும் உள்ளவன் இப்படித்தான் செய்ய வேண்டும் என்றும் வரையறுத்துக் கூறுகிறானே!

தான் எப்படிப்பட்ட பொறுப்பில் வந்து சிக்கியிருக்கிறோம் என்பது அப்பொழுதுதான் புரிந்தது. அவன் பண்ணையாருக்குக் கட்டுப்பட்டவன். செஞ்சோற்றுக் கடன் தீர்க்க வேண்டும். ஓர் உண்மையான ஊழியன் செய்ய வேண்டியது அதுதான். இருந்தாலும் சாட்டையைக் கையில் எடுக்க அவன் மனம் நடுங்கியது.

மாரப்பன், மூக்கனைப் பார்த்துச் சொன்னான்:

"பண்ணையிலுள்ள கட்டுத் திட்டங்களுக்கு மீறி அவெ என்ன செஞ்சிருந்தாலும் அதுக்கான தண்டனையை நீயே கொடுத்துடு. எனக்கது சம்மதமே"

மூக்கனுக்கு அது சந்தோசமே; காரியக்காரர் ஆற்ற வேண்டிய கடமைகளை அவன் ஏற்று நடத்தும்படி கூறுகிறார். அடிமைகள் மத்தியில் அவனுக்குள்ள அந்தஸ்து இன்னும் பெருகும். அது அவனுக்குப் பெருமையல்லவா?

மாரப்பன், வயலில் நின்ற காத்தானைக் கூப்பிட்டான். எல்லோரும் திடுக்கிட்டவர்களாக மாரப்பனைப் பார்த்தனர். வயலில் இறங்கியவுடன் ஒருவனை மேட்டுக்கு அழைக்கிறார்கள் என்றால் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்றுதான் அர்த்தம். அவர்கள் அனுபவமும் அப்படித்தான் வளர்ந்திருக் கிறது.

காத்தான் கசாப்புக்கடைக்கு இழுத்துச் செல்லப்படும் ஆட்டுக்குட்டியைப் போல தலையைத் தொங்கப் போட்டவ னாக வயலிலிருந்து நடந்து வந்தான். சப்த நாடிகளும் அடங்கியதுபோல் பிரமித்தபடி வந்து நின்றான்.

மாரப்பன் கேட்டான்:

“நீ விடியக்காத்தாலெ செய்யற வேலையெ வுட்டுட்டு எங்கே போயிருந்தெ?”

மாரப்பன் மிகக் கண்டிப்போடு கேட்பது போலத்தான் கேட்டான். இருந்தாலும் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து சொற்கள் வெளிவரவில்லை. அது அவனுக்குத் தெரியவும் செய்தது. தன் பலவீனத்தை எண்ணி வருந்தினான்.

காத்தான் நடுநடுங்கியவனாக நாக்குழறச் சொன்னான்: “கச்கூசு கழுவிக்கிட்டு இருக்கிறப்பொ மூஞ்சி மொகமெல்லா அது அடிச்சுட்டுதுங்க, அதக் கழுவறதுக்காவ வாய்க்காலுக்குப் போயிட்டு வந்தேனுங்க.”

அவன் பதில் நியாயமாகவே பட்டது. அதை ஏற்பது தான் முறை. அதைத் தீர்மானிக்க வேண்டியது மாரப்பனல்லவே? எழுதப்படாத சட்டமொன்றைப் பண்ணையார்கள் உருவாக்கி விட்டிருக்கிறார்கள். அதை அமுல்படுத்துவதொன்றுதான் அவர்களுடைய வேலை. அதை எந்த அளவுக்குக் கருணை காட்டாமல் மூர்த்தண்யமாக நிறைவேற்றுகிறார்களோ அவர்கள்தான் விசுவாச மிக்கவர்கள். பண்ணையாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்.

மாரப்பன் விசுவாசமிக்கவனாகவும், நம்பிக்கைக்குரியவனாக வும் விளங்க விரும்பினான். அதற்கு எந்தவிதப் பங்கமும் நேராமல் காத்துக் கொள்ளவும் முயற்சித்தான். இருந்தாலும்

உள்ளார்ந்த உணர்வோடு இப்படியான தண்டனை முறைகளை வழங்க அவன் மனம் தயங்கியது - தத்தளித்தது.

மாரப்பன் சொன்னான்:

"ஒரு வேலைக்காரனுக்கு வேலையில் இறங்கிட்டா வேலையெ வுட்டுப் போறவரைக்கும் அப்படிப்பட்ட உரிமை யில்லே"

இந்த வார்த்தைகளை எப்படிக் கூறினோமென்று அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. இப்படியும் பேசுவதற்கு முடியும் என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தான். இருந்தாலும் அடிமை என்பதைச் சொல்ல மறந்துவிட்டான். அந்த ஒன்று தான் அவர்களின் சகல உணர்வுகளையும் சுதந்திரத்தையும் மழுங்கடிக்கக் கூடியது. அந்தத் தவறை இனி அவன் செய்யக்கூடாது.

அந்த அடிமைக்கு மறுத்துப் பேச என்ன இருக்கிறது? கைகட்டி வாய்புதைத்தவனாக நின்றுகொண்டிருந்தான்.

காத்தானுக்கு என்ன நிகழப் போகிறது என்பது அடிமை வேலைக்காரர்களுக்குத் தெரியும். ஒருவரும் அதைக் காணாத வர்கள் போலத் தத்தம் வேலையில் மூழ்கியிருந்தனர். இன்றேல் அவர்களும் தண்டனைக்காளாவார்கள்.

காத்தான் ஒரு மரத்தில் தழுவி நிற்கும் கோலத்தில் இணைத்துக் கட்டப்பட்டான். தண்டனைக்குள்ளாக்கப்படும் ஒவ்வொருத்தனும் அப்படித்தான் கட்டப்படுவது வழக்கம். காரணம், அடி பொறுக்க மாட்டாத வேதனையில் தன்னை மறந்து எதுவும் செய்துவிடக் கூடாது என்ற பாதுகாப்புக்காக. சாட்டையை எடுத்து மூக்கன், காத்தான் உடம்பில் இழையோட விட்டான். சாட்டையின் நரம்புகளில் சிறு கற்களை வைத்துப் பின்னப்பட்டதனால் முதல் அடியிலேயே அவன் குண்டிப் பகுதியில் சதை பிய்ந்து போய்விட்டது. அவனும் தன்னை மறந்து 'அம்மா' என்று அலறினான். அந்த வயற்பரப்பெங்கனும் அந்த ஓலம் எதிரொலித்தது. சத்தம் வந்த திசையை எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். வள்ளி இனங்கண்டு கொண்டாள். அவளையறியாமல் அவள் தன் கணவனை நோக்கி ஓடிவர எத்தனித்தாள். அதன் விளைவு என்னவாகும் என்று அவளுக்குத் தெரிந்திருந்தும் அதை அவள் லட்சியம் செய்யவில்லை.

இடையிலிருந்த பெண்கள் அவளை மறித்து நிறுத்தினர். இதுவே கூட மற்ற பெண்களுக்கும் தண்டனையைக் கொண்டு வந்து சேர்க்கலாம். வேலையோடு வேலையாகச் செயல்பட்ட படியே இதனைச் செய்தனர். அவளுக்குப் புத்திமதியும் கூறினர்.

ஓர் அடிமையை எதுவும் செய்ய எஜமானருக்கு உரிமையுண்டு. தடுப்பதினால் தடுப்பவர்களுக்கும் சேர்த்துத் தண்டனை கிடைப்பதுதான் மிச்சம். மேலும் தண்டனையும் மிகக் கொடிய தாக மாறலாம்.

தன்னைக் காப்பாற்றுவான் என்று பெற்றோர்களால் ஒப்படைக்கப்பட்டவனுக்கு எப்படியான ஆபத்து நிகழ்ந்திருக் கிறது. கட்டிப்போட்ட ஆட்டைக் குதறும் ஓநாய்களைப் போலல்லவா அவன் குதறப்படுகிறான். ஜீவிதத்துக்காக உட் படுத்திக் கொண்ட ஒருவனே மற்றொருவனைத் தண்டிக்கிறான். என்ன பயங்கரமான கொடுமையிது.

அவள் தேம்பித் தேம்பி அழுதாள். அதைவிட அவளால் வேறு என்ன செய்ய முடியும்?

முதல் அடியிலேயே சதை பிய்ந்து ரத்தம் பீறிட்டுத் துடித்தது. இந்தக் காட்சியை மாரப்பனால் லகுவாகத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. “போதும்” என்று சைகை மூலம் நிறுத்தி விட்டான்.

அவன் மனம் புலம்பியது. ஒரு பக்கம் பண்ணையார் மீது வெறுப்புறவும் தூண்டியது ‘....ச் .....சே..... பண்ணையாரா இப்படியெல்லாம் ஏன் செய்யவில்லை என்று பார்த்துக் கொண்டு கேட்கிறார்’ என்று மறுபுறம் சமாதானம் கூறியது.

அவன் மரத்திலிருந்து கட்டவிழ்த்து விடப்பட்டான். ரத்தம் தொடை வழியாக ஒழுகி பாதத்தில் வந்து தேங்கி நின்றது. தாகமும், களைப்பும், வேதனையும் அவனை ஆட்கொண்டன. தாகத்திற்குத் தண்ணீர் கொடுக்கப்படவில்லை. சாணிப்பாலைக் கொடுத்தனர். அவன் நெற்றி சுளிப்புற்றது. அடிவயிற்றிலிருந்து குடலைச் சுருட்டிக் கொண்டு குமட்டல் எடுப்பது போன்ற உணர்வு எழுந்தது. இருந்தாலும் மென்று விழுங்கிக் கொண்டு சாணிப்பாலை வாங்கிக் குடித்தான்.

வாழ்க்கைத் தாகம் அவனை எல்லாவற்றையும் மறக்கச் செய்தது.

அவன் அடியின் உபாதை தாங்காமல் களைப்பு மேலிட்ட தால் மயங்கிச் சுருண்டு கீழே வீழ்ந்தான்.

# 14

**வ**ள்ளி, வயல் வேலை முடித்து எல்லாப் பெண்களுடன் குடிசைக்கு வந்தாள். அவள் மனதில் நிம்மதியில்லை. தன்னை யறியாமலேயே குழந்தையைப் போலத் தேம்பினாள். மாலை மாலையாகக் கண்ணீர் உகுத்தாள். அடிபடும் தன் கணவனைத் தடுக்கவோ - தலையிடவோ அவளுக்கு உரிமையில்லை. அந்தக் கொடுமையைக் கண்டு வாய்விட்டு அழவும் சுதந்திரமில்லை.

அவளைச் சார்ந்த பெண்கள் சொன்னார்கள். சில நேரங் களில் இப்படிப்பட்ட குற்றங்களுக்காகச் சம்பந்தப்பட்டவர் களை அடித்துக் கொன்று ஆற்றில் இழுத்து எறிந்து விடுவார்க ளாம்.

காத்தானுக்கும் அப்படி நிகழாதென்று எப்படிச் சொல்ல முடியும்? அப்படி நிழ்ந்துவிட்டால் அவள் வாழ்க்கை என்ன ாவது? வேறு யாராவது ஒருவனுக்கு மனைவியாகலாம். அப்ப வும் என்ன மாற்றம் நிகழ்ந்து விடப்போகிறது? வாழ்க்கையின் குரூரமான கொடுமைகளை அப்பொழுதும் அவள் அனுபவிப் பாள். ஓர் அடிமைப்பறையனின் வாழ்க்கை எப்படியெல்லாம் கொடுமைக்குள்ளாக்கப்படுகிறது? அவள் மௌனமாக இருப்பதின் விளைவுதானா இது? அவளுக்கு ஒன்றுமே புலப்பட வில்லை. மௌனமாகக் கண்ணீர் விட்டு அழத்தான் முடிந்தது. பொன்னாள் அன்று வயல் வேலைக்குச் செல்லவில்லை. எழுந்து நடமாட முடியாத அளவுக்குச் சளியும் காய்ச்சலும். சில சமயங் களில் இதற்காகக்கூட தண்டனை கிடைக்கலாம். அவர்கள் வேலை செய்யச் சக்தியற்றவர்கள் என்று முடிவு செய்வது யார்?

வள்ளி தன் கணவனுக்கு ஏற்பட்ட கொடுமையைக் கிழவி யிடம் கூறினாள்.

அவளால் சற்று நேரம் ஒன்றுமே பேசமுடியவில்லை. விளைவுகள் எப்படியாகவும் இருக்கலாம். அது அவர்களின் மனோநிலையைப் பொறுத்தது.

கிழவி நடுநடுங்கும் குரலோடு கேட்டாள்:

“அவெ ஏதாவது எதுத்துப் பேசினானா?”

"இல்லே"

"நீ எதாவது சொன்னியா?"

"இல்லே, என்னெக் சிட்டப் போகவே ஆரும் வுடுலே"

கிழவி ஒரு நம்பிக்கைப் பெருமூச்சு விட்டாள். அப்படியானால் பெரிதாக ஆபத்தொன்றும் நிகழ்ந்து விடாது. அப்படி நிகழ்வது அசாதாரணம்.

வள்ளி பதைபதைப்போடு கூறினாள்:

"எனக்கென்னவோ பயமாயிருக்குது"

கிழவி ஆறுதல் கூறினாள்.

"உனக்கு இது புது அனுபவம். அந்தக் காலத்துக்கு இப்ப எவ்வளவோ தேவலே. நாக்கத் துண்டிப்பாங்க. வெரெல்களெ நறுக்குவாங்க. உம் மாமனாரு எப்படிச் செத்தாந் தெரியுமா? கள்ளுக்குடிச்சப் போதையிலே எதோ ஔறுனதுக்காவ அடிச்சு வாய்க்கால்லெ போட்டுட்டாங்க. நெனச்சுப் பாரு. அடிபடறதெ விட இது எவ்வளவு கொடுமை!"

வள்ளி நடுநடுங்கிப் போனாள். என்றைக்கும் அக்கொடுமைகள் திரும்ப வரவேண்டாம். அடியின் வேதனை இரண்டொரு நாளில் மறைந்துவிடும். அதுவோ அப்படியல்லவே!

கிழவி மேலும் கூறினாள்:

"இப்படியான தண்டனெ அடிம சாதிக்கு சகசம். அப்படியில்லினாலும் நம்மளெ ஒரு கட்டுலெ நிறுத்த முடியாது. மேப்படிக்குக் கீப்படிங்கிறது உண்டுதானே? அது அழிஞ்சு போவப்படாது பாரு. அதெ அடிக்கடி நெனப்பூட்டத்தா இப்படியான தண்டனெ. கோழி முதுச்சா குஞ்சு மொடமா ஆயிடும்?

கிழவி உண்மையாகிலுமே மனஈடுபாட்டோடுதான் சொன்னாள். சில நேரங்களில் பண்ணையார்கள் அடிமைகளின் உயிருக்கு ஆபத்து உண்டுபண்ணும் விதத்தில் தண்டனை வழங்கிவிடுவார்கள். அது என்னவோ கூடாதுதான். அதில் அவளுக்கு மனத்தாங்கல்தான். குழந்தைகளை நாம் தண்டிக்கிற முறையில் பண்ணையார்கள் நடந்துகொள்வதில் என்ன தப்பிருக்க முடியும்? அப்பொழுதுதான் ஆண்டைக்கும் அடிமைக்கும் உள்ள நெறிமுறைகள் வழுவாமல் நடைபெற்று வரமுடியும்.

அவர்கள் வயிற்றுக்கும் கால் கஞ்சியோ அரைக்கஞ்சியோ கிடைக்கும்.

வள்ளி கேட்டாள்:

"அதுக்கும் ஒரு அளவு வாண்டாமா? நம்ம ஒடம்பு ஒண்ணும் இரும்புலே செய்யலியே, ராவு பகலும் பாராமே ஒழைச்சிட்டும் ஒதையும்பட்டு ரத்தமும் சிந்தோணும்னா எப்படி முடியும்?"

இவையெல்லாம் கிழவிக்கு மட்டும் தெரியாதா? இதை விடவும் பயங்கரமான தண்டனைகளையும் பார்த்து அனுபவித் தவள் அவள். அவளுடைய அறிவிற்கு அதைவிட வேறு சிந்திக்க இயலவில்லை. எப்படியோ உயிர் வாழ்ந்தாக வேண்டும். வாழ்க்கை மீது உள்ள தாகம் அப்படி இயலாமையின் பாற்பட்ட ஒரு பெருமூச்சு விட்டபடி கிழவி சொன்னாள்:

"நம்மளப் படச்சவெ அப்படிப் படைச்சிட்டா. நம்ம விதி அப்படி. அதுக்காவ நாம என்ன செய்ய முடியும்?"

மாற்றப்படாத வேத மந்திரங்களைப் போல சந்ததி தவறாமல் அவர்கள் அப்படித்தான் தங்களுக்குள் கூறி வருகிறார்கள். அதற்குமேல் அவர்களுக்கு யாரும் சொல்லித் தரவும் இல்லை. வள்ளிக்கும் அப்படித்தான் சொல்லித் தரப் பட்டிருக்கிறது. இருந்தாலும் வளர்ந்துவரும் சமுதாயச் சுழற்சிகள் அவளையறியாமலேயே அவள் சிந்தனையில் மின்வெட்டுப் போல எதையோ உணர்த்துகிறது.

வள்ளி தன்னைக் கட்டுப்படுத்த முடியாத ஏதோ உணர்வுக்கு ஆட்பட்டவள் போலக் கூறினாள்.

"மெத்தையிலே படுத்திருக்கிறவெ என்னைக்கும் மெத்தையி லேயே படுக்கப்போறதில்லே."

இது அவளைச் சார்ந்தவர்கள் மனவிரக்தியடையும் போது கூறிக்கொள்ளும் சமாதான வார்த்தைகள்தான். இருந்தாலும் இது அவளுடைய வாயிலிருந்து அர்த்தபுஷ்டியுள்ளதாகவே வெளிப்படுவது போல் தோன்றியது.

அப்பொழுது அண்டைவீட்டுக்காரி வள்ளியைக் கூப்பிட்டு நெருப்பெடுத்துக் கொடுக்குமாறு கூறினாள். அவளுக்கு அதுவரையிலும் அதைப் பற்றிய நினைவேயில்லை.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டில் நெருப்பை மூட்டம் போட்டு வைத்திருப்பது முறை. தீப்பெட்டி என்பது அவர்க ளுக்கு எட்டாத சொர்க்கம். மூட்டம் அணைந்து விட்டால் பண்ணையார் வீட்டுப்பக்கம் சென்று மணிக்கணக்காகக் காத்திருந்தான் வாங்கிவர வேண்டும். அதுவும் தீக்குச்சி கிடைக்காது. அடுப்பில் கிடக்கும் நெருப்பை அள்ளிக் கொடுப்பார்கள். அதைக் கொண்டுதான் அவர்கள் மூட்டம்

போட்டுக் கொள்ள வேண்டும் நெருப்பணைந்து விட்ட சில வேளைகளில் அடுப்புப் புகையாமல் முழுநாளும் சோறின்றிக் கூட கிடந்திருக்கிறார்கள்.

இன்று நெருப்பு மூட்டத்தைப் பாதுகாப்பது வள்ளியின் முறை. கணவனைப் பற்றிய சிந்தனையில் அதையெல்லாம் மறந்துவிட்டிருந்தாள். அண்டை வீட்டுக்காரி கேட்கும் பொழுது தான் அதுபற்றிய நினைவே அவளுக்கு எழுந்தது. நெருப்பு அணைந்துவிட்டால் அவள்தான் அதைத் தேடித்தர வேண்டும். இன்றேல் ஜாதிக்கட்டு விதிக்கும் தண்டனைக்கு அவள் உட்பட்டாக வேண்டும்.

அந்த நொடியில் கணவனைப் பற்றிய சிந்தனையெல்லாம் ஓடி மறைந்துவிட்டது. நெருப்பு மூட்டத்தின் அண்டையில் ஓடிப்பார்த்தாள். நெருப்பு அணையாமல் இருந்தது, அப்பொழுதுதான் அவள் மனது நிம்மதியடைந்தது.

அவள் நெருப்பை எடுத்துவந்து வெளியில் நின்று கொண்டிருந்த அண்டை வீட்டுக்காரிக்குக் கொடுத்தாள்.

அப்பொழுது வேலை முடிந்து சேரி ஆட்கள் வந்து கொண்டிருப்பதை வள்ளி கவனித்தாள். அவள் கவனமெல்லாம் கணவனைப் பற்றியே இருந்தபடியால் அவர்கள் வழக்கமான வருகை என்றுமில்லாதபடிக்கு அவளுள் ஆவலைத் தூண்டியது.

காத்தான் கூட்டத்தோடு சேர்ந்து வருகிறானென்றால் அனைவரிலும் அவன் ஒரு தனியாளாகத் தோற்றமளிப்பான். தலையில் சுற்றியிருக்கும் முண்டாசுடன் அவன் நடந்து வருவதே ஒரு அழகாக இருக்கும். அப்படிப்பட்ட கம்பீரமான நடையை - தோற்றத்தை அவள் இன்று அவனிடத்தில் காண முடியவில்லை. தலையிலிருக்கும் முண்டாசு இறங்கி உடம்பைப் போர்த்திக் கொண்டு இருந்தது. சண்டிச் சண்டி நடந்து வந்து கொண் டிருந்தான். வெல்லற்கரிய அவனின் ஆண்மை எப்படியெல்லாம் ஒரு நொடியில் சிதைக்கப்பட்டிருக்கிறது. அவள் பார்த்த, கனவுகண்ட அந்த மனிதனின் தோற்றப் பொலிவெங்கே? ஒரு யுகத்துக்குச் சவால் விடக்கூடிய அந்த மனிதனின் ஆண்மை எப்படியெல்லாம் கணப்பொழுதில் சிறுமைப்படுத்தப்பட்டு விட்டிருக்கிறது.

அவளையறியாமல் அவள் கண்கள் கண்ணீரைச் சிந்தின. ஒரு பெண் தன் மனத்துயரை வெளிப்படுத்திக் கொள்ள இந்த முறையில்தான் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறாள் போலும்.

குடிசையண்டை வந்ததும் காத்தானின் கூட்டாளி முனியன், வள்ளியைப் பார்த்து "அடிபட்ட இடத்துக்கு வேது குடம்மா, அப்பத்தா நீருக் கோக்காது" என்று கூறிவிட்டுச் சற்றுப் பொறுத்தவன் அவளின் கவலை தோய்ந்த முகத்தைப் பார்த்து விட்டு, "ஒன்றும் கவலைப்படாதிரும்மா. இதெல்லாம் சின்ன விசயம்" என்று ஆறுதல் கூறிவிட்டுத் தன் குடிசையை நோக்கிச் சென்றான்.

தன் மகன் காத்தானின் வருகையை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டு திண்ணையில் படுத்திருந்த பொன்னாள் அவன் குடிசைக்குள் நுழைந்ததும், "ஏண்டா கண்ணு, ரொம்ப வும் அடியுண்டா சாமி?" என்று தாய்மைப் பரிவுடன் விசாரித் தாள்.

தாயின் கவலையை உணர்ந்த காத்தான் அவளுக்கு வீணான மனத்தொல்லையைக் கொடுக்கக் கூடாது என்ற உணர்வில் "அப்படியொன்னும் பெருசா இல்லம்ம" என்று சிரித்தபடி கூறிவிட்டு "தாயடிச்சுக் கொழந்தெ செத்துப்போயிடுமோ என்ன?" எல்லாம் வயது வந்த தாயின் திருப்திக்காக வேண்டி மனச்சாந்திக்காக வேண்டி!

தாயும் திருப்தியுற்றவள் போலக் கூறினாள்:

"நானும் வள்ளிகிட்டே அப்படித்தா சொன்னே, அவ ரொம்பவும் பயந்து போயிட்டா"

"அவளுக்கு என்ன தெரியும் அனுபவம் இல்லாதவ" என்று வலிந்து சிரித்துக்கொண்டு கூறினான்.

அவளும் ஒரு தலைமுறையை பண்ணையாரின் கீழ் வாழ்ந்து கழித்து விட்டவள்தான். இனி அவளுக்கு வாழ்க்கையென்பது ஒன்றில்லை. பெற்ற மகன் நன்கு வாழ்ந்தால் போதும். ஒரு பண்ணை அடிமை எப்படிப் பண்ணையாரின் கீழ் அடங்கி ஒடுங்கியிருக்க வேண்டுமென்பது அவனுக்குத் தெரியாதென்று நினைத்து வந்தாள். அவன் பதிலிலிருந்து அவன் தேறிவிடுவான் என்பதைப் புரிந்து கொண்டாள்.

அவள் அவனுக்கு இறுதி அறிவுரை கூறுபவள் போலக் கூறினாள்!

"எங்காலம் இன்னிக்கோ நாளைக்கோ பழுத்துப் போன எலையைப்போல. பண்ணையாருகிட்டியோ, காரிக்காரங்ககிட் டியோ அடக்க ஒடுக்கமில்லாமெ நடந்துக்காதெ. அவுங்க ஒரு நேரத்திலே கோபம் தாபம்னு அடிச்சுட்டாக்கூட அப்பவே

மறந்துட்டு "தண்ணி" வாங்கிக் குடுப்பாங்க. அவுங்க நமக்கு சோறு போடறவங்க, காப்பாத்தறவங்க."

காத்தான் தாய் கூறியதற்கு ஒன்றும் பதில் கூறாமல் "குளுரு வருதம்மா. கொஞ்சம் போயி அடுப்புக்கிட்டே உக்கார்றேம்மா. என்று கூறி குடிசைக்குள் நுழைந்தான். அவனுடைய கண்கள் சிவந்திருந்தன. முகம் சோர்ந்து வாடிப்போயிருந்தது. லேசான காய்ச்சல். உடல் சிலிர்த்து நடுங்கினான்.

வள்ளி சூட்டடுப்பில் வட்டச் சட்டியை எடுத்து வைத்துச் சூடேற்றினாள். தண்ணீரில் நனைத்துப் பிழிந்த துணியில் கம்புத் தவிடு போட்டு முடிந்து கையிலெடுத்துக் கொண்டு அடுப் பண்டை கால்கள் இரண்டையும் நீட்டிவிட்டு அமர்ந்தாள். கணவனைக் குழந்தையைப்போல மடிமீது கவிழ்த்துப் படுக்க வைத்துக்கொண்டாள். உடல் லேசாகச்சுட்டது. அவனுடைய பிருஷ்ட பாகத்தில் சாட்டையடிக்கப்பட்டு இரண்டு அங்குல நீளத்துக்குச் சதை கிழிக்கப்பட்டிருந்தது.

தவிட்டு முடிச்சைச் சுடுசட்டியில் வைத்துச் சூடேற்றி காயம் பட்ட இடத்திற்கு ஒத்தடம் கொடுத்தாள். அந்த ஒத்தடம் காயத்தில் வடியும் நீரை உறிஞ்சி வலியை மட்டுப்படுத்தியது.

அவனுக்கு அந்த ஒத்தடம் இதமளித்தது. அதுவரையிலும் அந்த இடம் இசிப்புக் கண்டதுபோல் வலித்தது.

அவள் கண்கள் கலங்கின. உருண்டு திரண்ட நீர்த்துளி மூக்கு நுனி வழியாக வழிந்து அவன் முதுகில் சொட்டியது.

அவள் அவனைத் தன் மடியில் கிடத்தி ஒத்தடம் கொடுத்தது அவனின் வேதனையை மறக்கச் செய்தது. தனக்காக ஒரு பெண் கவலைப்படவும், பணிவிடை செய்யவும் காத்துக் கிடக்கிறாள் என்பது அவனுக்கு மகிழ்ச்சியூட்டியது.

அவள் கண்ணீர் அவன் முதுகில் பட்டதும் அவன் நிலை குலைந்து போனான்,

அவன் கேட்டான்:

"வள்ளி எதுக்காவ அழறே?"

அவள் அவனுக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்பதற்காக மௌனமாகப் புலம்பினாள். ஆனால் கண்ணீர் காட்டிக் கொடுத்துவிட்டது. அது அவன் வேதனையை அதிகப் படுத்தலாம்

அவள் வேதனை குமுறச் சொன்னாள்.

"ஏழைகளுக்குத் தாங்க முடியாத உழைப்பே ரத்தத்தை எல்லாம் உறிஞ்சிப்பிடுது. அடி, உதை வேறே ரத்தத்தைக் குடிக்கணுமா?"

"என்ன பண்றது? நம்மளெ ஆண்டவெ அப்படிப் படைச்சிட்டா"

"என்னமோ எனக்குப் பயமா இருக்குது...."

தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் அவள் விக்கி விக்கி அழுதாள். மழைத்துளிகள் போல் கண்ணீர் மழை அவன் முதுகில் பொழிந்தது.

அவன் ஒரு பக்கமாக ஒருக்களித்துப் புரண்டு அவள் மடியில் படுத்தவாறு அவளுடைய தலையைப் பிடித்துத் தாழ்த்திக் கண்கள் இரண்டையும் துடைத்துவிட்டவாறு "அழாதே! அம்மா காதுலே வுழுந்ததுன்னா ரொம்பத் துக்கப்படும். இப்ப என்ன தலபோற ஆபத்து வந்துபோச்சு" என்றான்.

அவள் சமாளித்து விக்கலை அடக்கிக்கொண்டு கூறினாள்.

"காயம் இப்படி வீங்கியிருக்குதே. நாளைக்கு எப்படிப் போயி வயல்லே வேலை செய்வே?"

"இது ஒரு பெரிய வெசயமில்லே. காலுப் பாதத்திலேன்னா கஷ்டம்.

அவன் சொன்னது அவளுக்கு மனச் சமாதானத்துக்கு வேண்டித்தான். அவளின் ஒவ்வொரு எட்டியின் அசைவும் அவனது பிருஷ்ட பாகத்தில் சொல்லொணா வேதனையை மூட்டவே செய்தது. ஓர் அடிமைக்கு தன் வேதனையைப் பற்றியோ, கஷ்டத்தைப் பற்றியோ கூற உரிமை கிடையாதே!

அவன், அவள் தலையை வருடிவிட்டவாறு மேலும் கூறினான்.

"கவலைப்படாதே! இந்தக் கட்டை இதுக்கெல்லாம் சளைக்காது."

அவளுக்குத் தன் கணவனின் திடகாத்திரத்திலோ தைரியத்திலோ அவநம்பிக்கை கிடையாது. அவன் கல்லையும் ஜீரணிக்கக் கூடியவன். கடலையும் தாண்டக்கூடியவன். ஆனால் அதுவல்ல விஷயம். பண்ணை வேலையின் ஆரம்பமே இப்படி இருந்தால் போகக் போக எப்படி முடியுமோ? ஓர் அடிமைப் பறையன் தன் மனைவியின் கற்பைக் கண் முன்னாலேயே பண்ணையாருக்கு விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. சில நேரங்களில் அவர்களின் கோபதாபங்களுக்கு வேண்டி உயிர்

இழக்கவும் வேண்டியிருக்கிறது. இதற்காக வேண்டி ஒருவரும் வாய் திறக்க முடியாது.

அந்த உரிமையை அவர்களுக்கு யாரும் வழங்கவில்லை. அடிமை ஜீவிதத்தின் பயனே இதுதானோ?

வள்ளி துக்கமும் பீதியும் நிறைந்த குரலில் கேட்டாள்.

'நாம எங்காவது ஓடிப்போயிட்டா என்ன?"

பண்ணையார்களின் கொடுமை தாங்காமல் ஓடிப்போன அடிமைகளின் கதைகள் பல அவன் கேட்டிருக்கிறான். ஓர் அடிமை எங்கு சென்றாலும் கண்டுபிடித்து விடுவார்கள். அப்படிப் போனவர்கள் சிலர் கன்னத்தின் இரு பக்கத்திலும் பழுக்கக் காய்ச்சிய கம்பியால் சூடிழுக்கப்பட்டிருக்கிறார்கள். சிலரின் காதுகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. மூக்குகள் அறுக்கப்பட்டிருக்கின்றன. அடிமை வேலைக்குக் குந்தகம் இல்லாத வகையில் சித்ரவதை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்கு மேலும் சிலரை வேலை நேரம் முடிந்தவுடன் கனத்த சங்கிலியைக் கொண்டு கால்களுக்குப் பூட்டிவிட்டிருக்கிறார்கள்.

அதனால் ஓடிப்போவது என்பது தலைவலியை விட்டுத் திருகு வலியை வாங்கிக் கொண்டது போலத்தான் ஆகும்.

அவன் ஒரு கைப்பு நிறைந்த புன்னகையை உதிர்த்து விட்டுக் கூறினான்;

"இந்த மானம் மொளச்ச பூமியிலே ஒரு அடிமெ எங்கு போனாலும் சுலபமா அடையாளம் கண்டுக்க முடியும், அவந் தலையெழுத்து அப்படி."

"அப்படின்னா நமக்குச் சாகற வரைக்கும் விமோசனமே கெடையாதா?"

"அது ஆண்டவனுக்குத்தாந் தெரியும்."

ஒருக்களித்துப் படுத்திருந்தவன் மீண்டும் கவிழ்ந்து அவள் மடியில் படுத்தான். அவனையறியாமல் அவன் கண்கள் கசிந்தன. அவளுக்கு அவன் ஆறுதல் கூறினான். அவனுக்கு யார் கூறுவது?

அவள் மீண்டும் தவிட்டு முடிச்சை எடுத்து சுடுசட்டியில் வைத்து சூடேற்றி அவனின் காயம்பட்ட இடத்திற்கு ஒத்தடம் கொடுத்தாள்.

அந்தத் திக்கற்றவர்களால் அவ்வளவுதான் சிந்திக்க முடியும் போலிருக்கிறது.

# 15

பழனியம்மாள் பிறந்த வீட்டுக்கு வந்திருக்கிறாள். முன் போல மனத்தாங்கலோடு வரவில்லை. சந்தோஷத்தோடு தான் வந்திருக்கிறாள்.

மருமகளுக்கு ஒரு பையனே போதும் என்பது மாமியாரின் விருப்பம். அப்படியே கணவனின் விருப்பமும். அதற்குமேல் குழந்தைகள் இருந்தால் கையகல நிலத்தை எத்தனை கீற்றுகளாகப் பிரிப்பது!

ஆனால் மருமகளுக்கு அடுத்து ஒரு பெண் குழந்தை இருந்தால் போதும் என்கிற ஆவல். மாமியார் அதை விரும்பவில்லை.

மனிதர்களின் விருப்பு வெறுப்பை வைத்துக்கொண்டா காரியங்கள் நடைபெறுகின்றன?

மாமியாளும் மருமகளிடத்தில் மேற்கொண்டு கர்ப்பந்தரிக்காமல் இருப்பதற்கான சில நடைமுறை விதிமுறைகளைக் கூறியிருந்தாள். காரியங்கள் அவைகளை எல்லாம் பொய்ப்பித்து விட்டன. அவள் கர்ப்பம் தரித்திருக்கிறாள்.

இதையறிந்த மாமியாள் "இந்தக் காலத்துப் பிள்ளைக பெரியவங்க பேச்சை எங்கே கேக்குது? ஆம்பளைங்க அவதியுஞ் சவுதியுமாகத் திரியறான்னா பொம்பளைக்கு புத்தியெங்கே போச்சு? அவளுக்கல்ல கவலையிருக்கணும்..." என்று மனதுக்குள் கறுவியவளாகக் கருவை சிதைக்கத் தனக்கு தெரிந்த சில வைத்திய முறைகளைச் செய்தாள்.

முதலில் பப்பாளிப்பழம் கொடுத்தாள். பிறகு அன்னாசிப் பழம் கொடுத்தாள். பிறகு வெல்லங்கூட்டிக் காய்ச்சிய தினைக்கஞ்சி கொடுத்தாள். அது எதற்கும் அசையவில்லை.

கடைசியில் மாமியாள் மருமகளிடம் கூறினாள்:

"உன்னோட ஒடம்பு வாக்கு எதுக்குமே அசையலே.

உங்கூருலேதானே இதுக்கு பேர்போன மருத்துவச்சி இருக்கிறா. போயி ஒரு பத்து நாளைக்குத் தங்கி சுத்தம் பண்ணிக்கிட்டு வந்துடு”

அதை மருமகள் தட்ட முடியுமா? அப்படித் தட்டி விட்டால் அவளால் சமாதானமாக வாழ முடியாது. அது அவளுக்கு நன்றாகத் தெரிந்த விஷயமே.

அந்தப் புத்திமதிகளை ஏற்றுத்தான் அவள் தாய் வீடு வந்து சேர்ந்திருக்கிறாள். அவள் முதன்முதலாக ஒரு சோதனைக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. இந்தச் சோதனையில் சிலர் தோல்வியுற்றிருக்கிறார்கள். இதை நினைக்கும் பொழுது அவள் உடம்பு சிலிர்த்து நடுங்குகிறது. அப்படி எதுவும் நடந்து விட்டால் தன் குழந்தை அனாதையாகவல்லவா நிற்க வேண்டி வரும். ஆம்பளைக்கு என்ன? மனைவி வேதியிலே போனா வீதியிலே ஒருத்தி வந்து சேர்ந்து விடுகிறாள்.

தாயிடம் விசயத்தைக் கூறினாள். தாய்க்கு அவள் கூறுவதில் உடன்பாடு இல்லை. அப்படிச் செய்துகொள்கிறவர்களின் உடல் சிதைந்து விடுகிறது. உயிருக்கும் ஆபத்து நேர்ந்து விடுகிறது. அப்படி என்ன நாலைந்து குழந்தைகள் கால்களைச் சுற்றிக் கொண்டு இருக்கின்றன.

தன் மகளானாலும் மறுத்துச் சொல்வதற்கு அவளுக்கு உரிமை இல்லை. ஒருவன் கையில் ஒப்படைத்தவுடனேயே அந்த உரிமையை அவர்கள் இழந்து விடுகிறார்கள்.

அவள் சொன்னாள்:

“சோறு போடறவங்க சொல்றதைக் கேட்டுத்தானே ஆவணும். ஒருத்தரு கையிலே ஒப்படைச்சிட்ட பெறகு தாய் தகப்பனுக்கு மறுத்துச்சொல்ல என்ன இருக்கிறது. பந்தல்லெ படர்ற செடி பார்த்துத்தானே படரணும். வேலியிலே படர்ற செடி வேண்டுங்கற பக்கமெல்லாம் படரலாம். பலி பீடத்துக்கு இட்டுச் செல்லும் ஆட்டுக்குட்டியைப் போல பழனியம்மாள் குழம்பினாள்.

மகள் வந்திருக்கும் நிலைமையை மாரக்காள் கணவரிடம் கூறினாள். அவன் அதற்கு என்ன சொல்வான். பெருமூச்சுத் தான் வந்தது.

கர்ப்பச்சிதைவு செய்வதில் அந்த ஊரில் உள்ள ஒருத்தி கை தேர்ந்தவள் எனப் பெயர் பெற்றவள். அவள் வரவழைக்கப் பட்டாள்.

எருக்கஞ்செடியின் இலைப்பகுதியில் உள்ள நடுத்தண்டை எடுத்து கருப்பையை அடையுமாறு சொருகி விடுவதுதானே கிழவி வைத்தியம்.

பழனியம்மாளுக்கும் அப்படித்தான் வைத்தியம் செய்தாள்.

எருக்கலைத்தண்டு உடம்புக்குள் சென்றவுடனேயே உடலைக் காந்த ஆரம்பித்துவிட்டது. காய்ச்சல் கண்டவளைப் போல் சோர்ந்து கட்டிலில் படுத்துக்கொண்டாள். உடல் பூராவும் வேதனை. வயிற்றில் தாங்க முடியாத வலி.

பகல் கழிந்து இரவு கவிய வயிற்றுவலி அதிகம் ஆரம்பித்து விட்டது. புரண்டு புரண்டு படுத்தாள். மேலெல்லாம் வியர்வை இட்டிலிப் பாத்திரத்தில் திரண்டு வடிவது போல வடிந்து கொண்டிருந்தது. கலைந்து கிடந்த கேசம் வியர்வையில் நனைந்து கனத்து முகமெல்லாம் ஒட்டிக் கிடந்தது. முகம் சோபை இழந்து வெளிறிக் காணப்பட்டது. பசிக்களைப்புக் கண்டவரின் கண்கள் போல இடுங்கிக் குழியில் விழுந்து கிடந்தது. பற்கள் இறுக கடிக்கப்பட்டு புருவம் மேல்நோக்கி விரிய நெற்றிச் சுருக்கம் பாய்ந்திருந்தது.

"அம்மா! அய்யோ!" என்று இடைக்கிடையே முனகிக் கொண்டாள்.

அவள் சகிக்கவொண்ணாத வேதனையில் துடித்தாள். பிரசவ வேதனைகூட அப்படி இருக்காது. கர்ப்பப்பை கொஞ்சங் கொஞ்சமாக வெந்து புண்ணாகியது. எருக்கலைத்தண்டின் விஷம் கொதித்துக் காந்தியது. நீர்க்குமிழி போல வயிறு ஓடி ஓடிப் புடைத்தது. அடி வயிற்று நரம்பு சுருட்டியிழுத்தது.

மகள்படும் அவஸ்தையைத் தாயால் புரிந்துகொள்ள முடிந் தது. அவளும் ஒரு பெண்தானே! கடந்த காலத்தில் அவளுக்குங் கூட இப்படிப்பட்ட அனுபவங்கள் நேர்ந்திருக்கலாம்.

பண்ணை வேலை முடித்துவிட்டு முதல் ஜாமத்திற்கு மாரப்பன் வீடு திரும்பினான். வாசற்படி ஏறியும் ஏறாததுமாக மனைவியைப் பார்த்து 'பழனியம்மா எப்படி இருக்குது' என்று தான் கேட்டான். தந்தைப் பாசத்தின் தாங்கவொண்ணாத துயரம் குரலில் இழையோடியது.

மாரக்காள் வேதனையும் பதைப்புமிக்க குரலில் கேட்டாள்.

"இன்னும் வெளியாவலெ மவ பறவாப் பறக்கிறா." அவன் கேட்டது அதுவல்ல. மகள் உயிருக்கு ஆபத்து நேராமல் இருக்க வேண்டும். அதைத்தான் அவன் தெரிந்து கொள்ள விரும்பியது.

அப்படிக்கான உபத்திரவங்கள் ஏதாவது உண்டா என்று அவன் தெரிந்தாக வேண்டும்.

"அம்மாளுக்கு ஆபத்தொண்ணும் இல்லியே?"

அவளால் அதற்குச் சரியான பதில் கூற முடியவில்லை. கண்களில் சிந்திய நீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு "படெச்சவெ அதுந்தலையிலே எப்படி எழுதியிருக் கானோ!" என்றாள்.

துயரம் தாங்காதவனாக நேராக மகள் படுக்கையண்டை சென்று நின்றான். அவள் அலங்கோலமான நிலையில் கிடந்த படி "சாவு ஏ எனக்கு இன்னும் வராமெ இருக்குது. அய்யோ" என்றபடி முனகினாள்.

மாரப்பன், மகளின் படுக்கையண்டை குனிந்து நெற்றி மீது கை வைத்தபடி "எப்படியம்மா இருக்குது" என்றான்.

அவள் தூக்கத்திலிருந்து விழித்தவள் போல நிமிர்ந்து மிரள மிரளத் தந்தையை நோக்கினாள். மண்ணெண்ணெய் விளக்கின் மங்கலான வெளிச்சத்தில் கோரமாகத் தாக்குண்ட விலங்கைப் போலத் திருதிருவென்று விழித்தாள். நம்பிக்கையற்ற பதிலாக அவளின் பார்வை அவனுக்குப் புலப்படுத்தியது.

அந்த நொடியில் அவன் சர்வாங்கமும் நடுங்கிக் குலுங்குவது போல உள்ளுணர்வுகள் சிலிர்த்துப் பொங்கின.

கண்ணில் சுரந்த கண்ணீரை மூக்கில் உறிஞ்சி விழுங்கியவ னாக "சொல்லுமா! ராக்டரெக் கூட்டியாருட்டா?" என்றான்.

அதெல்லாம் ஏழைகளுக்குத் தாக்குப் பிடிக்கமா என்ற உணர்வில் செயல்படுபவள் போல "ராக்டரு என்ன ஈசுவரனா? ஒண்ணும் வாண்டாண்ணா, நா பொளச்சிக்குவே" என்றாள்.

அவள் நா வறண்டிருந்தது. ஓட்டப்பந்தயத்தில் ஈடுபட்ட வளைப் போல் மூச்சிறைக்கப் பேசினாள். நா வறட்சியைக் கூட வேதனையில் அவளால் உணர முடியவில்லை.

தாய் கேட்டாள்:

"தண்ணி குடிக்கறயாம்மா."

அவள் தலையசைத்து விருப்பம் தெரிவித்தாள்.

அடுப்பண்டையிருந்த முத்தம்மாளைக் கூப்பிட்டு வெந்நீர் கொண்டுவருமாறு கூறினாள். வெந்நீர் வந்ததும் ஒவ்வொரு மிடறாக வாயில் ஊற்றினாள். இரண்டு மூன்று மிடறு தொண்டைக்குள் இறங்கியதும் "அய்யோ!" என்று இரண்டு

கைகளையும் கொண்டு அடிவயிற்றை இறுக்கிப் பிடித்தபடி ஒருக்களித்துப் படுத்தாள்.

சுடுரத்தம் பின் பக்கச் சேலையை நனைத்திருந்தது. இதை யறிந்த மாரக்காள் கணவனை வெளியே போகச் சொல்லி விட்டு மகளண்டை குனிந்து "எப்படியிருக்கு?" என்றாள்.

"உதரங்கொட்டுது"

"இன்னமெ எல்லா வெளியாயிடும். கொஞ்ச நேரம் கஷ்டத்தைப் பொறுத்துக்கோ."

சுடுரத்தத்தின் வீச்சம் முகத்தில் கப்பென்று அடித்தது, கட்டியிருந்த சேலையை நனைத்துக் கொண்டு ரத்தம் வெளியில் வந்தது. கட்டிலில் ஜமுக்காளத்தில் ஒழுகித் தேங்கி உறைந்தது.

ரத்தம் வெகுவாக வெளிப்பட்டு விட்டது. அவள் களைப் படைந்தாள். வலியின் உபாதை சற்றுக் குறைந்தது.

ரத்தம் தரையெல்லாம் ஒழுகிவிட்டிருந்தது. நெல்லந் தவிட்டை ரத்தத்தின் மீது தூவி புரட்டித் துடைத்தெடுத்தாள். பழனியம்மாளை மாரக்காளே கைத்தாங்கலாக எடுத்து நிறுத்தி ஆடைகளைக் களைந்தாள். சேலை ரத்தத்தில் நனைந்து தொடையுடன் ஒட்டியிருந்தது.

கசிந்த ரத்தம் கால்வழியாக இறங்கி பாதத்தை நனைத்தது. கால்கள் நடுங்கின.

துணிகளை எல்லாம் களைந்துவிட்டு வெந்நீரில் உடலைக் கழுவிப் படுக்க வைத்தாள். தண்ணியும், ரத்தமுமாக சேறாடிக் கிடந்த பூமியைக் கிழிந்த சாக்குப் பைகளைக் கொண்டு துவட்டி எடுத்தாள். பிறகு சாணத்தை இட்டு வழித்தாள். அப்பவும் ரத்தத்தின் வீச்சம் அடிக்கவே செய்தது.

பழனியம்மாளின் உள்வேதனை சற்று தணிந்திருக்க வேண்டும். பனிக்காலப் பிறை நிலவொளிபோல அவள் முகம் மங்கலாக ஒளிவீசியது. களைப்பால் துவண்டு பிரக்ஞை அற்றவள் போல் கிடந்தாள்.

மாரக்காள் கட்டிலண்டை மண்டியிட்டுக் குனிந்தபடி "இப்ப எப்படியம்மா இருக்குது?" என்றாள்.

வேதனையின் பாற்பட்ட களைப்பின் மிகுதியால் அவளால் சத்தமாகப் பேச முடியவில்லை பாதிவிழி திறந்தபடி "பொம் பளையாப் பொறந்துட்டாலே இப்படியெல்லாம் கஷ்டப்பட ணுமா? ஆம்பிளையோட சரிசமானமா வேலை செய்யணும்,

பிள்ளை பெத்தெடுக்கணும். பிள்ளெ வாண்டான்னா இப்படியும் சாவணும்... அய்... யோ...." ஈனசுரத்தில் கண்ணீர் விட்டாள்.

தாயின் வயிறு பிசைந்தது. தொண்டை கனத்தது. அவளால் அதற்கு உடன் பதில் கூற முடியவில்லை.

"ஒவ்வொரு மனைவிக்கும் இந்தச் சமுதாயத்தில் கணவனிடமிருந்து கிடைக்கும் மகத்தான பரிசு இதுதானோ! இந்த உறவுக்குப் பெயர்தான் காதல் என்பதோ?"

எப்படியிருந்தாலும் பெண் என்பவளும் வாழ்ந்து தீர வேண்டியவள்தானே, அதற்காக வேண்டி கட்டினவனை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் காதலித்தேயாக வேண்டும். அவன் உணர்வுகளுக்கெல்லாம் அவள் தலையாட்டியே தீரவேண்டும்.

அது ஒரு பெண்ணின் மகத்தான கடமை! பதிவிரதாத் தன்மையின் பேரால், பண்பாட்டின் பேரால்!

தாய் சொன்னாள்:

"தங்கம் கனக்குதேன்னு யாரும் மடியிலிருந்து வீசி எறிஞ்சிடறதில்லே. காஞ்சிரட்டே முழங்கு காத்தாட்ட இருக்குன்னு யாரும் மடியிலே கட்டிக்கிறதில்லெ. பொம்பளை தங்கத்துக்கு சமானம். புருஷங்கற வட்டத்துக்குள்ளே பொண்டாட்டி கொடுமப்படுத்தப்படறா. ஆம்பளைங்கற வட்டத்துக்குள்ளே பொம்பளெ பொக்கிஷமா கொண்டாடப் படறா. இதுதாம்மா பொம்பளைக்குக் கெடச்ச வரம்.

அவளுக்கு இப்படியான விஷயங்களையெல்லாம் யார் சொல்லிக் கொடுத்திருப்பார்கள்? காலம் சொல்லும் வாழ்க்கை அனுபவம்தானே ஒவ்வொருவருக்கும் கருத்துச் சுரங்கம். பலருக்குக் கல்வி அனுபவத்தின் மூலம் கிட்டுகிறது. சிலருக்கு வாழ்க்கை நடைமுறையின் இணக்கமற்ற தீட்சணமே புரிய வைத்து விடுகிறது.

பழனியம்மாளுக்குத் தாய் கூறுவதைச் செவிசாய்க்கும் உணர்வேயில்லை. அவள் உடல் உபாதையுடன் களைப்பால் தூக்கத்தில் ஆழ்ந்தாள்.

தாய் புடவையை எடுத்து மகளுக்குப் போர்த்தி விட்டு ஆசுவாசப் பெருமூச்சோடு நகர்ந்தாள்.

## 16

சேறு கலக்கிய வயல்களிலிருந்து மண்ணுள் புளித்த வாடை வீசிக்கொண்டிருந்தது. பயிர் இருக்கும் காலங்களில் பயிரின் தன்மைக்கு ஏற்றாற்போல மண்ணின் வாடை இருக்கும்.

அறுவடை செய்தவுடன் காய்ந்த தாள் கட்டைகளின் தன்மைக்கேற்ப மண் மணமிருக்கும். மண் வெப்பத்தால் பொடிந்து லேசான மழைத்தூறல் விழும்பொழுது அதன் பரிமளம் நெஞ்சையள்ளும். எத்தனைதான் செயற்கை வாசனைகள் தயாரிக்கப்பட்டாலும், பருவகால மண்ணின் மணம் இருக்கிறதே அது அலாதியானதுதான். அதை நுகரும் ஒரு விவசாயிக்குத் தான் எத்தனை எழுச்சி: எத்தனை தெம்பு! அதன் உத்வேகத்தில் அவன் தனக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும் மனச்சோர்வுகளையும் மறந்துவிட முடிகிறது போலும்! அவன் அதன் குழந்தையல்லவா.

வாய்க்காலில் தண்ணீர் வர ஆரம்பித்தவுடன் வயற்பரப்பெங்கும் தாகம் தீர்த்துக்கொண்டு வயல் வரப்புகளில் எல்லாம் பசுமை துளிர்விடத் துவங்கி விட்டது. நீர் புகவும், வயல் வெடிப்புகளில் இருந்து பூச்சி, புழுக்கள் வெளிவர ஆரம்பித்து விட்டன.

பறவைகள் கூட்டங்கூட்டமாக அவற்றைத் தின்ன வயற்பரப் பெங்கும் பறந்து கூச்சலிட்டன.

வயல் வெளியெங்கும் அதிகாலையிலேயே களை கட்டத் துவங்கிவிட்டது. எருமை மாடுகளும், கலப்பைகளும் மனிதர்களுமாகச் சேர்ந்து, ஒரு போர்க்களம் போல் காட்சி அளித்தது.

மாரப்பன் விடியற்காலையிலேயே வயல் மேட்டிற்கு வந்து விட்டான். அவன் வந்த பிறகுதான் வெட்டியான்கள் கொம்பூத ஆரம்பித்தனர்.

இன்னும் பத்து நாட்களுக்குள் வயலின் நடவு முடிந்து விட வேண்டும். அப்பொழுது தான் ஆற்றில் தண்ணீர் நிறுத்துவதற்கு

முன் அறுவடையை முடிக்க முடியும். இன்றேல் பூட்டை பால் பிடிக்கும் தருணத்தில் தண்ணீர் நின்று காய்ந்து போய்விடும்.

வேலைகளெல்லாம் குறித்த காலத்திலேயே நடந்து முடிகின்றன. சிறுவர்களும் தங்கள் வேலையைச் சுணக்கமின்றிச் செய்து முடிக்கின்றனர். இரவுப் பொழுதில் கஞ்சி குடித்து விட்டுச் சிறுவர்கள் மாட்டுப்பட்டியில் வந்து மாட்டுக்கான தீவனத்தை வேளை தவறாமல் போட வேண்டும். அதற்குக் கொட்டை - புண்ணாக்கு முதலியன ஆட்டித் தாளியில் ஊற்ற வேண்டும். வேளாவேளையில் அதைச் செய்தால்தான் மறுநாள் காலையில் அவை கலப்பையை இழுத்துக்கொண்டு வயல் வேலை செய்ய முடியும்.

அதிகாலையிலேயே பண்ணை வேலைக்காரர்கள் பண்ணை வீட்டு வேலைகளைச் செய்யச் சென்று விட்டனர். அது மாமூல் வேலை; வேலைப் பிரிவினைக்கேற்ப அது தினசரி நடந்து முடிய வேண்டும்.

வழக்கம் போலவே பண்ணைவீட்டு வேலைகளை முடித்து விட்டு வேலைக்காரர்கள் வயல் மேட்டுக்கு வந்து விட்டனர். வந்ததும் வராததுமாக இயந்திரகதியில் எருமை மாட்டைப் பிடித்துக் கலப்பையின் நுகத்தடியில் கட்ட ஆரம்பித்தனர்.

அவர்களில் கருவண்டன் என்பவன்தான் முதலில் வயற்பரப்பிற்கு ஓடிவந்தவன். அவன்தான் முதலில் வயற்காட்டில் இறங்கி மாட்டை நுகத்தடியில் கட்ட ஆரம்பித்தவனும். அவனுக்கு 'கஸ் கஸ்' என்று மூச்சை வாங்கியது. அடிக்கொருமுறை வெட்டியானையும், காரியஸ்தனையும் பார்த்துக் கொண்டான். தன் செயலுக்கு 'சபாஷ்' என்று பாராட்டுவது போன்ற அருள் பார்வை கிட்டாதா என்ற நினைப்பில்.

அந்த அடிமைகளின் கூட்டத்திலேயே அவன்தான் விசுவாசத் தொழிலாளி. வெளி வேலைகளில் அவனுக்கு லகுவான வேலையைக் கொடுத்து விடுவார்கள். எதிலும் அவன் முந்தி நிற்க வேண்டும். அதை வைத்துத்தான் பண்ணையாரோ, காரியஸ்தரோ மற்றவர்களைக் கடிந்து மேலும் அதட்டி உழைப்பை வாங்க முடியும்.

பண்ணையாரின் வீட்டு வேலைகள் முடிந்ததும் முடியாதது மாக ஓட்டப்பந்தயத்தில் ஈடுபட்டவனைப் போல வயலுக்கு ஓடி வந்துவிட்டான். வந்து சேர்ந்தவன் சற்றும் களைப்பைப் பாராமல் வந்த வேகத்திலேயே வயலிலும் இறங்கிவிட்டான்.

அவர்களைச் சேர்ந்த ஒருவனே இப்படிச் செய்யும் பொழுது மற்றவர்கள் எப்படிச் சுணங்கி வரமுடியும்? எப்படித் தாமதித்து வயலில் இறங்க முடியும்?

எல்லோரும் வயலில் இறங்கி ஏர் பூட்டினர். வழக்கத்துக்கு முன்னதாக எப்படி ஏரில் பூட்டலாம் என்பதுபோல சில எருமை மாடுகள் வயலுக்குள் இறங்க மறுத்தன. சில நுகத்தடியில் கழுத்தைக் கொடுக்க முரண்டுபிடித்தன. சில தலையை ஆட்டி நுகத்தடியில் கொம்பால் அடித்துக் கொண்டன.

பெண்களும் சோற்றுப்பானைகளுடன் வயற்பரப்பிற்கு வந்து சேர்ந்தனர். வழக்கம்போல பாதுகாப்பிற்காக சோற்றுப் பானைகளைக் குழியில் வைத்து மண்ணைப் போட்டு மூடி வைத்தனர்.

உழவு வேலை முடிந்த வயல்களில் பெண்கள், குப்பை அள்ளிப்போட வேண்டும்.

மாரப்பன் எல்லாக் காரியஸ்தர்களையும் போல் வயல்மேட்டில் நிழலுள்ள பக்கத்தில் சென்று நிற்கமாட்டான். ஒவ்வொருவர் பக்கமும் சென்று எப்படி வேலைகளைச் சுத்தமாகவும், வேகமாகவும் செய்ய வேண்டும் என்று ஆலோசனைகளைக் கூறுவான். மற்ற காரியஸ்தர்களைப் போல அதிகார தோரணையில் நடந்துகொள்ள மாட்டான். பண்ணையின் அடிமைமுறைக் கட்டுப்பாட்டிற்கேற்பக் கொடுக்கப்படும் தண்டனையைக்கூட வெட்டியான்கள் மூலம் நிறைவேற்ற விட்டுவிட்டு ஒதுங்கிக் கொள்வான். அப்படிப்பட்ட தண்டனைகள் கொடுப்பதை அவனால் ஜீரணித்துக் கொள்ள முடிவதில்லை. இருந்தாலும் ஜீவியக் கடமைகளுக்காகத் தனக்கு அதில் விருப்பம் இல்லா விட்டாலும் பிறரைக் கொண்டு நிறைவேற்றி வந்தான். அவனுடைய போக்குகள் பொதுவாக அடிமைகளிடத்தில் மற்ற காரியஸ்தர்களைக் காட்டிலும் அவனுக்கு ஒரு பரிவை ஏற்படுத்தியிருந்தது.

உழவில் முன் ஏரில் போய்க்கொண்டிருந்த குஞ்சாண்டிக்குக் காலில் கட்டை ஏறிவிட்டது. மாட்டை நிறுத்தி விட்டு வசதியாக நின்று கட்டையைப் பிடுங்க முடியாது. அப்படிச் செய்தால் தண்டனைக்காளாக வேண்டிவரும். அதனால் அவன் சில எட்டுகள் ஒற்றைக்காலில் குதித்துச் சென்றபடியே ஒரு கையில் மேழியைப் பிடித்துக்கொண்டு மறு கையால் காலில் ஏறிய கட்டைகளைப் பிடுங்கப் பார்த்தான். சேற்றுக்காட்டில் அம் முயற்சி பலிக்கவில்லை. கால் இடறிச் சேற்றில் விழுந்துவிட்டான்.

அவன் பிடியிலிருந்து மேழி நழுவியது. கலப்பை கீழே சாய்ந்துவிட்டது. மாடு வேகமாகச் சென்று, வேலை முடிந்து நடவிடப்பட்டிருந்த வயலுக்குள் சென்று, நடவை மிதித்துக் கொண்டு கலப்பையை இழுத்தபடி, நடப்பட்டிருந்த நாற்றங் கால்களை மேய ஆரம்பித்தது.

கீழே விழுந்த குஞ்சாண்டி எழுந்து அமர்ந்தபடி தன் பலமுள்ள மட்டும் முயற்சித்து காலில் ஏறிய கட்டையைப் பிடுங்கினான். பிடுங்கப்பட்ட இடத்தில் பீச்சுக்குழாயிலிருந்து தண்ணீர் வெளிப்படுவதுபோல ரத்தம் வீசியடித்தது. அதை அவன் பொருட்படுத்தவில்லை. வேகமாக ஓடிச்சென்று மாட்டைத் திருப்பிவந்து உழவுடன் சேர்த்துக் கொண்டான். மேலெல்லாம் சந்தனம் பூசப்பட்டது போலச் சேறு படிந்திருந் தது. காயத்திலிருந்து கசிந்த ரத்தம் சேற்றைச் சிவப்பாக்கியது. காயத்தின் வாயில் சேற்றுக் குழம்பு புகுந்து உறுத்தியது. ஒவ்வொரு எட்டிலும் சேற்றுக்குள் சிறுவஸ்து காயத்தில் பட்டு உறுத்தும்போதெல்லாம் அவன் துடித்தான். தண்டனைக்குப் பயந்து அவன் செயல்பட்டான். சொந்த வேலையில் யாருக்கும் இப்படியொரு கஷ்டம் ஏற்பட்டிருந்தால் அந்தக்காயம் ஆறும் வரையிலும் சேற்றுக்குள் காலைவிட மாட்டார்கள்.

மாரப்பனும் இதைப் பார்த்தான். இப்படிப்பட்ட அனுபவங் கள் அவனுக்கும் நேர்ந்திருக்கின்றன. ஒருமுறை இப்படி நஞ்சையுழவு தன் வயலில் ஓட்டும் பொழுது ஊஞ்சைக் குச்சி யின் கணுப்பாகம் அவன் காலில் ஏறிவிட்டது. அதைப் பிடுங் கியவன் மேற்கொண்டு ஒரு வைத்தியமும் செய்யாமல் மாலை வரை சேற்றுக்குள்ளேயே இருந்துவிட்டான். அன்று இரவு நரம்பு மண்டலம் பூராவும் கொக்கி போட்டு இழுப்பது போல சுண்டியிழுக்க ஆரம்பித்துவிட்டது. ஆம்பாட்டில் நெறிகட்டிக் கொண்டு விட்டது. பார்த்தவர்கள் எல்லாம் குச்சி ஏறிய உடனே உப்புத்தண்ணியையோ நல்லெண்ணையையோ காய்ச்சிக் காயத்துக்கு விட்டு வேது பிடித்திருக்க வேண்டும் என்றார்கள். அதற்குப் பின்னர் அவன் காயம் ஆறும் வரையில் தண்ணீர் படாமல் பச்சிலை மூலிகைகளை வைத்துக் கட்டுக் கட்டி வந்தான். அந்தப் பயங்கரமான அனுபவம் அவன் நினைவுக்கு வந்தது.

அவன் சொந்த வேலையாக இருந்தால் அவனை வீட்டுக்கு அனுப்பியிருப்பான். அப்படிச் செய்ய அவனுக்கு இப்பொழுது உரிமையில்லையே! அவன் அதைப் பார்த்ததும் பாராதது

போல பெண்கள் நாற்று நடும் பக்கம் சென்று அவர்களுக்கு ஆலோசனை கூறுவது போலக் கூறிக்கொண்டிருந்தான்.

வேறொரு முனையில் நின்றுகொண்டிருந்த வெட்டியான் இதைக்கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். நடவு வயலில் ஏற்பட்ட கொஞ்சம் சேதத்திற்கு அவனுக்குத் தண்டனை கிடைத்தாலும் கிடைக்கக்கூடும். மாரப்பனிடம் அவன் அதை வலியுறுத்தலாம். மாரப்பன் புதிய காரியஸ்தன் அல்லவா?

குஞ்சாண்டி சண்டிச் சண்டி பின்னேரில் சென்று கொண்டிருந்தான். தேள் கடித்து விஷம் ஏறுவதுபோல் அவனுக்கு வலி ஏறிக்கொண்டிருந்தது. அவனையறியாமல் கண்கள் கண்ணீரை உகுத்தன.

வயல் முனையில் சென்று ஏர் திரும்பும்பொழுதெல்லாம் முன் ஏரில் செல்பவர்கள் பின்னால் வந்துகொண்டிருக்கும் குஞ்சாண்டியைப் பார்க்க முடியும். அவன் படும் வேதனையை அறிந்த அவர்களின் உள்ளம் கொதித்தது. 'இதற்கெல்லாம் ஒரு விடிவுகாலமே கிடையாதா?' என்று அவர்கள் இதயம் புலம்பியது. அதற்குமேல் அவர்களால் சிந்திக்க முடியவில்லை. "எல்லாம் படைச்சவன் செயல்" என்று மட்டும் சமாதானம் கூறிக்கொள்ள முடிந்தது.

அவன் கஷ்டத்தைப் பார்த்து ஒரு அனுதாப வார்த்தை கூட யாராலும் கூற முடியவில்லை. அதுவே கூட தண்டனைக்குக் காரணமாகலாம்.

ஆனால் காத்தானால் மட்டும் சும்மா இருக்க முடியவில்லை. குஞ்சாண்டியைப் பார்த்துக் கேட்டான்.

"ஏ மாமா! கட்டை கால்லெ முறிஞ்சுக்கிட்டுதா?"

குஞ்சாண்டிக்கு பதில் கூறப் பயமாயிருந்தது.

தனக்கு அனுதாபமாக ஆட்களைத் திரட்டுகிறான் என்று சந்தேகம் கிளம்பிவிட்டால் இருக்கிற வேதனை போதாதென்று தண்டனையுமல்லவா அனுபவிக்க வேண்டி வரும். கஷ்டப்படுகிறவனின் மீது அனுதாபம் கொள்பவர்களைப் பேச அனுமதித்தால் கடைசியில் அவனுடைய நடவடிக்கைகளுக்கு ஆதரவையும், பலத்தையும் அது திரட்டிவிடும் என்பது எஜமானர்களின் கணிப்பு. அந்தக் கண்ணோட்டத்தில்தான் அப்படிப்பட்ட நேரத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளக் ணகூடாது என்பது. காத்தானுக்கு அது தெரிந்திருந்தாலும்கூட அவனால் பேசாமல் இருக்க முடியவில்லை.

குஞ்சாண்டிக்குப் பயமாயிருந்தாலும் தன் வேதனை நேரத்தில் அது ஒரு ஆறுதலாக இருந்தது. பேசினால் தண்டனை கிடைக்கும் என்று தெரிந்திருந்தும் தன்னிடம் காத்தான் அனுதாப வார்த்தை பேசும் பொழுது தான் பேசாமல் இருப்பது சரியல்ல என்று எண்ணியவனாக "கட்டை முறிஞ்சுதா இருக்கும் போலிருக்குது. வலியைப் பார்த்தா அப்படித்தா தோணுது" என்றான்.

"காரியஸ்தரைக் கேட்டு இன்னைக்கு ஒய்வெடுத்துக்கிட்டு காயத்துக்கு ஏதாவது பண்டுதம் பாக்கறதுதானே?"

வேலைக்காலத்தில் ஒரு அடிமைக்கு அதெல்லாம் நினைத்துப் பார்க்கவும் கூடாத ஒன்று. அவன் சாவதாக இருந்தாலும் வயற்பரப்பிற்குள் வந்து சாக வேண்டும். அவர்களுடைய கஷ்டங்கள், 'வேதனைகள், நோய் அவஸ்தைகள் யாவும் அவர்களின் உணர்வுக்கோ, விருப்புக்கோ உட்பட்ட தல்ல. எஜமானர்களின் விருப்பு வெறுப்புக்கு உட்பட்டவை அவை. அவர்களின் ஜீவிதமே அப்படித்தான் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது. அதை யாராலும் மீற முடியாது. அப்படி மீறினால் அதன் விளைவுகள் எண்ணிப் பார்க்க முடியாததாக அமையும்.

பக்கத்தில் இருக்கும் வெட்டியான் காதிலோ, காரியஸ்தன் காதிலோ பேச்சுச் சத்தம் விழுந்துவிடக் கூடாது என்கிற பயத்தில் மிகத் தணிந்த குரலில் குஞ்சாண்டி கூறினான்.

"இப்பப் பேசறதெக் கேட்டாலே நம்ம ரண்டு பேருக்கும் என்னவெல்லாம் கஷ்டம் வரும்னு சொல்ல முடியாது. அப்படியான உரிமெ ஒரு அடிமைப் பறயனுக்கு நெனச்சும் பார்க்க முடியாது"

காத்தான் அதற்கு ஏதாவது ஒரு பதில் கூறிவிடலாமென்று விரும்பினான். ஆனால் அதற்கான நேரான பதிலைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இளமைத் துடிப்பான, முரட்டுத் தனமான பதில்தான் சிந்தனைக்கு வந்தது. அதை அவன் தடுத்துக் கொண்டுவிட்டான். அதனால் பாதிக்கப்பட்டவனுக்கு எந்தவிதப் பயனும் கிடைத்துவிடப் போவதில்லை.

இதையெல்லாம் வெட்டியான் கூர்ந்து கவனித்துக் கொண்டு தான் இருந்தான். காரியஸ்தன் மனது வைத்தால் தான் தண்டனை கிடைக்கும்.

சேற்றைக் கலக்கிக் கொண்டு செல்லும் உழவு மாடுகளின் காலடிச் சத்தமும், மனிதர்களின் காலடிச் சத்தமும் 'சளப் சளப்'

என்று ஓசையைக் கிளப்பின. இடையில் தடாகத்தில் பீச்சுக் குழலின் நீர் விழுவது போன்ற 'சள சள' என்ற ஓசையும் எழும்பியது. உழவுசாலில் செல்லும் மனிதர்கள் மூத்திரம் விடுவதன் ஓசைதான் அது.

அவர்களுக்கு வேலை நேரத்தில் மூத்திரமோ மலமோ வந்துவிடக்கூடாது. அப்படி வந்துவிட்டால் நடந்தபடியே மாடுகளைப் போல விட்டுச் செல்ல வேண்டும்.

காத்தானுக்குப் புதிதில் கொஞ்ச காலம் இப்படி மூத்திரம் விடுவது கூச்சமாகவே இருந்தது. நாளாவட்டத்தில் அவனும் அதற்குப் பழகிக் கொண்டு விட்டான். இருந்தாலும் அது ஒரு அருவறுப்பூட்டும் காட்டுமிராண்டித்தனம் என்று அவன் மனதுக்குப்பட்டது. வேலை நேரத்தில் ஆண்களுக்கு மட்டுமல்ல. பெண்களுக்கும் அந்த நிபந்தனைதான் என்பதை அறிந்த பொழுது அவன் வெறுப்படையவும் செய்தான்.

எப்படியெல்லாம் ஏழை மக்களின் உணர்வுகள் சுரண்டல் காரர்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன - தங்களின் சுரண்டலுக்கு வேலி போடுவதன் பேரால்!

மேலும் மேலும் சேற்றுச்குழம்பு காயத்தில் பட்டு உறுத்தியது. நகக்கண்ணில் ஊசியால் குத்துவது போன்று வேதனை எழுந்தது. மேழியின் தாங்கலில் கெந்திக் கெந்தி நடந்து சென்றான். மீண்டும் ஒரு குச்சி அதே காயத்திலேயே குத்தி விட்டது. கொதிக்கும் எண்ணெயை உச்சந்தலையில் கொட்டியது போல் வேதனையுணர்வு உச்சந்தலையைச் சுண்டி இழுத்தது. கண்கள் இரண்டும் அடைத்துக் கொண்டன. உருவங்கள் குழம்பிக் கலங்கித் தெரிந்தன. அவனால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை. காலைத் தூக்கியவாறு அப்படியே அமர்ந்து கொண்டான். முன்போல் மேழியை விட்டுவிடவில்லை. ஒரு கையில் கெட்டியாகப் பிடித்தபடி அமர்ந்து கொண்டான்.

பின் ஏர்க்காரர்கள் ஒதுக்கி ஓட்டிச் சென்றார்கள். அவர்களின் அனுதாப உணர்வுகள் சாட்டைவாரினால் கொடூரமாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. தங்கள் அனுதாபத்தைப் பார்வையின் மூலமாகவே தெரிவித்தபடி ஒவ்வொருவராக உழவு சாலில் நடந்து கொண்டிருந்தனர். அவனுக்கு எப்படியாவது உதவ வேண்டுமென்று காத்தானின் மனது துடித்தது. ஏற்கெனவே அவன்பட்ட தண்டனை அவன் உணர்வைச் சுண்டி இழுத்துத் தடுத்தது.

குஞ்சாண்டி ஏரை நிறுத்திவிட்டு அமர்ந்துவிட்டதைக் கண்ட வெட்டியான் ஓடோடி வந்தான். காரியஸ்தனுக்குப் பதிலாக அந்த ஸ்தானத்தில் வெட்டியானே செயல்பட ஆரம்பித்து விட்டான். அப்படித் தன் வேலையை வெட்டியான் எடுத்துக் கொள்வதை மாரப்பன் ஒரு விதத்தில் விரும்பவும் செய்தான். உழைக்கும் மனிதனின் கஷ்டங்கள், உணர்வுகள், மிருகத்தனமாக அடக்கி ஒடுக்கப்படுவதை அவனால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. அதிலிருந்து அவன் விலகி நிற்கவே விரும்பினான்.

குஞ்சாண்டியின் அருகில் வந்து சேர்ந்த வெட்டியான், "ஏண்டா வேலச் சமயத்திலே வேலையைக் கொடுக்கிறே" என்று கேட்டான்.

குஞ்சாண்டி அவனைப் பரிதாபமாக ஏறிட்டு நோக்கினான். வீண் குற்றச்சாட்டின் பேரில் போலீசின் சித்திரவதைக்காளான அப்பாவி ஏழை மனிதனைப் போல அவன் தோற்றமளித்தான். அவன் கண்கள் கண்ணீரை சரம்போல் உகுத்தன. சமுதாயக் கேடுகளை எதிர்த்துப் போராட முடியாத மனிதனின் பலவீனம் போலும் அது! குற்றத்திற்கஞ்சும் ஒவ்வொரு மனிதனும் அதை எதிர்த்துப் போராடும் மனவலிமையில்லாத போது கண்ணீரில்தான் புகலிடம் தேடுவார்கள் போலிருக்கிறது.

வெறுப்புக்கொண்ட - இரக்கமுற்ற தொனியில் குரூரம் தொனிக்க வெட்டியான் மேலும் கேட்டான்:

"இந்தக் கிண்டுதாளமெல்லாம் நம்மகிட்டே பலிக்காது. சாவு வருதுன்னாலும் இந்தச் சேத்துக்குள்ளாவதா கெடந்து சாவணும்."

குஞ்சாண்டி சேற்றிலிருந்து காலை எடுத்துக் காட்டினான். காயத்திலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. லேசாக வீக்கமும் கண்டிருந்தது.

மூக்கில் ஒழுகிய சளியை உறிஞ்சிக்கொண்டு - வடிந்து உதட்டில் சங்கமிக்கும் கண்ணீரை விழுங்கியபடி "காலெ கீழே ஊன முடியலிங்க. இன்னைக்கு மட்டும் கொஞ்சம் வுட்டுப் புடியுங்க. நாளைக்கு வந்துடறே" என்றான்.

இதைப் பார்த்த மாரப்பன் பெண்களின் நடவுப் பகுதியி லிருந்து அவர்களை நோக்கி நடந்துவந்தான். குஞ்சாண்டியின் நிலையைக் கண்டதும் மாரப்பனுக்கே மனம் குழம்பியது. ஒரு வாய் உப்புத்தண்ணிக்கு மனிதன் எப்படியெல்லாம் சித்திர வதைப்பட வேண்டியிருக்கிறது. அந்த ஒன்றுதானே அவனையும் கூட இந்த நிலைக்கு ஊமையாக்கி இருக்கிறது.

மாரப்பனின் சஞ்சலத்தைப் புரிந்துகொண்ட வெட்டியான், “இவனுகளுக்கெல்லாம் இந்தக் காயம் எறும்பு கடிச்ச மாதிரிங்க. கொஞ்சம் கருணை காட்டினாப் போச்சு, எல்லாப் பசங்களும் ஆளுக்கொரு நோவத் தேடிக்கிட்டுப் படுத்துக்குவானுக” என்றான்.

அப்பொழுது பண்ணையார் வயல் மேட்டுப் பக்கம் வரும் ஆரவாரச் சூழ்நிலை கவிந்தது. வெட்டியான் மடமடவென்று குஞ்சாண்டியின் ஏரில் பூட்டப்பட்டிருந்த ஒரு மாட்டை அவிழ்த்துக் கட்டிவிட்டு குஞ்சாண்டியை நுகத்தில் முட்டுக் கொடுக்குமாறு கூறிக் கலப்பையை இழுக்குமாறு பணித்து மேழியை பிடித்துக் கொண்டான். ஒரு பக்கத்து நுகத்தடியில் எருமை மாடு, மறுபக்கம் குஞ்சாண்டி எனும் சபிக்கப்பட்ட அடிமை.

பண்ணையாரின் பார்வையில் வேலைச் சுணக்கம் எதுவும் தென்பட்டு விடக்கூடாது. ஆகவே மாரப்பன் எல்லாப் பகுதிகளிலும் வேலை செய்பவர்களைத் துரிதப்படுத்தினான். ஒவ்வொருவரும் பம்பரம்போல் சுழன்று வேலை செய்தனர்.

பண்ணையார் பாதுகாவலர் சூழ வயல் பக்கம் வந்து சேர்ந்தார். மாரப்பன் பவ்யமாக வணங்கி நின்றனான். வேலையில் குற்றங்குறை கண்டு சுட்டுவாரோ என்று குழம்பினான். நாணயமிக்க ஒரு சிறந்த விவசாயியாக இருந்தவன் அப்படிப் பட்ட குறைப்பாட்டைக் கேட்க நேருவது, மான உணர்ச்சிக்கு ஏற்படும் சாவல்லவா? அப்படி நேர்ந்தால் அந்தக் கணமே உயிரை மாய்த்தாலும் மாய்த்துக் கொள்வான்.

சேற்று வயலில் உழவு மாடுகள் செல்லும் நேர்த்தியைப் பண்ணையார் கண்ணுற்றார். பின்னேரில் ஒரு அடிமை எருமை மாட்டுடன் நுகத்தடியை ஏந்தியடி கெந்திக் கெந்திக் கலப்பையை இழுத்துச் செல்வதைப் பார்த்தார். அவர் மனது நிறைந்தது. மாரப்பனின் மேற்பார்வையில் மிகவும் திருப்திப் பட்டுப் போனார்.

“அடிமைகள் இப்படித்தான் நடத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் வயற்பரப்பில் அமைதி நிலவும்” என்று தனக்குள்ளாக எண்ணியபடி எதிர்த்திசையை நோக்கினார்.

அவர் கண் பார்வையில் ஓர் அழகிய இளம் பெண் உருவம் விழுந்தது. இளமை குன்றாத பருவப்பெண். பார்த்த உடனேயே அவரின் இச்சை மேலோங்கியது. இவ்வளவு தைரியத்தோடு எந்த ஒரு கன்னிப்பெண்ணும் வேலை சம்பந்தமில்லாமல்

அவரின் முன் வந்து வயல்பரப்பில் நின்றது கிடையாது. இதை நினைக்க ஆச்சரியமாகவே இருந்தது.

"யாராக இருக்கும்?"

அவர் சிந்தனை குழம்பியது.

பண்ணையாரின் மௌனமான பார்வையைக் கண்ணுற்ற மாரப்பனும் பின்பக்கம் திரும்பிப் பார்த்தான். அவன் சர்வாங்கமும் குலுங்கியது. ஈரல்குலை பிசைந்தது. கை கால்கள் வெலவெலத்து நடுங்கின. அவன் மகள் முத்தம்மாள் நின்று கொண்டிருந்தாள்.

என்றைக்குமில்லாத அவள் வரவு அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. "வீட்டில் பழனியம்மாளுக்கு."

அவனுக்குத் தலை சுற்றியது. பண்ணையாரின் முன் எதுவும் அசம்பாவிதம் ஏற்பட்டு விடக்கூடாது. பெரு முயற்சி செய்து தன்னைச் சமாளித்துக் கொண்டான்

மாரப்பனைப் பார்த்துப் பண்ணையார் கேட்டார்:

"அந்தப் பொண்ணு யாரு?"

முத்தம்மாளின் வரவை அறிந்து கொள்ள மாரப்பனின் மனம் துடித்தது. வேறு யாருடைய கேள்வியாக இருந்தாலும் அதற்கு செவி மடுக்க மாட்டான். பண்ணையாரல்லவா கேட்கிறார்? அதை எப்படிப் புறக்கணித்து மகளிடம் பேச முடியுமா?

மாரப்பன் சொன்னான்:

"எம் பொண்ணுங்க"

ஆச்சரியம் மேலிட பண்ணையார் கேட்டார்:

"இப்படியொரு பொண்ணு இருக்கிறது இதுநா வரையிலும் தெரியாதே!"

மாரப்பன் மௌனமாக நின்றான்.

"அப்படின்னா நம்ம பங்களாவெ சுத்தப்படுத்திக்கிட்டு இருக்கலாமெ. நீ வரும்போது உன்னோட வந்துட்டு, நீ போகும் போது உன்னோடயே திரும்பிப் போயிடலாம். ஒரு நல்ல சம்பளம் போட்டுக் கொடுக்கலாம்"

மாரப்பன் அதற்கு ஒரு பதிலும் பேசவில்லை. அவன் மனம் ஒரு நிலையில் இல்லை.

கவுண்டர் அவனின் மௌனத்தைப் புரியாதவராக, "ஏ ஒண்ணும் பேசாம இருக்கறே. சம்மதமில்லையா" என்று வெறுப்போடு கேட்டார்.

அவரின் வெறுப்பான ஓசையைக் கேட்ட மாரப்பன் எதற்குப் பதில் சொல்கிறோம் என்று புரியாமலேயே "சரிங்க" என்று பதில் கூறினான்.

பண்ணையார் பரம திருப்திப்பட்டவராக "சரி நாளைக்கு வரச் சொல்லு" என்று கூறி அவன் ஏதோ மகளிடத்தில் அறிய விரும்புகிறான் என்று கருதி இடம் விட்டு நகர்ந்தார்.

பண்ணையார் சற்று நகர்ந்ததும் மாரப்பன், முத்தம்மாள் அண்டை சென்று ஏறிட்டு நோக்கினான். அவள் கண்கள் சிவந்து புருவங்கள் சற்று வீங்கி இருந்தன. மூக்கு நுனி சிவந்திருந்தது. தந்தையைப் பார்த்ததும் அவள் கண்கள் வாழைத்தண்டை வெட்டும் பொழுது நீர் சொட்டுமே அப்படிச் சொட்டின.

"என்னம்மா சேதி"

அவள் வார்த்தைக்கு முன் அழுகைதான் பீறிட்டுக் கிளம்பியது. அவன் ஓரளவுக்கு மகளின் வருகையை உணர்ந்து கொண்டு விட்டான்.

அவள் சொன்னாள்:

"அக்கா..."

அவளால் வார்த்தையை முடிக்க முடியவில்லை. இதயமே உடைந்து நொறுங்கிச் சிதறி வெளிப்படுவதுபோலப் பீறிட்டு வந்த அழுகையைத் தடுத்தபடி தேம்பித் தேம்பி அழுதாள்.

"அய்யோ! தலையிலே கல்லப் போட்டுட்டுப் போயிட்டாளா?"

அடிபட்ட மாட்டைப் போல தொண்டை கிழியக் கத்தினான். சுற்றுச்சூழலை எல்லாம் மறந்துவிட்டான். மயக்கம் வருவது போன்ற ஒரு உணர்வு. அவன் கண் முன்னால் அனைத்தும் சுழன்றது. ரொம்ப நேரம் அவனால் நிற்க முடியவில்லை.

கால்கள் பூமியில் நிலைகொள்ளவில்லை. சோர்ந்து துவண்டன. தடுமாறிச் சாய்ந்தான். அருகில் நின்ற முத்தம்மாள் அவனைத் தாங்கித் தரையில் கிடத்தினாள்.

வாழ்க்கை, ஏழைகளின் மீது எவ்வளவு பெரிய கொடுமைகளைச் சுமத்துகிறது! அவர்கள் எவ்வளவு ஆதரவற்று நிற்கிறார்கள்.

ஒரு சமுதாயத்தின் எழுச்சியே இப்படிப்பட்ட நடைமுறைகளிலிருந்துதான் கருக்கொள்கிறது போலும்!

# 17

அதிகாலை நேரம். முனியன், முத்தான், கருப்பன் முதலானவர்கள் சேரியிலுள்ள குப்பைகளைப் பண்ணையாரின் வயல்களுக்கு அள்ளிக்கொண்டிருந்தனர்.

முனியன் சொன்னான்:

“நம்ம குப்பைக்கு ஏதாவது காசு கொடுத்தா துணி மணியாவது வாங்கிக் கட்டிக்கலாம். சும்மாவெ ஒழச்சுச் சாக வேண்டியிருக்கு.”

அவர்கள் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பு மட்டுமல்ல, அவர்களுடைய பொருளும் ஈவிரக்கமின்றித் தட்டிப் பறிக்கப்படுகிறது. இதுநாள் வரையிலும் அவர்களால் அப்படிப்பட்டதொரு கருத்தையே எண்ணிப் பார்க்க முடியவில்லை. இன்று அப்படியொரு சிந்தனை துளிர்விட ஆரம்பித்திருக்கிறது.

முத்தான் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அண்டையில் யாருக்கும் தான் கூறுவது கேட்டுவிடக் கூடாதே என்று பயப்படுபவன் போல, “குப்பை நம்மதானாலும் குடியிருக்கிற எடம் நம்மதில்லியே” என்றான்.

இதைக் கேட்ட கருப்பன் கோபமாகக் கூறினான்:

“நம்ம பொளைக்கட்டும்னா இங்கே குடிவச்சிருக்கிறாங்க? அவுங்க பொளைக்கறதுக்காவத்தானே?”

முத்தான் அதற்குச் சிரித்தபடி பதில் கூறினான்:

“அவுங்க பொளைக்கத்தா நம்மெ குடிவச்சிருக்கிறாங்க. அப்புறம் நம்ம சவுகரியத்தெ எப்படி அவுங்க நெனச்சுப் பார்க்க முடியும்?”

முனியன் கோபம் கொண்டவனாகக் கூறினான்;

“உம்மாதிரி இப்படிப் பேச நாலாளு இருக்கிறதுனாலதா நம்ம பொழப்பு இப்படியிருக்குது.”

முத்தான், மேலும் வாய்விட்டுச் சிரித்தபடி கூறினான்:

"நா அப்படிச் சொல்லலெ. பண்ணையாருக அப்படிச் சொல்லுவாங்க."

தன்னுள் அடங்கிக் கிடக்கும் ஆத்திரத்தை வெளிப்படுத்தத் தருணம் எதிர்பார்த்திருந்தவன் போல, "குட்டக்குட்டக் குனிஞ்சுக்கிட்டே இருக்கணுமா? புழுக்கூட சில நேரத்திலே தன்னைக் கொல்லறவங்க மீது துள்ளித்தாவி மோதறதுண்டு" என்றான் முனியன்.

அப்பொழுது பண்ணையாரின் கையாள் மொட்டையன் என்பவன் குப்பை வண்டிப்பக்கமாக வந்தான். இதையறிந்த கருப்பன் தங்கள் பேச்சை அவனுக்குத் தெரியாமல் எப்படி நிறுத்துவது என்று சற்றுக் குழம்பியவனாக "வவுத்துக்குள்ளே மலமிருக்கறதாலே வாய்க்கது விருப்பமாயிடுமா. வாயும் மலமும் வேற வேறதா" என்று அவன் உழைப்பில் தங்களைப் போன்ற அடிமைதான் என்றாலும் உணர்வில் தங்களுக்கு விரோதமான வன் என்று கூறாமல் கூறிக் கண்ணைச் சிமிட்டினான்.

இதையறிந்த முனியனும் முத்தானின் பேச்சை மாற்றிக் கொண்டு "உனக்கும் குப்பையள்ளற வேலையா" என்றான்.

"இல்லே கறவ மாடு புடிக்கணும்" என்று சொல்லியபடியே நின்று பேசாமலேயே நடந்தான்.

பண்ணையாரின் தொழுவத்தில் ஊட்டு மறந்த இளங்கன்று களை அடிமைகளிடத்தில் ஒப்படைத்து விடுவார்கள். அதனைக் கண்ணுங் கருத்துமாகப் பேணித் தாய்மையடைந்து கன்று ஈனும் வரையில் பாதுகாக்க வேண்டும். அது வரையிலும் அதைக் காபந்து செய்தவர்களுக்குப் பண்ணையார் ஐந்து ரூபாய் கொடுப்பார்.

ஐந்து வருஷத்துக்கு முன்னால் குஞ்சாண்டி வீட்டிற்கு ஒரு கன்று அனுப்பப்பட்டிருந்தது. அது இன்று தாய்மையடைந்து கன்று ஈன்றிருக்கிறது. அந்தத் தகவலைக் குஞ்சாண்டி பண்ணைக்குத் தெரியப்படுத்தியிருக்கிறான். அதனால்தான் அதைத் தொழுவத்திற்குக் கொண்டு செல்ல மொட்டையன் வந்திருக்கிறான்.

அந்த வீட்டில் இருந்த சிறுவர்களுக்கு இதெல்லாம் தெரியாது. அது தங்கள் மாடென்றும் அது கன்று போட்ட வுடன் பால், தயிர், வெண்ணெய் எல்லாம் சாப்பிடலாம் என்றும் அந்தக் குழந்தைகள் கனவு கண்டுகொண்டிருந்தன. அவர்கள்

அதன் ருசியை இன்னும் ஒருநாள்கூட ருசித்தறியவில்லை. அவர்கள் அதை உபயோகிக்கக் கூடாதென்று எழுதப்படாத பரம்பரைக் கட்டுப்பாடு. பண்ணையாரின் விருப்பமில்லாமல் அவர்களால் அவற்றை உபயோகிப்பதற்கான சந்தர்ப்பங்கள் தான் எது?

இருந்தாலும் குழந்தைகளின் கற்பனைகளல்லவா. குஞ்சாண்டியின் இரண்டு குழந்தைகளும் காலையில் எழுந்தவுடன் அதன் முன்னால் சென்று உட்கார்ந்துகொள்ளும். அது சினைப்பசு என்றும், கன்று போட்டுப் பால் கொடுக்குமென்றும் குஞ்சாண்டி ஒருநாள் குழந்தைகளிடத்தில் கூறியிருந்தான்.

மூத்தவன் பசுவின் தாடையைச் சொறிந்து கொடுத்து விட்டபடி, "இது காளக் கன்னுப்போடும். நா அதுமேலெ ஏறி உக்காந்து ஆகாசம் மொளச்ச சீமைக்குப் போவெ. அதுங் கிட்டெ போயி ஒரு உதை குடுப்பெ, ஆகாசம் பொத்துப் போயிடும். அப்புறம் அதுக்குள்ளே பூந்து அங்கிருந்து தங்கம், வெள்ளியெல்லாம் அள்ளி மூட்டைகட்டி காளை முதுகிலே போட்டுக்கிட்டு வூட்டுக்கு வந்திடுவே ஆகாசம் மின்னறப்போ மஞ்சளாகவும், வெள்ளையாகவும் கோடு தெரியும் பார்த்திருக்கறையா? உள்ளே இருக்கிற தங்கம், வெள்ளியோட நெறமது. அதெ அள்ளிக் கொண்டாந்து வூட்டுலே வெச்சுக் கிட்டு பாலுந் தயிருமாகக் குடிப்பேன்" என்பான்.

சின்னவன் அவனுடைய அசகாய சூரத்தனத்தை எண்ணி மகிழ்ந்தவனாக "அண்ணா! அது நம்ம எல்லோருக்குந் தாண்ணா?" என்று பாசங்குழைய வினவுவான்.

மூத்தவன் அமுத்தலாகக் கண்ணைச் சிமிட்டிக்கொண்டு தலையை ஆட்டிச் சம்மதம் கூறிவிட்டு, "அப்புறம் நம்ம அப்பா அம்மாவெல்லாம் பண்ணையிலே போயிக் கஷ்டப்படாமே இருக்கச் சொல்லிப்புடுவெ" என்பான்.

இப்படி அந்தக் குழந்தைகள் அந்த மாட்டைப் பற்றிக் கனவு கண்டுகொண்டும், அதனிடம் செல்லமாக விளையாடிக் கொண்டுமிருப்பார்கள். அந்தப் பசுமாடு அவனை நினைத்தது போலவே காளைக் கன்று ஈன்றுவிட்டது. அதன் மீது அவன் சவாரி செய்து ஆகாயம் முளைத்த சீமைக்குச் செல்ல வேண்டும். இனி அதற்கான திட்டத்தை அவன் வகுக்கக் கூடும்.

ஆனால், அவன் கனவு பொய்த்துவிடும் போலிருக்கிறது. அவன் மாட்டை யாரோ - அவன் சம்மதமின்றி அபகரித்துச் செல்ல வந்திருக்கிறார்கள். அவன் அதற்கு ஒப்பமாட்டான்.

அவன் தன் தாயிடம் ஓடிச்சென்று தன் மாட்டையும் கன்றையும் யாரோ ஒருவன் கொண்டு செல்ல முயல்வதைக் கூறினான். அவன் அதன் மீது ஏறி வானம் முளைத்த சீமைக்குச் சென்று தங்கக்கட்டி கொண்டுவரப் போவதை ஏனோ அவர்கள் இன்னும் அறிந்திருக்கவில்லை.

தாய் தன் குழந்தையிடம் கூறினாள்:

"அது நம்மளுதல்லடாக் கண்ணு. அது பண்ணையாருக்குச் சொந்தம்"

பையன் கேட்டான்:

"நாம்தானே அதை வளர்த்தினோம். நாந்தானே அதுக்குச் சொறிஞ்சு கொடுத்துச் சாணியெடுத்து தீனி போட்டெ"

"அது பண்ணையோட சொத்து. அது மட்டுமல்ல, நம்ம எல்லாரும்கூடத்தா. நம்மக்கூட அவுங்க வித்துடலாம்."

"அப்படின்னா அதோட கூடவே நம்மளையும் கூட்டிப் போவட்டுமே."

"மாடு பாலு கறக்கற வரைக்கும் பண்ணையூட்டிலேயே தங்கியிருக்கும். நம்ம வாடெ அந்தப் பக்கங்கூட வீசக்கூடாது."

"ஏ, அப்படி?"

"நாம தீண்டாத சாதி"

மொட்டையன் மாட்டையும் கன்றையும் அவிழ்த்துப் பிடித்தான். ஒரு அந்நியன் பின்னால் அது போக விரும்பாதது போல "அம்மா" என்று இதயம் வெடிக்கக் கத்தியது.

"அந்த இரண்டு குழந்தைகளும் வாசலுக்கு ஓடிவந்தன. மாட்டின் கழுத்தைக் கட்டிக்கொண்டு "எங்க மாடு" என்று கத்தின.

மொட்டையன் கையிலிருந்த சாட்டை வாரினால் மாட்டின் மீது வீசினான். மாடு அடி பொறுக்க முடியாமல் துள்ளிக் குதித்தது. கழுத்தைக் கட்டிப் பிடித்திருந்த இரு சிறுவர்களும் தூர வீசியெறியப்பட்டனர்.

அவர்களுக்குக் கிடைக்கும் மரியாதை அவ்வளவுதான்.

கீழே விழுந்து கிடந்த குழந்தைகளைத் தாய் ஓடிச்சென்று வாரியெடுத்து அணைத்தபடி, "அழாதடா கண்ணு. நாம சபிக்கப்பட்டவங்க" என்றாள்.

மாட்டைப் பலவந்தமாக அவன் இழுத்துச் சென்றான். மாடு அவனுடன் செல்ல விரும்பாததைப் போல மெட்டி மெட்டிச் சென்றது.

குழந்தைகள் மாட்டையே நோக்கியபடி தாயின் அணைப்பில் கிடந்து கண்ணீர் உகுத்தனர்.

அந்தக் குழந்தைகளின் கனவுகள் இனி நிறைவேறப் போவதில்லை. அவர்கள் இனி வானம் முளைத்த சீமைக்குச் சென்று வரவும் முடியாது. தங்கள் தகப்பனைப் போல் அவர்களும் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர வேண்டுமோ?

# 18

இரவு நேரம், சேரிப்புறத்தில் இருள் கவிந்திருந்தது. பண்ணை வேலையிலிருந்து திரும்பிய ஆண்கள் உழவில் அடிபட்ட கிழட்டு எருதுகளைப் போல வீட்டில் இருந்த கஞ்சியைக் குடித்துவிட்டு வாசலில் படுத்திருந்தனர். வாசலில் தலைதூக்கி நின்ற ஜல்லிக்கற்களின் உறுத்தல் கூட பகல் முழுதும் வேலை செய்து அலுப்புற்ற உடலை வருத்த முடியவில்லை. அவ்வளவு தூரம் ஸ்மரணையற்ற களைப்பு.

கந்தனும், மாயாண்டியும் அந்த இருளில் ஒரு டார்ச் லைட்டைக் கையில் பிடித்தபடி குஞ்சாண்டியின் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தனர். டார்ச் லைட்டின் ஒளியைக் கண்டவுடன் சேரிப்புறத்தில் இருந்த அனைவருக்கும் களைப்பால் தளர்வுற்றிருந்த நரம்புகள் மேலும் தளர்வுற்றன. சேரிப்புறத்தில் டார்ச் லைட்டின் வெளிச்சம் தெரிகிறதென்றால் பண்ணையின் கைத்தடிகள் அங்குள்ள யாரோ ஒரு அடிமையை இல்லாத காரணத்துக்காகத் தண்டிக்க வருகிறார்கள் என்று அர்த்தம். அல்லது சதையும், வாலிபமும் கவர்ச்சியும் நிறைந்த ஆதரவில்லா ஏழை அடிமைப் பெண்களின் கற்பு சூறையாடப் படப் போகிறது என்று அர்த்தம். இந்தக் கொடுமைக்கு யார் பலியாகப் போகிறோமோ என்று ஒவ்வொருவரும் பதைபதைப் புடன் நடுங்கிக் கொண்டிருப்பார்கள். இந்த வெளிச்சத்தைக் கண்டதும் அவர்களுக்கு அப்படிப்பட்ட பதைபதைப்புத்தான் மேலோங்கியிருந்தது.

கந்தனுக்கும், மாயாண்டிக்கும் இந்த வெளிச்சத்தின் விளைவுகள் எப்படிப்பட்ட உள்ளக் கிளர்ச்சிகளைத் தூண்டி விடும் என்பதும் நன்றாகத் தெரியும். மாயாண்டி குஞ்சாண்டியை நெருங்கியும் நெருங்காததுமாக, "கவலைப்படாதீங்க. ஒறம்பறைதா வந்திருக்கிறோம்" என்றான்.

குஞ்சாண்டிக்கு உடனடியாக அவர்களை யாரென்று புரிந்து கொள்ள முடியவில்லை. சற்றுத் தயங்கி வந்தவர்கள் யாரென்று

சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே "நாந்தா சித்தப்பா சிங்கப்பூர் மாயாண்டி" என்றான்.

குஞ்சாண்டிக்குப் புரிந்துவிட்டது. முதன்முறையாகப் பண்ணையார்களின் வீதியில் ஒரு பறையன் பவனி வந்து விட்டு அவர்களின் தண்டனைக்கு அகப்படாமல் தப்பிப் போய்விட்டவன். இன்று அந்த அடிமைப்பட்ட பறையர்களின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருப்பவன்.

குஞ்சாண்டி சந்தேகமும், பயமும் கலந்த குரலில் கேட்டான்:

"இந்தத் தம்பி யாரு?"

"உங்க காரியஸ்தர் இருக்காரே மாரப்பன், அவரோட மகன் கந்தசாமி."

பெயரைக் கேட்டதும் குஞ்சாண்டி கந்தனை உட்கார வைப்பதற்காக வேண்டி அதையும் இதையும் தேட முற்பட்டான். கந்தனை உட்கார வைப்பதற்காக வசதியாக உயரமான பொருளைத் தேடுவதை உணர்ந்த மாயாண்டி, "ஒண்ணும் சிரமப்பட வேண்டா சித்தப்பா. நாங்க இப்படியே உட்கார்ந்துடறோம்" என்று கூறி இருவரும் வாசல் தரையில் அமர்ந்தனர்.

இதைக்கண்ட குஞ்சாண்டி மாயாண்டியை நோக்கி, "என்ன தம்பி இப்படிப் பண்ணிட்டெ. அவுங்களை இப்படி உட்கார வச்சிட்டியே" என்று கந்தனைக் குறிப்பிட்டுக் குழைந்தான்.

"அவரப்பத்தி வித்தியாசமா நெனைக்காதே அவருக்கு அப்படிப்பட்ட எண்ணமெல்லாங் கெடையாது. சொல்லப் போனா அவரு இப்ப நம்பளோட மாப்பிளே" என்று குறிப்பிட்டு வாய்விட்டுச் சிரித்தான் மாயாண்டி.

அவர்கள் பேச்சு எங்கெங்கோ ஓடியது.

மாயாண்டி குஞ்சாண்டியிடம், தான் இங்கு வந்த விசயம் என்னவென்று ரகஸ்யமாகக் கூறி சேரிக்கு வெளியில் நம்பிக்கையானவர்களை மட்டும் அழைத்து வரும்படி கூறி விட்டுக் கந்தனுடன் புறப்பட்டு விட்டான்.

அவர்களின் வரவையறிந்தவர்கள் குஞ்சாண்டியிடம் வந்து விசாரிக்க ஆரம்பித்தனர். நம்பிக்கையானவர்களுக்கு மட்டும் மாயாண்டி தங்களை வரச்சொன்னதன் விசயத்தைக் கூறிவிட்டு மற்றவர்களிடம் "பொறந்த எடத்தெப் பார்த்துட்டுப் போகணும்னு ஆசெ வந்ததாம். அதுக்காவ வந்துட்டுப் போறான்" என்று சமாதானம் கூறினான் குஞ்சாண்டி.

இருந்தாலும் இந்தச் சமாதானம் அவனுக்குத் திருப்தியளிக்க வில்லை. நாளைக்கு யாராவது இந்த விசயத்தை வெட்டியான் காதிலோ, காரியஸ்தர் காதிலோ போட்டுவிட்டால் என்ன செய்வது என்று பயந்தவனாக "திரியறானுக எல்லாம் தலகொழுத்துப்போயி, இவனுகதா பண்ணையாரை எதுத்து ஜெயிச்சுடப் போறானுகளாம். காலிப்பசங்க" என்று ஒப்புக்குக் கூறிவிட்டு, "பண்ணையாரு சொல்லறதெக் கேட்டாலாவது சாவற வரைக்கும் அர வவுத்துக் கஞ்சியாவதும் கெடைக்கும். சரி! நமக்கெதுக்கு அவ்வளவு பெரிய வம்பு" என்று தூங்கப் போகிறவனைப் போலக் கொட்டாவி விட்டபடி படுத்தான்.

கொஞ்ச நேரம் சென்றது. சேரியே உறக்கத்தில் மூழ்கி விட்டது. நம்பிக்கையானவர்கள் என்று குஞ்சாண்டி கருதிய ஒரு பத்தைம்பது பேர் மாயாண்டி குறிப்பிட்ட ஆற்றோரக் குட்டுக் காட்டிற்கு நடந்து சென்றனர். தனித்தனியாக வயலைக் கண்காணிப்பவர்கள் போல ஒவ்வொருவராக வயல் வரப்பின் மீது நடந்து சென்றனர். நிசப்தம் நிலவிய இரவின் அமைதியை வயல் நீரை விட்டு வரப்பில் படுத்திருந்த தவளைகள், நண்டுகள், நீர்ப்பாம்புகள் முதலியன மனிதர்களின் காலடியோசை கேட்டு வயலுக்குள் குதிக்கும் சப்தம் கேட்டது.

எல்லோரும் குறிப்பிட்ட இடத்தை அடைந்தனர். அங்கு மாயாண்டி, கந்தனுடன் வேறொருவரும் இருந்தார். உடனடி யாக அவரை யாரென்று அந்த லாந்தர் வெளிச்சத்தில் கண்டு கொள்ள முடியவில்லை. சம்பந்தம் என்று பெயரைச் சொல்லும் பொழுதுதான் அவர்கள் அறிந்துகொள்ள முடிந்தது.

கொஞ்ச நேரம் அவர்களின் சுக துக்கங்கள் விசாரிக்கப் பட்டன. கடைசியில் குஞ்சாண்டியின் கால் கட்டுப் பற்றி விசாரிக்கப்பட்டது. அது சம்பந்தமாக அவன் ஏற்ற கஷ்டத்தைக் கூறக் கேட்டதும் சம்பந்தம் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார். "இவ்வளவு சித்ரவதை புரியும் கொடுமைகள் கூட அவர்களை எழுச்சிகொள்ளாமல் இருக்க வைத்திருக்கிறதென்றால் அவர்களை ஸ்தாபன ரீதியாகத் திரட்டிப் போதனை கொடுக்காமல் போனதின் பலவீனமே" என்று உணரும்போது அவர் மேலும் வேதனையுற்றார். "நாம் எவ்வளவு பின்தங்கி யிருக்கிறோம்" என்று அவர் தன்னைத்தானே சற்று சுயவிமர் சனப்படுத்திப் பார்த்துக் கொண்டார்.

சற்று நேரம் அமைதி நிலவியது.

சம்பந்தம் தொண்டையைச் சற்று இருமிச் சரி செய்து கொண்டு, "பண்ணையடிமையான உங்களோட வாழ்க்கை

எவ்வளவு கடுமையானதா இருக்கு. சிங்கத்தின் கூட்டுலெ விட்ட செம்மறியாட்டெ கடிச்சுக் கொதறப்படாறாப்பலெயல்லோ நீங்க சித்திரவதை செய்யப்படறீங்க. உங்களுக்குப் பேச உரிமை யில்லெ. உங்க கொழந்தைக எடத்திலோ மனைவிக எடத்திலோ உங்களால் சொந்தங்கள் கொண்டாட முடியலெ. ஒரு வெள்ள வேட்டியை இடுப்பிலே சுத்தும் உரிமை உங்களுக்கு மறுக்கப் படுது. இதெல்லாம் ஏன்னு நீங்க யோசிச்சீங்களா?'' என்று கேட்டார்.

இப்படியொரு ஆதரவான குரலை முதன்முதலில் கேட்டதும் அவர்களுக்கே அவரை நம்ப முடியவில்லை. தங்களைப் பற்றிப் பேசுவதற்குக்கூட, சிந்திப்பதற்குக்கூட, தங்கள் கஷ்டத்தை உணர்வதற்குக்கூட இப்படிப்பட்ட மனிதர்கள் உலகில் இருக்கிறார்களா என்று ஆச்சரியப்பட்டார்கள்.

இதுநாள் வரையிலும் அவர்கள் உயிரைப் பற்றி கவலைப் பட்டதாகவோ, அனுதாபப்பட்டதாகவோ யாரும் காட்டிக் கொள்ளவில்லை. அவர்கள் மிருகத்தைப்போல் வதைக்கப்பட் டார்கள்; கொல்லப்பட்டார்கள். அதற்குச் சட்டப்பூர்வமான உரிமையுண்டென்று ஒரு காகிதத்தைக் காட்டித் தங்கள் செயலுக்குப் பலமிக்க வேலியும் போட்டுக் கொண்டார்கள். அந்த வேலியண்டைக்கூடச் சென்று பார்க்க யாரும் இதுவரை முனையவில்லை. அப்படியொரு சமூகத்தின் மீது ஒரு தனி மனிதன் கொண்ட ஆத்திரத்தை எதிர்த்துப் பேசும் இந்த மனிதன் எப்படிப்பட்டவராக இருக்கக்கூடும்? இவரால் வேறு ஏதும் ஆபத்து நிகழக்கூடுமோ? அவர்கள் குழம்பினார்கள்.

அக்கூட்டத்தில் இருந்த முனியன் என்பவன் கூறினான்:

"எங்களப் படெச்சவெ அப்படிப் படெச்சிட்டா, எங்க விதி அப்படி."

அவர்கள் எவ்வளவு மூடத்தனத்தில் ஆழ்த்தப்பட்டிருக்கிறார் கள் என்பதை உணர்ந்த சம்பந்தம் கூறினார்:

"நீங்க சொல்ற விதி இருக்கறதாகவே வெச்சுக்குவோம். அதுக்காக உங்க கஷ்டத்தைச் சொன்னாலே சாட்டையடி கொடுக்கறதும், சாணிப்பால் குடிக்க வைக்கறதும் உசிரெக் கொன்னு ஆத்திலெ எறியறதுமாச் செய்ய வேண்டுமா?''

இதைக் கேட்டதும் கருப்பன் என்பவன் சொன்னான்:

"இப்படியான அக்கிரமத்தை முன்செம்மத்திலே நாங்க செய்திருக்கணும்."

"சரி, அப்படியே வச்சுக்குவோம். போன ஜென்மத்திலே எவனெவன் அடாதுடித்தனம், அக்ரமக்கொடுமை செஞ் சானோ அவனெல்லாம் மறுஜென்மத்திலே அதே தண்ட னையெ அடஞ்சு தீரணுங்கிறீங்க. அப்படித்தானே?" என்று கேட்டார்.

அவர்களில் சிலர் அதற்கு 'ஆம்' என்று பதில் கொடுத்தனர். சம்பந்தம் மேலும் தொடர்ந்தார்:

"அப்படிப்பட்ட சித்ரவதை அடுத்தவங்களச் செய்தா அடுத்த ஜென்மத்திலெ உங்களாட்ட அடிமையாப் பொறக்க ணும்னு தெரிந்துமா உங்களெ உங்க பண்ணையாரு இப்படிக் கொடுமப்படுத்துறாரு. பாம்பு கடிக்கும்னு தெரிந்தும் யாராவது பாம்புகிட்டெ கையைக் கொடுப்பாங்களா? அது போகட்டும். உங்களாட்ட விதிப்பயனால் தண்டிக்கப்படறவங்க லச்சக்கணக் கான பேரு. அடுத்த ஜென்மத் தண்டனைக்காவ வெத்தலபாக்கு வாங்கிக்கிட்டு உங்களைக் கொடுமப் படுத்தறவங்க நூற்றுக் கணக்கான பேரு. அப்படின்னா முன் ஜென்மத்திலெ பாவம் செய்தவந்தா அடுத்த ஜென்மத்திலெ தண்டனையடையறவ னாகவும், முன் ஜென்மத்திலெ கஷ்டப்படறவந்தா அடுத்த ஜென்மத்திலெ சொகப்படறவனாகவும் இருந்ததுன்னா இந்தப் பூமியிலே சொகப்படறவனல்லவா அதிகமிருக்கணும்? ஏன்னா எப்பவுமே தண்டனையேத்துக் கஷ்டப்படறவனல்லவா அதிகமிருக்கிறான்."

இதற்கு அவர்களால் பதில் கூற முடியவில்லை. அவர்களுக்கு சொல்லப்பட்டிருப்பதெல்லாம் முன் ஜென்மக் கர்மவினை இது. அதனால்தான் நீ கஷ்டப்படுகிறாய். கஷ்டத்தைப் பொறுமை யாக ஏற்றால்தான் அடுத்த ஜென்மத்தில் புண்ணியம் கிடைக்கும் என்பதுதான். ஆனால் இப்பொழுது கிடைத்திருக்கிற பதில் அதைப் பொய்ப்பிக்கிறதே. அடுத்த ஜென்மத்தில் படாத துன்பமெல்லாம் படவேண்டும் என்று தெரிந்துமா பண்ணையார் போன்றவர்கள் இவ்வளவு கொடுமைகள் புரிகின்றனர். கஷ்டத்தை ஏற்பவர்கள்தான் அடுத்த ஜென்மத்தில் சுகத்தை அடைபவர்கள் என்றால் உலகில் சுகப்படுபவர் அல்லவா அதிகம் இருக்க வேண்டும்? நடைமுறையில் அப்படியா இருக்கிறது? அவர்கள் யோசிக்க வேண்டிய விஷயந்தான். அது.

காத்தான் கேட்டான்:

"அப்படியானா நாங்க கஷ்டப்படறதுக்கான காரணமென்ன?"

அவர்களைச் சிந்திக்க வைப்பதற்கான மனோநிலையில் இந்த விவாதம் கொண்டுவந்துவிட்டது. சம்பந்தம் எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பெரு வெற்றியே!

சம்பந்தம் சொன்னார்:

"உங்க பண்ணையாருக்கு இவ்வளவு பெரிய வயற்பரப்பு எப்படி வந்து சேர்ந்ததுன்னு நீங்க எப்பவாவது எண்ணிப் பார்த்ததுண்டா?"

மீண்டும் காத்தான் கேட்டான்:

"எப்படி வந்தது, சொல்லுங்க."

"ஒரு குடும்பம் வேலை செய்யற எடத்திலே எவ்வளவு வெளையும்?"

"ஆத்துப்பாசனம் உள்ள இடத்திலே அம்பது மூட்டெ வெளையும்."

"அந்த ஒரு குடும்பத்துக்கு எவ்வளவு தானியம் கொடுப்பாங்க?"

"ஒரு நாலு மூட்டை கொடுப்பாங்க."

"மூட்டுவளிச் செலவு என்ன ஆகும்?"

"ஒரு பத்து மூட்டைக்கான காசாகும்."

"அப்படின்னா செலவு போவ முப்பத்தாறு மூட்டை மிச்சம்."

"ஆமா!"

"வூட்டுல உக்காந்திருக்கிற பண்ணையாருக்கு எந்த உழைப்புமில்லாமெ முப்பத்தாறு மூட்டெ கெடைக்குது! இது எப்படிக் கெடைக்குது?"

"அவரு நெலத்திலிருந்து கெடைக்குது."

"மனுசெ அதுலே வேல செய்யாமெ கெடைக்குமா?"

"கெடைக்காது."

"அப்படின்னா மனுசனோட உழைப்பிலேதா இவ்வளவும் கெடைக்குதுன்னு தெரியுது. மனுசனோட உழைப்புக்கு நாலு மூட்டைதான் கெடச்சிருக்குது. உழைக்காமெ நெலத்த மட்டும் கையிலே வச்சிருக்கிற மனுசனுக்கு முப்பத்தாறு மூட்டை கெடச்சிருக்குது. முப்பத்தாறு மூட்டை அடுத்தவனோட உழைப்பிலிருந்து திருடப்பட்டிருக்கிறது. இதுதா கஷ்டத்துக்குக் காரணம்."

புரியாத புதிருக்கு இப்பொழுதுதான் விடை கிடைத்திருக் கிறது. இதுவரையிலும் இந்த உண்மையை யாரும் அவர்க

ளுக்குச் சொல்லித் தரவில்லை. ஆனால் நிலம் அவர்களிடம் இல்லையே! பண்ணையார்களுடைய நிலத்தில் உழைத்தால் தானே ஜீவிக்க முடிகிறது? அதுவும் அவர்கள் அடிமைகள். சுதந்திரமாகப் பேசவோ, சிந்திக்கவோ முடியாது. மனமொப்பி அவர்களால் அடிமைப் பத்திரத்தில் கைரேகை புரட்டப்பட்டிருக்கிறது. முதலில் அதற்கொரு விடிவு வேண்டாமா? அதற்கு என்ன செய்வது?

குழப்பமுற்றவனாகக் குஞ்சாண்டி கேட்டான்:

"நாங்க அடிமகளாச்சே! எங்களாலே என்ன செய்ய முடியும்?"

"நீங்க ஒன்னு சேந்தா எல்லாம் செய்ய முடியும்."

"அதெப்படி முடியும்? அவுங்க கூப்புட்டா போலீசு வரும். அடியாளுக இருக்கறாங்க. அவுங்க நெனச்சா எங்களெ கூண்டோடு அழிச்சிடலாம்."

சம்பந்தத்திற்கு இது ஒரு சிரமமான கேள்விதான். அவ்வளவு சுலபத்தில் விளக்கிக் கூறிவிட முடியாது. இருந்தாலும் விளக்க முயற்சித்தார்.

"நாங்க பண்ணையாரைப் போன்றவர்களெ நாடு பூரா எதுக்கிறோம். எங்களெ அவுங்க அழிச்சுடோணும்னு நெனச்சாலும் அது முடியலெ. காரணம் நாங்க தனியாளல்ல. எங்க பின்னாலே இயக்கமா திரட்டப்பட்டவங்க லட்சம் லட்சமாக இருக்கிறாங்க. ஒரு சின்ன உதாரணம். பண்ணையாருங்க வீதி வழியே போன மாயாண்டியெ அவுங்க மொதல்லெ கொல்ல முயற்சி பண்ணுனாங்க. இப்போ அதை பகிரங்கமாகச் செய்யப் பயப்படறாங்க. இது எதக்காட்டுது? மாயாண்டிக்குப் பின்னாலெ ஒரு பெரிய கூட்டம் இருக்குதங்கறதத்தானெ?"

இதையெல்லாம் கேட்ட காத்தான் துடிதுடிப்போடு கேட்டான்:

"மொதல்ல சாட்டையடியையும், சாணிப்பால் கொடுப்பதையும் நிறுத்துங்க பார்க்கலாம்."

காத்தானின் அறியாமை மிக்க ஆவேசத்தைக் கண்ட சம்பந்தம் வாய்விட்டுச் சிரித்தபடி கூறினார்.

"நீங்க ஒன்று சேர்ந்து எங்க பின்னாலெ புறப்படறப்போ அதை நிறுத்தலாம்"

"உடனே அது கெடச்சிடுமா?"

"கெடைக்காது. இதுக்கு முன்னாடி பட்ட கொடுமைகளை விட அதிகப்படியான கொடுமைகூட அனுபவிக்க வேண்டி

வரும். ஆனா நீங்க தனித்தனியா அனுபவிச்ச கொடுமைகள் உங்களெ கோழையாக்கிடுச்சு. ஒண்ணு சேர்ந்து எங்க பின்னாடி நீங்க வாரதாலே அடையற கொடுமைகள் உங்களெ வீரர்க ளாக்கும். அந்த ஒற்றுமையின் சக்திதா உங்க கஷ்டத்துக்குத் தீர்வு காணும். நாங்க உங்களொட அறியாமையைப் போக்கும் தீச்சுடர். நீங்கதா திரியும் எண்ணெயும்."

அவர்களுக்கது புரியவே செய்தது. அந்தத் தெம்பை எப்படிப் பெறுவது? கடந்தகால அடிமைத்தனத்தில் ஏற்ற கொடுமை களைவிட அதை எதிர்க்க முனையும்பொழுது அதிகம் ஏற்க வேண்டியிருக்கும் என்கிறார்களே! அது எங்ஙனம் சாத்தியம். அதற்கான ஒரு பக்குவத்தை எப்படிப் பெறுவது?

சிலர் கேட்டார்கள்:

"இங்கே இப்படிச் சந்திச்ச சேதி தெரிஞ்சாலே நாளைக்கு என்னெல்லாம் நடக்குமோ?"

சம்பந்தம் அவர்களிடம் எதையோ ஆழ்ந்து கற்றுணர்பவர் போல் நோக்கிவிட்டு, "அடிமப்பட்டுத் தினம் தினம் அடிபட்டுச் சாவதைவிட உரிமைக்காக ஒன்றுபட்டு நின்று வீரத்தோட சாவதிலே தப்பில்லெ" என்றார்.

அவர்கள் சிந்தையில் சிறு தீப்பொறி விழுந்துவிட்டது. காற்று எவ்வளவு வேகமாக அடிக்கிறதோ அவ்வளவு வேகமாக அது பற்றிப் படரும். அது வடவாக்கினி போன்றது. அதை யாராலும் அணைக்க இயலாது.

அவர்கள் பிரிந்து சென்றனர்.

அதில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, மீண்டும் அதிவிரை வில் ஒன்றுபட வேண்டுமென்று மேலோங்கிய உணர்வு பூடகமாக வெளிப்பட்டது.

## 19

கந்தன் ஓர் ஆண் குழந்தைக்குத் தந்தையாகி இருக்கிறான். அந்தப் புதிய ஜீவனை உற்றார் உறவினர் யாரும் வரவேற்கவில்லை. அந்தப் புதிய ஜீவனைப் படைத்த தாயையும் கௌரவிக்கவில்லை.

கந்தனின் திருமணம் முறைப்படியாகத் தன் சாதியிலேயே நடைபெற்றிருக்குமாயின் தாய்மையுற்றதிலிருந்து குழந்தையைப் படைத்துத் தருகிறவரையில் அந்தத் தாய்க்கு எப்படியெல்லாம் கவனிப்புகள் இருந்திருக்கும்! ஆனால் ஒரு சேரிப்பெண்ணைக் கந்தன் திருமணம் செய்து கொண்டதினால் ஒரு தாய்க்குக்கூட எவ்வளவு புறக்கணிப்பு!

ஆனால், ஒரு தாயுள்ளம் கவலைப்பட்டது. மகன் ஒரு பறைச்சியைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டான். அதென்னவோ இன்னும் வெறுப்பையூட்டத்தான் செய்கிறது. இருந்தாலும், வந்தவள் குடும்பச் சந்தையின் விழுதைத் தாங்கியிருக்கிறாள். தோப்புத் தோட்டத்தாரரின் வாரிசெனும் சங்கிலியின் கண்ணியில் மேலும் ஒரு கண்ணி சேர்க்கப்பட்டாய் விட்டது. ஆதிப் பரம்பரையின் ஆவி அவர்களை வாழ்த்தும். அந்தச் சந்ததி அஸ்தமிக்காமல் இருக்கும் அபகேட்டிலிருந்து தப்பித்து விட்டார்கள்.

மருமகள் எந்தச் சாதியில் இருந்து வந்தாலும் தோப்புத் தோட்டத்தாரின் பரம்பரை வாரிசுரிமைக்குப் பெருமை தேடிக் கொடுத்துவிட்டாள். அப்புறம் என்ன? இனி பையனைவிட பேரக் குழந்தைதான் பாதுகாக்கப்பட வேண்டியவன். பரம்பரை வாரிசின் சங்கிலிக் கண்ணிக்கு அடுத்த கண்ணியைச் சேர்க்கும் தகுதி கொண்ட அவனுக்குத்தான் அந்த மகத்தான கடமைப் பொறுப்பு.

மாரக்காள் பேரப்பிள்ளையைப் போய்ப் பார்த்தே தீர வேண்டுமெனப் பிடிவாதமாக நிற்கிறாள். அதற்காக வேண்டி கோமாளிக் கிழவரையும் மகள் முத்தம்மாளைவிட்டு அழைத்து வந்திருக்கிறாள்.

மாரப்பன் கோமாளிக் கிழவரைப் பார்த்துக் கூறினான்:

"ஏங்க மாமா! இவ்வளவு நாளா மகனைப் போயிப் பார்க்கணும்னு கரிச்சுக் கொட்டுனா. இப்போ பேரனப் போயிப் பார்க்கணும்னு வெடிச்சுத் தீக்கறா! இந்த ஒடல்லே நல்ல ரத்தம் ஓடற வரையிலும் அது ஒண்ணுக்கு மட்டும் எசையமாட்டே."

மாரக்காள் கேட்டாள்:

"அவெ பறச்சியெ கண்ணாலம் பண்ணிக்கிட்டதுக்காவத் தானே இப்படி ஒதுக்கி வைக்கிறே. நா ஒண்ணு கேக்கறே. அதுக்கு ஆம்பளத்தனமா பதில் சொல்லணும். சாதிக்கெல்லா நாயம் பேசற கெறசத்தே, உன்னோட தொழும்படி மத்தனத்துக்கு எசமானெ - அவெ கண்ணாலங் கட்டிக்கிட்டு தம் பண்ணைக்கு வர்ற பறச்சிகளெ எல்லாம் சாணி எடுக்க வான்னு சொல்லி பெண்டாளறானே அவனெ ஆரு சாதியெ வுட்டுத் தள்ளுனது? அவனெ ஆரு மதிக்காமெ போனது?"

அவள் கேள்வி கோமாளிக் கிழவரை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இருந்தாலும், அவள் சொல்வதில் மறுக்க முடியாத நியாயம் இருக்கிறது. கவுண்டர்குல சாதித் தலைவனான சேனாபதிக் கவுண்டர் தம் பண்ணைக்குத் திருமணம் முடித்து வரும் அடிமைகளின் மனைவிகளுக்கு முதலிரவுக்குக் கணவன் என்கிற அந்தஸ்தை அதிகார தோரணையோடு எடுத்துக் கொள்கிறார். அதில் அவருக்கு எந்தவிதச் கூச்சநாச்சமும் இல்லை. அது அவருடைய அந்தஸ்துக்குப் பெருமையானதாகக் காட்டப்படுகிறது. ஆனால், கந்தன் அதே சாதிப் பெண்ணை மனைவியாக ஏற்றுக்கொண்டது மட்டும் மன்னிக்க முடியாத குற்றமாம்! என்ன விசித்திரமான நியாயம்!

இந்த முரண்பட்ட நியாயங்கள் கிழவரின் மனதைக் கூட சலனப்படுத்தவே செய்தது. கவுண்டருக்கு நியாயப்படுத்தும் சட்டம் கந்தனுக்கு இல்லையா? கந்தன் ஒரு பறச்சியை மனைவி என்கிற அந்தஸ்துரிமையாக்கிக் கொண்டு விட்டான். கவுண்டர் பல பறச்சிகளைத் தன் உடைமை என்கிற இச்சைக் கருவியாக ஆக்கிக் கொண்டு விட்டார். ஆனால், அந்த இடத்தில் மட்டும் தீண்டாமைத் தடை வாயடைத்து மௌனியாவானேன்.

கிழவர் கூறினார்:

"மாப்பளே! உன்னோட கஷ்டந்தெரியுது. நீ வெறுத்துட்டும் இருந்துடலா. ஆனா தாயோட நெலமே அப்படியில்லெ. எலமற காய்மறையா இருந்துட்டுப் போவட்டும்."

மாரப்பனால் இதை ஜீரணிக்க முடியவில்லை. கவுண்டருக்கு செஞ்சோற்றுக்கடன் கழிப்பதற்காக வேண்டி மட்டும் அவன்

இந்த வைராக்கியத்தோடு இருக்கவில்லை. அவன் சாதி அபிமானம் கொண்டவன். அதைக் காப்பாற்றித் தீருவது என்ற திடசங்கல்பத்தோடு இருக்கிறான்.

மாரப்பன் சொன்னான்:

“கெணத்திலே சாக்கடையாம். குடிக்கிறதுக்கு சுகாதாரமாம்!”

கிழவருக்கு மாரப்பன் கூறுவதன் பொருள் விளங்காமல் இல்லை. “சாக்கடையில் விழுந்தவனுக்கு சுகாதாரம் பார்த்தென்ன செய்வது?” என்றான்.

கிழவர் சொன்னார்:

“கோமான் குடிச்சா கழுத மூத்தரமும் பன்னீர் ரசமாகுமாம்; குண்டிக்குத் துணி இல்லாதவங் குடிச்சா பன்னீர் ரசமும் கழுத மூத்தரமாகுமாம்”

பண்ணையாரின் நடவடிக்கையை ஒப்பிடும்பொழுது மாரப்பனால் அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. அதற்காக வேண்டி தன் மகனின் செயலை மறந்துவிட்டுச் சேர்ந்து விடவும் முடியாது. அது கௌரவப் பிரச்சனை. அதற்காகப் பட்டினி கிடந்து சாகவுந் தயார். அடுத்தவரைப் பற்றிப் பிரச்சனை இல்லை. கண்ணில் தூசு விழுந்தவனுக்குத்தான் உறுத்த வேண்டும். அடுத்தவனுக்கு உறுத்திப் பயனில்லை.

மாரப்பன் சொன்னான்:

“மாமா! உங்களுக்குத் தெரியாதது இல்லே. பெரியவங்க போன பாதையிலே நாமளும் போறதுதா நல்லது. எனக்குச் சக்திக்கு முடியலின்னா எப்படியோ! அது இருக்கிற வரைக்கும் அந்தப் பேச்சுக்கே எடமில்லை. மகந்தா பெரிசுன்னா அவ போயிக்கிட்டும். ஆனா அப்பவே புருஷனுக்குக் கருமாதி செஞ்சதா நெனச்சுக்கட்டும்.”

மாரப்பன் வைராக்கியத்தோடு நிற்கிறான். அவனை மாற்றுவதென்பது அவ்வளவு லேசுப்பட்ட காரியமாகத் தெரியவில்லை. கிழவர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

கட்கத்தில் விரலை விட்டு முகர்ந்து பார்த்தார். அந்த நெடி அவருக்கு என்ன உணர்வுகளைத் தூண்டுகிறதோ? அது அப்பியாசமாகவே அவருக்கு மாறிவிட்டது.

கிழவர் மாரக்காளைத் தனிமையில் அழைத்துச் சென்று அனுதாபம் தொனிக்கக் கூறினார்:

“அம்மா! நீதா தணிஞ்சு போவணும். தண்ணி உறிஞ்சற பூமி சாகுபடிக்குக் கஷ்டம். தடங்கெட்ட மனுசே தணிஞ்சி வர்றது சிரமம்னு சொல்லுவாங்கோ”

அது அவளுக்குத் தெரியாததல்ல. அவனுக்குக் கோபம் வரும் பொழுது அவள் தாழ்ந்து போவாள். பொதுவாக, அவனே அவளுக்கு அதிகம் தாழ்ந்து போயிருக்கிறான். இப்பொழுது நடப்பது அப்படிப்பட்ட விசயமல்ல. அவன், அவளுக்குப் பணியப்போவதில்லை. அது பரம்பரைக்கும் அபகீர்த்தி கொடுக்கக்கூடிய விஷயம்.

அவள் வேதனையும், விரக்தியும் தொனிக்கக் கூறினாள்:

"குடியுங் குடித்தனமுமா வெச்ச பொண்ணெ எழந்துட்டே. பையனையும் உசுரோட எழந்திருந்துட்டெ. ஆனா அதெ என்னாலெ நீடிச்சுத் தாங்கிக்க முடியாது. எந்த நேரத்திலெ புருசனோட பந்தம் அறுந்து போயிடுமோன்னு கவலையாயிருக்குது. அதுக்கு முன்னாடி அந்த மனுசனோட மனசு மாறுதான்னு போராடிப் பாக்கற. அமிர்தமும் அளவுக்கு மிஞ்சுனா வெசமுன்னு சொல்லுவாங்க."

கிழவருக்கு எல்லாம் புரிகிறது. அவள் தாய்மைப் பாசத்தில் உருகுகிறாள். அதன் முன்னால் எந்த வித்தியாசமும் இருந்துவிட முடியாது.

கிழவர் இருவரையும் சமாதானப்படுத்துபவர் போல் கூறினார்:

"எப்படியோ இருக்கிறெ காலத்தெ சந்தோசமாகக் கழிச்சுட்டுப் போங்க."

தான் கூறுவது சம்பிரதாயமான வார்த்தைகள்தான் என்பது கிழவருக்குத் தெரியும். இருந்தாலும் என்ன செய்வது? ஒரு காலத்தில் மனைவியின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு நடந்த மனிதன் இப்படிப் பிசாசுபோல் பேசுகிறானே! அவனே உணராமல், அவனை ஒரு வழிக்குக் கொண்டு வருவது கஷ்டம்.

மாரப்பனும், மாரக்காளும் மௌனமாக இருந்தனர். அவள் கண்கள் கண்ணீரை உகுத்துக் கொண்டிருந்தன.

இப்படிப்பட்ட கட்டங்கள் கிழவரின் மனநிலையை ரொம்பவும் பாதிக்கும். அவர் மேற்கொண்டு எதுவும் பேசாமல் "வாறே மாப்பளே" என்றவராக வெளியே நடந்தார்.

இத்தனை வருட வாழ்வில் அவ்விருவருக்கும் எவ்வளவோ மனத்தாங்கல்கள், பூசல்கள், கௌரவக் குறைச்சலான வார்த்தைத் தடிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், மனமுறிவுக்கான சம்பவங்கள் நிகழ்ந்ததில்லை. ஆனால் இப்பொழுதோ... அவளால் கற்பனை செய்யவும் பயமாக இருந்தது.

# 20

பண்ணையார்கள் வசிக்கும் தெருக்களில் ஒரே பரபரப்பு. அடியாட்கள், பாறைக்கல் வலசில் சிறு சிறு கூட்டமாக நின்று கொண்டும், நடந்து கொண்டுமிருந்தனர்.

பண்ணை முளைத்த வரலாற்றிலிருந்து இதுவரையிலும் அந்தச் செயலுக்கு யாரும் துணியவில்லை. இன்றுதான் அந்தச் செயல் ஆரம்பமாகவிருக்கிறது.

அடிமைப்பட்டுக் கிடந்த பறையன் இன்று ஆண்டைகளின் தெருக்களில் பவனி வரப்போகிறானாம். இதற்கு மாயாண்டி பறையன் தலைமை வகிக்கப் போகிறானாம்.

இதை எங்ஙனம் ஆண்டைகள் சகித்துக் கொண்டிருக்க முடியும்? நூற்றாண்டு காலங்களாக அடங்கி ஒடுங்கிக் கிடந்த ஓர் இனம், இப்படி எழுச்சி பெறுவதற்கு அவர்கள் எங்கிருந்து சக்தி பெற்றார்கள்? தங்கள் செயலுக்குச் சட்டபூர்வமாக பாதுகாப்புத் தேட ஆண்டைகளால் முடியாது. அடிமைகளின், தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்க்கைச் சூழ்நிலை, சட்டப்பூர்வம் அல்லாத ஒன்றுக்குப் பணிந்து நடக்க வேண்டி அவர்களை நிர்ப்பந்தப்படுத்துகிறது.

சுற்றிலும் அடிமைப்படுத்தப்பட்டவர்கள் தங்களின் விடுதலைக்காக வேண்டிப் போராடுகிறார்கள். தங்களை இப்படித்தான் நடத்த வேண்டுமென்று கோஷிக்கிறார்கள். அதை ஒடுக்குவதற்காக வேண்டி ஆண்டைகள் தங்களின் சக்திகளை எல்லாம் திரட்டித் தாக்குகிறார்கள். அரசு அதிகாரம் அவர்களுக்குப் பாதுகாப்புத் தருகிறது. இருந்தாலும், அவ்வளவு சுலபமாக அவற்றை எதிர்கொள்ள முடியவில்லை.

மாயாண்டியின் தலைமையில் ஊர்வலம் வருகிறது. முன் வரிசையில் அவனை ஒட்டிக் கந்தன் இருக்கிறான். ஊர்வலத்தின் பின்னால் சம்பந்தம் இருக்கிறார்.

மாயாண்டியும் கந்தனும் கோஷம் கொடுக்கிறார்கள்.

"சாட்டை அடியை - நிறுத்து!"

"சாணிப்பால் கொடுப்பதை - நிறுத்து!"

அவற்றை ஏற்று அந்த ஊர்வலத்தினர் எதிரொலிக்கிறார்கள்.

முதன்முறையாக அந்த மாளிகைகளின் மூலைமுடுக்குகளில் எல்லாம் சபிக்கப்பட்ட அந்தப் பறையர்களின் குரல் ஒலிகள் ஒலித்து எதிரொலிக்கின்றன.

சாதாரண ஒலியல்ல. என்னை இப்படித்தான் நடத்த வேண்டும் என்பதுபோல் கட்டளை பிறப்பிக்கிறான். அப்படிச் செய்யவில்லை என்றால் அவன் கரங்கள் வயல்களில் இயங்காதாம்.

மீண்டும் குரல் எழும்புகிறது.

"ஈயத்தட்டில் சாப்பிடும் உரிமை வேண்டும்"

"இடுப்பில் வேட்டி கட்டும் உரிமை வேண்டும்"

அவர்கள் கரங்களில் கனத்த தடிக்கம்புகள். அதில் செவ்வொளி வீசிப்பறக்கும் உரிமைச் சின்னம். ஆண்டைகளின் எந்த எதிர்த்தாக்குதலையும் அந்தக் கம்புகளைக் கொண்டே சமாளித்திட முடியும்.

அவர்கள் கண்கள் ரத்தம்போல் சிவந்திருந்தன. முகம் கடுகடுத்திருக்கிறது. நெற்றிப்பொட்டுகள் நெரிபடுகின்றன. வேங்கை மரத்தில் வடித்தெடுத்த சிற்பம்போல கறுத்துத் திரண்ட அவர்களின் உடல்கள் திணவெடுத்துத் துடிக்கின்றன.

சேனாபதிக் கவுண்டர், மாளிகையின் முற்றத்தில் அடியாட்கள், காரியஸ்தர்கள் புடைசூழ துப்பாக்கியைக் கையில் பிடித்தவாறு அமர்ந்திருக்கிறார். வீதியெங்கனும் வரிசையில் நிற்கும் அடியாட்கள் கவுண்டரின் உத்தரவை எதிர்நோக்கி நிற்கிறார்கள்.

கூட்டத்தையும் அதில் எழும் ஆவேசத்தையும் நோக்குகையில் அவரால் அப்படியொரு உத்தரவைக் கூற முடியவில்லை. அப்படியொரு உத்தரவை அவர் மேற்கொண்டால் அதன் விபரீத விளைவுகள் பயங்கரமாகத்தான் இருக்கும்.

தங்கள் பண்ணையடிமைகள் இந்த ஊர்வலத்தில் இல்லையென்று காரியஸ்தர்கள் கூறுகிறார்கள். எல்லோரும் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்த பள்ளர்களும், பறையர்களுமான அடிமைகள். இருந்தாலும், சம்பிரதாய நடைமுறையை மீறி பள்ளர்களும், பறையர்களும் சவால் விடுகிறார்கள். இந்த

மனோதிடம் தமது பண்ணையடிமைகளிடத்திலும் முளை விடாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள்.

மீண்டும் கோஷம் எழுகிறது:

"வாடி என்றால் வாடா என்போம்!"

"அடித்தால் நாங்களும் திருப்பி அடிப்போம்!"

இதைக் கேட்டதும் கவுண்டர் முகம் சிவக்கிறது. புருவம் நெரிபடுகிறது. மீசை துடிக்கிறது. துப்பாக்கி விசையை விரல்கள் தடவுகின்றன. தன்னையும் மீறி விபரீதங்கள் நடந்து விடுமோ என்று துப்பாக்கியைப் பக்கத்தில் இருப்பவனிடம் ஒப்படைக்கிறார்.

அடிமைப் பறையர்களும், பள்ளர்களும் மட்டும் அந்த ஊர்வலத்தில் இல்லை; மேல் ஜாதிக்காரர்களும் இருக்கிறார்கள். காரியஸ்தன் மாரப்பன் மகன் கந்தனும் இருக்கிறான்.

சம்பிரதாய நடைமுறைகளை அடிமைகளாக மீறவில்லை. மேல்ஜாதிக்காரர்கள் அரசியல் அடிப்படையில் இவர்களைத் திரட்டி நடைமுறைகளை உடைக்கப் பார்க்கிறார்கள். இதை நேரடியாக எதிர்கொள்வது பைத்தியக்காரத்தனம்.

அடிமைகளின் தெருப் பிரவேசத்தை சுலபமாக முறியடித்திட முடியும் என்று தாம் போட்டிருந்த திட்டம் சாத்தியப் படாது என்பதைக் கவுண்டர் உணர்ந்தார். ஊர்வலத்தினருடன் மோதுவது தற்கொலைக்கு ஒப்பானது என்று சிந்தித்தார்.

கவுண்டர், மாரப்பனைப் பார்த்துக் கேட்டார்.

"மாரப்பா! உம்மவஞ் செய்யற வேலெ இந்த அடிமைகளுக்கு எவ்வளவு தெம்பக் கொடுத்திருக்கிறது பாத்தியா! அடிச்சா திருப்பி அடிப்பானுகளாம்!"

ரத்தத்துடன் ஊறி வளர்ந்து வந்துள்ள ஜாதித்துவம் மாரப்பனின் ரத்தத்தையும் உஷ்ணப்படுத்தியது. அடிமைப் பறையன் திருப்பியடிப்பானாமே, வாடி என்றால் வாடா என்பார்களாமே! பூமியில் கட்டுப்பாடு என்பது எப்படி யிருக்கும்? நெறிமுறை என்பது எப்படி கட்டிக் காக்கப்படும்? எந்த விலை கொடுத்தாலும் இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

சாதி வெறியின் விஷம் மாரப்பன் தலையில் புகுந்து கிறுகிறுக்க வைத்தது. இதுநாள் வரையிலும் தன் கீழ் வேலை

செய்யும் அடிமைகளுக்குக் கருணை காட்டுவது போல் நடந்து கொண்டது முட்டாள்தனம் என்று உறுத்தியது.

மாரப்பன் தன்னை மறந்த நிலையில் 'டேய்! நாதேரி பெத்த மவனெ! எங்கய்யாலெ நீ சாகப் போறே' என்று கூச்சல் போட்டவனாக, கவுண்டர் வீட்டு முற்றத்திலிருந்து ஊர்வ லத்தை நோக்கி ஓடினான். அவன் செயலைப் புரிந்துகொண்ட மற்றவர்கள் அவனைத் தடுத்து நிறுத்தினர்.

கவுண்டருக்கு மாரப்பன் செயல் பரம திருப்தியளித்தது. கவுண்டரின் எதிர்காலத் திட்டங்களுக்கு எந்த வழியிலும் அவன் பயன்படுவான்.

கவுண்டர் கூறினார்:

"மாரப்பா மூடனுக்கு முன்னாடி வாற காரியம் தெரியாதாம். முரடனுக்கு மோசமான விளைவுகள் புரியாதாம். செய்யற காரியத்தெ விவேகத்தோடு செய்யணும். காலம் வரும்போது சொல்றேன்; பொறுத்திரு."

மீண்டும் கோஷங்கள் இடிமுழக்கம் போல் எழுந்தன. ஊர்வல வரிசை கவுண்டரின் வீட்டைக் கடக்கும்போது ஒவ்வொருவரும் கவுண்டரை நேருக்கு நேர் ஏறிட்டு நோக்கிய படி உரத்து கோஷித்தார்கள். தலைமுறை தலைமுறையாக அமுத்தப்பட்டுக் கிடந்த உணர்வுகள் கோபாவேசமாக வார்த்தை ரவைகளை வாரியடித்தன. முறையாகக் கட்டுப்படுத்தி கோஷம் கொடுக்காமல் விட்டிருப்பின் அவர்களின் உணர்வுத் தாகம் ஆவேச கதியில் பொங்கிப் பிரவகித்திருக்கும்.

"அடிமைப்பணி செய்யோம்!"

"ஆடுமாடுகள் போல் அடங்கோம்!"

செவிப்பறையைத் தாக்கி உடைப்பது போல் சொற்கள் கவுண்டரின் செவிகளில் மோதுகின்றன. அவரின் அதிகாரத் திற்கு முதல் தடவையாக அடிமைப் பறையர்களின் மத்தியி லிருந்து சவால் கிளம்புகிறது. நேரடியாக எதிர்கொள்ளத் துணிவில்லை.

ஊர்வலம், வீராவேசமாகக் கோஷித்துக் கொண்டு ஊரைத் தாண்டி சேரிக்குள் நுழைந்து செல்கிறது. அதே முத்ரா வாக்கியங்கள்.

காத்தான், மாடன், முனியன், முத்தான் முதலானோர் குடிசையண்டை நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். வீடு முளைத்த காலத்தில் இருந்து பண்ணையார் தெரு வழியாக

அடிமைப் பறையனும், பள்ளனும் நடமாட முடியாமல் இருந்து வந்தார்கள். அப்படிச் சென்றவன் உயிர்ப்பலியாக்கப்பட்டான். இன்று அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர்கள் இயக்கமாக ஒன்றுபட்டு நிற்கிறார்கள். ஒற்றைக் குச்சியை சுலபமாக ஒடிக்க முடியும்; சுமைக்குச்சியை தொட்டசைக்கவும் முடியாது.

அவர்கள் இதயத்திலும் நம்பிக்கைக் கதிர்கள் ஒளிவிட ஆரம்பித்தன.

காத்தான் மாடனின் கூறினான்:

"இன்னமெ நம்மெ எந்தச் சக்தியும் அடிமைப்படுத்தி வச்சிருக்க முடியாது."

முனியன் சொன்னான்:

"யானை தன் பலத்தை உணர்ந்தாய் விட்டது."

## 21

கவுண்டரின் பிரத்தியேக பங்களாவில் வெட்டியான்கள், காரியஸ்தர்கள், அடியாட்கள் முதலானோர் கூடியிருந்தனர்.

முதல்நாள் நடந்த சம்பவம் பண்ணையார்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது. பண்ணையார்களின் ஆதிக்கத்திற்கு விடும் சவாலாக அது உருவெடுத்திருந்தது.

ஒடுக்கப்பட்டுக் கிடந்தவன் உரிமைக்குரல் எழுப்புகிறான். தனித்தனியாக இல்லை - ஒரு சேர முழங்குகிறான்.

ஓர் அடிமையை எப்படி அடக்க வேண்டுமோ அது பண்ணையார்களுக்குத் தெரியும். தனித்தனியாகவோ, கூட்டமாகவோ அடிமைகளை அடக்கி ஒடுக்கிய காலங்களும் உண்டு. செம்மறியாடுகள் போலக் கழுத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு நிற்பர். இன்று அப்படியில்லையே!

கவுண்டர் தம் பரிவாரங்களைப் பார்த்துக் கூறினார்:

"அடிமைகளிடத்திலே இனிமெ பழைய அமைதியைக் காண முடியாது. சர்க்காரும் நம்ம பழைய சம்பிரதாய முறைகளுக்கு அவ்வளவாகச் செவிசாய்க்காது. ஏன்னா, இது சொதந்திர நாடல்லவா? அவனோட ஓட்டு ஆளரவங்களுக்குத் தேவைப் படுது.... இந்த நெலையிலே நம்ம பண்ணையிலெ அமைதியைப் பாதுகாக்கணும். வெளியிலே வீசற காத்து இங்கே நொளையாதுன்னு எப்படிச் சொல்ல முடியும்?"

கூட்டத்தில் இருந்த வெள்ளையன் என்கிற காரியஸ்தன் ஒருவன் கேட்டான்:

"அவங்கிட்டே ஓட்டு இருக்கிறதுக்காவ அவெ எனக்கு நெலமில்லெ. பண்ணையாருகிட்டெ இருக்கிற நெலத்தெ புடுங்கிக் குடுங்கோன்னா, சர்க்காரு புடுங்கிக் கொடுத்துடுமா?"

கவுண்டர் நெற்றிப்பொட்டைத் தேய்த்து முகஞ்சுளித்தவராகக் கூறினார்:

"அப்படி அர்த்தமல்ல. கடிக்க வர்ற நாய்க்கு கருப்பட்டித் துண்டெ வீசுற மாதிரி. அப்புறம் அது பகையுணர்ச்சியோட கொலைக்காது. அப்படித்தா அதெ சர்க்கார் அணுகுற மொறையும்."

கூட்டத்தில் இருந்த வீரன் என்கிற அடியாள் கூறினான்:

"நம்ம பண்ணையிலெ அமலிலிருக்கிற பழைய நடைமொறைகளை எவெ மொத மொத மீறறான்னு தெரியுதோ, அப்பவெ அவனெ காலி பண்ணிட்டாப் போவுதுங்க."

இது ஒன்றும் புதிய யோசனையில்லை. பரம்பரையாக நடந்து வரக்கூடியதே. விழிப்படையாத அடிமைகளிடத்தில் இது பலனளிக்கும். விழிப்படைந்தவன் எதற்கும் தயாராவான். அப்படிப்பட்டவர்கள் சில இடங்களில் கூட்டமாகத் திரண்டு பண்ணையார்களைக் கொலை செய்வதும் அவர்களுடைய மாளிகைகளைக் கொளுத்துவதும் நிதர்சனமாகிய விஷயங்கள். அந்த அளவுக்குச் செல்ல, கவுண்டர் யோசனை செய்தார்.

செல்லன் என்கிற காரியஸ்தன் கூறினான்:

"ஏதாவது நம்ம அடிமைகளிடத்திலெ மாற்றந் தெரியுதுன்னு தெரிஞ்ச ஒடனெ அவங்க குடிசைகளெ கூண்டோட கொளுத்திட்டு வேறு பண்ணைகளுக்குத் தனித்தனியா மாத்திட்டால் போவுதுங்க."

இந்த யோசனை எல்லோருடைய யோசனைகளையும் விடச் சிறந்ததாகப்பட்டது. இருந்தாலும் அதை உடனடியாக அவர் ஆமோதிக்கவில்லை.

—

## 22

**ப**ண்ணையார்களின் தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்களின் பிரவேசம் கவுண்டரின் பண்ணையடிமைகளான வாலிபர்களிடத்தில் ஒரு சலனத்தை ஏற்படுத்திவிட்டிருந்தது.

பண்ணையார்களின் தெருக்களில் நாய்கள் செல்லலாம், பன்றிகள் நடமாடலாம், கழுதைகள் குலாவலாம். ஆனால் அவர்களின் சுகபோகங்களுக்கெல்லாம் ஆதார சுருதியாக விளங்கும் அந்தத் தாழ்த்தப்பட்ட மனிதர்களின் காலடி மட்டும் பதிந்து விடக்கூடாது!

இதெல்லாம் கடவுளின் பேரால்! மனுதர்மத்தின் பேரால்!

இதையெல்லாம் அந்த அடிமைகள் இது நாள் வரையிலும் சிந்தித்துப் பார்க்கவில்லை. அவர்களின் சிந்தனைப் பெட்டகம் இருள் மண்டியே கிடந்தது. அதன் அகல்விளக்கு எஜமானர்களின் வலிய கரங்களால் மறைக்கப்பட்டிருந்தது.

அந்த அகல்விளக்கை அவர்களுக்கெனச் சிலர் உயர்த்திவிட்டனர். அதன் வெளிச்சம் அவர்களின் இருள் மண்டிய சிந்தனைப் பெட்டகத்தில் அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நுழையவே செய்துவிட்டது. அந்த ஒளியின் காட்சி அவர்களுக்கு எதை எதையோ உணர்த்தியது. சிலரை சினங் கொள்ள வைத்தது.

இப்பொழுது அந்த அடிமைகள் மத்தியில் ஏதேதோ விவாதங்கள் கிளம்ப ஆரம்பித்துவிட்டன. பயத்தோடும், முணுமுணுப்போடும் கூடிய விவாதங்கள்.

ஒருநாள் இரவில் ஆற்றங்கரையோரம் உள்ள குட்டிக்காட்டில் முக்கியமானவர்கள் கூடி - ஒவ்வொருவரும் இரவுக் காவல் சென்று வரவேண்டும். அந்தச் சாக்கில் அவர்கள் ஒன்றுகூடுவதை யாரும் சந்தேகிக்க முடியாது - அவர்களுக்குள்ளேயே யாராவது சொன்னால்தான். அதனால்தான் அவர்களும் தங்களுக்குள் நம்பிக்கையானவர்களாகப் பார்த்துக் கூடுகிறார்கள்.

இதற்கு முன்னால் அவர்களைத் திரட்டுவதற்கு - சிந்தனையைத் தூண்டுவதற்கு ஒருவர் தேவைப்பட்டது. இப்பொழுது அப்படி இல்லை. பண்ணையாருக்கு விரோதமாகச் சிந்திப்பதில் தவறில்லை என்பதை மட்டும் அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குமேல் அவர்களுக்குத் தெரியாது.

அந்த ஒரு சிந்தனையே அவர்களை எப்படி எல்லாம் அலைக்கழிக்கிறது. காதில் எறும்பு புகுந்து கொண்டு குடைவதைப் போலல்லவா அவர்கள் உணர்வு துடிக்கிறது. அதை இனி சமாதானப்படுத்துவது சிரமம்.

குஞ்சாண்டி அங்கிருந்தவர்களின் மத்தியில் கேட்டான்:

"நம்மப்போல அடிமப் பறையன்களும், பள்ளன்களும் தானே பண்ணையாருங்க வீதியிலே நடந்து போனது?"

அவர்களெல்லாம் இவர்களுக்குத் தெரிந்த அடிமைகள்தான். அடிமைகளானாலும் அடிமைத்தனத்தின் கொடுமைகளை எதிர்த்து ஒன்றுசேர்ந்து விட்டவர்கள். அதை எதிர்ப்பது எப்படி என்பது பற்றிக் கேட்டறிந்து கொண்டவர்கள். அதனால் அவர்கள் அடிமைகளானாலும் ஒன்றுபடுகிறார்கள்.

காத்தான் சொன்னான்:

"அதிலென்ன சந்தேகம்?"

"அவ ஒடம்பிலெ ஓடற ரத்தந்தானே நம்ம ஒடம்புலேயும் ஓடறது"

"ஆமா!"

"பண்ணையாரு வீதியிலே அவெதா நிமுந்து நடந்து போனானே அது எப்படி? அதுக்கு மேலேயும் போயி அடிச்சா திருப்பி அடிப்போம்னானே அந்தத் துணிச்சல் எப்படி வந்தது?"

"அவனெல்லாம் ஒண்ணா சேந்துட்டதாலே! அதுக்கு மேலே என்ன செய்றதுன்னு அவன் பலத்தெப் புரிஞ்சு கிட்டதாலே!"

"நம்மளாலே அது ஏ முடியலெ?"

"நமக்கு அதப்பத்திய வெளிச்சங் கெடைக்கல. இருட்டிலெ வாழ்ந்துட்டோம்."

"இப்போ?..."

"வெளிச்சங் கெடச்சிருக்கு. சரியான தடத்தெத் தேடணும்."

"அதுக்கான மனத் தெடம் இருக்கா?"

"ஒருத்தருக்கிருந்து பயனில்லே. இங்கிருக்கிறவங்க எல்லாருக்கும் ஏற்படணும்."

"மொதல்ல நீயதுக்குத் தயாரா?"

"நாந் தயார்!"

சொட்டு வைத்தாற் போன்ற இந்தப் பேச்சு அங்கிருந்தவர்களில் பலரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கவுண்டரை எதிர்த்து ஒன்றுபடுவதா? கவுண்டர் மிக வலியவர். போலீசிலிருந்து மந்திரிமார்கள் வரையில் நட்பு, சொந்தம் உண்டு. அவர் சமூகத்துக்கு ராஜா போல. பட்டக்காரத்தனம் ஏற்றவர். கசுமாலங்கள் அவரை எதிர்க்க முடியுமா?

முத்தன் என்பவன் கேட்டான்.

"எருக்கங் குச்சீ இரும்புத் தூணோடு மோத முடியுமா?"

காத்தான் சொன்னான்:

"எருக்கங் குச்சியெல்லாம் ஒரு சேர தீப்பிடிக்க எரிஞ்சா இரும்புகூட எண்ணெயா உருகி ஓடும்!"

முத்தப்பன் மீண்டும் கூறினான்:

"அதெல்லாம் நடக்கிற காரியமில்லெ"

ஒரு நாளில், ஒரு நிகழ்ச்சியால் எல்லோரையும் மாற்றிவிடமுடியுமா? உழைப்பவர் வாழ்க்கை அவ்வளவு தெளிவானதல்ல. சிக்கல் நிறைந்தது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் சேர்ந்து சிருஷ்டித்த மூடத்தனத்தின் சிருஷ்டி அது. சிந்தனையற்ற செக்குமாட்டின் தடித்த தன்மையது. அவர்கள் மட்டுமே அதற்கு விதிவிலக்காக இருக்க முடியுமா?

கருப்பன் அவனைப் பின்பற்றிக் கூறுபவன் போலக் கூறினான்:

"நெஞ்சிலே சீக்கட்டாததுதாம் பாக்கி. அதுக்குத்தா இப்பொ இந்த வேலைக்கெல்லாம் தலப்படறீங்க!"

காத்தான் கோபங் கொண்டவனாகக் கூறினான்.

"இப்படியே இருந்தா நெஞ்சுக்கு மட்டுமில்லே. மூளைக்கும் சீக்கட்டும்."

முத்தன் மீண்டும் கேட்டான்.

"அது சரிதா, உன்னப் போலவே எல்லாரும் சிந்திக்கணுமே!"

காத்தான் நையாண்டி தொனிக்கக் கூறினான்:

"முன்னாடி போறவெ முக்காடு போட்டான்னா, பின்னாடி போறவெ மொகத்தையே மூடிக்குவானாம். நாம் ஒரு பத்து பேரு, அதுக்குன்னு தயாராவணும்."

கருப்பன் இடையிட்டுக் கேட்டான்:

"அதெப்படி முடியும்?"

காத்தான் கூறினான்:

"ஒரு அடிமை ஆண்டையப் பாத்து 'நீ அடிச்சா நா திருப்பி அடிப்பே'ன்னு எப்பச் சொல்ல ஆரம்பிச்சானோ அப்பவெ அது முடிஞ்சுப் போச்சு."

# 23

அறுவடைக்காலம், வயற்பரப்பு களைகட்டி விளங்கியது. காக்காய் குருவிகளைப் போல ஆண்களும், பெண்களும் வயற்பரப்பில் சுழன்று சுழன்று வேலை செய்தார்கள்.

மாரப்பன் வயற் பரப்பெல்லாம் ஓடிச் சுற்றினான். வேகமாக நெற்றாளை அறுக்க வேண்டும். சாய்ந்து கிடக்கும் தாளைப் பதமாக எடுத்து அரி சேர்க்க வேண்டும். நெல்மணிகள் சிதறி விடக் கூடாது.

அறுவடையில் ஈடுபட்டிருந்த ஒருவனைப் பார்த்து மாரப்பன் கூறினான்.

"உம் மனையிலெ நெல்லு நெறையா செதறிக் கெடக்குது. இன்னமே அப்படிக் கெடந்தா சாட்டையடிதா கெடைக்கும்"

மாரப்பன் பழைய மாரப்பன் அல்ல. வீதிப்பிரவேசத்தின் போது அந்தத் தாழ்த்தப்பட்ட அடிமைகள் முழங்கிய முத்தரா வாக்கியங்கள் அவன் அவர்கள் மீது கொண்டிருந்த பச்சாதாப உணர்வை அழிக்கச் செய்துவிட்டது. அடித்தால் திருப்பி அடிப்பார்களாம். வாடி என்றால் வாடா என்பார்களாம்!

அவன் உள்ளில் உறைந்து கிடந்த சாதிய உணர்வு நுரை கக்கி எழுந்தது. 'இந்தப் பறப் பயல்களுக்கு இப்பொழுதிருக்கும் தண்டனை முறைகள் போதாது. மாடுகளைப் போல் மூக்கணாங் கயிறு போட்டு அடக்க வேண்டும்' என்று மனதிற்குள் உறுமிக் கொண்டாள்.

சாதிய உணர்வுகளுக்கு முன்னால் சுரண்டல்காரர்களின் கொடுமையெல்லாம் எவ்வளவு லகுவில் பின்னுக்குத் தள்ளப் பட்டு முக்கியத்துவம் இழந்து போய்விடுகின்றன. மனித மனத்தில் அதற்கிருக்கும் செல்வாக்குதான் என்னே!

மாரப்பன் பம்பரம் போல் சுற்றிக் கண்காணித்தான். உச்சி வெயில், வியர்வை முத்து முத்தாகத் துளிர்த்தது. தரைப்பகுதி வறுத்தெடுத்த மணல் போல் கொதிப்பேறுகிறது.

கவுண்டர் குடையைப் பிடித்தவாறு அடியாட்கள் புடைசூழ வயற்பரப்பின் எல்லா இடங்களையும் சுற்றி வருகிறார். அண்டை அயல் பண்ணையடிமைகளிடம் மேலோங்கி வரும் சுதந்திர உணர்வு தம் அடிமைகளிடத்திலும் தலைதூக்குகின்றனவா என்று அறிய முயல்கிறார். அதற்காக வேண்டியே அவர் வயல் வயலாகக் கண்காணிக்கிறார். பொறுப்பற்ற நடவடிக்கைகள் ஏதேனும் உண்டா என்று ஆராய்கிறார்.

வள்ளி தனது பச்சிளங்குழந்தையை அண்டையிலுள்ள மரத்து நிழலில் கிடத்தித் தூங்க வைத்துவிட்டு வயலில் அறுவடை செய்து கொண்டிருந்தாள். உறங்கிக் கொண்டிருந்த குழந்தை கவுண்டர் வருகிற நேரம் பார்த்து அழ ஆரம்பித்து விட்டது. அதன் சப்தம் அவள் காதில் விழுந்து நெஞ்சில் உறுத் தாக உறுத்திக் கொண்டிருந்தது. அவள் நிமிர்ந்து கூடப் பார்க்க வில்லை. கவுண்டர் வேலையாட்களின் முன்னால் வயல்பரப் பின் மீது நின்று கொண்டிருக்கிறார்.

சற்றுநேரம் அழுது பார்த்த குழந்தை தாயின் வருகையைக் காணாமல் கவிழ்ந்து படுத்தவாறு நிமிர்ந்து சுற்றிலும் பார்வை யைச் செலுத்தியது. கொஞ்ச தூரத்தில் வேலை செய்து கொண் டிருந்த தாயைப் பார்த்துவிட்டது. நெஞ்சில் தவழ்ந்து தவழ்ந்து நகர ஆரம்பித்து விட்டது.

குழந்தை மரத்து நிழலிலிருந்து இரண்டு மூன்று எட்டுத் தூரத்துக்கு நெஞ்சில் நகர்ந்து நகர்ந்து சென்று விட்டது. பிஞ்சு உடலில் சூடுண்ட மண்பட்டதும் மரணாவஸ்தையில் கத்து கத்தென்று கத்த ஆரம்பித்து விட்டது. தூக்கத்தில் இருந்து எழுந்தவுடன் தாயைக் காணாது அழுத அழுகைக்கும், இப்பொழுது இது பதறுவதற்கும் உள்ள வித்தியாசத்தைக் கண்டு விட்டு நிமிர்ந்து நோக்கினாள்.

குழந்தை சுடு மண்ணில் கிடந்து துடியாய்த் துடிப்பதைக் கண்டாள். இந்தக் காட்சியை வரப்பின் மீது நின்று எதுவும் நடக்காததுபோல் கவனித்துக் கொண்டு நிற்கும் கவுண்டரின் ஈவிரக்கமற்ற தன்மை அவள் இதயத்தை - புலி நகத்தைக் கொண்டு பிறாண்டுவது போன்ற வேதனையைக் கொடுத்தது. இந்த உலகத்தைப் பற்றிய சகலவிதான சிந்தனை ஓட்டங்களும் அவள் மனதிலிருந்து மறைந்தன. ஒரு தாயின் தன்னலமற்ற மேலான குழந்தைப் பாசம் மட்டும்தான் மேலெழுந்து நின்றது.

வள்ளி கோபாவேசமும், வன்மமும் தொனிக்கத் தன்னை மறந்த நிலையில் கூச்சலிட்டவாறு குழந்தையை நோக்கி ஓடினாள்.

"அட சண்டாளா! நீயும் பிள்ளெ குட்டியெ பெத்தவந்தானே! இதப் பாத்துக்கிட்டு இருக்க உம்மனசு எப்படி எசஞ்சது?"

அந்தப் பண்ணைப் பரப்பில் முதன்முறையாகப் பண்ணை யாரை எதிர்த்து ஒரு அடிமைப்பெண் குரல் ஒலிக்கிறது. அவள் திட்டமிட்டு அப்படிப்பட்ட வன்மக்குரலை எதிரொலிக்க வில்லை. அரசியல் போதம் பெற்று தன் எதிர்ப்புக் குரலை முழங்கவில்லை. ஒரு தாக்கப்பட்ட தாயின் நிலையில் சகல விளைவுகளையும் மறந்து பிரலாபக் குரலிடுகிறாள்.

அந்தத் தாயின் கொடிய, பயங்கரம் விளைவிக்கக் கூடிய இந்த வார்த்தைகளைக் கேட்டு அதிர்ச்சியுற்ற அங்குள்ள ஆண் பெண்கள் அனைவரும் அவர்களின் கட்டுப்பாட்டையும் மீறி நிமிர்ந்து நோக்கினர். என்ன கொடுமையான, பயங்கரமான காட்சி!

அவர்களுக்குள் அமுழ்ந்திக்கிடந்த மனிதாபிமான உணர்ச்சி அவர்களையும் மீறி வெளிக்கிளம்பியது. தங்கள் வேலையை நிறுத்திவிட்டு அவ்விடத்தை நோக்கி ஓடினர்.

கவுண்டர் அங்கு நின்று கொண்டிருக்கிறார் என்ற பயவுணர்ச்சியைக் கூட மறந்தனர். தங்கள் தங்களுக்குள் ஏற்பட்ட ஒரு பாதிப்பைப் போல எல்லோரும் உணர்ந்தனர். எல்லோர் குரல்களும் "அய்யோ கொழந்தை போச்சே" என்று ஏக காலத்தில் கூவின.

முன்னால் ஓடிச்சென்று வாரியெடுத்த தாய் புலம்பினாள்:

"இப்படியுமா இந்த ஒரு சாண் வவுத்துக்கு அலஞ்சு சோறு திங்கச் சொல்லுது? அட நாம் பெத்த ராசா!"

வயிற்று ஜீவனத்துக்காக ஒரு தாய் எப்படியெல்லாம் தன் பாச உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியிருக் கிறது? காக்கை குருவிகளுக்கு இருக்கக்கூடிய ஒரு சுதந்திரங்கூட மனித ஜீவனுக்குக் கிடையாதா?

கண்ணீர் மாலைமாலையாக வடிந்தது. தேம்பினாள். விக்கினாள் சற்று நேரம் குழந்தைக்கு என்ன நிகழ்ந்திருக்கிறது என்று கூடக் கவனிக்கவில்லை. மூர்க்கமான ஒரு எதிரியின் பிடியிலிருந்து தன் குழந்தையைக் காப்பவள் போல மார்பு சேர இறுக்கி அணைத்துக் கொண்டாள்.

குழந்தையை சுடுமணல் அதிகம் பாதிக்கவில்லை. அது படுத்த இடத்திலேயே உந்தி உந்திச் சென்ற பொழுது அடியில் விரித்துப் போடப்பட்டிருந்த சாக்குக் கித்தான் கூடவே நகர்ந்து சென்

றிருந்தது. ஆகவே பூமியைப் பற்றி நகர்ந்த இரண்டு கைகள் மட்டும் சிவந்து கொப்பளித்துப் போயிருந்தன. முழு உடலும் பூமியில் கிடந்திருப்பின் எறும்பு போலப் பொரிந்து செத் திருக்கும்.

மாரப்பன் கூடக் கண்கலங்கி விட்டான். சற்று நேரத்துக்கு முன் கொண்ட முடிவுகளைக் கூட மறந்துவிட்டான். குழந்தை யல்லவா? அதன் முன்னால் பேய்கூட பேசாமடந்தை ஆகும் என்பார்களே?

குழந்தையைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டது. குழந்தை எரிச்சல் தாங்காமல் கதறிக்கொண்டிருந்தது. தாய் அதன் விரல்களை வாயில் வைத்துச் சூப்பிக் குளிர்வித்துக் கொண்டிருந்தாள்.

கவுண்டர் கூட்டத்தின் மனப்போக்கைப் புரிந்துகொண்டு விட்டார். தாமதப்படுத்தினால் அவர்களின் அனுதாப உணர்வு கள் ஆவேசமாகக் கூட மாறலாம். சேர்ந்து பேச அனுமதிக்கக் கூடாது.

கவுண்டர் கோபமும், வெறுப்பும் உமிழும் குரலில் கூறினார்.

"அட போக்கத்த முண்டங்களா! கொஞ்ச நேரம் நின்னாலும் எவ்வளவு வேலே கெடுது. போயி வேலையைப் பாருங்கடா!"

கூட்டத்தினரின் உள்ளத்தில் என்னவோ என்றைக்குமில்லாத அதிருப்தி நிலவியது. அது என்னவென்றும் அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. மனதில் ஒரு குமைச்சல். கட்டளை யைப் பின்பற்றுவதில் ஒரு மந்தம்! அடி உதையைப் பற்றியும் ஒரு அலட்சியம்.

கவுண்டர் மீண்டும் கர்ஜித்தார்.

"தேவடியாப் பசங்களே! போங்கடா வேலைக்கு."

இதற்கு முன்னர் எல்லாம் அந்த வார்த்தைகளைக் கேட்க அவர்களுக்கு விருப்பமாய் இருந்தது. இன்றைக்கென்னவோ அந்த வார்த்தைகளில் சுருக்கென்று தைப்பது போன்ற உணர்வு. ஏதோ ஒரு சுருதி அவர்களை வழிநடத்த வேண்டும்.

"வாடி என்றால் வாடா என்போம்! அடித்தால் திருப்பி அடிப்போம்."

அன்று முழங்கிய அந்த அடிமைகளின் முத்ரா வாக்கியங்கள் இன்றுங் கூடக் காற்றில் அலைந்து கொண்டிருக்கலாம். குடிசை களிலும், வயற்பரப்புகளிலும் அவர்களுக்கு மட்டும் கேட்கும் படியாக முழங்கிக் கொண்டிருக்கலாம். அவர்களிடம் நிலவும் இந்தத் தேக்க உணர்வுகூட அதன் எதிரொலியாக இருக்குமோ?

*கவுண்டர் மேலும் ஆக்ஞாபித்தார்:*

*"போங்கடா மரியாதையா!"*

*அவரின் சவுக்கு அவர்களைப் பதம் பார்த்தது. கனவினின்றும் விடுபட்டவர்கள் போல வேலையிடத்துக்குச் சிதறி ஓடினர். இருந்தாலும் ஏதோ ஒரு பார உணர்ச்சி அவர்களைக் குடைய ஆரம்பித்தது.*

*காத்தானும் வள்ளியும் மட்டும் அந்த மரத்து நிழலில் தனித்து நின்றபடி கண்ணீர் உகுத்து நின்றனர். காத்தான் குழந்தையைத் தாயிடமிருந்து வாங்கி நெஞ்சார அணைத்துக் கொண்டான். குழந்தையின் இடைவிடாத அழுகையும், சுட்ட கைகளில் கொப்புளங்கள் உருவாவதையும் காணக்காண உள்ளம் கொதித்தது. குழந்தையின் கண்களில் கண்ணீர் வடிந்து, அவன் மார்பு மீது விழுந்து கொண்டிருந்தது. பெற்ற பாசம் அவனைப் பேயாக்கி விடுமோ!*

*கவுண்டர் அவர்களை நோக்கி அருகில் நெருங்கி வந்தார். முன்போல இருந்தால் தான் அருகில் வராமலேயே அடியாட்களைக் கொண்டு அடித்திருப்பார். அன்றைய வீதிப் பிரவேசத்துக்குப் பின் தமது அடிமைகள் மத்தியில் உருவாகும் மனச் சலனங்களை அவரால் உணர முடிகிறது. அதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அவர் செயல்பட்டாக வேண்டும். இருந்தாலும் பழைய நடைமுறைகளிலிருந்து சற்றுத் தணிந்து போய்விட்டதாகக் காட்டிக்கொள்ளக் கூடாது.*

*கவுண்டர், காத்தானைப் பார்த்துக் கூறினார்:*

*"அடிமைக்கேதடா பாசம் பற்றெல்லாம். போயி வேலையைப் பாரடா நாதேரிக்கழுதே!"*

*குழந்தைக்கேற்பட்ட ஆபத்தைத் துளிகூட சிந்திக்காமல் பேசிய கவுண்டரின் மிருகத்தனம் காத்தானின் மனதில் தன் மானத்தையும், கோபாவேசத்தையும் கிளர்ந்தெழச் செய்தது. முகத்தில் கோபத்தின் அறிகுறியாக ரத்த நாளங்கள், பிரண்டைப் பழத்தின் வர்ணத்தை வாரிப் பூசின.*

*அவன் கவுண்டரை நிமிர்ந்து நோக்கினான். அவரின் பார்வை அவனை நடுக்குறச் செய்தது. மனதில் ஏறிப் போயிருக்கும் கொடுமைக்குப் பணியும் போக்கு அவன் மனதிலும் தலைதூக்கியது. வாழ்க்கைப் பிரச்சனையின் நிர்ப்பந்தங்கள் சில சமயங்களில் வீரனையும் கோழையாக்கி விடுகின்றன.*

*காத்தான் பணிவுடன் கேட்டான்!*

"அடிமைப் பறைச்சிக்கு இந்த நேரம் வூட்டுக்குப் போவ அனுமதி கொடுக்கணுங்க எசமா!"

இந்த வேண்டுகோள், கவுண்டருக்குத் தமது பண்ணையில் தம் அடிமை முதன்முதலாக உரிமைக்குரல் எழுப்புவது போல் பட்டது. இதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

கவுண்டர் கண் ஜாடை காட்டினார். அருகில் இருந்த அடியாட்கள் அவன் மீது பாய்ந்தனர். அவன் கையிலிருந்த குழந்தையைப் பிடுங்கி தரையில் வீசினர். வீசும்பொழுது அது வீறிட்டு எழுப்பிய ஒரே குரல்தான். பிறகு சத்தமே இல்லை. அதன் வாயிலும் மூக்கிலுமிருந்து சுடுரத்தம் கொப்பளித்துப் பிரவகித்தது. கைகளும், கால்களும் உணர்வற்றுப் பூமியில் கிடந்தன. சுடுமண்ணின் தகிப்பு அதை ஒன்றும் செய்ய முடியவில்லை.

குழந்தையின் கோலத்தைக் கண்ட காத்தானும், வள்ளியும் தங்கள் நிலைமறந்து கதறியபடி குழந்தை மீது விழுந்து அரற்றிப் புலம்பினர். மீண்டும் வயலில் வேலை செய்பவர்கள் ஓடிவந்து அவர்களின் துக்கத்தில் பங்கு கொள்கிறவர்கள் போல் துடிதுடிக்க நின்றனர்.

குழந்தையின் கோலம் கவுண்டரின் அரக்கத் தன்மையை எடுத்துக் காட்டியது. இதைவிடவும் கொடுமையை அவர்கள் இதற்குமுன் அனுபவித்திருக்கின்றனர். இருந்தாலும் இப்படியான அவர்களின் அனுதாபத்திற்கு இதுதான் முறை. அவர்கள் என்னவெல்லாம் விலையாகக் கொடுக்க வேண்டி நேருகிறதோ!

அவர்களின் இந்த நடவடிக்கை கவுண்டரின் அதிகாரத்திற்கு விட்ட சவாலாகப்பட்டது. அவர்கள் பேசவில்லை. கோஷம் முழங்கவில்லை. மௌனமாகத்தான் நின்றார்கள். இருந்தாலும் அவர்களின் முகத்திரையில்தான் எத்தனை விதமான கோபாவேசச் சலனங்கள். மூர்க்கத்தின் நிழலாட்டங்கள்.

புலி இளைத்தாலும் பூனையாகிப் போவதில்லை. கவுண்டர் தன் அதிகாரத்தை நிலையாட்டியே ஆகவேண்டும்.

கவுண்டர் உத்தரவிடும் தொனியில் கர்ஜித்தார்:

"போங்கடா வேலைக்கு!"

தன்னை நோக்கி அனுதாபத்துடன் திரண்டு நிற்கும் கூட்டத்தை நோக்கியவுடன் காத்தானுக்கு ஒரு முரட்டுத்தனமான துணிச்சல் பிறந்தது. அது எந்த அடிப்படையில் என்று அவனுக்கே புரியவில்லை. இருந்தாலும் பிறகு, அதுவே அவனுக்குச் சரியான வழியைக் காட்டக்கூடும்.

காத்தான் கோபாவேசத்தோடும், தன்னை மறந்த நிலையிலும் கூறினான்:

"இப்படியான கொடுமைகளை நீங்க நிறுத்தணும்."

இந்த வார்த்தைகளுக்கு அவன் கொடுக்க வேண்டியது உயிர்ப்பலிதான். கடந்த காலத்தில் இதுதான் நடந்திருக்கிறது. இன்றும் அது நடக்க வேண்டியதுதான். கவுண்டர் ஏனோ தயங்கினார். பசி கண்ட மிருகங்களைப் போன்ற அவர்களின் பார்வைகள் அவரைத் திகைப்படைய வைத்தன. புலி பதுங்கிப் பாய்வதில் புத்திசாலித்தனம் இருக்கிறது.

இந்த ஆபத்தான சூழ்நிலையை மாரப்பன் புரிந்து கொண்டான். இதைத் தவிர்க்க விரும்பினான்.

"மொதல்லெ வேலையெ முடியுங்க. அப்புறம் பேசிக்குவோம்."

தறிகெட்ட சூழ்நிலை நிலவுகிறது. இனி கவுண்டர் அவ்விடத்தில் நின்றால், அதிகாரத்துக்கான கட்டுக்கோப்பு பாதிக்கப்படும். அதற்கு அவர் அடிமைகளிடத்தில் நின்று நேரடியாக எதிர்ப்பாதை எதிர்கொள்வது விவேகமானது. காரியஸ்தர்கள் அதைக் கவனிக்கட்டும் என்று அவ்விடத்தை விட்டு அகன்றார்.

கவுண்டர் போகும்போது கூறினார்:

"முக்கியமான வேலையாகப் போகணும். இவனுகளுக்கு வந்து பாடங்கற்பிக்கிறேன்."

கவுண்டர் புறப்பட்டு விட்டார். அவர் வாழ்வில், பண்ணையடிமைத்தனத்தின் கட்டுக்கோப்பை மீறியவர்களை இப்படி அவர் விட்டுச் சென்றதில்லை. கைமேலேயே பரிகாரம் தேடப்பட்டது. இன்று அதற்கு சிந்திக்க வேண்டியிருக்கிறது.

மாரப்பன் அவர்களிடத்தில் எவ்வளவோ சமாதானம் கூறிப் பார்த்தான். அது எடுபடவில்லை.

முதன்முறையாகக் கவுண்டரின் பண்ணையிலும் கட்டுத்திட்டம் உடைவதற்கான சூழ்நிலை உருவாகிவிட்டது. அந்த அடிமைகள் கொல்லப்பட்ட காத்தானின் பிஞ்சுக் குழந்தையைத் தூக்கியபடி ஆற்றோரக் குட்டுக் காட்டிற்கு அடக்கம் செய்யப் புறப்பட்டனர்.

துக்கமும், வேதனையும், ஆத்திரமும் அலையடித்துத் தளும்பும் அக்கூட்டத்தின் இடையிலிருந்து யாரோ ஒருவனின் வன்மக்குரல் ஒலித்தது.

"அடிச்சா நாங்களும் திருப்பி அடிப்போம்."

இந்த வார்த்தைகள் மாரப்பனையும், மற்றுமுள்ள பண்ணையின் பாதுகாவலர்களையும் சிலிர்க்க வைத்தது. தங்கள் நிலையையும் மறந்து ஆத்திர உணர்வால் ரத்தம் சூடேறியது.

மாரப்பன் தனக்குள்ளாகக் கூறிக் கொண்டான்.

'பறையன் பேசக் கத்துக்கிட்டான்.'

அடிமைகளை மேய்க்கிற தானும் ஓர் அடிமை என்கிற நினைவு அவனிடத்தில் இல்லை. ஜாதிய உணர்வின் தடித்த மூடத்தனம் அவனை உசுப்பிக் குலுக்கியது. கள்ளுண்ட குரங்காக மதிகுழம்பி வெறி கொண்டான். மேலும் அவன் வாய் முணுமுணுத்தது.

"மட்டு மரியாதைங்கிறது இல்லெ. நம்ம பயெ பறச்சியெ இழுத்துக்கிட்டுப் போனா, இனிமே, பறையெ நம்ம பொண்ணெ இழுத்துக்கிட்டுப் போவா."

மாரப்பன் அடிமைகளின் சவ ஊர்வலத்தை நோக்கினான். அது அவனுக்கு அடிமைகளின் வீதிப்பிரவேச ஊர்வலம் போல் காட்சியளித்தது.

வெட்டியான்கள், அடியாட்கள் புடைசூழ, மாரப்பன் வயல் வரப்பில் நடந்து சென்றான். போர்க்களத்தில் தோல்வியுற்ற தளகர்த்தனைப்போல அவன் தோற்றம் விளங்கியது.

பண்ணையாரின் முன்னால் அவன் என்ன பதில் சொல்வான்? உன் மகன்தான் இத்தனைக்கும் காரணம் என்பாரோ?

# 24

இதுநாள் வரையிலும், குற்றஞ் சாட்டப்படும் அடிமைகள் அப்பொழுதே தண்டிக்கப்பட்டார்கள். சாட்டையடி கிடைக்கும். சாணிப்பால் கொடுக்கப்படும். பிற பண்ணைகளுக்கு விற்கப்படுவர். கொன்று ஆற்றில் வீசப்படுவர்.

இன்று அப்படிச் செய்வதற்கு பண்ணையாருக்குத் துணிச்சல் பிறக்கவில்லை. காரணம் இதுநாள் வரையிலும் அவர்கள் ஒன்று பட்டுச் சிந்திக்கவில்லை. பிரிந்து நின்றார்கள். பண்ணையார் தான் தங்களுக்குப் படியளக்கும் பகவான் என்று கருதினார்கள். பண்ணைாரின் வார்த்தையைத் தட்டி நடந்தால் பாவம் என்று கருதினார்கள். தங்களுக்குப் படியளந்து காப்பாற்றியவருக்குப் பாதகம் எண்ணக்கூடாது என்று எண்ணினார்கள்.

சுற்றுச் சூழ்நிலை இன்று அவர்களைத் தாக்கிவிட்டது. பிற பண்ணைகளில் அடிமைப்பட்டுக் கிடந்த பள்ளர் பறையர்கள் ஒன்றுபடத் துவங்கிவிட்டார்கள். சிந்திக்கத் துவங்கிவிட்டார் கள். அடிமைத்தனத்துக்கான காரணத்தைப் புரிந்துகொள்ள முற்பட்டு விட்டார்கள்.

அதன் விளைவு? அடிமை ஆண்டையை நோக்கிச் சவால் விடுகிறான். நேரிடும் விளைவுகளுக்குத் தயார் என்கிறான்.

கவுண்டரின் அடிமைகளையும் அது பாதிக்கவே செய்தது. அதை உணர்ந்துதான் கவுண்டரும் எப்பொழுதுமான தண்டனையிலிருந்து விலகிச் சிந்தித்தார். இருந்தாலும் பழி தீர்க்கும் வன்மக்குணம் மனதினின்று அகலவில்லை.

அதன் விளைவு இன்று இரவில் அந்த அடிமைகளின் குடிசைகள் முழுதும் தீக்கிரையாக்கப்பட்டன.

நாகரிக உலகம் வெட்கித் தலைகுனியும்படியான கொலை பாதகச் செயல். தனக்குரித்தான அடிமைத்தன ஒப்பந்தத்தை நியாயப்படுத்தும் பைசாசச் செயல். சுதந்திர இந்தியாவின் சட்ட அமைப்பின் பேரால்! நீதியின் பேரால்!

கவுண்டரின் குண்டர்கள் தாக்குதலில் இருந்து ஓடியவர்கள், முன்னைப்போல் கண்காணாச் சீமைக்கு ஓடிவிடவில்லை. ஆறு குளங்களில் வீழ்ந்து மரித்து விடவில்லை.

எல்லோரும் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்தார்கள். தங்களை விழிப்படைய வைத்த - அன்று ஆண்டைகளின் தெருக்களில் அடிமைச் சேவகம் செய்யோமென்று முழங்கி வந்த - அந்த அடிமைகளிடத்தை அடைந்தனர். அவர்களின் தலைவர்களான சம்பந்தம், மாயாண்டி, கந்தன் ஆகியோரைச் சந்தித்தனர். விழிப்புற்ற அந்த அடிமைகளிலிருந்து கிடைத்த ஆறுதல் மொழிகள், நம்பிக்கையூட்டும் ஒத்துழைப்பு மனோபாவங்கள் - பாதுகாக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் அவர்களை மெய்சிலிர்க்க வைத்தன.

தங்களைப் போன்ற அவர்களிடம் ஏற்பட்டுள்ள இந்த உணர்வுக்கு, ஒற்றுமைக்கு அவர்கள் புரிந்த தியாகங்களைக் கேட்கக் கேட்கத் தங்களின் இழப்பும், அவர்களின் மனதை அலைக்கழிக்க முடியவில்லை. தங்களை அடிமைத்தனத்தினின்றும் விடுபட வைக்க அத்தலைவர்கள் அவர்களிடம் காட்டிய விலைமதிப்பற்ற ஒத்துழைப்பு, யோசனைகள் அவர்களை சகலபரித்தியாகத்துக்கும் ஒன்றுசேர வைத்தது.

இருளில் சுற்றிய அவர்கள் மீது வெளிச்சத்தின் ரேகை விழுந்துவிட்டது. அதன் கதிர்ப்பாதைகள் அவர்களை பூரண வெளிச்சத்தை நோக்கி இட்டுச் செல்ல உதவக்கூடும்.

மறுநாள் ஒன்றுபட்ட கவுண்டரின் பண்ணையடிமைகள் சுற்றுப்புறத்திலுள்ள எழுச்சி பெற்ற அடிமைகளுடன் மற்றும் அரசியல் போதம் பெற்ற மேல் வகுப்பு உழைக்கும் மக்களுடனும் சம்பந்தம், மாயாண்டி, கந்தன், காத்தான் முதலானோரின் தலைமையில் தீப்பந்தங்களுடனும், கொடி பிடித்த கம்புகளுடனும், பண்ணையின் வீதிகளினூடே வன்மமும், ஆத்திரமும் தொனிக்க கோஷம் முழங்கிச் சென்றனர்.

***சாட்டை அடியை நிறுத்து***
***சாணிப்பால் கொடுப்பதை நிறுத்து***
***வாடி என்றால் வாடா என்போம்***
***அடித்தால் திருப்பி அடிப்போம்***
***குடிசைகள் சுட்டெரிக்கப்பட்டால்***
***மாளிகைகள் கொளுத்தப்படும்.***
***அடிமைகள் அடிக்கப்பட்டால்***
***ஆண்டைக்கும் திருப்பிக் கொடுக்கப்படும்.***

கவுண்டர் இதை எதிர்பார்க்கவில்லை. தமது அடிமைகள் உயிருக்குப் பயந்து எங்கோ ஓடிவிட்டார்கள் என்று எண்ணியிருந்தவருக்கு இது பெரும் அதிர்ச்சியளித்தது. வீதிப் பிரவேசத்தின்போது சென்ற ஊர்வலத்தை எதிர்கொள்ள எண்ணியதைப் போல இதை எதிர்கொள்ள எண்ணவில்லை. நேரிடையாக நின்றபின் பாதிக்கப்பட்டவர்களின் கோபத்திற்குள்ளாக நேரிடும்! தமது பாதுகாப்பிற்கு பங்கம் விளைந்தால் என்ன செய்வது என்று பாதுகாப்பு அடியாட்கள் சகிதம் மாளிகைக்கு உட்புறம் பதுங்கிக் கிடந்தார்.

அவர்கள் குரல்களில், விழிப்படைந்த ஒற்றுமையின் குரல் கனல் கக்கியது.

பீதியின் சாயலோ கோழைத்தனத்தின் வருடலோ இல்லை.

விழிப்புற்ற ஒற்றுமையுணர்ச்சி ஏற்படுவதற்கு முன்னர் சித்திரவதைப்பட்டு செத்தார்கள். இனி துன்பப்பட்டுச் சாக நேரிடும். முன்னதைக் காட்டிலும் பின்னது எவ்வளவோ ஆறுதல் அளிக்கக்கூடியது.

அவர்கள் விளைவுகளை எதிர்கொள்ளத் தயாராகி விட்டார்கள். அடிமைக்கான காரணத்தைப் புரிந்துகொள்ளத் தலைப்பட்டு விட்டார்கள்.

அவர்களுக்குள் எவ்வளவு குழப்பங்கள் இருந்தாலும் அடிமைத் தனத்தினின்று மட்டும் விடுபட உறுதி பூண்டு விட்டார்கள். பசியை பட்டினியைக்கூட அவர்களால் சகித்துக் கொள்ளக் கூடும்.

இனி அடிபடப் போவதில்லை என்கிறார்கள். விலங்குகளைப் போல் பணியப்போவதில்லை என்றார்கள்.

தங்களுக்குச் சுதந்திரமாக உழைக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்கிறார்கள்.

அவர்களுடைய அந்தத் தாகத்தை யாராலும் தீர்த்து வைக்க முடியாது. அவர்களே முன்னின்று, அவர்களே திரண்டு குழுமி, அவர்களே போராடி அவர்களுடைய தாகத்தைத் தீர்த்துக் கொள்ள நிரந்தரமான ஊற்றைக் கண்டாலொழிய வேறு வழியில்லை. அவர்களின் இந்தத் தீராத, முற்றுப்பெறாத போராட்டத்தை - தாகத்தை எப்படிப்பட்ட கொடூரமான, சித்திரவதை புரியக்கூடிய, உயிரைப் பலிகொள்ளக்கூடிய வதைக் கொடுமை நிகழ்ந்தாலும் அதைத் தடுத்து நிறுத்திப் பின்னுக்குத் தள்ளிவிட முடியாது என்பதற்கு அதோ! தங்கள்

வாழ்வின் சொர்க்கமான குடிசைகளையும், வாழ்வின் உத்தர வாதங்களையும் நிலப்பிரபுத்துவத்தின் கோரத் தாண்டவத்திற் குப் பலிகொடுத்துவிட்ட பின்னரும் மனதில் உளைச்சலோ, விரக்தியோ, சோர்வோ, தடுமாற்றமோ, தயக்கமோ, குழப்பமோ எதுவுமின்றி கம்பீரத்தோடு அடிமைத்தனமற்ற, சமத்துவம் நிறைந்த பொற்காலத்தின் வருகைக்குக் கை கொடுக்கும் கனல் நிறைந்த தீர்க்க தரிசன நெஞ்சுரத்தோடு, கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் தியாகச் சிவப்பேறிய செங்கொடியை விம்மிப் புடைத்த கரங்களில் தாங்கிப் பிடித்தவாறு போராட்ட வரிசையில் முன்னின்று நடந்து செல்கிறார்களே அதுவே அதற்கு சாட்சி! அவர்களின் வாழ்வமைப்பிற்கான, எதிர்கால வர்க்க பேதமற்ற புரட்சிக்கான தாகத்தை யாராலும் அழித்து விட முடியாது என்பதற்கு அதுவே உறுதி மிக்க நம்பிக்கை.

●●●

"தமிழில் சோசலிச எதார்த்த வாதம் ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' நாவலில் அரும்பியது எனலாம். பொன்னீலனின் 'கரிசல்', 'புதிய தரிசனங்கள்', டி. செல்வராஜின், 'மலரும் சருகும்', 'தேநீர்', சின்னப்பபாரதியின் 'தாகம்', 'சங்கம்', 'சர்க்கரை', அறந்தை நாராயணனின் 'ஜக்கா' என்னும் நாவல்கள் இந்த இயக்க சார்பாக எழுந்த நாவல்கள் எனலாம்."

"இந்தியக் கிராமங்களில் வான் மழையை எதிர் நோக்கி வாழும், ஒரு சாதாரண விவசாயியின் வாழ்க்கையை எடுத்துக்காட்டுகிறது 'தாகம்' நாவல். நிலவுடைமை சமுதாயத்தில் கொத்தடிமைகள் உருவாகின்றனர் என்பதை நாவல் வெளிப்படுத்துகிறது."

"....கூலி விவசாயிகள் நிலக்கிழார்களால் அடிமைகளாக நடத்தப்படுகின்றனர். ஒரு கட்டத்தில் அடிமைகள் நிலக்கிழாரை எதிர்த்துப் போராடுகின்றனர். இவ்வாறு அதிகாரம் உடையவரை அடக்கப்பட்டவர் எதிர்க்கும் போராட்டமே நாவலின் கதைக் கருவாகும்.

முனைவர் இ. சாந்தா பழனிச்சாமியின் 'சின்னப்பபாரதியின் நாவல்கள்' என்ற ஆய்வு நூலிலிருந்து

விதியை நம்பி வாழத்தெரியாது தவிக்கும் மாரப்பன். பரம்பரையான பழைய பழக்கங்களை நம்பி அல்லல்படும் அவன் மனைவி, மகள், மகன், திருமணங்கள் போன்ற நிகழ்ச்சிகள் சிறந்த கலைத்தன்மையுடன் கையாளப்பட்டிருக்கின்றன. நாற்று நடுதல், களை எடுத்தல், ஒரு கன்றின் பிறப்பு போன்ற நடவடிக்கைகள் ஆழ்ந்த கவனத்துடன் சித்திரிக்கப்படுகின்றன. கொங்குநாட்டு கிராம வாழ்க்கையில் அந்த மண்ணின் மணம் வீசி, வாசகரை அந்தச் சூழ்நிலையுடன் ஒன்றச்செய்து விடுகிறது. கதை முழுவதும் ஏழ்மையின் ஓயாத ஓலம் தொனித்து படிப்பவரின் உணர்ச்சிகளைத் தாக்குகிறது. சின்னப்ப பாரதி, தாம் படைத்த கதை மாந்தரை பிரமிப்பூட்டும் கட்டுப்பாட்டுடன் நடத்திச் செல்கிறார். இத்தகைய கலை வண்ணம் நிறைந்த இந்தப் படைப்பு தமிழ் நாவல் வரலாற்றில் ஓர் அரிய சாதனை. நூறாண்டு வளர்ச்சியில் பத்து தமிழ் நாவல்களைத் தேர்ந்தெடுத்தால் அவைகளில் தாகம் ஒன்றாக இருப்பது இலக்கிய வரலாறு.

0012295

9 788189 909796

tamizhbooks
பாரதி புத்தகாலயம்